டியது. மற்றொரு வெற்றுப்பாண்டம். அடுப்பிலிருக்கிற பாண்டத்திற்கு அபாயம் நேரிட்டால், மற்றொரு பாண்டத்தில் மாற்றிக் கொள்ளவேண்டியது. **பற்றகற்றி**: தைலங்கள் காய்ச்சும்போது துழாவுதல் தவறுமாயின், கல்கமருந்தானது கெட்டியாகப் பிடித்துத் தடித்து, அவ்விடத்து நெய்ப்பசையை யொழித்து, அந்தப்பாண்டத்தினது அடியைப் பத்தலாகப் பிளக்கும்படிசெய்யும்; ஆதலால், அப்பற்றையுடனே அகற்றுவதற்காகச் சக்கிலியர் ஆறுகின்ற, பிறையுருவமுள்ள ஒரு ஆயுதம், இரும்பினால் செய்துக்கொள்ளவேண்டியது. அதற்கு பற்றகற்றி என்று பெயர். **பதிவிளக்கு, தூந்தலை, விளக்குமாறு, கலுவம், குழியம்மி,** கடைவதற்கு **மத்து, துடுப்பு,** துளைகள் உள்ள **கரண்டி,** துழாவுதற்கு **அகப்பை,** வடித்துக்கொள்ளுவதற்குக் கண்களையுடைய **புதியவஸ்திரம், கம்பளம், கோணி, பறவையின்கூடு,** அல்லது **பன்னாடை,** ஒரேமாதிரியான **விறகு,** அதிக தணலை அவிக்கத் **தண்ணீர்,** ஆகிய இவைகளாம். அகப்பையின் காம்பு, தைலம் காய்கிற பாத்திரத்துக்கு உயர்வாக விருந்தால், கையிற் சுடுகைபடாது அந்தக்காம்புக்கு அளவு ஏற்படுத்தியிருந்தால், பாத்திரத்தில் தைல முதலியவைகள் இவ்வளவு இருக்கிறதென்று அறிந்துக்கொள்ளலாம்; இல்லாவிட்டால், காயும்போது புகைக்கம்முவதினால், நேத்திரத்துக்கு அகப்படாது.

பாத்திரம் பழகும்விதி.—பழகிய பாத்திரம் எப்போதும் அகப்படாது; ஆகையால் வேண்டுமாயின் புதுப்பாத்திரத்தில் ஜலத்தை விட்டு விட்டுக் காய்ச்சி, ஊற்றிவிட்டு, அந்தக்காய்ப்பாலுண்டாகிய கருமையானது அடியில் கவ்விப்பிடிக்குந்தோறும் கழுவி, அது கையில் ஒட்டாமல் அப்பாத்திரத்தைமாத்திரம் கறுக்கச் செய்ததை யறிந்து, எடுத்துக் கழுவிக் காயவைத்து, விடுகின்ற நெய் வகைகளைக் குடிக்க ஒட்டாமல் பழக்கிக்கொள்ள வேண்டியது. ஒரு தைல பாத்திரத்தில் மற்றொரு தைலம் காய்ச்சினால், அந்தத் தைலத்தினது நற்குணம் கெடுவதுமல்லாமல், நோயாளியின் தேகமும், சிகிச்சைகன் புகழும், பெரியோர் வசனமும், வைத்திய நூலின் உண்மையும் கெடும்.

* இந்த விஷயத்தைப்பற்றி ம-ா-ா-ஸ்ரீ, சுப்பிரமணிய பண்டிதர் அவர்கள் இயற்றிய, தைலவர்க்கச் சுருக்கமென்னும் திவ்விய கிரந்தத்தைப் பார்வையிட்டால் விபரமாய்த் தெரிந்துக்கொள்ளலாம்.

பஸ்மவிதி.—சுண்ணமாக்குதல். நீற்றுதல்.—பவழம், முத்து, எலும்பு, இவ்வித சரக்குகளைப் புடம்போட்டால், அவைகளிலிருக்கிற சிலபதார்த்தங்கள் (ஆர்கானிக்மாடர்ஸ்) நீங்கி, பூசாரபதார்த்தங்கள் (அர்த்திமாடர்ஸ்) மாத்திரம் நின்றிருக்கும்.

பதங்கவிதி.—கர்ப்பூரம், கந்தகம், பூரம், வீரம், சாம்பிராணி, இவ்விதச் சரக்குகளில் எதையாவது, பாத்திரத்திலிட்டு மூடி, எரித்தால், மூடியிருக்கிற பாத்திரத்தின் கீழ்ப்புறத்தில், சரக்கு படிந்திருக்கும். அதைப் பதங்கமென்று சொல்லுவர். சரக்குகளைப் பதங்கிப்பதினால், அவைகளிலுள்ள தோஷங்கள் நீங்கி பரிசுத்தமாகும்.

பிட்டிடுகிற விதி.—நீருள்ள குடத்தின்வாயைச் சீலையால் கட்டி, அதின்மேல் சரக்குகளைவைத்து, மற்றொரு சட்டியால் மூடி, குடத்தை அடுப்பிலேற்றி எரித்தால், நீர்க்கொதித்து அதிலிருந்திப்பிறக்கிற ஆவி, சரக்குகளின் மேல்பட்டு, பிட்டு சமைவதுபோல் சமைந்துவிடும்.

பொரித்தல்.—படிகாரம், அன்னபேதி, வெங்காரம், இவ்விதப் பதார்த்தங்களை எரித்தால், அவைகளிலிருக்கிற நீர் நீங்கி, பொரிபோலாகிவிடும்.

யந்திரலக்ஷணம்.—ஜலயந்திரம்; மருந்தை ஒருபாத்திரத்திலிட்டு, கொதிக்கிற வெந்நீரின்மேல் வைத்துப் பக்குவப்படுத்திக் கொள்ளுகிற முறையாகும். **டோலாயந்திரம்;** கொதிக்கிற வெந்நீர் ஆவியின் சூடுபடும்படி, மருந்தைக் கிழிகட்டித் தொங்கவிட்டுப் பக்குவப்படுத்திக்கொள்ளுகிற முறையாம். **வாலுகாயந்திரம்;** மணலைச் சுடவைத்து, அதின்மேல் மருந்து அடங்கிய பாத்திரத்தை யிட்டு, பக்குவப்படுத்திக்கொள்ளுகிற முறையாம். **நாளிகாயந்திரம்;** பட்டிகட்டி, சாராயம் இறக்குவதுபோல், இறக்கிக்கொள்ளுகிற முறையாம்.

பாகலக்ஷணம்.

மதுபாகம்.—தேன்போல் வருகிற பாகத்துக்குப்பெயர். **தந்துபாகம்.**—நூல்போல்வருகிறபாகத்துக்குப்பெயர். **கரபாகம்.**—விரல்களை நீரில் நனைத்து பாகமெடுத்தால், மிருதுவான குளிகைபோல் திரளுகிற பாகத்துக்குப்பெயர். இது தந்துபாகத்துக்குத் தனமானது.

லேகியபாகவிதி.—யோகத்தில் சேருகிற சருக்கரையை, திரவத்தில் கரைத்துக் காய்ச்சி நூல்பதமாய் வந்தபிறகு, இறக்கிக்கொண்டு, அதில் சூர்ணங்களைக் கொட்டிக் கலந்து, பிறகு தேன், நெய் சேர்த்துப் பிசைந்து கொள்ளவும். யோகத்தில்கண்டிருக்கிற சரக்குச் சூர்ணங்கள், மொத்த நிறைக்குச் சமன், சருக்கரை அல்லது வெல்லம் இருக்கவேண்டியது. சருக்கரைக்கு ½-நிறை திரவம் இருக்கவேண்டியது.

கிருதபாகவிதி.—யோகத்தில் கண்டிருக்கிற சரக்குகளின் மொத்த நிறைக்குச் சமன்சருக்கரையும், 2-பங்கு வெண்ணெய் அல்லது நெய்யும் இருக்கவேண்டியது. நெய்யுடன்பால், கஷாயம், சுவரசம் இவைகளைச்சேர்த்து, காய்ச்சி, பதத்தில்வடிக்கட்டி, அதில்வஸ்திரகாயஞ்செய்த சூர்ணங்களையும் வாசனைத் திரவியங்களையும், சருக்கரையும் சேர்த்துக் கலந்துக் கொள்ளவேண்டியது.

ரசாயனபாகவிதி.—யோகத்தில் கண்டிருக்கிற சரக்குச் சூர்ணங்களின் மொத்தநிறைக்கு 2-பங்கு சருக்கரை, அல்லது வெல்லம்

சேர்த்துச் செய்கிறமுறைக்கு ரசாயனம் என்றுபெயர். இதற்கு மதுபாகத்தில் சூர்ணங்களைச் சேர்க்கவேண்டியது.

வடபாகவிதி.—யோகத்தில் கண்டிருக்கிறசரக்குச் சூர்ணங்களின் மொத்த நிறைக்கு ½-பங்கு சனுக்கரை, அல்லது வெல்லம் சேர்த்துக் கொள்ளவேண்டியது. இதற்கு மதுபாகமாய் இருக்கவேண்டியது.

கல்கவிதி.—உலர்ந்த சரக்கைப் பால் அல்லது ஜலம்விட்டு அரைத்து, மிருதுவான குளிகைசெய்துக் கொள்ளுதலுக்கு கல்கம் என்றுபெயர்.

ஷர்பத்துபாகவிதி.—கட்டிச் சரக்குகளுக்கு 8-பங்கு ஜலம் விட்டு, 4-பங்குச் சுண்டக்காய்ச்சி, வடிக்கட்டி, அந்தக்கஷாய நிறைக்கு 2-3-பங்கு சருக்கரைச்சேர்த்துக், காய்ச்சி மதுபாகத்தில் இறக்கி வடிக்கட்டிக்கொள்ளவேண்டியது.—பழரசம் அல்லது சுரசமாயிருந்தால், 1-க்கு 2-3-பங்கு சருக்கரை சேர்த்துக்கொண்டு காய்ச்சி, மதுபாகத்தில் இறக்கி வடிகட்டிக்கொள்ளவேண்டியது.—உலர்ந்த பழங்களையாவது, புஷ்பங்களையாவது, இலையையாவது, ஷர்பத்து செய்யவேண்டியபோது, சரக்கை 4-பங்கு ஜலத்தில் 1-3-நாள் ஊறவைத்து, பிசைந்து, வடிக்கட்டி அதில், 1-க்கு 3-பங்கு சருக்கரைசேர்த்துக் காய்ச்சி, மதுபாகத்தில் இறக்கி வடிக்கட்டிக் கொள்ளவேண்டியது.

3-வது அத்தியாயம்.

இதில், தாதுவர்க்கம், ஸ்தாவரவர்க்கம், ஜீவவர்க்கம் ஆகிய இம் மூன்று வர்க்கங்களிலிருந்துச் சேகரிக்கிற ஔஷதங்களுடைய செய்கை, ஒன்றுக்கொன்று வித்தியாசப்படும்: செய்கையில் ஒத்திருக்குற ஔஷதங்கள், ஒரேவகுப்புக்குள் அடங்கும் ஔஷதவகுப்புகள் அனேகமுண்டு; அவைகளில் முக்கியமான சில வகுப்புகளைமாத்திரம் இதனடியில் கூறப்படும்.

ஔஷத வகுப்புகள்.

அங்காகர்ஷண நாசகாரிகள்.—சந்நி, வலி, இசுவு என்று சொல்லுகிற வாதரோகங்களைக் கண்டிக்கிற மருந்துகள். **ஔஷதங்கள்.**—அபினி, பெருங்காயம், கஸ்தூரி, சடாமாஞ்சி, கஞ்சா, ஓமம், ஊமத்தன், புகையிலை, மருக்கொழுந்து, நாய்க்கடுகு, ஆடாதோடை, புனுகு இவை முதலியவைகளுக்கு டை குணமுண்டு. **ரோகங்கள்.**—இசுவு, வயிற்றுப்பொருமல், சூதக சந்நி, இவைமுதலிய வியாதிகளுக்கு டை மருந்துகளிலொன்றைக் கொடுக்கலாம்.

உதரவாத ஹாரிகள்; ஜாடராக்கினி வர்த்தனகாரிகள்.—வயிற்றிலுள்ள வாயுவைப்போக்கி, பசியுண்டாக்கிற மருந்துகள், **ஔஷதங்கள்.**—ஓமம், ஏலம், கிராம்பு, லவங்கப்பட்டை, சோம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், வசம்பு, அரத்தை, பேய்மிரட்டி மருக்கொழுந்து, வெற்றிலை, சீரகம், கஸ்தூரிமஞ்சள் இவை முதலியவைகளுக்கு டை குணமுண்டு. **ரோகங்கள்.**—வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, மந்தாக்கினி, இவை முதலிய வியாதிகளுக்கு டை மருந்துகளிலொன்றைக் கொடுக்கலாம்.

உஷ்ணகாரிகள்.—தேக காங்கையை அதிகப்படுத்துகிற மருந்துகள். **ஔஷதங்கள்.**—கஞ்சா, சாராய இனங்கள், சடாமாஞ்சி, கொச்சி, கர்ப்பூரம், மிளகு, ஓமம், சுக்கு, திப்பிலி, கடுகு, குங்குமப்பூ, லவங்கம் இவைமுதலியவைகளுக்கு டை குணமுண்டு. **ரோகங்கள்.**—மூர்ச்சை, சந்நி, வாந்திபேதி, பலவீனம், இவைமுதலிய வியாதிகளுக்கு, டை மருந்துகளிலொன்றைக் கொடுக்கலாம்.

கதுநாசகாரிகள்.—கட்டிகளைக் கரைக்கிற மருந்துகள். **ஔஷதங்கள்.**—சுக்கு, பெருங்காயம், அமுக்கிராக்கிழங்கு, ரசதபோளம், மூஷாம்பரம், சுண்ணாம்பு, இவை முதலியவைகளுக்கு டை குணமுண்டு. **ரோகங்கள்.**—கிரந்தி, வீக்கம், இவை முதலிய வியாதிகளுக்கு, டை மருந்துகளிலொன்றை, உபயோகிக்கலாம்.

கபஹரகாரிகள்.—கபத்தை வெளிப்படுத்தி, இருமலைத்தணிக்கிறமருந்துகள், **ஔஷதங்கள்.**—பெருங்காயம், சாம்பிராணிப்பதங்கம், விஷமூங்கில், நாய்ப்பாலை, குப்பைமேனி, கர்ப்பூரவள்ளி, குங்கிலியம், மூக்குரட்டை, உத்தாமணி, ஆடாதோடை, திருநீற்றுப்பச்சை, துளசி, கண்டங்கத்திரி, நரிவெங்காயம் இவைமுதலியவைகளுக்கு டை குணமுண்டு. **ரோகங்கள்.**—இருமல்முதலிய கபரோகங்களுக்கு டை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

கிருமிநாசகாரிகள்:—வயிற்றுக்கிருமிகளைப் போக்குகிற மருந்துகள். **ஔஷதங்கள்.**—மாசிபத்திரி, மாதுளம்வேர், புரசன்விரை, பூனைக்காலிச்சுணை, ஆடுதீண்டாப்பாளை, வேப்பஎண்ணெய், பப்பளிப்பால், சிறுதேக்கு, கலியாணப்பூசினிவிரை, வெட்பாலையரிசி, மாமருதம்பு, காட்டுச்சீரகம், இவைமுதலியவைகளுக்கு டை குணமுண்டு. **ரோகங்கள்.**—வயிற்றுக்கிருமிரோகத்துக்கு டை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

சமனகாரிகள்.—உக்கிரரோகங்களைத் தணித்து, தேகம் தளரும்படிச்செய்கிற மருந்துகள். **ஔஷதங்கள்.**—புகையிலை, நாபி, கஞ்சா, கோஷ்டம், சந்தனம், அமுக்கிரா, இவைமுதலியவைகளுக்கு டை குணமுண்டு. **ரோகங்கள்.**—சுரங்கள், தாபன ரோகங்கள், விரணசந்நி, பேய்நாய்க்கடிசந்நி, இருதயரோகம், இவைமுதலிய வியாதிகளுக்கு டை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

சீதளகாரிகள்.—தேக அழலையை அடைக்கி, தாகத்தைத்தணிக்கிற மருந்துகள். **ஔஷதங்கள்.**—பொட்டிலுப்பு, எலுமிச்சம்பழ

ரசம், புளிப்பிஞ்சுகள், புளி, குளிர்ந்தசலம், கத்தாழை, பனைநொங்கு, பனங்கள்ளு, தென்னங்கள்ளு, இளநீர், பனங்கற்கண்டு, கடலைப்புளிப்பு, செமபருத்திப்பூ, சந்தனப்பூச்சு, இவைமுதலியவைகளுக்கு ஷை குணமுண்டு. ரோகங்கள்.—அத்தியுஷ்ணம், சுரம், தாபனரோகங்கள், ரத்தபித்தரோகங்கள், இவைமுதலிய வியாதிகளுக்கு ஷை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

சுரஹரகாரிகள்,—காச்சலைப்போக்குகிற மருந்துகள். **ஔஷதங்கள்.**—வெள்ளைப்பாஷாணம், சுவேதகாரிகள், சிருங்கிபஸ்மம், சீதளகாரிகள், வேப்பம்பட்டை, இவைமுதலியவைகளுக்கு ஷை குணமுண்டு. ரோகங்கள்.—சுரரோகங்களுக்கு ஷை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

சுவேதகாரிகள்.—வியர்வைப் பிறப்பிக்கிற மருந்துகள். **ஔஷதங்கள்.**—வல்லாரை, நன்னாரிவேர், கோரைக்கிழங்கு, பர்ப்பாடகம், பேய்ப்புடல், மூக்கரவேளை, நிலவிளா, விஷ்ணுக்கிராந்தி, வெட்டிவேர், எருக்கன்வேர்பட்டை, வசம்பு, கர்ப்பூரவள்ளி, முருங்கைவேர், துளசி, சந்தனம், பேய்மிரட்டி, இவை முதலியவைகளுக்கு ஷை குணமுண்டு, **ரோகங்கள்.**—சுரம், அதிமூத்திரரோகம், சருமரோகங்கள், இவைமுதலிய வியாதிகளுக்கு ஷை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

ஜலவர்த்தனகாரிகள்.—ரத்தத்திலிருக்கிற நீரை யதிகப்படுத்துகிற மருந்துகள். **ஔஷதங்கள்.**—ஜலம், இளநீர், கஞ்சித்தண்ணீர், இவைமுதலியவைகளுக்கு ஷை குணமுண்டு. **ரோகங்கள்.**—சுரம், வாந்திபேதி, மூத்திரக்கிருச்சம், பிரமேகம், அழலைரோகங்கள், இவைமுதலிய வியாதிகளுக்கு ஷை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

சங்கோசனகாரிகள் ; துவர்ப்புகள்.—நரம்புகளைச் சுருங்கச்செய்து, ரத்தம் சீழ் முதலிய நீர்களை வறட்டுகிறமருந்துகள். **ஔஷதங்கள்.**—வில்வப்பழம், சினைக்காரம், காசுக்கட்டி, மாசக்காய், கடுக்காய், மாதுளம்பிஞ்சு, செம்மரம், தூத்தம் புரசன்பிசினி, கருவேல், ஆவாரை, நருவிளிப்பட்டை, விளாங்காய், அழவணம், மாம்பருப்பு, ஓதியன்பட்டை, நெல்லிக்காய்வற்றல், சொய்யாப்பட்டை, நாவற்பட்டை, இவைமுதலியவைகளுக்கு ஷை குணமுண்டு. **ரோகங்கள்.**— அதிசாரம், கிரகணி, மதுமூத்திரரோகம், பிரமேஹம், கபரோகம், அதிவியர்வை, இவைமுதலிய வியாதிகளுக்கு ஷை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

சினிந்தகாரிகள்.—தாதுக்களின் எரிச்சலைத்தணித்து, அவைகளைத் திவளச்செய்கிற மருந்துகள். ஔஷதங்கள் —விளாம்பிசினி, தூத்தியிலை, அதிமதுரம், தேன், கஞ்சித்தண்ணீர், முட்டை கற்கண்டு, எண்ணெய்இனங்கள், வெண்டை, இஸ்கோல்விரை, கீரை, சிலப்பனை, நெருஞ்சில், பேதாளு, இவைமுதலியவைகளுக்கு ஷை குணமுண்டு. ரோகங்கள்.— இருமல், சீதபேதி, நீர்ச்சுருக்கு, பிரமேஹம், இவைமுதலிய வியாதிகளுக்கு ஷை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

க்ஷோணகாரிகள்.—சருமத்தைச் சிவப்பித்து, க்ஷணப்படுத்துகிற மருந்துகள். **ஔஷதங்கள்,**—கடுகு அக்கிரகாரம், முளகாய், மிளகு, சுக்கு, வெங்காயம், பூண்டு, முருங்கைவேர், நவக்ஷாரம், நேர்வாளம், முந்திரிக்கொட்டைப்பால், வெற்றிலை, திப்பிலி, சதுரக்கள்ளி, திருகுகள்ளி, நாய்க்கடுகு, காட்டாமணக்கு, சித்திரமூலம், சேஙகோட்டை, இவை முதலியவைகளுக்கு ஷை குணமுண்டு. ரோகங்கள்.—வேதனையுள்ள விடங்கள், தடிப்பு, சந்நி, தலைநோய் இருமல், இவைமுதலியவியாதிகளுக்கு ஷை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

திரவகாரிகள்.—எச்சிலை அதிகப்படுத்தி, வாயில் நீரையுண்டாக்கிறமருந்துகள், **ஔஷதங்கள்.**—தாம்பூலம், சுக்கு, அக்கிராகாரம், மிளகு, லவங்கம், புகையிலை, மிளகாய், முருங்கைவேர், கொடிவேலி, கண்டங்கத்திரிவிரை, ரசம், இவை முதலியவைகளுக்கு ஷை குணமுண்டு. **ரோகங்கள்:**—நாக்கு, ஈறு, பல்லு, தலை, காது, இவைகளின் ரோகங்களுக்கு ஷை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்

தீபனவர்த்தனகாரிகள்:—பசியை அதிகப்படுத்துகிற மருந்துகள். **ஔஷதங்கள்:**—ஓமம், திப்பிலி, மிளகு, நிலவேம்பு இவைமுதலியவைகளுக்கு ஷை குணமுண்டு. **ரோகங்கள் :**—மந்தாக்கினி, அஜீரணம், இவைகளுக்கு ஷை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

நித்திராகாரிகள்.—நித்திரையை யுண்டாக்கிற மருந்துகள். **ஔஷதங்கள்:**—அபினி, குரோசானியோமம், கஞ்சா, இவைமுதலியவைகளுக்கு ஷை குணமுண்டு. **ரோகங்கள் :**—நித்திராபங்கம், நோவு, பேதி இவைகளுக்கு ஷை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

பலகாரிகள்.—சரீரபலத்தை யுண்டாக்கிற மருந்துகள். **ஔஷதங்கள்:**—அயம், நிலவேம்பு, அன்னபேதி, வேப்பம்பட்டை. செம்மரம், தாளீசபத்திரி, களிச்சப் பருப்பு, அமுர்தவள்ளி, வசம்பு, மருக்கொழுந்து, வெள்ளருகு, கண்டுபரங்கி, மரமஞ்சள், நாகேசுரம், இவைமுதலியவைகளுக்கு ஷை குணமுண்டு. நல்லபோஜனம், பரிசுத்தகாற்று, குளிர்ந்த ஜலஸ்நானம், இவைகளும் தேகத்துக்கு பலம் வரும்படிசெய்யும். **ரோகங்கள்:**—தூர்ப்பலம், பாண்டுரோகம், பழயசுரங்கள், இவைகளுக்கு ஷை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

பிரசவகாரிகள்.—பிரசவவேதனையை அதிகப்படுத்தி, சிசுவைச் சீக்கிரம் வெளிப்படுத்துகிற மருந்துகள். **ஔஷதங்கள்:**—புழுத்த அரிசி, கஞ்சா, வெங்காரம், ஆடுதீண்டாப்பாளை, திப்பிலி, இவைமுதலியவைகளுக்கு ஷை குணமுண்டு. **ரோகம்:**—மந்தப் பிரசவத்துக்கு ஷை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

மூத்திரவர்த்தனகாரிகள் ; மூத்திரபேதிகள்.—மூத்திரத்தை யதிகப்படுத்துகிற மருந்துகள். **ஔஷதங்கள்:**—திராக்ஷ உப்பு, வெடியு

ப்பு, நரிவெங்காயம், வெண்காரம், வால்மிளகு, குங்கிலியத்தைலம், விஷமூங்கில், மர எண்ணெய், நன்னாரிவேர், நாயுருவி, நீர்ப்பிரமி, வெண்டை, நீர்முள்ளி, முருங்கைவேர், கல்பாசி, யானைநெருஞ்சி, கீழாநெல்லி, சந்தனத்தைலம், கண்டங்கத்திரி, மணத்தக்காளி, நெருஞ்சி, அமுக்கிரா இவை முதலியவைகளுக்கு ஷை குணமுண்டு. **ரோகங்கள்:**—நீர்க்கோவை, மகோதரம், தாபனம், இவைமுதலிய வியாதிகளுக்கு ஷை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

ரக்த ஸ்தம்பனகாரிகள்.—ரத்தப்பெருக்கை நிறுத்துகிற மருந்துகள். **ஔஷதங்கள்:**—படிக்காரம், துரிசு, குளிர்ந்தஜலம், பனம்பஞ்சு, தென்னம்பஞ்சு, இவை முதலியவைகளுக்கு ஷை குணமுண்டு. **ரோகங்கள்**—காயம்பட்டுக் காணுகிற ரத்தப்பெருக்குக்கு ஷை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

ருதுவர்த்தனகாரிகள்.—ஸ்திரீகளுக்கு மாதந்தோறுங் காணுகிற தலைமுழுக்கைக் கிரமப்படுத்துகிற மருந்துகள். **ஔஷதங்கள்.**—மூஷாம்பரம், பொட்டிலுப்பு, அருதா, வெண்காரம், வெட்டிவேர். ஆடுதீண்டாப்பாளை, பப்பளிக்காயின் விரை, சித்திரமூலம், எள்ளு, புழுத்த அரிசி இவை முதலியவைகளுக்கு ஷை குணமுண்டு. **ரோகங்கள்:**—சூதகச்சூலை, சூதகக்கட்டு இவைமுதலிய வியாதிகளுக்குஷை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

வமனகாரிகள்.—வாந்தியையுண்டாக்கிற மருந்துகள். **ஔஷதங்கள்:**—துரிசு, கடுகு, கறியுப்பு, பேயத்தி, எருக்கன் வேர்ப்பட்டை, விஷமூங்கில், நாய்ப்பாலை, குப்பைமேனி, உத்தாமணி, இலுப்பைப்பிண்ணாக்கு, நரிவெங்காயம், நஞ்சறுப்பான் இலையின் தாள், மூக்குரட்டை, அமுக்கிரா, உப்புசேர்ந்தநொச்சிலையின்ரசம். இவை முதலியவைகளுக்கு ஷைகுணமுண்டு. **ரோகங்கள்:**—சுரங்கள், உன்மாதம், கபரோகம், காசம், சக்கிருமல் இவைமுதலியவியாதிகளுக்கு ஷை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

வியதாபேதகாரிகள்.—பழய ரோகங்களைப் படிப்படியாய் நீக்கி சரீரத்தைச் சுகஸ்திதியில் கொண்டுவருகிற மருந்துகள். **ஔஷதங்கள்.**—நன்னாரிவேர், சால்முருசா, வல்லாரை, யானைக்கற்றாழைவேர், ஆகாசகெருடன் கிழங்கு, காவ்ஜபான், கரிசிலாங்காணி, நீரடிமுத்துநெய், பால்வள்ளி, பறங்கிச்சக்கை, இவை முதலியவைகளுக்கு ஷை குணமுண்டு. **ரோகங்கள்:**—சருமரோகங்கள், குஷ்டம், கீல்வாதம், பழயசுரங்கள் இவை முதலிய வியாதிகளுக்கு ஷை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

விரணகாரிகள்.—சருமத்தைப் புண்ணாக்குகிற மருந்துகள், **ஔஷதங்கள்:**—துரிசு, வெள்ளைப்பாஷாணம், கள்ளிப்பால், எருக்கன்பால், மர உப்புக்காரம், சித்திரமூலம், சேராங்கொட்டை, இவைமுதலியவைகளுக்கு ஷை குணமுண்டு. **ரோகங்கள்:**—துர்மாமிசவளர்த்தி, விஷக்கடி, வித்திருதி, இவைமுதலிய வியாதிகளுக்கு ஷை மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

விரேசனகாரிகள்.—பேதியை யுண்டாக்குகிற மருந்துகள். இதில் மூன்று வகுப்புகளுண்டு. 1-வது. **உபத்திரவவிரேசனிகள்.**—வயிற்றில் நோவை யுண்டாக்கி பேதியாக்குகிற மருந்துகள். **ஔஷதங்கள்:**—நேர்வாளம், சிற்றாமணக்கெண்ணெய், எட்டித்தும்மட்டிக்காய், மூஷாம்பரம், ரசகர்ப்பூரம், மக்கி, கடுகுரோகணி, சிவதைவேர், கிலாவிரை, சதுரக்கள்ளி, குப்பைமேனி, நக்கட்டான்விரை, கடுக்காய் இவை முதலியவைகளுக்கு ஷை குணமுண்டு.

2-வது. **ஜலவிரேசனிகள்.**—தண்ணீர் தண்ணீராய்ப் பேதியாகும்படிச் செய்கிற மருந்துகள். **ஔஷதங்கள்.**—இந்துப்பு, திராக்ஷ உப்பு இவைகளுக்கு ஷை குணமுண்டு.

3-வது. **மலகாரிகள்:**—மலத்தை இளகச்செய்கிற மருந்துகள். **ஔஷதங்கள்.**—சிர்கஸ்து, சரக்கொன்றைப்புளி, ஆலுபகோரா, ரோஜாப்பூ, புளி, சீமை அத்திப்பழம், தேன், வாதுமை எண்ணெய், இவை முதலியவைகளுக்கு ஷை குணமுண்டு. **ரோகங்கள்:**—மலபந்தம், நீர்க்கோவை, சூதகரோகங்கள், வாதரோகங்கள், சிரோரோகங்கள் இவைமுதலிய வியாதிகளுக்கு விரேசனகாரி மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

வைத்தியர்கள் கவனிக்கவேண்டிய சில முக்கியவிஷயங்கள்.

செம்பு, பித்தளை, வெங்கலம் இவைகளில் மருந்துகள் செய்யவும், வைக்கவும் கூடாது.

யோகங்களில் அனேகச் சரக்குகளைச் சேர்ப்பது நல்லதல்ல. யோகத்திலிருக்கிற முக்கியச் சரக்கின் குணத்தை யதிகப்படுத்த, இரண்டொன்றும், அந்த முக்கியச் சரக்குக் கேதாகிலும் துர்க்குணமிருந்தால் அதைச் சமனப்படுத்த ஒன்றிரண்டும் இருந்தால்போதும். பூர்வயோகங்களை மாற்றலாகாதென்று சொல்வது அவிவேகம். பிரதி மனுஷ தேகப்பிரகிருதி வித்தியாசப்படுகிற படியால், அந்த வித்தியாசத்துக்குத் தகுந்தபடியாயும், வித்தியாச லக்ஷணங்களோடு காணுகிற வியாதிகளுக்குத் தகுந்தபடியாயும், யோகங்களில் சரக்குகளைச் சேர்த்துக் கொடுத்தாலொழிய, ரோகம் வசப்படாது.

மற்றொரு முக்கிய விஷயம், வைத்தியன் அறிந்திருக்கவேண்டியதென்னவெனில், ஒவ்வொரு ஔஷதம் சரீரத்தில் வியாபித்துச் செய்கிற குணங்களேயாம்; அப்படியறிந்துகொண்டவனே பதார்த்தங்களை ரோகத்தின்மேல் உபயோகப்படுத்த பாத்திரனாகிறான். குணமும், பிரமாணமும் அறியாமல், பதார்த்தங்களை யுபயோகிப்பதினாலேயே, நமது தேசத்து திவ்விய ஔஷதங்கள்மேல், இங்கிலீஷ் ஜனங்கள் தூஷணை நேரிட்டிருக்கின்றது; சில விடங்களில் அகாலமிருத்தியுவு சம்பவிக்கின்றது. இது சகலருமறிந்த விஷயம்.

ஒவ்வொரு மருந்துக் கடியில் காண்பித்திருக்கிற மாத்திரை என்கிற பிரமாணம், பெரியவர்களுக்குக் கொடுக்கத் தகுதியானது; ஆகையால், சிறுவர்களுக்கு வயதுக்குத் தக்கபடி அதைக் குறைத்துக் கொடுக்கவேண்டியது. சகஜ ரோகங்களாகிய பசி, தாகம் இவைகளுக்குத் தகுந்த ஆகாரமும் ஜலமும், கொள்ளுவதுபோல், வியாதி வேகத்துக்குத் தகுந்த பிரமாணம் மருந்து கொடுக்கவேண்டியதென்று சிலர் எண்ணுகிறார்கள்; இது தப்பிதம்; ஏனெனில், மருந்து, பிரமாணத்தில் அதிகப்பட்டால், தேகத்தைக் கெடுக்கும்.

வயதுக்குத் தக்கபடி மருந்து பிரமாணத்தைக் கிரமப்படுத்திக் கொள்ள, அட்டவணையொன்றை இதனடியில் காண்பிக்கப்படும்.—

வாலிபனுக்கு ஒருவேளைக்குக் கொடுக்கிற மருந்தின் பிரமாணம், 1-விராகனிடை, அல்லது 60-உளுந்து விறையாகில்,

1-வருஷத்துக் குட்பட்டால், 12-அம்சத்தில், 1-அம்சம் அல்லது 5-உளுந்து விறை கொடுக்கவேண்டியது.

2	,,	$\frac{1}{8}$-	பங்கு அல்லது	8-உளுந்துவிறை.	
3	,,	6-அம் - ல் - 1-பங்கு	அல்லது	10	,,
4	,,	$\frac{1}{4}$-பங்கு	,,	15	,,
7	,,	3-அம்- 1-பங்கு	,,	20	,,
14	,,	$\frac{1}{2}$-பங்கு	,,	30	,,
20	,,	3-அம்- 2-பங்கு	,,	40	,,
21 முதல், 60-வயதுவரையில் பூர்ணபிரமாணம்		1	,,	60	,,

4-மாதங்களுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு, அபினிசேர்ந்த மருந்துகள் கொடுக்கலாகாது. ரசம் சேர்ந்த ஔஷதங்கள், குழந்தைகளுக்கு அதிகமாய்க் கொடுத்தபோதிலும், கெடுதிசெய்யாது.

ரசம், கந்தகம், பாஷாணம் இவைகள் குரூரமருந்துகள். ரோகச் சிகிச்சையில் இவைகளைக் கையாடுவதைப்பார்க்கிலும், மூலிகைகளின்மேல் ஞாபகம் வைத்தால், ரோகிகள் வருத்தமடையார்கள்.

வைத்தியர்கள் அறியவேண்டிய இவ்வித விஷயங்கள் இன்னம் அனேகமுண்டு; அவைகளை யெழுதப்புகின், விஷயம் விரியும்; ஆகையால் முடிவான முக்கியவிஷயம் ஒன்றுண்டு, அது என்னவெனில்: ஔஷதப் பிரயோகங்களோடு, ரோகிக்கு நல்ல ஊட்டம் கொடுப்பதிலும், சுப்பிரவஸ்திரங்கள் கட்டிக்கொள்ளும்படிச் செய்வதிலும், ரோகியை நல்ல காற்றுள்ளவிடத்தி லிருக்கச்செய்து, துர்கந்த பதார்த்தங்களையும், சனக்கூட்டத்தையும் நீக்கிவைப்பதிலும், ரோகிக்கு வேண்டியவைகளை நடப்பிக்க, ஒரு ஆள் அருகாமையி லிருக்கும்படிச் செய்வதிலும், ஞாபகம்வைத்து நடப்பிக்கவேண்டிய தவசியம், அவசியம் அவசியம்.

நிறைகள் - அளவுகள்.

1-உளுந்து, சுமார், 1-கிறேன் விறையாகும்.
60 ,, ,, 1-திராம்
1-குன்றிமணி சுமார் 2-கிறேன்ஸ்
1-விராகன் ,, 1-திராம்
10 ,, ,, 1-பலம்
1-ஔன்ஸ்தூக்கம், சுமார் $2\frac{1}{2}$-ரூபாய் விறையாகும்.
1 ,, அளவு ,, $\frac{3}{16}$ ஆழாக்கு அளவாகும்.
1-பலம், சுமார் 3-ரூபாயிடை.
1-ஆழாக்கு-சுமார் 6-ஔன்ஸ் அளவு.

4-வது அத்தியாயம்.

அகத்திக்கீரை—பட்டை.

செய்கை.—அகத்திக்கீரைக்கு மலகாரிகுணமும், பித்தசமனகாரிகுணமும் உண்டு.—பட்டைக்கு பலகாரிகுணமுண்டு.

உபயோகம்.—அகத்திக்கீரை ரசத்தை, பைத்தியரோகிகளுக்குத் தலைமேற் தேய்த்து ஸ்நானம் செய்துவைக்கலாம்; சுரத்துக்கு உடம்புமேல் பூசலாம்.

யோகம்.

அகத்திப்பட்டைகஷாயம். செய்முறை.—அகத்திப்பட்டை 1-பலம்; தண்ணீர் $\frac{1}{2}$-படி அரை நாழிகைவரையில் கொதிக்கவைத்து, வடித்துக் கொள்ளவும். உபயோகம்.—துர்ப்பலத்துக்கு உபயோகிக்கலாம். மாத்திரை $\frac{1}{4}$-$\frac{1}{2}$-ஆழாக்கு அளவு, தினம் 3-வேளை கொடுக்கலாம். (அனுபவமுறை.)

அகருகட்டை.

உபயோகம்.—பீனசம், தலைவலி, தினவு, புடைகள், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

அகில்கட்டை.

உபயோகம்.—இந்தக் கட்டையின் சந்தனலேபனம், தளர்ந்த தேகத்தை யிறுக்கும்; இதின் வாசனையால் சுரம் நீங்கும்; புகையால் வாந்தி, அருசி, அயர்ச்சி நீங்கும். (சிந்தாமணி.)

யோகம்.

அகில்கட்டை தைலம். செய்முறை.—அகில்கட்டை கஷாயம், நல்லெண்ணெய், பால், வகை, 1-க்கு படி 1. சேர்த்து, அதில் அதிமதுரம், தான்றிக்காய், வகை 1-ங்கு பலம் 1. பால்விட்டரைத்து, கலந்து, காய்ச்சி, பக்குவப்பதத்தில் வடித்துக் கொள்ளவும். உபயோகம்.—சலதோஷம், மேகம் இவைமுதலியவைகளுக்கு, ஸ்நானம்செய்து வைக்கலாம். (சாரசங்கிரகம்.)

அக்கரகாரம்.

செய்கை.—இந்த வேருக்கு, உஷ்ணகாரி, க்ஷோணகாரி, திரவகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை பல்வலி, உண்ணாக்குவளர்ந்து, தொண்டைக்கம்மல், நாக்கு அசைவு அற்றுப்போகுதல், சுரத்தில் காணுகிற நாவறக்ஷி, வாதநோய்கள் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—1-விராகனிறை.—வேரை, வாயிலிட்டு மெல்லும்படிச் செய்யலாம்.

யோகம்.

கண்டௌஷதம் செய்முறை.—அக்கரகாரம், அதிமதுரம், சுக்கு, அரத்தை, இவைகளைப் பால்விட்டறைத்தெடுத்த சந்தனம், சமபாகம்; பேரீச்சம் பழச்சந்தனம், அதற்கு 4-பங்கு; தேன் தேவையானது. இவைகளைச் சேர்த்துக்கொள்ளவும். உபயோகம்.—சுரம் முதலியவைகளில் காணுகிற நாவறக்ஷி, சந்நி, இவைகளுக்கு யோகத்தை, விரலாலெடுத்து நாக்குமேல் அடிக்கடித் தடவிக்கொண்டிருந்தால், வாயில் நீர்ச்சுறக்கும். வாந்தியிருந்தால், இதனோடு, மயிலிறகு சுட்டசாம்பலைச் சேர்த்துக்கொள்ளுவது வழக்கம். மான்கொம்பு, ருத்திராக்ஷம், பவழம், முத்து, பொன், வெள்ளி, கஸ்தூரி, குங்குமப்பூ, இவ்விதச் சரக்குகளை யுரைத்து, சந்தனமெடுத்து, யோகத்துடன் சேர்ப்பது, ஒவ்வொருவருடைய வழக்கம். மலம் உதைய, கடுக்காய்ச் சந்தனம் அதிகமாயும், மலம்கட்ட, மாசிக்காய்ச் சந்தனத்தையும் சேர்த்துக் கொள்ளுவதுண்டு. மூத்திரமிறங்க, வெங்காரம் சேர்ப்பது வழக்கம். (அனுபவமுறை.)

அதிமதுரம்.

செய்கை.—இந்த வேருக்கு ஸ்னிக்தகாரி குணமுண்டு.

உபயோகம்.—இருமல், நீர்ச்சுருக்கு, இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். இனிப்புக்காக, மருந்துகளோடு சேர்த்துக் கொள்ளலாம்.

மாத்திரை.—இதின் தூளில், $\frac{1}{2}$-1-விராகனிறை தேனில் கலந்துக் கொடுக்கலாம். சிறியதுண்டை வாயிலிட்டு அடக்கிக் கொண்டிருந்தால், இருமல் தணியும், கறகறப்பு நீக்கும்.

-45-

யோகம்.

அதிமதுர வெந்நீரூறல்கஷாயம். செய்முறை.—2-பலம் அதிமதுரத்தைச் சதைத்து, $\frac{1}{2}$-படி வெந்நீரிலிட்டு, மூடி, 4-நாழிகை ஊறவைத்து, வடிகட்டிக்கொள்ளவும். உபயோகம்.—இருமல், நீர்ச்சுருக்கு, இவை முதலியவைகளுக்கு, உபயோகிக்கலாம். மாத்திரை.—$\frac{1}{4}$-$\frac{1}{2}$-ஆழாக்கு அளவு, அடிக்கடி கொடுக்கலாம், இதனோடு கொஞ்சம் கற்கண்டாவது, தேனாவது, சேர்த்துக்கொண்டால் நல்லது. (அனுபவ முறை.)

அதிவிடையம்.

செய்கை.—இந்த வேருக்கு - பலகாரி, முறைவியாதிரோதி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—வியாதி நீங்கினபிறகு இருக்கிறதுர்ப்பலம், சீதசுரம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதின் தூளில், 5-10, உளுந்து நிறை தேனில் கலந்துக் கொடுக்கலாம், முறைக்காய்ச்சலுக்கு, 20-30, உளுந்துநிறை, சுரமில்லாதபோது கொடுக்கலாம்.

அத்திப்பால்—பட்டை—கள்ளு.

செய்கை.—அத்திப்பாலுக்கும், பட்டைக்கும், சங்கோசனகாரி குணமுண்டு. அத்திக்கள்ளுக்கு, சீதளகாரி, வியதாபேதகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—சீதழிவு, ரத்தபேதி, பெரும்பாடு, ரத்தமூத்திரம், இவை முதலியவைகளுக்கு, அத்திப்பாலையாவது, பட்டையையாவது, உபயோகிக்கலாம். கீல்வாதத்துக்கு, அத்திப்பாலைப் பற்றுபோடலாம். மேகவியாதி, விதாரம், சூடு இவைமுதலியவைகளுக்கு, அத்திக்கள்ளை உபயோகிக்கலாம்.

மாத்திரை.—$\frac{1}{2}$-தோலாம், அத்திப்பாலில், சருக்கரை சேர்த்துக் கொடுக்கலாம்.—அத்திப்பட்டையை மோர்விட்டிடித்து, பிழிந்த ரசத்தில், $\frac{1}{4}$-ஆழாக்கு அளவுகொடுக்கலாம்.—1-2-ஆழாக்கு அத்திக்கள்ளில், கற்கண்டு சேர்த்துக் கொடுக்கலாம்.

அபினி.

செய்கை.—கசகசாகாயின் உறைந்தப்பாலாகிய அபினியானது, முதல் உஷ்ணம்செய்து, பிறகு, நித்திராகாரி, வேதனாசாந்திகாரி, சுவேதகாரி, அங்காகர்ஷணநாசகாரி, ஆகிய இக்குணங்களைத் தரும். சுரப்பு நீர்களைக் கட்டுகிற குணமுண்டு. மாத்திரையில் அதிகமானால், விஷமிக்கும்.

உபயோகம்.—இதை பேதி, சீதபேதி, வாந்திபேதி, இசிவு, சூலை, வயிற்றுவலி, வாந்தி, கண்ணோவு, மணம், நித்திராபங்கம், அதி

மூத்திரம், மதுமூத்திரம், இளைப்பு, காதுவலி, பல்வலி, இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—¼–2, உளுந்துவீறை, குளிகைசெய்து ஒருவேளைக்குக் கொடுக்கலாம்.

அபினியைக் கெடுக்கிற பதார்த்தங்கள்.—மாசக்காய் ஒற்றதுவர்ப்புப் பதார்த்தங்கள், சுண்ணாம்புஜலம், பால்துத்தம், மயில்துத்தம், அன்னபேதி, சல்வீரம், ஆகிய இவைகளைச் சேர்த்தால் அபினியின் குணம் கெடும்.

அபினிக்கு முறிவு.—அபினியை விஷமிக்கும்படி தின்றவர்களுக்கு, மாசக்காயையாவது, அல்லது துவர்ப்பு பதார்த்தங்களில் ஏதையாவது, கஷாயமிட்டுக் கொடுத்தால், அபினி முறிந்துவிடும்.

யோகங்கள்.

கவாடசூரணம்.—இதுவே அபினிகலவைச் சூரணம். செய்முறை—அபினி, 1½–பங்கு; மிளகு, 2–பங்கு; சுக்கு, 5–பங்கு; சீரகம், 6–பங்கு; பாதாம்பிசினி, ½–பங்கு. இவைகளின் தூள்களைக்கலந்து, வஸ்திரகாயம் செய்து, பிறகு கலுவத்திலிட்டு, லேசாய் அரைத்துக்கொள்ளவும். (10–உளுந்து வீறைசூரணத்தில், 1–உளுந்துவீறை, அபினியிருக்கின்றது.) **உபயோகம்.**—பேதி, சூலை, சித்திராயங்கம், இசிவு இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—2–5, உளுந்துவீறை கொடுக்கலாம். (இங்கிலீஷ்முறை.)

கவாடலேகியம்.—இதுவே அபினிலேகியம். **செய்முறை.**—அபினி கலவைச்சூரணம், 192, உளுந்துவீறை; ஷர்பத்து 1, பலம். இவைகளைக் கலந்துக் கொள்ளவும். சுமார் 40–பங்கில், 1–பங்கு அபினிஇருக்கின்றது. **செய்கை.**—உஷ்ணகாரி, வேதனைசாந்திகாரி, ஆகிய இக்குணங்களுண்டு. **உபயோகம்.**—வயிறு உப்பி ஆறிபேதியைக் கட்டுவதற்குக் கொடுக்க, இது நல்லயோகம். **மாத்திரை.**—5–20, உளுந்து வீறைகொடுக்கலாம். (இங்கிலீஷ்முறை.)

கவாடவடகம்.—இதுவே கட்டுவாங்க குளிகை. **செய்முறை.**—அபினி 1–பங்கு; சுக்கு, 2–பங்கு; சாதிக்காய் 2–பங்கு; சீரகம் 2–பங்கு அதிவிடையம், 1–பங்கு; பேரீச்சம்பழம், 2–பங்கு. இவைகளைச்சேர்த்து, எலுமிச்சம் பழரசம்விட்டு, மைய அரைத்து, கடலைப் பிரமாணம் குளிகைசெய்து உலர்த்திக் கொள்ளவும். **மாத்திரை.**—1–2–குளிகைகள்; தேனில் கலந்துக் கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

சிறுபிள்ளைகளுக்கு கட்டுவாதி குளிகை செய்முறை.—ஒருஜாதிக்காயைத் துளைத்து, அதில் 6–உளுந்து வீறை அபினியை வைத்து, மஞ்சள் கவசம் செய்து, அதின்மேல் அணிசுற்றி, அரைத்தமண்ணைப் பூசி, உலர்த்தி, புடத்திலிட்டு, எடுத்து, கவசத்தை நீக்கி. காய்க்குச் சமன், பேரீச்சன்பழம் சேர்த்து, முலைப்பால் விட்டரைத்து, பச்சைப்பயர் பிரமாணம் உருட்டி, உலர்த்திக் கொள்ளவும். **மாத்திரை.**—1–குளிகை, தேனிலுரைத்துக் கொடுக்கலாம். (அனுபவமுறை.)

போஸ்த்தக்காய்.

யோகங்கள்.

போஸ்த்தக்காய் கஷாயம் செய்முறை.—2–பலம், போஸ்த்தக்காய், 1–பலம் தாத்திரியிலை இவைகளை 1–படி தண்ணீரிலிட்டு, அரைகாற்படிவரையில் காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும். **செய்கை.**—இதற்குச் சமனகாரி, வேதனைசாந்திகாரி, குணங்களுண்டு. **உபயோகம்.**—இதைக் கண்ணோய், வயிற்றுவலி, மூட்டுவேதனை, முதலிய நோயுள்ள இடங்களில், ஒற்றிடமிடலாம். (அனுபவமுறை.)

போஸ்த்தக்காய் ஷர்பத்து செய்முறை.—4½–அவுன்ஸ் விரையில்லாத போஸ்த்தக்காயை, 100–அவுன்ஸ் கொதிக்கக்காய்ந்த நீரிவிட்டு, 40–அவுன்ஸ் ஆகக் காய்ச்சி; நன்றாய்ப் பிசைந்து, வடிகட்டி, மறுபடியும், 10–அவுன்ஸ் ஆகக்காய்ச்சி, சூடா இருக்கும்போதேவடிக்கட்டி, 12–மணிநேரம் அசையாமல் வைத்து, தெளிவான நீரை, 5–அவுன்சுக்குக் காய்ச்சி, 7½–அவுன்ஸ் சருக்கரையைச் சேர்த்து, சூடவைத்துக்கொள்ளவும்; முடிவில், 5–டிராம் ஆல்கோஹல் என்னும் சாராயம்சேர்த்துக் கொள்ளவும். **உபயோகம்.**—குழந்தைகளுக்கு அபினி, உபயோகப்படுத்தவேண்டியபோது, இதை உபயோகிக்கலாம். **மாத்திரை.**—2–4, டிராம் பெரியவர்களுக்கும்,—10–15, துளி குழந்தைகளுக்குங்கொடுக்கலாம். (இங்கிலீஷ்முறை.)

கசகசா.

செய்கை.—இதற்கு சினிக்த காரிகுணமுண்டு.

உபயோகம்.—இதை நமைச்சல், கிரஹணி, அதிசாரம், அநித்திரை, இந்திரிய நஷ்டம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

கசகசாலேகியம். செய்முறை—கசகசா, வால்மிளகு, வாதுமைப்பருப்பு, கற்கண்டு, இவைகளின் தூள் சமவீறை; தேன், நெய், தேவையானது. இவைகளைச்சேர்த்து, இடித்து, லேகியமாக்கிக்கொள்ளவும். **மாத்திரை.**—1–2, வராகவீறைகொடுக்கலாம். (அனுபவமுறை.)

அப்பளக்காரம்.

செய்கை.—இந்த உப்புக்கு, ஆம்லநாசகாரி, மூத்திரவர்த்தனகாரி, அஸ்மரீஹரகாரி, கஜநாசகாரி ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—வாதகுன்மம், வயிற்றுப்பிசம், கில்விக்கம், வாதரோகங்கள், இவைகளுக்கு, சோடாவுக்குப்பதில், இதை உபயோகிக்கலாம்.

மாத்திரை.—1-2, விராகனெடை, தண்ணீரில் கலந்து, கொடுக்கலாம். (சிந்தாமணி.)

அப்பிரகம்

செய்கை—இதற்கு சங்கோசனகாரி, வியதாபேதகாரி, பலகாரி ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—பெருவயிறு, பிரமியம், அதிமூத்திரம், சுரம், கமைச்சல், மேகபைத்தியம், கண்ணோவு, வாதரோகங்கள், எலும்புருக்கி, உட்சூடு, உள்ளெரிவு, ஆகிய இவைகளுக்கு உபயோகிக்கலாம். வீரியவிருத்தியையும், தேகத்தைப் புஷ்டித்து மினுமினுப்பையும் உண்டாக்கும். (சிந்தாமணி.)

யோகம்.

அப்பிரகசிந்தூரம். செய்முறை.—கிருஷ்ண அப்பிரகத்தைப் பழுக்கக்காய்ச்சி, வெள்ளாட்டு நீரில் தோய்த்தெடுத்து, கட்டபாரையால் இடித்துப் பொடிசெய்து; நெல்லுடன் கலந்து, அவித்து. கம்பளியில் கட்டி, காடியிலிட்டுவைத்து, மறுநாள் கட்டையவிழ்த்து, கையால் தேய்க்கவும்; தெளிந்தகாடியை வடித்துவிட்டால், அடியில் அப்பிரகம் உறைந்திருக்கும்; அதை வெயிலில் உலர்த்திக்கொள்ளவும். இவ்விதமாய்ச் சுத்திசெய்த அப்பிரகநவநீதம், 10-பங்கு; கந்தகம் 1-பங்கு. இவைகளை எலுமிச்சம்பழரசம் விட்டு அரைத்து, வேசாய் பில்லைதட்டி, காயவைத்து, புடம்போட்டு எடுத்து கரிசாலை ரசத்தில் ஒருமுறையும், செருப்படைரசத்தில் ஒருமுறையும், பொடுதலைச்சாற்றில் ஒருமுறையும், முருங்கைப்பூரசத்தில் ஒருமுறையும், அரைத்துப் புடம்போட்டால், சிந்தூரமாகிவிடும். ரசங்களாவிட்டரைக்கும்போதெல்லாம், கந்தகம் சேர்த்துக்கொள்ளவேண்டியது. மாத்திரை. 1-பணவிடை, கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

அமுக்கிராக்கிழங்கு.

இதுவே அஸ்வகந்தி.

செய்கை.—இதற்கு சுதுநாசகாரி, வியதாபேதகாரி, தீபனகாரி ஆகிய இக்குணங்களுண்டு.—பாலில் அவித்து, உலர்த்தி, பொடிசெய்துக்கொள்ளுவதே சுத்தி.

உபயோகம்.—வீக்கம், சுரம், சலதோஷம், வாதசூலை, உப்பிசம் வாந்தி, இருமல், வாதக்கரப்பான, பாண்டு, மந்தப்பசி, மேகவியாதிகள், இவை முதலியவைகளுக்கு இதை உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மாத்திரை.—இதின் சூர்ணத்தில் 1-விராகனெடை, சருக்கரையிலாவது நெய்யிலாவது கலந்துக்கொடுக்கலாம்.

யோகங்கள்.

அஸ்வகந்திசூரணம். செய்முறை.—சுத்திசெய்த அமுக்கிராக்கிழங்கு, பலம், 4; திரிகடுகு, ஏலம், கிராம்பு, சிறுநாவல்பூ, இவைகளின்சூரணம் வகை 1-க்கு பலம், $\frac{1}{4}$; சேர்த்து. அந்தக்கூட்டுச்சூரணத்துக்குச் சமன் சருக்கரை சேர்த்துக்கலந்துக்கொள்ளவும். மாத்திரை.—1-2, தோலாம், தேனில் கலந்துகொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

அஸ்வகந்திபலாலாக்ஷாதி தைலம். செய்முறை.—1-பதக்கு ஆற்றுநீரில், 10-பலம் அமுக்கிராக்கிழங்கு, 10—பலம் சிற்றாமுட்டி வேர், சிதைத்துப்போட்டு, 10—பலம் கொம்பரக்கைச்சிதைத்து, பொதிகட்டி தொங்கவிட்டு, எரித்து, 2-படி, கஷாயமாகவடித்து, அதில் தயிர் சலம்-படி, 6; நல்லெண்ணெய்படி, $1\frac{1}{2}$; விலாமிச்சம்வேர், அரத்தை, அதிமதுரம், மஞ்சிட்டி, சதபுஷ்பி, (சதகுப்பை) கோஷ்டம், கப்புமஞ்சள், சந்தனக்கட்டை, திப்பிலிமூலம், காட்டுமிளகு, கடுகுரோகிணி, தேவதாரம், கோரைக்கிழங்கு, நன்னாரிவேர் வகை 1-க்கு, பலம், $\frac{1}{4}$; இவைகளைப் பால்விட்டரைத்து, சேர்த்து, தீபாக்கினியாக எரித்து; துழாவி, பக்குவத்தில் வடித்துகொண்டு 1-மாதம் நெற்புடத்தில்வைத்து, சுத்திசெய்துகொள்ளவும். உபயோகம்.—இந்த ஸ்நானம்செய்துவைக்கில், சர்வசுரங்கள் நீங்கும். (தைலவர்க்கச்சுருக்கம்.)

அம்மாம்பச்சரிசி.

இதுவே சித்திரா வல்லாதி.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதின்பாலை, நகச்சுற்றுக்கு உபயோகிக்கலாம் சமூலத்தை, பிரமேகம், தடிப்பு, கமைச்சல், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

அயம். இரும்பு.

செய்கை—அரப்பொடிக்கு, கிருமிநாசகாரிகுணமுண்டு.

உபயோகம்—கிருமிரோகத்துக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—அரப்பொடியில் 5-20. உளுந்து நிறை, தேனில் கலந்துக்கொடுத்தால், வயிற்றுக் கிருமிகள் வெளிப்படும்.

யோகங்கள்.

அயசிந்தூரம். செய்முறை.—இதைச் செய்கிற முறைகள் பலவிதம்; அவைகளில், சுலபமான இரண்டொருமுறைகளை மாத்திரம், இதனடியில் கூறப்படும். (1) தேவையான இரும்பின் துப்பை அரைத்து, தண்ணீரிலிட்டு, கலக்கி, தெளியவைத்து, நீரை வடித்துவிட்டு அடியில் படிகிற வண்டலை உலர்த்திக்கொண்டால், சிந்தூர

மாகிவிடும். (2) அன்னபேதியை எலுமிச்சம்பழ ரசம்விட்டரைத்து, வில்லைதட்டி, உலர்த்தி, புடமிட்டால், சிந்தூரமாகும்.—(3) 1-பலம் அரப்பொடியை, புளிப்பு வெள்ளைமாதுளம் பழரசத்தில், 3-நாள் ஊறவைத்து, அரைத்து, புடம்போட்டு, எடுத்து, மறுபடியும் இரண்டுதரம், கற்றாழைச்சாற்றில் அரைத்துப் புடம்போட்டால், சிவந்துவிடும். அரப்பொடியை, பழச்சாற்றிலும், காடியிலும், காட்டாமணக்குப்பாலிலும், மும்மூன்று நாள் ஊறவைத்து, பிசைந்து, கழுவிக்கொள்வதே சுத்தி. ஹிந்துமுறைகள் செய்கை.—அயச்சிந்தூரத்துக்கு, பலகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதைப் பாண்டு, முகசந்நி, புராதன அக்கினிமாந்தியம், சூதகப்பாண்டு, நடுக்கல், மதுமூத்திரம், இசிவு, கக்கிருமல், இருதயத் துடிப்பு, இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம் **மாத்திரை.**—5-20, உளுந்துவிறை, தேனில் கொடுக்கலாம்.

அன்னபேதி, செய்கை.—இதற்கு தார்ட்டியகாரி, சங்கோசனகாரி, ருதுவர்த்தனகாரி, கிருமிநாசகாரி, முறைவியாதிரோதி, ஆகிய இக்குணங்களுண்டு. மேலுக்கு உபயோகித்தால், சங்கோசனகாரி, உஷ்ணகாரிகுணங்களைக் காட்டும். உபயோகம்—இதைப்பாண்டு, சூதகப்பாண்டு, சூதகக்கட்டு. கர்ப்பப்பிரமேகம், காச்சக்கட்டி, முறைகாச்சல், சூரியாவர்த்ததலைவலி, மருந்துபையித்தியம், நாள்பட்டகக்கிருமல், தட்டைக் கிருமிரோகம். இவைமுதலியவைகளுக்கு, உள்ளுக்கு உபயோகிக்கலாம். அக்கி, மேகவிரணம், சீழ்மூலம், குதப்பிரம்சம், கருப்பவிரணம், இவை முதலியவைகளுக்கு மேலுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—1-5, உளுந்துவிறை. திராக்ஷபழம் தேவையானது சேர்த்து, குளிகைசெய்து, தினம் 3, 4-தடவை கொடுக்கலாம். (இங்கிலீஷ்முறை.)

அயபஸ்மம். செய்முறை.—அன்னபேதியைப் பொடித்து, இரும்பு பாத்திரத்திலிட்டு வருத்தால், அதிலிருக்கிற நீர்ச்சுண்டி வெள்ளைச்சூர்ணமாகிவிடும். உபயோகம்.—அன்னபேதியை உபயோகிக்கிற ரோகங்களுக்கு, இதை உபயோகிக்கலாம். **மாத்திரை.**—½-3, உளுந்துவிறை, தேனிலாவது, வெல்லத்திலாவது, சேர்த்துக்கொடுக்கலாம். திராக்ஷபழம் சேர்த்து குளிகை செய்தாவது கொடுக்கலாம். (இங்லீஷ்முறை.)

காந்தம்.

எஃகு—இதுவே உருக்கு.

மண்டூரம்—இதுவே கிட்டம்.

இம்மூன்று பதார்த்தங்களுக்கு, அயத்துக்கிருக்கிற குணங்களே உண்டு. அயமருந்துகளுக்குள், அயச்சிந்தூரமும், அயபஸ்பமும் அன்னபேதியுமே சிரேஷ்டமானவைகள்.

காந்தத்தால் செய்தபாத்திரத்தில், பால்விட்டுக்காய்ச்சி, குடித்துக்கொண்டுவந்தால், ரத்தவிருத்தியுண்டாகும், தூர்ப்பலம் நீங்கும்,

தேகமேனிதரும். காந்தப்பாத்திரத்தில் பால்விட்டுக்காய்ச்சினால், பொங்கி உள்ளவேநிற்கும் வெளிக்குவராது. இது ஒரு விசேஷ குணம்.

காந்தச்சிந்தூரம். செய்முறை.—காந்தம், பொட்டிலுப்பு, கந்தகம், வகை-1-க்கு பலம்—1, இவைகளை அம்சபாத இலைச்சாற்றாலாட்டி, புடம்போட்டு, எடுத்து, பிறகு கத்தாழைச்சாற்றில் 2-தரம் ஆட்டி, இரண்டுபுடம்போடவும், சிவந்துவிடும். உபயோகம்.—அயச்சிந்தூரத்தின் குணமே இதற்குமுண்டு; ஆகையால், இதற்குப்பதில் அயச்சிந்தூரத்தையே உபயோகிக்கலாம். மாத்திரை.—5-20, உளுந்துவிறை தேனிலாவது, வெல்லத்திலாவதுசேர்த்துக் கொடுக்கலாம். (மூலிகை சங்கலிதம்.)

அயக்காந்தச்சிந்தூரம் செய்முறை.—சுத்திச்செய்த அயம், காந்தம், கந்தகம், வகை 1-க்கு பலம்—1 ; பூநீர்ச் சுண்ணம், கழஞ்சு, 1. எலுமிச்சம்பழ சாற்றால், 4. சாமமாட்டி, வில்லைதட்டி, காயவைத்து, ஓட்டிலிட்டு, சீலைமண்செய்து, 1-முழக்குழியில், 50 எருவில் புடம்போட, சிந்தூரமாகும். **மாத்திரை.**—5-10 உளுந்துவிறை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

அரக்கு—கொம்பரக்கு.

செய்கை.—இதற்கு வியாதாபேதகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இது யோகமுறைகளில் சேருகின்றது.

யோகங்கள்.

அரக்குத்தைலம்.—இதுவே கொம்பரக்குத்தைலம் ; லாக்ஷாதிதைலம். **செய்முறை.**—8-பலம், கொம்பரக்கை, பொடித்து, கிழிகட்டி, 8-படி ஆற்றுநீரில் தொங்கவிட்டு, சிறுமுட்டி விரகால் எரித்து, 1-படிக்குச்சுண்டவைத்த கொம்பரக்குக்கஷாயம், நல்லெண்ணெய், பால், வகை 1-க்கு படி-1; புளிச்சத்தண்ணீர், தயிர்ச்சலம், வகை 1-க்கு படி-¼-ஆகிய இவைகளைக்கலந்து, அதில் சந்தனம், அகில்கட்டை, வெட்டிவேர், குருவேர், கஸ்தூரிமஞ்சள், லவங்கப்பட்டை, கோஷ்டம், லவங்கப்பத்திரி, பச்சிலை, அதிமதுரம், சடாமாஞ்சில், மிளகு, சோம்பு, சுக்கு, சாபத்திரி, கிச்சிலிக்கிழங்கு, கடுகுரோகிணி, ஏலம், சதகுப்பை, கிளியூரல்பட்டை, சீரகம், வகை 1-க்கு பலம் ¼. இவைகளைப் பால்விட்டரைத்து, கரைத்து, எரித்து பதத்தில் வடித்து, நெற்புடத்தில்வைத்து சத்திசெய்துகொள்ளவும்.

உபயோகம்.—புராதனசுரங்கள், நளிர்ச்சுரம், தேகக்கடுப்பு, தலைவலி, கத்தாழை நாற்றம், சுவாசகாசம், பாண்டு, இவைமுதலியவைகளுக்கு, ஸ்நானம்செய்துவைக்கலாம். (தைலவர்க்கச் சுருக்கம்.)

அரத்தை.

சித்தரத்தை—பேரரத்தை—என இரண்டு சாதிகளுண்டு.

செய்கை.—இந்த வேருக்கு, கபஹாரி, சுரஹாரி, ஜடாராக்னி வர்த்தனகாரி ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதை, சுரம், இருமல், வாதரோகங்கள் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதின் சூர்ணத்தில் $\frac{1}{2}$-1, விராகனிறை தேனில் கலந்துக்கொடுக்கலாம்.

யோகம்.

அரத்தைக்கஷாயம்.—2-விராகனிறை அரத்தையைச் சிதைத்து $\frac{1}{4}$-படி வெந்நீரிவிட்டு, மூடி, 3-மணிநேரம் ஊறவைத்து, வடிக்கட்டிக்கொள்ளவும். உபயோகம்.—இதை, சுரம், இருமல் இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—$\frac{1}{8}$-$\frac{1}{4}$, ஆழாக்கு வீதம் தேன்விட்டு கலந்துக் கொடுக்கலாம். (அனுபவமுறை.)

அருநெல்லிக்காய்.

செய்கை.—இதற்கு சீதளகாரி, தாகசமனி ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதின் ரசத்தை பித்தம், தாகம், உட்சூடு இவைகளுக்கு உபயோகிக்கலாம். இதின்வேளா சுரம், அரோசகம், வாந்தி இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

அருநெல்லிக்காய் ஷர்பத்து. செய்முறை.—அருநெல்லிக்காய் ரசம் 1-பங்கு; சர்க்கரை, 2-பங்கு இவைகளைச்சேர்த்து, காய்ச்சி, பதத்தில் வடிகட்டிக்கொள்ளவும், மாத்திரை.—$\frac{1}{4}$-$\frac{1}{2}$-பலம் வீதம் தண்ணீரில் கலந்துக்கொடுக்கலாம். (அனுபவமுறை.)

அருதா இலை.

இதுவே சதாப்பு இலை.

செய்கை.—இந்த இலைக்கு, உஷ்ணகாரி, அங்காகர்ஷணநாசகாரி, ருதுவர்த்தனகாரி, கிருமிநாசகாரி ஆகிய இக்குணங்களுண்டு அதிகமாய்க்கொடுத்தால் விஷமிக்கும்.

உபயோகம்.—இதைச் சூதகசந்நி, சூதகக்கட்டு, காக்கைவலி, குழந்தைகளுக்குக்காணுகிற மாந்தவலி, இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—பச்சையிலையை அரைத்து, 20-40-உளுந்து நிறை கொடுக்கலாம். இதின் ரசத்தில் 10-20-துளி தேனில் கலந்து குழந்தைகளுக்குக் காணுகிற வலி, கிருமிரோகம் இவைகளுக்குக்கொடுக்கலாம். வலியுள்ளபோது ரசத்தை மேலுக்குப்பூசலாம்.

அறுகம்புல்லின் வேர்.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி, சீதளகாரி. ஆகிய இக்குணங்களுண்டு.

-49-

உபயோகம்.—இதைக் கோழை, கண்ணோவு, சிரஸ்தாபம், ஈரம்பிரநோய், ரத்தபித்தம், மருந்துச்சூடு, வெப்பம் ஆகிய இவைகளுக்கு உபயோகிக்கலாம். சரீரவன்மையுண்டாகும்; அறிவுதரும். (சிந்தாமணி.)

யோகங்கள்.

தூநுவாதிகிருதம்.—இதுவே அறுகம்வேர் நெய். செய்முறை.—அறுக்கம்புல் சமூலத்தின், ரசம் படி-2; ஆலம்பட்டை கஷாயம், படி 2; பால்படி -1; நெய், படி-1. இவைகளைக்கலந்து, காய்ச்சி பதத்தில் வடித்து, அதில் அதிமதுரம், நன்னாரிவேர், சீரகம், சந்தனக்கட்டை, கோஷ்டம், விலாமிச்சுவேர், கோரைக்கிழங்கு, ஆடாதோடைவேர், இவைகளின் வஸ்திரகாயஞ்செய்த சூர்ணம் வகை 1-க்கு பலம்-$\frac{1}{2}$; சாபத்திரி, ஏலம் இவைகளின் தூள் வகை 1-க்கு விராக னிறை 2. சேர்த்துக்கலந்துக்கொள்ளவும், உபயோகம்.—இதை உடம்பெரிவு, வெள்ளை, ரத்தபித்தம், நீர்க்கடுப்பு, தாகம், விசர்ப்பி இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2, உத்திராணி அளவு, தினம் 2-3-தடவை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

தூநுவாதித்தைலம். செய்முறை.—அறுகம்புல்லின் கிழங்கு, வீசை-1; உரலிலிட்டு, இடித்து, அதில் 6-படி சலம்விட்டு எரித்து, $\frac{3}{4}$-படிக்குச் சுருக்கிய கஷாயத்தை, தைலபாத்திரத்தில் வடித்து, அதனுடன் $1\frac{1}{2}$-படி, பாலும், $\frac{3}{4}$-படி நல்லெண்ணெயும் விட்டு; ஒரு சாதிவிரகால் எரித்து, துழாவி, பதத்தில் வடித்துக்கொள்ளவும் உபயோகம்.—உஷ்ணவாதரோகம், மூலச்சூடு, மருந்துகள் உஷ்ணம். ஆண்குறி, வயிறு இவைகளின் எரிவு, அழலை, அழுகிரந்தி, பித்தரோகம், இருத்வர்தம், கபாலசூலை, சொறி, நீர்க்கோவை, பீனசம் இவைகளுக்கு ஸ்நானஞ்செய்துவைக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

ஆகாசகருடன் கிழங்கு.

இதுவே கொல்லன் கோவைக்கிழங்கு.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி, பலகாரி ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதை மேகரோகங்களுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதின்சூரணத்தில் $\frac{1}{2}$-1; விராகனிறை, சருக்கரையில் கலந்துக்கொடுக்கலாம்.

ஆகாசதாமரை.

இதுவே அந்தரத்தாமரை.

செய்கை.—இந்த இலைக்குச் சீதளகாரி, சீனித்தகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை நீர்ச்சுருக்கு, மூலம், சீதபேதி, பொடி இருமல், தாபிதம் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதின் சுரசத்தில் $\frac{1}{8}$ - $\frac{1}{4}$, ஆழாக்கு அளவு, தேனில் கலந்துக்கொடுக்கலாம். மூலம் அடிதள்ளிப் போகுதல், பித்தம், வித்திருதி இவைகளுக்கு இலையை அரைத்து, மேலுக்கு வைத்துக் கட்டலாம்.

ஆடாதோடை.

செய்கை.—இந்த இலைக்கு கபஹாரி, அங்காகர்ஷணநாசகாரி ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதை இருமல், சுவாசரோகம், சுரம், க்ஷயம் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதின் சுரசத்தில், 10-20-துளி, தேனில் கலந்துக்கொடுக்கலாம்.

யோகங்கள்.

ஆடாதோடை வெந்நீர் ஊறல் கஷாயம்.—செய்முறை-2-3-இலையையும், 1-ஏலக்காயையும், $\frac{1}{4}$-படி வெந்நீரிலிட்டு, 2-மணிநேரம் ஊறவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை $\frac{1}{8}$-$\frac{1}{4}$-ஆழாக்கு அளவு, தினம், 3-வேளைக்கொடுக்கலாம்.

ஆடாதோடைச் சத்து செய்முறை.-தேவையான ஆடாதோடை சுரசத்தை மண்பாண்டத்திலிட்டு, மெழுகுபதமாய்ச் சுண்டக்காய்ச்சிக்கொள்ளவும். **மாத்திரை.**—4-10-உளுந்துவிறை, மாத்திரைசெய்து தினம் 3-4-தடவை கொடுக்கலாம். இதனுடன், திப்பிலிப்பொடி சேர்த்து கொடுத்தால் வீரியம் அதிகப்படும்.

வாசாதி கிரதம். செய்முறை.—ஆடாதோடையிலை, சப்பாத்திப்பூ இலை, சீந்தில்கொடி, வகை-1-க்கு பலம் 3; தண்ணீர்படி 2. காய்ச்சி, 8-ல் 1-பங்காகச்சுண்டவைத்து, வடிக்கட்டி, அதில் அதிமதுரம், இலுப்பைப்பூ, வகை 1-க்கு-விராக னிறை-1; பாலில் அரைத்து கலந்து, $2\frac{1}{2}$-பலம் நெய்சேர்த்து, காய்ச்சி, பதத்தில் வடிக்கட்டிக் கொள்ளவும். **உபயோகம்.**—ரத்தப்பித்த ரோகங்கள், பெரும்பாடு, இருமல் இவைமுதலிய ரோகங்களுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—1-2-விராகனிறை, தினத்துக்கு 3-4-தடவை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

ஆடுதீண்டாப்பாளை.

செய்கை.—இந்த இலைக்கு கிருமிநாசகாரி, பிரசவகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—கிருமிரோகம், கரப்பான், கருங்குஷ்டம், சீதசுரம், மந்தப்பிரசவம் இவை முதலிய வைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

யோகம்.

ஆடுதீண்டாப்பாளை வெந்நீர்ஊறல் கஷாயம். செய்முறை—3-விராகனிறை இலையை, $\frac{1}{4}$-படி வெந்நீரிலிட்டு, 2-மணிநேரம்

ஊறவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும். **மாத்திரை.**—$\frac{1}{8}$ - $\frac{1}{4}$, ஆழாக்கு அளவுகொடுக்கலாம்.

ஆமணக்கு இலை.

செய்கை.—இதற்கு க்ஷீரவர்த்தன காரி குணமுண்டு.

உபயோகம்.—பாலில்லாத பெண்களுக்கு, ஆமணக்கு இலையை வதக்கி, ஸ்தனங்கள் மேல்வைத்து கட்டிக்கொண்டு வந்தால், பால் சுரக்கும்; நோவுள்ள இடங்களில் ஒற்றிடமிடலாம்.

ஆமணக்கெண்ணெய்—சிற்றாமணக்கெண்ணெய்—

செய்கை.—இதற்கு விரேசனகாரிகுணமுண்டு.

உபயோகம்.—[illegible]ந்தத்துக்குக் கொடுக்கலாம்.

மாத்திரை.—இ[illegible] $\frac{1}{8}$ - $\frac{1}{4}$ - ஆழாக்கு அளவு பால், காபி, சுக்குகஷாயம், உப்புசேர்[illegible]காரம், எலுமிச்சம்பழரசமும் சருக்கரையும் சேர்த்த கூட்டு, ஆகிய இவைகளில் எதிலாவது கலந்துக்கொடுக்கலாம்.

ஆரஞ்சிப்பழம்.

செய்கை.—இதற்கு சீதளகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதைச் சுரம், வாந்தி, தாகம், இளைப்பு, அரோசகம். இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—$\frac{1}{8}$ - $\frac{1}{4}$ - ஆழாக்கு அளவு கொடுக்கலாம்; அல்லது சுளைகளை வாயிலிட்டு சப்பிக்கொண்டு இருக்கச்செய்யலாம்.

ஆரஞ்சிப்பழத்தோல்.

செய்கை.—தீபனகாரி, பலகாரி ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—அக்கினிமந்தம், வாந்தி, துர்ப்பலம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகங்கள்.

ஆரஞ்சிப்பழத்தோல் வெந்நீர் ஊறல் கஷாயம். செய்முறை.—$\frac{1}{4}$-பலம் ஆரஞ்சிப்பழத்தோலையும் 1-விராகனிறை எலுமிச்சம்பழத்தின் பச்சைத்தோலையும், $\frac{1}{2}$ - விராகனிறை லவங்கமும் சிதைத்து, $\frac{1}{4}$-படி வெந்நீரிலிட்டு, மூடி $\frac{3}{4}$ நாழிகைவரையில் ஊறவைத்து, வடிக்கட்டிக்கொள்ளவும். **மாத்திரை.**—$\frac{1}{8}$ - $\frac{1}{4}$-ஆழாக்கு அளவு கொடுக்கலாம்.

ஆரஞ்சிப்பழத்தோல் ஷர்பத்து. செய்முறை.—$2\frac{1}{2}$-பலம், உலர்ந்த ஆரஞ்சிப்பழத்தோலை, 1-படி கொதிக்கக்காய்ந்த வெந்நீரிலிட்டு 30-நாழிகைவரையில் ஊறவைத்து, தோலைப் பிசைந்து, பிழிந்து எடுத்துவிட்டு, ஜலத்தை இறுத்து. 10-நிமிஷம் வரையில் காய்ச்சி, வடிகட்டிக்கொண்டு, அதில் 48-பலம் சருக்கரை சேர்த்து சிறுதீயிட்டெரித்து கரைத்துக்கொள்ளவும். **செய்கை.**—தீபனகாரி.

உபயோகம்.—வெகுட்டலையுடைய மருந்துகளோடு இதைச் சேர்த்துக்கொடுக்கலாம். மாத்திரை.—1-2, விராகனிடை கொடுக்கலாம்.

ஆலம்பால்.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை நாக்கு வெடிப்பு, பிரமேகம், தாதுக்ஷீணம் இவைகளுக்கு உள்ளுக்குக்கொடுக்கலாம். பல்லு ஆட்டத்துக்கும், கால் வெடிப்புக்கும் மேலுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—1-2-துலாம் இடை சருக்கரையில் சேர்த்துக் கொடுக்கலாம்.

ஆல்பகோரா.

செய்கை.—இதற்கு ஸ்நிக்தகாரி, லகுவிரேசனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—சுரம், அரோசகம், தாகம் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—ரோகிக்குத் தேவையான பழங்களைக் கொடுப்பிக்கலாம்.

ஆவாரன்பட்டை—பூ—பிசின்.

செய்கை.—இதின் பட்டைக்கும், பூவுக்கும், சங்கோசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—வாய்ரணம், மதுமூத்திரம், ரத்தமூத்திரம், கர்ப்பஸிராவம், பெரும்பாடு இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். ஆவாரன் பூவை, கண்ணோவுக்கு ஒற்றிடமிடலாம். இதின் தூளை பச்சைப்பயிர்மாவோடு சேர்த்து, நமைச்சலுக்கு பூசலாம்.

மாத்திரை.—பட்டையின் சூர்ணத்தில், 10-30, உளுந்து இடை சருக்கரையில் கலந்துக்கொடுக்கலாம்.

ஆவாரன்பட்டைக்கஷாயம். செய்முறை.—1¼-பலம் ஆவாரன் பட்டையை இடித்து, ⅓-படி நீரிலிட்டு, 15-நிமிஷநேரம் காய்ச்சி, வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—½ - ¼, ஆழாக்கு அளவுகொடுக்கலாம்.

ஐத்திரிபுஷ்பாதிகிருதம். செய்முறை.—10-பலம் ஆவாரன் பூவை, 20-பலம் நெய்யிலிட்டு, 3-நாள் ஊறவைத்து, பிறகு காய்ச்சி, வடிக்கட்டி அதில் 10-பலம் கற்கண்டும், ஏலம், சீரகம், லவங்கப்பட்டை, சடாமாஞ்சி, சந்தனம் இவைகளின் தூள். வகை 1-க்கு விராகனிடை 1-ம், சேர்த்து, கலந்துக்கொள்ளவும். உபயோகம்.—மேகவியாதிகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2, துலாம் இடைகொடுக்கலாம்.

ஆளிவிரை.

இதுவே அலிசிவிரை; அகத்திவிரை.

செய்கை.—இதற்கு ஸ்நிக்தகாரி, போஷணகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இருமல், ஒக்காளம், மூத்திரத்தரிப்பு, அருசி, பீசவாயு, அஸ்திச்ருடு, வித்திருதி ஆகிய இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகங்கள்.

ஆளிவிரை பொட்டலிகை. செய்முறை.—ஆளிவிரை மாவு தேவையானதை யெடுத்து, அதற்குவேண்டிய வெந்நீர்விட்டு, இளகிய களிபதமாய்க் கலந்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை கட்டிகளுக்கு வைத்துக்கட்டினால், சீக்கிரத்தில் பக்குவமாகும்.

ஆளிவிரை கஷாயம். செய்முறை.—6-விராகனிடை ஆளிவிரை-2-விராகனிடை அதிமதுரம். இவைகளைச் சதைத்து, ½-படி வெந்நீர் விட்டு, மூடி ¼-மணிநேரம் அனல்பட வெதுப்பி, வடிகட்டிக்கொள்ளவும். உபயோகம்.—இதை இருமல், கிரகணி, சீதபேதி, நீர்சுருக்கு வெள்ளை இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை. ½-ஆழாக்கு அளவு அடிக்கடிகொடுக்கலாம்.

ஆளிவிரை நவநீதம். செய்முறை.—1-பங்கு ஆளிவிரை எண்ணெயில், ½-பங்குச் சுண்ணாம்புநீர்விட்டுக்குழப்பினால், வெண்ணெய் போலாகும். உபயோகம்.—நெருப்பாவது, வெந்நீராவது பட்டு காளுகிற ரணங்களுக்கு, இதை இறகால் தடவிக்கொண்டுவந்தால், குளிர்ந்திருக்கும்; ரணங்களும் சீக்கிரத்தில் உலரும்.

ஆற்றுத்தும்மட்டிக்காய்.

இதுவே கலிங்கம், தும்மட்டி, பேய்த்தும்மட்டி, பேய்க்கும்மட்டி, வரிக்கும்மட்டி.

செய்கை.—இதற்கு விரேசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை மலபந்தம், யகிர்த்கண்டரோகம், நீர்க்கோவை இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—விரை நீக்கி, உலர்த்தி, பொடித்ததனில், 2-8; உளுந்து இடை வெல்லத்தில் கலந்துக்கொடுக்கலாம்.

யோகங்கள்.

கலிங்காதித்தைலம். செய்முறை.—வரிக்கும்மட்டிக்காயின்சாறு, வெங்காயச்சாறு, எலுமிச்சம்பழரசம், ஆமணக்கு எண்ணெய், வகை 1-க்கு படி-1; இஞ்சிரசம் படி-¼. இவைகளை கலசத்திலிட்டு, காய்ச்சி, கொஞ்சம் நீரிருக்கும்போதே அதில், சீரகம், கொத்துமல்லி, சதகுப்பை, லவங்கம், லவங்கப்பட்டை, மஞ்சள், ஏலம், இவைகளின் தூள் வகை 1-க்கு பலம்-½; போட்டு காய்ச்சி, பதத்தில் வடித்துக்கொள்ளவும். மாத்திரை.—2-5-விராகனிடை நீராகாரத்தில் கலந்துக் கொடுக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

கலிங்காதித்தைலம். செய்முறை.—1-படி, பேய்க்கும்மட்டிக்காய்ச்சாற்றைக் குழம்பாய்க்காய்ச்சி, கலுவத்திலிட்டு, அதில் 10-விராகனிறை பெருங்காயப்பொடியும், கடுகுரோகிணி, ஏலம், வால்மிளகு, இந்துப்பு, வெங்காரம் இவைகளின் பொடி, வகை, 1-க்கு விராகனிறை, 2-ம், சேர்த்து அரைத்துக் கொள்ளவும். **உபயோகம்.**—இதை மலபந்தம், குதக சந்தி, இவைகளுக்குக் கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

கலிங்காதிலேகியம். செய்முறை.—பேய்க்கும்மட்டிக் காய்ச்சாறு, தேங்காய்ப்பால், வகை, 1-க்கு படி-½; கலந்து அதில் 20 பலம் வெல்லம் கரைத்து, காய்ச்சி லேகிய பாகம் வரும்போது, இறக்கி அதில் சத்திச்சாரம், யவக்ஷாரம், பஞ்சலவணம், பெருங்காயம், கருஞ்சீரகம், கிராம்பு, திரிகடுகு, திரிபலை, ஏலம், சதகுப்பை, ஓமம், வெள்ளைப்பூண்டு இவைகளின் சூர்ணம், வகை 1-க்கு பலம் 1; ஆவி பிசைத்துக்கொள்ளுகிறபோது 5-பலம் சிற்றாமணக்கெண்ணெய் கூட்டிவிட்டுக்கொள்ளவும். **உபயோகம்.**—வயிறு உப்பசம், வயிற்று நோவு, பிலீகரோகம், யகிர்த்கண்டரோகம், மகோதரம் இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—½-1. விராகனிறை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

இஸ்கோல்விரை.

செய்கை.—இதற்கு சினிக்தகாரி, லகுசங்கோசனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை சுரம், இருமல், மூத்திரத்தரிப்பு, பேதி, சீதபேதி, வித்திருதி இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதின் அளவில், 2-3-விராகனிறை, கற்கண்டுதூள் சேர்த்துக் கொடுக்கலாம்.

யோகங்கள்.

இஸ்கோல்விரை கஷாயம். செய்முறை.—2-விராகனிறை இடித்த இஸ்கோல்விரையை, ½-படி நீரிலிட்டு, மூடி, ½-நாழிகை நேரம் காய்ச்சி, வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—¼-½-ஆழாக்கு அளவு, அடிக்கடி கொடுக்கலாம்.

இலந்தம்பட்டை-கொழுந்து.

செய்கை.—இலந்தம் பட்டைக்கும், கொழுந்துக்கும், சினிக்தகாரி, சங்கோசனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இவ்விரண்டிலொன்றைச் சீதபேதிக்கு உபயோகிக்கலாம்.

இலுப்பைக்கட்டி.

இதுவே இலுப்பைப்பிண்ணாக்கு.

செய்கை.—இதற்கு வமனகாரி குணமுண்டு.

உபயோகம்.—ஊமத்தன்காயை விஷமிக்கும்படி தின்றவர்களுக்கு, இலுப்பைப் பிண்ணாக்கைத் தண்ணீரில்கரைத்து கொடுக்கலாம். கரப்பான், வினைவீக்கம், கடுவன் இவைகளுக்கு மேலுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

இலைக்கள்ளி.

இதுவே முசல் செவிக்கள்ளி.

செய்கை.—இதின்ரசத்துக்கு விரேசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைக்கரப்பான், காதுநோய், சூலை, வாதநோய், சுவாசகாசம் இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். இந்தரசத்தை, வேப்பெண்ணெய்க் கலந்து, வாதநோய்களுக்குத், தேய்க்கலாம். இலையைவதக்கி, மூத்திரக்கட்டுக்கு வயிற்றின்மேல் போடலாம். (சிந்தாமணி.)

ஈச்சுரமூலி.

உபயோகம்.—இதைச் சோபை ரோகங்களுக்கு உபயோகிக்கலாம்.

ஈயம் - வங்கம்.

ஈயச்சிந்தூரம் - வங்கச்சிந்தூரம்.

யோகம்.

ஈயச்சிந்தூரக்களிம்பு. செய்முறை.—சிந்தூரம், 12-பங்கு: ரசகர்ப்பூரம், 1-பங்கு. இவைகளைச்சேர்த்து, அரைத்து, 24-பங்கு நல்லெண்ணெயிலிட்டு, எரித்துத் துழவிக்கொண்டேயிருந்தால், களிம்புபதம்வரும்; பிறகுதீயை விட்டிறக்கி, குளிர்ச்சியாகிறவரையில் துழவிக்கொண்டேஇருக்கவேண்டியது. **உபயோகம்.**—காயம், விரணம் இவைகளுக்கு உபயோகிக்கலாம். (அனுபவமுறை.)

ஈயவெள்ளை.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரி, சமனகாரி ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—தோல் உரைப்பட்டுபோனதற்கு இதை மேலுக்குத்தூவலாம்; இதனோடு பன்றிநெய் சேர்த்து, களிம்பு செய்து உபயோகிக்கலாம்.

யோகம்.

ஈயவெள்ளைக்களிம்பு. செய்முறை.—4-பலம் ஈயவெள்ளையை 8-பலம் நல்லெண்ணெயிலிட்டு, கலக்கி எரித்து, துழவிக்கொண்டிருந்தால், சரக்குகள் கருத்து, களிம்புபதம் வரும்; அப்போது, 20-பலம் அல்லது தேவையான ரோசனம் சேர்த்து, எரித்து டக்குவபதம் வந்தபிறகு இறக்கி, குளிர்கிறவரையில் துழவிக்கொண்டேயிருக்கவும். **உபயோகம்.**—இதை வெட்டுக்காயம், கட்டிகள் முதலியவைகளுக்கு, சீமை பிளாஸ்திரிக்குப்பதிலாய் உபயோகிக்கலாம். (அனுபவமுறை.)

மிருதாரசிங்கி.

உபயோகம்.—மிருதாரசிங்கியை எண்ணெயிலுரைத்து, மேக விரணங்களுக்குப் பூசலாம்.

யோகம்.

மிருதாரசிங்கி பிளாஸ்திரி. செய்முறை.—மிருதாரசிங்கித்தூள், 4-ராத்தல்; நல்லெண்ணெய், 1-காலன்; தண்ணீர், $3\frac{1}{2}$-பைன்ட். இவைகளை இரும்புப்பாத்திரத்திலிட்டு, வெந்நீர்மேல்வைத்து, 4-5-மணிநேரம் வரையில், இளந்தீயிட்டெரித்து பிளாஸ்திரிபதத்துக்கு வருகிறவரையில், துழவிக்கொண்டிருக்க வேண்டியது. தேவையானால் அதிகசலம் விட்டுக்கொள்ளலாம். **உபயோகம்.**—இந்தப்பிளாஸ்திரியை வெட்டுக்காயங்களுக்கு உபயோகிக்கலாம்.

வங்கபஸ்பம். செய்முறை.—கரு ஈயத்தைச் சட்டியிலிட்டு, கோவைச்சாறு அடிக்கடிவிட்டு, 12-மணிநேரம், அல்லது சிவந்தநிறமாகிறவரையில் வறுத்து, பிறகு துத்தியிலை ரசம்விட்டு அரைத்து, புடம்போடவும்; அதை எடுத்துமறுபடியும் துத்தியிலைரசம் விட்டு அரைத்து புடம்போடவும். இவ்விதமாய், 12-புடம்போடவும். **உபயோகம்.**—இதை க்ஷயம், இருமல், உஷ்ணரோகம் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சாரசங்கிரகம்.)

உத்தாமணி.

இதுவே வேலிப்பருத்தி.

செய்கை.—இதின் ரசத்துக்கு வமனகாரி, கபஹாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைவாதநோய், குன்மம், தனுர்வாதம், சுவாசம் தடிப்புகள், அக்கினிமந்தம் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

உப்பு.

இதுவே கறியுப்பு-சோற்றுப்பு-கடலுப்பு.

செய்கை.—உப்புக்கு தீபனகாரி, விரேசனகாரி, வமனகாரி, கிருமிநாசகாரி, ஷோனகாரி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதை குன்மம், பாலரோகம், முறைக்காச்சல், ரக்தவாந்தி, க்ஷயம், மூட்டுவீக்கங்கள் இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—10-20-உளுந்து விறை கொடுத்தால், தீபனகாரி குணந்தரும். $\frac{1}{2}$-1-பலம் கொடுத்தால், பேதியாகும், $1\frac{1}{2}$-2-பலம் வெந்நீரில் கலந்துக்கொடுத்தால், வாந்தியாகும். ஆசன வஸ்திசெய்தால், புழுக்கள் வெளிக்குவரும்.

கறிஉப்புத்திராவகம். செய்முறை.—சுத்திசெய்த கறியுப்பு, பலம்-8, படிகாரம், பலம் 6. இவ்வைகளைப்பொடித்து, 8-பலம்கடலைப் புளிப்புசேர்த்து வாலையிலிட்டுவடித்தால் திராவகம் இறங்கும்.

உபயோகம்.—இதை மந்தாக்கினி, தூர்ப்பலம், வாதரோகங்கள் அஜீர்ணம் இவைமுதலியவைகளுக்குக்கொடுக்கலாம். **மாத்திரை.**—5 - துளி, பிரமாணம், தண்ணீரில் கலந்துக் கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

இந்துப்பு.

இதுவே சைந்திய லவணம்.

செய்கை.—இதற்கு சலவிரேசனகாரி, தீபனகாரி, அரோசகஹரகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை அக்கினிமந்தம், வயிற்றுவலி, சுரம், தாபனம், நீர்க்கோவை இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—20-40, உளுந்துவிறைகொடுத்தால் மூத்திரத்தையதிகப்படுத்தும், 1-2, விராகனிறைகொடுத்தால், மலம் இளகும், 3-6, விராகனிறை கொடுத்தால், தண்ணீர்த் தண்ணீராய்ப் பேதியாகும்.

யோகம்.

சைந்தியவாதிசூரணம் செய்முறை.—சைந்தியலவணம், 1-பங்கு சீரகம், 2-பங்கு; ஓமம், 4-பங்கு; திப்பிலி, 8-பங்கு; சுக்கு 16-பங்கு; கடுக்காய், 32-பங்கு. இவைகளின் தூளை நிறுத்தெடுத்து, சேர்த்து, கலந்துக்கொள்ளவும், **உபயோகம்.**—இதை வாந்தி, அக்கினிமாந்தியம் இவை முதலியவைகளுக்குக் கொடுக்கலாம். **மாத்திரை.**—1-துலாம் விறைகொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

கறுப்புப்பு. செய்முறை.—45-பலம் கறியுப்பைப்பொடித்து, $1\frac{1}{4}$ - பலம் நெல்லிவற்றல் தூளைச் சேர்த்து கலந்து, 4 - பங்காக்கி, 1-பங்கை சட்டியிலிட்டெரித்து, பிறகு அதின்மேல் மற்றொரு பங்கையிட்டு எரிக்கவேண்டியது. இவ்விதமாய், 4 - பங்குகளை எரித்துக்கொண்டு, 6 - நாழிகைவரையில் குளிரவைத்து, பார்வையிட்டால், உப்பு கறுத்து இருக்கும். **செய்கை.**—இதற்கு வியதாபேதகாரி, மலகாரி, பலகாரி, தீபனகாரி, குணங்களுண்டு. **உபயோகம்.**—இதை அஜீரணம், காச்சக்கட்டி, யகிர்த்கண்டரோகம். நாள்பட்ட வாதரோகங்கள், மலபந்தம் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—1-விராகனிறை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

உப்பு பேதங்கள்.

பிடாலவணம்.

வளயலுப்பு.—இதுவேகாசுலவணம்.

கல்லுப்பு.—இதுவே கந்தக உப்பு. சத்தியுப்பு. இதில் கறியுப்பும், கந்தகமும். அயமும், காணலாம்.

சவ்வச்சாரலவணம்.

ஓளத்பிஜ்யலவணம். மரஉப்பு. பூண்டுகளிலிருந்தெடுக்கிற உப்பு.

அமரியுப்பு. இதுவே மூத்திர உப்பு.

அட்டுப்பு.

பஞ்சலவணம். என்பது, காசுலவணம், பிடாலவணம், சயந்திய லவணம், சவ்வச்சரலவணம், சமுத்திரலவணம் ஆகிய இவைகளின் கூட்டுக்குப் பெயர்.

உழமண் ணுப்பு.

இதுவே பூநீறு ; உவர்மண்ணு ; சவுடு ; காரம்.

செய்கை.—இதற்கு ஆம்லநாசகாரி வியதாபேதகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை வயிற்றுப்புளிப்பு, குலை எரிவு, வயிறு உப்பசம், மந்தவாந்தி, கீல்வாதம், சர்மரோகங்கள் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—15, 10-உளுந்து நிறைகொடுக்கலாம்.

ஊமத்தை – இலை – விரை.

இதின் மொக்குக்கு.—மராட்டிமொக்கு, மதனப்பூ என்று பெயர்.

செய்கை.—ஊமத்தன் இலைக்கும், விரைக்கும், வேதனுசாந்திகாரி, அங்காகர்ஷணநாசகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை சுவாசகாசம், காசம், கீல்வாதம், எலும்பு வீக்கம், வித்திரதி இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இலைதூளில் 1-3, உளுந்து நிறை கொடுக்கலாம்; 10, 30-உளுந்து நிறை; உலர்ந்த இலையை, ஒருவேளைக்குச் சுருட்டுப் பிடிக்கும்படிச் செய்யலாம்.

யோகம்.

துத்தூரதைலம். செய்முறை.—கரி ஊமத்தன் இலை ரசம் பலம் 12; தேங்காய் எண்ணெய், பலம் 24-சேர்த்து, காய்ச்சி, ரசம் சுண்டி வரும்போது, 1-பலம் ஓமச்சூர்ணம் சேர்த்து, மெழுகுபதமாய் வரும்போது வடித்து, அதில் 1-பலம் கர்ப்பூரம் சேர்த்து கரைத்துக் கொள்ளவும். **உபயோகம்.**—வாதநோய்களுக்கு இதைப்பூசி, வெந்நீர்விட்டு உருவச்செய்யலாம். (அரமனை டிஸ்பென்சேரிமுறை.)

எட்டிக்கொட்டை.

செய்கை.—இதற்கு நரம்புதாருட்டியகாரி, உஷ்ணகாரி குணங்களுண்டு. பிரமாணம் அதிகமானல் கொல்லும்.

உபயோகம்.—பக்ஷவாதம், நரம்புவியாதிகள், பேதி, சீதபேதி; மலபந்தம், குதம்பிரம்சம், சொட்டுமூத்திரம், இந்திரலுப்தம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—வித்தின் சூர்ணத்தில், 2-3-உளுந்துநிறை, கிரமமாய் அதிகரித்து, 10-உளுந்து நிறைவரையில் தினம் 2-3-தடவைக் கொடுக்கலாம்,

- 54 ·

யோகங்கள்.

எட்டிக்கொட்டை வெந்நீர் ஊறல் கஷாயம். செய்முறை.—2-விராகனிறை எட்டிக்கொட்டைத்தூளை, ½-புட்டி வெந்நீரிலிட்டு மூடி, 1–மணிநேரம் ஊறவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும். **உபயோகம்.**—இதை தார்ப்பலம், நீரேத்தம் இவை முதலியவைகளுக்கு கொடுக்கலாம். **மாத்திரை.**—4–8-10, உச்சிக் கரண்டிவரையில் படிப்படியாய் அதிகரித்து, தினம், 3-தடவை கொடுக்கலாம். ஆனால் இதின் குணத்தை சாக்கிரதையாய்க் கண்டறியவேண்டியது. (இங்கிலீஷ் முறை.)

விஷமுட்டித் தைலம் செய்முறை.—வெள்ளாட்டுப் பாலில், 30-நாழிகை ஊறிய எட்டிக்கொட்டைச்சிவல், பலம் 2½ ; நல்லெண்ணெய், படி 2 ; உரித்தவெள்ளைப்பூண்டுதிரி, பலம் 2½ ; ஆயில்பட்டைத்தூள், பலம் 1½. இவைகளைச்சேர்த்து, எரித்து, மூன்றுசரக்குகளும் சிவந்தபக்குவம் அறிந்து வடித்து வைத்துக் கொள்ளவும். **உபயோகம்.**—இதை மேலிற் தடவிப்பிடித்தால், கனத்த வாயுவின் கூட்டமெல்லாம் விலகும். (தைலவர்க்கச் சுருக்கம்.)

எருக்கன்வேர்ப்பட்டை—பால்—இலை.

செய்கை.—எருக்கன் வேர்பட்டைக்கு, வியதாபேதகாரி, பலகாரி, சுவேதகாரி, வமனகாரி குணங்களுண்டு. இதின் பாலுக்கு க்ஷோணகாரி, கந்துநாசகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதின் பட்டையை குஷ்டம், மேகப்புடை, மேகவிரணங்கள், சீதபேதி, பேதி, நாள்பட்ட கீல்வாதம், வாதநோய், இவைகளுக்கு உபயோகிக்கலாம். இதின்பாலை வாதக்கட்டிகளுக்கும், வாதநோய்களுக்கும், வலிகளுக்கும், சுளுக்குக்கும், எலிவிஷத்துக்கும் பூசலாம். இதின் இலையை, எலிவிஷம் வலி, கீல்வீக்கம், வாதநோய் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—எருக்கன் வேர்ப்பட்டையின் சூர்ணத்தில், 3–10, உளுந்துநிறை கொடுக்கலாம். ½-1, விராகனிறை கொடுத்தால், வாந்தியாகும்.

யோகங்கள்.

அர்க்கக்ஷீரதைலம் செய்முறை.—எருக்கன்பால், ஆட்டுப்பால், கருநொச்சிச்சாறு, புளியிலைச்சாறு வகை 1-க்கு படி ¼ ; நல்லெண்ணெய், படி 1 ; மிளகு, கடுகு, மஞ்சள் இவைகளின் தூள்வகை 1-க்கு பலம் 1 இவைகளை முறைப்படி சேர்த்து, பதமாய்க்காய்ச்சி, வடித்துக்கொள்ளவும். **உபயோகம்.**—இதை வாதநோய்களுக்குத் தடவிப் பிடிக்கலாம். (மூலிகசங்கலிதம்.)

எலுமிச்சம்பழம்.

செய்கை.—இதின் ரசத்துக்கு, சீதளகாரி, க்ஷாரநாசகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை சுரம், தாபம், சீல்வாதரோகம், பேதி, சீதபேதி இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—$\frac{1}{8}$-$\frac{1}{2}$ ஆழாக்கு அளவு கொடுக்கலாம்.

யோகங்கள்.

எலுமிச்சம்பழ ஷர்பத்து. செய்முறை.—எலுமிச்சம் பழரசம், 1-பங்கு; கற்கண்டு, அல்லது சருக்கரை 3-பங்கு. இவைகளைச்சேர்த்து, காய்ச்சி, பதமறிந்து வடித்துக்கொள்ளவும். **மாத்திரை.**—1-2, உச்சிக்கரண்டி அளவு கொடுக்கலாம்.——எலுமிச்சன் பழத்தை, ரசம்பிழிவதற்குமுன் வெந்நீரிலிட்டு, கொஞ்சநேரம்வைத்து, எடுத்துக்கொண்டாவது, அல்லது தோலை உரித்துவிட்டு கழுவி, ரசத்தைப்பிழிந்துக்கொண்டால், ஷர்பத்தில் கசப்பு இராது. (அனுபவமுறை.)

சம்பீரதைலம் செய்முறை.—எலுமிச்சம் பழச்சாறு படி 4; நல்லெண்ணெய் படி 1; இவைகளைச்சேர்த்து, அதில் நெய்தல் கிழங்கு, சாதிக்காய், சந்தனம், மரமஞ்சள், கோஷ்டம், அஷ்டவர்க்கம், யானைத்திப்பிலி, வெட்டிவேர், கிரந்திநாயகம், பச்சைகர்ப்பூரம், புளியங்கொட்டைத்தோல், குங்குமப்பூ, தக்கோலம் வகை 1-க்கு பலம் $\frac{1}{4}$ இவைகளைப் பால்விட்டரைத்து, கரைத்து, எரித்து பதத்தில் வடித்துக்கொள்ளவும். **உபயோகம்.**—தலைநோய்களுக்கு இதை, 4-நாளைக்கொருக்கால் ஸ்நானஞ் செய்துவைக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

சாதிசம்பீரக்குழம்பு. செய்முறை.—1-விராகனிறை சாதிலிங்கக்கட்டியை, கற்றாழை ரசத்தில் நனைத்தச் சீலையால், 2-3, கவசமிட்டு, 2-விரட்டியில் புடம் வைத்து, எரித்து, சீலையை நீக்கி, சரக்கைக் கலுவத்திலிட்டரைத்து, பீங்கான் பாத்திரத்திலிட்டு, 5-பலம் எலுமிச்சம்பழரசம் கொஞ்சங்கொஞ்சமாய்விட்டு, தென்னம் பாளையால் சுண்ட எரித்து, குழம்புபாகத்திலிறக்கி, பீங்கானில் வைத்துக் கொள்ளவும். தீயதிகமானால், கருத்துவிடும். வாலுகாயந்திரத்திலிட்டும் பதப்படுத்திக் கொள்ளலாம். **உபயோகம்.**—சுரம்முதலிய வியாதிகளில் காணுகிறதாகம், நாவறக்ஷி இவைகளுக்கு, இந்தக் குழம்பில், சுப்பலைத்துவைத்து, நாக்குமேல் அடிக்கடி வைத்துக்கொண்டு வந்தால், சலம் ஊறும், தாகம் அடங்கும். (சு. ப. முறை.)

சம்பீராதிகிருதம். செய்முறை.—எலுமிச்சம் பழரசம், படி-1; பசுவின்நெய், படி-$1\frac{1}{2}$ இவைகளைச்சேர்த்து, காய்ச்சி, பதத்துக்கு வரும்போது வடிக்கட்டி, அதில், பரங்கிச்சக்கை பலம் 2; திரிகடுகு, வகை 1-க்கு, பலம் $\frac{1}{2}$; சீரகம் பலம் 1; கருஞ்சீரகம், பலம் 1; சவ்வச்சரலவணம், பலம் $\frac{1}{2}$, கல்லுப்பு, பலம் $\frac{1}{2}$, வஸ்திரகாயம் செய்த இவைகளின் பொடியைத்தூவி, துழவிக்கொள்ளவும். **உபயோகம்.** இதைப் பித்தரோகங்களுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—1-விராகனிறை தினம் 2-3 தடவை கொடுக்கலாம். (மூலிகை சங்கலிதம்.)

எள்ளு.

செய்கை.—இதற்கு ருதுவர்த்தனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை சூதகக்கட்டுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

நல்லெண்ணெய் செய்கை.—இதற்கு சினிக்தகாரி, போஷணகாரி. குணங்களுண்டு, **உபயோகம்.**—இதுபுத்திக்குத்தெளிவு கொடுக்கும், விழிகளுக்குக் குளிர்ச்சியை யுண்டாக்கும்; தேகபுஷ்டி, பலம் தேஜஸ, இவைகளைத்தரும். இதைநேத்திரநோய், காதுநோவு, கபால உஷ்ணம், காசம், விரணம், காயம், சொறிசிரங்கு இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—கூறல் எண்ணெயில், 2-4, உச்சிக்கரண்டி அளவுதினம் கொடுத்துக்கொண்டு வந்தால், தேகம்பூரிக்கும், சொறிசிரங்கு நீங்கும், இருமல் தணியும்.

ஏலரிசி.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, உதரவாதஹாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைஅக்கினிமந்தம், வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, உஷ்ணபேதி, இருமல், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதின் தூளில், 10-20 உளுந்து நிறை கொடுக்கலாம்.

யோகம்.

ஏலாதிவடகம். செய்முறை.—ஏலம், லவங்கப்பட்டை, மூர்கிரிப்பருப்பு, திப்பிலி, வகை 1-க்கு பலம் 6; அதிமதுரம், சருக்கரை, பேரீச்சம்பழம், வகை 1-க்கு பலம் 3. இவைகளை இடித்து, கழர்ச்சிக்காய் பிரமாணம் உருண்டை செய்துக்கொள்ளவும். **உபயோகம்.** அக்கினிமாந்தியம், பித்தாதிகம், வயிற்றுவலி இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—1-2, உருண்டை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

ஏலாதிகிருதம். செய்முறை.—8-பலம் ஏலப்பொடி; 1-படிபால் 1-படி நெய்; $\frac{1}{2}$ படி இளநீர். இவைகளைக்கலந்து, காய்ச்சி, பதத்துக்கு வரும்போது வடிகட்டி, அதில் வால்மிளகுத்தூள் பலம் 1; சாதிக்காய், சாபத்திரி, லவங்கம். சுக்கு, கொத்துமல்லி விதை, உலர்ந்த கொப்பரைக்காய், திராக்ஷை இவைகளின்பொடி, வகை 1-க்கு பலம் $\frac{1}{4}$; கற்கண்டுபொடி, பலம் 24. சேர்த்துக் கலந்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைரத்த உஷ்ணம், சலுப்பு, அக்கினிமாந்தியம் இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—1-2 துலாம்நிறை கொடுக்கலாம். (மூலிகசங்கலிதம்.)

ஏலாதிசூரணம், செய்முறை.—ஏலம், அதிமதுரம், சந்தனம், நெல்லிவற்றல், வால்மிளகு, இவைகளின் சூர்ணம், வகை 1-க்கு பலம் 1; சருக்கரை பலம் $2\frac{1}{2}$. இவைகளைச் சேர்த்து கலந்துக்கொள்ளவும். **மாத்திரை.**—$\frac{1}{2}$-1 விராக நிறைகொடுக்கலாம். (ஷை.)

ஓதியன்பட்டை.

செய்கை.—இதற்குச் சங்கோசனகாரி, குணம் உண்டு.

உபயோகம்.—இதை விரணம், கிரகணி, அதிசாரம், வாய்விரணம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்

ஓமம்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, உதரவாதஹாரி, அங்காகர்ஷணநாசகாரி ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதை வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, அக்கினிமாந்தியம், பேதி, வாந்திபேதி, குடலிரைச்சல், சுவாசகாசம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—¼-½, விராகனிறை கொடுக்கலாம்.

யோகங்கள்.

ஓமத்தீநீர். செய்முறை.—1-வீசை ஓமத்தை, சல்லாத்துணியில் முடிந்து, வாலை பாத்திரத்தில் தொங்கவைத்து, (அடியில் படிந்தால் காய்ந்துவிடும்.) 6-புட்டி தண்ணீர்விட்டு, 4-புட்டி தீநீர்வடித்துக் கொள்ளவும். (இங்கிலீஷ்முறை.)

மாத்திரை.—¼-½, ஆழாக்கு அளவுகொடுக்கலாம்.

ஓமத்தைலம். செய்முறை.—ஓமத்தீநீர்வடிக்கும்போது, தீநீரின் மேல் தைலம்மிதக்கும்; அதைக் கோழியிறகால் சேகரித்துக்கொள்ளவும். மாத்திரை.—1-2-துளி, சருக்கரையில் விட்டுக் கொடுக்கலாம் (இங்கிலீஷ்முறை.)

பாவனஓமம். செய்முறை.—ஓமம், பலம், 8; ஆடாதோடை இஞ்சி, எலுமிச்சம்பழம், புதியனு, இவைகளின் ரசம்வகை, 1-க்கு பலம் 4; சயிந்திய லவணம், பலம் 1. ஓமத்தை ஆடாதோடை ரசத்திவிட்டு வெயிலில் உலர்த்திக்கொள்ளவும். இவ்விதமாய் மற்ற ரசங்களிலுமிட்டு உலர்த்திக்கொள்ளவும். லவணத்தை கடைசிரசத்தில் கரைத்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை அக்கினிமாந்தியம், இருமல், சுவாசரோகம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—10-30, உளுந்துநிறை கொடுக்கலாம்.

ஓரிலைத்தாமரை.

இதுவே ஓரிதழ்த்தாமரை.

செய்கை.—இதற்கு சீனிக்தகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதைப் பிரமேகம், மூத்திரத்தரிப்பு, இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

கஞ்சா.

செய்கை.—இது முதல் உஷ்ணகாரி, உச்சாககாரிகுணங்களைத் தரும். இதற்கு வேதனைசாந்தகாரி, சமனகாரி, அங்காகர்ஷணநாச

காரி, சித்திராகாரி, மூத்திரவர்த்தனகாரி, பிரசவகாரி, தீபனகாரி ஆகிய இக்குணங்களுமுண்டு.

உபயோகம்.—இதை விரணசந்தி, குழந்தைகளுக்குக்காணுகிற இசிவு, சூலைகள், நரம்புவேதனை, வாந்திபேதி, பெரும்பாடு, சீல்வாதம், சுவாசரோகம், மந்தப்பிரசவம், மந்தாக்கினி, அதிசாரம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—கஞ்சா இலைத்தூளில், 1-2-உளுந்துநிறை கொடுக்கலாம்.

கஞ்சாசுத்தி.—சடைக்கஞ்சாவை விரை, காம்பு நீக்கி நீரிலிட்டுக் கொஞ்சநேரம் ஊறவைத்து பிசைந்து, நீரைவடித்துவிட்டு உலர்த்திக்கொள்ளுவதேசுத்தி.

யோகங்கள்.

ஜகநாத சித்தலேகியம். செய்முறை.—சுத்திசெய்த கஞ்சா இலைத்தூள், பலம், 1; அபினி, பலம் ¼; ஓமம், திரிகடுகு, ஏலம், லவங்கம், நெல்லிவற்றல், சாதிக்காய், கர்க்கடகசிங்கி, இவைகளின் தூள் வகை 1-க்கு பலம் 1¼; காசுக்கட்டி, பலம் 2½; எலுமிச்சம் பழரசம், பலம் 5; வெள்ளைச்சருக்கரை, பலம் 12½; தண்ணீர் பலம் 5 எலுமிச்சம்பழரசத்தில் நீரைச்சேர்த்து, சருக்கரையைக் கரைத்து, காய்ச்சி, தாராபாகமாய் வரும்போது, இறக்கி சரக்குத் தூள்களைச்சேர்த்து, செவ்வையாய்ப் பிசைந்துகொள்ளவும். அபினியை மாத்திரம், கொஞ்சம் சலத்தில் கரைத்து, சேர்த்துக்கொள்ளவும். 22-உளுந்துநிறை லேகியத்தில், ¼-உளுந்து நிறை அபினியும் ¾-உளுந்து நிறை கஞ்சாவும் இருக்கின்றன. உபயோகம்.—வாந்திபேதி ரோகங்கொண்டவர்களுக்கு; ஆலஸியம் செய்யாமல், ஆரம்பத்தில் தானே இந்த லேகியத்தைக்கொடுத்தால், வாந்தியும், பேதியும், தக்ஷணமே நின்று, சவுக்கியம் உண்டாகும். வயிற்றிரைச்சலுடன் காணுகிறபேதிக்கு, இது சஞ்சீவி என்று சொல்லலாம். முக்கியமாய் குழந்தைகளுக்குக் காணுகிற கழிச்சலுக்குக் கொடுக்கலாம். இந்த மருந்து உடம்பில்பற்றியிருக்கும்போது, புத்தி தெளிவாய் இருக்கும்; ஞாபகசக்தியதிகமாகும்; சந்தோஷம் பிறக்கும்; குழந்தைகளை நெம்மதியாய்வைக்கும். மாத்திரை.—½-1-விராக நிறை கொடுக்கலாம். குழந்தைகளுக்கு, 5-10 உளுந்துநிறை, தேனில் கலந்துக்கொடுக்கலாம். (சுவானுபவமுறை.)

பூர்ணாதிலேகியம். செய்முறை.—சுத்திசெய்த கஞ்சா, திரிகடுகு தாளீசபத்திரி, சிறுநாகப்பூ, சோம்பு, சீரகம், அரத்தை, அதிமதுரம், இவைகளின் சூர்ணம், வகை 1-க்கு பலம் 1; திரிபழுகம், வகை-1-க்கு பலம் 2; பரிமளபஞ்சகம், வகை 1-க்கு பலம், ¼; சருக்கரை வீசை, ½; செவ்விளநீர் பலம் 10 இவைகளை விதிப்படிச்சேர்த்து, லேகியமாக்கிக்கொள்ளவும். கடைசியில், 1-பலம் கசகசாவைச்சேர்த்து, பிசைந்துகொள்ளவும். உபயோகம்.—இதை அசீர்ணம், மந்தம், பசியில்லாமை, உஷ்ணபேதி, மாந்தபேதி, வயிற்றிரைச்சல், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். 40-உளுந்து நிறையில், 1-உளுந்து

னிறை கஞ்சாத்தூள் இருக்கின்றது. மாத்திரை.—1-2-விராகனிறை கொடுக்கலாம். குழந்தைகளுக்கு பிரமாணத்தை, வயதுக்குத்தக்கபடி நிறுக்கிட்டு கொடுக்கவும். (அனுபவமுறை.)

நித்திராகாரி லேகியம். செய்முறை.—சுத்திசெய்து, நெய்யில் வறுத்து இடித்த கஞ்சாத்தூள் 3-பங்கு; சாதிக்காய் ஏலம் இவைகளின் தூள், வகை, 1-க்கு 1-பங்கு; சருக்கரை பேரீச்சம்பழம் வகை 1-க்கு 8-பங்கு தேன் 6-பங்கு. இவைகளைச்சேர்த்து அரைத்துக் கொள்ளவும். உபயோகம்.—இதை நித்திரையில்லாமல் உபத்திரவப்படுகிறவர்களுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—10-20, உளுந்து னிறைகொடுக்கலாம். (மைசூர் அரமனை வைத்தியசாலைமுறை.)

மதனகாமேஸ்வரலேகியம். செய்முறை.—சுத்திசெய்த கஞ்சாத்தூள், விராகனிறை, 5; சாலாமிசிரித்தூள், விராக 8; சாதிக்காய்த்தூள், விராக, 3; லவங்கம், ஏலம், குங்குமப்பூ, இவைகளின் தூள். வகை 1-க்கு விராக, 1; ரூமிமஸ்தகி, வாலுளைப்பிசினி, முருங்கை விரை, இவைகளின் தூள், வகை 1-க்கு விராக 2; அரைத்த திராக்ஷபழம் விரா-8, 1-சேர் இளநீரில் ½-சேர் சருக்கரைச்சேர்த்து, எரித்து, பாகபதம் வந்தபிறகு இறக்கி அதில், மேல்கண்ட சரக்குகளையும், தேவையான வெள்ளிரேலகையும் சேர்த்து பிசைந்துகொள்ளவும் உபயோகம்.—இதை தாதுக்ஷீணத்துக்கு உபயோகிக்லாம். மாத்திரை.—½-1-விராகனிறை கொடுக்கலாம். (அனுபவமுறை.)

திரிசூலிகிருதம். செய்முறை.—3-துலாம் கஞ்சாவைச் சல்லாத்துணியில் கிழிக்கட்டி, 1-சேர்பாலில்விட்டு, ¼-சேர் தண்ணீர்ச் சேர்த்து, தண்ணீர்ச்சுண்டக்காய்ச்சி, கிழியிலிருக்கிற ரசம்பாலிலிறங்கும்படிப் பிழிந்து நீக்கி, பாலுக்குப்புரைகுத்திவைத்த, மறுநாள் அந்தத் தயிரைக்கடைந்து, வெண்ணெய் எடுத்து காய்ச்சி, நெய்பதத்தில் இறக்கிக் கொள்ளவும். மாத்திரை.-1-2-உளுந்து னிறைகொடுக்கலாம். (அனுபவமுறை.)

வேறுமுறை.—6-துலாம் சுத்திசெய்து சிதைத்த கஞ்சாவை, 12-துலாம் நெய்யில்விட்டு காய்ச்சி, இலைதூளாகிற பதத்திலிறக்கி கம்பளியில்விட்டு வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—1-2, உளுந்துனிறை கொடுக்கலாம். (அனுபவமுறை.)

மாஜூம். செய்முறை.—1-சேர் சருக்கரையை ½-சேர் தண்ணீரில்விட்டு கரைத்து காய்ச்சி கட்டிப்பாகமாய் வரும்போது, அதில் திரிசூலி கிருதத்தில், 2-துலாம்விட்டு கலந்துகொள்ளவும். மாத்திரை.—10-20 - உளுந்துனிறை கொடுக்கலாம். (அனுபவமுறை.)

வேறுமுறை.—சுத்திசெய்து நெய்யில் வறுத்து, இடித்த கஞ்சாத்தூள், 1-துலாம்; வெல்லம், 12-துலாம்; தண்ணீர், 6 துலாம் வெல்லத்தைத் தண்ணீரில் கரைத்து, காய்ச்சி, கட்டிப்பாகமெடுத்து டை தூளையும், 1 - துலாம் கசகசாவையும் சேர்த்து, கலந்துக்கொள்ளவும். மாத்திரை.—10-20-உளுந்துனிறை கொடுக்கலாம். (அனுபவமுறை.)

57

ராமரசம். செய்முறை.—சுத்திசெய்த கஞ்சா, 1 - விராகனிறை; மிளகு, ½-விராகனிறை; சோம்பு, 1-விராகனிறை; கசகசா 2-விராகனிறை; இவைகளைத்தண்ணீர் விட்டரைத்து, ¾-படி, தண்ணீரில் கலந்து, அதில், ¼-படி-பாலும், 3-பலம் சருக்கரையும் சேர்த்து, வடிகட்டிக்கொள்ளவும், மாத்திரை.—½-¼-ஆழாக்கு அளவு கொடுக்கலாம். (அனுபவமுறை.)

கபீரேசாப்பிரா. செய்முறை.—6- துலாம் சுத்திசெய்த கஞ்சாவை, 1-சேர் தண்ணீரிவிட்டு, 18-துலாம் வெண்ணெய். சேர்த்து கஞ்சா இலை, தூள் ஆகிரபதம் வருகிறவரையில், காச்சவும். பிறகு கம்பளித்துணியில்விட்டு பிழிந்து நெய்யை எடுத்துக்கொள்ளவும் 9 ரூ. இடைநெய்யிருக்க வேண்டியது; ஒருவேளை அதற்குக்குறைந்தால், மறுபடியும் கஞ்சாவில் கொஞ்சம் நீர் விட்டு, காச்சி, கம்பளியில்விட்டு பிழிந்து கொண்டு அசையாமல் வைத்தால் நெய் தண்ணீர் மேல்படியும்; அதையும் எடுத்து டை நெய்யுடன் சேர்த்துக் கொள்ளவும். இவ்விதம் செய்து, 9 ரூபாய் னிறை நெய் சேகரித்துக்கொள்ளவும். பிறகு, 1-சேர்தோல் நீக்கியபாதம் பருப்புடன், ½-சேர் கசகசா, சேர்த்து அரைத்து, 2-சேர்தண்ணீரில் கலந்து, அதில், 2-சேர்தேனும் 2-சேர், சருக்கரையும், 3-சேர் கற்கண்டும் சேர்த்து, கரைத்து, அடுப்பிலேற்றி, எரித்து, பதத்தில் இறக்கிக் கொள்ளவும். (பாகைக் கடுதாசியில்விட்டு, குளிர்ந்தபிறகு திருப்பினால், கீழேவிழாமலிருக்க வேண்டியது.) அதில் டை கஞ்சாநெய்யைச் சேர்த்துக்கொள்ளவும். 2-துலாம் குங்குமப்பூவை பன்னீர்விட்டு அரைத்து, அதில் சேர்க்கவும். நீர் அதிகமாய் இருந்தால், சுண்டிக்கவும்; கட்டியாய் இருந்தால் நீர் சேர்த்துக்கொள்ளவும். இவ்விதம்செய்துப் பதத்தில் வைத்துக்கொண்டு, அடியில் கண்ட சரக்குகளின் சூர்ணங்களைத் துலாம் கணக்காய்ச் சேர்த்து கலந்துகொள்ளவும். சாதிக்காய் 3½; ஏலம், சாதிபத்திரி, லவங்கப்பட்டை, லவங்கம், வகை-1-க்கு-1; தாளீசபத்திரி, சந்தனம், அகிருன், சிறிய கசோரம், வகை-1-க்கு-¼ குல்கந்து, 5. சூர்ணங்கள் சேர்த்தபிறகு அடுப்பிலேற்றலாகாது. உபயோகம்.—இதை, அஜீர்ணம், வட்டம்பு வேதனை, வீத்திராபங்கம், குன்மம் இவை முதலியவைகளுக்குக் கொடுக்கலாம். மாத்திரை.—10-20, உளுந்து னிறை கொடுக்கலாம். (ஆஜிமஹம்மதுடன் அனுபவமுறை.)

கடலைப்புளிப்பு.

செய்கை.—இதற்கு சீதளகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதை சுரம், தேக அழலை, இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—1-2-விராகனிறை தண்ணீரில் கலந்துக் கொடுக்கலாம்.

கடுகு.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி. சடாராக்கினி வர்த்தனகாரி, வமனகாரி, குணங்களுண்டு; மேலுக்குப்போட்டால், ஷோணகாரி, துவக்ஸ்போடகாரி குணங்களைத்தரும்.

உபயோகம்.—இதை மந்தாக்கினிக்கு உள்ளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—10-20, உளுந்துநிறை கொடுக்கலாம். 1-4, விராகனிறை, தண்ணீரில் கலந்துக்கொடுத்தால் வாந்தியாகும்.

யோகங்கள்.

சர்ஷப போட்டலிகை. செய்முறை.—கடுகுத்தூள், அரிசிமாவு இவைகளைச் சமனாய்ச்சேர்த்து, தேவையான தண்ணீர்விட்டு களிபோல் செய்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைத் துணிமேல் தடவி வயிற்றுவலி, குடைச்சல், வாதநோய்கள், இவைகளுக்கு, நோயுள்ளவிடத்திலும், இருமல், இரைப்பு, இவைகளுக்கு மார்பின் மேலும், தலைவலி, உன்மாதம், இவைகளுக்கு, பிடரியின்மேலும், குளுமை, சந்நி, வாந்தி பேதி இவைகளுக்கு, காலின்கெண்டைச்சதைகளின் மேலும், வைத்துக்கட்டலாம்.

சர்ஷபதைலம். உபயோகம்.—இதை வாதநோய்களுக்கும், கிரந்திகளுக்கும் மேலுக்குப் பூசலாம்.

கடுகுரோகிணி.

செய்கை.—இதற்கு விரேசனகாரி, தார்ட்டியகாரி, முறைவியாதிரோதி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதை உள்மாந்தம், மலபந்தம், வயிற்றுநோய் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—10-20, உளுந்துநிறை கொடுத்தால், தார்ட்டியகாரிகுணத்தையும், 20 40, உளுந்துநிறை கொடுத்தால் முறை வியாதிரோதிகுணத்தையும் தரும்.

யோகம்

ரோகிணிகஷாயம். செய்முறை.—சிதைத்த கடுகுரோகிணி, மிளகு, நாரத்தன் தோல், சந்தனக்கட்டை, சீரகம், வகை, 1-க்கு, விராகனிறை 1; வெந்நீர், பலம்-5. சேர்த்து, மூடி, $\frac{1}{4}$-மணிநேரம் ஊறவைத்து, வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{8}$-$\frac{1}{4}$, ஆழாக்கு அளவு, தினம் 3-4 தடவை கொடுக்கலாம். (அனுபவமுறை.)

கடுக்காய்.

இதுவே அரிதகி.

செய்கை.—இதற்கு விரேசனகாரி, சங்கோசனகாரி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—பேதி, சீதபேதி, மூலவியாதி இவ்விதரோகங்களில், விரேசனம் கொடுக்கவேண்டியிருந்தால், எண்ணெய்க்குப் பதில், கடுக்காயைக் கொடுத்தால் நல்லது. கண்ணோய், வாய் விரணம், ஈறு விரணம்; பல்லாட்டம், மூலரோகம், ரத்தபீனசம், இவை முதலியவைகளுக்கு இதை உபயோகிக்கலாம்.

மாத்திரை.—2, 3 விராகனிறை கொடுக்கலாம்.

யோகங்கள்.

அரிதகிகஷாயம். செய்முறை.—நொறுக்கி விரை நீக்கியகடுக்காய், விராக, 6; லவங்கம், ரோசாப்பூ, சீரகம், வகை 1-க்கு விராக 1; தண்ணீர் ஆழாக்கு, $\frac{3}{4}$ இவைகளை, 10-நிமிஷம் காய்ச்சி, வடிகட்டிக் கொள்ளவும். உபயோகம்.—இதையெல்லாம் ஒரு வேளைக்குக் கொடுத்தால், வயிற்றுக்கடுப்பும், வாந்தியுமில்லாமல் செவ்வையாய் பேதியாகும். (அனுபவமுறை.)

அரிதகிலேகியம். செய்முறை.—சூரத்துக்கடுக்காய்த்தூள், 2 பங்கு; பிஞ்சிக் கடுக்காய், நெல்லிவற்றல், சுக்கு, சூரத்துக் கறுப்புப்பு, சோம்பு, கொத்துமல்லிவிரை, ஏலாவிரை, இவைகளின் தூள், வகை 1-க்கு 1-பங்கு; எலுமிச்சம்பழரசம், 1-பங்கு; தேன், 6-பங்கு; வாதுமைநெய், 2-பங்கு. இவைகளைச்சேர்த்து கலந்துக்கொள்ளவும். உபயோகம்.—இது மலபந்த ரோகத்துக்கு உபயோகிக்க நல்லயோகம். மாத்திரை.—2-4 விராகனிறை, இரவில்சாப்பிட்டு படுத்துக்கொண்டால், காலையில் மலம் தாராளமாய் இறங்கும். (அனுபவமுறை.)

அரிதகி லேகியம். (வேறுமுறை) செய்முறை.—100-பலம், கடுக்காயை உடைத்து, விரைநீக்கி, ஒரு தூணி தண்ணீரிலிட்டு, எட்டிலொன்றாய்க் காய்ச்சி வடித்து, அதில், 10 பலம் சருக்கரை சேர்த்து பாகுசெய்து, அதில், சிவதைவேர்த்தூள், இஞ்சிரசம், மிளகுத்தூள், ஓமத்தூள், திப்பிலித்தூள், வகை 1-க்கு பலம் 1; நெய்படி-1, சேர்த்துப் பக்குவப்படுத்திக்கொள்ளவும். உபயோகம்.—இதை அக்கினிமாந்தியம், சூலை, மலக்கட்டு, மூலவாயு, இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1, 2, 3 விராகனிறை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

அரிதகிவடகம். செய்முறை.—காடியில், 3 நாள் மூன்று முறை ஊறவைத்து, உலர்த்தி, நறுக்கி, விரைநீக்கியக் கடுக்காய்ப் பங்கு-10 கந்தகவுப்பு, பங்கு, 3; ஓமத்தூள் பங்கு, 1; சீரகத்தூள் பங்கு, 1; எலுமிச்சம்பழரசம், பங்கு 10; இஞ்சிரசம், பங்கு 10—சரக்குகளைப் பழரசத்திலும், இஞ்சிரசத்திலும் அரைத்து, கழற்சிவிதைப்பிரமாணம் உருண்டைசெய்து, உலர்த்திக் கொள்ளவும். உபயோகம்.—இதை மலபந்தம், வயிற்று உப்பசம், வயிற்றுவலி, பிலிலீகசோபை, அரோசகம், ஆந்திரவிர்த்தி, மூலம், பஞ்சகாமாலை, சுவாசகாசம், சோபை, இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1, 2, 3 உருண்டைகளைத் தூள்செய்து தேனில்கலந்துக் கொடுக்கலாம். மலம் உதையும், மலபந்தத்தால் காணுகிற வியாதிகளைக்கண்டிக்கும். (சாரசங்கிரகம்.)

அரிதகிகிருதம். செய்முறை.—உடைத்து விரைநீக்கிய கடுக்காய், பலம்-10. 4 படி, தண்ணீரிலிட்டு 1-படிக்குச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி அதில் 1-படி பசுவின்நெய்விட்டு, காய்ச்சி, அதில், 1-பலம் சயிந்தியலவணமும், 1-படி, மாவிலிங்கப்பட்டை ரசமும், சேர்த்துக் கொள்ளவும். உபயோகம்.—இதை வாந்தி, பித்தரோகங்கள், உதர

ரோகங்கள், அரோசகம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1 விராகனிறை, கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

கடுக்காய்ப்பிஞ்சு.

செய்கை.—இதற்கு விரேசனகாரி, சங்கோசனகாரி ஆகிய இ[illegible] குணங்களுண்டு.

உபயோகம்.—மூலம்; சீதபேதி, பேதி, ஆசனக்கடுப்பு இவைகளில், மலத்தைப் போக்கும்படி நேரிட்டால், இதைக்கொடுக்கலாம்.

மாத்திரை.—கடுக்காய்ப் பிஞ்சுமேல் சிற்றாமணக்கெண்ணெய்த் தடவி, வறுத்து தூள்செய்ததில், 1, 2 விராகனிறை கொடுக்கலாம்.

கர்க்கடகசிரிங்கி.

இதுவே கடுக்காய்ப்பூ.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரி, லகுவிரேசனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—சீதபேதி, பேதி, இவை முதலியவைகளுக்கு, இதை உபயோகிக்கலாம்.

மாத்திரை.—5, 10 உளுந்து நிறைகொடுக்கலாம்.

யோகம்.

கர்க்கடகசிரிங்கி சூர்ணம். செய்முறை.—கர்க்கடகசிரிங்கி பங்கு-15; காசுக்கட்டி. பங்கு-10; வறுத்திடித்த சீரகம், சாதிக்காய்; நெல்லிவற்றல், வகை, 1-க்கு பங்கு-5; வறுத்திடித்த வெந்தியம் பங்கு, 20 இவைகளின் தூள்களைச்சேர்த்து கலந்துக்கொள்ளவும் உபயோகம்.—இதைக் குழந்தைகளுக்குக் காணுகிற கழிச்சலுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை. $\frac{1}{2}$-1, விராகனிறை, தேனில் கலந்துக் கொடுக்கலாம். இரவில் இதனுடன் அபினிசேர்த்துக் கொடுத்தால், வெகுநன்மை செய்யும். (மைசூர் அரமனைடிஸ்பென்சேரிமுறை.)

கண்டங்கத்திரி.

செய்கை.—இதற்கு கபஹாரி, மூத்திரவர்த்தனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை இருமல், சுவாசகாசம், சுரம், வாதரோகம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகங்கள்.

கண்டங்கத்திரி கஷாயம் செய்முறை.—கண்டங்கத்திரி சமூலம் பலம் 2; அதிமதுரம், கொத்துமல்லி, அரத்தை, மிளகு வகை 1-க்கு பலம் $\frac{1}{4}$. இவைகளைச்சிதைத்து, 1-படி, தண்ணீரிலிட்டு, 15-பிமிஷம் காய்ச்சி, வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை. $\frac{1}{8}$-$\frac{1}{4}$, ஆழாக்கு அளவு கொடுக்கலாம். (அனுபவமுறை.)

கண்டங்கத்திரிரசாயனம். செய்முறை.—கண்டங்கத்திரி ரசம், பலம் $1\frac{1}{4}$; கருந்துளசிரசம், பலம் $2\frac{1}{2}$; ஆடாதோடை ரசம், பலம் $3\frac{3}{4}$; தேன், பலம் $7\frac{1}{2}$; திரிகடுகு, திரிபலை, லவங்கம், லவங்கப்பட்டை ஏலம், சிற்றரத்தை, பேரரத்தை, அதிமதுரம், தாளிசபத்திரி, சாதிக்காய், சாபத்திரி, இவைகளின்தூள், வகை 1-க்கு, விராகனிறை $\frac{1}{2}$, ரசங்களை ஒரு புதுச்சட்டியிலிட்டு, சிறுதீயிட்டெரித்து, மதுபாகமாய் வரும்போது, சூர்ணங்களைச் சேர்த்துப் பக்குவப்படுத்திக்கொள்ளவும். உபயோகம்.—இதை இருமலுக்கும் கக்கிருமலுக்கும் உபயோகிக்கலாம். மாத்திரை.—ஒரு விரலிலெடுத்து, நாக்குமேல், இரண்டுநாழிகைக்கொருதடவை தடவிக்கொண்டு வந்தால், வியாதி நாளுக்குநாள் குறையும். (ஜீவரக்ஷாமிர்தம்.)

கண்டுபாரங்கி—வேர்.

இதுவே சிறுதேக்கு.

செய்கை.—இதற்கு சுரஹாரி, கபஹாரிகுணங்களுண்டு.

உபயோகம்.—இதை வாதசுரம், இருமல் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

கண்டுபாரங்கி கஷாயம். செய்முறை.—கண்டுபாரங்கி, பலம், 2; சுக்கு, சீரகம், வகை 1-க்கு விராகனிறை 1 இவைகளைச் சதைத்து 1-படி தண்ணீரிலிட்டு, 15-நிமிஷம் காய்ச்சி, வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{8}$-$\frac{1}{4}$, ஆழாக்கு அளவு கொடுக்கலாம்.

கந்தகம்.

பேதங்கள்.—கந்தகப்பதங்கம்; நெலிக்காய் கந்தகம்; குழாக் கந்தகம்; அமரசிலை கந்தகம். கந்தகத்திலிருக்கிறதோஷங்களை நீக்காமல், உள்ளுக்குக்கொடுக்கலாகாது.

செய்கை.—இதைக் குறைந்த மாத்திரையில் கொடுத்தால், வியதாபேதகாரி, சுவேதகாரிகுணங்களைக்காட்டும்; அதிக மாத்திரையில் கொடுத்தால், மலகாரி குணத்தைத்தரும்.

உபயோகம்.—இதைச் சொறிசிரங்கு, சர்மரோகங்கள், நாள்பட்ட கீல்வாதம், சுவாசகாசம், மாரடைப்பு, கக்கிருமல், நாள்பட்ட இருமல், கண்டமாலை, மூலவியாதி, குதப்பிரம்சம், நாள்பட்ட சீதபேதி, இவை முதலியவைகளுக்குக் கொடுக்கலாம்.

மாத்திரை.—10-30, உளுந்து நிறைகொடுக்கலாம்; 1-3 விராகனிறை கொடுத்தால் மலம் இறங்கும்.

யோகங்கள்.

கந்தகலேகியம். செய்முறை.—பதங்கித்த கந்தம், பலம் 4; சயிந்தவ[illegible]ணப்பொடி பலம் 1; தேன் பலம் 4; சுக்குத்தூள் பலம் 1; குங்கு[illegible]ப்பூ, விராகனிறை, $\frac{1}{2}$. இவைகளைச்சேர்த்துச் செவ்வையாய் மிஸ்ரம்[illegible]ரும்படி அரைத்துக்கொள்ளவும். மாத்திரை.—1-2. விராகனிறை கொ[illegible]க்கலாம். (சாரசங்கிரகம்.)

கந்தகபஸ்மம். செய்முறை.—1-பலம் கந்தகத்தை, தாமரைக்கிழங்கு சாற்றாலாட்டி, பில்லைதட்டி, உலர்த்திக்கொள்ளவும். இவ்விதமாய் இரண்டுமுறைச்செய்து பிறகு அதை ஒரு தோண்டியிலிட்டு வாயைமூடி, ஒரு சாண் குழியிலிட்டு, மேலே மணல்மூடி, அதின்மேல் விராட்டிவைத்து எரிக்கவும். பஸ்மமாகிவிடும். **உபயோகம்.**—இதைக் குஷ்டரோகத்துக்கு உபயோகிக்கலாம். (சாரசங்கிரகம்.)

கரிசிலாங்காணி.

இதுவே கையாந்தகரை; பொற்றலைக்கையாந்தகரை; கரிப்பான் கரிசிலாங்கண்ணி; கரிசாலை.

செய்கை.—இதற்கு பித்தகாரி, மலகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை மஞ்சகாமாலை, காச்சக்கட்டி, நீர்க்கோவை, கணபாலரோகம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதின் ரசத்தில் $\frac{1}{8}$–$\frac{1}{4}$, ஆழாக்கு கொடுக்கலாம்.

யோகங்கள்.

பிருங்கராஜகுடித்தைலம். செய்முறை.—கரிசாலைச்சாறு, ஆமணக்கெண்ணெய், சமனாய்க்கூட்டி கொஞ்சம் வெள்ளைப்பூண்டு சேர்த்து எரித்து, பக்குவப்பதத்தில் வடித்துக் கொள்ளவும். **மாத்திரை**—$\frac{1}{2}$–1, பலம் அளவு கொடுக்கலாம். (அனுபவமுறை.)

பிருங்காமலகத்தைலம். செய்முறை.—கரிசிலாங் காணிச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, நல்லெண்ணெய், வகை, 1-க்கு, படி, 1; பால்படி, 2, இவைகளை ஒரு குடத்திலிட்டு, அதில் கப்புமஞ்சள், மரமஞ்சள், அரத்தை, கோரைக்கிழங்கு, நெய்தற்கிழங்கு, நன்னாரிவேர், சந்தனம், சீரகம், கடுகரோகிணி, மஞ்சிட்டிவேர், விலாமிச்சுவேர், சாதுர்ச்சாதம், தேவதாரம், பெருங்குரும்பை, திப்பிலி, வகை, 1-க்கு, விராகனிறை 1; அதிமதுரம் பலம் 1. இவைகளை அரைத்து, கரைத்து, எரித்து, பக்குவத்தில் வடித்துக் கொள்ளவும். **உபயோகம்.**—இதைப் பித்தரோகங்கள், கண்ணோவு, சிரோ ரோகம், செவிடு, இவைகளுக்கு ஸ்நானஞ்செய்விக்கலாம். பீனசத்துக்கு நசியம் செய்துவைக்கலாம் (தைலவர்க்கச்சுருக்கம்.)

கரிசாலைச் சூர்ணம். செய்முறை.—கரசிலாங்காணிச் சூர்ணம், 4-பங்கு; திரிகடுகு, திருபலை, மரமஞ்சள், கருஞ்சீரகம், தாளிசபத்திரி, ஏலம், சீரகம், அதிமதுரம். கொத்துமல்லிவிதை, மூக்குரட்டைவேர், வகை 1-க்கு 1-பங்கு இவைகளின் சூர்ணங்களைக் கலந்துக் கொள்ளவும். **உபயோகம்.**—இதைப்பாண்டு, காமாலை, சோபை, இவைகளுக்கு அயம் சேர்த்து உபயோகிக்கலாம். **மாத்திரை.**—[illegible]–1, விராகனிறை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

கருங்காலிப்பட்டை.

செய்கை.—இதற்குபலகாரி, சங்கோசனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை பேதி, அக்கினிமந்தம், துர்ப்பலம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகங்கள்.

கருங்காலிப்பட்டைக்கஷாயம் செய்முறை.-கருங்காலிப்பட்டை பலம் 1; தண்ணீர், ஆழாக்கு 2. 15-நிமிஷம் காய்ச்சி வடிக்கட்டிக் கொள்ளவும். **மாத்திரை.**—$\frac{1}{4}$-$\frac{1}{2}$-ஆழாக்கு அளவு கொடுக்கலாம்.

கருஞ்சீரகம்.

செய்கை.—இதற்கு உதரவாதஹாரி, சர்மகதகிரிமிநாசகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை வயிறு உப்புசம், சிரங்கு, மண்டைக்கரப்பான், விரணம், பீனசம், தலைநோவு, இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மாத்திரை.—$\frac{1}{2}$-1, விராகனிறை கொடுக்கலாம்.

கருஞ்செம்பையிலை.

உபயோகம்.—இதை வதக்கி வீக்கங்களுக்கு வைத்துக்கட்டலாம்.

யோகம்.

கருஞ்செம்பைத்தைலம். செய்முறை.-கருஞ்செம்பையிலை ரசம், வெள்ளுள்ளிரசம், நல்லெண்ணெய். இவைகளைச் சமனாய்க் கூட்டி, எரித்து, தைலபதத்தில் வடித்துக்கொள்ளவும். **உபயோகம்.**—இதை வாதநோய்களுக்குப் பூசலாம்.

கருணைக்கிழங்கு.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, சோஷணகாரி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதைக் கட்டி, மூலவியாதி, இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகங்கள்.

கருணைக்கிழங்குச் சூர்ணம். சூர்ணபிண்டி. செய்முறை.—கருணைக்கிழங்குப்பொடி, பலம் 12; திரிகடுகு, திரிபலை, இவைகளின் தூள், வகை 1-க்கு பலம் 1. 18-பலம் வெல்லத்தைப் பாகுசெய்து, அதில் மேற்படி தூள்களைத் தூவி கலந்துகொண்டு, ஒரு விராக னிறையாகவடகம்செய்து, உலர்த்திக்கொள்ளவும். **உபயோகம்.**—இதை மூலவியாதிக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—1-வடகத்தைப்பொடித்து, 1-2-பலம் தைரில் கலந்துக்கொடுக்கலாம். (சாரசங்கிரகம்)

கருநொச்சியிலை.

செய்கை.—இதற்கு ஸ்வேதகாரிகுணமுண்டு.

உபயோகம்.—கீல்வாதத்துக்கு இதை ஒற்றிடமிடலாம். 4–5, பிடி இலையை ஒரு குடம் தண்ணீரிலிட்டு காய்ச்சி, ஸ்நானஞ்செய்து வைக்கலாம்.

கரும்புரசம்.

செய்கை.—இதற்கு சீதளகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதைத் தாகம், பித்ததோஷம் இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். அதிகமாய்க்குடித்தால் சிலேஷ்மம் அதிகப்படும், மயக்கம் காணும்.

யோகம்.

இக்ஷுரசாதிகிரதம். செய்முறை.—கரும்புரசம், பசுவின்நெய் வகை 1-க்கு படி, 2. இவைகளைக்கலந்து, காய்ச்சி வடிக்கட்டி அதில் மிளகு, கொத்துமல்லி, குரோசானி ஓமம், திப்பிலி, அரத்தை, தாளிசபத்திரி, ஏலம், சீரகம், இவைகளின் தூள் வகை 1-க்கு பலம் 1; சேர்த்து கலந்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை இருமல், அக்கினிமந்தம், பித்தாதிக்கியம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-துலாம் கொடுக்கலாம். (மூலிகசங்கலிதம்.)

நல்லவெல்லம். செய்கை.—இதற்கு சினிக்தகாரி, போஷணகாரி, குணங்களுண்டு. உபயோகம்.—இது மருந்து முறைகளில் சேருகிறது.

சருக்கரை. செய்கை.—இதற்குச் சினிக்தகாரி, போஷணகாரி குணங்களுண்டு. உபயோகம்.—இதை வமனம், பித்ததோஷம், விக்கல், அரோசகம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

கற்கண்டு செய்கை.—இதற்கு சினிக்தகாரி, போஷணகாரி குணங்களுண்டு. உபயோகம்.—இதை இருமல், தாகம், பல்லரணை இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

கருவேப்பிலை.

இதுவே கறியபிலை.

செய்கை.—இதற்கு பலகாரி, தீபனகாரிகுணங்களுண்டு.

உபயோகம்.—இதை வாந்தி, அரோசகம், சுரம், பித்தம், வயிற்றுவலி, அசீர்ணபேதி இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகங்கள்.

கறிவேப்பிலைக்கஷாயம். செய்முறை.—2-விராகனிடை கறிவேப்பிலிலையை, 2-ஆழாக்கு வெந்நீரிலிட்டு மூடி 4-மணிநேரம் ஊற

வைத்து, வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{8}$-$\frac{1}{4}$, ஆழாக்கு கொடுக்கலாம். (அனுபவமுறை.)

கருவேலம்பட்டை.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதை குதப்பிரம்சம், கர்ப்பமேகம், வாய்விரணம், விரணங்கள், ரத்தபித்தரோகங்கள், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

கருவேலம்பட்டைக்கஷாயம். செய்முறை.—2-பலம், வேலம்பட்டையையிடித்து $\frac{1}{2}$-படி தண்ணீரிலிட்டு 15-நிமிஷம் காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும். உபயோகம்.—இதை மேல்கண்ட ரோகங்களுக்கு உபயோகிக்கலாம். (அனுபவமுறை.)

கருவேலம்பிசினி. செய்கை.—இதற்கு சினிக்தகாரி குணமுண்டு. உபயோகம்.—இதை இருமல், ரத்தபித்தரோகங்கள், சீதபேதி இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—10-20, உளுந்துவிடை சருக்கரையில் கலந்துக்கொடுக்கலாம்.

கர்ப்பூரசிலாஜித்து.

இது படிகாரமும், அயச்சிந்தூரமும் சேர்ந்த ஒருவித சரக்கு.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரி, தார்ட்டியகாரி, ரக்தஸ்தம்பனகாரி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதை ரத்தபித்தரோகம், அதிசாரம், சீழ்ப்பிரமேகம், கக்கிருமல், சிலேஷ்மரோகம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—10, 20 உளுந்துவிடை, தேனில் கலந்துக்கொடுக்கலாம்.

யோகம்.

கர்ப்பூரசிலாஜிது பஸ்பம். செய்முறை.—கர்ப்பூரசிலாஜிதுவைப்பாலிலிட்டு, காய்ச்சி, கழுவிச்சுத்திசெய்து, சிறுசெருப்படைச் சாற்றால் 4–சாம மாட்டி, லேசாய் வில்லைதட்டி, உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண்செய்து புடம்போடவும். இவ்விதமாய் டை சாற்றால் 3–முறையாட்டி, 3–புடம்போட்டெடுத்துக் கொள்ளவும். மாத்திரை. 10, 20 உளுந்துவிடை கொடுக்கலாம் (சாரசங்கிரகம்.)

கர்ப்பூரம்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, ஸ்வேதகாரி, சமனகாரி, வேதனசாந்தகாரி, அங்காகர்ஷணநாசகாரி, ஆகிய இக்குணங்களுண்டு; அதிகமானால் விஷமிக்கும்.

உபயோகம்.—இதைத் துர்ப்பலசுரங்கள், தாபனங்கள், பிரலவ உன்மாதம், இரைப்பு, மாரடைப்பு, சக்கிருமல், மார்த்துடிப்பு, குதகச் சூலை, சொப்பனஸ்கலிதம், பிளவை, சொட்டுமூத்திரம், குதகசந்தி, கீல்வாதம், அழிவிரணம், எட்டிக்கொட்டை தோஷம், வேதனை, சுளுக்கு, நமைச்சல், சலதோஷம், இருமல், வாந்திபேதி, இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—1 5, உளுந்தளவு குளிகைசெய்துக்கொடுக்கலாம்.

யோகம்.

கர்ப்பூராதி சூர்ணம். செய்முறை.—கர்ப்பூரம், 1-பங்கு; சாதிக்காய், ஏலம், லவங்கம், மிளகு, இவைகளின் தூள், வகை 1-க்கு ½ பங்கு; சருக்கரை, 3-பங்கு. இவைகளைச்சேர்த்து கலந்துக்கொள்ளவும். மாத்திரை.—10-20 உளுந்தளவு கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

கர்ப்பூரவள்ளியிலை.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, கபஹாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை இருமல், சலுப்பு, இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—நீர்ச்சுண்டக்காச்சிய ரசத்தில் 1-2, விராகனிடை கொடுக்கலாம்.

கலியாணப்பூசினி.

இதுவேபெரும் பூசினி.

செய்கை.—இதற்கு சீதளகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதைப் பயித்தியரோகம், உட்காச்சல், மூத்திரக்கிரிச்சிரம், இடுமருந்து, பித்தசுரம், அஸ்திதாதுகதசுரம், பேய்ச்சொறி, பிரமேகம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

யோகங்கள்.

கூஷ்மாண்டக்குடித்தைலம் செய்முறை.—பெரும் பூசினிக்காய்ச்சாறு, சிற்றாமணக்கெண்ணெய், அருகம்புல்சாறு, எலுமிச்சம்பழச் சாறு, ஒரிலைத்தாமரைச்சாறு, வகை, 1-க்கு, படி, 1; வெந்தியம், பலம்-2; கோரோசனம், குங்குமப்பூ, வகை, 1-க்கு விராகனிடை, 2 இவைகளை முறைப்படிசேர்த்து காய்ச்சிவடித்துக் கொள்ளவும். உபயோகம்.—மேகரோகம், மேகசுவரம், பிரமேகம், மூலரோகம், மூத்திரக்கிரிச்சிரம் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—⅛-¼, ஆழாக்கு அளவு கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

கூஷ்மாண்டக்கிருதம். செய்முறை.—பெரும்பூசினிக் காய்ச் சாறு, இளநீர், பால், நெய், வகை. 1-க்கு. படி, 1; சிந்திற்சாறு, படி ½-இவைகளைக்காய்ச்சி வடித்து அதில், அதிமதுரம், ஏலம், சீரகம்,

சந்தனம், சாதிபத்திரி, திராக்ஷபழம், அஜமோதம், இவைகளின் தூள் வகை, 1-க்கு-பலம்-1; சருக்கரை, பலம் 20. சேர்த்து கலந்துக் கொள்ளவும், உபயோகம்.—இதைப்பிரமேகம், பழய சுரம், அத்தியுஷ்ணம், தாது நஷ்டம், சுஷகரோகம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—½-பலம், விறைகொடுக்கலாம். (மூலிகசங்கவிதம்.

கூஷ்மாண்டலேகியம். செய்முறை.—கலியாணப் பூசினிக்காய்ச் சாறு, படி, 4; எலிமிச்சம்பழரசம், படி, ½; சருக்கரை, பலம் 40. இவைகளைச் சேர்த்து எரித்து பாகபதம் வந்தபிறகு, அதில் அதிமதுரம், சீரகம், கொத்துமல்லி, திருபலை, சாதுர்ச்சாதம். இவைகளின் சூர்ணம், வகை, 1-க்கு. பலம், 1; ஜாதிக்காய், ஜாதிபத்திரி. வகை, 1-க்கு, விராகனிடை, 1; நெய், பலம்-2; தேன், பலம், 2. விதிப்படி சரக்குகளைச் சேர்த்து பக்குவப் படுத்திக்கொள்ளவும், உபயோகம். இதை அஸ்திவெட்டை, பிரமேகம், நீர்ச்சுருக்கு, உஷ்ணநோய், சுஷ்கநோய், தாதுநஷ்டம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம் மாத்திரை.—2-4, விராகனிடை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

கலியாணப்பூசினி விதையை அரைத்து அதில், 2-பலம், வெறும் வயிற்றில்கொடுத்து, 2-3, மணிநேரஞ் சென்றபிறகு, சிற்றாமணக் கெண்ணெய் கொடுத்தால், தட்டைக் கிருமிகள் வெளிப்படும்.

கல்தாமரை.

இதுவே மலையில் முளைகிறதாமரை.

செய்கை.—இதற்கு வியதாபேத பலகாரிகுணமுண்டு.

உபயோகம்.—துர்ப்பலம், வீரிய நஷ்டம், குஷ்டம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.—காரியத்தைச் செம்பாக்கும். (சிந்தாமணி.)

கல்நார்.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை பித்தகாசம், பல்லுடைச்சல், நீர்க்குழி எரிச்சல், பித்தவாந்தி, மூத்திராதீதம், க்ஷீண சுக்கிலம், அஜீர்ணம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

கல்பாசி.

செய்கை.—இதற்கு மூத்திரவர்த்தனகாரி குணமுண்டு.

உபயோகம்.—மலையால் பிறந்தகல்பாசியை, மேகரோகத்துக்கும், சோபைக்கும், உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

கல்மதம்.

செய்கை.—இதற்கு மூத்திரவர்த்தனகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதை தந்துமேகம், மூத்திரக்கிரிச்சிரம், தாதுநஷ்டம் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

களிச்சக்காய்—இலை.

இதுவே கெச்சக்காய். வச்சிரபீஜம். கழற்காய்.

செய்கை.—களிச்சப்பருப்புக்கு* பலகாரி, முறைவியாதிரோதி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சீதசுரம், துர்ப்பலம், வீக்கம், இவைகளுக்கும், இலையைவதக்கி வாதரோகங்களுக்கும் உபயோகிக்கலாம்.

மாத்திரை.—பருப்பில், 10-15, உளுந்து விறைகுளிகைசெய்துக் கொடுக்கலாம்.

யோகங்கள்.

வச்சிரபீஜகுடித்தைலம். செய்முறை.—20-பலம் கழற்சிக் கொடிவேரின் பட்டையையிடித்து, 6-படி தண்ணீரிலிட்டு, 1-படிகஷாயமாய்க் காய்ச்சி, இறுத்து, அதில், 5-பலம். கழற்ச்சிக்கொடியின் கொழுந்தையும், 2-பலம். கழற்ச்சிப்பருப்பையும், அரைத்து கலந்து, 1 வீசை சிற்றாமணக்கெண்ணெயும் சேர்த்துக்கொள்ளவும். இக்கூட்டில் இளவருப்பாய் வறுத்து வஸ்திரகாயஞ்செய்த, ஏலம், பறங்கிச்சக்கை, வால்மிளகு, லவங்கப்பட்டை, வகை 1-க்கு பலம், ½ ; கலந்துக் கழற்சிவிரகால் எரித்து, பதத்தில்வடித்து, அதில், ½-பலம் வாளப்பருப்பையும், ½-பலம். ரசகர்ப்பூரத்தையும், தை தைலம் விட்டு மைபோல அரைத்து கலந்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைக்குடல்வாயு, பீசவாயு, பீசவீக்கம், கால்வீக்கம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2, விராக விறை, காலையில் கொடுக்கலாம். 3-5-7-நாள் கணக்காய்க் கொடுத்து பத்தியம்வைக்கவும். (தைலவர்க்கச்சுருக்கம்.)

கள்ளி.

இதுவே கொடிக்கள்ளி.

செய்கை.—இதின் பாலுக்கு விரேசனகாரி, விரணகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை மலபந்தம், மறு, வீக்கம், நரம்புச்சிலந்தி, கரப்பான், புடை, சிரங்கு, பெருவிரணம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—உலர்ந்தபாலில் 1-2-உளுந்துவிறை கொடுக்கலாம்,

கற்றாழை.

செய்கை.—இதற்கு சீதளகாரி, குணமுண்டு.

உபயோகம்.—இதைக் கண்ணோவு, வித்திரதி, தேகச்சூடு, இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

குமாரித்தைலம். செய்முறை.—கடுக்காய்த்தூள் சேர்த்து பிசைந்து, பிழிந்து வாங்கியகற்றாழைரசம், படி 1; நல்லெண்ணெய் படி 1; பசுவின்பால், படி 1. இவைகளை ஒரு பாத்திரத்தில்விட்டு அதில், கோஷ்டம், மஞ்சிட்டிவேர், சந்தனம், திரிகடுகு, திரிபலை, சாதிக்காய், அதிமதுரம், சடாமாஞ்சி, விலாமிச்சம்வேர், வெட்டிவேர், சாதுர்ச்சாதம், இரந்திநாயகம், கோரைக்கிழங்கு, நன்னாரிவேர், செங்கழுநீர்க்கிழங்கு, பூலாங்கிழங்கு, தக்கோலம், வகை 1-க்கு விராகவிறை 3, இவைகளைப் பசுவின்பால் விட்டரைத்து கரைத்து, காய்ச்சி, பதத்தில் வடித்து, அதில், புனுகுசட்டம், பச்சைக்கர்ப்பூரம், வகை 1-க்கு விராகவிறை 3-சேர்த்து 15-நாள் நெற்புடத்தில்வைத்து, எடுத்துக்கொள்ளவும். உபயோகம்.-கண்ணருகல், நீர்க்கம்மல், அமரம், கண்ணோவு, மேக அழலை, தலைநோய், இவை முதலியவைகளுக்கு இதை ஸ்நானஞ்செய்துவைக்கலாம். (மூலிக சங்கலிதம்.)

கஸ்தூரி.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, அங்காகர்ஷணநாசகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சந்நிபாதசுரங்கள், சுவாசகாசம், கக்கிருமல், பாலமாந்தவலி, காக்கைவலி, சூதகசந்நி, இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—5-10-உளுந்து விறைகொடுக்கலாம்.

யோகங்கள்.

கஸ்தூரித்தைலம். செய்முறை.—ஆமணக்கெண்ணெய், படி 1; வெங்காயச்சாறு படி-2; ஆகாயத்தாமரைச்சாறு படி 1. இவைகளை ஒரு பாத்திரத்திலிட்டு அதில், சீரடிமுத்துப்பருப்பு, கார்போகவிதை, கருஞ்சீரகம், சுத்திசெய்த வாளப்பருப்பு, வெட்பாலையரிசி - வகை 1-க்கு பலம் ½; அரைத்து கரைத்து எரித்து பதத்தில் வடித்து அதில் ஏலம், விராகவிறை-2½; கோரோசனம்,விராகவிறை 2; கஸ்தூரி விராகவிறை ½. இவைகளின் தூளைத் தூவிக் கலந்துகொள்ளவும். உபயோகம்.—மூவகைப் பாலர்கட்குக்காணுகிற இசிவு, சுவாசரோகம், வாய்ப்பிதத்தல், மயக்கம், வயிற்றைப்பற்றியரோகம், செவ்வாப்புக்கட்டி, இவை முதலியவைகளுக்கு இதை உபயோகிக்கலாம். மாத்திரை.—⅛-¼-½-பலம் வீதம், வெதுப்பி, பாலகருக்கு காலையில் மாத்திரம் கொடுக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

கஸ்தூரிகுளிகை. செய்முறை.—கஸ்தூரி 1 பங்கு; குங்குமப்பூ. திரிசுகந்தம், வகை 1-க்கு பங்கு ¼. இவைகளைத் துளசி ரசத்தில் மைய அரைத்து, கடலைப்பிரமாணம் குளிகைசெய்து உலர்த்திக்கொள்ளவும். மாத்திரை.—1-2-குளிகைகொடுக்கலாம்.

கஸ்தூரிமஞ்சள்.

செய்கை—இதற்கு உதரவாதஹாரி, பலகாரிகுணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சர்பரோகங்கள், தலைவலி, இவைமுதலி யவைகளுக்கு மேலுக்கு உபயோகிக்கலாம்.

காக்கட்டான்விரை.

இதுவே கொடிகாக்கட்டான்விரை—ஜிரிகிவிரை.

செய்கை.—இதற்கு விரேசனகாரி குணமுண்டு; வேருக்கு சினி க்த்தகாரிகுணமுண்டு.

உபயோகம்.—விரையை மலபந்தத்துக்கும், வேரின்பட்டையை மூத்திரப்பை யெரிச்சல், நீர்த்தாரையெரிச்சல் இவைகளுக்கு உப யோகிக்கலாம்.

யோகம்.

காக்கட்டான்விரைக்கலவைச்சூரணம். செய்முறை.—காக்கட் டான் விரை 7 ; இந்துப்பு 7; அரத்தை 1. இவைகளின் தூளை டை பக்குகணக்காய் எடுத்து அரைத்துவஸ்திரகாயஞ்செய்துகொள்ளவும். மாத்திரை.—1½-2-விராகனிறைவரையில் கொடுத்தால் செவ்வையாய் பேதியாகும். (அனுபவமுறை.)

காசினிவித்து.

செய்கை.—இதற்கு சுரஅரகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதை சுரத்துக்கு உபயோகிக்கலாம்.

காசுக்கட்டி.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதை அதிசாரம், சீதபேதி, அக்ஷரம், பல்லரணை இருமல், தொண்டைக்கம்மல், பிரமேகம், மூலைக்காம்பு வெடிப்பு, சர்ப்பப்பிரமேகம், பெரும்பாடு இவை முதலியவைகளுக்கு உபயோ கிக்கலாம்.

மாத்திரை.—இதின் தூளில், 10-30, உளுந்துநிறை, தேனிலா வது, சருக்கரையிலாவது கலந்துக்கொடுக்கலாம். சீதபேதிக்குக் கரு வாப்பட்டைத்தூளுடன் சேர்த்துக்கொடுக்கலாம்.

யோகம்.

காசுக்கட்டி வெந்நீர் ஊறல் கஷாயம். செய்முறை.—காசுக்கட் டித்தூள். 160, உளுந்துநிறை, கருவாப்பட்டைத்தூள், 30, உளுந்து நிறை ; கொதிக்கிற வெந்நீர், 10-அவுன்ஸ், மூடி, ½-மணிநேரம் ஊறவைத்து வடிக்கட்டிக் கொள்ளவும். மாத்திரை.—இதில், ⅛-¼, ஆழாக்கு வீதம் கொடுக்கலாம். (இங்கிலிஷ்முறை.)

காஞ்சொரிவேர். சிறுகாஞ்சொரி.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி, சுவேதாரி, குணங்களு ண்டு.

உபயோகம்.—இதைச்சுரம், மேகவியாதி, இவைமுதலியவைக ளுக்கு உபயோகிக்கலாம்.

காடிநீர்.

செய்கை.—இதற்குச் சீதளகாரி, சமனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச்சுரம், பித்தமயக்கம், சோபை, அசீர்ணம் இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—1-2, உச்சிக்கரண்டி அளவு, சலத்தில் கலந்து கொடுக்கலாம்.

யோகங்கள்.

காடிக்ஷீர்பத்து. செய்முறை.—காடி, படி ½ ; சருக்கரை, பலம் 20-இவைகளைக் கலந்து, காய்ச்சி, பதத்தில் வடிக்கட்டிக்கொள்ளவும். உபயோகம்.—இதைச் சந்நிபாத சுரங்களுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2, உச்சிக்கரண்டி அளவு, சலத்தில் கலந்துக்கொடுக் கலாம். (சாரசங்கிரகம்.)

சூரநாசத்தைலம். செய்முறை.—4 படி, புளித்தகாடியும், 1-படி நல்லெண்ணெயும், ½-படி தயிர்ச்சலமும், ஒரு பாத்திரத்தில் சேர்த்து, காட்டுமிளகு, கஸ்தூரிமஞ்சள், கப்புமஞ்சள், நற்சந்தனம், சதகுப் பை, கிச்சிலிக்கிழங்கு, கோரைக்கிழங்கு, அதிமதுரம், கடுகுரோகிணி வகை 1-க்கு விராகனிறை 1. காடி நீர் விட்டரைத்து, அதிற்கரைத்து சிறுக எரித்து வடித்துக்கொள்ளவும். உபயோகம். சீதசுரம், சீர்ணச் சுரம் இவைகளுக்கு மேலுக்குப்பூசி, தூட்டிடை உள்ளுக்கும் கொடு த்துகொண்டுவந்தால் குணமாகும். (தைலவர்க்கச்சுருக்கம்.)

காட்டாமணக்கு இலை-பால்.

செய்கை.—இதற்கு க்ஷீரவர்த்தனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இலையை ஸ்த்தனங்களுக்குக்கட்டினால், பால் சுரக்கும் ; பாலை பல்வலிக்கு உபயோகிப்பதுண்டு.

காட்டுசீரகம்.

செய்கை.—இதற்கு கிருமிநாசகாரி, பலகாரி, தீபனகாரி, மூத் திரவர்த்தனகாரி ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதை வயிற்றுக்கிருமி, பேன், இவை முதலிய வைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதின் தூளில், 1-விராகனிறை தேனில் கலந்துக் கொடுக்கலாம்.

காப்பிக்கொட்டை.

செய்கை.—இதற்கு பலகாரி, உஷ்ணகாரி, தீபனகாரி ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதைப் பேதி, சுவாசகாசம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

காமாக்ஷிப்புல்லு—காவட்டம்புல்லு.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, உதரவாதஹாரி, அக்காகர்ஷணநாசகாரி, சுவேதகாரி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதை வயிற்றுப்பொருமல் வயிற்றுவலி, வாந்தி, பேதி, வாதநோய், சுளுக்கு இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

காமாக்ஷிப்புல்லின் தைலம். மாத்திரை.—3, 6 துளி சர்க்கரையில்விட்டுக்கொடுக்கலாம். 1-பங்கு தைலம், 2-பங்கு தேங்காய் எண்ணெய், சேர்த்து தைலமாக்கி மேலுக்குப் பூசலாம்.

காரட்டுக்கிழங்கு.

செய்கை.—இதற்கு பூதிகந்தநாசகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை அழி விரணம், கட்டிகள், இவைகளுக்கு போல்டீஸ் செய்துக்கட்டலாம்.

காரீயம் - கருநாகம்.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைக் கண்ணோய், பகந்திரவிரணம், கஜசர்மகுஷ்டம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

கார்போக அரிசி.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைக்கடுவன், விரணம், சர்ப்பவிஷம், வாதசிலேஷ்மம், தினவு, யானைச்சொறி, கிரந்தி இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

கிச்சிலிக்கிழங்கு.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி குணமுண்டு.

உபயோகம்.—சிலேஷ்மநோய், கீல்பிடிப்பு, விரணம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

கிரந்திநாயகம்.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைக் கரப்பான் முதலிய சருமரோகங்களுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

கிளியூரல் பட்டை.

செய்கை.—இதற்கு தீபனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை அக்கினிமந்தத்துக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

கீழாநெல்லி - கீழ்வாய்நெல்லி.

செய்கை.—இதற்கு பித்தசமனகாரி, மூத்திர வர்த்தனகாரி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதை மஞ்சகாமாலை, நீர்க்கோவை, பிரமேகம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—பூண்டு சமூலத்தை அரைத்து அதில், $\frac{1}{4}$—$\frac{1}{2}$-பலம் வீதம் கொடுக்கலாம்.

யோகங்கள்.

கீழாநெல்லித்தைலம். செய்முறை.—நிழலில் உலர்த்தி இடித்த கீழாநெல்லிச்சமூலம், வீசை 1; சலம் படி 8. காய்ச்சி, 1-படி குடிநீருக்குச் சுண்டவைத்து, அதில் பசுவின்பால், படி 1. நல்லெண்ணெய்படி 1. விட்டு அந்தக் கூட்டில், சீரகம், பலம் 1. அப்பாலால் அரைத்து கரைத்து எரித்து, பக்குவப்பதத்தில் வடித்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை உட்சுரம், காமாலை, நடுக்கல், தலைச்சுற்றல், அக்கினிமாந்தியம், கைகால் கண்ணெரிச்சல், உழலை, போகத்தால் விளைந்த அரித்திரமேகம், வாந்தி, இவை முதலியவைகளுக்கு ஸ்நானஞ் செய்துவைக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

குக்கில்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை விரணம், பிரமேகம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

குக்கிலநவநீதம். செய்முறை.—தேவையான வெள்ளைக்குக்கிலுக்குச்சமன், நல்லெண்ணெய்ச் சேர்த்து, காய்ச்சி, தண்ணீரிலூற்றி, கையால் செவ்வையாகமர்த்தனஞ்செய்து நீரை இறுத்துவிட்டு, மறுபடியும் நீராக்கி, மர்த்தனஞ்செய்யவும்; இவ்விதமாய் 5-தடவை செய்து, வெண்ணெயை எடுத்து குளிர்ந்த நீரில்வைத்து வைக்கவேண்டியது. தினந்தோறும் புதுநீர்விடவும். உபயோகம்.—இதை விரணம், பிரமேகம் இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—4-விராகனெடை கொடுக்கலாம். (அநுபவமுறை.)

குங்கிலியம்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, கபஹாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைக் காசரோகம், பிரமேகம், மேகவிரணம், வாதவித்திருதி, கீல்பிடிப்பு, நகங்களைப்பற்றிய விரணங்கள் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—20, 30 உளுந்து கிறைகொடுக்கலாம்.

யோகம்.

குங்கிலியக்களிம்பு. செய்முறை.—குங்கிலியம், பலம் 15; மெழுகு பலம் 15. இவைகளைச் சிறுதீயிட்டுருக்கி, அதில் நல்லெண்ணெய் புட்டி 1. சேர்த்து, சூடாயிருக்கும்போதே வடிக்கட்டிக் கொள்ளவும். **செய்கை.**—சாந்த உஷ்ணகாரி. **உபயோகம்.**—இதை ஆராத விரணங்களுக்கும், அழிப்புண்களுக்கும் உபயோகிக்கலாம். (இங்கிலீஷ்முறை.)

இதனுடன், கந்தகம், காசுக்கட்டி, வெங்காரம், இவைகளைச்சேர்த்துகளிம்பு செய்து, விரணங்களுக்கு உபயோகித்தால், சிவந்த நிறம் உண்டாக்கி, சீக்கிரத்தில் ஆறிவிடும்.

குங்கிலியத்தைலம்.

செய்கை.—இதற்கு மூத்திரவர்த்தனகாரி குணமுண்டு.

உபயோகம்.—பிரமேகத்துக்குக்கொடுக்க இதுநல்ல மருந்து.

மாத்திரை.—20-60-துளிவரையில் கொடுக்கலாம்.

குங்குமப்பூ.

செய்கை.—இதற்கு அங்காகர்ஷண நாசகாரி, ருதுவர்த்தனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை நாவரசுஷி, மேகநீர், கீல்பிடிப்பு, கபம், அதிருக்ஷை, பயித்தியம், மண்டையிடி, கண்ணோவு சலபீனசம், வாந்தி, நீரேத்தம், பிரசவவலி இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மாத்திரை.—10-40. உளுந்துகிறை கொடுக்கலாம்.

குப்பைமேனி.

செய்கை.—இதற்கு வமனகாரி, கபஹாரி, விரேசனகாரி ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதை இருமல், மேகவிரணம், விஷக்கடிகள், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இலையின் ரசத்தில்; ஒரு உத்திரணி அளவு, குழந்தைகளுக்குக் கொடுத்தால், சாந்தமாய் வாந்தியாகும்.

யோகங்கள்.

குப்பைமேனிகஷாயம். செய்முறை.—உலர்ந்த குப்பைமேனி சமூலம், 1-வராகனிடை; வெந்நீர், ½-புட்டி. 2-மணிநேரம் ஊறவை

த்து, வடிகட்டிக்கொள்ளவும். **உபயோகம்.**—இருமலுக்குக் கொடுக்கலாம். **மாத்திரை.**—⅛-¼, ஆழாக்கு அளவுதேன் சேர்த்துக் கொடுக்கலாம்.

குப்பைமேனிமெழுகு. செய்முறை.—தேவையான இலையின் ரசத்தை, ஜலயந்திரத்தில் வைத்து காய்ச்சி மெழுகுபதமாக்கிக் கொள்ளவும். **மாத்திரை.**—3-5, உளுந்துகிறை கொடுக்கலாம்.

குரோசானியோமம்

செய்கை.—இதற்கு சமனகாரி, வேதநாசகந்தகாரி, அங்காகர்ஷண நாசகாரி, நித்திராகாரி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதைவேதனை, நித்திராபங்கம், இருதயத்துடிப்பு விகாரம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—10-20, உளுந்து கிறை கொடுக்கலாம்.

கொடிநாரத்தை.

இதுவே கடாரநாரத்தன்; கொம்மட்டி மாதுளன்.

செய்கை.—இதற்கு சேதனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை சுரம், அழலை, இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

மாதுலங்காதிகிருதம். செய்முறை.—திரும்பிப்பிழிந்த கொடிநாரத்தன் பழரசம், பலம்-10; நெய், பலம்-10. கலந்துகாய்ச்சி, வடித்து அதில், திரிகடுகு சூர்ணம், வகை. 1-க்கு பலம் ½; கற்கண்டு பொடி-பலம். 3, சேர்த்து கலந்துக் கொள்ளவும். **உபயோகம்.**—இதை அழலை, வாந்தி, அரோசகம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—1-துலாம் வீதம் கொடுக்கலாம். (மூலிக சங்கலிதம்.)

கொட்டிக்கிழங்கு.

செய்கை.—இதற்கு சீதளகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைப்பிரமேகம், உட்சூடு, இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதின் தூளில், 1-2, வராகனிடை இளநீரில் கலந்துக் கொடுக்கலாம்.

கொட்டைக் கரந்தை.

உபயோகம்.—இதைச் சொறி சிரங்குக்கு உபயோகிக்கலாம்.

கொத்துமல்லி.

செய்கை.—இதற்கு தீபனகாரி, உதரவாதஹாரி, சீதளகாரி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதை வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், அக்கினிமாந்தியம், உட்சூடு, பயித்தியம், வாந்தி, விக்கல், ராவறகஷி இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

கோத்துமல்லி வெந்நீர் ஊறல்கஷாயம் செய்முறை.—கொத்துமல்லி விதை விராகனிடை, 2; சீரகம், விராகனிடை, 1-வெந்நீர் ஆழாக்கு-2. சேர்த்து பாத்திரத்தைமூடி—1-மணிநேரம் ஊறவைத்து வடிக்கட்டிக் கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{4}$-$\frac{1}{2}$-ஆழாக்கு அளவு, கற்கண்டு சேர்த்துக் கொடுக்கலாம். (அனுபவமுறை.)

கொய்புப்புடல்.

செய்கை.—இதற்கு சலவிரேசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை நீர்க்கோவை முதலிய ரோகங்களுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதின்காயின்ரசத்தில், 3-5, உளுந்துனிடை, 3-மணிக்கொருதரம் பேதியாகிறவரையில் கொடுத்தால், சுகமாயும், செவ்வையாயும் பேதியாகும்.

கொய்யாவேர்ப்பட்டை.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை அதிசாரத்துக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

வெள்ளைகொய்யாவேரின்பட்டை கஷாயம் செய்முறை.—பட்டை விராகனிடை, $\frac{1}{2}$ ஜலம் ஆழாக்கு, 1. இவைகளைச்சேர்த்து, $\frac{1}{2}$-ஆழாக்குச் சுண்டக்காய்ச்சி வடிக்கட்டிக்கொள்ளவும். **மாத்திரை.**—1. உத்திரணிவீதம், பேதிநிற்க, குழந்தைகளுக்குக்கொடுக்கலாம். குதப்பிரம்சத்துக்கு மேலுக்கு உபயோகிக்கலாம். (அனுபவமுறை.)

கொல்லங்கோவை.

உபயோகம்.—இதைச் சீதவாயு, அக்கிப்புடை, கண்டமாலை, குஷ்டம், கரப்பான், நமைச்சல் இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

கோதுமை.

செய்கை.—இதற்கு தார்ட்டியகாரி, போஷணகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—கோதுமைக்கஞ்சியை, வாதசுரம், சலதோஷம், கபம், சந்நிபாதசுரம், பலவீனம், ஆகிய இவைகளுக்கு உபயோகிக்கலாம். கோதுமை மாவைக் களிசெய்து, வித்திரதி, விரணம், இவைகளுக்குக் கட்டலாம்; அக்கிப்புடை மேல்தூவலாம்.

கோரைக்கிழங்கு.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, சுவேதகாரி, மூத்திரவர்த்தனகாரி, சங்கோசனகாரி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சீதசுரம், சீதபேதி, இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். தனிப்பட உபயோகப்படுத்துவதில்லை.

கோரோஜனை.

மானின் இரைப்பையிலும், பசுவின் இரைப்பையிலும் பிறக்கிற ஒருவித கல்லு.

செய்கை.—இதற்கு கபஹாரி, பித்தசமனி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை இருமல், சுளுப்பு, சிசுகளுக்குக்காணுகிற மாந்தவலி, மேகவாய்வு, இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—1-உளுந்துனிடை வெற்றிலை ரசத்திலாவது, முலைப்பாலிலாவது கொடுக்கலாம்.

யோகம்.

கோரோஜனக்குளிகை. செய்முறை.—கோரோஜனம், குங்குமப்பூ, கர்ப்பூரம், பச்சைக்கர்ப்பூரம், ஏலம், கிராம்பு, கோஷ்டம், சாதிக்காய், அக்கிராகாரம், வகை-1-க்கு, விராகனிடை-1. இவைகளைச் சந்தனக்கட்டைக் கஷாயம்விட்டு, மைபோல் அரைத்து, குன்றிபோலுண்டை செய்துக்கொள்ளவும் மாத்திரை.—1-2, குளிகை கொடுக்கலாம்.

கோவைரசம்.

உபயோகம்.—இதைச்சிரங்குக்கு உபயோகிக்கலாம்.

கோஷ்டம்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, சுவேதகாரி, குணங்களுண்டு

உபயோகம்.—இதை தோஷசுரங்களுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

கோஷ்ட வெந்நீர் ஊறல் கஷாயம். செய்முறை.—கோஷ்டம், விராகனிடை, 1; வெந்நீர் ஆழாக்கு-2. இவைகளை 2 மணிநேரம் ஊறவைத்து, வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{2}$-$\frac{1}{4}$, ஆழாக்கு அளவுகொடுக்கலாம். (அனுபவமுறை.)

சகதேவி.

இதுவே நெய்ச்சிட்டி-தேவகந்தம்.

உபயோகம்.—இதைத் தனிப்பட உபயோகிப்பதில்லை.

யோகம்.

சகதேவித்தைலம். செய்முறை.—நெய்ச்சிட்டிச்சாறு படி, 1; பசுவின் நெய், படி-$\frac{1}{2}$. நல்லெண்ணெ படி—$\frac{1}{2}$ கலந்து அதில் அதிமதுரம், நற்சந்தனம், நன்னாரிவேர், வெட்டிவேர், விலாமிச்சுவேர், திப்பிலி மூலம், லவங்கம், கடுகரோகணி, நெய்தற்கிழங்கு, வகை 1-க்கு விராகனிறை 1; பசுவின்பால்விட்டரைத்து, தை கூட்டில் கலந்து, காய்ச்சி, பதத்தில் வடித்துக்கொள்ளவும். உபயோகம்.—நேத்திரத்தைப் பற்றிய புகைச்சல், தேக எரிச்சல், ஜீர்ணசுரம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-சிறுகரண்டி அந்திசந்தி கொடுக்கலாம். 4 – நாளைக்கொருதரம், ஸ்நானஞ்செய்துவைக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

சங்கங்குப்பி.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதை அரையாப்புக்கட்டி, சிரங்கு, உஷ்ணம், பிரமேகம், கருங்கிரந்தி, தவளைச்சொறி, விரணம், கில்லீக்கம், இருமல், சர்ப்பவிஷம் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

சடாமாஞ்சி.

இதுவே பருங்கோரை.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, அங்காகர்ஷணநாசகாரிகுணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சூதகவலி, பழயசுரம், காசம், வாயு, சுவாசம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதின் சூர்ணத்தில் 20-40, உளுந்துவிறைகொடுக்கலாம்.

யோகம்.

சடாமாஞ்சி வெந்நீர் ஊறல் கஷாயம். செய்முறை.—சடாமாஞ்சி, விராகனிறை-2; வெந்நீர் ஆழாக்கு-2. 1-மணிநேரம் ஊறவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{4}$-$\frac{1}{2}$, ஆழாக்கு அளவு கொடுக்கலாம்.

சதகுப்பை.

செய்கை.—இதற்கு ஜடராக்கினி வர்த்தனகாரி, கர்ப்பவாதஹாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, அக்கினிமாந்தியம், தலைவலி, ஜலதோஷம் காணசூலை, ஆசனக்கடுப்பு இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

சதாபுஇலை. அருதா.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, ருதுவர்த்தனகாரி, கிருமிநாசகாரி, குணங்களுண்டு. மாத்திரை அதிகமானல் விஷமிக்கும்.

உபயோகம்.—இதைச் சூதகச்சந்நி, சூதகக்கட்டு, காக்கைவலி, குழந்தைகளுக்குக்காணுகிறவலி, மாந்தம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—அரைத்த சதாபு இலையில் 20-40, உளுந்துவிறை கொடுக்கலாம்; இதின் ரசத்தில் $\frac{1}{4}$-$\frac{1}{2}$ உச்சிக்கரண்டி அளவு 3-வருஷத்துக்குமேல்பட்ட குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்.

யோகங்கள்.

அருதாதைலம். மாத்திரை.—2-5, துளி கொடுக்கலாம்.

சதுரக்கள்ளிப்பால்.

செய்கை.—இதற்கு விரேசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைக் குஷ்டம், காணாக்கடி, கில்லீக்கம், வாதகுன்மம், பிரமேகம், துஷ்டவிரணம், கரப்பான் இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

சந்தனம்.

செய்கை.—இதற்கு சுவேதகாரி, மூத்திரவர்த்தனகாரி, வியதாபேதகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சுரங்கள் மார்த்துடிப்பு, அக்..., வீக்கம், சொறி, தேமல், நமச்சல், சுரத்தில் காணுகிறதலைவலி, சீதசுரம், சீழ்ப் பிரமேகம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகங்கள்.

சந்தனக்கட்டைக் கஷாயம். செய்முறை.—சந்தனக்கட்டை, விராகனிறை, 2; வெந்நீர் ஆழாக்கு, 2. மூடி, 1-மணிநேரம் ஊறவைத்து, வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{8}$-$\frac{1}{4}$. ஆழாக்கு அளவு கொடுக்கலாம். (அனுபவமுறை.)

சந்தனத்தைலம். செய்கை.—இதற்கு மூத்திரவர்த்தனகாரி குணமுண்டு. உபயோகம்.—இதைப் பிரமேகத்துக்குக் கொடுக்கலாம். மாத்திரை.—30–40 துளி சருக்கரையில் விட்டுக் கொடுக்கலாம்.

சந்தனஷர்பத்து. செய்முறை.—2-பங்கு சந்தனத்தூளை, 16-பங்கு தண்ணீரில்விட்டு, 4-பங்குக்குச் சுண்டவைத்து, வடிக்கட்டி, அதின் இடைக்கு, 3-பங்கு கற்கண்டு சேர்த்து, காய்ச்சி, மதுபாகத்தில், வடிக்கட்டிக்கொண்டு, அதில் தேவையான பந்நீர் விட்டு கலந்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை மூலச்சூடு, பிரமேகம், சுவரம், இவை முதலியவைகளுக்குக் கொடுக்கலாம். மாத்திரை.—1–2, துலாம் கறைகொடுக்கலாம்.

சந்தனாதிதைலம். செய்முறை.—சந்தனக்கட்டை, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், நன்னாரி, சிற்றாமுட்டிவேர், கோரைக்கிழங்கு, அதி

மதுரம், நெல்லிவேர்ப்பட்டை, சீந்திற்கிழங்கு, சிற்றரத்தை, வகை 1-க்கு-பலம், 2½, இடித்து பாண்டத்திலிட்டு, 24-படி சலம்விட்டு, எரித்து 2-படி குடிநீராகச் சுண்டக்காய்ச்சி வடிக்கட்டி, அதில் பசுவின்பால், நல்லெண்ணெ, வகை-1-க்கு படி 1; தண்ணீர்விட்டாங்கிழங்கின்ரசம், செவ்விளநீர், வகை-1-க்கு படி-¼. சேர்த்து சந்தனம், தேவதாரம், அகிற்கட்டை, மஞ்சிஷ்டிவேர், தக்கோலம், வெட்டிவேர் விலாமிச்சம்வேர், நன்னாரிவேர், சாதுர்ச்சாதம், சாதிக்காய், சிற்றரத்தை, குங்குமப்பூ, திரிபலை, சடாமாஞ்சில், கோரைக்கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு, சண்பகமொக்கு, கோஷ்டம், கஸ்த்தூரிமஞ்சள், தாமரைவளையம், கொத்துமல்லிவிரை, கிச்சிலிக்கிழங்கு, அதிமதுரம், காட்டாத்திப்பூ, பச்சிலை, சீரகம், வகை-1-க்கு, விராகனிறை, ½-பசுவின்பால் விட்டரைத்து, அதிற்கரைத்து, எரித்துமெழுகுபதத்தில் வடித்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைத் தாகரோகம், கை, கால், கண், தேக எரிச்சல், பித்தரோகங்கள், இவை முதலியவைகளுக்கு ஸ்நானம் செய்துவைக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

சப்பாத்திப்பூ.

இதுவே செம்பருத்திப்பூ.

செய்கை.—இதற்கு சீதளகாரி, சிலேத்தகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச்சுரத்தில் காணுகிற தாஹம், மூத்திரக்கிரிச்சிரம், உஷ்ண இருமல், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகங்கள்.

சப்பாத்திப்பூ வெந்நீர் ஊறல் கஷாயம். செய்முறை.—சப்பாத்திப்பூ விராகனிறை, 4; வெந்நீர் ஆழாக்கு, 2. மூடி, 1-மணிநேரம் ஊறவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும், மாத்திரை.—⅛-¼, ஆழாக்கு வரையில் கொடுக்கலாம்.

சப்பாத்திப்பூ ஷர்பத்து. செய்முறை.—சாப்பாத்திப்பூவின் வெந்நீர் ஊறல்கஷாயம், ஆழாக்கு, 2; சருக்கரை பலம் 20. சேர்த்து காய்ச்சி பதத்தில் வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—2-4 விராகனிறை சலத்தில் கலந்துக்கொடுக்கலாம். (அனுபவமுறை.)

சரக்கொன்றைப்புளி.

செய்கை.—இதற்கு மலகாரி, விரேசனகாரி, குணங்களுண்டு. ஷை செடியின் கொழுந்துக்கும், கட்டைக்கும், ஷை குணங்களேயுண்டு.

உபயோகம்.—இவைகளை மலபந்தத்துக்குக் கொடுக்கலாம்.

மாத்திரை.—சரக்கொன்றைப் புளியில், 1-2, விராகனிறைக் கொடுத்தால், மலம் இளகியிறங்கும். 1-2, பலம் கொடுத்தால் பேதியாகும் கொழுந்தைத் துவையல் செய்தும், கட்டையைக் கஷாயஞ்செய்துங் கொடுக்கலாம்.

சவுரிப்பழம்.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி, குணமுண்டு.

யோகங்கள்.

சவுரித்தைலம். செய்முறை,—சிவந்தசவுரிப்பழம், 200. கல்லுரலில் இடித்து, ஒருபாண்டத்திற் கொட்டி, பதக்குசலம் விட்டு, மெதுவாக எரித்து, 16-ல் ஒருபங்காக வடித்த கஷாயத்தில், நல்லெண்ணெ படி-1, விட்டு, 2-பலம், கருஞ்சீரகத்தை, ஷை கஷாயத்தாலரைத்து கரைத்து எரித்து, பக்குவத்தில் வடித்துக்கொள்ளவும். **உபயோகம்.**—இதைக் குஷ்டம், வாதக்கரப்பான், மருட்காய்கள், கழுத்து வீக்கம், இவை முதலியவைகளுக்கு ஸ்நானஞ்செய்துவைக்கலாம், (தைலவர்க்கச் சுருக்கம்.)

சாதிக்காய்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, உதரவாதஹாரி, சித்திராகாரி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதை வயிற்றுப்பொருமல், அக்கினிமாந்தியம், அதிசாரபேதி, விந்துநஷ்டம், தலைநோய், இரைப்பு, இருமல் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—10-20, உளுந்துநிறை கொடுக்கலாம்.

சாதிபத்திரி.—இதற்கு சாதிக்காயின் குணங்களேயுண்டு.

சாமந்திப்பூ.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, பலகாரி, உதரவாதகாரி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதைத்துர்ப்பலம், சூதகசந்நி, மந்தாக்கினி, சீதசுரம், சாக்குத்திமிர், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகங்கள்.

சாமந்திப்பூ வெந்நீர் ஊறல்கஷாயம். செய்முறை.—4-விராகனிறை பூவை, 2 ஆழாக்கு வெந்நீரிலிட்டு, மூடி, 15-நிமிஷம்வரையில் ஊறவைத்து, வடிக்கட்டிக்கொள்ளவும் மாத்திரை.—⅛-¼ ஆழாக்குவரையில் கொடுக்கலாம்.

சாம்பிராணி.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, கபஹாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை இருமல், கக்கிருமல், விழிநோய், நீங்காத சிரநோய், சலபீனசம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம், (சிந்தாமணி.)

மாத்திரை.—10-20, உளுந்துநிறை கொடுக்கலாம்,

யோகங்கள்.

சாம்பிராணித்தைலம். செய்முறை.—வாயகண்ட ஒரு சட்டியில், 1-பலம். பளிங்குசாம்பிராணியைச் சிறுதுண்டுகளாய் நறுக்கிபோட்டு, தண்ணீர்விட்ட தட்டால்மூடி அந்தச் சட்டியை அடுப்பிலேற்றி, விளக்குபோல் சிறுதீயிட்டெரித்தால், தைலம்பிறந்து, தட்டுக்கடியில் படிந்திருக்கும்; அதைவழித்துக்கொள்ளவும். **உபயோகம்.**—இதைத் தலைவலி, சலுப்பு இவைகளுக்கு நெற்றிமேலும், கன்னங்கள்மேலும் பூசலாம். (அனுபவமுறை.)

சாம்பிராணிப்பதங்கம். செய்முறை.—1-சேர் சாம்பிராணியைப் பொடித்து, வாயகண்ட ஒரு தோண்டியிலிட்டு, தனமானகாகிதத்தைக்கோபுரம்போல் குல்லாய்ச்செய்து, பிசினியால் தோண்டியின் வாயிக்கு ஒட்டவைத்து, உலர்த்தி, இந்தக்குல்லாயின் வாய்க்குத்தக்கத் தட்டுப்பில்லைவைத்து சீலைமண்செய்து உலர்த்து, அடுப்பிலேற்றி, 2 நாழிகை-தீபாக்கினியாய் எரித்தால், சாம்பிராணிப்பூ பிறந்து காகிதத்தின் மேல்பற்றியிருக்கும்; அதை எடுத்துக்கொள்ளவும். அனல் அதிகமானால், பூகரைந்து கீழேவிழுந்துவிடும். **செய்கை.**—இதற்கு கபஹாரிகுணமுண்டு. **உபயோகம்.**—இதை இருமலுக்கு உபயோகப்படுத்தினதுண்டு. தனியாய்க் கொடுப்பதில் உபயோகமில்லை. மஞ்சட்காமாலை, மூத்திரதோஷங்கள், குழந்தைகளுக்குக்காணுகிற சொட்டுமூத்திரம், இவைகளுக்குக்கொடுத்து சவுக்கியம் கண்டதுண்டு. **மாத்திரை.**—10-15-உளுந்தெடை கொடுக்கலாம். (அனுபவமுறை.)

சாரணை

செய்கை.—இதற்கு விரேசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை மலபந்தத்துக்கு உபயோகிக்கலாம்.

சாரப்பருப்பு.

செய்கை.—இதற்கு வீரியவர்த்தனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதுயோகமுறைகளில் சேருகின்றது.

சாலாமிசிரி.

செய்கை.—இதற்கு பலகாரி, போஷணகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைத்துர்ப்பலம், சுக்கிலக்ஷீணம், இவைமுதலியவைகளுக்கு பாயசமாகச்செய்து உபயோகிக்கலாம்.

சால்முகிரா.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி குணமுண்டு. மாத்திரையில் அதிகமானால் வாந்தியாகும்.

உபயோகம்.—இதைக் குஷ்டம், கண்டமாலை, சர்மரோகங்கள், கீல்வாதம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை,—இந்த விரையின் பொடியில், 6, 18, 24-உளுந்தெடைவரையில் கொடுக்கலாம் குமட்டலுண்டானால், எடையை குறைத்துக் கொடுக்கவேண்டியது.

யோகங்கள்

சால்முகிராதைலம்.—இதில் 5-6-துளிகொடுக்கலாம். மாத்திரையைப்படிப்படியாய் அதிகரித்துக்கொள்ளலாம். இதை மேலுக்கும் பூசலாம்.

சால்முகிராகளிம்பு. செய்முறை.—விரையை அரைத்து, அதனுடன் தேவையான மெழுகுகளிம்பு சேர்த்து, கலந்துக்கொள்ளவும். **உபயோகம்.**—இதைக் கரப்பான்முதலிய சருமரோகங்களுக்கு உபயோகிக்கலாம்.

சித்திரமூலம்.

இதுவே கொடிவேலி.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, துவக்ஸ்போடகாரி, ஆகிய இக்குணங்களுண்டு. வெள்ளைச் சித்திரமூலத்துக்கு, முறைவியாதிரோதி குணமுமுண்டு.

உபயோகம்.—இதை வாதரோகங்கள், மேகப்படை, அரையாப்புக்கட்டி, இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகங்கள்.

அக்கினிமுக சூர்ணம் செய்முறை.—சித்திரமூலம், அதிவிடையம், கோஷ்டம், இந்துப்பு, பெருங்காயம், அதிமதுரம், கருவேலன்பட்டை, கடுக்காய், நெல்லிவற்றல், திரிகடுகு, இவைகளின் சூர்ணம், சமஎடை சேர்த்துக்கொள்ளவும். **உபயோகம்.**—இதை மஞ்சகாமாலை, அசீர்ணபேதி முதலிய ரோகங்களுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—10, 30, உளுந்தெடை தேனிலாவது, புளித்தமோரிலாவது கலந்துக்கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

சிலாரசம்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, கபஹாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைப்பிரமேகம், கபரோகங்கள், காசரோகம், சர்மப்பிரமேகம், துஷ்டவிரணங்கள், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—5-20, உளுந்தெடை, குளிகைசெய்துக்கொடுக்கலாம்.

சிவதைவேர்.

செய்கை.—இதற்கு விரேசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை மலபந்தம், உதராவர்த்தவாதம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். வெண்சிவதையை பயித்தியரோகத்துக்கும்—கருஞ்சிவதையை எலிவிஷம், பித்தகுன்மம் ஆகிய இவைகளுக்கும் உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மாத்திரை.—இதின் தூளில் ½-1, விராகனிறை கொடுக்கலாம். கல்லுப்பு சேர்த்துகொடுத்தால் செவ்வையாய் பேதியாகும்.

யோகம்.

அவிபத்திலேகியம். செய்முறை.—சிவதைவேர்ச் சூர்ணம், 36-பங்கு; திரிகடுகு, திரிபலை, திரிசுகந்தம், வாய்விளங்கம், முத்தக்காசு, இந்துப்பு, இச்சரக்குகளின் சூர்ணம், வகை 1-க்கு 1-பங்கு; சருக்கரை, 48-பங்கு; தண்ணீர், 30-பங்கு. இவைகளை விதிப்படி சேர்த்து, லேகியமாய் செய்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை மலபந்தம், சோபை, சூலை, பித்தம், கிருமிரோகம், இவை முதலியவைகளுக்குக் கொடுக்கலாம். மாத்திரை.—1-2. விராகனிறை கொடுக்கலாம்.

சிவநார்வேம்பு.

செய்கை.—இதற்கு சீதளகாரி, சினிக்தகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைக் குஷ்டம், பல்வலி, வாய்விரணம், ஆகந்துகவிரணம், ராசபிளவை, சர்ப்பவிஷம், மஹாவாதம், அக்கினிமாந்தியம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

சிறுகீரை.

செய்கை.—இதற்கு மூத்திரவர்த்தனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை மூத்திரக்கிரிச்சிரத்துக்கு உபயோகிக்கலாம்.

சிறுதாளி.

செய்கை.—இதற்கு சினிக்தகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை நாக்கு விரணத்துக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

சிறுநாவற்பூ.

இதுவே நாகேசரம்.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைப் பிரமேகம், காசம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

சிறுபீளை

செய்கை.—இதற்கு மூத்திரவர்த்தனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை மூத்திரக்கிரிச்சிரத்துக்கு உபயோகிக்கலாம்.

சிற்றாமணக்கெண்ணெய்.

செய்கை.—இதற்குமலகாரி, விரேசனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை மூலரோகம், சீதபேதி, வயிற்றுவலி, குழந்தைகளுக்கும் கர்ப்பிணிகளுக்கும் காணுகிற மலபந்தம், ஒளஷதவெப்பம், மூல உஷ்ணம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—பெரியவர்களுக்கு இதை-¼, ஆழாக்கு அளவும், குழந்தைகளுக்கு-2, உத்திரணி அளவும் கொடுக்கலாம்.

யோகம்

பாவனபக்குவதைலம். செய்முறை.—முதல்நாள் இரவில் சேர்த்த புராதனநெல்லாகிய நீராகாரஜலத்தை, விடியற்காலத்தில் ஒரு பாத்திரத்தி லிறுத்தி அதில், முதிர்ந்த சிற்றாமணக்கின் கொட்டையை வேண்டியமட்டும் கொட்டி ஊறவைத்து, அன்றையதினங்கழித்து மறுதினத்தில், அந்த ஜலத்தை ஊற்றிவிட்டு, நல்ல ஜலத்தினால் அலம்பிசுத்திசெய்து, வெயிலில் உலர்த்தி, ஊனைநெருங்கிய பிராதமலைகளில் முளைத்த கற்றாழை மடலை இடித்துபிழிந்து, இந்த அதை, முன்போலவே ஊறச்செய்து, மறுநாள் அந்த ஜலத்தோடு ஊறவைத்து, வெந்தபிறகு ஜலத்தை வடித்துவிட்டு சுத்த ஜலத்தினால் கழுவி, வெயிலில் துழாவி உலர்த்தி, யிடித்து, தைலபாத்திரத்தில் சேர்த்து, அந்தக்கொட்டையின் அளவுக்கு, 4-பங்கு அதிகமாய், ஒடுமுதிராத செவ்விளநீரை பெருகவிட்டு, அடுப்பேற்றி, சிறிய தீயாக எரித்து, பெருங்கொதி யடங்கி, நெய்யெல்லாமே மேலே மிதக்கும் பக்குவத்தில் வடித்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைக்கணைச்சுரம், கர்ப்பசூடு, நீர்த்துவார எரிச்சல், ஐம்பொறிகளின் உஷ்ணம் சரீர உலரல், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். கர்ப்பிணிகளுக்கு காலையிற்கொடுத்து கொண்டு வரலாம். மாத்திரை—¼ ஆழாக்கு அளவுகொடுக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

சிற்றாமுட்டிவேர்-பேராமுட்டிவேர்.

சிற்றாமுட்டிவேரே குறுந்தொட்டி.

செய்கை.—இவைகளுக்கு சினிக்தகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைச்சுரம், தாகம், மூத்திர எரிச்சல், இருமல் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

சின்னிஇலை.

செய்கை.—இதற்கு தீபனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை அக்கினிமாந்திய ரோகத்துக்கு உபயோகிக்கலாம்.

சீக்கிராம்.

செய்கை.—இதற்கு ஸ்னிக்தகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதைச் சவுகாரத்துக்குப்பதில் உபயோகித்தால், சௌமியகுணத்தைத்தரும்.

சீந்தில் கிழங்கு—சீந்தில்கொடி.

இதுவே அமிர்தக்கொடி ; அமிர்தவல்லி.

செய்கை.—இதற்கு பலகாரி, முறைவியாதிரோதி, மூத்திரவர்த்தனகாரி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சுரங்கள் தூர்ப்பல்யம், மேகவியாதிகள், புராதனகீல்வாதம், பேதி, சர்ப்பவிஷம், ஆம்லபித்தம் அல்லது புளியேப்பம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மாத்திரை.—இதின் தூளில், 1-விராகனிறை கொடுக்கலாம்.

யோகங்கள்.

சீந்தில்கொடி வெந்நீர் ஊறல் கஷாயம். செய்முறை.—இடித்த சீந்திற்கொடி, பலம்-1; கொத்துமல்லிவிதை, அதிமதுரம், வகைக்கு விராகனிறை-1; எலுமிச்சம்பழத்தோல்; சோம்பு, ரோசாப்பூ, வகை 1-க்கு விராகனிறை-½; கொதிக்கக்காய்ந்த வெந்நீர், புட்டி-½. இவைகளைச்சேர்த்து, மூடி, 1-மணிநேரம் ஊறவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும். **மாத்திரை.**—⅛-¼-ஆழாக்கு அளவு கொடுக்கலாம். (அனுபவமுறை.)

அமிர்தாமலகத்தைலம். செய்முறை.—சீந்தில்கொடி, நெல்லிக்கனி, வகை 1-க்கு பலம்-50 ; ஆற்றுநீர், மரக்கால் 8, ஒரு மரக்காலாகக்காய்ச்சி, வடிகட்டி, அதில் நல்லெண்ணெய், வெள்ளாட்டுப்பால் வகை 1-க்கு படி-2. விட்டு கலந்து, அந்தக் கூட்டில், - கடகரோகிணி லவங்கப்பத்திரி, ஏலம், தாமரை, சந்தனம், அதிமதுரம், பூலாங்கிழங்கு, சிற்றாமுட்டிவேர், கோரைக்கிழங்கு, திராக்ஷை, செங்கழுநீர்க்கிழங்கு, தாமரைக்கிழங்கு, நன்னாரிவேர், -நிலப்பூசினிக்கிழங்கு, கொட்டிக்கிழங்கு, புதியவெட்டிவேர், வகை 1-க்கு விராகனிறை 2: இவைகளை உலக்கையால் இடித்து வஸ்திரகாயஞ்செய்து, சேர்த்து, மிருதுவாய் எரித்து பக்குவத்தில்வடித்துக்கொள்ளவும். **உபயோகம்**-இதைச் சிரசு, செவி, கண்ணு, இவைகளின் ரோகங்கள், திரிதோஷரோகம், கண்ணிருக்கம், பூயாலசகரோகம், நாள்பட்ட உட்சுரம், இவைமுதலியவைகளுக்கு ஸ்நானஞ்செய்துவைக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

அமிர்தசஞ்சீவி சூர்ணம். செய்முறை.—சீந்தில் சர்க்கரை, பலம் 1 ; அதிமதுரம், நெல்லிவற்றல், ஏலம், சீரகம், சந்தனம், லவங்கப்பட்டை, சாதிக்காய், நிலப்பனைக்கிழங்கு, நெருஞ்சிவித்து, இவைகளின் சூர்ணம், வகை 1-க்கு பலம் ¼. இவைகளைக் கலந்துக்கொள்ளவும். **உபயோகம்.**—இதைப் பிரமேகம், மூத்திரக்கிரிச்சிரம், இவை

முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—½-1-விராகனிறை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

சீந்தில் உப்பு. சீந்தில் சருக்கரை. செய்முறை.—சீந்தில் கொடியை நறுக்கி இடித்து நீரிலிட்டு, ஒருநாள் ஊறவைத்து கடைந்து, திப்பியைப்பிழிந்து எடுத்துவிட்டு, வெயிலில் 2-மணிநேரம்வைத்து தெளிந்தபிறகு, நீரை இறுத்துவிட்டு, புதுநீர்விட்டு கலக்கிவைத்து தெளிந்தபிறகு, நீரை இறுத்துவிடவும். இவ்விதமாய் மூன்றுதரம் செய்து, கடைசியில் அடியிலிருக்கிற சருக்கரையை யெடுத்துக்கொண்டு உலர்த்திக்கொள்ளவும். **உபயோகம்.**—இதை மதுமூத்திரரோகம், சுவரங்கள், முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—½-1, விராகனிறை கொடுக்கலாம். (அனுபவமுறை.)

சிமையகத்தி.

இதுவே பேயகத்தி.

செய்கை.—இதற்கு மலகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை மலபந்தம், எச்சிற்றழும்பு, சொறி, தினவு, இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

சீயக்காய்-கொழுந்து.

செய்கை.—இதற்கு வமனகாரி, விரேசனகாரி, ஆகிய இக்குணங்களுண்டு. கொழுந்துக்கு பித்தஹரகுணமுண்டு.

உபயோகம்.—காயை மஞ்சகாமாலை ரோகத்துக்கு, பேதிக்குக் கொடுக்கலாம், கொழுந்தைத் துவையல்செய்து அரோசகத்துக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

சீயக்காய்க்கஷாயம். செய்முறை.—விளைநீக்கிய சீயக்காய் பலம் 4; கொத்துமல்லி, விராகனிறை, 4; அரத்தை, விராகனிறை, 2. இவைகளைச் சிதைத்து ¼-படி வெந்நீரிலிட்டு, 2-மணிநேரம் ஊறவைத்து, வடிகட்டிக்கொள்ளவும். **மாத்திரை.**—½-1, ஆழாக்கு, அளவுகொடுக்கலாம். (அனுபவமுறை.)

சீரகம்.

செய்கை.—இதற்கு உதரவாத ஹாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதைப் பித்தசாந்தி, அரோசகம், வயிற்றுவலி, முகரோகம், பீலீகநோய், சுவாசகாசம், அஸ்மரிரோகம், சீதாக்தக்கிரஹணி, பீனசம், பைத்தியம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மாத்திரை.—½-1, விராகனிறை கொடுக்கலாம்.

யோகங்கள்.

சீரகாதிலேகியம். செய்முறை.—சீரகப்பொடி, கற்கண்டு, வகை 1-க்கு பலம்-10; கரும்புரசம், நார்த்தன்பழரசம், இஞ்சிரசம், எலுமிச்சம்பழரசம், கர்ப்பூரவள்ளிரசம், வகை 1-க்கு பலம்-5. இவைகளை விதிப்படி சேர்த்து, லேகியம் செய்துக் கொள்ளவும். **மாத்திரை.**—½-1, விராகனிறை கொடுக்கலாம். (மைசூர் அரமனை டிஸ்பென்செரி முறை.)

சீரகவடை. செய்முறை.—1-பலம், சீரகத்தோடு தேவையான உப்புசேர்த்து அரைத்து அடைதட்டி, நெய்யில் பொரித்துக்கொள்ளவும். **உபயோகம்.**—வாதபித்த ரோகங்களுக்கு தேனிலாவது, சருக்கரையிலாவது உபயோகிக்கலாம்.

சீரகத்தைலம். செய்முறை.—1-பலம், சீரகத்தை, 1-படி நல்லெண்ணையிலிட்டு காய்ச்சி, சீரகம் ஓடியத்தக்கப்பதத்தில் வடித்துக் கொள்ளவும். **உபயோகம்.**—இதைப்பித்தமயக்கம், நேத்திரரோகம், வாந்திரோகம், தலைவலி, மந்தம், அள்ளநோய் இவைகளுக்கு ஸ்நானஞ்செய்து வைக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

சீரகாதிகிருதம். செய்முறை.—10-பலம், சீரகத்தை, வல்லாரி ரசத்தில், 4-நாள் ஊறவைத்து, உலர்த்தி பசுவின்பாலிலரைத்து. 20 பலம், பசுவின் வெண்ணெயில் கலந்து, ஒருநாள் ஊறவைத்து, காய்ச்சி, அதில் 10-பலம் கற்கண்டும், திரிசுகந்தம், அரைத்தை, அஜமோதம், இவைகளின் சூர்ணம் வகை, 1-க்கு பலம்-½; சேர்த்து கலந்துக் கொள்ளவும். **உபயோகம்.**—இதைப் பித்தம், வயிற்றுவலி, அரோசகம், சர்த்தி, அக்கினிமாந்தியம், விக்கல். இவை முதலியவைகளுக்கு, உபயோகிக்கலாம். **மாத்திரை.**—2-4, விராகனிறை கொடுக்கலாம். (மூலிகசங்கலிதம்.)

பாவன சீரகம். செய்முறை.—ஆய்ந்து சுண்ணம்பு நீர் தெளித்து தேய்த்து புடைத்த உமியை நீக்கி சுத்திசெய்த சீரகம், 10-பலம்; 1-ஆழாக்கு புளியாரை ரசத்தில் ஊறவைத்து வெயிலில் உலர்த்திக் கொள்ளவும். பிறகு எலுமிச்சம் பழரசத்திலும், நார்த்தம்பழரசத்திலும், பொன்னாங்காணி ரசத்திலும், முசுமுசுக்கைரசத்திலும் கர்ப்பூரவள்ளி ரசத்திலும், புளிமாதுளம் பழரசத்திலும், மணத்தக்காளி ரசத்திலும், டை முறையாகவே ஊறவைத்து, கடைசியில், இஞ்சிரசத்தில், 2-பலம் சயிந்தலவணம் கரைத்து அதில் ஊறவைத்து உலர்த்திக்கொள்ளவும். **உபயோகம்.**—இதைவயிற்றுவலி, அசீர்ணம் முதலியரோகங்களுக்குக் கொடுக்கலாம். **மாத்திரை.**—½-1 விராகனிறை கொடுக்கலாம்.

சீர்கஸ்த்து-மேரு.

செய்கை.—இதற்கு மலகாரி, விரேசனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை மலபந்தத்துக்குக் கொடுக்கலாம்.

மாத்திரை.—1-3, விராகனிறை குழந்தைகளுக்கும், 1-2-பலம் பெரியவர்களுக்கும் கொடுக்கலாம்.

சுக்கு-நாகரம்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, தீபனகாரி, உதரவாதஹாரி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதைவயிற்றுப்புசம், வயிற்றுவலி, நாள்பட்ட கீல்வாதம், தலைவலி, தொண்டைவேதனை, பல்வலி, அசீர்ணம், புளியேப்பம், சுவாசம், காசம், சுடதோஷம், வாதநோய், செவிக்குத்தல், சிரநோய், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மேலும் இந்நோய்க்கென்றும், இந்நோய்க்குத்தகாதென்றும் சொல்ல வருவில்லை. (சிந்தாமணி.)

மாத்திரை.—சுக்குத்தூளில் 10-30, உளுந்து நிறை கொடுக்கலாம்.

யோகங்கள்.

நாகராதிதைலம். செய்முறை.—தோலைச்சீவி கரளைகரளையாக நறுக்கிய மரச்சுக்கு பலம்-10, குடிநீர்ப்பாண்டத்திலிட்டு, 4-மரக்கால் ஆற்று நீர்விட்டு, கமலாக்கினியாக எரித்து, எட்டில் ஒரு பங்காக்கி, தைலபாத்திரத்தில் வடித்து. 1-படி நல்லெண்ணையும், 1-படி பசுவின்பாலும் கூடவிட்டு சிற்றரத்தை, சுக்கு, மிளகு, திப்பிலி, கோரைக்கிழங்கு, மஞ்சிட்டிவேர், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், அதிற்கட்டை, தண்ணீர்விட்டான்கிழங்கு, எருக்கின்வேர்பட்டை, கடகரோகிணி, கோஷ்டம், கொடிவேலிவேர், தேவதாரக்கட்டை, சந்தனக்கட்டை, வெள்ளைக்குங்கிலியம், செவ்வியம், ஆமணக்கின்வேர், பேரீச்சன்காய், தொடிமுந்திரிப்பழம், இந்துப்பு, இவைகளைத் தனித்தனியாய் மிகவும் நண்ணிய பொடியாகச்செய்து, ¼-பலம், வீதம் நிறுத்து, மேல்கூறிய எண்ணெயிலிட்டு சிறியதீயால் எரித்து துழாவி தைலத்தை, மெழுகுபதத்தில் வடித்துக்கொள்ளவும். கஸ்தூரி, குங்குமப்பூ, வகை 1-க்கு ¼-விராக நிறை; நுண்ணியமாய்ப்பொடித்து வடிகலசத்தில், தைலத்தை வடித்து முன்னதாகவே இட்டுவைக்கவும். 1-மாதம் நெற்புடத்தில் வைக்கவும். **உபயோகம்.**—இதை ஆவர்த்தவாதத்துக்குமேல் பூசலாம். பீனசரோகங்களுக்கும், தலைவலிகளுக்கும், நசியமிடலாம்; பல்லரணை, பற்களின் வேரைப்பற்றிய வாதநோய், இவைகளுக்கு வாயில்விட்டு கொப்பளிக்கலாம்; கர்ணசூலைக்குக் காதுக்குள் துளிவிடலாம்; சுவரம், கோழைக்கட்டு இவைகளுக்கு ஸ்நானஞ்செய்து வைக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

இஞ்சிந்தைலம். செய்முறை.—இஞ்சிச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, கையாந்தகரைச்சாறு, நல்லெண்ணை, பசுவின்பால், வகை, 1-க்கு 1-படி; சந்தனக்கட்டை, மிளகு, வகை 1-க்கு பலம்-2½; பசும்பால் விட்டரைத்து எண்ணெயிற் சேர்த்து பாகமாகக்காய்ச்சி, வடிகலசத்தில் குங்குமப்பூ விராகனிறை-1; வெட்டிவேர் பலம்-½; சாம்பி

ராணிவிரா-1; இவைகளைப் பொடித்துத்தூவி, இதில் வடித்தெடுத்துக் கொள்ளவும். உபயோகம்.—உச்சந்தலைநோய், தேகக்கடுப்பு, செவி நே[illegible] தலைநோய், பீனசநோய், கபநோய் இவைகளுக்கு ஸ்நானஞ் செ[illegible] வைக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

இஞ்சிலேகியம். செய்முறை.—1-படி பசுவின் நெய்யில், 3-பலம் சீனிசருக்கரை கலந்துகாய்ச்சி கரைந்த பிறகு இறக்கி, அதில் மேல்தோல் நீக்கிய 10-பலம் இஞ்சியை எலுமிச்சம் பழரசத்தால் மிருதுவாகும்படி அரைத்து உலர்த்திய சூரணத்தையும், அரிந்து உப்புகலந்து மோரில் ஊறவைத்து உலர்த்தின பிரண்டை, உலர்ந்தகரிப்பான், பூவரசன்பட்டை, வகை 1-க்கு பலம்-1; வாலுளுவை அரிசி, தாளிசபத்திரி, கடுகு, மல்லி; சித்திரமூலம், கர்க்கடகசிங்கி, குரோசாணியோமம், மிளகு, சீரகம், ஏலம், திப்பிலி, அதிமதுரம், திப்பிலிமூலம், கோஷ்டம், வகை 1-க்கு பலம்-½; இவைகளை யிடித்து வஸ்திரகாயஞ் செய்த சூர்ணத்தையும் தூவி மிஸ்ரமித்துக் கொள்ளவும். உபயோகம்.—இதைப் பித்தவாயு, உஷ்ணம், சாத்திகுன்மம், அரோசகம், விக்கல், அஸ்திசுரம், சந்நி, அசீர்ணவாயு, உப்பிசம் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம் (சாரசங்கிரகம்.)

தயிர்ச்சுண்டிச் சூர்ணம். செய்முறை.—2-படி தயிரில், உப்பு பலம்-7; சுத்திசெய்த சுக்கு பலம்-5; போட்டு இரவில் ஊறவைத்து பகலில் வெயிலில் உலர்த்திக்கொள்ளவும். இவ்விதம் தயிர்ச்சுண்டிப் போகிற வரையில் சுக்கை ஊறவைத்து உலர்த்தியெடுத்து சூரணித்துக் கொள்ளவும். உபயோகம்.—இதை உஷ்ணபேதி, வயிற்றிரைச்சல் உப்பிசம், அசீர்ணம், புளியேப்பம், பசியில்லாமை இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—½-விராக னிறை கொடுக்கலாம். (அநுபவமுறை.)

இஞ்சிஷர்பத்து. செய்முறை.—2-பலம் இஞ்சியைத் துண்டுகளாக்கி, 1-புட்டிவெந்நீரிலிட்டு, 4-மணிநேரம் ஊறவைத்து வடிக்கட்டி, கஷாயத்துக்கு [illegible]ண்டத்தனை னிறை சருக்கரை சேர்த்து, காய்ச்சி மதுபாகத்திலிறக்கி வடிக்கட்டிக்கொள்ளவும்.

வேறுமுறை.—இஞ்சி ரசத்தை இரண்டு மணிநேரம் அசையாமல் வைத்து, தெளிவானரசத்தை இருத்து கொண்டு, அதற்கு இரண்டத்தனை சருக்கரைசேர்த்து, காய்ச்சி மதுபாகத்தில் வடித்துக்கொள்ளவும். மாத்திரை.—1-2, ரூபாய் னிறைகொடுக்கலாம்.

கண்டார்த்திரகலேகியம். செய்முறை.—தோல்நீக்கி கடலைப் பிரமாணம் துண்டித்து உலர்த்தி, பசுவின்நெய்யில் வறுத்துக்கொண்ட இஞ்சி பலம்-10; திரிபலை, அரத்தை, அதிமதுரம், வாய்விளங்கம், சாதுர்ச்சாதம், கொத்துமல்லி, தாளிசபத்திரி, அதிவிடையம், இவைகளின் சூர்ணம், வகை 1-க்கு விராக னிறை 2; திரிசுகந்தம், வகை, 1-க்கு விரா-1; சருக்கரை, பலம் 26; தண்ணீர் பலம் 15, சருக்கரையைப்பாகுசெய்து, தூள்களைச்சேர்த்து பிறகு வறுத்த இஞ்சியைப் போட்டு, 6-பலம் தேன்விட்டு பிசைந்துக்கொள்ளவும். உப

யோகம்.—இதைத் தாப்பலமுள்ள பிரசவித்தஸ்திரீகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2, விராகனிறை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

சௌபாக்கிய சுண்டி. செய்முறை.—2-படி பாலில், ¼-வீசை சருக்கரை கலந்து, பாகுசெய்து, அதில் சுக்கு பலம்-8; வாலுளுவை அரிசி, ஓமம், வாய்விளங்கம், திப்பிலி, மிளகு, ஏலம், கரிசாலை, சதகுப்பை, கொத்துமல்லி விதை இவைகளின் சூர்ணம், வகை 1-க்கு பலம்-1; தூவிகிண்டிக்கொள்ளவும். உபயோகம்.—இதைக் குன்மம், வலி, சூதகவாயு, வயிற்றுப்பொருமல், அசீர்ணம் இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2, விராக னிறை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

நாகராதிலேகியம். செய்முறை.—100-பலம் சுக்கை சிதைத்து, தூணி நீரிலிட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடிக்கட்டி, அந்தக்கஷாயத்தில், 10-பலம், பனவெல்லத்தைக் கரைத்து காய்ச்சி, பாகுபதம் வரும்போது, அதில் ஓமம், கருவேப்பிலை, இவைகளின் சூர்ணம் வகை 1-க்கு பலம்-20; தூவி தேவையான நெய்விட்டு கிண்டி வைத்துக்கொள்ளவும். உபயோகம்.—வாயு ரோகங்கள், அதிசாரம், மந்தாக்கினி, முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2, விராகனிறை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

இஞ்சிரசாயனம். செய்முறை.—½-படி எலுமிச்சம்பழரசத்தில், இந்துப்பைக்கரைத்து, அதில் மேல்தோல் சீவி, பணம்போல் அரிந்த இஞ்சி பலம்-10; போட்டு, 3-நாள் ஊறவைத்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்த சூர்ணத்தையும், திரிகடுகு, திரிபலை, சீரகம், சதகுப்பை, அதிமதுரம், அதிவிடையம், கொத்துமல்லி, ஓமம், தாளிசபத்திரி, லவங்கம், லவங்கப்பட்டை, இவைகளின் தூள் வகை 1-க்கு பலம்-¼; கோஷ்டம் அக்கிராகாரம், பெருங்காயம், இவைகளின் தூள் வகை 1-க்கு பலம்-⅛; இவைகளைக்கலந்து அதில் தேன், நெய்வகை, 1-க்கு படி, ¼-விட்டு நன்றாய்ப் பிசைந்து வைத்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைக் குன்மம், அசீர்ணம், முதலிய வாயுரோகங்களுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2, விராகனிறை கொடுக்கலாம்.

சுண்ணாம்புத்தண்ணீர்.

செய்முறை.—2-பலம், தாளித்த சுண்ணாம்பை கல்லடைப்புள்ள ஒரு குப்பியிலிட்டு, 6½-புட்டி தண்ணீர் விட்டு, 2-3, நிமிஷம் செவ்வையாகக் குலுக்கி, 1-2, மணிநேரம் சென்றபிறகு, தெளிந்த நீரை யிறுத்துக்கொண்டு பச்சைவர்ண புட்டியிலிட்டு, காற்றுபுகாமலடைத்துக் கொள்ளவும்.

செய்கை.—இதற்கு ஆம்லநாசகாரி, வியதாபேதகாரி, சங்கோசனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—வயிற்றில் புளிப்பு, அக்கினிமாந்தியம், அசீர்ணபேதி, விரணங்கள், சர்மரோகங்கள் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—$\frac{1}{8}$-$\frac{3}{4}$, ஆழாக்கு அளவுகொடுக்கலாம்.

யோகம்.

சுண்ணாம்புசலத் தயிலம். செய்முறை.—சுண்ணாம்பு சலம், தேங்காய் எண்ணெய், சமனாய்ச்சேர்த்து குலுக்கிக்கொள்ளவும்.

உபயோகம்.—இதை நெருப்பு, வெந்நீர் இவைகளால் உண்டாகிற விரணங்களுக்குப் போடலாம். (இங்கிலீஷ்முறை.)

சுண்டைக்காய்.

செய்கை.—இதற்கு கபஹரகாரி, கிருமிநாசகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை மார்ச்சளி, கிருமிரோகம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.—சுண்டைக்காய் வற்றலால், பித்த அரோசகம், மலக்கிருமி, கிரகணி, ஆசனத்துவாரச் சிதக்கட்டு, இவைபோம்; உள்ளிற் பசியுண்டாம். (சிந்தாமணி.)

சுருளுப்பட்டை.

இதுவே செங்கத்தாரிப்பட்டை; வேப்பாடம்பட்டை.

உபயோகம்.—இதைச் சொறி சிரங்குக்கு உபயோகிக்கலாம்.

சுர இலை.

செய்கை.—இதற்கு மூத்திரவர்த்தனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை நீர்க்கோவைக்கு உபயோகிக்கலாம்.

செண்பகப்பட்டை.

செய்கை.—இதற்கு சுரஹாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதைச் சீதசுரத்துக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

செண்பகப்பட்டைக் கஷாயம். செய்முறை.—செண்பகப்பட்டை, பலம்-1; தண்ணீர் படி-1. சேர்த்து $\frac{1}{2}$-படிக்குச் சுண்டக்காய்ச்சிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{4}$-ஆழாக்கு கொடுக்கலாம். (இங்கிலீஷ்முறை.)

செப்புநெரிஞ்சி—நெரிஞ்சல்.

செய்கை.—இதற்கு மூத்திரவர்த்தனகாரி, சினிக்தகாரிகுணங்களுண்டு.

உபயோகம்.—இதைச்சுவரம், இருமல், பிரமேகம், நீர்க்கடுப்பு, இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

75

செம்பை இலை.

உபயோகம்.—இதைக் கட்டிகள், வீக்கங்கள் முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

செம்மரம். வர்த்தங்கிசக்கை. சாயமரச்சக்கை.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரி, பலகாரி, சுரஹாரிகுணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சுவரங்கள், தூர்ப்பலம், நாள்பட்டபேதி, சீதபேதி, கர்ப்பப்பிரமேகம் இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—சக்கைத்தூளில், 1-விராகனெடை கொடுக்கலாம்.

யோகம்.

செம்மரச்சக்கைக் கஷாயம். செய்முறை.—சக்கை பலம்-1; நீர் படி-$\frac{1}{2}$, சேர்த்து மூடி, 15, நிமிஷம் காய்ச்சி இறக்கி, 1-விராகனெடை, லவங்கப்பட்டைசேர்த்து, குளிர்ந்தபிறகு வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{4}$-$\frac{1}{2}$, ஆழாக்கு கொடுக்கலாம். (இங்கிலிஷ்முறை.)

செருப்படை.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, குணமுண்டு.

உபயோகம்.—இதை வாதகோபம், மந்தாக்கினி, வெள்ளை வீழ்தல், ஆகிருஷ்ண ஸ்தம்பனவாதம், சூலை, குன்மம் இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

சேராங்கொட்டை.

செய்கை.—இதற்கு விரணகாரி, வியதாபேதகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைக் கருங்குஷ்டம், புழு, க்ஷயம், சில்பிடிப்பு, சிரங்கு, சர்மதிமிர், மஹாவாதம், வாதகுன்மம், உள்மூலம், விரணம், நாணுக்கடி, வீரியநஷ்டம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம. (சிந்தாமணி.)

சேராங்கொட்டை சுத்தி. செய்முறை.—சேராங்கொட்டையைமூக்கு வெட்டி, புதுக்கல் சுண்ணாம்புக்குள் வைத்து, புளித்த தண்ணீர்விட்டு, 6-7, தரம் நீற்றி, சுத்த ஜலத்தில் கழுவி பிறகு, சாணிப்பாலிலும், புளியிலைக் கஷாயத்திலும், புரசம்பூக் கஷாயத்திலும், தனித்தனியே வேகவைத்து, எடுத்துக் கொள்ளுவதே சுத்தி. (சாரசங்கிரகம்.)

வேறுமுறை.—சேராங்கொட்டையை எருமைச்சாணியில் 7-தரம் அவித்து பிறகு, புளியிலை ரசத்திலும், பாலிலும், கற்றாழை ரசத்தி

லும், இளநீரிலும், ஒவ்வொருநாள் அவித்துலர்த்திக்கொள்ளுவதே சுத்தி. (சாரசங்கிரகம்.)

யோகங்கள்.

பல்லாதகிலேகியம். செய்முறை.—சுத்திசெய்த சேராங்கொட்டை, 1; பறங்கிப்பட்டை, 1; திரிகடுகு, திரிசுகந்தம், திரிமஞ்சள், ஓமத்துவயம், சீரகத்துவயம், சிற்றரத்தை, கொத்துமல்லி, சித்திரமூலம், தான்றிக்காய், சிறுதேக்கு, வகை-1-க்கு-பலம்-$\frac{1}{2}$; குங்குமப்பூ, கஸ்தூரி, கோரோசனை, வகை-1-க்கு-பலம் வீசம். எள்ளு, வெள்ளுள்ளி, கர்ச்சூரம் வகை 1-க்கு பலம்-1; வெல்லம், பலம் 10; நெய், தேன், வகை-1-க்கு-பலம்-$\frac{1}{2}$, இவைகளைப் பங்கு கணக்காய் நிறுத்தெடுத்து, கல்லுரலிலிட்டு, மெழுகுபோ லிடித்துக் கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{2}$-1. விராகனிடை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

பல்லாதகிகிருதம். சேராங்கொட்டைநெய். எரிமுகிநெய். உபயோகம்.—தடிப்பு, பறங்கிப்புண், கருங்குஷ்டம், வெள்ளைகுஷ்டம், கருஞ்சொறி, கரப்பான், திமிர்வாதம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்- சுக்கிலவிருத்தியும், கர்ப்போற்பத்தியும் உண்டாகும். (சிந்தாமணி.)

பல்லாதகிதைலம். செய்முறை.—பாதாளயந்திர முறையாய்ச் செய்து சேகரித்த சேராங்கொட்டை எண்ணெய் 16-பலம். தாளகம், கந்தகம், மனோசிலை, கோஷ்டம், ஆடாதோடை, கையிந்தலவணம், கப்புமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், வகை 1-க்கு $\frac{1}{4}$-பலம். இவைகளைச் சேர்த்து, காச்சிக்கொள்ளவும். உபயோகம்.—இதைக் கண்டமாலை, குஷ்டம், விரணம், இவைகளுக்கு மேலுக்குத் தடவலாம். (வைஷஜகல்பம்.)

சோம்பு.

செய்கை.—இதற்கு உதரவாதஹாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை வயிற்றுவலி, சுவரம், அஜீர்ணம், வயிற்றுப்பிசம், இருமல், சுவாசரோகம், அதித்தும்மல், பீனசம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மாத்திரை.—10-30-உளுந்தெடை கொடுக்கலாம்.

யோகங்கள்.

சோம்புத்தைலம். செய்முறை.—சோம்பை வாலையிலிட்டு வடித்து எடுத்துக்கொள்ளவும். மாத்திரை.—2-8, துளிசருக்கரையிலிட்டுக்கொடுக்கலாம்.

சோம்புத்திநீர். செய்முறை.—ஓமத்திநீர் வடிப்பது போலவே இதையும் வடித்துக்கொள்ளவேண்டியது. மாத்திரை.—$\frac{1}{8}$-$\frac{1}{4}$ ஆழாக்கு அளவுகொடுக்கலாம்.

சோயிக்கிரை.

செய்கை.—இதற்கு உதரவாதஹாரி, சாடராக்கினி வர்த்தனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, அக்கினிமாந்தியம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

தகரம்.

செய்கை.—இதற்கு கிருமிநாசகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதைக் கிருமிரோகத்துக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—$\frac{1}{2}$-1-பலம் தேனில்கலந்து சிலநாள் காலையில் கொடுத்து, பிறகு பேதிக்குக்கொடுத்தால், கிருமிகள் வெளிப்பட்டுவிடும்.

தக்கோலம்.

செய்கை.—இதற்கு சீதளகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதைச் சுவரம், பாண்டு, இருவித ஆசியவாதங்கள், வீரிய நஷ்டம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

தண்ணீர். சலம். நீர்.

செய்கை.—இதற்கு சீதளகாரி, சலவர்த்தனகாரி, குணங்கள் உண்டு.

உபயோகம்.—இதைத் தேகஉஷ்ணம், வெட்டுக்காயங்கள், அவைகளால் காணுகிற இரத்தப்பெருக்கு, சொறி, இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

வெந்நீர். உபயோகம்.—இதை நெற்றிநோவு, புளி எப்பம், சுவரம், காசம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.—இரும்புகெண்டி வெந்நீர்.—இது பாண்டுவை நீக்கும்; தாதுவை விருத்தியாக்கும்; நரம்புகளுக்குப் பலத்தையும், தேகத்துக்கு சுகத்தையுமுண்டாக்கும். (சிந்தாமணி.)

தண்ணீர்விட்டான் கிழங்கு—சதாவெரி.

செய்கை.—இதற்கு மூத்திரவர்த்தனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை மூத்திரதோஷங்களுக்கும், வெள்ளைக்கும், உட்சூடுக்கும் உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

யோகம்.

சதாவெரிகிருதம். செய்முறை.—தண்ணீர்விட்டாங் கிழங்கு ரசம், படி-12; சிலைப்பனைக்கிழங்கு, நெல்லிக்காய், கலியாணப்பூசினி, கரும்பு, இவைகளின் ரசம், வகை 1-க்கு படி, 1; பசுவின் நெய், படி 4; இளநீர், பசும்பால், வாழைத்தண்டுரசம், வகை 1-க்கு படி $\frac{1}{2}$. ஒன்றாய்க்கலந்து, திரிகடுகு, திரிபலை, வெட்பாலையரிசி, சாதுர்ச்சாதம், சீரகம், விலாமிச்சம்வேர், அதிமதுரம், கூகைநீர், திராக்ஷை, பேரீச்

சன், இந்துப்பு, ஓமம், கோரைக்கிழங்கு, சிறுதேக்கு, கோஷ்டம், சந்தனம் வகை 1-க்கு கழஞ்சி, 3. அரைத்துபோட்டு காய்ச்சி வடித்துக் கொள்ளவும். **உபயோகம்.**—இதை மூத்திரப்பாடீர, நீர்க்கடுப்பு, எலும்புருக்கி, கைகால் எரிவு இவைகளுக்கு உபயோகிக்கலாம். தேக புஷ்டியும், தாதுவிருத்தியும் உண்டாகும். **மாத்திரை.**—1-2, ரூபாய் எடை கொடுக்கலாம். (மூலிகசங்கலிதம்.)

தமரத்தம்பழம்—தந்தசடம்.

செய்கை.—இதற்குப் பித்த சமனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை வாதசிலேஷ்மதொந்தம்; வமனம், குரள் கம்மல், நேத்திரரோகம், சுக்கிலநஷ்டம், பித்தகோபம், சிரஸ்த்தாப ரோகம், சித்தப்பிரமை இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

தர்ப்பூசிப்பழம்.

செய்கை.—இதற்குச் சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை நீர்ச்சுருக்கு, அத்தியுஷ்ணம், தாகம் இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

தழுதாழை இலை.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை மேக வாயுகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

தாமரைப்பூ-செங்கழுநீர்ப்பூ-அல்லித்தாமரை.

செய்கை.—இதற்கு சீதளகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை உஷ்ணம், ஔஷதவெப்பம், உட்சூடு இவை முதலியுவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

தாமரைப்பூ ஷர்பத். செய்முறை.—6 பலம் உலர்ந்த தாமரைப் பூவை, 1½-படி வெந்நீரிவிட்டு, 12-மணிநேரம் ஊறவைத்து, வடிக்கட்டி, அதில் 1-வீசை சருக்கரைசேர்த்து, மதுபாகமாய்க் காய்ச்சி, வடிக்கட்டிக்கொண்டு, ½-பலம் பந்நீர்விட்டு கலந்துக்கொள்ளவும். **உபயோகம்.**—இதை நீர்க்கட்டு, மலக்கட்டு, காங்கை, மூலச்சூடு இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—1-துலாமெடை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

தாம்பரம்-செம்பு.

தாம்பிரசுத்தி. செய்முறை.—தாம்பரத்தை அடித்து தகடு செய்து; பில்லைகளாய்க் கத்தரித்துக்கொள்ளவும். கோழிமுட்டைத்தோல் பலம்-1 ; மஞ்சள், வெங்காரம், க்ஷாரம், பூரம், வெடியுப்பு, வீரம், சீனம், பூநீர்சுண்ணம், வகை-1-க்கு கழஞ்சி 1, இவைகளை ஒரு மூசையிலிட்டுருக்கி, உருகும்போது. அதில் மேற்படி தாம்பரபில்லைகளை ஒவ்வொன்றாய்க் கொடுக்கவும். பிறகு அவைகளை மறுமூசையிலிட்டு உருக்கி, எலுமிச்சம்பழச்சாறு, முலைப்பாலு, இவைகளால் சுருக்கேற்றி எடுத்துக்கொள்ளுவதே சுத்தி. (சாரசங்கிரகம்.)

யோகங்கள்.

தாம்பரபஸ்பம். செய்முறை.—சுத்திசெய்த தாம்பரம், 12-ரசம், கந்தகம், தாளம், வகை-1-க்கு 8 பங்குகணக்காய் எடுத்து, வெள்ளெருக்கம் பாலாலாட்டி பில்லைசெய்து, காயவைத்து ஓட்டிலிட்டு சீலைமண்செய்து, கஜபுடம் போட்டு பிறகு, சத்திச்சாரணைச் சாற்றால், 1-நாளாட்டி முன்போல் புடம்போட பஸ்மமாகிவிடும். (சாரசங்கிரகம்.) **உபயோகம்.**—இதைக் குன்மங்கள், பெருவியாதி, மூர்ச்சை, சுவாசம், இவைகளுக்குக் கொடுக்கலாம். (சிந்தாமணி.) **மாத்திரை.**—¼-½, உளுந்துஎடை கொடுக்கலாம்.

தாம்பரசிந்தூரம்.—2-பங்கு தாம்பரத்துடன், 1-பங்கு ஆக்சிஜென் என்கிறவாயு சேர்ந்தால் சிந்தூரமாகும்.

துரிசு மயில் துத்தம். செய்கை.—இதற்கு தார்ட்டியகாரி, சங்கோசனகாரி, ஆகிய இக்குணங்களுண்டு. மாத்திரையில் அதிகமானால் விஷமிக்கும். விரணங்களுக்கும் போட்டால் தின்றுவிடும். **உபயோகம்.**—இதை நாள்பட்ட சீதபேதி, பேதி, நடுக்குவாதம், காக்கைவலி, சூதகசந்நி, பிரமேகம், சீழ்க்கண்ணோவு, நாள்பட்ட சர்மரோகங்கள், ஆராத்தவிரணங்கள், இரத்த ஒழுக்கு, துர்மாமிசவளர்த்தி, அமரம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—¼-2, உளுந்து எடைகொடுக்கலாம்.—4-12, உளுந்து எடைகொடுத்தால் வாந்தியாகும்.

துரசுசீலை. செய்முறை.—துரிசைப் பொடித்து, நீரில் கலந்து, அதில் மெல்லிய சீலையை நனைத்து உலர்த்திக்கொள்ளவும். இதை துர்மாமிசம் வளர்ந்த விரணங்களுக்கு உபயோகிக்கலாம்.

தாளிசபத்திரி.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரி, தீபனகாரி பலகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைப்பேதி, சீதபேதி, துர்ப்பலம், சுவரம், பீனசம், கண்ரோகம், நாள்சென்ற இருமல், இரைப்பு, அரோசகம், சீழ்ப்பிரமேகம், அஜீர்ணம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மாத்திரை.—½–விராக னிறை கொடுக்கலாம்.

யோகங்கள்.

தாளிசபத்திரிசூர்ணம். **செய்முறை.**—தாளிசபத்திரி, 8; மிளகு, 4; சுக்கு, 2; வால்மிளகு, 1; சருக்கரை-15. இவைகளைப் பங்கு கணக்காய் நிறுத்து, கலந்து அரைத்துக் கொள்ளவும். **செய்கை.**—இதற்கு தீபனகாரி, உஷ்ணகாரி, வாதஹாரி குணங்களுண்டு. **உபயோகம்.**—இதை அக்கினிமாந்தியம் முதலியவயிற்று ரோகங்களுக்கு உபயோகிக்கலாம் **மாத்திரை.**—1. துலாம் கொடுக்கலாம்.

தாளிசபத்திரிவடகம். **செய்முறை.**—தாளிசபத்திரி, 8; திரிகடுகு திரிசுகந்தம், திருபலை, திரிநிம்பம், சாதுர்ச்சாதம், ஷை யோகங்களில் ஒவ்வொன்றுக்கு, 1; வெல்லம், 7. இவைகளின் தூள்களைப்பங்கு கணக்காய் நிறுத்தெடுத்து முறைப்படிசேர்த்து கெச்சக்காய்மாத்திரம் உண்டைகள்செய்து உலர்த்திக்கொள்ளவும். **உபயோகம்.**—இதைப் பழய சுவரங்கள், அக்கினிமாந்தியம், தூர்ப்பலம் இவைகளுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—1-வடகத்தைப்பொடித்து தேனில் கலந்துக் கொடுக்கலாம். (மரிபண்டிதர் முறை.)

தாழம்பூ-விழுது.

செய்கை.—தாழம்பூவுக்கு தீபனகாரிகுணமுண்டு. விழுதுக்கு, விந்துவையும், ரத்தத்தையும் பிரகாசப்படுத்துகிற குணமுண்டு. சோபையையும் நீக்கும். (சிந்தாமணி.)

தான்றிக்காய்-தானிக்காய்.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை மேகவிரணங்களுக்கு இழைத்துப்போடலாம். அநேக யோகங்களில் சேருகின்றது.

திக்காமல்லி-டிக்காமல்லி.

செய்கை.—இதற்கு பூதிகந்தநாசகாரி, கிருமிநாசகாரிகுணங்களுண்டு.

உபயோகம்.—இதை எண்ணெயுடன் சேர்த்து அழிவிரணங்களுக்குப் பூசலாம். கிருமிகளும் சாகும்.

திப்பிலி.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி கபஹாரி, உதரவாதஹாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை நெஞ்சுநோய், பீனசம், காசம், சுவாசம், அருசி, வயிற்றுப்பிசம், கிரஸ்தாபம், மூர்ச்சை, சுவரம் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மாத்திரை.—¼–விராகனிறை கொடுக்கலாம்.

யோகங்கள்.

பிப்பல்லியாதி லேகியம். **செய்முறை.**—திப்பிலி 10; சுக்கு, அரத்தை, கடுக்காய், ஓமம், சீரகம், கொத்துமல்லி, இவைகளின் சூர்ணம், வகை 1-க்கு 1; வெல்லம் 16; தேன், 4 இவைகளை ஷை பங்கு கணக்காய் நிறுத்தெடுத்து, முறைப்படி லேகியம் செய்துக் கொள்ளவும் **உபயோகம்.**—இதைக் காசம், சுவாசம், வயிற்றுப்பிசம், அக்கினிமாந்தியம், இவைகளுக்குக் கொடுக்கலாம். **மாத்திரை.**—½–1 விராகனிறை கொடுக்கலாம்.

ஷை முறையை, ரஸாயனமாகவாவது, வடகமாகவாவது செய்துக்கொள்ளலாம். அவைகளுக்கு முறையே "பிப்பல்லியாதிரசாயனம்" "பிப்பல்லியாதிவடகம்" என்று பேர்பெறும்.

திப்பிலிமூலம்.

இதுவே மோடி; கண்டத்திப்பிலி; நறுக்குத்திப்பிலி; நறுக்குமூலம்; தன்மூலம்; திப்பிலிக்கட்டை; தேசாவரம்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, கபஹாரி, சுவரஹாரி; குணங்களுண்டு.

உபயோகம்.—இதை மூர்ச்சை, காசம், பிரமேகம், சுரக்கினிரோகம், சரீரநோவு, சீதசுவரம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மாத்திரை.—¼–½, விராகனிறைகொடுக்கலாம்.

திராக்ஷப்பழம்.

செய்கை.—இதற்கு சினிக்தகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை அரோசகம், தாகம், பித்தாதிகம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகங்கள்.

திராக்ஷாதிகிருதம். **செய்முறை.**—திராக்ஷபழம், 1-வீசை; பால் 1-படி; நெய், வீசை 1; ஏலம், லவங்கம், வால்மிளகு, வகை, 1-க்கு பலம்-1; சருக்கரை, பலம். 120. இவைகளை முறைப்படி சேர்த்து கிருதம்செய்துக்கொள்ளவும். **மாத்திரை.**—2-4-விராகனிறை கொடுக்கலாம். (மூலிகசங்கலிதம்.)

திராக்ஷபழம் ஷர்பத்து. **செய்முறை.**—திராக்ஷ பழரசத்துக்கு இரண்டத்தனை சருக்கரை சேர்த்து, முறைப்படி ஷர்பத்து செய்துக்கொண்டு, கடைசியில் கொஞ்சம் பன்னீர் சேர்த்துக்கொள்ளவும், **உபயோகம்.**—இதைப்பித்தச்சூடு, கைகால் எரிவு, இவைகளுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—1-2, ரூபாய் னிறை கொடுக்கலாம். (சூரசங்கிரகம்.)

திராக்ஷாதிசூர்ணம். செய்முறை.—திராக்ஷை, ஏலம் கொத்துமல்லி, தவாக்ஷரி, திப்பிலி, அதிமதுரம், சீந்தில்சருக்கரை, சடாமாஞ்சி, வால்மிளகு, பேரீச்சங்காய், சீரகம், இவைகளின் சூர்ணம் வகை, 1-க்கு, சமஎடை ; அந்த மொத்தத் தொகைக்குப் பாதிசருக்கரைசேர்த்து கலந்துகொள்ளவும். மாத்திரை.—1-2, துலாம் கொடுக்கலாம். (மூலிசங்கலிதம்)

திருகு கள்ளிப்பால்.

செய்கை.—இதற்கு விரேசனகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதை கஞ்சவாதம், கிரந்தி, பெருவியாதி, கிருமிரோகம், பக்கச்சூலை, கரப்பான் இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

திருநீற்றுப்பச்சை.

இதுவே திருநீற்றுப்பத்திரி, சப்ஜா, ருத்திரசடை.

செய்கை.—இதின் இலைக்கு உஷ்ணகாரி, சுவேதகாரி, குணங்களும்-விரைக்கு சினிக்தகாரி, குணமுண்டு.

உபயோகம்.—விரையை, சீதபேதி, மூத்திரத்தரிப்பு இவைகளுக்கு உபயோகிக்கலாம். இலை ரசத்தை, காதுவலிக்குவிடலாம் ; வாசனைக்காக போஜனபதார்த்தங்களோடு சேர்த்துக்கொள்ளலாம்.

தில்லைமரத்தின்பால்.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதை பக்ஷவாதம், கீல்பிடிப்பு, குஷ்டம், அமரகண்டவாதம் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

துத்தம்.

இதுவே, பால்துத்தம், வெள்ளைத்துத்தம், மடல்துத்தம், சத்து.

செய்கை.—இதற்கு தார்ட்டியகாரி, சங்கோசனகாரி, அங்காரஷண நாசகாரி, வமனகாரி; ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதைக்காக்கைவலி, சுவாசம்- கக்கிருமல், சீதசுரம், காள்பட்டபேதி, சீத்பேதி, பெரும்பாடு, பிரமேகம், கர்ப்பப்பிரமேகம், கண்ணோவு, விரணம், நாள்பட்ட சர்மரோகங்கள், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—1-2, உளுந்தெடை கொடுக்கலாம். 10-30, உளுந்தெடை கொடுத்தால் வாந்தியாகும்.

துத்தி இலை—வேர்.

இதில் அநேகசாதிகளுண்டு ; சிலத்துத்திக்கு குணம் அதிகம்.

செய்கை.—இதற்கு, சினிக்தகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இலையை வேதனைகளுக்கும், வித்திரதிகளுக்கும், மூலரோகத்துக்கும், பிரமேகத்துக்கும், தாகத்துக்கும் உபயோகிக்கலாம்.

யோகம்.

துத்திவேர்கஷாயம். செய்முறை.—துத்திவேர், 4-பலம் ; திராக்ஷபழம், 2-பலம் ; தண்ணீர், 2-படி ; 1½-படியாகச் சுண்டகாச்சி வடிகட்டிக் கொள்ளவும். மாத்திரை.—இதை அடிக்கடி தேவையானமட்டும் குடித்துக் கொண்டுவந்தால், நீர்ச்சுருக்கு, தாகம், இவைகள் நீங்கும். (அனுபவமுள்ள.)

தும்பை.

செய்கை.—இதின் இலைக்கு, உஷ்ணகாரி, கபஹாரி, வமனகாரி, முறைவியாதிரோதி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதை வாதநோய், கிரந்தி, கபரோகம், கீடவிஷங்கள், சீதசுரம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். புஷ்பத்தைக் கண்ணில் விழுகிற பூவுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இலைரசத்தில், 1-5, துளி கொடுக்கலாம். 20-30, துளிகொடுத்தால் வாந்தியாகும்.

துளசி—வேர்—இலை—விரை.

இதுவே திருத்துளசி ; கிருஷ்ணதுளசி ; கருந்துளசி ; ராமதுளசி.

செய்கை.—இதின் இலைக்கு, உஷ்ணகாரி, சுவேதகாரி, கபஹாரி, குணங்களுண்டு. துளசிவிரைக்கு, சினிக்தகாரி, குணமுண்டு.

உபயோகம்.—இதின் இலையின் ரசத்தை, சுரம், இருமல், இவைகளுக்கு உபயோகிக்கலாம். விரையை.—குளிர்ந்த சலத்தில் ஊறவைத்து, பிரசவித்தபிறகு காணுகிறவேதனை, பொடியிருமல், பிரமேகம், உஷ்ணம் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இலையின் ரசத்தில், 60-120 துளி கொடுக்கலாம்.

தூதுவளையிலை- தூதுளை.

செய்கை.—இதற்கு, உஷ்ணகாரி, கபஹாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை இருமல், காதுவலி, இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

தூதுவளைகிருதம். செய்முறை.—தூதுவளை சமூலத்தை, பாலில் அரைத்து, 20-பலம், வெண்ணெயிலிட்டு, 1-நாள் ஊறவைத்து, பதத்துக்குக் காய்ச்சி வடித்து அதில் 10-பலம் சருக்கரையும், திரிபலயோகம், திரிகடுகு யோகம் வகை 1-க்கு பலம், 1-ம் சேர்த்து கலந்துக் கொள்ளவும். உபயோகம்.—இதை இருமல், க்ஷயிருமல், சுவாசம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—$\frac{1}{2}$-1, துலாம் கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

தேங்காய்ப்பால்.

செய்கை.—இதற்கு சினிக்தகாரி, மலகாரி, போஷணகாரிகுணங்களுண்டு.

உபயோகம்.—இதை க்ஷயம், மேககாங்கை, வாய்விரணம், மலபந்தம் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.
மாத்திரை.—$\frac{1}{2}$-$\frac{1}{4}$, ஆழாக்கு கொடுக்கலாம்.

தேங்காய் எண்ணெய். செய்கை.—இதற்கு சினிக்தகாரி குணமுண்டு. உபயோகம்.—இதை ரோமக்ஷயம், க்ஷயரோகம், சர்மரோகங்கள், விரணங்கள், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

தென்னம்பூ. செய்கை.—இதற்கு சங்கோசனகாரி குணமுண்டு. உபயோகம்.—இதைப் பெரும்பாடு, ரத்தபித்த ரோகங்கள், பிரமேகம், சீதபேதி இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

இளநீர் செய்கை.—இதற்கு சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி, குணங்களுண்டு. இதைத் தாகம். தாபச்சுவரம், வெப்பம், வாந்தி, மூத்திரத் கிரிச்சிரம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

நாளிகேரகிருதம். செய்முறை.—இளநீர் படி-4; பால்படி-1; நெய்படி-1. இவைகளைக் காய்ச்சி, அதில், திரிகடுகு, திரிசுகந்தம், சாதுர்சாதம், இவைகளில் யோகம் 1-க்கு பலம் 1; கொத்துமல்லி, சடாமாஞ்சி, சந்தனம், சோம்பு, இவைகளின் சூர்ணம் வகை 1-க்கு பலம் $\frac{1}{2}$; சேர்த்து, திராக்ஷ, கர்ச்சூரம், வகை 1-க்கு பலம் 2- துவைடித்துப்போட்டு, 120-பலம் சருக்கரைசேர்த்து கலந்துக் கொள்ளவும். உபயோகம்.—இதை மூத்திர கிரிச்சிரம், தாகம், பித்தாதிகம் குமட்டல், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—$\frac{1}{4}$-$\frac{1}{2}$-பலம் கொடுக்கலாம். (மூலிகசங்கிரகம்.)

நாரிகேளாஞ்சனம். செய்முறை.—இளநீர் படி-1; முசமுசுக்கைவேர், சரிவாக்காணி, பொன்னாங்காணி, வேப்பன் ஈர்க்கு, திருபலயோகம், அதிமதுரம், மரமஞ்சள், தேத்தாங்கொட்டை, வகை1-க்கு விராகனிடை-2. இவைகளை கஷாயமிட்டு. 2-ஆழாக்குச் சுண்டவைத்து

வடிக்கட்டி பதத்துக்குக் காய்ச்சி, அதில் 1-ஆழாக்கு தேனும், $\frac{1}{2}$—விராகனிடை பச்சகர்ப்பூரமும் சேர்த்து கலந்துக்கொள்ளவும். உபயோகம்.—தலைவலி, கண்ணோவு, இவைகளுக்குக் கண்ணிலிடலாம். (அனுபவமுறை.)

தேள்கொடுக்குப் பூண்டு.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதை விரணங்கள், வீக்கங்கள், நமச்சல், கணமாந்தம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி)

மாத்திரை.—1-2, விராகனிடை ரசம் கொடுக்கலாம்.

தேவதாருகட்டை.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை இருமல், பல்வலி, இரைப்பு, வலி, காதிறச்சல், நடுக்குவாதம், கபச்சுரம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

தேற்றுங்கொட்டை.

செய்கை.—இதற்கு சினிக்தகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதை உள்சூடு, மூத்திரகிரிச்சிரம் பிரமேகம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மாத்திரை.—1-2, விராகனிடை தேய்த்துக்கொடுக்கலாம்.

தேற்றுங்கொட்டைப் பழரசம்.

செய்கை.—இதற்கு வமனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைக் குழந்தைகளுக்குக் காணுகிற மாந்த இரைப்புக்கு, உபயோகிக்கலாம்.

சர்தனபடம். செய்முறை.—தேத்தாங்கொட்டைப் பழங்களைப்பிசைந்து, அதில்வருகிற ரசத்தை, ஒரு தளமான வெள்ளைத்துணிமேல் பரவும்படி தடவி நிழலில் உலர்த்திக்கொள்ளவும். உபயோகம்.—வயதுக்குத் தக்கபடி, $\frac{1}{4}$-$\frac{1}{2}$-1. அங்குல சதுரமாய் இதில் ஒரு துண்டு கத்தரித்து, 1-விராகனிடை முலைப்பாலில், 10-நிமிஷம் ஊறவைத்து. பிசைந்து பிழிந்து நீக்கிவிட்டு, பாலைக்குடிப்பித்தால், உடனே வாந்தியாகும். (மைசூர் ஜனங்கள் வழக்கம்.)

தேன்.

செய்கை.—இதற்கு சினிக்தகாரி, மலகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை, இருமல், வாய்விரணம், விக்கல், கண்விரணம், சுரம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். தீபனம் உண்டாகும், அவுஷதங்களுக்கும் அநுபானமாகிறது.

தொட்டால் வாடி தொட்டார் சுருங்கி.

செய்கை.—இதற்கு கிராஹிகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதை மூலம், குதந்திரம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

நஞ்சறுப்பான். நாய்ப்பாலை. பேய்ப்பாலை.

இதின்வேரைப்பார்க்கிலும், இலையே நல்லது.

செய்கை.—இதற்கு வமனகாரி, சுவேதகாரி, கபஹாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை வயிற்று சூஷியம், சீதபேதி, இருமல், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இலையின் சூர்ணத்தில், 3-5, உளுந்தெடைகொடுக்கலாம். 25-30, உளுந்தெடைகொடுத்தால் வாந்தியாகும்.

நந்தைச்சூரி.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதை மேகரோகங்களுக்கு உபயோகிக்கலாம்.

நரிவிளா. நிலவிளா. குட்டிவிளா.

செய்கை.—இதற்கு சுரஹரிகுணமுண்டு.

உபயோகம்.—இதைத் தாகம், பித்தம், சுவரம் இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

நரிவெங்காயம். காட்டுருள்ளி.

செய்கை.—இதற்கு மூத்திரவர்த்தனகாரி, கபஹாரிகுணங்களுண்டு.

உபயோகம்.—இதை நீர்க்கோவை, இருமல், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—10-15-20, உளுந்தெடை கொடுக்கலாம்.

நவக்ஷாரம்-நவாச்சாரம்.

செய்கை.—இதற்கு வியாதாபேதகாரி, உஷ்ணகாரி குணங்கள் உண்டு.

உபயோகம்.—இதை உப்புசரோகம், யகிர்த்கண்டரோகம், பிலீகரோகம், நீர்க்கோவை, ரத்தகாசம், முகசந்நி, சூரியாவர்த்தவாதம், சூதகக்கட்டு, கக்கிருமல், முறைக்காச்சல், விடாக்காச்சல் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். இதைத் தண்ணீரில் கரைத்து, வீக்கங்கள், ஸ்தனத்தில் காணுகிறவீக்கங்கள்; நிரண்டம், சுளுக்கு, இவை முதலியவைகளுக்கு லேதமாய்ச்செய்து மேலேபோட்டுக்கொண்டுவரலாம்.

மாத்திரை.—5-15, உளுந்தெடை உள்ளுக்குக்கொடுக்கலாம். மேலுக்கு உபயோகப்படுத்த ½-பலம் நவக்ஷாரத்தை, 4 ஆழாக்கு நீரில் கரைத்து, அதில் துணியை நனைத்து நோயுள்ளவிடத்தில் போடலாம்.

நருவிலிப்பட்டை.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைக் கஷாயமிட்டு வாய்விரணத்துக்கு உபயோகிக்கலாம்.

நன்னாரிவேர்.

செய்கை.—இதற்கு பலகாரி, வியதாபேதகாரி, மூத்திரவர்த்தனகாரி, சுவேதகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைத் தூர்ப்பலம், மேகப்புடை, நான்பட்டஇல் வாதம், சர்மரோகங்கள் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—வேரின் சூர்ணத்தில், ½-1, ரூபாய் எடை கொடுக்கலாம்.

யோகம்.

நன்னாரிஷர்பத்து. செய்முறை.—1-பலம் இடித்த நன்னாரிவேரை, 5 பலம் கொதிக்கக் காய்ந்த வெந்நீரிலிட்டு, 4 மணிநேரம், ஊறவைத்து, வடிக்கட்டி, 7-பலம் சருக்கரைசேர்த்து அடுப்பிலேற்றி கரைத்துக்கொள்ளவும். மாத்திரை.—1-2-தலாம் எடைகொடுக்கலாம். (இங்கிலீஷ்முறை.)

நன்னாரிவேர் தரைக்கஷாயம். செய்முறை.—இடித்த நன்னாரிவேர், 1-பலம்; வெந்நீர், 10-பலம். 1-மணிநேரம் ஊறவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—¼-½-ஆழாக்கு அளவு கொடுக்கலாம். (இங்கிலீஷ்முறை.)

நாகதாளி.

உபயோகம்.—இதைச் சங்கமவிஷம், தாவரவிஷம், மஹாவாதரோகம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

நாகமல்லி-நாகமுட்டி.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, வியதாபேதகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதின் விரையையாவது, வேரையாவது பழரஸத்தில் உரைத்து புடைகளுக்கும், தினவுக்கும், உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

நாபி.

இதுவே நாவி; பச்சைநாவி; வச்சநாபி; வசநாபி.

செய்கை.—இதற்கு சமனகாரி, வேதனாசாந்திகாரி, உக்கிரரோகசமனகாரி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதை வேதனை, விரணசந்நி, கீல்வாதம், இருதயரோகம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.—குளிகை யோகங்களில், சேருகின்றது.

நாபிசுத்தி. செய்முறை.—கோமயத்தில் 3-நாள் ஊறவைத்து எடுத்துக்கொள்வதே சுத்தி.

யோகம்.

பைரவிமாத்திரை. செய்முறை.—சுத்திசெய்த நாபி, லிங்கம், பொரித்தவெங்காரம், மிளகுத்தூள், திப்பிலித்தூள், இவைகளைச் சமனிறை எடுத்துக் கலுவத்திலிட்டு, எலுமிச்சம்பழரசம் விட்டுச் செவ்வையாய் 3-நாள் அரைத்து, உளுந்துப்பிரமாணம் குளிகைகள் செய்து உலர்த்திக்கொள்ளவும். உபயோகம்.—இதைத்தாபசுவரம், சிலேஷ்மசுரம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2, உளுந்துன்றை, அல்லது 2-3-4, குளிகைகள் கொடுக்கலாம். (மைசூர் அரமனைடிஸ்பென்சேரிமுறை.)

நாயுருவி-சமூலம்.

செய்கை.—இதற்கு, சங்கோசனகாரி, மூத்திர வர்த்தனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைப்பெரும்பாடு, பேதி, தேள்கொட்டல், நீர்க்கோவை, இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

நாயுருவிகஷாயம். செய்முறை.—நாயுருவி சமூலம், 2-பலம்; ஜலம், [illegible]-படி. [illegible]-படி ஜலத்துக்குச் சுண்டக்காய்ச்சி வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{4}$-ஆழாக்கு கொடுக்கலாம். நாயுருவி சாம்பலை நீர்க்கோவைக்கு சுக்கு கஷாயத்துடன் கொடுக்கலாம். (அனுபவமுறை.)

நாய்த்துளசி. கஞ்சாங்கோரை.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, ஸ்வேதகாரி, கபஹாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை மாந்தம், இருமல், சுவரம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதின் ரசத்தில், 30-60, துளிகொடுக்கலாம்.

நாய்வேளை இலை—நாய்க்கடுகு.

செய்கை.—இவைகளுக்கு உஷ்ணகாரி, சோணகாரி, துவக்ஸ்போடகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதின் இலையை காதுவலி, தலைவலி, சிதசந்நி இவைகளுக்கும், விரையை அரோசகம், வாதநோய்கள், குன்மம், இவ்முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

நார்த்தங்காய்.

செய்கை.—இதற்கு தீபனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைச்சுவரம், பித்தம், தாகம், வாந்தி, அரோசகம், வயிற்றில்காணுகிற எரிச்சல், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகங்கள்.

நாரங்காதி ஷர்பத்து. செய்முறை.—நார்த்தம் பழரசத்திடைக்கு, இரட்டிப்பு சருக்கரைசேர்த்து, காய்ச்சி, பதத்திலிறக்கி வடிக்கட்டிக்கொள்ளவும்.

மாத்திரை.—2-4, விராகனிறை கொடுக்கலாம்.

நாரங்காதிலேகியம். செய்முறை.—நார்த்தம்பழரசம், பலம் 20; இஞ்சிரசம், பலம்-10; சருக்கரை பலம்-30. சேர்த்து காச்சி லேகியபாகம் வந்தபிறகு இறக்கி, அதில் திரிகடுகு யோகம், திரிபலை யோகம் திரிசாத யோகம், வகை 1-க்கு-பலம்-2; சயிந்தலவணம் பலம் 1; சீரகம், பலம்-6, இவைகளின் பொடியைப் போட்டு, 5-பலம் தேன் விட்டு பிசைந்துகொள்ளவும். **உபயோகம்.**—இதை ஆம்லபித்தம், அரோசகம், வாந்தி, அக்கினிமாந்தியம், வாயு, இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—1-2, விராகனிறை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

நாவல் பட்டை.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைச் சீதபேதி, ரத்தபித்தரோகம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

நிமிளை.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரி, சமனகாரி, வியதாபேதகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைக் குன்மம், சூலைஎரிவு, பேதி, கிரகணி, இவைகளுக்கு உள்ளுக்கும், சருமரோகங்கள், மூலைக்காம்பு உதடு இவைகளின் வெடிப்பு, இவைகளுக்கு மேலுக்கும் உபயோகிக்கலாம்.

யோகம்.

நிமிளைபஸ்மம். செய்முறை.—1-பலம், நிமிளையை. எலுமிச்சம்பழரசத்தில் - 5-நாள் ஊறவைத்து, பிறகு செருப்படைரசத்தில் இரண்டுதடவை அரைத்து, புடம்போட்டு, பிறகு, பிரண்டைரசத்தில் இரண்டு தடவை அரைத்து, புடம்போடவும்; வெளுத்துவிடும். (மூலிகைசங்கிதம்.) மாத்திரை.—5-10-உளுந்து நிறைகொடுக்கலாம்

நிர்விஷம்.

செய்கை.—இதற்கு தார்ட்டியகாரி, உஷ்ணகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைத் தூர்ப்பலம், சுரத்தில்காணுகிற தூர்ப்பலம் இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—1-2, உளுந்து நிறை கொடுக்கலாம்.

நில ஆவாரை. நிலவாகை.

செய்கை.—இதற்கு விரேசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை மலபந்தத்துக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதின் தூளில், 10-30, உளுந்துநிறை கொடுக்கலாம்.

யோகங்கள்.

நிலஆவாரைச்சூர்ணம். செய்முறை.—நில ஆவாரைச்சூர்ணம், பலம்-1; சுக்கு, மிளகு, வாய்விளங்கம், ஓமம், சயிந்தியலவணம் இவைகளின் சூர்ணம், வகை, 1-க்கு பலம்-¼ கலந்து, சமன்சருக்கரை சேர்த்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை வயிறுப்பிசம், வயிறுவலி, மலபந்தம் இவைகளுக்குக் கொடுக்கலாம். மாத்திரை.—1-2, விராகனிறை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

நில ஆவாரை வெந்நீர் ஊறல் கஷாயம். செய்முறை.—நிலஆவாரை-1—பலம், சுக்குத்தூள்-30, உளுந்துநிறை; வெந்நீர், 2—ஆழாக்கு. 1-மணிநேரம் ஊறவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—¼-½—ஆழாக்கு அளவுகொடுக்கலாம். (இங்கிலீஷ்முறை.)

நிலத்துத்தி.

செய்கை.—இதற்கு ஸ்னிக்தகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைப் பிரமேகம், சீதபேதி, மூத்திர எரிவு, இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

நிலப்பனங்கிழங்கு-சதாவெரி.

செய்கை.—இதற்குச் சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைப் பிரமேகம், மூத்திர எரிச்சல், பெரும்பாடு இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

சதாவெரிகிருதம். செய்முறை.—சதாவெரியின் ரசம் படி, 12; நெல்லிக்காய் ரசம், பெரும்பூசினிக்காய் ரசம், கரும்பு ரசம், வகை 1-க்குபடி-1; நெய்படி 4; இவைகளைச்சேர்த்து, அதில், திரிகடுகு, திரிபலை, சதுர்ச்சாதம் கொத்துமல்லிவிதை, சீரகம், வெட்டிவேர், அதிமதுரம், திராக்ஷை, பேரீச்சங்காய், இந்துப்பு, ஓமம், கோரைக்கிழங்கு, சிறுதேக்கு, கோஷ்டம், சந்தனம், வகை 1-க்கு கழஞ்சி. 3. அரைத்துப்போட்டு காய்ச்சி, வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—1. கரண்டி அளவுகொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

நிலவிளா-குட்டிவிளா-நறிவிளா.

செய்கை.—இதற்கு, சீதளகாரி, சுரஹாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச்சுவரம், பிரமேகம், பித்தம் இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

நிலவேம்பு. கிரியாத்து.

செய்கை.—இதற்குபலகாரி, தீபனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைத்தூர்ப்பலம், சுவரம்விட்டபிறகு காணுகிற தூர்ப்பலம், நாள்பட்ட சீதபேதி, இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகங்கள்.

நிலவேம்பு வெந்நீர் ஊறல் கஷாயம். செய்முறை.—சிதைத்த நிலவேம்பு, பலம்-1; சிதைத்தகொத்துமல்லி, எலுமிச்சம்பழத்தோல் அல்லது நார்த்தம் பழத்தோல், சோம்பு, அதிமதுரம், வகை-1க்கு-விராகனிறை-1; வெந்நீர் படி-½. இவைகளைச்சேர்த்து 1-மணிநேரம் ஊறவைத்து வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{8}$-$\frac{1}{4}$, ஆழாக்கு அளவுகொடுக்கலாம். (அனுபவமுறை.)

பூநிம்பாதி கலவைச்சூர்ணம். செய்முறை.—நிலவேம்பு 20; சீரகம்-10; எலுமிச்சம்பழத்தோல்; அல்லது நார்த்தம்பழத்தோல்-10; ஏலம்-1; கிராம்பு-1. இவைகளின் சூர்ணங்களை, பங்குக்கணக்காய் நிறுத்தெடுத்து கலந்துக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{2}$-1, விராகனிடைகொடுக்கலாம்.

நீரெட்டிமுத்து. நீரடிமுத்துதைலம்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, வியாதாபேதகாரி, சுவேதகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைக்குஷ்டம், கிராச்சிரங்கு, தினவு, வாதரோகம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—தைலத்தில் 10-30, துளிகொடுக்கலாம்.

நீர்முள்ளி.

செய்கை.—இதற்கு, மூத்திரவர்த்தனகாரி, விரைக்கு சினிக்தகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை நீர்க்கோவை, மூத்திரச்சிக்கல் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகங்கள்.

நீர்முள்ளி கஷாயம். செய்முறை.—நீர்முள்ளி, 1-பலம்; ஜலம் $\frac{1}{2}$-படி. 10-நிமிஷம் காய்ச்சி வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{4}$-$\frac{1}{2}$-ஆழாக்கு கொடுக்கலாம்.

நீர்முள்ளிவிரை வெந்நீர் ஊறல் கஷாயம். செய்முறை.—நீர்முள்ளிவிரை, பலம்-$\frac{1}{2}$. அதிமதுரம், பலம்-$\frac{1}{4}$; வெந்நீர், படி-$\frac{1}{2}$. 2-மணி நேரம் ஊறவைத்துக்கொள்ளவும். மாத்திரை. தேவையான அளவு கொடுக்கலாம்.

நீலம்-நீலி-அவுரி.

உபயோகம்.—அவுரிவேர், வெள்ளை, வயிற்றுநோய், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.) நீலத்தை விரணங்களுக்கு உபயோகிப்பதுண்டு.

நீலாஞ்சனம்.

இதுவே அஞ்சனக்கல், சுருமா, கருவிமிளை.

உபயோகம்.—இதைக் கண்களுக்கு மையிட, உபயோகிக்கிறார்கள்.

யோகம்.

நிலாஞ்சன பஸ்மம். சிருங்கிபஸ்மம். செய்முறை.—அஞ்சனக்கல் சூர்ணம், 1-பங்கு; சீவிய மான்கொம்புத்தூள், 2-பங்கு. இவைகளை ஒரு மூசையிலிட்டு, இடைவிடாமல் கிளறி புகையடங்கி வெள்ளையாய் ஆகிறவரையில் எரிக்கவும். அடியில் நிற்பதைப் பொடிசெய்து ஒரு பக்குவமான மூசையிலிடவும் வெள்ளை நிறமாய் 2-மணி நேரம் இருக்கும்படியாய் தீயைப் படிப்படியாய் அதிகரித்து எரித்து, அடியில் நிற்பதை மெல்லியபொடியாகும்படி அரைத்துக்கொள்ளவேண்டியது. செய்கை.—இதற்கு சுவேதகாரி, வமனகாரி, வியதாபேதகாரி, சுரஹாரி ஆகிய இக்குணங்களுண்டு. உபயோகம்.—இதைச் சுவரங்கள், கீல்வாதரோகம், நாள்பட்ட சர்மரோகங்கள் இவைகளுக்கு உபயோகிக்கலாம், மாத்திரை—3-6. உளுந்துநிறை கொடுக்கலாம். (இங்கிலீஷ்முறை.)

நுணா இலை.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை மந்தத்துக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

நெய்தல்கிழங்கு.

செய்கை.—இதற்கு சீதளகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைப்பித்த எரிச்சல், பிரமேகம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

நெரிஞ்சில்.

செய்கை.—இதற்கு மூத்திரவர்த்தனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைப் பிரமேகம், நீர்க்கடுப்பு, இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

நெரிஞ்சில் கஷாயம். செய்முறை.—நெரிஞ்சில்காய், 2-பலம்; கொத்துமல்லி, 2-விராகனிடை; ஜலம், $\frac{1}{2}$ படி 20-நிமிஷம் காய்ச்சி வடிக்கட்டிக் கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{8}$-$\frac{1}{4}$-ஆழாக்கு கொடுக்கலாம். (அநுபவமுறை.)

நெல்லிக்காய்.

செய்கை.—இதற்கு சீதளகாரி, சங்கோசனகாரி, பித்தசமனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை சுவரம், வாந்தி, அரோசகம், தாகம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—நெல்லிவற்றல் சூர்ணத்தில் 1-2, விராகனிடை கொடுக்கலாம்.

யோகங்கள்.

தாத்ரியாதி வெந்நீர் ஊறல் கஷாயம். செய்முறை.—நெல்லிவற்றல் பலம்-1; அதிமதுரம், விராகனிடை-2; ஏலம், விராகனிடை-1; வெந்நீர் படி-½; இவைகளைச் சேர்த்து, 1-மணிநேரம் ஊறவைத்து வடிகட்டிக் கொள்ளவும். மாத்திரை.—½-¼-ஆழாக்கு அளவு கொடுக்கலாம்.

ஆமலகதைலம். செய்முறை.—நெல்லிக்காய்ச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, செவ்விளநீர், சிறுகீரைச்சாறு, பால், வகை-1-க்கு படி-1; நல்லெண்ணெய், படி, 1½; அதிமதுரம், கோஷ்டம், ஏலம், பூலாங்கிழங்கு, கஸ்தூரிமஞ்சள், சடாமாஞ்சி, வால்மிளகு, சோம்பு, வகை 1-க்கு பலம் 1; இவைகளை, விதிப்படி சேர்த்து, தைலபாகமாய்க் காய்ச்சிக் கொள்ளவும். உபயோகம்.—இதைப் பழைய சுவரத்தின், பித்தாதிகம், உடம்பெரிவு, உஷ்ணம், இவை முதலியவைகளுக்கு, ஸ்நானஞ் செய்து வைக்கலாம். (மூலிகசங்கலிதம்.)

ஆமலகலேகியம். செய்முறை.—நெல்லிக்காய் ரசம் படி-2; இஞ்சிரசம் படி-¼; இளநீர் படி-1; சருக்கரை பலம் 20; வால்மிளகு, அதிமதுரம், நன்னாரிவேர், சீரகம், கொத்துமல்லி, கடுக்காய் ஏலம், சந்தனப்பொடி, இவைகளின் தூள், வகை 1-க்கு பலம்-1; தேன், தேவையானது, இவைகளை விதிப்படிசேர்த்து லேகியஞ் செய்துக் கொள்ளவும். உபயோகம்.—இதைப் பித்தரோகங்கள், உஷ்ணசுரம், உஷ்ணரோகங்கள், எலும்புருக்கி, இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2, விராகனிடை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

நெல்லிக்காய்முறப்பா. செய்முறை.—முதிர்ந்த காய்ப்பட்டமாயிருக்கிற நெல்லிக்காய்கள் தேவையானது பொறுக்கியெடுத்து, 6-ஊசன் முள்ளுகள் கட்டிய கத்தையால், அவைகளை முழுக்கக்குத்தி 6-மணிநேரம் சுண்ணாம்புத் தண்ணீரில் ஊறவைத்து, எடுத்துத்துடைத்து, காய்களின் இடைக்கு இரண்டுபங்கு சருக்கரையைப் பாகெடுத்து அதில்போட்டு, தந்துபாகத்துக்குக் காய்ச்சி இறக்கிக் கொள்ளவும். இரண்டு நாள் பிறகு, பாகம் உடைந்து தண்ணீராய் இருந்தால், மறுபடியும் காய்ச்சி பக்குவப்படுத்திக்கொள்ளவும். உபயோகம்.—இதைச் சுவரம், தாகம், ரத்தபித்தரோகம், வாந்தி, அரோசகம், இவைகளுக்கு, 1-2-3, பழம்கொடுக்கலாம். பழத்தின் மேல் வெள்ளிரேக்குசுற்றி உண்ணக்கொடுப்பதுமுண்டு. (யூனானி முறை.)

நேர்வாளம்-வாளம்.

செய்கை.—இதற்கு உபத்திரவவிரேசனகாரி, உஷ்ணகாரி, சே[illegible]ணகாரி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதை நீர்க்கோவை, அசதிசந்நி, வாதரோகம், உன்மாதம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை. ½-1, உளுந்திடை கொடுக்கலாம்.

யோகங்கள்.

நேர்வாளசுத்தி. செய்முறை.—ஓட்டை நீக்கியபருப்பை பாலில் விட்டு வேகவைத்து, பிளந்து, உள்ளிருக்கிற மூளையை எடுத்து விட்டு உலர்த்திக்கொள்ளுவதேசுத்தி.

ஜோதிரசமாத்திரை இதுவே கோடாசலகுளிகை. செய்முறை.—சுத்திசெய்த நேர்வாளம், விராகனிடை 10; சுத்திசெய்தரசம், கந்தகம், சுத்திசெய்த நாபி, பொரித்தவெங்காரம், திரிகடுகு, திரிபலை, வகை 1-க்கு விராகனிடை-1 இவைகளைக் கரிசலாங்காணி ரசம்விட்டு, 3-நாள் அரைத்து பச்சைப்பயறு பிரமாணம் குளிகைகள் செய்து உலர்த்திக்கொள்ளவும். மாத்திரை.—1-2-3, குளிகைகள் கொடுக்கலாம்.

விரேசநசூடாமணி. செய்முறை.—சுத்திசெய்த நேர்வாளம், ½—கர்சக்கட்டித்தூள், 3; கர்ப்பூரம், 1½; இத்தூள்களை பழரசம்விட்டு அரைத்து உளுந்துப் பிரமாணம் குளிகைகள் செய்து உலர்த்திக்கொள்ளவும். மாத்திரை.—பெரியவர்களுக்கு, 3-10, உளுந்திடை கொடுக்கலாம்.

நொச்சி-நிர்க்குண்டி.

செய்கை.—இதற்கு வேதனைசாந்திகாரி, மூத்திரவர்த்தனகாரி, ருதுவர்த்தனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை மூட்டுநோய், சுவரம், பிரஸவம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். இதின்ரசத்தில் உப்புகலந்து கொடுத்தால் வாந்தியாகும்.

யோகம்.

நிர்க்குண்டித்தைலம். செய்முறை.—நொச்சியிலைச்சாறு, படி 1; நல்லெண்ணெய், படி-1; இவ்விரண்டையும், ஒரு பாத்திரத்தில் விட்டு, சடாமாஞ்சில், கல்லுப்பு, விளையலுப்பு, மண்ணுப்பு, வெடியுப்பு, அட்டுப்பு, தசிசங்கு, திரிபலை, கோஷ்டம், கண்டுபறங்கி, கண்டங்கத்திரிவேர், வகை 1-க்கு பலம்-¼; சாறுவிட்டரைத்து, கரைத்து, எரித்து, பக்குவத்தில் வடித்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை காசம், சுவாசம், க்ஷயம், சிரகடுப்பு இவை முதலியவைகளுக்கு ஸ்நானம் செய்து வைக்கலாம். உள்ளுக்கும் கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

நாபிமாத்திரை. இதுவே பைரவமாத்திரை.—செய்முறை.—கோமூத்திரத்தில் 3-நாள் ஊறவைத்து நிழலிலுலர்த்திக்கொண்ட நாபி, முலைப்பாலில் 3-நாள் ஊறவைத்துக்கொண்ட சாதிலிங்கம்,—பொ

ரித்த வெங்காரம்.—மிளகுத்தூள்.—திப்பிலித்தூள்.—வகை 1-க்கு சமவிடை யெடுத்து, பழரசம்விட்டு,விடாமல் 3-நாள் அரைத்து, தொவரைப்பிரமாணம் குளிகைகள் செய்து உலர்த்திக் கொள்ளவும். உபயோகம்.—இதைச் சுவரங்களுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2-3, குளிகைகள் கொடுக்கலாம். (மைசூர் அரமனை டிஸ்பென்சேரிமுறை.)

பசலைக்கீரை. பசரைக்கீரை.

செய்கை.—இதற்கு சினிக்தகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை வீக்கங்கள், கட்டிகள், நீர்ச்சுருக்கு இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

படிக்காரம்—சீனக்காரம்.

செய்கை.—இதற்குசங்கோசனகாரி, ரக்தஸ்தம்பனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை ரக்த பித்தரோகம், ரத்தப்பெருக்கு, அதிசாரம், குழந்தைகளுக்குக் காணுகிற வாந்திபேதி, கக்கிருமல், கபம்விழுதல், கண்ணோவு, தொண்டைவிரணம், ஈருவிரணம், சீழ் விரணம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—10-20, உளுந்துவிடை உள்ளுக்குக் கொடுக்கலாம்.

பச்சிலை.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, கபஹாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைப் பித்தம், கபம், விரணம், மலக்கிருமி, இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

பச்சைக் கருப்பூரம்.

செய்கை.—இதற்கு சீதளகாரி, சமனகாரி, வியதாபேதகாரி ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சுரம், விரணம், தாகம், கண்வியாதிகள் நாசிரோகங்கள், கீல்வியாதிகள், இவைமுதலியவைகளுக்கு உபயோகப்பட்டுவருகிறது.

மாத்திரை.—1-3, உளுந்துவிடை கொடுக்கலாம்.

யோகங்கள்.

பச்சைக்கருப்பூரவடகம். செய்முறை.—பச்சைக்கருப்பூரம், 1; சந்தனத்தூள், 2; ஏலம், 3; அரத்தை, 4. இவைகளின் தூள்களை, ஷை பங்கு கணக்காய் நிறுத்தெடுத்து, துளசிரசம் விட்டரைத்து, சுண்டக்காய் மாத்திரம் குளிகைசெய்து நிழலில் உலர்த்திக்கொள்ளவும். உபயோகம்.—இதைச் சுரம், இருமல், கீல்வாதம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-குளிகை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.

பச்சைக் கருப்பூராஞ்சனம். செய்முறை.—பச்சைக்கருப்பூரம், 1; சீரகம், 2; தேற்றாங்கொட்டைச் சந்தனம், 3. இவைகளைத் திரிபலை கஷாயத்தில் மைய 2-3, நாள் அரைத்து, நீண்ட குளிகைசெய்து நிழலில் உலர்த்திக்கொள்ளவும். உபயோகம்.—இதைக் கண்ணோய், கண்ணெரிச்சல், சுக்கிரன், இவைகளுக்கு முலைப்பாலிலாவது, தேனிலாவது உரைத்து கண்ணில்மையிடலாம். (அனுபவமுறை.)

பத்திராக்ஷியிலை.

செய்கை.—இதற்கு கஜநாசகாரி குணமுண்டு.

உபயோகம்.—இலையை வதக்கி கட்டிகளுக்கு உபயோகிக்கலாம்.

பப்பளிப்பால்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, கிரிமிநாசகாரி, குணங்கள் உண்டு.

உபயோகம்.—இதைக் கிருமிரோகத்துக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—2-4, விராகனிடை கொடுக்கலாம். இதனுடன் சமன்தேனும், கொஞ்சம் வெந்நீரும்சேர்த்து, கொடுத்து, 2-மணி நேரம் சென்றபிறகு சிற்றாமணக்கெண்ணெயில் எலுமிச்சம்பழ ரசம் விட்டு கலந்துகொடுக்கவும். பேதியில் கிருமிகள் வெளிப்படும்.

பருப்புக்கீரை.

இதுவே கோழிக்கீரை ; பசலைக்கீரை.

செய்கை.—இதற்கு சீதளகாரி; சினிக்தகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சுரம், வேதனை, இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

பவளம்.

செய்கை.—இதற்கு கபஹாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைக் கபரோகங்களுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

பிரவாளபஸ்பம், பவளபஸ்பம். செய்முறை.—எலுமிச்சம்பழ ரசத்தில் பவளத்தை 1-நாள் ஊறவைத்து கழுவி பிறகு, முசல் எலும்புச் சாம்பலால் செய்த மூசையில் வைத்தாவது அல்லது தேள்கொடுக்கு இலை, இலந்தயிலை, சின்னம்மாம்பச்சரிசியிலை,

வேளையிலை, கீழாநெல்லியிலை, இவைகளில் ஒன்றை அரைத்து கவசமிட்டு சீலைமண் செய்தாவது, புடம்போட்டு எடுத்துக்கொள்ளவும். மாத்திரை.—5-10, உளுந்தெடை கொடுக்கலாம். (அநுபவ முறை.)

பறங்கிச்சாம்பிராணி.

இதுவே குங்கிலியம், நறும்பிசின், குமைஞ்சான், குந்துருஷ்கம் குந்தரிகம்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதைக் கபரோகங்கள், விரணங்கள், மேகப்புண், எலும்புரிக்கி, இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மாத்திரை.—15, உளுந்தெடை முதல், 1-விராகனெடைவரையில் கொடுக்கலாம்.

யோகம்.

பறங்கிச்சாம்பிராணி களிம்பு. செய்முறை.—பறங்கிச் சாம்பிராணி, மெழுகு, நல்லெண்ணெய், சமனெடை. சேர்த்து சிறு தீயிட்டுருக்கி வடிக்கட்டிக்கொள்ளவும். உபயோகம்.—இதை ஆறாத விரணங்களுக்கு உபயோகிக்கலாம்.

பறங்கிப்பட்டை.

இதுவே பறங்கிச்செக்கை ; மதுஸ்நிஹம்.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி, தார்ட்டியகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைப் பிரமேகம், சீல்வாதம், நாள்பட்ட சர்மரோகங்கள் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—தினம் நாளில் $\frac{1}{2}$-1. விராகனெடை கொடுக்கலாம்.

யோகங்கள்.

மதுஸ்நிகரசாயனம். செய்முறை.—பறங்கிப் பட்டைத்தூள், 10 ; நன்னாரிவேர்த்தூள், 5 ; திரிகடுகுயோகம், திரிசுகந்தயோகம், திரிசாதயோகம், சீரகத்துவயோகம், அதிமதுரம், நெல்லிவற்றல், வாய்விளங்கம், வகை, 1-க்கு $\frac{1}{2}$; சருக்கரை 40 ; தேன், 10. இவைகளைப் பங்குக் கணக்காய் எடுத்து, விதிப்படி ரசாயனம் செய்துக் கொள்ளவும். உபயோகம்.—இதை மேகவாயு, மேகச்சூடு, சர்மரோகங்கள், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—$\frac{1}{2}$-1. துலாம்னெடை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

பற்பாடகம்.

செய்கை.—இதற்கு சுவேதகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைச் சுரங்களுக்கு உபயோகிக்கலாம். யோக முறைகளில் சேருகிறது.

பனஞ்சாறு—பனையின்மது.

செய்கை.—இதற்கு சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை தேக உஷ்ணம், தாகம், பிரமேகம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

பனங்கற்கண்டு. உபயோகம்.—இதை மூத்திரத்தரிப்பு, உஷ்ணம் தாகம், அம்மைரோகங்களில் காணுகிற வெப்பம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

பனைவெல்லம். உபயோகம்.—இது சிலேஷ்மதோஷம், சந்நிபாதம், அரோசகம் இவைகளை நீக்கும். (சிந்தாமணி.)

பன்றிநெய்.

செய்கை.—இதற்கு ஸ்னிக்தகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைக் கனைமூலம், அக்கி, காயம், சுளுக்கு, இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

பாகல் இலைரசம்.

செய்கை.—இதற்கு கிருமிநாசகாரி, தார்ட்டியகாரி, விரேசனகாரி சுரஹாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைக் கிருமிரோகம், திரிதோஷகோபம், பாதரசதோஷம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மாத்திரை.—1-$\frac{1}{4}$ விராகனெடை தனி கொடுக்கலாம்.

பாஷாணம்.

பாஷாணபேதங்களாவன.—வெள்ளைப் பாஷாணம், தாளகம், மனோசிலை, ஆகிய இவைகளே முக்கியமானவைகளாம். இவைகளின் செய்கை ஒத்திருப்பதால், இவைகளில் ஒன்றை ரோகங்களின்மேல் பிரயோகிக்கலாம். ஆனால் இங்கிலீஷ்வைத்தியத்தில், வெள்ளைப்பாஷாணமும், நாட்டுவைத்தியத்தில் தாளகமும், அதிகமாய் உபயோகப்பட்டுவருகின்றது.

வெள்ளைப் பாஷாணம்.—இதுவே எலிபாஷாணம், சவுரிபாஷாணம், தொட்டிபாஷாணம்.

தாளகம்.—இதுவே அரிதாரம், அரிதளம்.

மனோசிலை.—இதுவே சிவந்த அரிதாரம், மடல் அரிதாரம்.

செய்கை.—பாஷாணங்களுக்கெல்லாம் வியதாபேதகாரி, நாட்டியகாரி, முறை வியாதிரோதி ஆகிய இக்குணங்களுண்டு. பிரமாணம் அதிகமானால் விஷமிக்கும்.

உபயோகம்.—பாஷாணங்களில் ஒன்றை நடுக்கல்சுரம், வாதசூலை, முகசந்நி, சூர்யாவர்த்தவாதம், கக்கிருமல், சுவாசகாசம், நாள்பட்ட கபரோகங்கள், பெருவியாதி, சர்மரோகங்கள், நாள்பட்ட சீல்வாதம், பெரும்பாடு, சர்ப்பக்கடி இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—வெள்ளைப் பாஷாணத்தில் $\frac{1}{20}$, $\frac{1}{12}$ அல்லது சுமார் வீசம்-$\frac{1}{8}$ உளுந்தெடை கொடுக்கலாம்.

யோகங்கள்

சுரகுடாரம். செய்முறை.—வெள்ளைப்பாஷாணம், ரசம், அம்ணிடை நிறுத்தெடுத்து, கிழிக்கட்டி, மிளகுகஷாயத்தில் 2-சாமமெரித்து பிறகு, திரிசுகந்தம் 4-பங்கு ஊமத்தன் ரசம்விட்டு 4-சாமமரைத்து, உளுந்துபோல் குளிகைசெய்துக்கொள்ளவும். **உபயோகம்.** குளிர்சுரங்களுக்கு உபயோகிக்கலாம். (சாரசங்கிரகம்.)

தாளகக்கட்டு. செய்முறை.—வெடியுப்பு 20; சீனம், 20; நவஷாரம், 10; வெங்காரம் 10; இவைகளைப் பங்குக்கணக்காய் நிறுத்தெடுத்து பொடித்து ஒரு கரண்டியிலிட்டு எரித்து உருகிபொங்கும் போது அதில் 5-பங்கு தாளகக்கட்டியைப் போட்டு புரட்டி எடுத்துக்கொள்ளவும். பிறகு சுண்ணாம்புநீரோடு பூநீர்சேர்த்து அரைத்துத் தடவிய துணியால், அதை 7-கவசம் செய்து, உலர்த்தி காடாக்கினியாய் புடமிட்டு எடுத்துக்கொள்ளவும். (சாரசங்கிரகம்.)

தாளகபஸ்பம் செய்முறை.—தாளகம், பலம் 1; படிக்காரம், பலம் 2; இவைகளைக் கவியாணைப்பூசினிரசம் விட்டரைத்து பில்லைசெய்து காயவைத்து, 20-வரட்டியில் புடம்போடவும்; பஸ்மமாகிவிடும். (சாரசங்கிரகம்.)

மனோசிலை மாத்திரை. செய்முறை.—மனோசிலை, 1; திரிகடுகு யோகம், திப்பிலி மூலம், இவைகளின் சூர்ணம், வகை 1-க்கு 16 இவைகளைப் பங்குக் கணக்காய் நிறுத்தெடுத்து, துளசிரசம் விட்டு மைபோல் அரைத்து, சுண்டைக்காய்ப் பிரமாணம், உண்டைகள் செய்து உலர்த்திக்கொள்ளவும். மாத்திரை.—1-2, குளிகைகள் குளிர்சுரங்களுக்குக் கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

பஞ்சபாஷாண சிந்தூரம். செய்முறை.—வெள்ளைப்பாஷாணம், சாதிலிங்கம், ரசகற்பூரம், கந்தகம், காந்தம், இவைகளைச் சமனிடை எடுத்து, குப்பைமேனி ரசத்தில் 4. சாமம் அரைக்கவும். இவ்விதமாய் வெற்றிலை ரசத்திலும், பருத்தி ரசத்திலும், வெள்ளருகு ரசத்திலும், துளசி ரசத்திலும், வேலிப்பருத்தி ரசத்திலும், பொடுதலை ரசத்திலும் அரைத்து, பில்லைசெய்து நிழலில் உலர்த்தி, ஒருபாத்திரத்திலிட்டு மூடி 7-சீலமண்செய்து உலர்த்தி அடுப்பிலிட்டு தீபாக்கினி

88

யாய் 4-ஜாமமெரிக்கவும். பிறகு உடைத்து பார்வையிட மேல்சட்டியில் சிந்தூரம் பற்றியிருக்கும். **உபயோகம்.**—இதைப் பழையசுரங்கள், வெண்குஷ்டம், பெருவியாதி, கஜசர்மம் முதலிய சர்மரோகங்கள், வாதரோகங்கள், கண்டமாலை, மேகவிரணங்கள், கபாலசூலை இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—1-பணவிடை.—(சாரசங்கிரகம்.)

பால்.

செய்கை.—பசுவின் பாலுக்கு போஷணகாரி, சினிக்தகாரிகுணங்களுண்டு.

உபயோகம்.—இதைத் தூர்ப்பலம், சுரம், பிரமேகம், அதிசுவஷ்டரோகம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். சவ்வீரத்தை முறித்துவிடும்.

பாலேடு. **உபயோகம்.**—இதைப் பைத்தியரோகம், பித்த வாந்தி, மூர்ச்சை, தூர்ப்பலம், சுக்கில நஷ்டம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

தயிர்.—பசுவின் தயிர், பசியுண்டாகும்; தாகம், ஆயாசம், சரீர எரிச்சல், இவைகளை நீக்கும். (சிந்தாமணி.)

மோர்.—பசுவின் மோர், பாண்டு, பித்தகோபம், வெப்பம், தாகம், இவைகளை நீக்கும். (சிந்தாமணி.)

வெண்ணெய். **செய்கை.**—இதற்கு சினிக்தகாரி, போஷணகாரி குணங்களுண்டு. **உபயோகம்.**—இதைக் கண்நோய், கண்ணெரிச்சல் பீளைச்சாரல், பிரமேஹம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

நெய். **செய்கை.**—பசுவின் நெய்க்கு சினிக்தகாரி, போஷணகாரி, குணங்களுண்டு. **உபயோகம்.**—இதை தாஹம், வாந்தி, பித்தாதிக்கம், வயிற்றெரிவு, விக்கல், இருமல், மூலரோகம் அதிகுஷ்டரோகம் இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

வெள்ளாட்டுப்பால். **உபயோகம்.**—இதை சுவாசரோகம், இருமல், அக்கினிமாந்தியம், விக்கம், சீதம்கலந்தபேதி, இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

பால்வள்ளி.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி, பலகாரி குணங்களுண்டு

உபயோகம்.—இதை நன்னாரிவேருக்குபதில் உபயோகிக்கலாம்

பாவட்டன்வேர்.

செய்கை.—இதற்கு மூத்திரவர்த்தனகாரி, மலகாரி, குணங்களுண்டு.

பிரண்டை—வச்சிரவல்லி.

செய்கை.—இதற்கு தீபனவர்த்தனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை அக்கினிமாந்தியம், குன்மம், ஆசனத்தினவு, மூளைமூலம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதை நெய்விட்டு வறுத்து அரைத்து கொட்டைப்பாக்குப்பிரமாணம் கொடுக்கலாம். (சிந்தாமணி.)

யோகங்கள்.

வச்சிரவல்லி லேகியம். செய்முறை.—பிரண்டை ரசம் படி 1, இஞ்சிரசம், படி $\frac{1}{4}$; வெல்லம் பலம் 10; கலந்து-பாகுசெய்து அதில்; திரிகடுகுயோகம், பலம் 3; ஓமம் பலம் 1; வெள்ளுள்ளி பலம் 1; பஞ்சலவணயோகம் பலம் 1; திரிபலையோகம் பலம் 2, சீரகம் பலம் 2. இவைகளின் சூர்ணங்களைத்தூவி கிண்டி, 2-பலம் தேன் விட்டு பிசைந்துச்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{2}$-1 விராகனிடை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

பிரமதண்டுப்பால்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை அலசிரோகம், கபஸ்ராவம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

பீதரோகிணி.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை கருவிழிநீலகாசம், கிருஷ்ணமண்டலபடலம், இமையைப்பற்றிய நீர்ப்பில்லம், கிருச்சிரோன் மீலனம், கபஸ்ராவம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

பீநாறி இலை-பட்டை-குதிரைப்புடுக்குமரம்.

செய்கை.—இவைகளுக்கு மலகாரி, சுவேதகாரி, மூத்திரவர்த்தனகாரி, குணங்களுண்டு.

புகை இலை.

செய்கை.—இதற்கு சமனகாரி, அங்காகர்ஷணநாசகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை இசுவுரோகங்கள், கட்டிகள், வீக்கங்கள், சுவாசகாசம், இருமல், வேதனை, நித்திராபங்கம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். வாய்வறட்சி, தாப்பலம், பித்தாதிக்கம், சக்திலக்ஷீணம் இவைகளைப் பிறப்பிக்கும். (சிந்தாமணி.)

புங்கமரவேர்ப்பட்டையின்பால்-பருப்பின் நெய்.

செய்கை.—இவைகளுக்கு வியாதாபேதகாரி, சங்கோசனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—பாலை, வாதக்குடைச்சல், விரணம், புரையோடு கிறவிரணம், இவைகளுக்கும், நெய்யை, கரப்பான், புறை, கிரந்தி, இவைகளுக்கும் உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

புதீனா—புதியனா.

செய்கை.—இதற்கு உதரவாதஹாரி, தீபனகாரி, குணங்கள் உண்டு.

உபயோகம்.—இதை வயிற்றுப்பொருமல், அக்கினிமாந்தியம், அரோசகம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

புத்திரஜீவி விதை.

செய்கை.—இதற்கு சீதளகாரி, சினிக்தகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை சுவரம், வெள்ளை, நீர்ப்பிரமேகம் இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

புரசன் விரை.

செய்கை.—இதற்கு கிருமிநாசகாரி, விரணகாரி குணங்கள் உண்டு.

உபயோகம்.—இதைக் கிருமிரோகம், படர்த்தாமரை, கரப்பான் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—விரையை வெந்நீரில் ஊறவைத்து, தோலை நீக்கி, காயவைத்து பொடித்ததூளில், 20-உளுந்து நிறை சருக்கரையில் கலந்து, 3-நாள் கொடுத்து 4-ம், நாள் பேதிக்குக்கொடுக்க, கிருமிகள் வெளிப்படும்.

புனுகு—புழுகு—புழுகுசட்டம்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, வீரியவர்த்தனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை முகப்பரு, மந்தவாதம், பித்தகபம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

புளி.

செய்கை.—இதற்கு லகுவிரேசனகாரி, சீதளகாரி, சலவர்த்தனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சுவரம், வாந்தி, பித்தரோகம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

தீந்திரிணிதுழம்பு. செய்முறை.—புதுப்புளி, பலம் 6 ; கற்கண்டு பலம் 18 ; தண்ணீர், பலம் 18 ; சொம்பு, சீரகம், கொத்துமல்லி, ஏலம், மூக்கலுப்பு, ரோஜாப்பூ, இவைகளின் சூர்ணம், வகை 1-க்கு பலம் $\frac{1}{4}$; குங்குமப்பூ, பலம் $\frac{1}{8}$; பந்நீர், பலம் 1. புளியைத் தண்ணீரில் கரைத்து வடிக்கட்டி, கற்கண்டைச் சேர்த்து பாகுபதமாய்க் காய்ச்சி இறக்கி ஆறினபிறகு தூள்களைச் சேர்த்து கலந்து, கடைசியில் பந்நீரைச் சேர்த்துக்கொள்ளவும். உபயோகம்.—சுவரத்தில் காணுகிற தாவரக்ஷி, தாகம், அரோசகம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—ஒருவிரலால் எடுத்து நாக்கின்மேல், $\frac{1}{4}$-மணிக்கொருதரம் தடவிக்கொண்டுவரலாம்.

புளியிலை—கொட்டை—பிஞ்சு—பூ.

செய்கை.—புளியிலைக்கு உஷ்ணகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை அவிந்தவிரணம், சோபாரோகம், கண்ணோவு, இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

புளியங்கொட்டைத்தோல். செய்கை.—இதற்குசங்கோசனகாரி குணமுண்டு. உபயோகம்.—இதைச்சுக்கிலமேகம், அதிசாரம் விரணம், மூத்திரக்கடுப்பு, வெள்ளை, இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

புளியம்பிஞ்சு. செய்கை.—இதற்கு சீதளகாரி, சலவர்த்தனகாரி குணங்களுண்டு. உபயோகம்.—இதைப் பித்தாதிகத்துக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

புளியம்பூ. உபயோகம்.—இதை பித்தம், அருசி, வமனம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

புளியாரைக்கீரை.

செய்கை.—இதற்கு சீதளகாரிகுணமுண்டு.

உபயோகம்.—அரோசகம், வாந்தி, தாகம், பித்தமயக்கம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

புன்னையெண்ணெய்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரிகுணமுண்டு.

உபயோகம்.—மகாவாதம், தனுர்வாதம், வலி, விரணம், கிருமி, இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

பூசினிக்காய்—பறங்கிக்காய்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, பூதிகந்தநாசகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—அழிவிரணத்துக்கு பொட்டலிகை செய்துக்கட்டலாம்.

பூசினிவிந்து. செய்கை.—இதற்கு சீதளகாரி குணமுண்டு.

உபயோகம்.—பயித்தியம், பிரமேகம், சரீரஅழலை, இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

பூதகரப்பான் பட்டை.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதைக்கரப்பானுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

பூமிசருக்கரைக்கிழங்கு.

செய்கை.—இதற்குச் சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைப்பிரமேகம், சுவரம், மூலம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

பூவரசு.

செய்கை.—பூவரசுவேருக்கு வியாதாபேதகாரி குணமுண்டு பழுப்பு இலை, பூ, பட்டை, காய், இவைகளுக்கு உஷ்ணகாரிகுணமுண்டு.

உபயோகம்.—பூவரசு வேரை, குஷ்டரோகத்துக்கும், மற்றவைகளைவிரணம், ஊத்தல், வீக்கம், கரப்பான், சிரங்கு, எச்சிற்றழும்பு இவைகளுக்கும் உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

பூனைக்காய்ந்தொறி.

செய்கை.—இதின்காயின் மேலிருக்கிறசுணைக்கு, கிருமிநாசகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதைக்கிருமிரோகத்துக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—காயைத்தேனில் தவைத்து, சுணையைச்சுரண்டி லேகியபதமாக்கிக்கொண்டு, பெரியவர்களுக்கு, 1-விராகனிறையும், குழந்தைகளுக்கு; 1-விராக னிறையும், 3-4, நாள்விடாமல் காலையில் கொடுத்து, பிறகு விரேசனத்துக்குக்கொடுத்தால் கிருமிகள் கூடோடு வெளிப்படும். (இங்கிலீஷ்முறை.)

பெருங்காயம்.

செய்கை.—இதற்கு அங்காகர்ஷணநாசகாரி, கிருமிநாசகாரி, ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சூதகசந்தி, இரைப்பு, மார் அடைப்பு, வயிற்றுவலி, கிருமிரோகம், தந்தரோகம், தேள்விஷம், அஜீர்ணம், குன்மம், சூலை. இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—5-20, உளுந்தளவு குளிகை செய்துகொடுக்கலாம்.

யோகங்கள்.

இங்குவாதிசூர்ணம். செய்முறை.—பெருங்காயம், 1-பங்கு; கருவேப்பிலை, திரிகடுகு, சீரகம், இந்துப்பு, வகை-1-க்கு 8-பங்கு; இச்சூர்ணங்களைச்சேர்த்து அரைத்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை அக்கினிமாந்தியம், விக்கல், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—¼-1, விராகனிடை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

இங்குவாதிலேகியம். செய்முறை.—5-பலம் பெருங்காயத்தை 1-படி நீரிலிட்டு, எட்டொன்றாய்க்காய்ச்சி, வடித்து 4 பலம் வெல்லம்சேர்த்து பாகுசெய்து, அதில் வெள்ளைப்பூண்டு, கடுகு, மிளகு, சுக்கு, இவைகளின் பொடி, வகை-1-க்கு பலம்-1; தூவி நெய்விட்டுக் கலந்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை வாதரோகங்களுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-விராகனிடை கொடுக்கலாம்.

பெருமரம்.

செய்கை.—இதற்குச் சங்கோசனகாரி, தார்ட்டியகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை அதிசாரம், கிரகணி, இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மட்டிப்பால். மட்டுப்பால். பெருமரத்தின்பால்.—இதற்குச்சங்கோசனகாரிகுணமுண்டு. உபயோகம்.—இதைச்சீதபேதி, கபரோகம், சிரஸ்தாபம், சலதோஷம், அருசி, இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

பேதான.

செய்கை.—இதற்குச் சினிக்தகாரி, தார்டியகாரிகுணங்களுண்டு.

உபயோகம்.—இதைச்சீதபேதி, பிரமேகம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

பேதிக்கிழங்கு.

இதுவே ரேவல்சின்னி, வரியாத்துக்கிழங்கு, சீனக்கிழங்கு.

செய்கை.—இதற்கு அக்குவிரேசனகாரி, சலவிரேசனகாரி, சங்கோசனகாரி, தீபனகாரி. ஆகிய இக்குணங்களுண்டு.

உபயோகம்.—இதை குழந்தைகளுக்குக்காணுகிற மலபந்தம், பாண்டுரோகம், அக்கினிமாந்தியம், கர்ப்பிணிகளுக்குக்காணுகிற மலபந்தம், இவைமுதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—தூளில்-20-40, உளுந்தளவிடைகொடுத்தால், பேதியாகும். 3-8, உளுந்தளவிடைகொடுத்தால், தீபனத்தை அதிகரிக்கும்.

பேயத்தி-விரை-பட்டை.

செய்கை.—இவைகளுக்கு வமனகாரி குணமுண்டு.

உபயோகம்.—வமனம் செய்விக்கவேண்டிய ரோகங்களுக்கு இதை உபயோகிக்கலாம்.

மாத்திரை.—விரையில் 1-விராகனிடை கொடுக்கலாம்; பட்டைத்தூளில் 40-60, உளுந்தளவிடை கொடுக்கலாம்.

பேய்ப்புடல்.

செய்கை.—இதற்கு விரேசனகாரி, வமனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சுவரம், காமாலை, மயக்கம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

பேய்மிரட்டி

செய்கை.—இதற்கு சுரஹாரி, சுவேதகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சுவரம், இருமல், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

பேராமுட்டிவேர்.

செய்கை.—இதற்குச் சினிக்தகாரி, சுரஹாரிகுணங்களுண்டு,

உபயோகம்.—இதைச் சுவரம், தாகம், பித்தம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

பேரீச்சம்பழம். பேரீச்சங்காய். கர்ச்சூரம்.

செய்கை.—இதற்கு பித்தசமனகாரி, சுரஹாரி, சீதளகாரிகுணங்களுண்டு.

உபயோகம்.—இதைப் பித்தாதிகம், மூர்ச்சை, சுவரம், தாகம். ரத்தபித்தம், மேகமூத்திரம், அருசி இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகங்கள்.

கர்ப்பூராதிவடகம். செய்முறை.—கர்ப்பூரத்தைப் பிளந்து விதை நீக்கி அதில் மாம்பருப்பு, சுக்கு, இருநாவல்பூ, கசகசா வகை 1-க்கு சமவிடை. இவைகளின் தூள்களை கலந்து அடைத்து, சீலைமண்செய்து, புடம்போட்டு, கவசத்தை நீக்கி அரைத்து, சுண்டைக்காய்ப்பிரமாணம் வடகமாகச் செய்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைப் பேதி, சீதபேதி, இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-3, வடகம் கொடுக்கலாம். (அனுபவமுறை.)

கர்ப்பூராதிகிரதம். செய்முறை.—20-பலம் பேரீச்சன் பழத்தை அரைத்து 1-படி பசுவின்பாலில் கரைத்து அதில், 7-பலம் நெய்சேர்த்து காய்ச்சி பதத்தில் வடிக்கட்டி அதில், ஏலம், நெல்லிவிதை, திப்பிலி, அதிமதுரம், சந்தனம், தர்ப்பூசிவிதை, கொத்துமல்லி, வகை 1-க்கு பலம் ½. இத்தூள்களையும் 3½-பலம் சருக்கரையும் சேர்த்து கலந்துக்கொள்ளவும். மாத்திரை.—1-2, விராகனிடை கொடுக்கலாம். (மூலிகசங்கலிதம்.)

பொடுதலை.

செய்கை.—இதற்குச் சங்கோசனகாரி, கபஹாரி, பலகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சீதபேதி, மந்தபேதி, இருமல், குலநோய், சிலேஷ்மப்பிரமேகம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்; (சிந்தாமணி.)

பொட்டிலுப்பு-வெடியுப்பு-கம்பியுப்பு.

செய்கை.—இதற்குச் சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி. சுவேதகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சுவரம், தாபஜ்வரம், சில்வாதம், ரத்தபித்தம், நீர்க்கோவை, குதகச்சூலை, பிரமேகம், கர்ப்பமேகம், நீர்ச்சுருக்கு, குன்மம், கண்ணோவு, தொண்டைவிரணம், சுவாசகாசம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—10-30, உளுந்தெடை கொடுக்கலாம்.

யோகம்.

பொட்டிலுப்புதிராவகம். வெடியுப்புதிராவகம். கம்பியுப்பு; திராவகம். சங்கந்திராவகம்.—செய்முறை.—வெடியுப்பு பலம்-20 ல் படிகாரம் பலம்-16 ; இவைகளைப்பொடித்து, 8-பலம் கடலைப்புளிப்பில்கலந்து, வாலையிலிட்டு வடித்தால் திராவகம் இறங்கும் ; அதைப் பத்திரப்படுத்திக்கொள்ளவும். செய்கை.—இதற்கு விரணகாரி குணமுண்டு. (சாரசங்கிரகம்.) மாத்திரை.—விளாவின திராவகத்தில், 10-30, துளி தண்ணீரிலிட்டு மேகவியாதிகள், அஸ்மரிரோகங்கள் பிலீகரோகம் இவை முதலியவைகளுக்குக் கொடுக்கலாம்.

92

பொற்றலைக்கையாந்தகரை.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதைக் குன்மம், மந்தப்பார்வை, மந்தபுத்தி, இவைகளுக்கு உபயோகிக்கலாம். சிந்தூரமுறைகளில் சேருகிறது.

பொன்னாங்காணி.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைக்கண் வியாதிகள், வாததோஷம், சூடு, பிலீகம், மூலரோகம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

யோகங்கள்.

பொன்னாங்காணிகிரதம்.—செய்முறை பொன்னாங்காணி ரசம், பால், வகை 1-க்கு, படி-1; நெய், படி-2 ; எலுமிச்சம்பழரசம், படி ½. சேர்த்து காய்ச்சி பதத்தில் வடித்து அதில், அதிமதுரம், கோரோசனம், சாதிக்காய், சாதிபத்திரி, இவைகளின்தூள் வகை 1-க்கு விராகனிடை-1 ; சருக்கரை விராகனிடை-8 ; சேர்த்துகலந்துக் கொள்ளவும். உபயோகம்.—இதை மூலச்சூடு, உஷ்ணம், மேக காங்கை, கை, கால், உடம்பு இவைகளின் எரிவு, வாய்நாற்றம். பிரமேகம் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2, தோலாம் கொடுக்கலாம்.

பத்தூரதைலம். செய்முறை.—பொன்னாங்காணி, கொச்சில், வல்லாரை, துளசி, வெள்ளைப்பூண்டு, அகத்தி, இவைகளின்ரசம் வகை, 1-க்கு படி-2 ; பசுவின்பால், படி-1 ; நல்லெண்ணெய், படி-1. இவைகளை ஒரு பாத்திரத்தில் சேர்த்து, அதில்சந்தனம், மரமஞ்சள், அதிமதுரம், கருஞ்சீரகம், திப்பிலி, வாய்விளங்கம், சிறுதேக்கு, திப்பிலி மூலம், கடுக்காய்ப்பூ, கோஷ்டம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, ஏலம், செவ்வியம் வகை 1-க்கு-விராகனிடை-1; டை பாலால் அரைத்து கரைத்து மிருதுவாக எரித்துப் பதத்தில் வடித்துக் கொள்ளவும். உபயோகம்.—இதைப் பீனசரோகத்துக்கு, 3-நாள் தினந்தினம், சிறுகச்சிறுக சிரசிலிட்டு ஊறவைத்து, பின்பு, 4-6 தினம் விட்டு மறுபடியும் போதுமானநாள்வரையில் இவ்வண்ணமாகச் செய்துக்கொள்ளலாம். அல்லது, 4-நாட்கொருக்கால் ஸ்நானஞ்செய்துக்கொள்ளலாம். அல்லது நசியஞ் செய்துக் கொள்ளலாம். (தைலவருக்கச் சுருக்கம்.)

பொன்னாவரை-பொன்னாந்தகரை.

செய்கை.—இதின் வேரின்பட்டைக்கு சங்கோசனகாரிகுணமும் இலைக்கு விரேசனகாரி குணமும் உண்டு.

உபயோகம்.—வேரின்பட்டையை நீரிழிவு, படர்த்தாமரை, எச்சிற்றழும்பு, விரணம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். விரையை அரைத்து மோரில்கலந்து சொறிசிரங்குக்குப் பூசலாம்.

பொன்னு.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி, தார்ட்டியகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை இருமல், தேகவெப்பு, க்ஷீணசுக்கிலம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மக்கி.

செய்கை.—இதற்கு ஜலவிரேசனகாரி, கிருமிநாசகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை நீர்க்கோவை, மலபந்தம், குதகக்கட்டு, கிருமிரோகம் இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—3-4, உளுந்து விறை கொடுக்கலாம்.

மஞ்சகணை-ஒம்மகளு.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, ஜலவர்த்தனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சுவரம், தாகம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மஞ்சள்.

செய்கை.—இதற்கு உதரவாதஹரகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதை சலதோஷம், கண்ணோவு, விரணம், கட்டிகள், கற்றாழைநாற்றம், அக்கினிமாந்தியம், பித்தம், வாந்தி, வாயு, இருமல், தலைவலி, பிரமேகம், நாசிகாரோகம், வீக்கம், வண்டுகடி இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மஞ்சிட்டி.

செய்கை.—இதற்கு ருதுவர்த்தனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைப் பிரசவித்த பெண்களுக்கு, அழுக்குவிழ உபயோகிக்கலாம்.

மணத்தக்காளியிலை—காய்.

செய்கை.—இதின் இலை ரசத்துக்கு, சலவிரேசனகாரி, மூத்திரவர்த்தனகாரி குணங்களு மணத்தக்காளி வற்றலுக்கு மூத்திரவர்த்தனகாரி குணமும் உண்டு.

உபயோகம்.—இதை யகிர்த்கண்டரோகங்கள், நீர்ப்பாண்டு, மகோதரம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—$\frac{1}{2}$-1, ஆழாக்கு ரசம் கொடுக்கலாம். ரசத்தைச் சுண்டவைத்து மெழுகுபதமான லேகியத்தில், 1-2, விராகனிடை கொடுக்கலாம்.

யோகம்.

மணத்தக்காளிவற்றலின் வெந்நீர் ஊறல்கஷாயம். செய்முறை. ஷை வற்றல் விராகனிடை-4; வெந்நீர் புட்டி-$\frac{1}{2}$; மூடி 1-மணி நேரம் ஊறவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும் உபயோகம்.—இதை நீர்க்கோவை, மூத்திரக்கிரிச்சிரம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—$\frac{1}{2}$-1, ஆழாக்கு அளவு கொடுக்கலாம்.

மண்ணெண்ணெய்—மண்தைலம்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, மூத்திரவர்த்தனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைக் கீல்வாதம், பிரமேகம், சர்மரோகங்கள் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—60 துளி சருக்கரையில் கலந்துக்கொடுக்கலாம்.

மயிர்மாணிக்கம்.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி, மூத்திரவர்த்தனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை வாதரோகங்கள், பிரமேகம், மேகப்புண் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மயில்கொண்டை.

செய்கை.—இதின் இலைக்கு விரேசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை சில ஆவாரைக்குப்பதில் உபயோகிக்கலாம்.

மரஎண்ணெய்.

செய்கை.—இதற்கு மூத்திரவர்த்தனகாரி, வியதாபேதகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைப் பிரமேகம், குஷ்டம், சர்மரோகங்கள் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—30-60, துளிகொடுக்கலாம்.

மரவள்ளிக்கிழங்கு.

இதுவே மரச்சீனி; ஆள்வள்ளி.

செய்கை.—இதற்கு போஷணகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை துர்ப்பலத்துக்கு உபயோகிக்கலாம்.

மருக்காளங்காய்.

செய்கை.—இதற்கு வமனகாரி, கபஹாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச்சுவரம், சீதபேதி, இருமல், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—காய் உள்ளிருக்கிற சதைத்தூளில், 40-உளுந்து நிறைகொடுத்தால் வாந்தியாகும். 15-30, உளுந்து நிறை, சீதபேதிக்குக்கொடுக்கலாம். 2-3, காயை உடைத்து $\frac{1}{2}$-1 ஆழாக்கு தண்ணீரில் ஊறவைத்து, பிசைந்து, வடிக்கட்டிக்கொடுத்தால், 10-நிமிஷத்தில் வாந்தியாகும். இந்த நீரை துணியிலூட்டி உலர்த்தி வைத்துக்கொண்டு வயதுக்குத்தக்கபடி கத்தரித்து, நீரில் கலக்கி பிழிந்து பிள்ளைகளுக்குக் கொடுத்தால் வாந்தியாகும்.

மருக்கொழுந்து.

செய்கை.—இதற்கு பலகாரி, தீபனகாரி, வேதனைசாந்தகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைத் துர்ப்பலம், விரணம், வீக்கம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

மருக்கொழுந்து வெந்நீர் ஊறல் கஷாயம். செய்முறை.—மருக்கொழுந்து, பலம் 1; வெந்நீர், புட்டி—$\frac{1}{2}$. மூடி 1, மணிநேரம் ஊறவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும். **மாத்திரை.**—$\frac{1}{4}$-$\frac{1}{2}$, ஆழாக்கு அளவு கொடுக்கலாம்.

மருதம்பட்டை.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, குணமுண்டு.

உபயோகம்.—இதின் தூளை வாந்திபேதிக்கு, கை, கால்கள் மேல் தேய்க்கலாம்; நசிய மிடலாம்.

மருள்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி குணமுண்டு.

உபயோகம்.—மருளை வதக்கி ரசம் பிழிந்து, காதுவலிக்கு உபயோகிக்கலாம்.

94

மலைதாங்கிப்பூண்டுவேர்—வெற்பேந்தி.

செய்கை.—இதற்கு சினிக்தகாரி, சுவேதகாரி, தீபனவர்த்தனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சுவரம், துர்ப்பலம், மந்தாக்கினி, இவைகளுக்கு உபயோகிக்கலாம். இலையை வதக்கி கட்டிகளுக்கு கட்டினால், சீக்கிரம் பழுத்துடையும்.

மலைவேம்புவேர் - மலைவேப்பன்வேர்.

செய்கை.—இதின் பட்டைக்கு கிருமிநாசகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைக் கிருமிரோகத்துக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

மலைவேம்பு வேர்ப்பட்டை கஷாயம். செய்முறை.—4 பலம் வேரின் பச்சைப்பட்டையை, 1—படி தண்ணீரிலிட்டு, $\frac{1}{2}$—படியாகச் சுண்டக்காய்ச்சிக்கொள்ளவும். **மாத்திரை.**—$\frac{1}{8}$-$\frac{1}{4}$, ஆழாக்கு அளவு கொடுக்கலாம்.

மல்லிகைப்பூ.

செய்கை.—இதற்கு க்ஷீரநாசகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை பால் கட்டிக்கொண்டு வருத்தப்படுகிற பெண்களுக்கு, ஸ்தனங்களுக்குக் கட்டினால், பால்வற்றும்.

மாங்கொட்டைப் பருப்பு-பிஞ்சு-வேரின்பட்டை.

செய்கை.—மாங்கொட்டைப் பருப்புக்கு, கிருமிநாசகாரி, சங்கோசனகாரி குணங்களும்—வேரின்பட்டை, பிஞ்சு, இவைகளுக்குச் சங்கோசனகாரி குணமும் உண்டு.

உபயோகம்.—மாம்பருப்பை, ரத்தமூலம், பெரும்பாடு, மலக்கிருமி இவைகளுக்கும்—வேரின்பட்டையை, சீதபேதிக்கும் உபயோகிக்கலாம். உப்பிலிட்ட மாம்பிஞ்சியை (சூதப்பிஞ்சு) அரோசகம், சர்த்தி இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—தூள்செய்த பருப்பில், 20-30, உளுந்துநிறை கொடுக்கலாம்.

மாசிக்காய்.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரி, தார்ட்டியகாரி, மூறைவியாதிரோதி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை அதிசாரம், கிரஹணி, சீதசுவரம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். அபினி, நாபி, வாந்தியுப்பு, இவைகளி

லொன்றை விஷமிக்கும்படி தின்றவர்களுக்கு, மாசக்காயைக் கொடுத்தால் முறிந்துவிடும்.

மாத்திரை.—10-20, உளுந்து விறை கொடுக்கலாம்.

மாசிபத்திரி

செய்கை.—இதற்கு கிருமிநாசகாரி, பலகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைக்கிருமிரோகம், துர்ப்பலம், அக்கினிமாந்தியம், வீக்கம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதின் சூர்ணத்தில், 20-30, உளுந்துவிறை கொடுக்கலாம்.

மாதுளம்பழம்-தோல்-பிஞ்சு-வேர். தாலிமக்கினி.

செய்கை.—மாதுளம் பழத்துக்கு சீதலகாரி, ஜலவர்த்தனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சுவரம், வாந்தி, தாகம், பித்தம், விக்கல், காவரக்ஷி, அருசி, உஷ்ணம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—பழத்தைப் பிழிந்து ரசமெடுத்து, கற்கண்டுசேர்த்து தேவையானவரையில் கொடுக்கலாம்; சரீரம் குளிர்ச்சியடையும்.

மாதுளம்பழ ஷர்பத்து. செய்முறை.—மாதுளம்பழரசத்துக்கு இரண்டுபங்கு சர்க்கரைசேர்த்து காய்ச்சி பதத்தில் வடிக்கட்டிக் கொஞ்சம் பந்நீர் சேர்த்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைக் சுவரம், அழலை, தாகம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2 தலாம் விறைகொடுக்கலாம்.

மாதுளம்பழத்தோல். மாதுளம்பிஞ்சு. செய்கை.—இவ்விரண்டுக்கும் சங்கோசனகாரி குணமுண்டு. உபயோகம்.—இவைகளைப் பேதி, சீதபேதி இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

மாதுளம்பழத்தோல் கஷாயம். செய்முறை.—2 பலம் மாதுளம் பழத்தோலை இடித்து, 1-புட்டி தண்ணீரிவிட்டு மூடி, 15-நிமிஷம் காய்ச்சி வடிக்கட்டி, குறைந்த ஜலத்துக்குப்பதில் விட்டுக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{4}$-$\frac{1}{2}$, ஆழாக்கு அளவு கொடுக்கலாம். வாய்கொப்பளிக்கிறதற்கும், ஆசனவஸ்தி செய்விக்கிறதற்கும் இது நல்லமருந்து. உள்ளுக்குக் கொடுக்கிற கஷாயத்தில் கிராம்பு, ஏலம், லவங்கம், சாதிக்காய், முதலிய வாசனை பதார்த்தங்களைச் சேர்த்துக்கொண்டால், இனிப்பாய் இருக்கும்.

மாதுளன் வேர்ப்பட்டை. செய்கை.—இதற்கு கிருமிநாசகாரி குணமுண்டு. உபயோகம்.—இதைத் நாடாப்பூச்சி ரோகத்துக்கு

உபயோகிக்கலாம். மாத்திரை.—இதின் தூளில், 10-30, உளுந்து விறை கொடுக்கலாம்.

யோகம்.

மாதுளன்வேர்ப்பட்டைக் கஷாயம். செய்முறை.—2-பலம் வேரின்பட்டையை, 1-படி தண்ணீரிவிட்டு, $\frac{1}{2}$-படிக்குச் சுண்டக்காய்ச்சி, வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{2}$, ஆழாக்குவீதம், வெறும் வயிற்றில், $\frac{1}{2}$-மணிக்கொருதரம் 6, தடவை கொடுத்து, பிறகு பேதிக்குக் கொடுத்தால், கிருமிகள் வெளிப்படும்.

புளிப்பு மாதுளம்பழம்.—இதைச் சுவரத்தில் காணுகிற அரோசகம், பித்தவாந்தி, இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மான்கொம்பு.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி, சுவேதகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை உடம்பெரிவு, அஸ்திமேகம், வீக்கங்கள். இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மிளகரணை.

செய்கை.—இதற்கு பலகாரி, உஷ்ணகாரி, முறை வியாதிரோதி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைத் துர்ப்பலம், சுவரம், அஜீர்ணம், வாயு இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

மிளகரணை வெந்நீர் ஊறல் கஷாயம். செய்முறை.—1-பலம் மிளகரணை வேரின் பட்டையை, $\frac{3}{4}$-படி வெந்நீர்விட்டு 1-மணி நேரம் ஊறவைத்து வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{8}$-$\frac{1}{4}$-ஆழாக்கு கொடுக்கலாம். (இங்கிலீஷ்முறை.)

மிளகு.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, கர்ப்பவாதஹாரி, முறைவியாதிரோதி, க்ஷோணகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை மூலவியாதி, சீதசுவரங்கள், பிரமேகம், இருமல், வாயு, குன்மம், செவிநோய், அஜீர்ணம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—10-15, உளுந்துவிறை கொடுக்கலாம்.

யோகம்.

மிளகுலேகியம். செய்முறை.—மிளகுத்தூள், 2-பலம்; சோம்புத்தூள், 3-பலம்; தேன், 15-பலம். இவைகளை கலுவத்திலிட்டு செவ்வையாய் அரைத்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைத் துர்ப்பல மூலரோகிகளுக்கும், குதப்பிரம்சரோகத்துக்கும் உபயோகிக்கலாம். **மாத்திரை.**—1-2, விராக னிறை கொடுக்கலாம். (இங்கிலீஷ்முறை.)

மிளகுவேர்—செவ்வியம்.

செய்கை.—இதற்கு மிளகின்குணங்களே யுண்டென்றும், ஆனல் வீர்யத்தில் குறைவென்றும் யோசனை.

மீன் எண்ணெய்.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி, போஷணகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைக் கண்டமாலை, க்ஷயம், கணை, கண்ணோவு, துர்ப்பலம், சர்மரோகங்கள், நாள்பட்டகீல்வாதம், மதுமூத்திரம், காக்கைவலி, அக்கினிமாந்தியம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—1 - உச்சிக்கரண்டி அளவு கொடுக்கலாம்.

மூக்காவேளைவேர்—மூட்காவேளை.

செய்கை.—இதற்கு தீபனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை அக்கினி மாந்தியத்துக்கு உபயோகிக்கலாம்.

முசுமுசுக்கையிலை.

செய்கை.—இதற்கு கபஹாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை இருமல், சலதோஷம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

முடக்கற்றான்.

செய்கை.—இதற்கு மலகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை வாதரோகங்கள், கிரந்தி, கரப்பான், மலக்கட்டு, இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

முட்டை.

செய்கை.—இதற்கு ஸ்னிக்தகாரி, போஷணகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—சவ்வீரம், மயில்துத்தம், பால்துத்தம், இவைகளில் ஒன்றை, விஷமிக்கும்படி தின்றவர்களுக்கு, முட்டையின் வெள்ளையம்பிலி கொடுத்தால், முறிந்துவிடும். துர்ப்பலத்துக்கு உபயோகிக்கலாம்.

முத்து.

செய்கை.—இதற்கு சுவரஹாரி, வியதாபேதகாரி, கபஹாரி, தார்ட்டியகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை அஸ்திசுவரம், அரோசகம், கபரோகம், பலவீனம், வீரியநஷ்டம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

முத்தின்குருஸ். செய்முறை.—முத்தைப் பன்னீர்விட்டு, 3-நாள் அரைத்து, சன்னவில்லைகள் செய்து நிழலில் உலர்த்திக்கொள்ளவும். **மாத்திரை.**—3–6, உளுந்துநிறை கொடுக்கலாம்.

முந்திரிக்கொட்டை.

செய்கை.—இதின் பாலுக்கு விரணகாரிகுணமும்—பருப்புக்கு த்தாதுவிருத்தி குணமும் உண்டு.

முருக்கம்பிசின்.

செய்கை.—இதற்குச் சங்கோசனகாரி குணமுண்டு.

உபயோகம்—இதை பேதி, சீதபேதி, இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—10-30, உளுந்துநிறை கொடுக்கலாம்.

முருங்கைவேர்—கொழுந்து—பூ.

செய்கை.—முருங்கை வேருக்கு ஷோணகாரி உஷ்ணகாரி, மூத்திர வர்த்தனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—வேரைப் பாரிசவாதம், சீதசுவரம், காக்கைவலி, குதசசங்கி, இவைகளுக்கும்—கொழுந்தைக் கண்ணோவுக்கும்—பூவை பாலில்காய்ச்சி வீரியவிருத்திக்கும், உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

முலைப்பால்.

உபயோகம்.—இதைச் சந்நிபாதம், நாவறட்சி, ஔஷத அநுபானம், கலிக்கம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

முளகாய்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, ஷோணகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைக் குன்மம், அஜீர்ணபேதி, பித்தசுவரத்தில் காணுகிற வாந்தி, சயித்தியக்கட்டி, தொண்டைக்கம்மல், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—1-4, உளுந்தெடை கொடுக்கலாம்.

முள்ளாங்கிக்கிழங்கு ரசம்.

செய்கை.—இதற்கு சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை உஷ்ணம், மூத்திரதோஷங்கள், பிரமேகம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—$\frac{1}{8}$-$\frac{1}{4}$, ஆழாக்கு அளவு கொடுக்கலாம்.

முள்ளிக்கீரை-குப்பைக்கீரை.

செய்கை.—இந்தக்கீரைக்கு சினிக்தகாரி குணமும்—வேருக்கு விரணகாரி குணமுமுண்டு.

உபயோகம்.—கீரையைச் சீழ்க்கட்டிகளுக்கும்—வேரின் சுட்டசாம்பலை, முகம்வைக்க, கட்டிகளுக்கும்—துர்மாம்சம்கலாய, விரணங்களுக்கும் உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

முள்ளிலவுமரம்.

செய்கை.—இதற்கு மூத்திரவர்த்தனகாரி குணமுமுண்டு.

உபயோகம்.—இதைத்தந்து மேகம், எரிமூத்திரம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

முன்னைவேர்.

செய்கை.—இதற்கு சுவரஹாரிகுணமுமுண்டு.

உபயோகம்.—இதைச் சுவரத்துக்கு உபயோகிக்கலாம்.

மூக்கிரட்டைவேர்.

செய்கை.—இதற்கு விரேசனகாரி, குணமுமுண்டு.

உபயோகம்.—இதைச் சுவாசகாசம், வாதநோய், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

97

மூங்கில் அரிசி.

உபயோகம்.—இதைச் சுவரம், ரத்தபித்தரோகம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மூஷாம்பரம்-கரியபோளம்.

செய்கை.—இதற்கு தீபனகாரி, மலகாரி, ருதுவர்த்தனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை மலபந்தம், குன்மம், கை கால்குத்தல், இருத்வாதம், அக்கினிமாந்தியம், மஞ்சகாமாலை, சூதகக்கட்டு, சூதகப்பாண்டு, இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—2-3; உளுந்தெடை கொடுக்கலாம். 5-10, உளுந்தெடை கொடுத்தால் பேதியாகும்.

யோகம்.

டிநதுமோர். செய்முறை.—மூஷாம்பரம் பலம் $1\frac{1}{2}$; பாலேந்திரபோளம், ரூமிமஸ்தகி, சாம்பிராணி, மரமஞ்சள், வகை-1-க்கு பலம் 1; குக்குமப்பூ பலம்-$\frac{1}{2}$; சீலவேம்பு பலம்-$\frac{1}{2}$; பிராந்திபுட்டி- 3; ஜின் புட்டி-$1\frac{3}{4}$-இவைகளைக்கலந்து, 40-நாள் ஊறவைத்து, கடுதாசியில் வடிக்கட்டிக்கொள்ளவும். **உபயோகம்.**—இதைப் பிரசவித்தபெண்களுக்குக் கொடுப்பதுண்டு. **மாத்திரை.**—30-60, துளி கொடுக்கலாம். (இங்கிலிஷ்முறை.)

மெருகன்கிழங்கு.

செய்கை.—இதற்கு மூத்திரவர்த்தனகாரி, சீதளகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைப்பிரமேகம், அஸ்திதாதுகதசுவரம், அத்தியுஷ்ணம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மெழுகு.

செய்கை.—இதற்கு சினிக்தகாரி குணமுமுண்டு.

உபயோகம்.—இதைச் சீதபேதி, பேதி, இருமல், பார்சவாய்வு, வீக்கம், விரணம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகங்கள்.

மெழுகுகளிம்பு. செய்முறை.—மெழுகு, தேங்காய் எண்ணெய், சமனெய்க்கூட்டி, உருக்கி வடிக்கட்டிக்கொள்ளவும். **உபயோகம்.**—இதை விரணங்களுக்கு உபயோகிக்கலாம். (அநுபவமுறை.)

மயனத்தைலம். செய்முறை.—மஞ்சள் மெழுகு, சக்கிக்கல், வெள்ளையுப்பு, வகை-1-க்கு 1; ஆற்றுமணல் $\frac{1}{2}$; தைலம், கப்புமஞ்சள்

வகை 1-க்கு $\frac{1}{8}$; சடாமாஞ்சி, வீசம். இவைகளை பங்குக்கணக்காய் எடுத்து, ஒருகழுத்துநீண்ட குடந்தைப் படிக்கவாட்டத்தில் வைத்து அதற்குள் முறைப்படி அடைத்து, மற்றொரு சிறுதோண்டியை இதின்வாய்க்குப்பொருந்த தேய்த்து கவிழ்த்து, மூடி அந்தச்சந்தின் வாய்மறைய மண்ணரைத்து பூசி, நூற்கயிற்றினால் வரிந்துக்கட்டி, அதின்மேல், ஏழு சீலைமண்செய்து, இவ்விரண்டு குடத்தின் நடு மையங்களில், பெரியகுடத்து மேல்புறம் பெரிதாகவும், சிறியதோண்டியின் கீழ்புறம் சிறுதாகவும், இரண்டு துவாரங்களிட்டு மேல்துவாரத்தை புகை வெளிப்படாமலிருக்க ஒரு சிறிய மூட்டினால், மூடி அதின்மேல் பசுவின் சாணத்தையப்பி, இக்குடத்தை, ஒஞ்சரித்தப்படியே அடுப்பிலேற்றி, கீழ்முகத்துவாரத்தின் வழியில் ஒரு பாத்திரத்தை வைத்து, மூணுசாமம நன்றாக எரிக்கில், புகையுடன் தைலம் பிறந்திறக்கும். உபயோகம்,—இதைவலியுள்ள அர்த்தாங்கவாதரோகம், குழந்தைகளுக்குக்காணுகிற இசுவுகள், வீக்கங்கள், வெட்டுகாயம், பீஜவீக்கம், கரித்தலைவாதம், சர்வபாதம், பெண்குறித்தளர்ச்சி, ஆண்குறித்துவளல், கீல்எலும்பு மாமிசம் நரம்பு இவைகள் வாய்வு, ஆகிய இவைகளுக்கு உபயோகிக்கலாம். கை கால்களுக்குக்காணுகிற சோர்வுக்குப்பட்டிகட்டலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

மோஷ-ஷீர்கஸ்த்.

செய்கை.—இதற்கு மலகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை மலபந்தத்துக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—1-2, பலம் வரையில் கொடுக்கலாம். குழந்தைகளுக்கு 1-2, விராகனிடை கொடுக்கலாம்.

மையாலக்கடி-பிசின்-பட்டை.

செய்கை.—இவைகளுக்கு சோபநாசகாரி குணமுண்டு.

உபயோகம்.—இவைகளை வீக்கம், மாமிசத்தையும் உதிரத்தையும் பற்றிய ஆவுறுவாதம், சரீரவெப்பம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மொகடம்பட்டை.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரி, தார்ட்டியகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சுவரம், தூர்ப்பலம், வாய்விரணம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மொலாம்பழம்.

செய்கை.—இதற்கு சீதலகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை அத்தியுஷ்ணத்துக்கு உபயோகிக்கலாம்.

யானைக்கற்றாழைவேர்.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை மேகப்படைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

யானைக்கற்றாழைவேர் தரைகஷாயம். செய்முறை.—4—பலம் வேரை, $\frac{1}{2}$-படி வெந்நீரில்விட்டு மூடி, 20-நிமிஷம் ஊறவைத்து, வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{8}$-$\frac{1}{4}$, ஆழாக்குகொடுக்கலாம். (அநுபவமுறை.)

யானைத்திப்பிலி.

செய்கை,—இதற்கு உஷ்ணகாரி, சுவேதகாரி, கிருமிநாசகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை வாதம், கரப்பான், சுவரம், நீர்ப்பீனசம் இரைப்பு, மந்தப்பசி, இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

யானைநெருஞ்சி-விரை-இலை.

செய்கை.—இவைகளுக்கு சினிக்த்தகாரி, மூத்திரவர்த்தனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைப் பிரமேகம், நீர்க்கோவை, நீர் எரிச்சல் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

ரசம்—சூதம்—பாதரசம்.

யோகங்கள்.

ரசத்தைலம். செய்முறை.—வெற்றிலை, பாவட்டன் இலை, கோவையிலை, வகை-1-க்கு பலம்-5 ;இவைகளைக்கல்லுரலில்விட்டு, $\frac{1}{4}$-பலம் பாதரசம்விட்டு இரும்புபூணில்லாத உலக்கையால் மையோலிடித்து, கடைந்து திரட்டி ஒரு பாத்திரத்திலிட்டு, 1-படி ஆமணக்கு எண்ணெய் ஊற்றி மர அகப்பையால் கரைத்து, 3-நாள் சூரியபுடம்வைத்தெடுத்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை நமைக்காய் கிரந்தி, விரணங்கள், படர்த்தாமரை, சிரங்கு, கருமேகம், மேகரோகம், கண்டமாலை, இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—$\frac{1}{4}$-பலம் வரை கொடுக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

ரசமெழுகு.—செய்முறை.—ரசம், 2-பங்கு ; குல்கந்து 3-பங்கு அதிமதுரத்தூள் 1 - பங்கு, ரசத்தைக் குல்கந்தோடு சேர்த்து ரச அணுக்கள் மறையும்படி அரைத்து பிறகு அதிமதுரத்தைச் செவ்வையாய் அரைத்துக்கொள்ளவும். 3-உளுந்தெடையுள்ள மெழுகில், 1-உளுந்தெடை ரசமுண்டு. செய்கை.—இதற்கு வியதாபேதகாரி, பித்தகாரி, மலகாரி குணங்களுண்டு. உபயோகம்—இதை மேகவிரணம், மேக ரோகங்கள், இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—2-

3-உளுந்தெடையிறை கொடுக்கலாம். 5-8-உளுந்தெடையிறை கொடுத்தால் பேதியாகும், (இங்கிலீஷ்முறை.)

ரசக்களிப்பு. செய்முறை.—ரசம், 1-பவுன்; சுத்திசெய்த பன்றி நெய், 1-பவுன்; ஆட்டுக்கொழுப்பு, 1-அவுன்ஸ். இவைகளைச் சேர்த்து ரசம்மறையும்படி அரைத்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை மேகவிரணம், மூட்டு வீக்கங்கள், கட்டிகள், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (இங்கிலீஷ்முறை.)

ரசச்சிந்தூரம். செய்முறை.—வாய்க்குவிந்து நீண்டிருக்கிற ஒரு பாத்திரத்தில் ரசத்தை ஊற்றி, 600-டிக்கிரி உஷ்ணமுடைய தீயில் கொஞ்சநேரம்வைத்து எரித்தால், காற்றிலிருக்கிற ஆக்சிஜன் என்கிற வாயு ரசத்தோடு சேர்ந்து, சிவந்துவிடும். உபயோகம்.—இது முக்கியமாய் ரணங்களுக்கு காரம்வைக்க உபயோகப்படுகின்றது. (இங்கிலீஷ்முறை.)

பூரம்—ரசகற்பூரம்.

செய்முறை.—ஒரு பாண்டத்தில் 16-விராகனிடை கந்தகம் வைத்து உருக்கி, 80-விராகனிடை ரசம்சேர்த்து துழவிக்கொண்டிருந்தால், கறுத்து தூளாகிவிடும். பிறகு வேறொரு பாண்டத்தில் பாதிக்கு செங்கல் பொடியைப்போட்டு, அதின்மேல் ½-படி கறியுப்பை வைத்து, உப்புமேல் ஷை ரசகெந்தியைவைத்து, சீலைமண்செய்து, 12 மணிநேரம் காடாக்கினியாய் எரித்து, எடுத்து, குளிர்ந்தபிறகு மேபாண்டத்தைச்சாக்கிரதையாய் நீக்கிப்பார்த்தால் வெள்ளைக்கட்டி (பூரம்) படிந்திருக்கும். (அகஸ்தியர்முறை.)

பூரக்கட்டு. செய்முறை.—சாம்பிராணி, கர்ப்பூரம், சமனாய்ச்சேர்த்து அரைத்து, 1-பலம் பூரக்கட்டிமேல் கவசமிட்டு உலர்த்தி கொளித்தி எரித்தபிறகு, கவசத்தை நீக்கிவிட்டு சரக்கையெடுத்துக்கொள்ளவும். வேறுமுறை.—வெள்வங்கம், சவ்வீரம், பொட்டிலுப்பு, வகை 1-க்கு துலாம், 2. இவைகளை அரைத்தால் ஜயநீராகும்; அதைப் பீங்கானில் வைத்துக்கொள்ளவும். அப்பிரகத்தகட்டை இரண்டு கல்லுகள்மேல்வைத்து, அதின்மேல், 1-பலம் பூரத்தையிட்டு, தகடுக்கடியில் விளக்குவைத்தெரித்து, பூரத்துக்கு சூடேறினபிறகு, ஷை ஜயநீரை கொஞ்சம் கொஞ்சமாய்விட்டு சுருக்கேற்றவும். ஜயநீர் முழுமையும், குடிப்பிக்கவும். ஒருசுப்பலில் துணிசுற்றி, ஜயநீரில் துவைத்துத்துவைத்துவிடலாம். சுருக்கேற்றிய சரக்கை எடுத்து, எருக்கன்வேரைத் துளைத்து அதிலடைத்து, சீலைமண்செய்து முழப்புடத்தில் வைத்து எரித்துக்கொள்ளவும். (அனுபவமுறை.)

ரசபஸ்மம். செய்முறை.—பூரத்தைச்சூர்ணித்துக்கொண்டு, நீரிவிட்டு கழுவிக்கொள்வதே, ரஸபஸ்பமாம்.

செய்கை.—பூரத்துக்கும், ரஸபஸ்மத்துக்கும், உக்கிரரோகசமனகாரி, விரேசனகாரி, பித்தகாரி, வியதாபேதகாரி, திரவகாரி, கிருமிநாசகாரி, குணங்களுண்டு. சுருக்கேற்றிய பூரம், வாயைப் பிடிக்காது.

உபயோகம்.—இவைகளை, சுவரம், மஞ்சகாமாலை, பித்தசோஷம், சீதபேதி, நீர்க்கோவை, வாதசூலை, கிரணசங்கி, ஆராதவிரணங்கள், மேகவியாதிகள், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—ரஸபஸ்மத்தில், ½-1, உளுந்தெடையிறை அடிக்கடிக் கொடுத்தால், வியாதபேதமாரி குணங்களைத்தரும் 2-5, உளுந்தெடையிறை கொடுத்தால் பேதியாகும். ரஸப்புகைப்போடுவதற்கு, 20 - 30, உளுந்தெடையிறை போதுமானது.

இலிங்கம்—லிங்கம் சாதிலிங்கம்.

செய்முறை.—5-அவுன்ஸ் கந்தகத்தை, 2-பவுன் ரசத்துடன் சேர்த்திருக்கவும், சரக்குகள்பொங்கி எழும்புகிறவரையில் தீயிட்டெரித்து, யிறக்கி, மூடி, குளிர்ந்தபிறகு சூர்ணித்து பதங்கித்துக்கொள்ளவும். (இங்கிலீஷ்முறை.)

லிங்கக்கட்டு. செய்முறை.—பூரத்துக்குச் சுருக்கேற்றுவது போலவே, லிங்கத்துக்கும் சுருக்கேற்றினால், கட்டியாகும்.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதை மேகரோகம், சுவரம், அதிசாரம், சந்நிபாதம், அர்ப்புதவிரணம், அதிமூத்திரம், கரப்பான், சிரங்கு, மண்டலகுஷ்டம், வாதநோய், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மாத்திரை.—10-உளுந்தெடையிறை கொடுக்கலாம்; ½-விராகனிடை புகைப்போட உபயோகிக்கலாம்.

சவ்வீரம்-வீரம்-பரங்கிபாஷாணம்-சரக்குச்சுண்ணம்.

செய்முறை.—பூரம், 80; கறியுப்பு, 80; துருசி, 40, படிக்காரம். 20; பொட்டிலுப்பு, 20; பூநீறு-20; அன்னபேதி-10; நவச்சாரம்-5. இவைகளைப்பங்குக்கணக்காய் எடுத்து அரைத்து குப்பியிலிட்டு மூடி, சீலைமண் செய்து எரித்து, இறக்கி குளிர்ந்தபிறகு பார்வையிட்டால், மூடிமேல் அடையாய் (வீரம்) படிந்திருக்கும்.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இந்த மேகப்படை, மூட்டுவீக்கம், சர்ப்பமேகம், மகாவாதரோகங்கள் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—வீசம்-⅛-உளுந்தெடையிறை கொடுக்கலாம், மூட்டையின் வெள்ளை அம்பிலி, சவ்வீரத்தைமுறித்துவிடும், மாத்திரையில் அதிகமானால் கொல்லும்.

யோகம்.

வீரஜயநீர். செய்முறை.—வீரம், நவாச்சாரம், வகை 1-க்கு 10 உளுந்தெடையிறை; சுத்தஜலம், ¾-புட்டி கரைத்துக்கொள்ளவும். மாத்திரை.30-60-துளி கொடுக்கலாம். (இங்கிலீஷ்முறை.)

ரக்த்தசந்தனம்.

செய்கை.—இதற்கு அல்பசக்கோசனகாரிகுணமுண்டு.

உபயோகம்.—மருந்துகளுக்கு சிவப்புநிறம் கொடுக்க இதை உபயோகிப்பதுண்டு.

ரக்தபோளம்.

செய்கை.—இதற்கு கதுநாசகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதை, விழுந்து ரத்தம் கட்டிக்கொண்ட வீக்கங்கள், பக்கநோய், மார்பின் உபத்திரவங்கள் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

ரூமிமஸ்த்தகி

செய்கை.—இதற்கு உஷ்ணகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதைச் சொத்தைப்பல், தாதுபுஷ்டி, விரணங்கள், தந்துமேகம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.
மாத்திரை.—10-30-உளுந்துநிறைகொடுக்கலாம்.

யோகம்.

மஸ்தகிசூர்ணம் செய்முறை.—ரூமிமஸ்தகி, 4; ஏலம், பேதான, சாதிக்காய், சோம்பு, வகை, 1-க்கு 2. இவைகளின் சூர்ணங்களை பங்கு கணக்காய் எடுத்து கலந்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைப்பிரமேகம், நீர்சுருக்கு இவைகளுக்கு உபயோகிக்கலாம். (அனுபவமுறை.) மாத்திரை.—1-2, விராகனிறை கொடுக்கலாம்.

ரோஜனம்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரிகுணமுண்டு.

உபயோகம்.—இதை விரணங்களுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

ரோஜனகளிம்பு. செய்முறை.—ரோஜனம், மெழுகு, நல்லெண்ணெய், சமனிறைசேர்த்து உருக்கி வடிக்கட்டிக்கொள்ளவும். உபயோகம்.—இதை ஆறாத புண்களுக்கு உபயோகிக்கலாம்.

ரோஜாபுஷ்பம்.

செய்கை.—இதற்கு லகுவிரேசனகாரிகுணமுண்டு.

யோகங்கள்.

ரோஜாப்பூ ஷர்பத்து செய்முறை.—18-ரூபாயிடை உலர்ந்த ரோசாப்புஷ்பத்தை 1-படி வெந்நீரில், 12-மணிநேரம் ஊறவைத்து

வடிக்கட்டி அதில், 180-ரூபாய் நிறை சர்க்கரைச்சேர்த்து, காய்ச்சி, பதத்திலிறக்கி வடிக்கட்டிக்கொள்ளவும்; பிறகு 1-பலம் பந்நீரைச் சேர்த்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை மலபந்தம், உஷ்ணம், மூலச்சூடு இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2-துலாம் நிறை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

குல்கந். செய்முறை.—1-பங்கு ரோஜாப் புஷ்பத்தின் பச்சையிதழ்களை கல்லுரலிலிட்டு மைய இடித்து, 3-பங்கு சர்க்கரைச் சேர்த்து கலந்துக்கொள்ளவும். உபயோகம்.-இதை மலபந்தம், உஷ்ணம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2, விராகனிறைகொடுக்கலாம். (இங்கிலீஷ்முறை.)

பந்நீர். செய்முறை.—ரோஜாப்புஷ்ப பச்சையிதழ்கள் 10-பவுன்; தண்ணீர் 2-காலன். இவைகளை வாலையிலிட்டு காய்ச்சி-1-காலன் நீரை இறக்கிக்கொள்ளவும். உபயோகம்.—இது வாசனைக்காக மருந்துகளோடு சேர்க்கப்படுகின்றது.

லவங்கப்பட்டை.—சந்நலவங்கப்பட்டை.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, உதரவாதஹாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, வாந்தி, இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதின் தூளில் 5-20-உளுந்துநிறை கொடுக்கலாம்.

யோகம்.

சந்நலவங்கப்பட்டைத் தைலம். உபயோகம்.—இதைச் சொத்தைப் பல்லில் 1-2-துளிவிட்டால், வலிநிற்கும்; தலைவலிக்கு கண்ணப்பொறியில் தடவலாம். மாத்திரை.—2-5-துளி கொடுக்கலாம்.

லவங்கபத்திரி.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, உதரவாதஹாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

லவங்கம்—கிராம்பு.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, உதரவாதஹாரிகுணங்களுண்டு.

உபயோகம்.—இதை மந்தாக்கினி, வாந்தி, அரோசகம், வயிற்றுப்பிசம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதின் தூளில் 5-10-உளுந்துவிறைகொடுக்கலாம்

யோகங்கள்.

லவங்காதிவடகம். செய்முறை.—லவங்கம், சிறுநாகப்பூ, விலாமிச்சம்வேர், திரிகடுகு இவைகளின் சூர்ணம் சமவிறை. வடகவிதியோகம் பிரகாரம் செய்துக்கொள்ளவும். மாத்திரை.—10-30 உளுந்துவிறைகொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

கிராம்புத்தைலம். மாத்திரை.—2-6-துளி சர்க்கரையில் விட்டுக் கொடுக்கலாம்.

வசம்பு.

செய்கை.—இதற்கு சாடராக்கினிவர்த்தனகாரி, பலகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை வயிற்றுப்பொருமல், தூர்ப்பலம், மந்தாக்கினி, மந்தபேதி, வயிற்றுச்சூலை, க்ஷீணசுரங்கள், வாதரோகங்கள், சொறிசிரங்கு, குன்மம், வாய்நாற்றம், கிருமிரோகம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை:—20-60, உளுந்துவிறை கொடுக்கலாம்.

யோகம்.

வசம்பு வெந்நீர்ஊறல்கஷாயம். செய்முறை.—1-பலம் வசம்பை ½-படி வெந்நீரிலிட்டு ஊறவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும்.

மாத்திரை.—⅛-¼, ஆழாக்குவீதம் கொடுக்கலாம்.

வட்டத்திருப்பி.

செய்கை.—இதற்கு கபஹாரி, வியதாபேதகாரி, தார்ட்டியகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைக்கபரோகம், பிரமேகம், சிரங்கு, தூர்ப்பலம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

வலம்புரிக்காய்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதைக் காதுவிரணம், இருமல், வீக்கம், ஆயாசம் இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

வல்லாரையிலை.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி, தார்ட்டியகாரி, உஷ்ணகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைத் திமிரோடுகூடிய குஷ்டம், மேகப்படை, சர்மரோகங்கள், சுவரம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—ஆய்ந்து நிழலில் [illegible], இடித்து செய்தசூரணத்தில், 8-உளுந்துவிறை கொடுக்கலாம்.

யோகங்கள்.

வல்லாரைக்குடிநீர்த்தைலம் [illegible]. [illegible] வல்லாரைரசம் பலம்-6 ; கரிசலாங்கண்ணிரசம் [illegible] ; [illegible] ரசம் பலம்-3 ; தண்ணீர்விட்டு மை[illegible] அரைத்து பிழி[illegible]கத்தான் இலைரசம் பலம்-6 ; சோம்புத்தூள் விராகவிறை-2; லவங்கத்தூள் விராகவிறை—2 ; ஏலத்தூள் விராகவிறை-1 ; சுத்திசெய்து அரைத்த நேர்வாளம் விராகவிறை-1 ; சி[illegible]க்கெண்ணெய் புட்டி-1. இவைகளை விதிப்படி சேர்த்து காய்ச்சி, நெற்புடத்தில் 1-வாரம் வைத்தெடுத்துக்கொள்ளவும். **உபயோகம்.**—இதை வாதரோகங்களுக்கு பத்தியம் வைத்து உபயோகிக்கலாம். **மாத்திரை.**—½-1, பாலெடைவீதம் கொடுக்கலாம். (மைசூர் அரமனைமுறை.)

வல்லாரைக்கிருதம். செய்முறை.—வல்லாரை ரசம், பசுவின் பால் வகை 1-க்கு படி-1 ; இளநீர், நெய், வகை 1-க்கு படி-2 ; செங்கழுநீர் ரசம் படி-1 ; இவைகளைச் சேர்த்து அதில், சிவதை, மூக்குரட்டை வேர், கீழாநெல்லி வேர், திரிகடுகு, சீரகம், கருஞ்சீரகம், வகை 1-க்கு கழஞ்சி 2. அரைத்துப்போட்டு காய்ச்சி பதத்தில் வடித்துக் கொள்ளவும். மாத்திரை —1-2, துலாம்விறை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

வாசனைப்புல்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை வாதபித்ததொந்தம், சுவரம், கோழை, இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

வாதுமைப்பருப்பு—அட்டம்விதை.

செய்கை.-இதற்கு சினிக்தகாரி, போஷணகாரிகுணங்களுண்டு.
உபயோகம்.—இதை இருமல், நீர்ச்சுருக்கு இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகங்கள்.

வாதுமைநெய். செய்கை.—இதற்கு மலகாரி, சினிக்தகாரி குணங்களுண்டு. **உபயோகம்**—இதை ஔஷதவெப்பம், இருமல், சுக்கிலநஷ்டம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.—பஞ்சேந்திரியங்களுக்கு ஒளியையுண்டாக்கும். மாத்திரை.—1-4, விராகவிறைகொடுக்கலாம். (சிந்தாமணி.)

வாதுமைப்பருப்புச்சூர்ணம் செய்முறை.—வெந்நீரிவிட்டு ஊற வைத்து, மேல்தோல் நீக்கிய வாதுமைப்பருப்புச்சூர்ணம், 8-பங்கு, கற்கண்டுபொடி 4-பங்கு ; லவங்கப்பிசினித்தூள் 1, பங்கு. இவைக ளைச்சேர்த்து கலந்துக்கொள்ளவும். மாத்திரை.—1-2, விராகனிறை கொடுக்கலாம். (இங்கிலீஷ்முறை)

வாதுமைப்பருப்புக்குழம்பு செய்முறை.—1-பங்கு வாதுமைப் பரும்புச்சூர்ணத்தில், 8-பங்கு தண்ணீர்விட்டு அரைத்து வடிக் கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{8}$-$\frac{1}{4}$ ஆழாக்கு அளவு கொடுக்க லாம்.

வாதுமை அல்வா செய்முறை.—15-ரூபாய் எடை தோல்நீக் கிய வாதுமைப்பருப்பை பால்விட்டரைத்து, $\frac{1}{4}$-படி பாலை காய்ச்சி, காய்ந்துவரும்போது அதில் $\frac{1}{2}$-ஆழாக்கு கோதுமைநொய்யைச்சேர் த்து, குழைந்துவருகிற பதத்தில் மேற்படி வாதுமையையும், 15-ரூபாய் எடை சருக்கரையையும் சேர்த்து பதத்திலிறக்கி, $\frac{1}{2}$-பலம் பன்னீரில் குங்குமப்பூ, ஏலத்தூள் வகை 1-க்கு விராக னிறை-$\frac{1}{8}$; அரைத்து மிஸ்ர மித்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைத் தூர்ப்பலம், இருமல், இவைகளுக்கு உபயோகிக்கலாம். (அனுபவமுறை.)

பாதாம்பிசின். செய்கை.—இதற்கு சினிக்தகாரி, குணமுண்டு. உபயோகம்.—இதை இருமல், மூத்திரக்கிரிச்சிரம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—$\frac{1}{2}$-2, விராக னிறை கொடுக்கலாம்.

வாயு—காற்று.

உபயோகம்.—உஷ்ணம், இளைப்பு, இவைகளைத் தணிக்கும்; விர ணம், கண்ணோவு இவைகளுக்கு ஆகாது. பிரஸவித்த பெண்களையும், ரோகிகளையும், நல்ல காற்றுள்ளவிடத்தில் வைக்கவேண்டியது.

வாய்விளங்கம்.

செய்கை.—இதற்கு கிருமிநாசகாரி, விரேசனகாரி குணங்க ளுண்டு.

உபயோகம்.—இதை வயிற்றுக் கிருமிரோகத்துக்கு உபயோகி க்கலாம்.

வாலுழுவை அரிசி.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, சுவேதகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இது ஔஷதயோகங்களில் சேருகிறது.

வாலேந்திர போளம்.

இதுவே வெள்ளைப் போளம், வெள்ளாத்தி போளம், துந்துமதூபம், துந்துரு.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, கபஹாரி, ருதுவர்த்தனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைக் குதகக்கட்டு, குதகப்பாண்டு, இருமல், காசம், அக்கினிமாந்தியம், அஜீரணம், ஆராதவிரணங்கள், கரப்பான், நமைச்சல், கீல்பிடிப்பு இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—தூளில் 10-20, உளுந்தெடை கொடுக்கலாம்.

வாகாசினாகு

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி குணமுண்டு. முக்கியமாய் மூத்திரதாரையில் குணத்தைக்காட்டும்.

உபயோகம்.—இதைப் பிரமேகம், கர்ப்பப் பிரமேகம், மஞ்ஜா மூத்திரம், மூலவியாதி, கபரோகங்கள் இவைகளுக்கு உபயோகிக்க லாம்.

மாத்திரை.—$\frac{1}{2}$-2, விராகனிறை கொடுக்கலாம்.

வாழைக்கிழங்கு நீர்.

செய்கை.—இதற்கு மூத்திரவர்த்தனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை மூத்திரக்கிரிச்சிரம், அஸ்திஸிராவம் இவை களுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—$\frac{1}{4}$-$\frac{1}{2}$, ஆழாக்கு அளவு கொடுக்கலாம்.

வாழைப்பழம்.

யோகம்.

தலிபலீரசாயனம். செய்முறை.—10, செவ்வாழைப் பழத்தை ..., 20-பலம் சருக்கரையையும், $\frac{1}{2}$-படி பசுவின்பாலில் பிசைத்து வடிக்கட்டி பக்குவம்செய்து, மிருதுபாகத்தில் திருசுகந்தயோகம், ஏலம், கொத்துமல்லி, சோம்பு, ருமிமஸ்தகி, அதிமதுரம் இவைக ளின்தூள் வகை 1-க்கு பலம்-$\frac{1}{2}$; ரோசாமொக்குச் சூர்ணம், பலம்-2 இவைகளை சேர்த்து கலந்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைப் பலஹீனம், மேகரோகங்கள் இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்தி ரை.—1-2, துலாம் எடை கொடுக்கலாம். (மூலிகைசங்கிரகம்.)

கதலிபலகிருதம். செய்முறை.—மேல்கண்ட கதலிபல ரசாயனத்தோடு, 10-பலம் நெய்யும், 5-பலம் தேனும் சேர்த்துக்கொள்ளவும். மாத்திரை.—1-3, துலாம்நிறை கொடுக்கலாம்.

விலாரியிலை.

செய்கை.—இதற்கு பலகாரி, சுவரஹாரி, சங்கோசனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதின் இலையை விரணங்களுக்கும்—பட்டையை சிங்கோனுவுக்கு பதிலாயும் உபயோகிக்கலாம்.

யோகம்.

விலாரிவேர்த்தைலம். செய்முறை.—வேரைக் கத்தரித்து பானையிலிட்டு, பாதாளயந்திரமுறையாய் செய்து, தைலம் சேகரித்துக் கொள்ளவும். உபயோகம்.—இதை வாயு, சோபை, இவைகளுக்குப் பூசலாம். (அனுபவமுறை.)

விலாமிச்சுவேர்.

செய்கை.—இதற்கு சீதளகாரி, சுவேதகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சுவரம், சொறிசிரங்கு, நமைச்சல், தாகம், மூர்ச்சை, இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—அளவில் 20-30, உளுந்து நிறை கொடுக்கலாம்.

வில்வக்காய்—பழம்—பிஞ்சு—வேர்.

செய்கை.—வில்வக்காயக்கும், பிஞ்சிக்கும் சங்கோசனகாரி குணமுண்டு—பழத்துக்கு மலகாரி குணமுண்டு.

உபயோகம்.—வில்வக்காயையும், பிஞ்சையும் பேதி சீதபேதி, ரக்தபேதி, இவைகளுக்கும்—பழத்தை மலபந்தத்துக்கும் உபயோகிக்கலாம்.

யோகங்கள்.

வில்வக்காய் கஷாயம். செய்முறை.—4-பலம் வில்வ— $1\frac{1}{2}$-புட்டி தண்ணீரிலிட்டு 1-புட்டிக்கு சுண்டவைத்து இறக்கி அதில், ஏலம், லவங்கப்பட்டை வகை 1-க்கு விராகனிறை $\frac{1}{2}$, சேர்த்து குளிர்ந்தபிறகு வடிக்கட்டிக்கொள்ளவும். உபயோகம்.—இதைப் பேதி, சீதபேதி, ரக்தபேதி இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—$\frac{1}{4}$-$\frac{1}{2}$, ஆழாக்கு அளவு கொடுக்கலாம். (அனுபவமுறை.)

வில்வப்பழஷர்பத்து. செய்முறை.—1-பலம் வில்வப்பழத்துக் குள்ளிருக்கிற சதையை, 4-பலம் தண்ணீரில் கரைத்து, அதில் தே

வையான சருக்கரை சேர்த்து வடிக்கட்டிக்கொள்ளவும். இது ஒருவேளைக்குக் கொடுக்கிற பிரமாணம். உபயோகம்.—இதைத் தாப்பல ரோகிகளுக்குக் காணுகிற மலபந்தத்துக்கு உபயோகிக்கலாம். (இங்கிலீஷ்முறை.)

வில்வப்பழரசாயனம். செய்முறை.—12-பலம் வில்வப்பழச் சதையை $1\frac{1}{4}$-புட்டி நீரிலிட்டு கொதிக்கக்காய்ச்சி குளிர்ந்தபிறகு பிசைந்து வடிக்கட்டி அதில், 5-பலம் சருக்கரை சேர்த்து காய்ச்சி பாகப்பதத்தில் இறக்கி அதில், திரிகடுகு யோகம், திரிசுகந்த யோகம், திரிசிம்ப யோகம், இச்சூர்ணங்கள் வகை 1-க்கு பலம் 1 ; தாவி, 4 பலம் தேன்விட்டு கலந்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை அக்கிரம மலவியாதிகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2, விராகனிறை கொடுக்கலாம். (அனுபவமுறை.)

வில்வாதிலேகியம். செய்முறை.—10-பலம் வில்வச்சதையை, 1-படி நீரிலிட்டு $\frac{3}{4}$-படிக்கு சுண்டக்காய்ச்சி பிசைந்து தெளிவாய் இறுத்துக்கொண்டு அதில், 10-பலம் வெல்லம் சேர்த்துக்காய்ச்சி பாகுபதத்தில், திரிகடுகுயோகம், சீரகம், அதிமதுரம், இந்துப்பு, வகை 1-க்கு பலம் 1 ; திரிசுகந்தயோகம், பலம் $\frac{1}{2}$; ஏலம், லவங்கப்பட்டை வகை 1-க்கு பலம் $\frac{1}{4}$; குங்குமப்பூ விராகனிறை 1. இத்தூள்களைத் தாவி, $\frac{1}{2}$-பலம் தேன்சேர்த்து பிசைந்துக்கொள்ளவும் உபயோகம்.—இதைக் குன்மம், அஜீர்ணத்தால் பிறக்கிற உபத்திரவங்கள் இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2, விராகனிறை கொடுக்கலாம். (மூலிகசங்கவிதம்.)

வில்வாதிதைலம். செய்முறை.—வில்வவேர், விலாமிச்சன்வேர், கோரைக்கிழங்கு, சீந்தில்கிழங்கு வகை 1-க்கு பலம் 8 ; இவைகளையிடித்து 16-படி தண்ணீரில்போட்டு, 2-படி கஷாயமாய்ச் சுண்டவைத்துக் கொள்ளவும். 2-சேர் கொம்பரக்கை கிழிகட்டி, தந்நீரில் தொங்கவிட்டு 1-ஒன்றாய்ச் சுண்டவைத்துக் கொள்ளவும். இவ்விரண்டையும் சேர்த்து அதில், 5-படி நல்லெண்ணெய், 5-படி பால், விட்டு கலந்து அதில், திரிகடுகு, திரிபலை, கஸ்தூரிமஞ்சள், அதிமதுரம், கோஷ்டம், கருஞ்சீரகம், சீரகம், மரமஞ்சள், சந்தனம், இலிப்பூரல் பட்டை, வெள்ளுள்ளி, லவங்கப்பட்டை, பச்சிலை, பூலாங்கிழங்கு, ஏலம், வகை 1-க்கு பலம் 1 ; இவைகளைப் பால்விட்டரைத்து கலந்து காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைப் பித்தம், சிரநோய், இவைகளுக்கு ஸ்நானஞ் செய்துவைக்கலாம். (மூலிகசங்கவிதம்.)

விழுதி இலை.

செய்கை.—இதற்கு விரேசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை விரோதமலம், மலக்கிருமிரோகம், கரப்பான். பிரமேகம், வித்திரிதி இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

விளாம்பழம்—காய்.

செய்கை.—விளாம்பழத்துக்கு பித்தசமனகாரி குணமும்-காய்க்கு சங்கோசனகாரி குணமும் உண்டு.

உபயோகம்.—இதைப் பித்ததாகம், அரோசகம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். பசியையும், சவுக்கியத்தையும் உண்டாக்கும்.

விளாம்பிசின்.

செய்கை.—இதற்கு கிராஹிக்காரி குணமுண்டு.

உபயோகம்.—இதை இருமல், பேதி, நீர் எரிச்சல் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—1-2, விராகனிறை கொடுக்கலாம்.

விஷமூங்கிலிலை.

செய்கை.—இதற்கு வமனகாரி, சுவேதகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை இருமல், சுவாசகாசம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இதின் ரசத்தில், 2-4, உச்சிக்கரண்டிவீதம் 20-நிமிஷத்துக்கொருதரம் வாந்தியாகிறவரையில் கொடுத்துக்கொண்டு வரலாம்.

விஷ்ணுகிராந்தி.

செய்கை.—இதற்கு சுவேதகாரி, கபஹாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சுவரம், கபரோகம், உட்சூடு இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

வெங்காயம்—ஈருள்ளி—உள்ளி.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, க்ஷோணகாரி, மூத்திரவர்த்தனகாரி, சீதளகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை தேக உஷ்ணம், மூலம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

வெங்காரம்—பொரிகாரம்—டங்கணம்.

செய்கை.—இதற்கு சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி, பிரஸவகாரி, அஸ்மரிஹரகாரி குணங்களுண்டு.

104

உபயோகம்.—இதை மந்தப்பிரசவம், வாய்விரணம், மூலைக்காம்புவிரணம், சர்மரோகங்கள் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—20-30, உளுந்துநிறை கொடுக்கலாம்.

யோகம்.

வெங்காரமது. செய்முறை.—64-உளுந்துநிறை வெங்காரத்தூளை, ¼-ஆழாக்கு முரித்த தேனில் கலந்துக்கொள்ளவும். **உபயோகம்.**—இதை வாய்விரணம், அக்ஷரம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

வெட்டிவேர்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி சுவேதகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சுவரம், தாகம், தலைநோய், வாதரோகங்கள், நமைச்சல், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—20-உளுந்துநிறை கொடுக்கலாம்.

யோகம்.

வெட்டிவேர் கஷாயம் செய்முறை.—வெட்டிவேர், 2-விராகனிறை; வெந்நீர் ½—புட்டி. 2-மணிநேரம் ஊறவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும். **மாத்திரை.**—⅛-¼, ஆழாக்கு அளவுகொடுக்கலாம்.

வெட்பாலையரிசி—பட்டை.

செய்கை.—அரிசிக்கு சங்கோசனகாரிகுணமும் - பட்டைக்கு, சங்கோசனதார்ட்டியகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சீதபேதி, பேதி, சுவரம், குடல்விர்த்திரோகம், வயிற்றுப்பொருமல், பயித்தியம், வாதம் இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

வெண்டைக்காய்—வெண்டிக்காய்.

செய்கை.—இதற்கு சினிக்தகாரி, மூத்திரவர்த்தனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை இருமல், நீர்க்கடுப்பு, பிரமேகம், விரணங்கள், கட்டிகள், பேதி, சீதபேதி, இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

வெண்டைக்காய் வெந்நீர் ஊறல்கஷாயம் செய்முறை.—3-பலம் வெண்டைக்காயை, 1½-புட்டி தண்ணீரிலிட்டு, ஒரு புட்டிக்குச் சுண்டக்காய்ச்சி வடிக்கட்டிக்கொள்ளவும். **மாத்திரை.**—½-1-ஆழாக்கு அளவுகொடுக்கலாம்.

வெந்தியம்.

செய்கை.—இதற்குச் சினிக்தகாரி, பலகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சீதபேதி, ரத்தபித்தம், பிரமேகம், அஸ்திசுவரம், உட்சூடு, சுக்கிலக்ஷீணம், வித்திரிதி இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—1–2, விராகனிடைகொடுக்கலாம்.

வெள்ளரிவிதை.

செய்கை.—இதற்கு சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை நீர்ச்சுருக்கு, தாகம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

யோகம்.

வெள்ளரிவிதைப்பால். செய்முறை.—2-துலாம் வெள்ளரி விதையை, அரைத்து, 1-ஆழாக்கு நீரில் கலந்து வடிகட்டிக்கொள்ளவும். **உபயோகம்.**—இதை எல்லாம் ஒருவேளைக்கு, சருக்கரைசேர்த்து மூத்திரக்கிரிச்சிரத்துக்குக் கொடுக்கலாம்.

வெள்ளறுகு.

செய்கை.—இதற்கு தீபனகாரி, பலகாரி, வியதாபேதகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைக் குன்மம், வாதரோகங்கள், சொறி சிரங்கு, தந்திமேகம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—இலையில் $\frac{1}{2}$-1, விராகனிடைகொடுக்கலாம்.

வெள்ளி.

யோகங்கள்.

ரஜதபஸ்பம். வெள்ளிபஸ்பம். செய்முறை.—$\frac{1}{2}$-பலம் காடிக்காரத்தை, $\frac{1}{2}$-ஆழாக்கு ஆவி நீரில் கரைத்து, $3\frac{1}{2}$-புட்டி சுண்ணாம்பு ஜலம் இருக்கிற ஒரு புட்டியிலூற்றி, செவ்வையாய்க் குலுக்கி, வண்டல் அடியில் படிகிறவரையில் அசையாமல் வைத்து, தெளிந்த நீரை வடித்து, மறுபடியும், ஆவிநீர்விட்டு கழுவி, தெளிந்த நீரை வடித்துவிட்டு, நெருப்புமேலிட்டு உலர்த்திக்கொண்டு, கல்கார்க்குடைய புட்டியிலிட்டுக்கொள்ளவும். செய்கை.—இதற்கு பலகாரி, சமனகாரி, அங்காகர்ஷணநாஸகாரி குணங்களுண்டு. **உபயோகம்.**—இதை அக்கினிமாந்தியம், குன்மம், குலை எரிவு, பெரும்பாடு, ரக்தவ

மனம் பலாக்கிரஹணி, இவைகளுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—$\frac{1}{2}$-1, உளுந்துநிறைகொடுக்கலாம். (இங்கிலீஷ்முறை.)

கடிக்காரம் செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, விரணகாரி, தொவக்ஸ்போடகாரி, அங்காகர்ஷணநாசகாரி, சமனகாரி, குணங்களுண்டு. **உபயோகம்.**—இதை அபஸ்மாரம், சீதபேதி, கண்ணோவு, அஸ்திசிராவம், பிரமேகம், படர்த்தாமரை, அக்கி, கரப்பான், விரணங்கள், நாய்க்கடி, பாம்புக்கடி, தேள்கொட்டல், இவைகளுக்கு உபயோகிக்கலாம். **மாத்திரை.**—ஒரு உளுந்துநிறையில் 6-ல் ஒருபங்கு முதல், 3-ல் ஒருபங்குவரையில் கொடுக்கலாம். ($\frac{1}{6}$ to $\frac{1}{2}$. gr.)

வெள்ளியீயம் வெண்நாகம்.

செய்கை.—இதற்கு வியதாபேதகாரி, பலகாரி, சங்கோசனகாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதைப்பிரமேகம், மூத்திரவியாதிகள், சுவரம், தூர்ப்பலம், விரணம், சுவாசம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

வெள்ளைகுந்தரிகம் - வெள்ளைகுங்கிலியம்.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, சினிக்தகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை மேகவிரணம், விரணங்கள், கிழ்மேகம், உள்மூலம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

வெள்ளைப்பூண்டு-வெள்ளுள்ளி-பூண்டு.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, மூத்திரவர்த்தனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதைச் சிறிய கட்டிகள், செவிடு, நாள்பட்ட இருமல், சுவாசம், கிசம், மலக்கிருமி, சந்நி, வாதரோகங்கள் இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

மாத்திரை.—$\frac{1}{2}$-2, விராகனிறை கொடுக்கலாம், வெள்ளைப்பூண்டு ரசத்தில், 20-30-துளிவரையில் சருக்கரையில் கலந்துகொடுக்கலாம்.

வெள்ளைமிளகு.

செய்கை.—இதற்கு உஷ்ணகாரி, உதரவாதஹாரி குணங்களுண்டு.

உபயோகம்.—இதை மந்தாக்கினி, வாந்தி, வாயு, பிரமேகம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

வெறுகங்கிழங்கு.

செய்கை.—இதற்கு வியர்பேதகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை புராதனசுவரங்களுக்கு உபயோகிக்கலாம்.

வெற்றிலை.

செய்கை.—இதற்கு தீபனகாரி, திராவகாரி, க்ஷீரவர்த்தனகாரி, குணங்களுண்டு.

உபயோகம்.—இதை இருமல், மூச்சுமுட்டல் இவைகளுக்கு உபயோகிக்கலாம். வெற்றிலை வதக்கி ஸ்தனங்கள்மேல்போட்டு கட்டினால் பால்சுரக்கும்.

வேங்கைப்பிசின் - காண்டாமிருகரக்தம்.

செய்கை.—இதற்கு சங்கோசனகாரி குணமுண்டு.

உபயோகம்.—இதை பேதி, சீதபேதி, அதிசாரம், பல்லரணை, இருமல், பிரமேகம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—10-30, உளுந்துவிறை கொடுக்கலாம்.

வேங்கைப்பிசின் கலவைச்சூர்ணம். செய்முறை.—வேங்கைப்பிசின்தூள் $3\frac{3}{4}$-பங்கு; அபினித்தூள்; $\frac{1}{4}$-பங்கு லவங்கப்பட்டைதூள் 1-பங்கு. இவைகளைச் செவ்வையாய் அரைத்து மிஸ்ரமித்துக்கொள்ளவும். **மாத்திரை.**—5–20, உளுந்துவிறை கொடுக்கலாம். 20-உளுந்துவிறை தூளில், 1-உளுந்துவிறை அபினியுண்டு.

வேப்பன்பட்டை—எண்ணெய்—கொழுந்து—இலை—பூ—கள்ளு.

செய்கை.—பட்டைக்கு சங்கோசனகாரி, பலகாரி, முறைவியாதிரோதி குணங்களுண்டு.

உபயோகம்.—பட்டையை சீதசுவரம், தூர்ப்பலம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மாத்திரை.—பட்டைத்தூளில், 1-விராகனிறை கொடுக்கலாம்.

யோகம்.

வேப்பன்பட்டைக்கஷாயம். செய்முறை.—வேப்பன்பட்டை உள்நார், பலம்-1; ஏலப்பொடி, கொத்துமல்லித்தூள், சோம்புத்தூள், சந்தனக்கட்டைத்தூள், வகை 1-க்கு விராகனிறை $\frac{1}{2}$; தண்ணீர், புட்டி-1 ஒரு கொதிவருமளவும் காய்ச்சி, சூடாய் இருக்கும்

போதே வடிக்கட்டிக்கொள்ளவும். **உபயோகம்.**—இதைச் சீதசுவரம் தூர்ப்பலம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—$\frac{1}{4}$-$\frac{1}{2}$, ஆழாக்கு அளவு கொடுக்கலாம்.

வேப்பம்பட்டைத்தைலம். செய்முறை.—வேப்பம்பட்டை, $2\frac{1}{2}$-பலம், விலாமிச்சன்வேர், மிளகு, வெள்ளுள்ளி, சீரகம், கஸ்தூரி மஞ்சள், வகை 1-க்கு பலம் $\frac{1}{2}$; இவைகளை 1-புட்டிபாலில் அரைத்து, 1-படி நல்லெண்ணெயில் கலந்து விதிப்படி தைலம் செய்துக்கொள்ளவும். **உபயோகம்.**—இதைப் பழயசுவரம், வாதரோகம், மண்டையிடி, பீனசம், செவிநோய், இவைகளுக்கு ஸ்நானஞ்செய்து வைக்கலாம்.

வேப்பெண்ணெய். உபயோகம்.—இதைக் கரப்பான், சிரங்கு, சந்நி இவைகளுக்கு உபயோகிக்கலாம். (சிந்தாமணி.)

வேப்பங்கொழுந்து. உபயோகம்.—இதனுடன் ஓமம், மிளகு, வசம்பு, பூண்டு, சேர்த்து, அரைத்து குழந்தைகளுக்கு வயிற்றுப்பிசத்துக்குக் கொடுக்கலாம்.

வேப்பிலை. உபயோகம்.— இதை மஞ்சள்சேர்த்து அரைத்து பழயவிரணம், சொறிசிரங்கு, அம்மை, இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

வேப்பன்பூ. உபயோகம்.—இதைத் துவயல்செய்து, அஜீர்ணபேதிக்குக் கொடுக்கலாம்.

வேப்பன் ஈர்க்கு.—இதைக் கஷாயமிட்டு சுவரத்துக்குக் கொடுக்கலாம்.

வேப்பங்கள்ளு.—இதைமேகரோகம், வாதரோகம், புராணசுவரங்கள், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

5-வது அத்தியாயம்.

குணபாடத்தில் செப்பியிராத இதரயோகங்களை, இவ்வத்தியாயத்தில் காணலாம். அவைகளை இவ்வடியில் கண்டிருக்கிற கிரமமாய், பிரித்திருக்கின்றன:—

அஞ்சனங்கள்.	ஷர்பத்துகள்.
கஷாயங்கள்.	தைலங்கள்.
களிம்புகள்.	பஸ்மங்கள்.
கிருதங்கள்.	குளிகைகள்.
குழம்புகள்.	லேகியங்கள்.
சிந்தூரங்கள்.	வடகங்கள்.
சூர்ணங்கள்.	நாநாவிதயோகங்கள்.

அஞ்சனங்கள்.

லதுநாரி கோராஞ்சனம். செய்முறை.—திரிபலை, பலம்-3; அதிமதுரம் பலம்-1; மரமஞ்சள், பலம்-1. இவைகளையிடித்து, 1-படி இளநீரிவிட்டு, $\frac{1}{8}$-படிக்குச் சுண்டவைத்து, பிசைந்து, வடித்து, மறுபடியும் காய்ச்சி, பாகு பதமாக்கி அதில், 2-பலம் தேனும், 1-விராகனிடை சயிந்திய லவணமும், $\frac{1}{2}$-விராகனிடை பச்சை கர்ப்பூரமும், பொடித்து போட்டு, கலந்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைக் கண்ணோவுகளுக்கு அஞ்சனமிடலாம். (அனுபவமுறை.)

திரிபலாஞ்சனம். செய்முறை.—திரிபலையோகம், 1-பங்கு; துருசி $\frac{1}{4}$-பங்கு. இவைகளைக்கூட்டி, இளநீரிலரைத்து மாத்திரை செய்து உலர்த்திக்கொள்ளவும். உபயோகம்.—இதை அமரத்துக்கு, தேனிலுரைத்து இமைக்குள் தடவிக்கொண்டுவந்தால், சிவப்பு குறையும். (சாரசங்கிரகம்.)

ஜம்பீரநவநீதாஞ்சனம். செய்முறை.—ஒரு எலுமிச்சம்பழத்தைக் கயிற்றில் கோர்த்து, அதின்மேல் சுற்றிலும் கிராம்புகளை யூன்றி வெண்ணெயில்புதைத்து, அதைத் தண்ணீர் விட்டிருக்கிற ஒரு புதுச்சட்டியில் அடியில் படாமல் தொங்கவிட்டு வைக்கவும். தினம் பழயநீரைப்போக்கி புது நீரிட்டுக்கொண்டு வரவும். 40-நாள் சென்றபிறகு வெண்ணெயை வழித்தெடுத்து, செம்புச்சிமிழில் வைத்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைக் கண்ணோவுகளுக்கு அஞ்சனமிட்டுக்கொண்டு வரலாம்.

கஷாயங்கள்.

நிலாவிரையுப்பாதி கஷாயம். செய்முறை.—நிலாவிரை, ரோஜாப்பூ, விரைநீக்கிய கடுக்காய், வகை 1-க்கு, விராகனிடை 1; சுக்கு, கொத்துமல்லி விதை, சோம்பு, ஏலம், ஆரஞ்சிப்பழத்தோல், வகை 1-க்கு, விராகனிடை $\frac{1}{2}$; வெந்நீர் ஆழாக்கு 1 இவைகளை, 2-மணிநேரம் ஊறவைத்து பிசைந்து வடிக்கட்டிக்கொண்டு அதில், 1-தோலா சயிந்தியலவணம் சேர்த்துகொடுத்தால் ஆயாசமில்லாமல் செவ்வையாய் பேதியாகும். சயிந்தியலவணத்துக்குப்பதில், 1-ரூபா யெடை ஸீர்கஸ்து ஆவது, 3 ரூபாயெடை சிற்றாமணக்கெண்ணெயாவது சேர்த்துக்கொள்ளலாம். (அனுபவமுறை.)

ஈர்க்குகஷாயம். செய்முறை.—வேப்பிலை ஈர்க்கு, புளியிலை ஈர்க்கு, கறிவேப்பிலை ஈர்க்கு, நுணா இலை ஈர்க்கு, எலுமிச்சஇலை ஈர்க்கு வகை 1-க்கு, 2-பங்கு; கொத்துமல்லி, 1-பங்கு; சீரகம், லவங்கம், ஏலம், மிளகு, வகை 1-க்கு $\frac{1}{4}$-பங்கு இவைகளை இடித்து சேர்த்து, அதில் 2-விராகனிடை எடுத்து $\frac{1}{2}$-ஆழாக்கு வெந்நீரிவிட்டுமூடி, 1-மணிநேரம் ஊறவைத்து வடிக்கட்டிக் கொள்ளவும். உபயோகம்.—இதைச் சுவரங்களுக்குக் கொடுக்கலாம். மாத்திரை.—இந்தக் கஷாயத்தை ஒருவேளைக்குக் கொடுக்கலாம். (அனுபவமுறை.)

கருக்குகஷாயம். செய்முறை.—வேப்பிலை, கறிவேப்பிலை, வாழையிலை, வெற்றிலை, வகை 1-க்கு 1-பிடி; இவைகளைச் சட்டியிலிட்டு எரித்து சாம்பலானபிறகு அதில், $\frac{1}{4}$-படி நீர்விட்டு கொதிக்கும்போது சட்டியை இறக்கி அதில், சித்தரத்தை, சீரகம், எலுமிச்சம்பழத்தோல், அதிமதுரம், ஏலம், வகை 1-க்கு விராகனிடை, 1 இடித்துப்போட்டு 2 மணிநேரம் ஊறவைத்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை பித்தசுரத்துக்குக்கொடுக்க நல்லமுறை, மாத்திரை.—$\frac{1}{2}$ ஆழாக்கு அளவு கொடுக்கலாம். (அனுபவமுறை.)

துவாதசமூலிகை கஷாயம். செய்முறை.—வல்லாரை, சஹதேவி, வகை 1-க்கு 4-பங்கு; துளசி, கஞ்சாங்கோரை, விஷ்ணுகிராந்தி, வகை 1-க்கு 3-பங்கு; நிலவேம்பு, சித்தாமுட்டி, பற்பாடகம், கொத்துமல்லி, வகை 1-க்கு 2-பங்கு; மஞ்சகனை (ஒம்மைகளு) சுக்கு, மிளகு, வகை 1-க்கு 1-பங்கு. உலர்ந்த சரக்குகளை இடித்து கலந்துக்கொள்ளவும். அதில், 2-விராகனிடை எடுத்து, $\frac{1}{2}$-ஆழாக்கு வெந்நீரிவிட்டு, 2-மணிநேரம் ஊறவைத்து வடிக்கட்டி—எல்லாம் ஒருவேளைக்குக் கொடுத்துவிடவேண்டியது. உபயோகம்.—இதைப் பழய சுவரங்களுக்கு கொடுக்க நல்லயோகம் (மைசூர் அரமனை டிஸ்பென்சேரி முறை.)

மூத்திரபேதி கஷாயம். செய்முறை.—$\frac{1}{2}$-படி வெந்நீரில் பசளை, கீழாநெல்லி, அருகம்வேர், துத்தியிலை, சுரவிளை, வகை 1-க்கு பலம் 3; வெள்ளரிவிரை பலம் 2-போட்டு 2-மணிநேரம் ஊறவைத்து, [illegible] வடிக்கட்டிக்கொள்ளவும். உபயோகம்.—இதை நீர்ச்சுருக்கு, சோபை, இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—$\frac{1}{4}$-$\frac{1}{2}$-ஆழாக்கு அளவு கொடுக்கலாம். (அனுபவமுறை.)

கபஹரா கஷாயம். செய்முறை.—$\frac{1}{4}$-படி வெந்நீரில், திப்பிலி, சன்னராஷ்டகம், அதிமதுரம், வகை 1-க்கு பலம் $\frac{1}{4}$; முசுமுசுக்கை தழை, பலம் $\frac{1}{2}$. போட்டு, 2-மணிநேரம் ஊறவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{8}$-$\frac{1}{4}$ ஆழாக்கு அளவுகொடுக்கலாம். (அனுபவமுறை.)

தவாடகஷாயம். செய்முறை.—$\frac{1}{2}$-படி வெந்நீரில், சிறு நாவல்பூ, போஸ்த்தக்காய், அதிவிடையம், கடுக்காய்ப்பூ, மரமஞ்சள், சீரகம் வகை 1-க்கு பலம் 1; சடாமாஞ்சி பலம் $\frac{1}{4}$; போட்டு 3-மணிநேரம், ஊறவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும். உபயோகம்.—இதை அதிசாரத்துக்கு உபயோகிக்கலாம். மாத்திரை—$\frac{1}{4}$-$\frac{1}{2}$-ஆழாக்கு அளவு கொக்கலாம்.

தாடிம்பவில்வாதி கஷாயம். செய்முறை.—சிதைத்த மாதுளம் பழத்தோல், 2-பலம்; வில்வக்காய் சதை, 1-பலம்; நீர், 2-புட்டி. இவைகளை, 15-நிமிஷம் காய்ச்சி இறக்கி உடனே அதில் காசுக்கட்டித்தூள், 5-விராகனிடை; லவங்கத்தூள், லவங்கப்பட்டைத்தூள், சாதிக்காய்த்தூள், ஏலத்தூள், வகை 1-க்கு 1-விராகனிடை; சேர்த்து மூடி, குளிர்ந்தபிறகு வடிக்கட்டி, குறைந்த ஜலம் விட்டுக்கொள்ளவும்.

உபயோகம்:—இதை பேதி சீதபேதி, இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—$\frac{1}{4}$-$\frac{1}{2}$—ஆழாக்கு அளவு கொடுக்கலாம். (அனுபவமுறை.)

களிம்புகள்.

கந்தகக்களிம்பு. செய்முறை.—சுத்திசெய்தகந்தகம். 1-பங்கு; சுத்திசெய்தபன்றிநெய், 4-பங்கு. கலந்துக்கொள்ளவும். உபயோகம் சொறி சிரங்குக்குப்பூச இது எடுத்தமருந்து. (இங்கிலீஷ் முறை.)

பூரக்களிம்பு. செய்முறை.—ரசகற்பூரம், 1-பங்கு, சுண்ணாம்பு $\frac{1}{2}$-பங்கு; மெழுகு களிம்பு, 6-பங்கு கலந்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைப்பறங்கிப்புண்ணுக்கு உபயோகிக்கலாம். (அனுபவமுறை.)

கிருதங்கள்.

பீநசகிருதம் செய்முறை.—1-ஆழாக்கு நெய்யைக்காய்ச்சி இறக்கி சூடாயிருக்கும்போதே அதில், குங்குமப்பூ, கோரோஜனம், கோஷ்டம், அதிமதுரம், கோரைக்கிழங்கு வகை 1—க்கு 20-உளுந்து வீறை. கஸ்தூரி, பச்சைக்கர்ப்பூரம், 2-உளுந்து வீறை இவைகளின் தூள்களைத்தூவி, குளிர்ந்த பிறகு வடிக்கட்டிக்கொள்ளவும். உபயோகம்.—இதை ரக்தபீனசம், சலபீனசம், சிழ்பீனசம், இவைகளுக்கு நசியமிடலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

குழம்புகள்.

அகஸ்தியர் குழம்பு.—இந்தயோகத்தில் சேருகிற சரக்குகள்.—பெருங்காயம், கடுகு, இந்துப்பு, ரசம், வெங்காரம், மனோசிலை, திப்பிலி, தாளகம், கருஞ்சீரகம், வாளம், எலுமிச்சம்பழரசம், ஆகிய இவைகளாம்.

நாரங்காதிகுழம்பு. செய்முறை.—நார்த்தங்காய் ரசம், 1—படி; அதில் துருவுள்ள இரும்புத்துண்டுகளை விறையப்போட்டு, 8-நாள் ஊறவைத்து, வடித்துக்கொண்டு அதில் 1—படி கையாந்தகரை ரசமும், 1-படி பொன்னாங்கண்ணி ரசமும் சேர்த்து, குழம்பாய்க் காய்ச்சி, அதில் அதிமதுரம், ஏலம், திப்பிலி, இவைகளின் தூள்கள் வகை 1-க்கு பலம்—$\frac{1}{2}$-சேர்த்துக் கொள்ளவும். உபயோகம்.—இதைப்பாண்டுரோகம், தார்ப்பலம், குன்மம், பிலீகரோகம், இவை முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—$\frac{1}{2}$-1-வராகனிறை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

சிந்தூரங்கள்.

அயசிந்தூரம். செய்முறை.—அரப்பொடியை, கிழிகட்டி, காவல்பட்டை ரசத்தில் 3-4—நாள் ஊறவைத்து, எடுத்து வெய்யிலில் உலரும்படி ஒருநாள் கட்டிவைத்து எடுத்துக்கொள்ளவும்; நீலவர்ண சிந்தூரமாகவிருக்கும், மாத்திரை.—5-உளுந்துவிறை கொடுக்கலாம். (அனுபவமுறை.)

சூர்ணங்கள்.

தீபாக்கினிசூர்ணம். செய்முறை.—திரிகடுகு, ஓமம், சயிந்தியலவணம், இவைகளின் தூள், வகை 1-க்கு 1—பங்கு; சீரகத்தூள் 2-பங்கு. இவைகளைச்சேர்த்து கலந்துக் கொள்ளவும். உபயோகம்.—இதை வாயு, வயிற்றுப்பொருமல், பசியில்லாமை, இவைகளுக்குக் கொடுக்கலாம். மாத்திரை.—15—30, உளுந்துவிறை கொடுக்கலாம். (மைசூர் அரமனைடிஸ்பென்சேரிமுறை.)

அஷ்டசூர்ணம், செய்முறை.—இங்குவாதி சூர்ணயோக சரக்குகளுடன் 8-பங்கு ஓமத்தூள் சேர்த்துக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{2}$—1—விராகனிறை கொடுக்கலாம். (மூலிகசங்கலிதம்.)

பிப்பல்லியாதிசூர்ணம். செய்முறை.—திப்பிலி, அதிமதுரம், வால்மிளகு, அரத்தை வகை 1—க்கு-2; கடுக்காய், 1; சாதிக்காய், $\frac{1}{2}$-கர்ப்பூரம், $\frac{1}{2}$. இச்சூர்ணங்களை பங்குக்கணக்காய் நிறுத்தெடுத்துக் கலந்துக்கொள்ளவும் உபயோகம்.—இதை கபரோகத்துக்குக் கொடுக்கலாம். மாத்திரை.—10-20 உளுந்து விறை கொடுக்கலாம்.

அவிபத்திசூர்ணம். செய்முறை.—சிவதைவேர்ச் சூர்ணம் 2; சயிந்திய லவணத்தூள்-1; சீரகத்தூள், 1. இச்சூர்ணங்களை கலந்துக்கொள்ளவும், உபயோகம்—இதை மலபந்தத்துக்குக்கொடுக்கலாம், மாத்திரை.—1-2—விராகனிறை கொடுக்கலாம்.

ஷர்பத்துகள்.

மாதுலங்காதி ஷர்பத்து. செய்முறை.—கொம்மட்டி மாதுளையை, மேல்தோல் நீக்கி, இடித்து ரசம்பிழிந்து, அந்த நிறைக்கு சமனாகற்கண்டுதூள் கலந்து காய்ச்சி பாகுபதத்தில் வடித்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை பித்தவிர்த்திரோகம், பித்தச்சூடு, இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—2-4, ரூபாயிடை ஜலத்தில் கலந்து கொடுக்கலாம்.

தைலங்கள்.

புக்கூட்டுநெய். செய்முறை.—வாததேகிக்கு; பசுவின்நெய், 1; நல்லெண்ணெய், 2; ஆமணக்கெண்ணெய் - 3 - பித்ததேகிக்கு; நல்லெண்ணெய், 1; ஆமணக்கெண்ணெய்-2; பசுவின்நெய்-3—சிலேஷ்மதேகிக்கு; ஆமணக்கெண்ணெய், 1; பசுவின்நெய் 2-நல்லெண்ணெய், 3-இவ்வித பங்குக்கணக்காய்க்கூட்டி ஸ்நானஞ்செய்யில், திரிதோஷங்களால் காணுகிற சகல தோஷங்களும் நீங்கும். (சிந்தாமணி.)

அங்கூட்டுநெய். செய்முறை.—ஆமணக்கெண்ணெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், பின்னெண்ணெய்; இவைகளைச் சமனாய் கலந்து காய்ச்சிக்கொள்ளவும். உபயோகம்.

இதைத் தனுர்வாதம், மஹாவாதம், சந்நிபாத சுவரம், இருமல், இவைகளுக்கு ஸ்நானஞ்செய்து வைக்கலாம். (சிந்தாமணி.)

வாதசஞ்சீவித்தைலம். செய்முறை.—எருக்கிலைச்சாறு, அதன்பால்; காட்டுச் சதுரக்கள்ளிச்சாறு, அதன்பால்; பிரண்டைச்சாறு, பற்பாடகஷாயம், முருங்கின்கிழங்கின் கஷாயம், வகை 1-க்கு பலம் 5; நல்லெண்ணெய் பலம் 10; வெள்ளாட்டுப்பால் பலம் 45. இவைகளை ஒன்றுபடக்கலந்து இதில், சுறுக்கிய சேராங்கொட்டை பலம்-5; சுத்திசெய்த வாலைப்பருப்பு பலம்-. சேர்த்து தீபாக்கினியாக எரித்து பதத்தில் வடித்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை வாதரோகம், சந்நிபாதம், சுவாசரோகம், இவைகளுக்கு சிறுகத்தொட்டு மேலுக்குப் பூசலாம், வெற்றிலையிற் தேய்த்து உள்ளுக்குக் கொடுக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

நாசிரோகநாசத்தைலம். செய்முறை.—நல்லெண்ணெய், பசும்பால், இளநீர், வகை-1-க்கு படி-1. கூட்டி இதில் சந்தனம், தாமரை வளையம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், கஸ்தூரி மஞ்சள், தேற்றாங்கொட்டை, ஏலம், கோரைக்கிழங்கு, சீரகம், பூலாங்கிழங்கு, பச்சிலை, செங்கழுநீர்க்கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, அதிமதுரம், மஞ்சிட்டிவேர், சண்பகமொக்கு, புழுகுசட்டம், குங்குமப்பூ, இவைகளைத் தனித்தனியே வஸ்திரகாயஞ்செய்து, வகை, 1-க்கு விராகனிறை 1; சேர்த்து மிருதுவாக எரித்து பக்குவத்தில் வடித்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைப் பீநசம், ரத்த பீநசம், பக்குக்கட்டுகிறதுஷ்டபீநசம். திரிவிழுதல், நேத்திர திமிரரோகம், இவைமுதலிவைகளுக்கு ஸ்நானஞ்செய்து வைக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

பீநசத்தைலம். செய்முறை.—நல்லெண்ணெய், நொச்சிச்சாறு, கரிசாலைச்சாறு, வகை 1-க்கு படி-2. இவைகளை ஒருபாண்டத்திலிட்டு, இதில் இந்துப்பு, சித்தரத்தை, திப்பிலி, ஆமணக்கின்வேர், பலமரத்தின்வேர், கிரந்திகாயகம், சுக்கு, கோஷ்டம், தேற்றாங்கொட்டை, சதபுஷ்பி, வாய்விளங்கம், அதிமதுரம், வகை 1-க்கு பலம்-½; இவைகளை வெள்ளாட்டுப்பாலால் அரைத்து கரைத்து காய்ச்சி பதத்தில் வடித்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைப் பீநசரோகங்களுக்கு 8-நாளைக்கொருதடவை ஸ்நானமும், 4-நாளைக்கொருதடவை நசியமும் செய்துவைக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

கரப்பான்தைலம். செய்முறை.—ரசகற்பூரம், லவம், துத்தம், துருசி, கற்பூரம், பாதரசம், கார்போகவிதை, மிருதாரசிங்கி, கஸ்தூரிமஞ்சள், நீரடிமுத்துப்பருப்பு, காட்டுச்சீரகம், நெல்லிக்காய்கந்தகம், வகை 1-க்கு விராகனிறை-½. இவைகளை நன்றாய்ப்பொடித்து 1-படி தேங்காய்ப்பாலில்விட்டு மிருதுவாக எரித்து பதத்தில் இறுத்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைக் கரப்பான் என்கிற ரோகத்துக்கு மேலுக்கு தடவலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

விரணசஞ்சீவித்தைலம். செய்முறை.—வால்கிண்ணம் என்கிற நீண்டகாம்பையுடைய அகலகரண்டியில் 10-பலம் நல்லெண்ணெய் விட்டு அதில், பொடிசெய்த தாளகம், காசிடை; இரண்டிரண்டு

சுறுக்கியசேராங்கொட்டை-10. இவைகளைச்சேர்த்து, மிருதுவாக எரித்து அதை, கழுநீரும் சுத்தசலமும் சமமாக கலந்து நிறைத்துவைத்திருக்கிற வாயகண்டத்தாழியில் ஊற்றி, மறுநாள் வார் எண்ணெய் வழிப்பதுபோல் வழித்து, மறுபடியும் அதைக்காய்ச்சி வடிக்கட்டிக்கொள்ளவும். உபயோகம்.—இந்த ஆராத விரணங்களுக்குத் தடவலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

சிலைத்தைலம். செய்முறை.—பன்றிநெய் பலம்-20; ஒரு பாண்டத்திற் சேர்த்து அதில் அரசு, உதி, வேல், நெல்லி, செம்புரா, இவைகளின் பட்டையின்சாறு, வகை 1-க்கு பலம் 2; புங்கம்பால் பலம்-2; விட்டு, ஜாதிலிங்கம், களிப்பாக்கு, காசுக்கட்டி, வகை 1-க்கு பலம் 1; பொடித்து அதிற்போட்டு 3-நாளுரியபின்பு, 4-வதுநாள் அடுப்பில்வைத்து மிருதுவாக எரித்துப்பதத்தில் வடித்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைப்புரையோடிய விரணங்களுக்கு பூசினால் ஆறிப்போகும். (தைலவர்க்கச்சுருக்கம்.)

கண்தைலம். செய்முறை.—படிக்காரம், தோலுருத்த வெள்ளைப்பூண்டு, குங்குமப்பூ, கோரோசனம், லவங்கம்-வகை 1-க்கு விராகனிறை-2. இவைகளை, 12-பலம் பொன்னாங்காணிரசமும், 12-பலம் முசுமுசுக்கைரசமும் விட்டு அரைத்து உலர்த்தி பொடிசெய்து இதில், கழுவிய எள்ளு பலம் 2-சேர்த்து அரைத்து அதைக் கலுவத்தின் உட்புற ஓரத்தில் அப்பி, கடும்வெயிலில்வைக்க அதிலிருந்து எண்ணெய் இறங்கும், அதை எடுத்துக்கொள்ளவும். உபயோகம்,—இதைப்படலம் முதலிய கண்வியாதிகளுக்கு கலிக்கமிடலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

மாந்தத்தைலம். செய்முறை.—1-படி சிற்றாமணக்கெண்ணெயை ஒருபாத்திரத்திலிட்டு அதில், அருகம்புல், வெள்ளைப்பூண்டுத்திரி, மஞ்சள், உசிலம்பட்டை, துளசிக்கொழுந்து வகை 1-க்கு பலம் 2. இவைகளை பொடித்துபோட்டு, சிறியதுண்டுகளாகிய 4-தும்மட்டிக்காய்களையும் சேர்த்து, அடுப்பிலேற்றி எரித்து, அத்துண்டுகள் சிவக்கும்பதத்தில் வடித்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைகுழந்தைகளுக்குக்காணுகிற மாந்தரோகம், அலறுரோகம் இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை—¼-பலம் வீதம் கொடுக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

வஜ்ஜிரதைலம். இதுவே ஆமைத்தைலம். செய்முறை.—கொச்சில், முடக்கற்றான், விழி, வெண்சாரணை, உத்தாமணி, பாவட்டை, பெருந்தும்பை இவைகளின் ரசம், தேங்காய்ப்பால், சிற்றாமணக்கெண்ணெய் வகை 1-க்கு படி 1. சேர்த்து அதில், சுக்கு, வசம்பு, கல்லுப்பு, தேவதாரம், கப்புமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், வெள்ளைப்பூண்டு, உத்தாமணிவேர், பெருங்காயம், மிளகு, ஆமையின்வோடு, வகை 1-க்கு விராகனிறை-1. இவைகளைத்தேங்காய்ப்பாலால் அரைத்து கரைத்துக்காய்ச்சிப் பதத்தில் வடித்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை குழந்தைகளுக்குக் காணுகிற மாந்தரோகத்துக்குக் கொடுக்கவும். மாத்திரை.—1-பாலாடை அளவு கொடுக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

ஆலகாலவிஷந்தைலம். செய்முறை.—10-பலம் ஆமணக்கெண்ணெயில் கொட்டைப்பாக்கு சிவலிங்கபால் சேர்ப்ப வச்சநாபி பலம்-8. சேர்த்து எரித்து சிவந்துவரும்போது வஸ்திரத்தால் வடிகட்டிக் கொள்ளவும். உபயோகம்.—இதை வாதரோகங்களுக்கு சரீரத்தில் பூசிப்பிடிக்கலாம். (தைலவர்க்கச்சுருக்கம்.)

சிற்சுடர்த்தைலம். செய்முறை.—வேப்பெண்ணெய், நல்லெண்ணெய், வகை 1-க்கு பலம்-10; கலந்துவைத்துக்கொண்டு—நெல்லிக்காய்கந்தகம், பெருங்காயம் வகை 1-க்கு பலம்-4; வெள்ளைப்பூண்டு, பலம் 8; இவைகளைச்சேர்த்து அரைத்து குழப்பி, 16-அங்குல சதுரமுள்ள வெள்ளைச்சீலையிற்றடவி உலர்த்தி, இந்த 3-சல்லேகளை வேர்களை ஒன்றாய்ச்சேர்த்து அதன்மேல் சுற்றி, திரிபோல்திரித்து அதை இருப்புகதிரில் தொங்கவிட்டு, தை எண்ணெயில் தோய்த்துக் கொளுத்தி, அடியில் ஒரு பாத்திரம்வைத்து தை-தெய்யைச் சிறியகரண்டியால் மொண்டு மேலாகச் சிறகச்சிறுகவிட்டு, சுடர் உருவமாக விழுகின்றதைலத்தைச் சேகரித்துக்கொள்ளவும். இவ்வண்ணம் மும்முறை மடக்கிக் கடைசியில் வருந்தைலத்தை, பத்திரப்படுத்திக்கொள்ளவும். உபயோகம்.—இதை இசிவுரோகத்துக்கு கொஞ்சமெடுத்து வெதுப்பிதேகத்தில் தடவிப்பிடிக்கலாம். (தைலவர்க்கச் சுருக்கம்.)

கணரோகத்தைலம். செய்முறை.—சிற்றாமணக்கெண்ணெய், பசுவின்பால், வகை 1-க்கு படி 1; கற்றாழை, பொற்றலைக்கையாந்தகரை, கோவை, பொன்னாங்காணி, புளியாரை, வெங்காயம், கற்பூரவள்ளி, இவைகளின் ரசம், வகை 1-க்கு படி-$\frac{1}{8}$; சேர்த்து அதில், லவங்கம், லவங்கப்பத்திரி, கோஷ்டம், வெந்தியம், கர்க்கடகசிங்கி, சோம்பு, சீரகம், வெள்ளைப்பூண்டு, மாசிக்காய், சாதிபத்திரி, வஸ்திரகாயஞ்செய்த இவைகளின் தூள் வகை 1-க்கு கழஞ்சி-2; சாதிக்காய் தூள் கழஞ்சி-1. கலந்து காய்ச்சி மெழுகு பதத்தில் கோரோசனை, குங்குமப்பூ, வகை 1-க்கு கழஞ்சி 1; ஆகப்பொடித்திட்டிருக்குற வடிகலசத்தில் வடித்து, சீலைமண்செய்து, 5-நாள் நெற்புடத்தில் வைத்தெடுத்துக்கொள்ளவும். உபயோகம்.—இதைக் குழந்தைகளுக்குக் காணுகிற கணவெட்டை, வெட்டையினால் உண்டாகிய சுவரம், தேக உலர்தல், பலவாந்தி, மாந்தம், சிராந்தி, இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—இதில் $\frac{1}{4}$-பலம் முலைப்பாலில் கலந்து காலையில் கொடுக்கலாம். (தைலவர்க்கச் சுருக்கம்.)

குறுந்தோட்டிதைலம்: பலாமடந்தந்தைலம். சிற்றுமுட்டிதைலம். செய்முறை.—சிற்றாமுட்டிவேர் வீசை-$\frac{1}{2}$. இடித்து 4-படி நீர்விட்டு, 1-படிக்குச்சுண்டக்காய்ச்சி, அதில், நல்லெண்ணெய், படி $1\frac{1}{2}$; அரைத்த, சுக்கு, மிளகு, ஏலம், வெட்டிவேர், வகை 1-க்கு பலம் 1; சேர்த்து காய்ச்சி பதத்தில் வடித்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை வாதரோகங்களுக்கு ஸ்நானஞ்செய்து வைக்கலாம். (சாரசங்கிரகம்.)

குளிர்ச்சிந்தைலம். செய்முறை.—சிற்றாமணக் கெண்ணெய், பேயன் வாழைப்பழரசம், செவ்விளநீர், பசுவின்பால், வகை 1-க்கு

மரக்கால் $\frac{1}{8}$-சேர்த்து மெதுவாய் எரித்து மெழுகுபதத்தில் வடித்து சூடுகை ஆறுவதற்கு முன் சுத்தித்து வஸ்திரகாயஞ்செய்த பறங்கிப் பட்டைத்தூள், பலம்-5; கொத்துமல்லி விதைத்தூள் பலம் 3; பலப்பத்தூள் பலம்-3; சிக்குபஸ்மத்தூள் பலம்-2; சீரகத்தூள் பலம் 1; வெள்ளைச் சர்க்கரை, பலம் -$\frac{1}{2}$; இவைகளை அதில் தூவிமத்தித்து வைத்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை உட்சுவரம், மேகச்சூடு அதிசுட்கரோகம், இவைகளுக்குக் கொடுக்கலாம். இச்சாபத்தியம். சிசு, ஆதிவிருத்தர் பரியந்தம், உதயகாலத்திலாவது இராப்போசனம் செய்தபின்பாவது கொடுக்கலாம்; 1-மண்டலம், 48-நாள்வரைக்கும் கொடுக்கவும். மாத்திரை.—$\frac{1}{4}$-பலம் அளவு கொடுக்கலாம். (தைலவர்க்கச் சுருக்கம்.)

கீடாரித்தைலம். செய்முறை.—பொடுதலைச்சாறு, நல்லெண்ணெய் வகை 1-க்கு பலம்-6; உடைத்தமிளகு பலம் $1\frac{1}{2}$. இவைகளைச் சேர்த்து [illegible] புடத்தில், சாறு சுண்டுகிறவரையில் நித்தியம் துழாவித் துழாவிவைத்து பக்குவ பாகத்தில், கற்கத்துடனே எடுத்து வைத்துக்கொள்ளவும். உபயோகம்.—ரோமங்களை உதிர்க்கிற புழுவெட்டுக்கு இந்த தைலத்தை ரோம கூபங்களில் பரவும்படி, ஒரு தினத்துக்கு மூன்றுவேளையாக மூன்றுதினம்தடவி ஊறவைத்து 4-வது நாளில் ஸ்நானஞ் செய்விக்கவும். இப்படி ஒரு மண்டலம் செய்யில், அப்புழுக்கள் சாகும். (தைலவர்க்கச் சுருக்கம்.)

மேகாரித்தைலம். செய்முறை.—1-படி சிற்றாமணக்கு எண்ணெய்; முடக்கற்றான், நன்னாரிவேர், வெள்ளறுகு, அமுக்கிராங்கிழங்கு, விலப்பூனைச்சமூலம், வகை 1-க்கு பலம் 5, ஆற்றுநீர் படி-8; 1-படியாய்ச் சுண்டக்காய்ச்சிய கஷாயம்; கற்றாழைரசம், பொன்னாங்காணிரசம் வகை 1-க்கு படி-$\frac{1}{2}$; வெங்காயரசம், கரிசலாங்காணிரசம், வகை 1-க்கு படி-1; கடுக்காய், பறங்கிப்பட்டை, இவைகளின் தூள் வகை 1-க்கு சேர்-$\frac{1}{2}$; சீரகம், கருஞ்சீரகம், சோம்பு, அதிமதுரம், மிளகு, தாளிசபத்திரி, இவைகளின் தூள், வகை 1-க்கு சேர் $\frac{1}{8}$ சேர்த்து மிருதுவாக எரித்து வடித்து, சீலைமண்செய்து பூமிக்குள் 4-நாள் வரையில் புதைத்து எடுத்துக் கொள்ளவும். உபயோகம்.—இதை மேகவாதரோககூட்டம், மேகவிரணங்கள், இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-பலம் வீதம் கொடுக்கலாம். 5-நாள் கொடுத்து உப்பில்லாத பத்தியம் வைக்கவும். 6-வது நாள்முதல் 5-நாள் வரையில் வறுத்த உப்பு கூட்டிக் கொள்ளவும், 11-வது நாளில் நெய் தேய்த்து ஸ்நானம் செய்து வைக்கலாம். (தைலவர்க்கச் சுருக்கம்.)

கேசரஞ்சகத்தைலம். செய்முறை.—தேங்காய்க்குள் கருப்புப் புல்லாந்திப்பழங்களை அடைத்து களிமண்பூசி, ஈரநிலத்தில் புதைத்துவைத்து, 1-மாதம் சென்றபின் எடுத்து, காய்க்குள் குழைந்திருப்பதை எடுத்து, சமன் நல்லெண்ணெய் கூட்டி எரித்து பதத்தில் வடித்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை 1-வருஷம் ஸ்நானஞ்செய்துவரில் தலைமயிர் அதிகமாய் வளரும். (தைலவர்க்கச்சுருக்கம்)

பஸ்மங்கள்.

சத்துபஸ்பம்.—(zinc) பொன்றுங்காணி ரசத்தை ஒரு சிறிய குகையில் $\frac{3}{4}$-க்குவிட்டு, ஒரு சாணிக்கையால்மூடி, மத்தியில், பேறு இறகு புகும்படி ஒரு துவாரஞ்செய்து, சத்தை ஒரு இரும்புகரண்டியிலிட்டு, உருக்கி மூடியை பத்திரமாய் பிடித்துக்கொண்டு அதில்விட்டுவிடவும். விடும்போது முகத்தை தூரம் வைத்துக்கொள்ளவும், சப்தம் பிறக்கும். குகையிலிருக்கிற சத்துபில்லையை எடுத்து, இரும்புசட்டியிலிட்டு உருக்கி, சத்துக்கு $\frac{1}{4}$-பங்கு அபினிசேர்த்து, இரும்பு கம்பியால் துழவிக் கொண்டிருந்தால், புஷ்பம்போல் பொரிந்துவிடும். அதை மெல்லிய துணியிலிட்டு வஸ்திரகாயம் செய்துக்கொள்ளவும். உபயோகம்:—இதைக் கண்ணோவுக்கு, 1-உளுந்து நிறை தினம் 3-தடவை, கண்ணிலிடலாம். வயிற்றுநோய், வாதரோகங்கள், இருமல், பலவீனம் இவைகளுக்கு உள்ளுக்குக் கொடுப்பதுண்டு. (அநுபவமுறை.)

பஞ்சலவணபஸ்மம். இதுவே சூர்ணம். செய்முறை.—சவுக்காரம், 1; வளையலுப்பு, $\frac{1}{4}$; இந்துப்பு, $\frac{1}{4}$; வெண்காரம், $\frac{1}{4}$; அரியுப்பு, $\frac{1}{4}$; இவைகளை அமுரி (சிறுநீர்) விட்டரைத்து பில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டு, 5-வரட்டியில் புடம்போடவும். உபயோகம்.—இதை வயிற்றுவலி, குன்மம், காச்சக்கட்டி, குலைக்கட்டி முதலியவைகளுக்குக்கொடுக்கலாம். மாத்திரை.—10-20-உளுந்துநிறை கொடுக்கலாம். (சாரசங்கிரகம்.)

மாத்திரைகள்.

பூர்வாசாரிகளால் தேவகண சிகிச்சை என்று ஏற்படுத்திய சில யோகங்கள் இதனடியில் காணலாம். ரசம், கந்தகம், பாஷாணம், லோஹம் ஆகிய இவைகள் சேருகிறபடியால் இவைகளை வெகு சாக்கிரதையாய் உபயோகிக்கவேண்டியது. இவைகள் குரூர மருந்துகளாய் இருந்தபோதிலும் பிரமாணமறிந்து கொடுத்தால் வெகு ரோகங்களை நீக்கும். பிரமாணம் அதிகமானால், துர்க்குணங்களைப் பிறப்பிப்பதுமன்றி, சிலரில் பிராணம் சரீரம் விட்டு நீங்கும்படியாகவும் செய்யும். இவைகளைச் செய்யவும், உபயோகிக்கவும் விருப்பங்கொண்டவர்கள் முதல், ரசவாத சாஸ்திரம் வாசித்து அதில் கண்டிருக்கிற பொருள்களைத் தெரிந்துகொள்ளவேண்டியது. ரசவாத சாஸ்திரஞானம் இல்லாமல் பிரயத்தினப்பட்டால், பலிப்பது கஷ்டம், கஷ்டம், கஷ்டம். பலித்ததென்று வீணெண்ணங்கொண்டு கையாடுவது, அநர்த்தம், அநர்த்தம், அநர்த்தம்.

ஒரு சரக்கை மற்றொரு சரக்கோடு சேர்ப்பிக்க, அக்கினிசகாயம் முதல் வேண்டியது. அந்த அக்கினியின் சக்திக்கு ஒற்றதாய் சரக்குகளும் கூடும். மேலும் ஒரு சரக்குக்கிருக்கிற குணம், மற்றொரு சரக்கோடு சேர்ந்தபிறகு மாறி, நூதனகுணங்கள் பிறக்கின்றன. அது எப்படி எனில்:—

ஒரு பலம் ரசம் தனியாய் சாப்பிட்டபோதிலும், அதின் பளுவால் வயிற்றிலிருந்து கழிந்துவிடுமே யொழிய, கெடுதி யொன்றும் பிறக்காது. அப்படியிருக்கிற சரக்கை, குல்கந்தோடுசேர்த்து அரைத்தால், காற்றிலிருக்கிற ஆக்ஸிஜன் என்கிற வாயு, சமனுய்ச்சேர்ந்து, ரசம்கருத்து குணம்மாறி விடுகின்றது. அதை 1—5-உளுந்து நிறை கொடுக்கவேண்டியதாகிறது. 2—3-நாள்விடாமல் கொடுத்தால் வாய் ரணமாகிவிடும். ரசத்தைக்காற்றுப்பட புடம்போட்டால், காற்றிலுள்ள ஆக்ஸிஜன் என்கிற வாயு, 2-பங்குசேர்த்து சிந்தூரமாகிவிடும். அந்தச் சிந்தூரத்தை உள்ளுக்குக்கொடுத்தால், தாதுக்களைக்கெடுத்து அநர்த்தம் செய்யும். அந்த ரசச்சிந்தூரத்தையே சூடு அதிகப்பட எரித்தால், அதில் கூடியிருக்கிற ஆக்ஸிஜன் என்கிற வாயுநீங்கி, ரசம் மாத்திரம் நிற்கும். சூட்டைமற்றும் அதிகப்படுத்தினால், ரசமே பறந்துவிடும். அப்போது [illegible]வாதி பல்லை இளிக்கும்படி நேரிடும். இந்த திருஷ்டாந்தங்களெ[illegible] உஷ்ண விதானத்தைத் தெரிவிக்கின்றது. மேலும் ரசம், கறியுப்போடு சேர்ந்து பூரம், வீரம், என்கிற இரண்டு உப்புகள் ஆகின்றன. ரசம், 1-பங்கு, குளோரின் என்கிற வாயு, 1-பங்கு சேர்ந்து பூரம் பிறக்கின்றது. ரசம் 1-பங்கு, குளோரின்வாயு, 2-பங்கு சேர்ந்து வீரம்பிறக்கின்றது. பூரத்தில் 20-உளுந்துநிறை வரையில் கொடுக்கலாம். வீரத்தில் 20-உளுந்து நிறைகொடுத்தால் கொன்றுவிடும். இந்தத்திருஷ்டாந்தங்கள் சரக்குகள் கூடுகிற விதங்களையும், அந்த விதிகளால் கூட்டுகளுக்குண்டாகிற குணங்களையும் தெரிவிக்கின்றன. பூரம் செய்வதில் கைப்பிசகாய், வீரம் பிறந்துவிட்டால், ரசவாதிஎடுத்துக்கொண்ட பிரயாசையும், சிலவழித்தபணமும் வியர்த்தமாய்விடும். ரசம் கந்தகத்தோடு சேர்ந்து லிங்கம், ஆகின்றது. இது கெடுதிசெய்கிற மருந்தல்ல.

இனி கந்தகத்தைக்குறித்து சில சங்கதிகள் சொல்லப்படும். கந்தகம், தனியாய் 1-விராகனிறை வரையில் கொடுக்கலாம். நன்மைசெய்யும். கந்தகமும், பொட்டிலுப்புச்சேர்ந்து இரண்டுவித பதார்த்தங்கள் பிறக்கின்றன. ஒன்று வாயுரூபமாகவும், மற்றொன்று திரவரூபமாகவும் இருக்கும். வாயுரூபசரக்கு இரும்பலை யுண்டாக்கும், மூச்சடைப்பைப் பிறப்பிக்கும், துர்வாசனைகளை நீக்கும். திரவரூபமாகிய கந்தகத்திராவகம் மிகுந்த கொடிய சரக்கு; எல்லாவற்றையும் நாசப்படுத்திவிடும். அப்படியிருந்தும், விதிப்பிரகாரம் கொடுத்தால், அவ்வளவு நன்மையைத்தருகிற மருந்து ஒன்றுமில்லை.

கந்தகம், பொட்டிலுப்பு, சுண்ணாம்பு சேர்ந்து மத்தாப்பு மருந்து ஆகின்றது. சுண்ணாம்புக்கு பதில் கரி ஒருபிரமாணத்தில் சேர்ந்து பாணமருந்தும், ஒரு பிரமாணத்தில் புருசு மருந்தும், ஒருபிரமாணத்தில், சக்கிரபாணமருந்தும் இவ்விதமாய் பலவித விநோதபாண மருந்துகள் ஆகிறதுமல்லாமல், ஒருபிரமாணத்தில் சேருகிற கந்தகம், உப்பு, கரி, வெடிமருந்தாகி அநேக அநர்த்தங்கள் செய்வது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம்.

இவ்வித திருஷ்டாந்திரங்கள் சொல்லப்புகின் விஷயம் விரியும். ஆகையால், முடிவானவார்த்தை என்னவெனில், ரசவாத சாஸ்திரம் அறிந்த ரசவாதிக்கே, ரசாயனங்களைச்செய்ய யோக்கியதையுண்டு.

இனி ரசம், கந்தகம், பாஷாணம், மனோசிலை, தாளகம், அயம், முதலிய சரக்குகள் சேர்ந்த சில யோகங்கள் இதனடியில் காணலாம். அவைகளுக்கு தேவதைகள் பெயர் இட்டிருப்பதால், தேவர்களுக்கு உபயோகப்படுத்தினதாய் யூகிக்கலாம். இவைகளைச்செய்து உபயோகிக்க நமக்கு யோக்கியதை இல்லை; ஆகையால் ஒவ்வொரு யோகங்களில் சேருகிற சரக்குகளை மாத்திரம் என்னால் கூடியவரையில் தெரிந்து குறித்திருக்கிறேன். சில யோகங்களின், சரக்குகள் என் விசாரணைக்குள் அகப்படாததினால், அவைகளின் பெயர்களைமாத்திரம் குறித்திருக்கிறேன். இந்த யோகங்கள் மூலிசங்கலிதம், சாரசங்கிரகம் என்கிற கிரந்தங்களில் காணலாம்.

ஆநந்தபைரவரசம்.—இதில் சேருகிற சரக்குகள், நாபி, திரிகடுகு, கந்தகம், வெங்காரம், தாம்பிரபஸ்மம், கரி ஊமத்தன் விரை, லிங்கம் சமஷிறை, கஞ்சா கஷாயத்தில் அரைப்பு.

ஆனந்தரசம்.—இதில் சேருகிற சரக்குகள், நாபி, ரசம், மனோசிலை, கந்தகம், லிங்கம், வெங்காரம், சமஷிறை; எலுமிச்சம் பழரசம் விட்டரைப்பு.

சச்சுதாநந்தபைரவரசம்.—(ச-ன்) ரசம், கந்தகம், நாபி, சாதிக்காய், மிளகு, இஞ்சி ரசம்.

சந்நிபாத பைரவரசம்.—(ச-ன்) ரசம், கந்தகம், நாபி, வங்கபஸ்மம், வெங்காரம், அத்திப்பால்.

சந்நிபாதாந்தக ரசம்.—(ச-ன்) ரசம், கந்தகம், அப்பிரகபஸ்மம், யவக்ஷாரம், வெங்காரம், சத்திச்சாரம், சீரகம், திரிகடுகு, திரிபலை, சயிந்தலவணம், சித்திரமூலகஷாயம்.

காலாந்தபரைவரசம்.—(ச-ன்) ரசபஸ்மம், சொர்ன்னபஸ்மம், சங்கு, கந்தகம், முத்து, வெங்காரம், சித்திரமூலகஷாயம்.

காலபரைவரசம்.—(ச-ன்) நாபி, மிளகு, கந்தகம், ரசம், வெங்காரம், பேயத்திப்பால்.

பூர்ணசந்திரோதயரசம்.—(ச-ன்) தங்கரேகு, ரசம், கந்தகம், செம்பருத்திப்பூ ரசம், திரிகடுகு, சாதிக்காய், லவங்கம், முந்திரிப்பருப்பு.

லோகோத்மதுர்சம்.—விரேசனபேதியையுண்டாக்கும். சகம் உந்தி இவைகளில்தடவினாலும், புஷ்பச்செண்டில் தெளித்து மோகந்தாலும் பேதியாகும்.

ஜலமஞ்சரி.—(ச-ன்) கந்தகம், லோஹம், வெங்காரம், சீனக்காரம் சங்குப்பொடி, சிலாஜித்து, சஹஸ்திரபேதி, கஸ்தூரி, வகை 1-க்கு 1 பங்கு வெடியுப்பு 10-பங்கு.

காளமேஹநாராயண சிந்தூரம்.—(ச-ன்) வெடியுப்பு, சீனம் துரிசு, வெங்காரம், நவாக்ஷாரம், கல்லுப்பு, பூநீர், ரசம், லிங்கம், அரி

112

தாரம், கந்தகம், மனோசிலை, சமஷிறை, அாதுளை, கண்டங்கத்திரி, ஆடாதோடை இவைகளின் ரசத்தில் அரைப்பு.

பாரதி ரசம்.—ச-ன் ரசம், கந்தகம், வங்கபஸ்மம், வெங்காரம், ஆலம்பால்.

கல்லியாண பைரவரசம்.—ச-ன் கந்தகம், லிங்கம், வெங்காரம், திரிகடுகு, எலுமிச்சம்பழ ரசம்.

கெருட்துவாஜ ரசம்.—ச-ன் ரசம், லிங்கம், அப்பிரக பஸ்மம், கந்தகம், திரிகடுகு, உப்பு, லவங்கம், திப்பிலிமூலம், சிறு செருப்படை ரசம்.

விஸ்வம்பர ரசம்.—ச-ன் ரசம், கந்தகம், எருக்கன்வேர் கஷாயம், கோழிபித்தம், மயில்பித்தம்.

வைஷ்ணவ ரசம்.—ச-ன் லிங்கம், திரிகடுகு, நாபி, கஷாயம்.

திரிவிக்கிரம ரசம்.—ச-ன் லிங்கம், நாபி, திப்பிலி, தயிர்நீர்.

கனகசுந்தர ரசம்.—ச-ன் லிங்கம், கந்தகம், நாபி, ஊமத்தின் விரை, எலுமிச்சம்பழரசம்.

நாராயண ரசம்.—ச-ன் துருசி, தாளகம், மிளகு, கஷாயம், எலுமிச்சம்சழரசம்.

ரசபூபதி ரசம்.—ச-ன் ரசம், கந்தகம், நாபி, அரப்பொடி, செம்பு, மிளகுதூள், எலுமிச்சம்பழரசம்.

நவலோஹ அக்னிகுமார ரசம்.—ச-ன் ரசம், தங்கரேகு, வெள்ளிரேகு, வங்கரேகு, இரும்புதகடு, கருவங்கதகடு, செம்புரேகு, துத்திராஹரேகு, எருக்கன்வேர் கஷாயம்.

ஜயவிக்கிரம ரசம்.—ச-ன் ரசம், கந்தகம், நாபி, தாளகம், பாஷாணம், வெங்காரம், துருசி, எருக்கன்வேர் கஷாயம், சர்ப்பவிஷம், எருமை பித்தநீர்.

நரசிம்ஹ ரசம்.—ச-ன் நாபி, ரசம், லிங்கம், கந்தகம், கரசிலாங்காணி ரசம்.

திருநேத்திர ரசம்.—ச-ன் ரசம், நாபி, கந்தகம், தாம்பிரபஸ்மம் பால், கொச்சி ரசம்.

சந்நிபாதகுராங்குச ரசம்.—ச-ன் ரசபஸ்மம், அப்பிரக பஸ்மம் தாளகம், ஹேமாக்ஷிகம், பெருங்காயம்.

ஜயமங்கள ரசம்.—ச-ன் ரசபஸ்மம், அப்பிரக பஸ்மம், காந்த பஸ்மம், லோஹபஸ்மம், வெங்கலபஸ்மம், இரும்புபஸ்மம், தாளகம், ஹேமாக்ஷிகம், திரிகடுகு, நாபி, வெங்காரம், சித்திரமுலம்.

பிரதாபலங்கேஸ்வர ரசம்.—ச-ன் ரசம், அப்பிரக பஸ்மம், கந்தகம், திரிகடுகு, லோஹபஸ்மம், சங்குபஸ்மம்.

பஞ்சலோஹசிந்தூரம்.—ச-ன் தங்கம், வெள்ளி, வங்கம், லிங்கம் வெள்ளைச்சாறுவேளைவேர் ரசம்.

சித்தபைரவரசம், சுத்தபைரவரசம், சொர்ணநந்தபைரவரசம், பிர்மானந்தபைரவரசம், விநோதபைரவரசம், தசவித அக்கினிகுமாரரசம், சுவயமக்கினிரசம், வங்கேஸ்வரரசம், சர்வஜித்துரசம், மேஹகுலாந்தகரசம், குன்மகுடாரம், வாதராக்ஷசரசம், ராஜமிருகாங்கரசம், மஹாராஜமிருகாங்கரசம், ராஜகண்டேஸ்வரரசம், ராஜராஜேஸ்வரரசம், வசந்தகுசுமாகரரசம், மஹாவசந்தகுசுமாகரரசம், லலக்கேஸ்வரரசம், ஏகாதசருத்திரரசம், சிந்தூர பூஷணம், சிந்தாமணிரசம், திரைலோக்கிய சிந்தாமணிரசம், திரைலோக்கிய சூடாமணிரசம், திரைலோக்கியரக்ஷாமணிரசம், பாஷாணபின்னவச்சிரரசம், நவலோஹபூபதிரசம், பூபதிரசம், சூலைப்பூபதிரசம், சுவச்சந்தபைரவரசம், மஞ்ஞெஹரபைரவரசம், பூதபைரவரசம், விதாரணபைரவரசம், சங்கரபைரவ ரசம், காருண்ணியபைரவரசம், விஜயபைரவரசம், மதனபைரவரசம், சித்தாக்கினிகுமாரரசம், உத்தமாக்கினிகுமாரரசம், திவ்வியாக்கினிகுமாரரசம், நாகேஸ்வரரசம்.

சுத்தமண்டூரம்—மஹாமண்டூரம்—சித்தமண்டூரம்—நாராயண மண்டூரம்.

கவாடகுளிகை செய்முறை.—அபினி, 6; சுக்கு, 7; திப்பிலி, 8; சீரகம், 9; மிளகு, 10; இவைகளின் தூள்களை வராகனெடைக் கணக்காய் எடுத்து கல்வத்திலிட்டு, விஷ்ணுகிராந்தி கஷாயத்தால் 4-சாமமரைத்து, பசும்பயறுபோலும், மிளகுபோலும் உருட்டி, நிழலில் உலர்த்திக்கொள்ளவும். உபயோகம்.—இதை வயிற்றிரைச்சலுடைய கழிச்சலுக்குக்கொடுத்தால், வாயுவைப்போக்கி, மலத்தை இறுகச்செய்யும். மாத்திரை.—குழந்தைகளுக்கு சிறிய குளிகையில் 1-ம், பெரியவர்களுக்கு, பெரியகுளிகையில் 1-2-ம், கொடுக்கலாம். (அநுபவமுறை.)

லேகியங்கள்.

வீரியவிருத்திலேகியம். செய்முறை.—சாலாமிசிரி-8; சாரைப்பருப்பு-2; சாதிக்காய்-2; லவங்கம்-2; ருமிமஸ்தகி-2; திராக்ஷபழம்-8; கசகசா-4; வாதுமைப்பிசினி-2; முருங்கைவிரை-2; கஞ்சா 5; குங்குமப்பூ-1; சருக்கரை-76; பால், தேவையானது. முதல் சரக்குகளை பங்குகணக்காய் சிறுத்தெடுத்து பால்விட்டரைத்து, மற்ற பாலில் கரைத்து பிறகு சருக்கரைசேர்த்து காய்ச்சி லேகியபதத்தில் இறக்கி ஆறினபிறகு 5-பங்கு தேனும், 10-பங்கு நெய்யும்விட்டு தேவையான வெள்ளிரேகும் சேர்த்து கலந்துக்கொள்ளவும். மாத்திரை.—½-1, வராகனிறை கொடுக்கலாம். (அநுபவமுறை.)

தீபாக்கினிலேகியம். செய்முறை.—தீபாக்கினி சூர்ணம், 1-பங்கு; வெல்லம், 1-பங்கு; நீர், ½-பங்கு; இவைகளைச் சேர்த்து முறைப்படி லேகியம் செய்துக் கொள்ளவும்.

சண்டமாருதலேகியம். செய்முறை.—கண்டங்கத்திரி ரசம் ஆடாதோடை ரசம், மணத்தக்காளிரசம், சுக்கு இலைரசம், ஆடாதோடை ரசம், வகை-1-க்கு படி-¼. கலந்து அதில் 5-பலம் சர்க்கரை கரைத்து

பாகுசெய்து அதில் திப்பிலி, அரத்தை, சுக்கு, இவைகளின் தூள் வகை 1-க்கு கழஞ்சி, 10; தூவி வீசம் படி நெய்யும், ⅛-படி தேனும், விட்டு மிஸ்ரமித்துக் கொள்ளவும். உபயோகம்.—இதை கபரோகங்களுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2, வராகனிறை கொடுக்கலாம்.

வடகங்கள்.

மண்டூரவடகம்.-(ச-ள்)—மண்டூரம், 5-பங்கு; திரிகடுகு, சிரகத்துவயம், மரமஞ்சள், இந்துப்பு, வாய்விளங்கம், லவங்கம், அஜமோதம், வகை - 1-க்கு-1-பங்கு. இவைகளைக்கூட்டி கரிப்பான் ரசத்தால் ஆட்டி, தேத்தாங்கொட்டை மாத்திரம் உண்டைகள் செய்துக் கொள்ளவும், உபயோகம்.—இதைப் பாண்டு, காமாலை, சோபை, க்ஷயம், பழயசுவரம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2-வடகம் கொடுக்கலாம்.

சந்திரப்பிரவாஹ வடகம்.

நாநாவிதயோகங்கள்.

விரேசனமிளகு செய்முறை.—கள்ளிமரத்தை துளைத்து அதில் தேவையான மிளகைவைத்து, கள்ளிமரத்துண்டாலேயே அடைத்து காவிசீலை சுற்றி 21-நாள் ஊறவைத்து எடுத்துக்கொள்ளவும். உபயோகம்.—இதை மலபந்தத்துக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—பிரகிருதி அறிந்து 1-2-3-மிளகைக் தாம்பூலத்தோடு மென்று விழுங்கும்படிச் செய்தால், பேதியாகும்.

லவங்கத்தையும் இதே பிரகாரம் செய்துக்கொடுக்கலாம்.

பஞ்சமூலம்.—திப்பிலிமூலம், பேரரத்தை, சித்திரமூலம், சுக்கு, சிறுதேக்கு, இக்கூட்டுக்குப்பெயர்.

லகு-பஞ்சமூலம்.—சிறுவழுதுணம், சிறுநெருஞ்சில், சிறுமல்லிகை, கண்டங்கத்திரி, பெருமல்லிகை, இவைகளின் வேர்கள்.

மஹாபஞ்சமூலம்.—பாதிரிவேர், வாகைவேர், பெருங்குமிழம் வேர், வில்வவேர், தழுதாழைவேர், இக்கூட்டுக்குப் பெயர்.

விஷப்பிரதிவிஷங்கள், அல்லது முறிவுகள்.

சுண்ணாம்பு.—இதற்கு சீந்தில்சாறு, மஞ்சள், இவைகள் முறிவு.

தாம்பிரகளிம்பு.—இதற்கு நொச்சிரசம் முறிவு.

எருக்கன்பால்.—இதற்கு நீலிமுறிவு.

சரக்கொன்றை. கருணைக்கிழங்கு.—இவைகளுக்கு வெற்றிலை ரசம் முறிவு.

வாழைப்பழம்.—இதற்கு மிளகுமுறிவு.

பால்.—இதற்கு திரிகடுகு முறிவு.

மாமிசங்கள்.—இவைகளுக்கு பருத்திஇலைரசம், ஆலம்பால்முறிவு

கோதுமைமுதலிய மாவுகள்.—இவைகளுக்கு பெருங்காயம் கொத்துமல்லிதழை முறிவு.

ரசம்.—இதற்கு கந்தகம் முறிவு. சகலவிஷத்துக்கு முறிவு.

6-வது அத்தியாயம்.

நெம்பர்.	இங்கிலீஷ் மருதுகள் British Officinal Articles.	இங்கிலீஷ் மருந்துக்கு பதில் உபயோகப்படுத்த தகுதியான தமிழ் மருந்துகள். May be employed as substitute. தமிழ் பெயர்.	இங்கிலீஷ் பெயர்கள்.
1	சீமை நன்னாரி வேர். Sarsaparilla.	நன்னாரிவேர். காவ்ஜபான். பால்வள்ளி.	Hemidesmus. Root. Gouzaban; Echium. Ichnocarpus frutescens.
2	சாண்டொனின் Santonin.	புரசன்விரை. பப்பளிப்பால். மாம்பருப்பு. காட்டுச்சீரகம்.	Butea frondosa. Juice of Papaya. Mango seeds. Vernonia anthelmintica.
3	சிங்கோனாபார்க். Cinchona Bark.	குடசப்பாலை. வேப்பம்பட்டை. தேன்பூச்சிமரப் பட்டை.	Conessi Bark. Nim Bark. Bark of Cedrela Toona.
4	காய்புட்டி எண்ணெய். Oil of Cajuput	சக்குனார்புல் தைலம்.	Lemon Grass Oil.
5	பெப்பர் மின்ட் தைலம். Oil of Peppermint.	ஓமத்தைலம். புதினா.	Oil of Omum. Micromeria capitellata.
6	பெல்லடோனா. Belladonna.	ஊமத்தன் இலை, விரை.	Dhatura.
7	சீமைசடாமாஞ்சி. Valerian.	நாட்டுசடாமாஞ்சி.	Nardostachys Jatamansi.

நெம்பர்.	இங்கிலீஷ் மருந்துகள். British Officinal Articles.	இங்கிலீஷ் மருந்துக்கு பதில் உபயோகப்படுத்த தகுதியான தமிழ் மருந்துகள். May be employed as substitute. தமிழ் பெயர்.	இங்கிலீஷ் பெயர்கள்.
8	காஸ்டர். Caster.	புழுகு.	Odorous Secretion of Viverra Zibetha.
9	கைனோ. Kino.	புரசன் பிசின்.	Bengal Kino.
10	ஓக்பார்க். Oak Bark.	மாதுளம்பழத்தோல். கருவேலன்பட்டை ஆவாரை.	Pomegranate fruit bark. Babul Bark. Bark of Cassia auriculata
11	மாசக்காய். Oak Galls.	நெல்லிவற்றல். கர்க்கடகசிங்கி. கடுக்காய்.	Dried fruit of Phyllanthus Emblica. Rhus Succedanea. Terminalia Chebula.
12	சுக்கு. Ginger.	கஸ்தூரிமஞ்சள். பூலாங்கிழங்கு.	Zingiber Cassumunar. Zingiber Zerumbet.
13	சீமை அதிமதுரம். Liquorice Root	குன்றுமணிவேர்.	Root of Abrus Precatorius.
14	பார்லி. Barley.	அரிசி.	Rice.
15	கோதுமைமாவு. Wheaten flour	அரிசிமாவு.	Rice flour.
16	ஐயதூன் எண்ணெய். Olive Oil.	வேர்க்கடலை எண்ணெய். நல்லெண்ணை.	Ground-nut Oil. Jinjili Oil.
17	டிரெகெகாந்த். Tragacanth.	கதிராகோந்து. பாதாம்பிசின்.	Kutira Gum.

நெம்பர்.	இங்கிலீஷ் மருந்துகள். British Officinal Articles.	இங்கிலீஷ் மருந்துக்கு பதில் உபயோகப்படுத்த தகுதியான தமிழ் மருந்துகள். May be employed as substitute.	
		தமிழ் பெயர்.	இங்கிலீஷ் பெயர்கள்.
18	சீமை விளாம்பிசின். Gum Acacia.	விளாம்பிசின்.	Wood apple Gum.
19	இபிகாசியு என. Ipecacuanha.	எருக்கன் வேர்ப்பட்டை. நாய்ப்பாலையிலை.	Mudar Root Bark. Tylophora Leaves.
20	ஆர்மொரேசிய. Armoracia.	முருங்கைவேர்.	Moringa Pterygosperma.
21	ஸ்குவில். Squill.	விஷமூங்கில். நரிவெங்காயம்.	Crinum Root. Indian Squill.
22	கொபேபா. Copaiba.	மர எண்ணெ. சந்தனத்தைலம்.	Wood Oil Gurjun Balsam. Sandalwood Oil.
23	ஸர்பென்டேரியருட். Serpentaria Root.	பெருமருந்து	Root of Aristolochia Indica.
24	ஸினிகருட். Senega Root.	குப்பைமேனிரசம். ஆடாதோடை இலை ரசம்.	Juice of Acalypha Indica: Inspissated Juice of Justicia Adhatoda.
25	காட்லிவர் ஆயல் Cod Liver Oil.	தேங்காய்ப்பால். சுறாமீன்நெய்.	Juice of Cocoa Nut. Shark Liver Oil.
26	எர்கட். Ergot.	கஞ்சா. ஹொலயர்கண்ட.	Indian Hemp.
27	ஜாலப். Jalap.	காக்டான்விரை. சிவதைவேர்.	Seeds of Pharditis Nil Kaladana. Ipomoea Turpethum.

நெம்பர்.	இங்கிலீஷ் மருந்துகள். British Officinal Articles.	இங்கிலீஷ் மருந்துக்குபதில் உபயோகப்படுத்த தகுதியான தமிழ் மருந்துகள், May be employed as substitute.	
		தமிழ் பெயர்.	இங்கிலீஷ் பெயர்கள்.
28	மெஜீரியன் பார்க். Mezereon Bark	சித்திர மூலவேர்ப்பட்டை.	Root Bark of Plumbago Rosea.
29	மாடிகொலீவ்ஸ். Matico Leaves.	பனைம்பஞ்சு. தென்னம்பஞ்சு.	
30	குவாஷ்ய. Quassia.	நிலவேம்பு.	Kariyat.
31	ஜெனஷன்ருட். Gentian Root.	சுரத்துநிலவேம்பு. சீமைநிலவேம்பு வெள்ளருகு.	Chiretta.
32	கலம்பருட். Calumba Root	அமிர்தவள்ளி. மரமஞ்சள்.	Cicendia Hyssopifolia. Gulancha. Coscinium Fenestratum.
33	கஸ்பேரியபார்க் Cusparia Bark	மினகரணைவேரின் பட்டை.	Toddalia Root Bark.

அநுபந்தம்.

பூர்வாசாரிகள் குறித்திருக்கிற 4448, ரோகங்கள் எளிதில் அறியும்பொருட்டு, வகுப்புகளாய் பிரித்திருக்கின்றனர். ஒவ்வொரு ருஷி ஒவ்வொரு விதமாய் பிரித்திருக்கிறார். ஆயுர் வேதத்தில் கண்டிருக்கிற வகுப்புகள் எவை எனில் :—

1.—காதரோகங்கள் ; கிரந்திரோகங்கள். Injuries and Tumours.

2.—இந்திரிய ரோகங்கள் ; சிரோ ரோகங்கள். Diseases of the senses and the head.

3.—சர்வாங்க ரோகங்கள். General diseases.

4.—பூதகண ரோகங்கள். Derangement of the faculties from demoniacal possessions.

5.—பால ரோகங்கள் ; பாலிந்த ரோகங்கள். Diseases of infant and nurses.

6.—விஷப்பிரதிவிஷம். Antidotes.

7.—ரசாயனம். Alchemistry.

8.—மனுஷிய அபிவிருத்தி. Means of increasing the human race.

வேறொரு சாஸ்திரத்தின் வகுப்புகள் எவை எனில் :—

1.—சாத்திய ரோகங்கள். Curable diseases.

2.—கஷ்ட சாத்திய ரோகங்கள். Diseases cured with difficulty.

3.—அசாத்திய ரோகங்கள். Incurable diseases.

மற்றொரு சாஸ்திரத்தின் வகுப்புகள் எவை எனில்:—

1.—பாரம்பரிய ரோகங்கள். Hereditary diseases.

2.—ஆகந்துக ரோகங்கள். Acquired diseases.

சரகம் என்கிற சாஸ்திரத்திலும், இன்னம் சில உயர்ந்த கிரந்தங்களிலும், ரோகங்கள், 4-வகுப்புகளாய்ப் பிரித்திருக்கின்றன ; அவை எவை எனில் :—

1.—ஆகந்துகரோகங்கள். Accidental disease.

2.—நிஜ ரோகங்கள், அல்லது சரீர ரோகங்கள். Bodily diseases.

116

3.—மானசரோகங்கள். Mental diseases.

4.—ஸ்வபாவிக ரோகங்கள். Natural diseases.

ஸிஸ்ருதத்தின்படி ரோகவகுப்புகள் இரண்டு ; அவை எவை எனில்:—

1.—ஸஸ்த்திர சாத்திய ரோகங்கள். Diseases cured by manual treatment.

2.—விரேசன கிரியா சாத்திய ரோகங்கள். Diseases cured by medicine.

இவ்விதமாக வகுப்புகள் பிரித்திருந்தபோதிலும், உயர்ந்த சில கிரந்தங்களில் கண்டிருக்கிற வகுப்புகள், 7 ; அவை எவை எனில்:—

1.—அதிபால பிரவர்த்தித ரோகங்கள். Hereditary diseases.

2.—ஜன்மபல பிரவர்த்தித ரோகங்கள். Diseases of the embryo.

3.—தோஷபல பிரவர்த்தித ரோகங்கள். Diseases of the humours.

4.—சாங்காதபல பிரவர்த்திதரோகங்கள். Accidental diseases.

5.—காலபல பிரவர்த்திதரோகங்கள். Diseases caused by cold, heat, rain, storms, &c.

6.—தெய்வபல பிரவர்த்தித ரோகங்கள். Diseases that arise by the abuse of the Deities or Brahmins.

7.—ஸ்வபாவபல பிரவர்த்தித ரோகங்கள். Natural diseases.

———:o:———

பூர்வாசாரிகள் செய்த இவ்விதப்பிரிவுகள் அனுசரிக்காமல் அகராவர்க்கம் அனுசரித்து ரோகங்கள், ரோகங்கள்மேல் பிரயோகப்படுத்தத் தகுதியான இந்நூலில் கண்டிருக்கிற ஔஷதங்கள், ஆகிய இவைகளை இந்த அனுபந்தத்தில் காண்பிக்கப்படும். இவ்வித ரோக அட்டவணையின் பிரயோசனம் என்னவெனில், சந்தேகப்படுகிற மனதை, இந்த ரோகத்துக்குக் கைகண்ட ஔஷதம் இதுவே என்று திடப்படுத்தும் ; மறந்து இருக்கிற பொருள்களை ஞாபகப்படுத்தும்.

ரோககாரணங்கள், ரோகநிதானம், சிகிச்சைக்கிரமம், இவை முதலியவைகளை விஸ்தாரமாய் அறியவிரும்புகிறவர்கள், என்னால் இயற்றப்பட்ட "இ. விஷ வைத்திய சங்கிரகம்" என்னும் கிரந்தத்தைப் பார்வையிடவும்.

சிகிச்சைபேதங்கள்.

தய்வசிகிச்சை.—ரசம், கந்தகம், பாஷாணம், முதலிய தாதுவர்க்க ஔஷதங்களைக்கொண்டு செய்யும் சிகிச்சை.

மானிஷ சிகிச்சை.—ஓஷதிகொண்டுசெய்யும் சிகிச்சை.

ராக்ஷஸசிகிச்சை.—க்ஷாரம், க்ஷாரம், அக்கினி, சஸ்திரம் இவை முதலியவைகளைக்கொண்டு செய்யும் சிகிச்சை.

மாந்திரீகசிகிச்சை. சித்தசிகிச்சை.—மந்திரம், பூஜை, ஜபம் முதலியவைகளைக்கொண்டு செய்யும் சிகிச்சை.

மருந்தூட்டும்காலம்.—வாதரோகங்களுக்கு. போஜனம் செய்வதற்குமுன் ஔஷதம் கொடுக்கவேண்டியது. பித்தரோகங்களுக்கு. போஜன மத்தியகாலத்தில், ஔஷதம் கொடுக்கவேண்டியது. சிலேஷ்மரோகங்களுக்கு. போஜனம் செய்தபிறகு ஔஷதம் கொடுக்கவேண்டியது.

மருந்துண்டபிறகு வாயிலிடுவதற்குத்தகுந்த பதார்த்தங்கள்—வெற்றிலைக்காம்பு, கிராம்பு, ஏலம், திராக்ஷபழம், கொட்டைப்பாக்கு, இனிப்பு பதார்த்தங்கள் இவைமுதலியவைகளாம்.

ரோகிமனதைச் சந்தோஷப்படுத்துகிற கிருத்தியங்களாவையெனில்.—சங்கீதம், விகடம், அதிசயம், பாராயணம், வேடிக்கை கதைகள் இவை முதலியவைகளாம்.

ரோகம் கர்ம ரூபம். பூர்வகர்மத்தால் ரோகம் அனுசரிக்கின்றது. கர்மியாகிய ரோகியை, சிகிச்சகன்தொட்டு நாடிமுதலிய அஷ்டபரீக்ஷைகள் செய்தபிறகு, ஸ்நானம் செய்யவேண்டியது; அதற்கு அனுகூலமில்லாவிடில், கை கால்களையாவது சுத்தம் செய்துக்கொள்ளவேண்டியது. (சரகம்.)

ரோகி எவ்வளவு கனவானானாலும், வைத்தியனுக்கு ஆசனங்கொடுத்து, உபசாரம் செய்து, மனதைச் சந்தோஷப்படுத்தி, உண்மையையுரைத்து, வைத்திய தக்ஷணை ஈன்று, கொடுக்கிற ஔஷதத்தை இரண்டு கைகள் ஏந்தி வாங்கி, நம்பிக்கையோடு உண்ணவேண்டியது, ரோகியின்கடமை. (சரகம்.) இப்போது இக்கிரமத்தை அனுசரித்து நடப்பவர்கள் எவர்கள்?

117

THERAPEUTICAL INDEX OF DISEASES AND REMEDIES MENTIONED IN THE MEDICINAL PROPERTIES OF THIS WORK.

This Index is written to aid the busy practitioner, in calling to mind a remedy at the moment of prescribing; a sort of list from which he may select the one he was unable to remember.

ரோகவர்க்க அட்டவணை.

இதில் ஸம்ஸ்க்ருத பெயர்களை அட்டவணையாய் ஏற்படுத்தி ஒவ்வொரு ரோகத்துக்குந் தகுந்த, இந்நூலில் கண்டிருக்கிற ஔஷதங்கள், அடியில் குறித்திருக்கின்றன. இந்தப்பெயர்கள் ஸுஸ்ருதம், சரகம், ஜீவரக்ஷாமிர்தம், முதலிய கிரந்தங்களிலிருந்து சேகரிக்கப்பட்டன.

வைத்தியன் ரோகத்துக்கு ஔஷதம் நிர்ணயிக்கும்போது, தகுந்தது இதுவென்று ஞாபகப்படுத்த இந்த அட்டவணை ஏற்படுத்தப்பட்டது. ரோகத்துக்கடியில் கண்டிருக்கிற மருந்துகளில் இஷ்டமானது ஒன்று எடுத்து பிரயோகப்படுத்தலாம்.

7-வது அத்தியாயம்.

நெம்பர்—1.



FIG. 1

நெம்பர்—1.

ஜீர்ண உறுப்புகளைக் காண்பிக்கிற படம்.

1. மேல்வாய். Upper jaw.
2. கீழ்வாய். Lower jaw.
3. நாக்கு. Tongue.
4. மூக்குத்துவாரங்கள். Nostrils.
5. அன்னவாகி. தொண்டைக்கடியிலிருந்து, இரைப்பைக்குப் போகிறகுழல். Œsephagus.
6. குரல்வளை. The Larynx. இதற்கடியில் இருப்பது, சுவாசக் குழல். Wind pipe.
7. உமிழ்நீர்க்கோளம். Parotid gland.
8. நாக்குக்கடியிலிருக்கிற உமிழ்நீர்க்கோளம், Sublingual gland.
9. அன்னாசயம். இதுவே ஆமாசயம்; கீனிப்பை; இரைப்பை. The stomach. இதில் உண்ணுகிற பதார்த்தங்கள் வந்து விழுகின்றன.

10-10. யகிர்த். ஈரல்; கல்லீரல். The Liver, பித்தத்தைச் சுரப்பிக்கிற உறுப்பு.

11. பித்தாசயம். பித்தப்பை. The gall bladder. இதில் பித்தநீர் இருக்கும்.
13. அக்கினியாசயம், இதுவே துவாதசகுடல். Duodenum.
14. க்லோமம். Pancreas.

15-15-15-15. மலாசயம். பெருங்குடல். The large intestines இந்தக் குடலின் மத்தியில் பாம்புபோல் வளைந்திருக்கிறது சிறுகுடல். இதுவே, பக்குவாசயம்; பாகாசயம். The small intestines.

16. சிறுகுடல், பெருங்குடலோடு சேருமிடம். Cæcum.
17. பெருங்குடல் ஊர்த்தமுகம். Ascending Colon.
18. ஷை. குறுக்கு. Transverse Colon.
19. ஷை. அதோமுகம். Descending Colon.
20. குதம். Rectum.
21. பலீகம். இதுவே மண்ணீரல்; சுப்பீரல்; செவுரொட்டி. Spleen.
22. கழுத்து முள்ளெலும்புகள். Cervical vertebræ.

அக்கினிமாந்திய ரோகம்.

అగ్నిమాంద్యరోగము.

இதுவே.—மந்தாக்கினிரோகம்.—మందాగ్నిరోగము.

DYSPEPSIA.

தேஹ போஷணைக்காக புசிக்கப்பட்ட அன்னபானாதிகள் போய் சேருகிற இடத்துக்கு "ஆமாசயம்" (அன்னாசயம், the stomach) என்றுபேர். ஆமாசயத்தைச் சேர்ந்திருக்கிற சிறிய குடலுக்கு "அக்கினியாசயம்" (the duodenum) என்று பெயர். அக்கினியாசயத்துக்குக்கீழ் "பக்குவாசயமும்" (பாகாசயம், the small intestines), அதைத்தொடர்ந்து "மலாசயமும்" (the large intestines), முடிவில் "குதமும்" (the rectum) இருக்கின்றன.

ஆமாசயத்தில் ஜனித்து, அன்னபானாதிகளைத் தஹிக்கிறதிரவத்துக்கு "உதராக்கினி" (சாடராக்கினி-Gastric fluid) என்று பெயர். அந்த உதராக்கினி கிரமமாய் இருந்தால், "சமாக்கினி" என்றும் - விசேஷபதார்த்தங்களை தஹிக்கும்படி அவ்வளவு சக்தி யுண்டாயிருந்தால் "தீக்ஷணாக்கினி" என்றும் - சாதாரணமாய் உண்ணுகிற உணவுகளைத் தக்க வல்லமை யில்லாமலிருந்தால், "மந்தாக்கினி" என்றும் சொல்லப்படும். அந்த மந்தாக்கினி ஸ்திதியே அக்கினிமாந்திய ரோகமாம்.

ரோகலக்ஷணம்.—இந்த ரோகத்துக்கு முக்கிய லக்ஷணங்கள் எவையெனில் மந்தபசி, ஈரக்குழியில் வேதனை, வாயுவிர்த்தி, வயிற்றுப்புசம், மல அக்கிரமம், புளி ஏப்பம், பித்தநீர்வாந்தி, இவை முதலியவைகளாம்.

சிகிச்சைக்கிரமம்.—தீபனவர்த்தனகாரி, பலகாரி ஔஷதங்கள் கொடுத்து உதராக்கினியைக் கிரமப்படுத்தவேண்டியது—சீக்கிரத்தில் பசனமாகி தேகத்தைப் போஷிக்கிற பதார்த்தங்களை உண்ணும்படி இட்டப்படுத்த வேண்டியது.

தீபாக்கினி சூர்ணம்.—20 உரைக்குன்றை.

சௌபாக்கிய சுண்டி.—1-வீராகனிறை (சக்கு.)

நாகராதி லேகியம்.—1-வீராகனிறை (சக்கு.)

சைந்தியவாதி சூர்ணம்.—1-ரூபாய் னிறை (இந்துப்பு.)

யோகமுறையாய் செய்த இவைகளில் ஒன்றை தேனிலாவது, எலுமிச்சம்பழ ரசத்திலாவது, தினம் 2-3, தடவை கொடுத்துகொண்டுவந்தால், அக்கினிமாந்தியரோகம் சௌக்கியப்படும்.

அக்கினி விரணம்.

అగ్నివ్రణము.

இதுவே.—நெருப்புப்பட்டு காணுகிற புண்.

BURNS.

சிகிச்சை கிரமம்.—இதில் உண்டாகிற கொப்புளத்தை ஊசியால் குத்தி நீரை வெளிப்படுத்தி, காற்றுபடாமல் குளிர்ச்சியெண்ணெய் இனங்கள் தடவிகொண்டு இருக்கவேண்டியது. சீழ்சேர்ந்து தூர்வாசனை எடுக்காமல் அப்போதைக்கப்போது நீர்விட்டு கழுவி விரணத்தை சுத்தமாய் வைக்கவேண்டியது.

தேங்காய் எண்ணெய்.

குக்கில் நவநீதம். (குக்கில்.)

ஆவிரைத்தைல நவநீதம். (ஆவிரை.)

இவைகளில் ஒன்றை யோகமுறையாய்செய்து தடவிகொண்டு வந்தால் விரணம் ஆறும்.

வெண்ணெயை சுத்தமுண்டால் கொஞ்சநேரம் அவரத்துபிறகு அரைத்து பூசிகொண்டுவந்தால் விரணம் சீக்கிரம் உலறும்.

வாழை இலை.—இந்த இலைமேல் தேங்காய் எண்ணெய் தடவி விரணத்தின்மேல் கட்டிக்கொண்டுவந்தால் விரணம் ஆறும்.

மெழுகுகளிம்பு.—நெருப்புப் பட்டவிடம் தோல்நீக்கி விரணமாகி சீழ் வடியும்போது, கழுவி சுத்தஞ்செய்து, மெழுகு களிம்பு துணியிலே தடவி போட்டுக்கொண்டுவந்தால் விரணம் ஆறும்.

அங்கசலனவாத ரோகம்.

అంగచలనవాతరోగము.

இதுவே.—கம்பவாதம்.—కంపవాతము.

நடுக்குவாதம்.

உதறுவாதம்.

SHAKING PALSY.

ரோகலக்ஷணம்.—சவுந்திரியபுஷ்களுக்குக் காணுகிற ஒருவித வாதரோகம். சாதாரணமாய் தலை நடுக்கமும், கைநடுக்கமும் முதலிய பிறகு உடம்புக்கு வியாபிக்கிறதுண்டு.

கைநடுக்கம் இருந்தால் "அஸ்தகம்பவாதம்" (హస్తకంపవాతము) அபபாஹுகம், (అపబాహుకం.) கராக்ஷேபகம், (కరాక్షేపకం) என்று பெயர்.

தலைநடுக்கு வாதத்துக்கு.—சிரக்கம்பவாதம் (శిరఃకంపవాతము.) சிரச்சலனவாதம் (శిరశ్చలనవాతము.) என்று பெயர்.

கால்நடுக்கு வாதத்துக்கு.—பாதாக்ஷேபகவாதம் (పాదాక్షేపకవాతము.) என்றுபெயர்.

சிகிச்சைக்கிரமம்.—வயது சென்றவர்களுக்குக் கண்டால், ரக்தவிருத்தி செய்கிற மருந்துகள், உஷ்ணகாரி மருந்துகள் கொடுக்க வேண்டியது.

அயச்சிந்தூரம்.—இதில் 5-10, உளுந்தளவை தேனில் கலந்து தினம் 2-3, தடவை கொடுத்துக்கொண்டுவந்தால், ரோகம் வசப்படும். இதை மண்டலக்கணக்காய் கொடுக்கவேண்டியது.

துந்தூரதைலம்.—இதை யோக முறையாய் செய்து முதுகு தண்டு எலும்புமேல் தேய்த்துகொண்டு வரும்படி செய்யலாம்.

அஸ்ருக்தர ரோகம்.

అసృగ్దరరోగము.

இதுவே.—பிரதரரோகம்—ప్రదరరోగము.

ரக்தஸ்ராவரோகம்—రక్తస్రావరోగము.

சூதகப்பெருக்கு.

பெரும்பாடு.

MENORRHAGIA.

ரோகலக்ஷணம்.—கருப்பையிலிருந்து மாதம் ஒருதடவை காணுகிற ரக்தத்துக்கு சூதகம் என்றுபெயர். அது அதிகமாய் கண்டால், பெரும்பாடு என்று சொல்லுவர். விடுவிலக்கம் சரியான நாட்களில் காணாமல், சீக்கிரம் அடிக்கடி காணுவதற்கும்—அல்லது விடுவிலக்கம் கண்டு சாதாரணமாய் நிற்கிற நாளில் நில்லாமல் அதிக நாள் வரையில் கண்டுகொண்டு இருப்பதற்கும், அஸ்ருக்தரரோகம் என்று சொல்லலாம்.

சரீரத்திலுள்ள தாதுக்கள் பலக்ஷீணமடைந்து இருக்கும்போது, கருப்பையிலிருக்கிற தாதுக்களும் பலக்ஷீணமடைந்திருக்கும்; அப்போது தேகத்தில் ரக்தம் அதிகமானால், கருப்பையிலும் ரக்தம் அதிகமாய்சேர்ந்து இந்தவியாதி பிறக்கின்றது.

சிகிச்சைக்கிரமம்.—சுவரக் குறிகளைச் சமனப்படுத்த வேண்டியது—கருப்பாசயத்துக்கு அதிகரக்தம் போகாமல் செய்யவேண்டியது—சுவரக்குறிகள் நின்றபிறகு, ரக்தஸ்தம்பன காரிகளாகிய துவர்ப்புமருந்துகள் கொடுக்கவேண்டியது—பெலன் குறைவுபட்டிருக்கும்போது, பலகாரிமருந்துகள் கொடுக்கவேண்டியது.

தண்ணீர்.—ஸ்திரீயை நல்லாக்கப் படுக்கவைத்து, மர்மஸ்தானத்தின்மேல் ஈரத்துணியைப்போட்டு, அது காயாமல் தண்ணீர் விட்டுக்கொண்டு இருந்தால் சுகம் பிறக்கும். இதை யோனிக்குள்ளும் பீச்சலாம்.

திரிபுலிகிருதம்.—(கஞ்சா)

மாஜூம்.—(கஞ்சா)

வாசாதிகிருதம்.—(ஆடாதோடை)

யோகமுறையாய்செய்த இவைகளில் ஒன்றை, தினம் 2-3, தடவை கொடுத்துக்கொண்டுவந்தால் சுகம் பிறக்கும்.

பொட்டிலுப்பு.—இதில் 5-உளுந்தளவை ½-ஆழாக்கு தண்ணீரில் கரைத்து 2-3-மணிக்கொருதரம் கொடுத்துக்கொண்டுவந்தால் [illegible] குறையும்.

அத்திப்பால்.—இதில் 1-ரூபாய் எடை சருக்கரைசேர்த்து, தினம் 2-3, வேளை கொடுத்துக்கொண்டுவந்தால் ரக்தம் நிற்கும்.

அத்திப்பட்டை.—இதில் நீர்விட்டு இடித்து பிழிந்தரசத்தில் ½-¼ ஆழாக்கு அளவு தினம் 3-தடவை கொடுத்துக்கொண்டு வந்தால் ரக்தம் நிற்கும்.

மாதுளம்பூ.—இதை யிடித்து பிழிந்த ரசத்தில் ½-¼, ஆழாக்கு அளவு தினம் 3-தடவை கொடுத்துக்கொண்டு வரலாம்.

[illegible].—இதைப் பொடித்து ½-1, விராகனிடை தினம் 2-தடவை பிரயோகித்துக்கொண்டுவந்தால் ரக்தம் நிற்கும்.

மாசிக்காய்.—இதின்பொடி 10-15-உளுந்தளவை-சங்கவெண்[illegible], 10-உளுந்தளவை. இவைகளை தேனில்கலந்து தினம் 2-3, தடவை கொடுத்துக்கொண்டு வரலாம்.—¼-பலம் மாசிக்காய்த் தூளை, ½-படி வெந்நீரில்விட்டு ஊறவைத்து, அந்த கஷாயத்தை யோனியில் பீச்சலாம்—அல்லது அந்த கஷாயத்தில் துணியை நனைத்து யோனிக்குள் வைக்கலாம்.

மாங்கொட்டைப் பருப்பு.—இதை அரைத்து, ½-விராகனிடை தேனிலாவது வெல்லத்திலாவது கலந்து, தினம் 2-3-தடவை கொடுத்துக்கொண்டுவரலாம்.

[illegible].—இந்த இலையை அரைத்து, 1-தோலாம் எடுத்து அதில், 10-உளுந்தளவை [illegible]ப்பொடி சேர்த்து, தயிரில் கலந்து தினம் 2-3, தடவை கொடுத்துக்கொண்டு வரலாம்.

ஆவாரன்பட்டை.—இதை முறைப்படி கஷாயம் செய்து $\frac{1}{8}$–$\frac{1}{4}$, ஆழாக்கு அளவு உள்ளுக்குக் கொடுத்துகொண்டு வரலாம். இந்த க்கஷாயத்தை யோனிக்குள்ளும் பீச்சலாம்.

லவங்கப்பட்டை, ஏலம், ஆவாரம்பூ, நெல்லிமுள்ளி, கற்கண்டு. இவைகளின் தூள், வகை 1-க்கு வராகனிறை—3. கலந்து 3-பங்காக்கி, 3-இளநீரை மேல்தோல்சீவி, கண் திறந்து ஒவ்வொன்றில் ஒவ்வொருபங்கு போட்டு, அடைத்து ஜலத்தில் 60-நாழிகை வைத்து பிறகு இளநீரை வடிக்கட்டிக்கொண்டு, அதில் கொஞ்சம் தேன்விட்டு கொடுக்கவும். இவ்விதமாக தினம் 3-வேளை கொடுத்துக்கொண்டுவந்தால் வியாதி வசப்படும்.

நாயுருவி.—இதை யோகமுறையாய் கஷாயம் செய்து, $\frac{1}{4}$-ஆழாக்கு அளவு தினம் 3-தடவை கொடுத்து கொண்டுவரலாம்.

பருத்திப்பிஞ்சு.—இதை அரைத்து, கர்ப்பூரசிலாஜித்து சேர்த்து கொடுக்கலாம்.

அஜீர்ணரோகம்.

అజీర్ణరోగము.

இதுவே—உஷ்ணவாயு—ఉష్ణవాయువు.

பித்தவாயு.—పిత్తవాయువు.

INDIGESTION.

ஆமாஸயம், அக்கினியாஸயம், பக்குவாஸயம், மலாஸயம், யகிர்த்கண்டம், பிலீகம், இவைமுதலிய ஜீர்ண உறுப்புகளின் தொழில் விகல்பமடைந்து இந்த ரோகம் பிறக்கிறது.

ரோகலக்ஷணம்.—அக்கினி மாந்தியரோகத்துக்கடியில் கண்டிருக்கிற லக்ஷணங்களே இதற்கு முண்டு.

சிகிச்சைக்கிரமம்.—முதல் சீக்கிரமாய் ஜீர்ணமாகிற பதார்த்தங்களைச் செவ்வையாய் மென்று உண்ணும்படியாயும்—ஆகாத பதார்த்தங்களை நீக்கிவைக்கும்படியாயும்—போஜனம் செய்வதற்கு முன், நீர் அதிகமாய்க் குடிக்காமல் இருக்கும்படியாயும்—புசித்த உடன் கொஞ்சநேரம் சும்மாய் இருக்கும்படியாயும்—காலை மாலையில் சஞ்சரிக்கும்படியாயும்—அடிக்கடி விரேசனமருந்துகள் எடுத்துக்கொள்ளாமலிருக்கும்படியாயும்—புகையிலை அப்பியாசத்தை நீக்கும்படியாயும்—உமிழ்நீரை விழுங்கும்படியாயும்—செய்யவேண்டியது. ஜீர்ண உறுப்புகளுக்கு பெலன் வரும்படி தீபனகாரி, பலகாரிமருந்துகள் கொடுக்கவேண்டியது. வாந்தியிருந்தால், பித்தஹரகாரிமருந்துகளும், பேதியிருந்தால், துவர்ப்புமருந்துகளும், நோவுயிருந்தால் வேதனைசாந்திகாரி மருந்துகளும் கொடுத்து வசப்படுத்தவேண்டியது. (இங்கிலீஷ் வைத்தியசங்கிரகம்.)

இதனடியில் கண்டவைகளில் ஒன்றை, தினம் 2-3, தடவை கொடுத்துகொண்டுவந்தால், அஜீர்ணரோகம் வசப்படும்.

நிலவேம்பு கஷாயம்.—$\frac{1}{8}$-ஆழாக்கு.

பூசிம்பாதிகலவைச்சூர்ணம்.—$\frac{1}{2}$-விராக. (சிலவேம்பு)

வில்வாதிலேகியம்.—1-விராக.

அஸ்வகந்திசூர்ணம்.—1-ரூபாய் எடை. (அமுக்கிராக்கிழங்கு)

தாளீசாதிவடகம்.—1. (தாளிசபத்திரி)

தயிர்ச்சுண்டிச்சூர்ணம்—$\frac{1}{2}$-விராக. (சுக்கு)

சௌபாக்கியசுண்டி.—1-விராக. (சுக்கு)

சுகராதிலேகியம்.—1-விராக. (சுக்கு)

இஞ்சிலேகியம்.—1-விராக. (சுக்கு)

தீபாக்கினிசூர்ணம்.—20-உளுந்தெடை.

வச்சிரவல்லிலேகியம்.—(பிரண்டை) $\frac{1}{2}$-விராக.

ஈ வனஓமம்.—10-உளுந்தெடை.

மிளகரணைகஷாயம்.—$\frac{1}{8}$-ஆழாக்கு.

அப்பளக்காரம்.—இதில் 1-விராகனெடை, $\frac{1}{8}$-ஆழாக்கு தண்ணீரில் கரைத்து வடிக்கட்டி கொஞ்சம் சர்க்கரை சேர்த்து கொடுத்தால் புளிஏப்பம், வயிற்றுவலி, இவைகள் நீங்கும்.

பிரண்டை.—இதைத் துண்டுகளாக்கி புளியிலை ரசத்தில்விட்டு வேகவைத்து, உலர்த்தி, எலுமிச்சம்பழம் நாரத்தங்காயோடு சேர்த்து ஊறவைத்துக்கொள்ளவும். இதை போஜனத்தோடு சாப்பிட்டுக்கொண்டுவந்தால், ஜீர்ணசக்தி அதிகமாகும்.

பூர்ணாதிலேகியம்.—(கஞ்சா) இதில் $\frac{1}{2}$-1, விராகனெடை கொடுத்தால், அஜீர்ணத்தால் காணுகிற வேதனையும், இதர துர்க்குணங்களும் நீங்கும்.

அண்டதாபிதரோகம்.

అండతాపితరోగము.

இதுவே.—விரைவாதம்.
விரைவீக்கம்.
விரைநோய்.
அண்டவாதம்-అండవాతము.
பீஜவாதம்-బీజవాతము,
பீஜவீக்கம்.

SWELLED TESTICLE.

ரோகலக்ஷணம்.—இதில் விரைவீங்கி நோகும், சுரமும், வாந்தியுமிருக்கும்.

சிகிச்சைகிரமம்.—விரையைத் தூக்கி கட்டிவைக்கவேண்டியது; வீக்கம், வேதனை, தணியும்படி ஒற்றிடமிடவேண்டியது; அல்லது, ஜலரூபமருந்துகள், வீக்கத்தின்மேல் போடவேண்டியது.

தளிச்சியிலை.—இதனோடு திருவிய தேங்காய்ப்பூசேர்த்து வறுத்து வீங்கின விரைமேல்வைத்து தினம் 2-தடவை கட்டிகொண்டுவந்தால், ரோகம் வசப்படும்.

தளிச்சப்பருப்பு.—இதை அரைத்து வீங்கினவிரைமேல் தடவிகொண்டுவரலாம்.

இலுப்பைப்பிண்ணாக்கு.—இதை நீர்விட்டரைத்து, களிசெய்து வீங்கினவிரைமேல்வைத்து கட்டிகொண்டுவந்தால் வீக்கம்வாடும்.

பலாகப்பூ.—இதில் நீர்தெளித்து வதக்கி, ஒற்றிடமிட்டு, வீங்கினவிரைமேல் கட்டிகொண்டுவரலாம்.

நவாக்ஷாரம்.—1-பலம் நவக்ஷாரத்தை, ¾-புட்டி தண்ணீரில் கரைத்து, ½-கிராம் சாராயம் சேர்த்து அதில் துணியைநனைத்து, வீங்கின அண்டத்தின் மேல் போட்டு கொண்டுவந்தால், சுகுணம் பிறக்கும்.

ஊமத்தன் இலை.—இதை எண்ணெய்தடவி வதக்கி, வீங்கின விரைமேல் போட்டு கட்டிவைக்கலாம்—அல்லது இலையை அரைத்து கட்டலாம்.

கஞ்சா இலை.—இதைக்கட்டினால், வேதனை நீங்கும்.

சிற்றாமணக்குமுத்து. கஸ்தூரிமஞ்சள், இவைகளை அரைத்து, விரைமேல்வைத்து, முத்துக்கொட்டை இலை போட்டு கட்டிவைத்தால், வீக்கம் குறையும், வேதனையும் அடங்கும்.

அதிசாரரோகம்.
అతిసారరోగము.

இதுவே—சீதபேதி—శీతభేద.
சீதரக்தபேதி—శీతరక్తభేద.
ஆமபேதி—ఆమభేద.
ஆமரக்தபேதி.—ఆమరక్తభేద
சீதக்கடுப்பு.
சீதக்கழிச்சல்.
வயிர்க்கொட்டல்.

DYSENTERY.

மலாசயமாகிய பெருக்குடலின் உட்புறத்திலிருக்கிற சிலேஷ்ம சவ்வுக்குத் தாபிதமும் விரணமும் காணுகிறதற்கு அதிசாரமென்று பேர். இது ஆமஅதிசாரம் (Acute Dysentery) பாகாதிசாரம் (Chronic Dysentery) என இரண்டு சாதிகளுண்டு.

ரோகலக்ஷணங்கள்.—சீதமும் ரக்தமும் மலமும் கலந்து, முக்கலோடு வயிறுகடுத்து அடிக்கடி இறங்கி வெகு உபத்திரவப்படுத்தும்; மலம் கிஞ்சிபிருக்கும்; சுரம் அநுசரித்திருக்கும்; இடதுபக்கம், வயிறு அமுத்தினால் வேதனைகாணும்; பசியிராது.

ரக்தாதிசாரம்.—அன்னாசயம், அல்லதுகுடல் இவைகளில் எதிலிருந்தாவது வருகிற ரக்தத்துக்குப்பேர்.

சிகிச்சைகிரமம்.—பெருங்குடலில் கண்டிருக்கிற தாபனம் குறையும்படி வெந்நீர் ஒற்றிடம், வயிற்றுமேல் போடவேண்டியது அல்லது சூடுத்துணியையாவது, ஆளிவிரை பொட்டலிகையையாவது, வயிற்றுமேல்போட்டு, கட்டிவைக்கலாம்.—துவர்ப்பு விரேசனமருந்துகள் கொடுத்து துர்மலாதிகளை வெளிப்படுத்தி விடவேண்டியது. குழகுழப்பான பதார்த்தங்கள் கொடுத்து எரிச்சலைத்தணிக்கவேண்டியது. துவர்ப்புமருந்துகள், அபினிசேர்ந்த மருந்துகள், இவைகளில் ஒன்றைக்கொடுத்து விரணத்தை ஆற்றவேண்டியது—காரமில்லாத கஞ்சியினைக்கண் குடிக்கும்படி செய்யவேண்டியது—துர்ப்பலமிருந்தால், புஷ்டிமருந்துகள், போஷணைதருகிற ஆகாரம், கொடுத்து தேஹபலம்வரும்படி செய்யவேண்டியது.

இதனடியில் கண்டவைகளில் ஒன்றைக்கொடுத்தால், துர்மலாதிகள் நீங்கி, பேதி நிற்கும்.

கடுக்காய்ப்பிஞ்சுத்தூள்.

அரிதகிகஷாயம்.—(கடுக்காய்)

இதனடியில் கண்டவைகளில் ஒன்றை, தினம் 4-6, தடவை கொடுத்துகொண்டுவந்தால், சீதபேதி நிற்கும்.

தாடிம்பவில்வாதிகஷாயம்.—¼, ஆழாக்கு (143.)

கர்க்கடகசருங்கிமிஸ்ரம் சூர்ணம்.—½, வீராகனிறை.

வெள்ளைப்பிசின்மிஸ்ரம் சூர்ணம்.—10, உளுந்துனிறை.

கவாடவடகம்.—1. (அபினி)

மாதுளம்பழத்தோல் கஷாயம்—¼, ஆழாக்கு.

வெள்ளைகொய்யாவேர்ப்பட்டை கஷாயம்.

அத்திப்பட்டை.—இதில் மோர்விட்டு இடித்துப் பிழிந்த ரசத்தில், ¼-ஆழாக்கு அளவு தினம் 4-6, தடவை கொடுத்துக்கொண்டு வந்தால், சிதபேதிசிற்கும்.

தென்னம்பூ.—இடித்துப் பிழிந்த தென்னம்பூ ரசத்தில், ⅛-¼, ஆழாக்கு அளவு தினம் 4-6, தடவைக்கொடுத்துக் கொண்டுவரலாம்.

விளாங்காய்.—இதைக் கஷாயமிட்டு தினம் 4-6, தடவை கொடுத்துக்கொண்டு வந்தால் பேதிசிற்கும்.

படிக்காரம்.—இதின் தூளில், 10-உளுந்துசிறை தேனில் கலந்து தினம் 4-6, தடவை கொடுத்துக் கொண்டுவந்தால், பேதிசிற்கும்.

காசுக்கட்டி.—10-உளுந்துசிறை, காசுக்கட்டித்தூளுடன், லவங்கப்பட்டைத்தூள் சமன் சேர்த்து, தேனில் கலந்து தினம் 3-4 தடவை கொடுத்துக்கொண்டு வரலாம்.

வெந்தியம்.—இதை அரைத்து, 1-விராகனிறை ஆக்கம் வெண்ணெயில் கலந்து தினம் 4-தடவை கொடுத்துக்கொண்டு வரலாம்.

இலந்தங்கொழுந்து.—இதை அரைத்து கொட்டைப் பாக்கு மாத்திரம் வெண்ணெயில் கலந்து தினம் 3-4, தடவை கொடுத்துகொண்டு வரலாம்.

மாசிக்காய்.—இதின் தூளில், 10-உளுந்துசிறை வெண்ணெயில் கலந்து தினம், 3-4-6, தடவை கொடுத்துகொண்டு வரலாம்.

பேதாளு, இஸ்கோல்விரை, நெல்லிவற்றல், இவைகளின் தூள் வகை 1-க்கு உளுந்துசிறை, 20; அபினித்தூள் ⅛-உளுந்து சிறை; சருக்கரை தேவையானது சேர்த்து வெண்ணெயில் கலந்து தினம் 3-4, தடவை கொடுத்துகொண்டு வரலாம்.

வாழைப்பிஞ்சை, தோல் நீக்கி துணிசுற்றி மண் பூசி, புடமிட்டு அரைத்து சர்க்கரை வெண்ணெய்சேர்த்து, தினம் 4-6, தடவை கொடுத்துக்கொண்டு வரலாம்.

அத்தியுஷ்ணம்.

అత్యుష్ణరోగము.

இதவே.—சூடு, உள்சூடு, காங்கை, உள்னெரிவு, வெப்பம்.

FEVERISHNESS.

ரோகலக்ஷணம்.—இது அபக்குவபோஜனத்தினாலும் ஆயாசத்தினாலும் காணுகிற அல்பசுரம் ஒருநாள் இருந்து நீங்கிவிடும். வியாதிகளால் காணுகிற உள்சூடு, நாள்பட்டிருக்கும்.

சிகிச்சைகிரமம்.—பத்தியபோஜனம்—மலவிசர்ஜனம் இவைகளால், அல்பசுரம் நீங்கும். வியாதிகளின்மேல் காணுகிறதற்கு, மேற்கண்ட மருந்துகள் கொடுக்கவேண்டியது.

பூரக்கட்டு.—இதை 1-2-3, உளுந்துசிறை இருக்கும்படி தேன் விட்டுரைத்து இரவில்கொடுத்தால், காலையில் தாராளமாய் மலம் உதையும்; குடுதணியும்.

ரசபஸ்பம்.—இதை 1-2-3, உளுந்துசிறை தேனில்கலந்து படுத்துக்கொள்ளும்போது கொடுத்தால், காலையில் மலம் தாராளமாய் உதையும், குடுதணியும்.

லதுநாசிதேநாஞ்சனம்.—இதை அஞ்சனமிட்டால் தலைவலி, பாரம், நீங்கும்.

[illegible]நீர்.—இதைக் கொடுத்தால் வெப்பம் தணியும்.

தாமணிப்பூ ஷர்பத்து.—இதைக் கொடுத்தால் உஷ்ணம் தணியும்.

பனங்கற்கண்டு.—இதைப் பானகம்செய்து லெப்பொடிபோட்டு கொடுக்கலாம்.

அநித்திராரோகம்.

అనిద్రారోగము.

இதவே.—நித்திராபங்கம்—నిద్రాభంగము.

SLEEPLESSNESS.

ரோகலக்ஷணம்.—மூளையில் ரத்த வியாபாரம் விகல்பமடைந்து நித்திரைவராமல் போகும்.

சிகிச்சைகிரமம்.—அதற்கு நித்திராகாரி மருந்துகளில் ஒன்று கொடுத்து தூக்கம் வரும்படி செய்யவேண்டியது. இதனடியில் கண்டவைகளில் ஒன்றை, இரவில்கொடுத்தால் நல்ல நித்திரை வரும்.

அபினி.—½-உளுந்து சிறை.

நித்திராகாரிலேகியம்.—10-உளுந்துசிறை. (கஞ்சா)

கமீரேஜாப்பிர.—10-உளுந்துசிறை. (கஞ்சா)

கர்ப்பூரத்தூள்.—போகமுறையாய் செய்த இதை கன்னிமைகள்மேல் தடவிக்கொண்டு படுத்துக்கொண்டால் நித்திரைவரும்.

கஞ்சாநெய்.—இதைப் பாதத்திலும், சிரசிலும், கைகளிலும், தேய்த்துக்கொண்டு படுத்துக்கொண்டால் நித்திரை வரும்.

அந்தர்க்கதசுவரம்.

అంతర్గతజ్వరము.

இதுவே—உட்சுரம். உட்காய்ச்சல், அஸ்திவெட்டை.

அஸ்திகதசுவரம்—అస్థిగతజ్వరము.

INTERNAL FEVER.

சில வியாதிகள் மேல் சுவரம் அல்பமாய்க்காய்ந்துகொண்டேயிருக்கும். அதற்கு விளைவித்த காரணம் நீங்கும்படி ஔஷதம் கொடுத்தால் சுவரமும் விலகும்.

விஷ்ணுகிராந்தி.—1-ஆழாக்கு வெந்நீரில், 1-விராகனிடை விஷ்ணுகிராந்தி சேர்த்து, 2-மணிநேரம் ஊறவைத்து, அதில் ¼-ஆழாக்கு, தினம் 3-தடவைகொடுத்து கொண்டுவந்தால், சுகுணம் பிறக்கும்.

துவாதசமூலிக கஷாயம்.—யோக முறையாய் செய்த இதை, தேன் சேர்த்து கொடுத்துக் கொண்டுவந்தால், சுகுணம்பிறக்கும்.

நெம்பர். 2.

மூளை, மூளைத்தண்டுக்கொடி, அதிலிருந்து பிறக்கிற ஸ்பரிச, சலன நரம்புகளைக் காண்பிக்கிறபடம். (பின்புறம்.)

1. பெருமூளை—Cerebrum.
2. சிறுமூளை—Cerebellum.
3. மூளைத்தண்டுக்கொடி—Spinal cord.
4. முகநரம்புகள்—Nerves of the face.

5-6-7-8-9-10-கைகளுக்குப்போகிற நரம்புகள்.

13-14-15-16-கால்களுக்குப்போகிற நரம்புகள்.

அபதந்திரகவாதம்.

అపతంత్రకవాతము.

இதுவே.—அபதானகவாதம்—అపతానకవాతము

வலி. இசிவு. சந்நி.

CONVULSIONS.

இந்தவியாதி பெரியவர்களுக்கும், குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும் (கர்ப்பசந்நி.) (Puerperal convulsions.) பிரசவித்து, அறைவீட்டிலிருக்கிற பாலிந்தஸ்திரீகளுக்கும் (பிரசவசந்நி.) காணுகின்றது. இதரவியாதிகளால் மூளைஸத்தியும், மூளையைச்சேர்ந்த நரம்புகள் ஸத்தியும்கெட்டு, இந்த ரோகம் பிறக்கின்றது. குழந்தைகளுக்குமந்தத்தின்பேரிலும், பல்முளைக்கும்போதும், வயிற்றில்கிருமி யிருக்கும்போதும் காணுகின்றது. குளுங்காற்று, பயம், ஆகிய இவைகளாலும் காணும். சிலரில் காரணம் தவிர்க்கொள்ளுவது பிரயாசை.

ரோகலக்ஷணம்.—சரீரத்திலுள்ள சதைகள், மெத்தபிகுவாய், தற்செயலாய் இழுத்துக்கொள்ளும்; வலிவிட்டு விட்டுகாணும்; அறிவு இல்லாமல் போகுவதும் உண்டு.

சிகிச்சைகிரமம்.—ரோகியைக் காற்றுள்ளவிடத்தில் சவுக்கியமாய்ப் படுக்கவைத்து, நல்லகாற்று ஆக்கிராணிக்கும்படி செய்யவேண்டியது. ஆடை ஆபரணங்களைத் தளர்த்திசெய்ய வேண்டியது. சிரசு உஷ்ணமாய் இருந்தால், சரத்துணியை சிரசின் மேல்போட்டு, கால்களைச் சூடாய் வைக்கவேண்டியது. கவியாவிடலாம். முகத்தில் குளிர்ந்த ஜலம் தெளிக்கலாம். குழந்தைகளுக்கு அஜீர்ணம் நீங்கும்படி வாந்திக்காவது, பேதிக்காவது, வாதஹரமான மருந்துகளாவது கொடுக்கவேண்டியது. பல்முளையும்போது கண்டால் ஈறைவழிக்கப்படி நெல்லால் தேய்த்துவிடவேண்டியது. கிருமிசேஷ்டையிருந்தால், அவைகள் நீங்கும்படி கிருமிஹர மருந்துகள் கொடுக்கவேண்டியது. ரக்தபலம் இல்லாமலிருந்தால், அயம் கொடுக்கவேண்டியது. [illegible] கர்ப்பிணிகளுக்குக் கண்டு பிராண அபாயம் நேரிடும்படி [illegible]தால், பிரஸவவேதனையை யுண்டாக்கவேண்டியது. பிர[illegible]தில் கண்டால், சிசுவை ஜாக்கிரதையில் வெளிப்படுத்தவேண்[illegible]. கெண்டைக்கால் சதை நரம்புகளை பிகுவாய்ப்பிடித்தால், வலிதீரும்.

பூரம். ரஸபஸ்பம்.—இவைகளில் ஒன்றை விதிப்படி கொடுத்தால், மலசுத்தியாகும்.

சர்ஷப போட்டலிகை.—(கடுகு) இதை யோகமுறையாய் செய்து, கெண்டைக்கால் சதைகள் மேல்போட்டு கட்டிவைத்தால், சிரசிலிருக்கிற சூடுநீக்கும்.

ஹிங்குவாதி சூர்ணம்—20-உளுந்தெடையளவு.

மருக்கொழுந்துகஷாயம்—1-அவுன்சு.

கஸ்தூரிகுளிகை.—1-2.

சதாப்பு இலைரசம்.—இதைக் குழந்தைகளுக்குப் பூசுவது நாட்டு வழக்கம்.

சிற்சடர்தைலம். ஆத்தூரதைலம்.—(வைமத்.ரன்.)

ஆலகாலவிஷத்தைலம்.

யோகமுறையாய் செய்த இவைகளில் ஒன்றை முதுகுதண்டெலும்பு மேலிட்டு தேய்க்கலாம்.

அபஸ்மாரரோகம்.

అపస్మారరోగము.

இதுவே—காக்கைவலி. மிரிகி.

EPILEPSY.

ரோகலக்ஷணம்.—இது மூளையை அநுசரித்தவியாதி. சிசரக்குரலாய் உசக்கக்கூவிகொண்டு அறிவும், உணர்வும்கெட்டு திடீலென்று பூமியேல்விழுந்து மூச்சுமுட்டலோடு உதறிக்கொள்ளுவார்கள். வாயிலிருந்து நுரை வெளிப்படும்; புருவங்கள் நெருங்கி விகாரமாய்காணப்படும்; விரல்கள் முடங்கியிருக்கும்; பற்கள் கிட்டிக்கொள்ளும்; பிராணன் விடுகிறவர்கள்போல் காணப்படுவார்கள்.

சிகிச்சைகிரமம்.—வலி கண்டிருக்கும்போது ரோகிக்கு காயம்படாமல் செய்யவேண்டியது. நரம்புகளுக்கும், தேகத்துக்கும் பெலன்கொடுக்கிற ஔஷதங்கள் பிரயோகப்படுத்த வேண்டியது. கழுத்தாரிடீ நரம்புகளை அழுத்திப்பிடிப்பதினாலும், முகத்தில்சலம் அறைவதினாலும், தெளிப்பதினாலும், அல்லது மூக்கு துவாரங்களில் இருவிட்டு [illegible]ச்சப்படுத்துவதினாலும், வலிவராமல் தடுக்கும். வலி காணுவதற்குமுன் எறும்பு நகருதல்போல் காலிலாவது, கையிலாவது காணும் வழக்கம் அந்த இடத்துக்கு மேல்த்தமுறையாய் இறுகக் கட்டினால், வலிநிற்பதுமுண்டு.

கஸ்தூரிகுளிகை.—யோகமுறையாய் செய்த இதை, 1-2, குளிகைதேனில் கலந்து கொடுக்கலாம்.

அயச்செந்தூரம்.—இதில் 6-உளுந்தெடை தேனில் கலந்து மண்டலக்கணக்காய் கொடுத்துக்கொண்டுவந்தால், ரோகம் வசப்படும்.

புரோமைட் ஆப் பொடாஸியம்.—(Bromide of Potassium) இதில் 5-30, உளுந்தெடை ஜலத்தில் கரைத்து சர்க்கரைசேர்த்து கொடுத்துக் கொண்டுவந்தால் வியாதி வசப்படுமென்று கண்டிருக்கிறது.

அரோசகம்.

అరోచకము.

இதுவே—அன்னத்துவேஷம்.—అన్నద్వేషము.

அருசி.—అరుచి.

பித்த அரோசகம்.—పిత్తారోచకము

ரோகலக்ஷணம்.—இது ரோகங்களில் காணுகிற தர் லக்ஷணம் குறியறிகிற நாக்கு நரம்பு சுபாவம் கெட்டுப்போகுவதே அரோசகம்.

சிகிச்சைக்கிரமம்.—நாக்கு ஸ்பரிஸ நரம்புகள் விகல்பத்தைமாற்றி சுபாவஸ்திதிக்கு கொண்டுவர வேண்டியது.

புதினாரசம், இஞ்சிரசம், எலுமிச்சம்பழரசம், தேன். இவைகளைச்சமனாய்ச்சேர்த்து, பதமாய்க்காய்ச்சி, விரலால்தொட்டு நாக்குமேல் தடவிக்கொண்டுவந்தால், அரோசகம்நீங்கும். பதார்த்தங்கள் வாய்க்கு இனிப்பாய் இருக்கும்.

சீயக்காய்க்கொழுந்து. புளியாரை. இலந்தைப்பழம்.

நெல்லிவற்றல். கொத்துமல்லித்தழை.

கறிவேப்பிலை. காய்ச்சுக்கட்டி. புளியம்பூ.

புளியங்கொழுந்து.

மேல்கண்டவைகளில் ஒன்றை வழக்கப்படி துவையல்செய்து, நாக்குமேல்தடவி ஆகாரங்கொண்டால், பதார்த்தங்கள்மேல் இனிப்புண்டாகும்.

எலுமிச்சம்பழம், நார்த்தங்காய்.

மாங்காய்பிஞ்சு. மகிழமாங்காய். கன்னுப்பீவேர்.

இவைகளின் ஊறுகாய்களில் ஒன்றுவாயிலிட்டுக்கொண்டு உண்ணால், பதார்த்தங்கள்மேல் இனிப்புண்டாகும்.

126

நெல்லிக்காய் முரப்பா. இஞ்சிமுரப்பா.—இவைகளில் ஒன்றை சாப்பிட்டால், அரோசகம் நீங்கும்.

தேங்காய்.—இதனோடு வெல்லம்சேர்த்து, அரைத்து துவையல் செய்து உண்ணால் அரோசகம் நீக்கும்.

கொடிநார்த்தன்பழம்.—இதின் சதையை உப்பில்தொட்டு நாக்குமேல்வைத்து தேய்த்து உண்ணால், அரோசகம் நீங்கும்.

விளாம்பழம்.—இதனோடு சர்க்கரைசேர்த்து பிசைந்து, உண்ணால் பித்த அரோசகம் நீக்கும்.

அர்ஸோரோகம்.

అర్శోరోగము.

இதுவே—மூலரோகம்.—మూలరోగము.

குதகீலம்.—గుదకీలము.

குதாங்குரம்.—గుదాంకురము.

துர்நாமம்.—దుర్నామము.

PILES.

குதஸ்தானத்திலிருக்கிறதாகம், என்னும் ரத்தநரம்பு பெருத்து உருண்டு இழக்குமுனைபோல் காணுகிற ரோகத்துக்கு, அர்ஸோரோகம் என்றுபெயர். மூலமிருக்கிற ஸ்திதியின்மேல் பலவித பெயர்களிட்டிருக்கிறார்கள். அவைகள் யாவனா:—

வெளிமூலம்.—ஆஸனம் தரம் வெளியில் வந்திருப்பது.

உள்மூலம்.—ஆஸனத்துக்குள் மறைந்திருப்பது.

ஸகஜமூலம்.—సహజమూలము, பால்யத்திலிருந்து இருப்பது.

[illegible]

சுஷ்கமூலம்.—శుష్కమూలము. உலர்ந்து சுருங்கி இருப்பது.

ஆர்த்திரமூலம்.—ఆర్ద్రమూలము நீர்கசிந்துகொண்டிருப்பது

ரக்தமூலம்.—రక్తమూలము. ரத்தம் கசிவது.

சீழ்மூலம்.—சீழ் கசிவது.

ரோகலக்ஷணங்கள்.—மூலத்துக்குத் தாபனம் இல்லாதிருந்தால், உபத்திரவம் ஒன்றுமிராது. தாபனம் பிறந்தால்; வேதனை, குத்தல், கடைச்சல் முதலிய உபத்திரவங்கள் இருக்கும்.

சிகிச்சைக்கிரமம்.—மலசுத்தி தினம் கிரமமாய் ஆகும்படி செய்யவேண்டியது. தாபனமிருந்தால், ஒற்றிடமிட்டு பொட்டலிகை கட்டவேண்டியது. மூலமுளைகளைக் கழுவி சுத்திசெய்து. துவர்ப்பு மருந்துகள் மேலுக்குத் தடவவேண்டியது.

மாசிக்காய்.—இதைத் தேய்த்து சந்தமெடுத்து மூலமுளைகள் மேல் தடவிக்கொண்டு வந்தால், குணம் பிறக்கும். மாசிக்காய்த்தூளுக்கு, 8-பங்கு வெண்ணெயாவது, பன்றிநெய்யாவது சேர்த்து, கலந்து, தடவலாம். இதைக் கஷாயம்செய்து ஆசனத்துக்குள் பீச்சினால் ரக்தமூலம் குணமாகும்.

துத்தியிலை.—இதை எண்ணெய் விட்டு வதக்கி ஒற்றிடமிட்டால் மூலவேதனை நீங்கும்.

அன்னபேதி.—இதை நீரில் கரைத்து மூலமுளைமேல் போட்டுக்கொண்டுவந்தால் நீர்க்கசிவு நிற்கும்.

தொட்டால்வாடி. ஆகாசதாமரை.—இவைகளில் ஒன்றை அரைத்து மூலமுளைமேல் வைத்து கட்டிக்கொண்டுவந்தால், குணம் பிறக்கும்.

மாங்கொட்டைப் பருப்பு.—இதை அரைத்து, 1-விராகனிடை அந்திசந்தி இரண்டுவேளை கொடுத்துக்கொண்டுவந்தால் ரக்தமூலம் வசப்படும்.

மிளகுலேகியம்.—1-விராகனிடை.

கந்தகலேகியம்.—1-விராகனிடை.

சூர்ணபிண்டி.—(கருணைக்கிழங்குவடகம்) 1-விராகனிடை.

யோகமுறையாய்ச்செய்த இவைகளில் ஒன்றைக்கொடுத்துக்கொண்டுவந்தால், ரோகம் வசப்படும்.

வால்மிளகுதூள்.—இதில் ½-விராகனிடை தினம், 2-3, தடவை தேனில் கலந்து கொடுத்துக் கொண்டு வந்தால், ரோகம் வசப்படும்.

பன்றிநெய்.—சமைத்த பன்றி இறைச்சியிலிருந்து வருகிறநெய்யை வடித்து வைத்துக்கொண்டு, 1-ரூபாய் இடை அந்தி சந்தி கொடுத்துக்கொண்டுவந்தால், குழந்தைகளுக்குக் காணுகிற, மூலரோகம் நீங்கும்.

வெங்காயம்—இதை நெய்யில் வதக்கி, சர்க்கரை கலந்துக் கொடுப்பது வீட்டு வழக்கம்.—சதைத்து சாம்பலில் வறுத்து மூலமுளைமேல் வைத்துக்கட்டலாம்.

அரிதகிலேகியம். பாவன பஞ்சாகுளத் தைலம்.

யோகமுறையாய்ச்செய்த இவைகளில் ஒன்றை உபயோகப்படுத்தினால் மலபந்தம் நீங்கும்.

பிரண்டை.—உலர்த்திப் பொடித்த பிரண்டையின் தூளுக்குச் சமன் சர்க்கரை கலந்துக்கொள்ளவும். இதில் ¼-½-1-விராகனிடை வெண்ணெயில் குழப்பி, தினம் 2-3-தடவை கொடுத்துக் கொண்டு வந்தால், மூலரோகம் நீங்கும்.

வெல்லம்.—கரும்புவெல்லம் சுடவைத்து மூலமுளைமேல் தடவிக்கொண்டுவந்தால், கரையும்.

சுண்ணாம்பு.—தாளித்த சுண்ணாம்பு போல்டீஸ் செய்து போடலாம்.

காடி.—இதில் சக்கிமுக்கிக்கல்லைச் சிவக்க சுட்டுப்போட்டு, பிறக்கிற ஆவியை மூலமுளைமேல் படும்படி செய்யலாம். கரையும்.

மயில்துத்தம்.—இதைச்சுட்டு, தேனில்கலந்து, மூலமுளைமேல் தடவலாம்.

அஸ்தி ஆவிருதவாதரோகம்.

అస్థిఆవృతవాతరోగము.

இதுவே—பரியஸ்தியத்தின் தாபிதம்.

INFLAMMATION OF THE PERIOSTEUM, NODE.

ரோகலக்ஷணம்.—எலும்பை மூடிக்கொண்டிருக்கிற தடித்த சவ்வுக்குக் காணுகிறவியாதி. இதில் அதிகவேதனை, வீக்கம், சுவரம், இவை முதலியவைகள் இருக்கும்.

அபின்.—இதை நீர் விட்டரைத்து, சந்தமெடுத்து வீக்கத்தின் மேல் பத்துபோட்டால், வேதனை தணியும்.

ஊமத்தன் இலை.—கஞ்சா இலை.—இவைகளில் ஒன்றை அரைத்து வீக்கத்தின்மேல்வைத்து கட்டிக்கொண்டுவந்தால் வேதனைதணியும்.

நன்னாரிவேர் கஷாயம்.—½-ஆழாக்கு.

மதுஸ்மிகரசாயனம்.—1-ரூபாய் இடை.

இவைகளில் ஒன்றையோகமுறையாய்ச் செய்து தினம் 2-3, தடவை கொடுத்துக்கொண்டுவந்தால், ரோகம் வசப்படும்.

அஸ்திசிரந்தி.

అస్థిక్షతి.

இதுவே—அஸ்திவிரணம்—అస్థివ్రణము.

NECROSIS, CARIES.

சிகிச்சைகிரமம்.—நல்ல ஊட்டம் கொடுத்து, பெலன்தருகிற மருந்துகள் கொடுக்கவேண்டியது. அபினி, கஞ்சாயிலை, ஊமத்தன் இலை, இவை முதலியவைகளில் ஒன்றை விரணம் மேல்வைத்துகட்டினால், வேதனைநிற்கும்.

0

அஸ்திசிராவ ரோகம்.

అస్థిస్రావరోగము.

இதுவே—கர்ப்பசிராவம்—గర్భస్రావము. శ్వేతప్రదరము.

கர்ப்பமேகம். யோனிவிசிராவம்.

யோனிமேஹம். வெள்ளை குசுமரோகம்.

சர்ப்பப்பிரமேஹம். எலும்புருக்கிரோகம்.

LEUCORRHŒA OR THE WHITES.

பெண்களில் மர்மஸ்தானத்திலிருந்து, பால்போலாவது, சளிபோலாவது, சீழ்போலாவது, வெளிப்படுகிறதிரவத்திற்கு, அஸ்திவிராவம் என்றுபேர். இது யோனியிலிருந்தாவது, கருப்பைக்குள்ளிருந்தாவது சிரவித்து வெளிப்படும். தூர்ப்பெலன், வியாகுலம், முரட்டுப்புணர்ச்சி, அகாலப்பிரசவம், ஆகிய இவை முதலியகாரணங்களால் இந்த வியாதி உண்டாகின்றது. சிலரில் இந்த வியாதி ஒளஷதத்துக்கு சீக்கிரம் வசப்படுகிறதில்லை.

ரோகலக்ஷணம்.—ஆரம்பத்தில் மர்மஸ்தானத்திலிருந்து வருகிறதிரவம், இளகலாய் இருக்கும்; நாள்பட்டபிறகு தடித்து சீழ்போலாகிவிடும்; அடிவயிற்றிலும், யோனியிலும், முதுகிலும், வேதனை இருக்கும்; அடிவயிற்றுக்குள் பளுவு இருப்பதுபோல் இருக்கும். நாளுக்குநாள் தேஹம் கிரிலிக்கும்; கைகால்கள் ஓய்ந்து, வேலை செய்ய மனமிராது.

சிகிச்சை கிரமம்.—புணர்ச்சி நீக்கவேண்டியது. இடுப்புமேல் வெந்நீர்விடவேண்டியது; குளிர்ந்தஜலஸ்நானம் செய்துக்கொண்டு வந்தால், ரோகபெலனைக்குறைக்கும். குளிர்ந்தஜலம் அல்லது துவர்ப்பு ஜலம் யோனிக்குள் பீச்சிக்கொண்டு வந்தால், ரோகம் வசப்படும். பலகாரி மருந்துகள் கொடுத்து தேகம் ஆரோக்கியமாகும்படி செய்யவேண்டியது.

குளிர்ந்தஜலம்.—யோனிக்குள் குளிர்ந்த ஜலம் தினம் இரண்டு தடவை பீச்சிக்கொண்டுவந்தால், சுகுணம் பிறக்கும்.

2-விராகனிறை, படிகாரத்தை, 1-புட்டி கருவேலம்பட்டைக் கஷாயம், அல்லது மாதுளம்பழத்தோல் கஷாயத்தில் கரைத்துக்கொண்டு, தினம் 2-தடவை யோனிக்குள் பீச்சிக்கொண்டுவந்தால், ரோகம் நீக்கும்.

ஏலாதிகண்டம்—இதின் இலையை அரைத்து, 2-விராகனிறை தினம் 2-3-தடவை கொடுத்துக்கொண்டுவந்தால் ரோகம் நீக்கும்.

½-ஆழாக்கு நன்னாரிவேர்க்கஷாயத்தில், 30-துளி வீரஜயநீர் விட்டு கலந்து, தினம் 2-3, தடவைகொடுத்துக்கொண்டு வந்தால், வியாதி நீக்கும்.

அயச்சிந்தூரம்.—இதில் 5-உளுந்துசிறை தேனில் கலந்து தினம் 2-தடவை கொடுத்துக்கொண்டு வந்தால், ரக்தபெலன் வரும் வியாதியும் நீக்கும்.

அன்னபேதி.—1-2, உளுந்துசிறை அன்னபேதியை, மாத்திரை செய்து, தினம் 2-3, தடவை கொடுத்துக்கொண்டுவந்தால், ரக்தவிருத்தி யுண்டாகி, வியாதியும் நீக்கும்.

இந்திரபுஷ்பாதிகிருதம்.—யோகமுறையாய் செய்த இதில் 1-2, ரூபாய் சிறை தினம் 2-3, தடவை கொடுத்துக்கொண்டு வரலாம்.

அப்பிரகசிந்தூரம்.—1. பணவிடை.

சதாவெரிகிருதம்.—(சிலப்பணக்கிழக்கு.)

வசலேந்திரபோளம்.—இதில் 10-உளுந்து சிறை, தினம் 2-3-தடவை கொடுத்துக்கொண்டுவரலாம்.

சிலாசத்தம்.—இதில் 5-10, உளுந்துசிறை மாத்திரை செய்து தினம் 3-தடவை கொடுத்துக்கொண்டுவரலாம்.

அஸ்மரிரோகம்.

అశ్మరీరోగము.

இதுவே.—கல்லடைப்பு;

சர்க்கராஸ்மரி. శర్కరాశ్మరి.

GRAVEL, CALCULUS OR STONE.

மூத்திரத்தில் உப்புகள் உண்டாகிற பிரகுருதிக்கு அஸ்மரிரோகப்பிரகுருதி (diathesis) என்றுபேர். சிலரில் இந்த உப்புகள் கண்ணுக்கு அகப்படாமல் பூதக்கண்ணாடிக்கு அகப்படும்படியான அவ்வளவு சிறியதாய் இருக்கும்; சிலரில் மூத்திரம் பெய்த பிறகு, அடியில் தூளாய்ப்படியும்; அதற்கு "வண்டல்" (Sediment) என்றுபேர். சிலரில் பருத்த மணல்போல் சிறிது பெரிதாய் இருக்கும், அதற்கு சர்க்கராஸ்மரி (gravel) என்றுபேர். சிலரில் கூழாங் கல்லுபோல் பெரிசாய் இருக்கும்; அதற்கு சிராவாஸ்மரி (stone) என்றுபேர், இந்த உப்புக்கல்லுகள் பலசாதியா யிருக்கும், நான் இயற்றிய இங்கிலீஷ்வைத்திய சங்கிரகத்தில் அறியலாம். இந்த உப்புக் கல்லுகள் மூத்திரக் குண்டிக்காயில் உண்டாகி, அதின் குழல்வழியாய் கீழ்க் கிறங்கி, மூத்திரப்பையில்வந்து தங்கி இருக்கும்.

ரோகலக்ஷணம்.—மூத்திர உப்பு உண்டாகிறபோது. இடுப்பில் நோவு, எரிச்சல் இருக்கும். மணல்போல் சிறிதிருந்தால் மூத்திர குண்டிக்காயிலிருப்பது, அதின் குழல்வழியாய் இறங்கி மூத்திரப் பையில் விழுந்துவிடும். அது இறங்கும்போது பிறக்கிற வேதனையை விவரித்துரைக்க சொற்களில்லை. வந்துவிழுகிற பக்கம் இடுப்பிலிருந்து, அடிவயிறு மூத்திரப்பை வரையில் நோய் காணும். அந்த நோவு பீசங்களுக்கும், தொடைகளுக்கும் இறங்கும். வாந்தியுமுண்டு; பீசங்கள் மேலுக்கு இழுத்துக் கொள்ளுவதுமுண்டு. மூத்திரத்தில் ரக்தம் கலந்திருப்பதும் உண்டு. வேதனை சகிக்காமல் கால்கைகள் சில்லிட்டு குளிமை மூடிக்கொள்ளுவதுமுண்டு. மூத்திர உப்புக் கல்லு, மூத்திரப்பையில் வந்து விழுந்தபிறகு, ஒருக்ஷணத்தில் உபத்திரவமெல்லாம் நீங்கிவிடும். பிறகு ரோகிக்கு உண்டாகிற சந்தோஷம் மெத்த உண்டு. அது சிறிதாய் இருந்தால் மூத்திரத்தோடு வெளியில் வந்துவிடும். மூத்திரநாளத்தில் அடைத்துக் கொள்ளுவதும் உண்டு. கல்லு மூத்திரப்பையில்வந்து இறங்கிவிட்ட பிறகுகாணுகிற லக்ஷணங்கள் எவையெனில்—அடிவயிற்று எலும்பு பின்புறம் வேதனை, மூத்திரப்பையில் எரிச்சல், அடிக்கடி மூத்திரம் வருகிறதாய் இருக்குதல்; மூத்திரம் இறங்கும்போது கல்லு அடைத்துக் கொண்டு திடீரென்று மூத்திரம் நின்றுவிடுதல்; முழங்கால் முழங்கைகள்மேல் ஊன்றி இருந்தால் மூத்திரம் இறங்குதல்; சிசினத்தின் மலரில் நோவு சிறுவர்கள் நோவு தீர்க்க அதின்தோலை இழுப்பதால் அது நீண்டு இருக்குதல் ஆகிய இக்குறிகளாம். இரும்பு சலாகுவிட்டு பரீக்ஷிப்பதில், கல்லின் சப்தம் அகப்படும், அதினால் சந்தேகம் நீங்கிவிடும்.

சிகிச்சை கிரமம்.—இந்த ரோகத்தில் உண்டாகிற வேதனையை நீக்கவேண்டியது.—உண்டான கல்லு பெரிதாகாமலும், புதுகல்லு உண்டாகாமலும் செய்ய வேண்டியது.—மூத்திர குண்டிக்காய்க்குழலில் இருக்கிற கல்லு சீக்கிரமாய் மூத்திரப்பையில் இறங்கும்படி முயற்சி செய்யவேண்டியது.—மூத்திரப்பையில் இருக்கிற கல்லு பெரிதாய் இருந்தால், சஸ்த்திரம் செய்து வெளிப்படுத்த வேண்டியது. ஔஷதத்தினால் கரையாது.

துத்தூர தைலம்.—யோகமுறையாய்ச் செய்த இந்தத் தைலத்தை இடுப்புமேல் தடவினால், வேதனை அடங்கும்.

கடிஸ்நானம்.—வேதனைப்படுகிற ரோகியை, வெந்நீர் விட்டிருக்கிற தொட்டியில் உட்காரவைத்தால் கல்லு சீக்கிரம் மூத்திரப்பையில் இறங்கிவிடும்.

ஊமத்தன் இலையைச் சிதைத்தாவது, கஞ்சா இலையைப் பக்குவப்படுத்தியாவது, இடுப்புமேல்வைத்து கட்டினால் வேதனை தணியும்.

அபினி.—1-2, உளுந்துவிறை மாத்திரை செய்துக் கொடுத்தால் வேதனை தணியும்.

நெருஞ்சிவேர் கஷாயம்.
பார்லி அரிசி கஞ்சி.
நெரிஞ்சில் கஷாயம்.
பேதாளு கஷாயம்.
வெண்டைக்காய் கஷாயம்.

யோகமுறையாய் செய்த டை கஷாயங்களில் ¼-½—ஆழாக்கு அளவு 10-உளுந்து விறை பொட்டிலுப்பு சேர்த்து, அடிக்கடி கொடுத்துக்கொண்டு வந்தால் வேதனை தணியும், மூத்திரமும் அதிகமாகி கல்லை வெளிப்படுத்தி விடும்.

இளநீர்.—இதை அதிகமாய்க் குடிப்பித்தால், மூத்திரம் அதிகமாகி கல்லை வெளிப்படுத்தி விடும்.

வேப்பம்பட்டை கஷாயம்.—யோகமுறையாய் செய்த இதில் ¼-ஆழாக்கு அளவு, தினம் 2-3-தடவை கொடுத்துக்கொண்டுவந்தால், பிரகுருதியைமாற்றி, புது கல்லுகள் உண்டாகாமல் செய்யும்.

மாசிக்காய்.—இதின் தூளில் 10-உளுந்துவிறை கொடுத்துக் கொண்டுவந்தால்; மூத்திரத்தில் ரக்தம் விழுதல் தீர்க்கும்.

நாயுருவிபூண்டு சாம்பல்.—இதில் 10-20, உளுந்துவிறை கொடுத்துக்கொண்டுவந்தால், கல்லு உத்பத்தியாகாமல் செய்யும்.

ஆந்திரபித்வாதரோகம்.

ఆంత్రాభివ్యాదరోగము.

இதுவே—ஆத்மானவாதம்—ఆధ్మానవాతము.

அலஸகரோகம்—అలసకరోగము.
வயிறு உப்புசம். வயிற்றுப்பொருமல்.
வாயுபுரிதல். குடல்வாதம். குடலிரைச்சல்.
பித்தவாயு—உஷ்ணவாயு.
அஷ்டீலரோகம். அஸ்டீலரோகம். అష్ఠీలరోగము.

FLATULENCY. DRUM-BELLY.

அன்னாசயத்திலும், குடலிலும் காற்றுசேர்ந்து இந்த ரோகம் பிறக்கின்றது. இந்தக் காற்று வாயினால் விழுங்குவதினாலும், பதார்த்தங்கள் கெட்டுப் போகுவதினாலும், உண்டாகின்றது. சிலரில் குடலிலிருந்தே உண்டாகும். முக்கியமாய் பெருங்குடலில் வாயுசேருவது வழக்கம். குடலின்வலிவு குறைந்து இந்த வியாதி பிறக்கின்றது.

ரோகலக்ஷணம்.—வயிறு உப்பி பெருவாய் விரிந்துபோகுவது போலிருக்கும். காற்றுபறியும். வயிறு இரையும்.

சிக்கிச்சை கிரமம்.—உதரவாதஹரமருந்துகள் கொடுத்தால் வாயு வெளிப்பட்டுவிடும். பலகாரி மருந்துகள் கொடுத்து, குடலுக்குப் பெலன்வரும்படிச்செய்தால் வாயு உண்டாகாது.

இஞ்சிலேகியம். 1-2, விராகனிடை.
தயிர்ச்சுண்டிச்சூர்ணம். ½—டை. (சுக்கு)
கண்டார்த்திரகலேகியம் 1—டை (சுக்கு)
சௌபாக்கியசுண்டி. 1—டை (சுக்கு)
நாகராதிலேகியம். 1—டை (சுக்கு)
இஞ்சிரசாயனம். 1—டை.
ஏலாதிசூர்ணம். ½—டை.
ஏலாதிவடகம். ½—டை.
ஓமத்தைலம். 1-2, துளி, சர்க்கரையில் கொடுப்பது
பாவனஓமம். 15-உளுந்தெடை.
பாவனசீரகம். 10-20, டை.
சீரகாதிலேகியம். ½-விராகனிடை.
ஜீரகவடை. 1.
ஜீரகத்தைலம். 3-5, துளி சர்க்கரையில் கொடுப்பது.
பிப்பல்லியாதிலேகியம் ½-விராகனிடை.
தாளிசபத்திரி சூர்ணம். 1-ருபாயிடை.
தாளிசபத்திரிவடகம். 1.
தீபாக்கினிசூர்ணம். 15-உளுந்தெடை.
இங்குவாதிசூர்ணம். ½-விராகனிடை.
ரோகிணிகஷாயம் ½-ஆழாக்கு.

யோகமுறையாய்ச்செய்த இவைகளில் ஒன்றைக் கொடுத்தால் வாயுவும், வயிற்றுப்பொருமலும் நீங்கும்.

வசம்பு, லவங்கம், சுக்கு, கறிவேப்பிலை புதினா கொத்துமல்லி சோம்பு. அரத்தை மிளகு.

இவைகளில் ஒன்றையாவது, அல்லது 2-3-சரக்குகளையாவது சேர்த்து கஷாயம் செய்துக்கொடுத்தால், வயிற்றுப்பொருமல் நீங்கும்.

அப்பளக்காரம் 1-விராகனிடை.
உழமண்ணு உப்பு. 15, உளுந்தெடை.

இவைகளில் ஒன்றை தண்ணீரில் கலந்துக்கொடுத்தால், புளிப்பால் உண்டாகிற வாயு நீங்கும்.

நெம்பர் 3.

பீஜப்பையில் குடல் இறங்கி இருக்கிற விதத்தைக் காண்பிக்கிற படம்.

ஆந்திரவிருத்திரோகம்.

ஆந்திராவிருத்திரோகம்.

అంత్రావృద్ధిరోగము.

இதுவே—அண்டவாதம்—అండవాయు.

குடல் இறக்கம். குடல் அண்டம்.
குடல் அண்டவிருத்தி.
குடல் வாதம். ஓதம். வளி. குமரலண்டம்.

HERNIA—RUPTURE.

இதில் குடலாவது, குடல்மேல் மூடிக்கொண்டிருக்கிற சவ்வாவது, பீஜநரம்புகள் ஓடுகிற துவாரம் வழியாய் கீழிறங்கி, பீஜப்பையில் வந்து இருக்கும். விரைவீக்கம், நீர் அண்டம், இவைகள் அல்லவென்று, பரீக்ஷையால் கண்டுகொள்ளவேண்டியது.

சிகிச்சை கிரமம்.—கீழிறங்கியிருக்கிற உறுப்பை மேலுக்குத் தள்ளிவிட்டு, மறுபடியும் இறங்காமல், துவாரம் அழுந்தியிருக்கும்படி துணியை மடித்துவைத்து கச்சையால் கட்டிவிடவேண்டியது. ஔஷதங்கள் சவுக்கியப்படுத்துவது ஒன்றுமில்லை. வச்சிரபீஜதைலம் கொடுத்தால் பேதியாகும்.

ஆமவாதரோகம்.

ఆమవాతరోగము.

இதுவே—கீல்வாதம்—కీలువాతము.
கீல்பிடிப்பு. சூலைக்கட்டு. வாதசூலை. వాతశూల.
முடக்குவாதம். வேதனை.
கைகால்பிடிப்பு. கால்கைபிடிப்பு.
ரசப்பிடிப்பு.
சோணிதவாதம். சந்திகசிலேஷ்மம்.
சந்திவாதம். கீல்வீக்கம்.

RHEUMATISM.

முழங்கால் முதலிய பெரியகீல்களைச் சுற்றிக்கொண்டு, தளமாய் இருக்கிற சவ்வுக்குக்காணுகிறவியாதி. இரத்த தோஷத்தினால் காணுகின்றது. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு வியாபிக்கிற குணம் உண்டு.

ரோகலக்ஷணம்.—வியாதி கண்டமூட்டுவீங்கி, அசைக்கக்கூடாமல் சோரும்; சிவந்து சூடாயிருக்கும்; சுரம் அனுசரித்திருக்கும். நாள்பட்ட கீல்வாதத்தில், மேல் குறிகள் எல்லாம் அற்பமாய் இருக்கும். பிரமேகம் உள்ளவர்களுக்கு இந்த வியாதி காணப்படுமுண்டு.

சிகிச்சைகிரமம்.—விரேசனம் கொடுக்கவும்; அபினி கொடுத்து, வேதனையை அடக்கவேண்டியது; வியாதிக்கெடுத்த மருந்துகளாவன, எலுமிச்சம்பழரசம், மூலிகை ..., பூமியிலிருந்து எடுக்கிற அப்பளக்காரம், உழமண்ணுப்பு, இவை முதலியவைகளைக்கொடுத்து, சௌக்கியப்படுத்தவேண்டியது.

போஸ்த்தக்காய்கஷாயம்.—யோகமுறையாய் செய்த இதை ஒற்றடம் கொடுத்தால் மூட்டுவேதனை தணியும்.

வாதசஞ்சீவிதைலம்.—யோகமுறையாய்செய்த இதை வெற்றிலையில் தடவி உள்ளுக்குக்கொடுத்து, மேலுக்கும் பூசிக்கொண்டுவந்தால், ரோகம் நீங்கும்.

மேகாரித்தைலம்.—யோகமுறையாய் செய்த இதில், 1-பலம் விரை வெந்நீரில்கலந்து, 5-நாள் கொடுத்து, உப்பில்லாதபத்தியம்வைக்கவும், வியாதி வசப்படும்.

அபினிகலவைச் சூர்ணம்.—யோகமுறையாய்செய்த இதில் 10-உளுந்தெடைமாத்திரம் இரவில் கொடுத்துக்கொண்டுவந்தால் வேதனை நீங்கி நித்திரை வரும்.

எலுமிச்சம்பழரசம்.—இதில் ¼-ஆழாக்கு அளவு தினம் 4-தடவை கொடுத்துக்கொண்டு வந்தால் ரோகம் வசப்படும்.

அப்பளக்காரம்.—1-வராகனெடை.

உழமண்ணுப்பு.—15-உளுந்தெடை.

சுக்கம்.—வாழைச்சாறு உப்பு. சால்மகிரா.

நாயுருவிச்சாம்பல்.—பொட்டிலுப்பு.

இவைகளில் ஒன்று தினம் 2-3-தடவை கொடுத்துக்கொண்டுவந்தால் ரோகம் வசப்படும்.

வேப்பம்பட்டை கஷாயம்.—யோகமுறையாய்செய்த இதில், ½-¼-ஆழாக்கு அளவுதினம் 3-4, தடவை, கொடுத்துக்கொண்டு வந்தால் துர்ப்பலம் நீங்கும். ரோகம் வசப்படும்.

நன்னாரிவேர்கஷாயம்.—யோகமுறையாய்செய்த இந்தக் கஷாயத்தில் ½-¼-ஆழாக்கு அளவு, மேல்கண்ட உப்புகளில் ஒன்றுசேர்த்து தினம் 3-தடவை கொடுத்துக்கொண்டுவரலாம்.

துர்க்கோட்டிதைலம்.—யோகமுறையாய்செய்த இதைச் சிரசில் தேய்த்து ஸ்நானம் செய்துகொண்டுவரும்படி செய்தால், புராதன கீல்வாதம் நீங்கும்.

துத்தூரதைலம்.

ரசக்களிம்பு.

ஊமத்தன் இலை.

எருக்கன்பால்.

கஞ்சா இலை.

மண்தைலம்.

கருநொச்சி.

கர்ப்பூரதைலம்.

சங்கங்குப்பி.

இவைகளில் ஒன்றை வீக்கமுள்ள மூட்டுகளுக்கு உபயோகப்படுத்தலாம். வேதனை நீங்கும்.

ஆம்லபித்தரோகம்.

ఆమ్లపిత్త రోగము.

இதுவே—புளியேப்பம்.

SOUR-BELCHING.

உண்ணும் பதார்த்தங்கள் ஜீர்ணமாகாமல் கெட்டு, வாயுஜனித்து, மேல்நோக்கிவெளிப்படும். அஜீர்ணரோகத்தில் இது ஒருகுறி. அஜீர்ணத்துக்குச் செய்கிற சிகிச்சையே, இதற்கும் செய்தால் நீங்கும்.

சுண்ணாம்புத் தண்ணீர்.—இதில் ½-அழாக்கு அளவு, தினம் 2-3-தடவை கொடுத்துக் கொண்டுவந்தால், ரோகம் நீங்கும்.

உத்காரம்.—ఉద్గారము.—இதுவே ஏப்பம். (Belching) அன்னாசயத்திலிருந்து வாயுவு வெளிப்படுதல். அந்த வாயு கீர்த்தோஷமற்றதாய் இருக்கும்.

ஆயாசம்.

ఆయాసము.

இதுவே—இளைப்பு அயர்ச்சி அழலை. களை-ஜ்?

FATIGUE. WEARINESS

சதைகளுக்கும் அவைகளைப்பற்றிய நரம்புகளுக்கும் பெலன் குறைந்து ஆயாசம் பிறக்கும், ஆகாரகுறைவே இதற்குக்காரணம்.

[illegible] இனங்களில் ஒன்று.

பேரா-[illegible]சாராயம்—இளநீர்.

பனங் கற்கண்டு பானகம்.

இவைகளில் ஒன்று கொடுத்தால் ஆயாசம் நீங்கும்.

அகில்கட்டை.—இதின் புகையை ஆக்கிராணித்தால், ஆயாசம் நீங்கும்.

ஹிக்காரோகம்.

హిక్కా రోగము.

இதுவே—கொட்டாவி.

இது உல்வாசத்தின் ஒருவித வித்தியாசம். கொட்டாவி விடுகிற வர்களைப் பார்த்தவர்களுக்கும், கொட்டாவி வரும். இது ஆயாசக்குறி சில வியாதிகளில் காண்பதுமுண்டு.

ஹித்மரோகம்.

హిధ్మ రోగము.

இதுவே—இதமாபித்தம் హిద్మాపిత్తము விக்கல்.

HICCUP.

இது [illegible] விகல்ப்பம். மார்புக்குள் அடியிலிருக்கும், ஈரல் [illegible] சதைக்கும், அன்னாசயத்துக்கும் காணுகிற இசிவு. அஜீர்ணமே [illegible] காரணம். ஈரல்தாங்கி என்னும் சதைக்குத் தாபிதம் [illegible] உண்டாகுவது ஒருகுறி; அல்லது அந்தச்சதை [illegible] நெருக்கியபடி இருக்கிற உறுப்புகளுக்கு தாபிதம் [illegible] விக்கல் காணும். சில உக்கிரவியாதிகளில் பிராண [illegible] விக்கல் காண்பது வழக்கம். விக்கல்பேதங்கள் [illegible]

[illegible] விக்கல்—அன்னபானாதி வித்தியாசங்களால் பிறப்பது.

[illegible] விக்கல்—அல்பம்.

[illegible]விக்கல்.—இரண்டிரண்டாய் வருவது.

[illegible]விக்கல்—அதிக சப்தத்துடன் பிறப்பது.

கம்பீர விக்கல்.—[illegible]வருவது.

[illegible] தண்ட[illegible]வைகளில் ஒன்று, வாயிலிட்டு சப்பரித்து, ரசம் [illegible] விக்கல் நீங்கும்.

தேன்-வெல்லம்-புளி—எலிமிச்சம் [illegible]ண்டு,

புளிப்பு-மாதுளம்பழ [illegible]ரை.

அடியில் கண்ட பதார்த்தங்களுக்கும் விக்கல் நிற்கும்.—

அப்பளக்காரம்.
குளிர்ந்தஜலம்.
உலர்ந்தரொட்டி.
நெய்.
கொத்துமல்லி.

கோட்டைப்பாக்கு, சீரகம், இவைகளைச் சாம்பலாக்கி, தேன் விட்டு கலந்து நாக்குமேல் அடிக்கடி தடவிக்கொண்டுவந்தால் விக்கல் நிற்கும்.

இந்திரலுப்தம்.

ఇంద్రలుప్తము.

இதுவே—கலதிரோகம்-[illegible].

மொட்டத்தலை-தலைமயிர் உதிர்தல்.

BALDNESS.

ரோகலக்ஷணம்:—ரோமம் உண்டாக்கிற வேருக்கு வியாதிகண்டு இந்த வியாதிபிறக்கின்றது. வேரானது சுத்தமாய்ப்பட்டுப்போய், மயிர் உதிர்ந்துவிட்டால், பிறகு முளையாது; மயிர்க்கால்மந்தமாகி, விழுந்து போகிற மயிர் மறுபடியும் முளைக்கும். சுரம், துர்ப்பலம், முதலிய வியாதிகளில் உதிர்ந்துபோகிற காரணம் தேகத்துக்கும், சர்மத்துக்கும் காணுகிற துர்ப்பலமேயாம். கிழத்தனத்தில் முதல்உச்சந்தலைமயிர் மிருதுவாகி பிறகு படிப்படியாய் விழுந்துபோகிறது; சிலரில் இது பாரம்பரமாய் காணுகின்றது. தலையில் வியர்வை அதிகமாய் காண்பவர்களுக்கு மயிர் உதிர்ந்துபோகுவது வழக்கம். தலைமயிர் சுத்திவைப்பதிலும் அது உதிரும். க்ஷவரம் செய்வதில் மயிர்வளரும்.

சிகிச்சைக்கிரமம்.—பலஹீனத்தினால் மயிர் உதிர்ந்தால், அடியில் கண்டவைகளைப் பிரயோகப்படுத்தினால், உதிர்ந்த மயிர்முளையும்:—

நல்லபோஜனம்—அயம்.
வேப்பம்பட்டைகஷாயம்—மீன்நெய்.

சர்மம் கொப்பளிக்காமல் உஷ்ணத்தை மாத்திரம் கொடுக்கிற அடியில் கண்ட மருந்துகளை, தலைமயிர் உதிர்ந்துபோன விடத்தில் தேய்த்தால், மயிர்காலுக்கு ஜீவனுண்டாகி, மயிர்வளரும்.—

133

வெங்காயம்.
கேசரஞ்சகதைலம்.
காடிக்கொழுப்பு.

நெம்பர் 4.

இந்தப்படம், புப்புசம், இருதயம் இவைகளுக்குள் இருக்கிற ஏற்பாட்டைக் காண்பிக்கின்றது.

ANATOMY OF THE HEART AND LUNGS.



1. 1. வலது புப்புசம். (நுரைமீரல்) Right Lung.
2. 2. இடது புப்புசம். Left Lung.
3. சுவாசக்குழல். Trachia.
4. சுவாசக்குழலின் வ[illegible]. Right Bronchi.
5. சுவாசக்குழலின் இடதுகிளை. Left Bronchi.
6. 6. 6. 6. [illegible]. Air cells.
7. வலது சிரவம். Right auricle.
8. சிரவத்துக்கும், சடரத்துக்கும் மத்தியிலிருக்கிற துவாரம். Auriculoventricnlar opening.
9. வலது சடரத்திலிருக்கிற வால்வுகள். Right ventricle and its valves.
10. [illegible]. Pulmonary artory.
12. 13. புப்புசசிரைகள். Pulmonary veins.

16. இடது சடாம்; அதிலிருக்கிற கவாடங்கள். Left ventricle and its valves.

17. இருதயகோசம். The Pericordium.

இருத்வாதம்.

హృద్వాతము.

இதுவே—இருதாவிருதவாதம்-హృద్వాతము.
இருத்திரஜம்-హృద్రజం,
இருத்திரவாதம்-హృద్రవాతము.
மார் அடைப்பு-தமரகவாதம்.

ANGINA PECTORIS.

இது இருதய வியாதி, கெட்டரோகம், விட்டு விட்டு காணும். இருதய தார்ப்பலத்தினுலும், அதில் கொழுப்பு படிவதினுலும், இந்த வியாதி காணுகின்றது. வயது சென்றவர்களுக்குக் காண்பது வழக்கம்.

ரோக லக்ஷணம்.—இதில் இடது மார்பில் இருதய ஸ்தானத்தில் சித்திரவதையுள்ள நோவு, மூச்சு முட்டல், பிராணன் போகுவதுபோல் பயம், மெதுவான நாடி, குளுமைக் குறிகள், இவை முதலியவைகள் இருக்கும். இந்த உபத்திரவம் கொஞ்ச நேரமிருந்து நீங்கிவிடும்; நீங்காமல் அதிகப்பட்டால் மரணமே நிச்சயம்.—அஜீர்ணத்தால், இருதய ஸ்தானத்தில் நோவு திடீலென்று காண்பது முண்டு. ஆனுல் இது மேல்கண்ட வியாதிபோல் அவ்வளவு உபத்திரவத்தையும், பிராணபயத்தையும் கொடுக்கமாட்டாது.

சிகிச்சைக்கிரமம்.—உபத்திரவம் கண்டிருக்கிறபோது, இருதயத்தொழில் நின்றுபோகாமல் முயற்சிசெய்யவேண்டியது—அதற்கு, கஸ்தூரி, பிராந்தி, காப்பிக்கஷாயம், அபினி, முதலிய உஷ்ணகாரிமருந்துகள் கொடுக்கலாம்; பிறகுரோகம் மறுபடியும் காணமலிருக்க, தேகசவுக்கியம் உண்டாகும்படியான முயற்சியைத்தேடவேண்டியது. இந்தவியாதியுடையவர்கள் எதாவது தகுதியானமருந்து கிட்டவே வைத்திருந்து, வியாதிகாணுகிற தக்ஷணமே எடுத்துக்கொண்டால், வியாதி வராமல் நிற்கும்:—

பெருங்காயம்—கஞ்கு.
மான்கொம்பு—சக்கு.
செம்மரம்—ரக்தபோளம்.

மேல்கண்டவைகளில் தனியாய் ஒன்றையாவது, அல்லது 2-3, சேர்க்கையாய் ஆவது உரைத்து கந்தமெடுத்து வேதனையுள்ள விடத்தில்போட்டு அனல்காட்டினுல், சுகுணம் பிறக்கும்.

உருமாலையை நெருப்பில் காட்டி அனல் வந்தியாவது, அல்லது வெந்நீர் ஒற்றிடமாவது செய்வித்தால், வேதனை நிற்கும்.

அருவாதிஹிருதம் 1-2, ரூபாய் நிறை.
மதுஸ்னிகேசராயநம் ½-1, ரூபாய் நிறை.

யோகமுறையாய்செய்த இவைகளில் ஒன்றை, பிரமாணமறிந்து தினம் 3, தடவைகொடுத்துக்கொண்டுவந்தால், சரீரசௌக்கியம் உண்டாகி வியாதிவராமல் செய்யுமென்று நம்பலாம்.

இருதயத்துடிப்பு.

இதுவே—படபடப்பு.

PALPITATION OF THE HEART.

மார்பின் இடதுபக்கமிருக்கிற இருதயம் எப்போதும் துடித்துக்கொண்டே இருக்கும்; அந்தத் துடிப்பு, பெலனும்வேகமாயும் இருந்தால், இருதயத்துடிப்பு என்றுசொல்லப்படும். சந்தோஷம், வியஸனம், கோபம், பயம், கவலை இவைமுதலிய மனசின் காரியங்களாலும், கடினவேலை, நித்திரை குறைதல், அஜீர்ணம், போஷணைக் குறைவு, அதிகவாசிப்பு, இன்னும் சில காரணங்களாலும், இருதய ரோகம், பாண்டு, குதகசங்கி, இவ்வமுதலிய வியாதிகளாலும், இருதயம் வேகமாய் துடிக்கும்; அப்போது நாடி அக்கிரமமாயும், விட்டு விட்டும் நடக்கும்.

சிகிச்சைக்கிரமம்.—தேகபெலன் செவ்வையாயும், விசேஷமாயும் இருப்பவர்களுக்கு இருதயத்துடிப்புகண்டால், பெலத்தைக்குறைக்க முயற்சிதேடவேண்டியது; அதற்கு விரேசனம் கொடுத்துபத்தியத்தில் வைக்கவேண்டியது—பெலன் குறைவுபட்டிருப்பவர்களுக்குக் கண்டால், பெலன் அதிகரிக்க முயற்சிசெய்ய வேண்டியது; அதற்கு கஸ்தூரி, நடேசசூரி முதலியவைகளை கொடுக்கவேண்டியது. இருதய ரோகத்தினால் கண்டால், குரோசாணி ஓமம், உள்ளுக்குக்கொடுத்து, அபினி, பெருங்காயம், ஊமத்தன் இலை, இவைகளில் ஒன்று இருதய ஸ்தானத்தின்மேல் பத்துபோடவும். சுருட்டு, தேத்தண்ணீர், இவைகளைத் தவிர்க்கவேண்டியது.

வியாதி கண்டிருக்கிற சமயத்தில் கொடுக்கத்தகுதியான ஔஷதங்கள் எவையெனில்:—

குளிர்ந்த தண்ணீர்.
கர்ப்பூரம், ½ உளுந்தநிறை.
சுக்கைக்கட்டையுடைக்கஷாயம்.
குரோசாணி ஓமக்கஷாயம்.

மாஜூம்-பைரவிமாத்திரை.

கஸ்தூரிகுளிகை-1.

சடாமாஞ்சிகஷாயம்-¼-ஆழாக்கு.

தூர்ப்பலமுடையவர்களுக்குக்காணுகிற இருதயத்துடிப்புக்குக் கொடுக்கத்தகுதியான ஔஷதங்கள் எவையெனில்:—

அயச்சிந்தூரம்-5-10, உளுந்தளவு.

அன்னபேதி 2-உளுந்தளவு.

———:o:———

ஈறுவிரணம்.

ఈరుౖవణము.

ரசமருந்து தின்றவர்களுக்கு. ஈறுவீங்கி மிருதுவாகி, அதிலிருந்து ரக்தமும் சீழும்வடியும். சரீரஸ்திதிகெட்டவர்களுக்கு, நாளுக்குநாள் ஈறுகுறைந்து, பல்லுவேர் வெளிக்கு அகப்படும்; பல்லின் பிடிப்பு அற்று அசையும்.

சிகிச்சைகிரமம்.—இதற்கு துவர்ப்புமருந்துகள் வாய்க்கு உபயோகித்து, சரீரஸ்திதிகெட்டு இருந்தால், மதுஸ்மிஹம் முதலியவைகளைக்கொடுத்து ஆரோக்கியஸ்திதிக்கு கொண்டுவரவேண்டியது.

டீனக்காரம்.—2, விராகனிடை சினைக்காரத்தை, 1-புட்டி வேலம்பட்டைக் கஷாயத்தில் கரைத்து, ½-மணிக்கொருதரம் வாய் கொப்புளித்து வரும்படிச் செய்தால் ரோகம் வசப்படும்.

தந்தசூர்ணம்.—செய்முறை.—வாதுமை யோட்டுக்கரி, கொட்டைப்பாக்குக்கரி, வேப்பன்பட்டைத்தூள், காசுக்கட்டி, கடுக்காய், இவைகளின் தூள் சமனிடை சேர்த்து. பல்துலக்கிக்கொண்டு வந்தால், விரணம் ஆறும், பற்கள் இறுகும்.

ஆலம்விழுது.—இதனால் பல்துலக்கிக்கொண்டுவந்தால், விரணம் ஆறும், பற்கள் இறுகும்.

———

உதரரோகம்.

ఉదరరోగము.

இதுவே-துந்திரோகம்-பெருவயிறு.

DISEASES OF THE ABDOMEN.

வயிறு அனேக காரணங்களால் பெருத்துப்போகும். அக்காரணங்கள் எவையெனில்:—

இடதுபக்கத்திலிருக்கிற பிலீகம்பெருத்து கண்டால், பிலீரோதரம் என்றுபேர். (பிலீரோகத்தைப் பார்வையிடவும்.)

வலதுபக்கத்திலிருக்கிற யகுத்கண்டம் பெருத்துகண்டால், யகுத்ரோதரம் என்றுபேர். (யகுத்ரோகத்தைப் பார்வையிடவும்.)

வயிற்றுக்குள்ளிருக்கிற சவ்வுகளிலேசேர்ந்து கண்டால், [illegible] என்றுபேர். ([illegible]ரோகத்தைப் பார்வையிடவும்.)

வயிற்றிலிருக்கிற கொழுப்பு அதிகமாகி கண்டால், மேதோதரம் என்றுபேர். (மேதோதரத்தைப்பார்வையிடவும்.)

———

உத்கோட்டரோகம்.

[illegible]

இதுவே-[illegible]—சிற்றுமூப்பு.

[illegible] இப்பிணி கண்டால், [illegible] கஷ்டம். [illegible] உபயோகிக்கலாம்:—

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

———

உபஜிக்வாரோகம்.

[illegible]

இதுவே-உண்ணாக்குவளர்தல்.

ELONGATION OF THE UVULA.

[illegible] தொண்டையில் [illegible] இரு[illegible]

[illegible]—[illegible] ஒரு [illegible]. [illegible] செய்துக்கொள்ளவும், பிறகு [illegible]

ளுன்னிரசத்தை அந்தக்கரண்டியிலிட்டு, காம்பைப்பிடித்துக் கொண்டு ரசம் உண்ணுக்கிலபடும்படி ஜாக்கிரதையாய்வைக்கவேண்டியது இவ்விதம், 2-3, தடவைவைத்தால், குறைந்துவிடும்.

அக்கரக்காரம்.—இதின் தூளை உண்ணுக்குக்கு வைத்தால் குறையும்.

தேங்காய் ஓட்டைச்சுட்டு இரும்பு தகடுமேல்வைத்து, அதில்வரு கிறதைலத்தை எடுத்து, உண்ணுக்குமேல்வைத்தால் சுருங்கிவிடும்.

உபதம்சரோகம்.

ఉపదంశరోగము.

இதுவே—அலவிரோகம்.—ఆలవిరోగము,
லிங்கவிரணம்.—లింగవ్రణము.
மேஹவிரணம் —మేహవ్రణము
பரங்கிவிரணம்.—పరంగివ్రణము
கொருக்கு —
குய்யவிரணம்.—గుహ్యవ్రణము.

SYPHILIS—CHANCRE.

ரோக ஸ்திரீயைப்புணர்ந்து ஆண்குறிமேல் காணுகிற புண்ணு இந்தப்புண்ணு லிங்கத்தின்மேலாவது, மலரை மூடிக்கொண்டிருக்கிறலிங்கவசத்தின்மேலாவது, உபஸ்த்தத்திலிருக்கிறவிஷநீர் சம்போகாலத்தில் எவ்விடத்தில் படுகின்றதோ, அவ்விடத்தில் உண்டாகும். புணர்ந்து, 2-4-6, வாரங்களுக்குள் காணும், விஷநீர் உடம்பிலேறி, மேகப்புடை, மேகச்சொறி, மேக ஊறல், முதலிய பலவித சர்ம ரோகங்களும். அஸ்திரோகங்களும் பிறக்கும். ஆண்குறிமேல் சாதாரண விரணம்காண்பதுமுண்டு; ஆகையால் அந்தஸ்தானத்தில் பிறக்கிற எல்லா விரணங்களை, உபதம்சரோகமென்று எண்ணலாகாது. ரோக ஸ்திரீ புணர்ச்சியால் பிறக்கிற விரணங்கள், 2-விதம்: ஒட்டு சாதி ஒன்று, ஒட்டு குணமில்லாத சாதி ஒன்று. இரண்டாவது சாதியில், 3-வித விரணங்கள் பிறக்கின்றன. ஆகிய 4-வித உபதம்ச ரோகங்கள் உண்டு. அவைகள் எவையெனில்,—கடின உபதம்ச விரணம்—மிருது உபதம்ச விரணம்—வியாபக உபதம்ச விரணம்—புரிபுஷித உபதம்ச விரணம், ஆம்.

1-வது கடின உபதம்சவிரணம்; (அடிஉலிந்தாவிரணம்) (Hard chancre) இந்த சாதிக்கு ஒட்டுகுணமுண்டு; விஷநீர் பட்டு 2-4-6, வாரங்கள் பிறகு விரணம் பிறக்கும்; இந்த விரணத்தில் சீழ்

இராது; விஷநீர் அரைகளுக்குப் பரவி, 2-3-4, பல கிரந்திகள் வீங்கி அரையாப்புக்கட்டிகள் இரண்டு பக்கங்களிலும் காணும்; வேதனை யிராது; கல்லுபோல் கட்டியாய், செங்காள் இருக்கும்; பழுத்து உடைகிற குணமிராது. விஷநீர் ரத்தத்திலேறி, உடம்பில் வியாபித்து, பலவித மேகப்புடைகள் காணும். இந்த ரோகம் ஒரு தடவைக்குமேல் காண்பது அபூர்வம். விரணமானது, பரைசேர்ந்து அடியிலும் சுற்றிலும் கல்லுபோலிருக்கும். ஒரு விரணத்துக்குமேல் காணாது விரண விஷம் உடம்பில் பரவி ஊறிய பிறகு, விரண சிறை எடுத்து, அம்மை குத்துவதுபோல் குத்திவைத்தால், விரணம் உண்டாகமாட்டாது.

சிகிச்சாக்கிரமம்.—இந்த சாதிரோகத்துக்கு, உள்ளுக்கும். வெளிக்கும், சிகிச்சைசெய்யவேண்டியது. இதின் விஷத்தைக் கெடுக்க, பாதரச மருந்தைவிட வேறொன்றுமில்லை. ரசம் உள்ளுக்குக்கொடுத்து, அதையே பூசுதற்கும் உபயோகப்படுத்தினால், பின்னிட்டு காணுகிற மேக உபத்திரவங்கள் தலைகாட்டாது. ஆரம்பத்தில் (4-நாளைக்குள் காரம் வைத்தால் விஷத்தை முறித்து விடும், உடம்பில் வியாபிக்கும்படி செய்யாது. ஆனால் ஆரம்பஸ்திதியில் சிகிச்சை செய்துகொள்ள வருகிறபேர் இல்லை. விரணத்தின் அடிகனத்து தடித்து விட்டால், விஷம் உடம்பிற் பற்றிவிட்டதென்று நிச்சயிக்க வேண்டியது. அந்தச்சமயத்தில் காரம் வைத்தும் பிரயோஜனமில்லை. விரணத்திலிருக்கிற கனப்பும், அரையிலிருக்கிற கட்டிகளும் கரைகிற வரையில், உள்ளுக்கு தினந்தோறும் கொடுக்கவேண்டியது. பெண்களுக்கு உபதம்சரோகமிருந்தால், அந்த விஷம் பிண்டைத்தைப்பற்றி, அகால பிரசவத்தை யுண்டாக்கும், அல்லது சாவுபிள்ளை பிறக்கும். ஆகையால், சதிக்கும், புருஷனுக்கும், ரசமருந்து கொடுத்து உடம்பைத் தேற்றினால், பிரகிருதிமாறி, பிண்டத்துக்குக் காணுகிற விபத்து தீர்கும்.

2-வது.—மிருது உபதம்சவிரணம். (Soft Chancre) இந்த சாதி விரணத்தில் கனப்பும் தடிப்பும் இராது; சீழ் சுரக்குவதுயும்; விஷநீர் பட்ட 1-நாள் 2-அல்லது பலவிரணங்கள் காணும். அவைகள் தோலைக்கிள்ளிவிட்ட விரணம்போல், மிருதுவாய் இருக்கும்; கொஞ்சநாள் பரவும்; 3-6, வாரங்கள் மேல் தற்செயலாய் உலர்ந்துவிடும். ரணவல்ல மாத்திரமிருக்குமே யொழிய கனப்பும் தடிப்பும் இராது. அரையில் கட்டியை உண்டாகாது. விஷநீர் உடம்பில் பற்றுவ குணமில்லை; மேகப்புடைகள் காணாது. ஒருவேளை விஷநீர் வியாபித்து, அரையாப்புக் கட்டி கண்டால், அது பழுத்து உடையும், கல்லுபோல் கட்டியாய் இராது.

சிகிச்சைக்கிரமம்.—இதற்கு விரணத்துக்கு மாத்திரம் சிகிச்சை செய்தால் போதும். 5-நாளைக்குள் சிகிச்சைக்குவந்தால், விரணம் காரம் வைப்பதினாலேயே, ஆறிவிடும்; காடிக்காரம் வைப்பதைவிட, பொட்டிலுப்பு திராவகம், கந்தகத்திராவகம், இவ்விதமேகமுள்ள காரங்களை வைத்து விஷநீரை முறித்துவிடவேண்டியது. நாள்பட்டு

விட்டால் துவர்ப்புமருந்துகள் போட்டு விரணத்தை ஆற்றவேண்டியது. அரையிலிருக்கிற கட்டி பழுத்தால், தாராளமாய் கீறிவிடவேண்டியது. உள்ளுக்கு ஆரோக்கிய மருந்துகள் கொடுத்தால் சமனம் சீக்கிரம் முடியும்.

3-வது. வியாபக உபதம்ஸ விரணம்.—(Spreading Sore.) இந்த சாதி விரணம் தின்னுகொண்டுபோய், நாநாவிதமாய் பரவிபெருகும், அரையாப்புக்கட்டி காணும். 1-கிரந்தி வீங்கிபழுக்கும்; உவரசான் செல்லும். மேகப்புடைகள் உடம்புமேல் காணாது. இந்த சாதி விரணமானது பரவிகொண்டுபோய், அடிவயிற்றை விரணமாக்கிவிடும்; சிகிச்சைக்கு உட்படாது.

சிகிச்சாக்கிரமம்.—இந்த சாதிக்கு, ரணத்துக்கு சிகிச்சை செய்வதே போதும். காரம் வைப்பதில் கெடுதிசம்பவிக்கும். ஒற்றிடம் போட்டு, பொட்டலிகை கட்டுவதில், சமனம் பிறக்கும். அபினி கொடுத்தால், வேதனை நீங்கும்; ரசப்புகை கொடுத்தால் நன்மை செய்யும்; வெந்நீரில் கொஞ்சநேரம் தினம் உட்காரவைத்தால், விரணத்திலிருக்கிற விஷநீரின் குணம் மாறிவிடும். பலஹீனமிருந்தால், அயம், வேப்பன்பட்டை கஷாயம், பொட்டிலுப்பு திராவகம், இவ்விதமருந்துகளைக் கொடுக்கலாம். தாபித குணமிருந்தால், மின்னெய் கொடுக்கலாம். ரோகியை படுக்கையில் வைக்கவேண்டியது; நல்லபோஜனம் கொடுபிக்கவும்.

4-வது. பரியுஷித உபதம்ஸ விரணம்.—அழிப்புண். (Sloughing Sore.) இந்த சாதியில் தாதுக்கள் அழிகிப்போகும்; அரையில் கட்டியைப் பிறப்பிக்காது; உடம்புமேல் மேஹப்புடைகள் காணாது; விரணத்துக்கு மாத்திரம் சிகிச்சைசெய்யவேண்டியது. விஷநீர் பட்டவிடம் கெட்டு அழிகிப்போகுவதினால் அந்த விஷநீர், காரம் வைத்து கெடுப்பதுபோல், அந்த விடத்தைக்கெடுத்து விடுகின்றது. தேக சவுக்கியம் எறக்குறைய கெடும். சிலரில், பூவின்மேல் தோல் கெட்டு பூவும்கெடும். அழிகிப்போன சதை விழுந்துவிட்டபிறகு, விரணம் சீக்கிரத்தில் ஆறிவிடும்.

சிகிச்சைக்கிரமம்.—மேல்கண்ட வியாபகவிரணத்துக்குச் செப்பிய சிகிச்சையை இதற்கும் செய்ய உதவும். நல்ல போஜனம் கொடுக்கவேண்டியது; அபினி கொடுத்து வேதனையை நீக்கவும்; பாதரசம் கொடுக்க உதவாது; நல்ல காற்றுள்ள விடத்தில் நெம்மதியாய் படுத்திருக்கும்படி செய்யவேண்டியது.

மேகப்புடைகள்.

மேல விரண விஷத்தைப்போல் தேகத்தைக்கெடுப்பது ஒன்றுமில்லை; சகலதாதுக்களையும், உள் இருக்கிற உறுப்புகளையும் கெடுத்து விடுகின்றது. ஜனங்களுக்குத் தீராத அசௌக்கியம் காண்பதற்கு இந்த வியாதியே காரணம். விரணத்திலிருக்கிற விஷநீர் சரீரத்தில் பரவி அடியில் கண்டவியாதிகளைப் பிறப்பிக்கின்றது. அஸ்திரோகம், விரணங்கள், சர்ம ரோகங்கள், நேத்திர ரோகம், சிரோ

ரோகம், மேஹ சூலைகள், நபும்ஸகம், மலடு, கர்ப்பசிராவம், கர்ப்பசிசுவுமுருத்தியுவு, கண்ட விரணங்கள், ஜிஹ்வாரோகம், இவை முதலியவைகளாம். சரீர வியாதிக்குறிகள் கண்டவுடனே, சிகிச்சை ஆரம்பிக்கவேண்டியது. வியாதியை வேரோடறுக்க ரசமே முக்கியமானது. ரசத்தை உபயோகப்படுத்துவதற்கு, இரண்டு மார்க்கம். உள்ளுக்குக் கொடுப்பது ஒன்று, சர்மத்தின்மேல் உபயோகிப்பது ஒன்று. உள்ளுக்குக் கொடுப்பதைப்பார்க்கிலும், மேலுக்குபயோகப் படுத்துவதே நல்லது. வீரம், பூரம், லிங்கம், ஆகிய இவைகள் மூக்கியரசமருந்துகள்.

பூரக்கிலேதம். (Yellow wash) செய்முறை.—ரசபஸ்பம் 30, உளுந்தெடை; சுண்ணாம்புஜலம், $1\frac{3}{4}$, ஆழாக்கு; விளாம் பிசினி, 10 உளுந்தெடை. இவைகளைக் கலந்து கொள்ளவும். இதில் மெல்லிய துணியை நனைத்து கடின உபதம்ஸ விரணத்தின்மேல், போட்டுக் கொண்டு வந்தால் விரணம் ஆறும்.

வீரக்கிலேதம். (Yellow wash.) செய்முறை.—வீரம் 18, உளுந்தெடை; சுண்ணாம்புஜலம், $1\frac{3}{4}$ ஆழாக்கு மிஸ்ரமித்துக் கொள்ளவும். இதைமேல்கண்டவிதமாய் உபயோகிக்கலாம்.

ரசப்புகை கொடுக்கிறவிதம்.—ரோகியை ஒரு நாற்காலியின் மேல் உட்காரவைத்து, புகை வெளிப்படாமலிருக்க, வழக்கப்படி செய்வதுபோல், ஒருகெட்டித்துணியால், உடம்பில்படாத பக்குவமறிந்து, சுற்றி, அதின்மேல் கம்பளியால் நன்றாய்போர்த்திவிடவும். பிறகு ஒருபாத்திரத்தில் நீர்விட்டு, மற்றொரு இரும்புத்தகடில் 1-3, விராகனெடை, லிங்கம் வைத்து, இவ்விரண்டையும் நாற்காலிக்கடியில் நெருப்பு மேல்வைத்துவிடவும். இவ்விதம் செய்வதில், அனல்காற்று, தண்ணீரின் ஆவி, ரசத்தின் புகை ஆகிய இம்மூன்றும் சேர்க்கையாய் சரீரத்தில் பட்டு வியாபிக்கும்; 5-10 நிமிஷம் சென்றபிறகு, வியர்வை பிறக்கும்; வியர்வை பிறந்த பிறகு 10-15, நிமிஷமிருந்து நெருப்பை நீக்கிவிடவும்; சரீரம் குளிர்ந்த பிறகு, ஈரம்போகும்படி துடைத்துவிடவும். உடனே நன்னாரிவேர் கஷாயத்தில், 1-ஆழாக்கு குடிக்கசெய்து, கொஞ்சநேரம் படுத்துக்கொள்ளும்படி செய்யவேண்டியது. உள்ளுக்குரசங்கொடுத்து, வாயைப்புண்ணாக்கி, ரோகி அதிக கஷ்டப்படும்படி செய்வதைப்பார்க்கிலும், ரசப்புகை கொடுத்து, ரசத்தை உடம்பில் பரவும்படி செய்வதே நல்லது.

ரசத்தைலம்.—½-பலம்.

மேகாரித்தைலம்.—1-பலம்.

வல்லாரைகிருதம்.—1-ரூபாய்எடை.

மேல்கண்ட ஔஷதங்களை தருணமறிந்து உபயோகப்படுத்தினால், ரோகம் வசப்படும்.

பூரக்களிம்பு. செய்முறை.—2-விராகனெடை பூரத்தை, 8-விராகனெடை மெழுகுகளிம்பு, அல்லது உறைந்தபன்றி நெய்யோடுசேர்த்து

லக் தூக்கொள்ளவும். இதைத் துணிமேல் தடவி, கடின உபதம்ல விரணத்தின்மேல் போட்டுக்கொண்டுவந்தால் ஆறிவிடும்.

நெம்பர்-5.

இந்தப்படம் மூளை, அதிலிருந்து பிறக்கிற நரம்புகள் ஆகிய இவைகளைக் காண்பிக்கின்றது.

THE BRAIN AND ITS NERVES.



1. பெரிய மூளை. Cerebrum.
2. சிறிய மூளை. Cerebellum.
3. முள்ளந்தண்டுக்கொடியின் சிரசு. Medella Oblongata.
4. முள்ளந்தண்டுக்கொடி. Spinal Marrow.
5. கண்ணு. Eye-ball.

உன்மாதரோகம்.

ఉన్మాదరోగము.

...துவே—உன்மத்தம்—மதம்—మదము.

பைத்தியம்—வெறி—பித்தம்—மதிமயக்கம்.

MADNESS.

மனிதன் நடந்துக்கொள்ளவேண்டிய கிரமம் தப்பிநடப்பதே உன்மாதம். இந்த நடத்தையை எளிதில் அறியலாம், விவரிப்பதில் விஷயம் விரியும். மூளையின் வெளிப்புறமிருக்கிற, ஊதாநிறமான பதார்த்தம் (Grey motter) வியாதிகொண்டாவது, அல்லது அதின் தொழில் வித்தியாசமடைந்தாவது இந்தரோகம் பிறக்கின்றதென்று, எண்ணம். பரமமாகிய எந்த ஆத்மாவோ, அதற்கே வியாதி யுண்டாகிறதென்று சிலர் சம்மதம்—எந்த வஸ்துவு ஆத்மாவின் ஸ்தானமாயிருக்கின்றதோ, அந்த வஸ்துவாகிய மூளையே கெட்டு உன்மாதம் பிறக்கிறதென்று சில சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஊதாநிறமுள்ள பதார்த்தம் நன்றாய் இருந்தால் புத்தி விருத்தியாயிருக்குமென்று, அறுத்து பார்த்து பரீக்ஷையால் தெரிந்துகொள்ள... ஆகையால் புத்தி கெடுவதற்கு காரணம், இந்து பதார்த்தம் கெட்டுப் போகுவதே என்று நாம் எண்ணவேண்டியது. தப்பு அபிப்பிராயம். அக்கிரமம் நடத்தை இவை முதலியவைகள் உன்மாத லக்ஷணங்களாகும்.

உன்மாதத்தில் பலஜாதிகளுண்டு; அவைகளை, நானியற்றிய இங்கிலீஷ்வைத்திய சங்கிரகத்தில் அறியலாம்.

சிகிச்சாக்கிரமம்:—மூளையின் வியாபாரத்தைக் குறைக்கவேண்டியது; அதற்கு வேலைக்க தொழில்களை நீக்கி, சும்மாயிருக்கும்படி செய்து, மருந்துகளால் தூக்கம் பிறப்பித்து, மல மூத்திர சுவேதங்களைக் கிரமப்படுத்த வேண்டியது. அபினி, கஞ்சா, குரோசானி யோமம், ஊமத்தை, இவ்விதமருந்துகளால் சித்தி வரும். பெலன் குறைவுபட்டிருந்தால், ஆரோக்கியகரமருந்துகள் உபயோகப்படுத்த வேண்டியது. போஜனம் போஷணகரமாய் இருக்கவேண்டியது. பைத்தியக்காரன்செய்கிற துஷ்டநடத்தைகளுக்கு அடித்து, பலாத்காரமாய் அடக்குவதைப்பார்க்கிலும், பிரியவசனம், பச்சாத்தாபம் இவைகளால் வசப்படுத்துவது நல்லது. இதுவே தற்கால சிகிச்சை. இடம்விட்டு இடம்மாறுவதில், அனுகூலமுண்டு.

சம்பிரதைலம்: (எலுமிச்சம்பழம்.)

எலுமிச்சம்பழரசம்.

அகத்திஇலை ரசம் 1-பங்கு, வெங்காயரசம், ½-பங்கு, இவைகளைச் சேர்த்துக்கொள்ளவும்.

இவைகளில் ஒன்றை உச்சிமேல் தேய்த்து 30-50 குடம் தண்ணீர் தாரையாய் விடவும். இவ்விதம் தினம் காலையில் ஸ்நானம் செய்தால், ரோகம் சமனப்படும்.

அடியிலகண்ட ஔஷதங்களில் ஒன்று பிரமாணமறிந்து கொடுத்தால், நல்ல சித்தி வரும்.

கர்ப்பூரம், அபினி, சித்திரகாரி லேகியம்.

அழவண இலையை எலுமிச்சம்பழரசம் விட்டு அரைத்து உச்சி மேல் வைத்து கட்டிக்கொண்டு வந்தால், ரோகம் வசப்படும்.

அடியில் வருகிற ஔஷதங்களிலொன்று கலியமிட்டுக்கொண்டு வரலாம்.

அகத்தியிலேரசம்—பேய்பீர்க்குரசம்.

உஷ்ணம்.

[illegible]ங்கை-சூடு-உள்-எரிவு-உள்சூடு-மூலச்சூடு.

HEAT.

ரக்தத்[illegible]தை அதிகரித்தால் உடம்புசூடாயிருக்கும். அதற்கு அடியில்கண்டிருக்கிற [illegible] ஒன்று கொடுத்தால், நீங்கிவிடும்:—

இளநீர்—திராஷாதிகிருதம்.
கூஷ்மாண்டகிருதம்—பனஞ்சாறு.
பாவனபஞ்சாங்குலத்தைலம்.
கதலிபலரசாயனம்—ஆமலகலேகியம்.
முள்ளாங்கிரசம்—சதாவெரிகிருதம்.
பனங்கற்கண்டு பானகம்.
துளசிவிரைகஷாயம்.
தாமரைப்பூ ஷர்பத்து—அத்திக்கள்ளு.
தாளித்தமோர்சாதம்.

அடியில்கண்ட தைலங்களில் ஒன்று ஸ்நானஞ்செய்துவைத்தால் சூடு நீக்கும்.

ஆமலகதைலம்—குமாரித்தைலம்.

ஓஷ்டரோகம்.

ఓష్ఠరోగము.

இதழ்வேட்டுதடுவியாதி.

DISEASES OF THE LIP.

உதடில் நாலுவிற ரோகங்கள் பலசாதிசருக்கிரி, அவைகள் எவையெனில்:—

கண்டோஷ்டம்—அந்திராஷ்டம்:—உதடுவெடிப்பு. சிகிச்சை—வெண்ணெயாவது, மெழுக்குகளிம்பாவது பூசிக்கொண்டு வந்தால், ஆறிவிடும்.

கிரஹணதோஷம்—முயலின் உதடைப்போல் மேலுதடு கிழிந்து இருப்பது. (Hare-lip.) சிகிச்சை.—இரண்டுபக்கம் ஓரத்தை அறுத்து, சேர்த்து, ஊசியால் தைத்துவிடவேண்டியது.

கன்னப்புத்து.—(Cancrum Oris.) ஓஷ்டபிராந்தியிதற்கு காரம் வைத்து ஆற்றவேண்டியது.

அர்வேகத்தினால், உதடுகள் புண்ணாகி விடுவதும் உண்டு. அதற்கு வெண்ணெயாவது, மெழுகுகளிம்பாவது, பூசிக்கொண்டு வரவேண்டியது.

ஔஷதவேகம்.

ఔషధవేగము.

சிலமருந்துகள் கொடுத்து கொண்டுவரும்போது, சில குறிகள் தேகத்தில்காணும், அப்போது அம்மருந்து தேகத்தில் பற்றியதென்று நிச்சயிக்கவேண்டியது.

பாதரசம்.—ஈறுகள் புண்ணாகும்.

கந்தகம்.—உடம்புமேல் கெட்ட[illegible]னைப் பிறக்கும்.

பாஷாணம். தாளகம். மனோசிலை.	கண்கள்சிவக்கும் ஆயாசங்காணும். முகம்வீக்கும். சின்ன உருப்புகள் கெடும்.

அயம்.—மலம் கறுப்பாகும்.

எட்டிக்கொட்டை.—சதைகளுக்கு இசிவுகாணும்.

பேதிக்கிழங்கு.—மூத்திரம் ரக்தநிறமாய் இறங்கும்.

வங்கம்.—ஈறு நீலநிறமாகும். வாய் உலரும்.

கக்கிருமல் ரோகம்.

కుక్కకాసము.

இதுவே—கக்குவான்—கக்குவாய்—முப்பிறைச்சுமை.

HOOPING COUGH.

இது குழந்தைகளுக்குக் காணுகிற ஒட்டுவியாதி. ஒருவருக்கு ஒரு தரத்துக்குமேல் மறுதரம் காண்பது அரிது. இந்தவியாதி 3-4 வாரம், அல்லது மாதக் கணக்காய் இருக்கும். ஒருவித விஷம் காற்று மார்க்கமாய் சென்று, சுவாஸக் குழலில் இருக்கிற சிலேஷ்ம சவ்வை அரித்து உபத்திரவப்படுத்தி, இருமலைப் பிறப்பிக்கும். இது சுலபமாய் போகுவதும் உண்டு; அப்படி போகாவிடில், வேறு ரோகங்களைப் பிறப்பித்து, கஷ்டப்படுத்தும். பிராணனையும் நீக்கும்.

சிகிச்சைகிரமம்.—இதற்குச்சொல்லியிருக்கிற மருந்துகள் அனந்தம். அம்மைரோகங்கள் எவ்விதமாய்ச் சாங்கிராமிக விஷத்தால் பிறந்து, எவ்விதமாய், போகின்றனவோ, அவ்விதமாகவே இதுவும் போகும்: ஆகையால் வியாதி போகிறவழியாய் நாம் விட்டுவிடவேண்டியது. என்னசெய்த போதிலும், காலம் வராமல், இருமல் தீர்காது. வேறுரோகங்கள் பிறக்காமலும், கஷ்டங்கள் நீங்கவும் செய்வதே நமது கடமை.

அடியில்கண்டிருக்கிற மருந்துகளில் ஒன்று, கிரமப்பிரகாரம் கொடுக்கத்தகுதியானவைகள்.—

கண்டங்கத்திரி ரசாயனம்—கந்தகம்.

கஸ்தூரி குளிகை—அனிரசம், கர்ப்பூரவல்லிரசம்.

இங்குவ திலேகியம்—இங்குவாதி சூர்ணம்.

கர்ப்பூர திரூரணம்—நவக்ஷாரம்.

ஆதுவனிகிருதம்—படிகாரம்.

சாம்பிராணி.—இதின் புகையை ஆக்கிராணிக்கும்படி செய்யலாம்.

அத்தூரதைலம்.—இதை முதுகு தண்டெலும்பு மேல் தடவி தேய்க்கலாம்.

கணரோகம்.

గణరోగము.

இதுவே.—கணை—கணம்—கணச்சூடு.

கணமாந்தம்—గణమాంద్యము. கணவெட்டை.

கணச்சுரம்—గణజ్వరము. பாலசோஷரோகம்.

கணபாலரோகம்.

உள் உருக்கி—உடலுருக்கி.

TABES MESENTERICA.

ரோகலக்ஷணம்:—சுரம், இருமல், பேதி இத்தியாதி வியாதிகள் சேர்க்கையாய், குழந்தைகளுக்காவது, சிறுவர்களுக்காவது கண்டால், அதற்கு கணரோகம் என்று சொல்லப்படும். குடலைச்சேர்ந்து பிடித்திருக்கிற சவ்வில் அடங்கியிருக்கிற கோளங்கள் வீங்கி, இந்த ரோகம் பிறக்கின்றது. இவைகளின் வழியாய்போகிற ரசவாகினிகள் அடைந்து அன்னரசம் மேலுக்கேறாமல், உடம்பு இளைத்துபோகின்றது. இந்த ரோகத்தைத் தமிழ் சாஸ்திரங்களில், அநேகசாதிகளாய் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவைகளை இதனடியில் காணலாம்:—

மாந்தகணம்—வயிறு இரைந்து கழிவது.

வாதகணம்—வீக்கம் கண்டிருப்பது.

குழிகணம்—கண்சொருகுவது.

ஆமகணம்—மலத்தில் சீதம்விழுவது.

முக்குகணம்—முக்கல் இருப்பது.

மூலகணம்—சீதமும் ரத்தமும் கலந்துவிழுவது.

கணசூடு—சுரம்மாத்திரம் இருப்பது.

சுவாசகணம்—மேல்மூச்சு இருப்பது.

சிகிச்சைகிரமம்.—சுவரம், பேதி, இருமல், இத்தியாதி வியாதிகள் சேர்க்கையாய்க்கூடி காணுவதால்; மருந்துகளும் சேர்க்கையாய் கொடுத்து வியாதியை நீக்கவேண்டியது. தாய்ப்பாலை நிறுத்தி பசும்பால் அல்லது ஆட்டுப்பால் கொடுப்பித்தால் நல்லது.

கணரோகத்துக் கொடுத்த மருந்துகள் எவையெனில்:—மீன் எண்ணெய்—தேங்காய்ப்பால்; காய்ச்சிதண்ணீரோடு சேர்த்துகொடுக்கலாம்.

இதனடியில் கண்டிருக்கிற ஒளஷதங்களில் ஒன்று, கொடுத்துக் கொண்டுவந்தால் பேதி நிற்கும்:—

கவாடசூர்ணம்—கட்டுவாதிகுளிகை.

கவாடகஷாயம். (அபினியைப்பார்க்கவும்.)

துளசிரசம், கர்ப்பூரவள்ளிரசம், கஞ்சாங்கோரைரசம். இவைகளில் ஒன்று ஷை மருந்துகளோடு சேர்த்து கொடுத்தால், சுரம், இருமல் நீக்கும்.

கணரோகத்தைலம்,—இதில் ¼-பலம் அளவு முலைப்பாலில்கலந்து காலையில் கொடுத்துக்கொண்டுவந்தால். ஊதுகணம், மாந்தகணம், நீக்கும்.

நெம்பர்-6.

நிணநரம்புகள் ரசதாரை இவைகளைக் காண்பிக்கிறபடம்.

LYMPHATIC VESSELS LACTEALS AND THORACIC DUCT.



1. 2-3-சிறுகுடல், அதைச்சேர்ந்திருக்கிற ரசவாகினிகள். Small Intestines and Lacteals.
5. ரசதாரை ஆரம்பம். Commencement of the thoracic duct.
4. ரசதாரைமுடிவு. Termination of the thoracic duct.
10. உதரவிதானம். The diaphragn.

கண்டகிரந்தி ரோகம்.

కంఠగ్రంథిరోగము.

இதுவே.-வைசூரியக்கட்டு-கண்டசந்தரோகம்.

கண்டசந்துரோகம்

INFLAMMATION OF THE TONSILS.

ரோகலக்ஷணம் :—தொண்டைக்குள் இரண்டு பக்கங்களில் இருக்கிற கோளங்கள்வீங்கி வேதனை எடுக்கிற ரோகம். இதில்தாபித குணங்கள் இருக்கும்.

சிகிச்சைகிரமம்.—தாபிதகுணங்கள் நீங்கும்படி முயற்சி செய்ய வேண்டியது. அதற்கு இதனடியில் கண்ட ஒற்றிடங்கள், பொட்டலிகைகள், ஔஷதங்கள் உபயோகித்தால் வியாதிவசத்துக்குவரும்:—

போஸ்தக்காய் கஷாயவொற்றிடம்.
அத்திபில் கஷாயவொற்றிடம்.
அரைத்த வெமத்தனில பொட்டலிகை.
ஆளிவிரை பொட்டலிகை.
வெந்நீர்ஆவி. காய்ந்தபால்ஆவி. (ஆக்கிராணம்.)

*முளகாய்கஷாயம். கருவேலன்பட்டை கஷாயம். (கண்டூஷம்.)

கண்டமாலரோகம்.

కంఠమాలరోగము.

SCROFULA.

ரோகலக்ஷணம்:—சரீரவிசேஷப்பத்தினாலேயோ, அல்லது ரத்தக்கெடுதியினாலேயோ இத்வியாதி அனுசரிக்கின்றது. தாய் தந்தை

களிருந்து, சிசுக்களுக்குத் தொடருகிறது. குழந்தைகளுக்குச் சர்மத்தைப்பற்றி ரணங்களுண்டானால், அதற்கு கரப்பான் என்றுபேர். கழுத்திலிருக்கிற கோளங்கள் வீங்கிநோவெடுத்து மாலைபோல் இருப்பதால், கண்டமாலையென்று பேர்பெற்றது. இதுதான் முக்கியமாய்க் காணுகிற வியாதி. சிலரில் இந்தக்கட்டிகள் சீழ்கொண்டு உடைந்து விரணமாகி சீக்கிரத்தில் ஆறாது. எனது இங்கிலீஷ் வைத்திய சங்கிரகத்தில் இதைக்குறித்து விவரமாய் செப்பியிருக்கிறது.

சிகிச்சைகிரமம்.—இதற்கு உடம்பில் நல்லரக்தம் உண்டாகும்படியாயும், கிரந்திகள் புதிதாய் உண்டாகாமல் இருக்கும்படியாயும், உண்டானவைகள் கரையும்படியாயும் செய்யவேண்டியது. அதற்கு நல்ல ஊட்டம் கொடுக்கவேண்டியது. கம்பளி ஆடை உடுக்கும்படி செய்யவேண்டியது. பரிசுத்தகாற்று ஆக்கிராணிக்கும்படி, சுகுந்த விடத்தில் ரோகியை வைக்கவேண்டியது. சமுத்திரகாற்று நன்மை செய்யும். அடியில் கண்டிருக்கிற மருந்துகள் கொடுத்துக்கொண்டுவந்தால், வியாதி வசத்துக்கு வரும் :—

மீன் எண்ணெய்.—அயச்சிந்தூரம் ;

வேப்பம்பட்டை கஷாயம்.

ரசத்தைலம்.—இதை வயிற்றுமேல்தடவி, கம்பளித்துணியால் சுற்றிவைத்தால், வயிறு வீக்கம் கரையும்.

கண்டாலஜிரோகம்.

కంఠాలజిరోగము.

இதுவே.—புட்டாலம்மை—கன்னவீக்கம்—தாடை வீக்கம்—பொன்னுக்குவீங்கி.

THE MUMPS.

ரோகலக்ஷணம்:—காது சமீபத்திலிருக்கிற கோளத்துக்குக் காணுகிற வியாதி. அந்தக் கோளம் வீங்கி நோவெடுக்கும். இது ஒருவித ஒட்டுவியாதி; காற்றுமூலமாய் உடம்பில் அணுகுகின்றது.

சிகிச்சைகிரமம்.—இது அற்பவியாதி. இதற்கு வெந்நீர் ஒற்றிடமாவது, சூடேற்றியதுணி ஒற்றிடமாவது கொடுத்துக்கொண்டு வரலாம். அமுக்கிராக்கிழங்கு தேய்த்து வீக்கத்தின்மேல் பத்துபோடலாம்.

142

கத்கத ரோகம்.

గద్గదరోగము.

இதுவே.—குரல் கம்மல்.

HOARSENESS.

ரோகலக்ஷணம்:—த்வனி தந்திகளுக்குக் காணுகிற வியாதி. அவைகள் தளர்ந்திருக்கும். **சிகிச்சை.**—இதனடியில் குறித்தவைகளை உபயோகிக்கலாம்.

படிக்கார ஜலம்.
முருங்கைவேர் கஷாயம்.
வேலம்பட்டை கஷாயம்.
} இவைகளில் ஒன்றை கொப்பளிப்பதினால், தளர்ந்திருக்கிற சவ்வு பலிவாகி, பூர்வஸ்திதிக்கு வந்துவிடும்.

வெங்காயம்.—இதை வேகவைத்து உண்ணால், குரல் கம்மல் நீக்கும்.

கசுக்கட்டி.—விளாம்பிசினி. இவைகளில் ஒன்றை வாயிலடக்கிக்கொண்டு, ரசத்தை விழுங்கினால், சுகுணமுண்டு.

காபி.—இதைக்காய்ச்சி, அதில்வருகிற புகையை வாயால் ஆக்கிராணித்தால், சுகுணம் பிறக்கும்.

கரப்பான்.

కరపాణి.

ERUPTION.

ரோகலக்ஷணம்:—இது சர்மவியாதி. தொத்திக்கொள்ளுகிற குணமுண்டு. இதில் அநேக சாதிகள் இருக்கின்றன ; அவைகள் எவையெனில் :—

கருங்கரப்பான்.—கறுத்திருப்பது.

செங்கரப்பான்.—சிவந்திருப்பது.

வரிக்கரப்பான்.—வரிவரியாக இருப்பது.

சொறிகரப்பான்.—சொறி எழும்புதல்.

அனந்தகரப்பான்.—தினவெடுப்பது.

மண்டைக்கரப்பான்.— } தலையில் காணுவது.
கபாலகுஷ்டம்.— }

கடுவன்.—இடுப்பில் படர்வது.

சிகிச்சைக்கிரமம்.—முதல் கரிகட்டி சுத்திப்படுத்தி, பிறகு லேதலங்கள் தடவிக்கொண்டு வரவேண்டியது. தேக ஆரோக்கியம் பிறக்கும்படி உள்ளுக்கு ஔஷதங்கள் கொடுக்கவேண்டியது. அடியில் கண்டிருக்கிறவைகள் கரப்பான்மேல் தடவுதவும்:—

கரப்பான்தைலம்.—வேப்பெண்ணெய்.

புங்கெண்ணெய்.—சால்முகிராதைலம்.

விழுதியிலை.—துத்தியிலை—புடல்கொற்றான்யிலை—ஆடுதின்டாப்பாளையிலை-வேப்பிலை. இவைகளில் ஒன்றை அரைத்து, கரப்பான் மேல் கட்டிக்கொண்டு வந்தால், சுத்தப்படுத்தும்.

D

படம். 7

ஸ்திரீயின் இடைக்குழியில் இருக்கிற உறுப்புகளைப் பக்கவாட்டமாய் காண்பிக்கிற படம்.

A SIDE VIEW ON THE VISCERA OF THE FEMALE PELVIS.



1. எலும்பு.
3. கடிதடம், Mons Veneris.

4. மூத்திரப்பை. Bladder.
6. மூத்திரதாரை. Urethra.
7. யோனிலிங்கம். Clitoris.
11. யோனிவாய். Opening of the Vagina.
12. யோனித்துவாரம். Canal of the Vagina.
13. மூத்திரப்பைக்கும் யோனிக்கும் மத்தியிலிருக்கிற சவ்வு.
15. பசம். Perineum.
16. 17-18-கருப்பை. Tes uterus.
16. குதம். Rectum.
20. குதத்துவாரம். The anus.

கர்ப்பாசய ரோகங்கள்.

గర్భాశయరోగములు.

DISEASES OF THE UTERUS.

ஸ்திரீயின் இடைக்குழியிலிருக்கில கருப்பைக்குக் காணுகிறரோகங்கள் அநேகம். அந்த ரோகங்களில் சில முக்கியமானவைகளை மாத்திரம் இதனடியில் விவரிக்கப்படும். அவைகள் எவையெனில்:—

கர்ப்பபாதம்.—గర్భపాతము.

கர்ப்பப்பிரமேகம்.—அஸ்திஸிராவத்தைப் பார்வையிடவும்.

கர்ப்பப்பிரம்சம்.—గర్భభ్రంశము.

கர்ப்பாசயதாபிதம்.—గర్భాశయతాపితము.

கர்ப்பாசயவக்கிரத்துவம்.—గర్భాశయవక్రత్వము.

கர்ப்பாசயவிரணம்.—గర్భాశయవ్రణము.

குதகபந்தம்.—నాడీకబంధము.—குதககுஷ்டம். నాడీకశూల.

குதகர்ந்திகம்.—அஸ்திர்க்கர ரோகத்தைப் பார்வையிடவும்.

கர்ப்பபாதம்.

గర్భపాతము.

இதுவே,—அகாலபிரசவம்.—అకాలప్రసవము.

கர்ப்பவிச்யுதி—அழிகர்ப்பம்—கருவழிவு.

கர்ப்பவிராவம்—கர்ப்பங்கரைந்துபோகுதல்.

ABORTION.

ரோகலக்ஷணம்:—சரிமாதமாகுமுன், கருப்பையிலிருக்கிற இளங்கருவு கரைந்து வெளிக்குவந்து விடுவதற்கு கர்ப்பபாதம் என்று பேர். மூனுமாதத்தில் கண்டால் கர்ப்பசிராவமென்றும், 6-மாதத்தில் கண்டால் கர்ப்பபாதமென்றும் சொல்லுவர். இதில் ரக்த்தம் அதிகமாய் வடியும்; அப்படி வடியாமல் செய்வதே பிரதான சிகிச்சை.

இங்கிலீஷ் வைத்திய சங்கிரகத்தில் இந்த விஷயத்தை விரிவாக அறியலாம்.

கர்ப்பபிரம்ஸம்.

గర్భభ్రంశము.

இதுவே—அடியிறங்கிப்போகுதல்.

FALLING OF THE WOMB.

ரோகலக்ஷணம்:—கருப்பையானது, தன்னிடத்தைவிட்டு கீழுக்கு இறங்கிவிடுவதற்கு கர்ப்பப் பிரம்ஸமென்றுபேர். சிலருக்கு கருப்பை உள்ளவே யிருக்கும், சிலருக்குவெளிக்கு வந்து விடும். கருப்பையைக் கட்டிவைத்திருக்கிற சவ்வுகளும், நரம்புகளும் தளர்ந்து இந்த விபத்து நேரிடுகிறது.

சிகிச்சைகிரமம்.—ஸ்திரீயை இடது பக்கம் படுக்கவைத்து, முழங்கால்களை முடக்கி வயிற்றோடணையும்படி செய்து, வெளிக்கு வந்திருக்கும் கருப்பைக்குமேல் எண்ணெய்விட்டு உள்ளுக்கு மெது வாய் தள்ளிவிடவேண்டியது. மறுபடியும் இறங்காமல், கடற்பாசியை படிக்காரஜலத்தில் தோய்த்து யோனிக்குள்வைத்து விடவும். இதை அப்போதைக்கப்போது வெளியிலெடுத்து தண்ணீரில் அலம்பிவிட்டு முன்போல் வைத்துக்கொண்டுவந்தால் கெட்டவாசனை யிராது.

கர்ப்பாசயதாபிதம்.

గర్భాశయతాపితము.

INFLAMMATION OF THE UTERUS.

பிரசவித்தபிறகு, கருப்பையானது தாபிதம் கொள்ளுவது வழக்கம். வேற்று காலத்திலும் காண்பதுமுண்டு. ஆனால் அபூர்வம்.

ரோகலக்ஷணங்கள்.—இதில் அடிவயிற்றில் குத்தலும், வேதனையும், பளுவும் உண்டு; தொடக்கூடாத அவ்வளவு புண்போலிருக்கும். சுரம் இருக்கும்; மூத்திரம் அடிக்கடி இறங்கும்; பேதியாகுவதும் உண்டு; நோவு விட்டு விட்டு காணும்; யோனியிலிருந்து கெட்டநீர் வடியும். நாள்பட்ட வியாதியில், சிலருக்கு கருப்பை பெருத்து கல்லுபோல் அடிவயிற்று எலும்புக்குப்பின் அகப்படும்.

சிகிச்சைகிரமம்.—ரோகியை அசையாமல் படுக்கவைக்க வேண்டியது; காரமில்லாத போஜனம் கொடுப்பிக்க வேண்டியது; வெந்நீரில் உட்காரவைத்தால் நல்லது; அபினிசேர்ந்த மருந்துகள் யோனிக்குள் பிரயோகிப்பதில், வியாதி வசத்துக்கு வரும்.

கர்ப்பாலய வக்கிரத்துவம்.

గర్భాశయవక్రత్వము.

இதை பட்டிவிழுதல் என்று சொல்வது வழக்கம்.

FLEXION AND VERSION OF THE UTERUS.

கருப்பையின் மேற்புறம், பின்னுக்காவது முன்னுக்காவது வளைந்துவிடும்; அல்லது அந்த அவயவம் முழுதும் பின்னுக்காவது முன்னுக்காவது சாய்ந்து, குறுக்காய் படுத்துக்கொண்டிருக்கும், இந்தவிஷயம் செவ்வையாய் தெரியாததனால் காட்டுப்பெண்கள், இந்தவியாதியுள்ளவர்களை, வீணில் வதைத்துக் கொல்லுகிறார்கள், தெரிந்திருக்கிற ஆங்கிலேய டாக்டர்களைக் கொண்டு சிகிச்சைசெய்வித்துக் கொள்பவர்களே புத்திமான்கள்.

கர்ஜுபரோகம்.

కర్జురోగము.

இதுவே—சரீரஊறல்.—சொறிசிரங்கு.—கமட்டுச்சிரங்கு.—
தினவு.—கண்டூதி. కండూతి.—நமைச்சல்.

PSORIASIS—ITCHING.

ரோகலக்ஷணம்:—இது சர்மரோகம், ஒட்டுவியாதி, ஒருவித சிறிய புழுக்களால் சிறங்கு பிறக்கிறது; அதை பூதக்கண்ணாடியால் பார்வையிட்டால் பெரிதாய் அகப்படும். இந்தக் கிருமிகள், கந்தக வாசனை பட்டால் சாகும். ஆகையால் கந்தகம் சேர்ந்த ஔஷதங்களையே உபயோகித்து, சிகிச்சை செய்ய வேண்டியது. இதனடியில் கண்ட ஔஷதங்கள் கர்ச்சுரோகத்துக்கு உபயோகிக்கலாம்.

கந்தகபஸ்பம்.—(தேனில் கலந்துகொடுக்கலாம்.)

கந்தகலேகியம்.—

1-புட்டி தேங்காய் எண்ணெயில், 1-பலம் சுருளுப்பட்டையும், 1-பலம் வசம்பும் போட்டு, காய்ச்சி, வடித்து, சூடாய் இருக்கும் போதே அதில், 1-பலம் கர்ப்பூரம் சேர்த்து கரைத்துக் கொள்ளவும், இதைச் சொறிசிரங்கு ரோகத்துக்குத் தடவி ஊறவைத்து, ஸ்நானஞ்செய்து வைத்துக்கொண்டுவந்தால் அநுகூலமுண்டாகும்.

1-புட்டி நல்லெண்ணெயில், 1-பலம் திக்காமல்லியைச் சேர்த்து, காய்ச்சி, வடித்து, சூடாயிருக்கும்போதே அதில் 1-பலம்கர்ப்பூரம் சேர்த்து கரைத்துக்கொள்ளவும். இதை மேல்கண்டவிதமாய் தடவலாம்.

வேப்பிலையோடு மஞ்சள், கர்ப்பூரம், இவைகளைச் சேர்த்து அரைத்து சிரங்குமேல் அப்பி நன்றாய் ஊறினபிறகு கழுவிவிட்டால், சீழ் நீங்கி, குத்தல் அடக்கும்.

விளக்கெண்ணெய்யில் சுண்ணாம்பும், முட்டைச்சாம்பலும், விதானமாய் எடுத்து சேர்த்து குழப்பி, சிரங்குமேல் பூசிக்கொண்டு வருவது வீட்டுவழக்கம்.

கந்தகத்தைப் பன்றி நெய்யிலாவது, தேங்காய் எண்ணெயிலாவது, போட்டு கலந்து, சுவாசனை யிருக்கும்படி அத்தர்சேர்த்துக் கொள்ளவும். சொறிசிரங்குக்குப் பூச நல்ல மருந்து.

கந்தகத்தை ஜலத்தில் கலந்து, அதில் ஒரு துணியை நனைத்து, உலர்த்தி, கட்டிக்கொண்டால், தேகமெங்கு மிருக்கிற சொறிசிரங்கு நீங்கும்.

[illegible]—இதை அரைத்து சொறி சிரங்குமேல் பூசலாம்.

1-புட்டி நீரில், 1-பலம் சுண்ணாம்பும், ½-பலம் கந்தகமும் சேர்த்து, தெளியவைத்து நீரை இறுத்துக் கொள்ளவும். இந்த நீர் சிரங்குக்குப்பூச உதவும்.

[illegible] (விளாங்கி) [illegible] செய்து, [illegible] தேங்காய் எண்ணெயில் குழப்பி, சிரங்குக்குத் தடவிக்கொண்டு வருவது நாட்டுவழக்கம்.

கந்தகப்புகை.—[illegible] விதமாய், முகத்துக்குப் படாமல் கந்தகப்புகை உடம்பில் படும்படி [illegible] செய்தால், [illegible] குணமாகும்.

நெம்பர் 8.

காதுக்குள்ளிருக்கிற ஏற்பாட்டைக் காண்பிக்கிற படம்.

A DIAGRAM OF THE EAR.



1. காதுத்துவாரம். The Meatus.
2. காதுக்குள்ளிருக்கிற சவ்வு. The Membrana Tympani.
3. சிறியமூன்று எலும்புகள்.
4. யுஸ்டேகியன்டியூப் என்னும்வாயிலிருந்து நடுக்காதுக்குப்போகிற குழல். Eustachian Tube.
5. 6. உள்காது. Internal Ear.
7. நடுக்காது. Middle Ear.

கர்ணரோகங்கள்.

కర్ణరోగములు.

இதுவே—காதுவியாதிகள்.

DISEASES OF THE EAR.

காதுக்குள் காணுகிற ரோகங்கள் பலசாதிகளுண்டு; முக்கியமானவைகளை மாத்திரம் இதனடியில் விவரிக்கப்படும்.

கர்ணசூலரோகம்.—காதுவலி. కర్ణశూలరోగము.
கர்ணவித்திரதிரோகம்.—காதுவீக்கம். కర్ణవిద్రధిరోగము.
கர்ணபூயரோகம்.—சீழ்காது. కర్ణపూయరోగము.
கர்ணகண்டுரோகம். (காதுநமைச்சல்) కర్ణకండురోగము.
கர்ணநாதரோகம். (காதிரைச்சல்). కర్ణనాదరోగము.
கர்ணஅர்ஸரோகம். (காதெழுச்சி.) కర్ణఅర్శరోగము.
கர்ணகிருமிரோகம். (புழு உற்பத்தி.) కర్ణక్రిమిరోగము.
பாதிர்யரோகம். (செவுடு) బాధిర్యరోగము.
கர்ணபூதிகந்தமு. (காதில் துர்வாசனை.) కర్ణపూతిగంధము.

கர்ணசூலரோகம்.

కర్ణశూలరోగము.

இதுவே.—காதுவலி—காதுநோவு—செவிநோய்.

EARACHE.

ரோகலக்ஷணம்:—இது ஸ்பரிஸ நரம்பைப்பற்றியவியாதி; ஆகையால் வெறும் வேதனைமாத்திரம் இருக்கும், வீக்கம், ஜுரம் முதலியதாபிதகுறிகள் இராது. இந்த உபத்திரவம் சட்டென்று நின்றுவிடுவதும் உண்டு.—இவ்விதகாதுநோவுக்கு, அடியில்கண்டிருக்கிற மருந்துகளில் ஒன்றைவதக்கி, ரசமெடுத்து, துளிகணக்காய் காதில்விட்டு பஞ்சிவைத்து அடைத்து வைக்கலாம். ரசங்கள் உலர்ந்துவிட்ட பிறகு, காதுக்குள் ஒட்டிக்கொண்டு வேதனைகொடுக்கும் ஆகையால் நல்லெண்ணெய்யோடு சேர்த்து விடுவது நல்லது.

146

மருள். இலைக்கள்ளி. திருநீற்றுப்பச்சை, நாய்வேளை, வெள்ளுள்ளி.

நல்லெண்ணெய்யைக் கொதிவர காய்ச்சி இறக்கி, உடனே அதில் கொஞ்சம் அபினி, பெருங்காயம், வெள்ளுள்ளி, மிளகு சேர்த்து, ஆறினபிறகு, அதில் 2-3, துளி காதுக்குள் விட்டு பஞ்சியால் அடைத்துவிடவும்.

சுக்கு, அபினி, பெருங்காயம், இவைகளின் கந்தமெடுத்து, சேர்த்து காது சுற்றிலும் பத்துபோட்டு அனலில் காய்ச்சவும். வேதனை சமனமடையும்.

பழைய காதுவலிக்கு, அடியில்கண்ட தைலங்களை, ஸ்நானம் செய்துகொண்டு வரும்படி செய்தால், நீங்கும்:—

நாசீராதிதைலம்.—இந்துசித்தைலம்.

கர்ணவித்திரதிரோகம்.

కర్ణవిద్రధిరోగము.

இதுவே.—கர்ணதாபிதம். కర్ణతాపితము காதுவீக்கம்.

INFLAMMATION OF THE EAR.

ரோகலக்ஷணம்:—காதுக்குழலில் வெளிப்புறமிருக்கிற சவ்வு வீங்கி, நோவெடுக்கும். இதில் தாபிதரோகத்துக்குடைய லக்ஷணங்களெல்லாம் இருக்கும். ஜுரம் காயும்,—வேதனை வரவர அதிகமாகும். பிறகு பழுத்து உடைந்து, நீராவது, சீழாவது, வடியும்; அப்போது உபத்திரவம் குறையும்.—உள் காதில் வித்ரதி கண்டால், மூளைக்கு வியாபித்து, பிராண அபாயம் காண்பதுமுண்டு.

சிகிச்சைக்கிரமம்.—பழுத்து உடைகிறவரையில், வேதனையைத் தணிக்கவேண்டியது. அதற்கு வெந்நீர் ஒற்றிடம், சாமந்திப்பூ ஒற்றிடம், இடலாம்; கோதுமைமாவு களிசெய்து, துணிமேல் தடவி, காதுக்குள் புகாமலிருக்க, அதின்மேல் சல்லாத்துணியைப்போட்டு, எண்ணெயிட்டு, காதுமேல் வைத்து கட்டிவைக்கலாம்—கட்டி உடைந்த பிறகு, சீழ்ப்போகும்படி செவ்வையாய் துடைத்து, தேங்காய் எண்ணெய்விட்டு பஞ்சியால் அடைத்து கொண்டுவந்தால், சீக்கிரம் ரணம் உலர்ந்துவிடும்.

கொதிக்கிற வெந்நீரையாவது, பாலையாவது, ஒரு வாய்சிறுத்த பாத்திரத்திலிட்டு, அதிலிருந்து எழும்புகிற ஆவியை காதுக்குவேது பிடிக்கும்படி செய்தால், கட்டி சீக்கிரம் பழுத்து உடையும்.

நல்லெண்ணெய் காய்ச்சி, அதில் அபினிசேர்த்து, ஆறினபிறகு அதைக் காதில்விட்டுக்கொண்டு வரலாம்.

கர்ணபூயரோகம்.

కర్ణపూయరోగము.

இதுவே—சீழ்க்காது.

OTORRHŒA.

ரோகலக்ஷணம்:—சரீர ஸ்திதிகெட்டு, காதில் சீழ்வடியஆரம்பிக்கும். முக்கியமாய் சிறுவயதில் காணுகிறது. இப்படி இருக்கும் போது ஈ-உட்கார்ந்தால், கிருமிகள் பிறக்கும்.

சிகிச்சாக்கிரமம்.—முதல் உடம்பு தேறும்படி மருந்துகள் கொடுக்கவேண்டியது. இதற்கு மீன் எண்ணெயே சிரேஷ்டமானது. காதை வெந்நீர்விட்டு சீழ்போகும்படி, கழுவி, துடைத்து, ஏதாவது எண்ணெய் விட்டுக்கொண்டு வந்தால் வியாதி வசப்படும்.

படிக்காரஜலம்.—வேலம்பட்டை கஷாயம். இவைகளில் ஒன்று காதிலிட்டு கழுவிக்கொண்டுவந்தால், சீழ் நிற்கும்.

பாதிரியரோகம்.

బాధిర్యరోగము.

இதுவே.—பாதிரியவாதம். బాధిర్యవాతము - செவுடு.

DEAFNESS.

ரோகலக்ஷணம்:—பிறவிச் செவுடு, ஊமையாக முடியும். மத்தியத்தில் காணுகிறசெவுடில் இரண்டு விதங்களுண்டு: ஒன்று சாத்தியம்—ஒன்று அசாத்தியம் உட்காதிலிருக்கிற உறுப்புகள், கெட்டுப்போனாலும் சரி, அல்லது கேள்வி நரம்புக்குச் சேதமுண்டானாலும் சரி, அசாத்திய செவுடென்றே தீர்மானிக்கவேண்டியது.

களகண்டரோகம்.

గలగండరోగము.

இதுவே.—புளாக்குழல்.

GOITRE.

ரோகலக்ஷணம்:—கழுத்திலிருக்கிற மாம்ஸ கிரந்தியானது பெருத்துப் போகுதலுக்கு, களகண்டரோகமென்றுபேர், இவருக்கு

147

[illegible] பெருத்துவிடும்— இதற்கு ஐயோடைன், (Iodine) என் [illegible] பிரதானமானது. அதை உள்ளுக்கும், வெளிக்கும் உபயோகப்படுத்தலாம்.

களாவார்த்தவாதரோகம்.

గళావర్తవాతరోగము.

இதுவே.—கழுத்து நரம்புசுளுக்கு.

WRY OR STIFF NECK.

ரோகலக்ஷணம்:—கழுத்து பக்கத்துச் சதைகள் தாபிதம் [illegible] இந்த வியாதிபிறக்கின்றது. இதற்குச் சீதளமே காரணம். [illegible] கண்டிருக்கிறபக்கமாகவே, தலைசாய்த்து இருக்கும்.

சிகிச்சாக்கிரமம்.—தாபிதம் போகும்படி சிகிச்சை செய்யவேண் [illegible] அடியில் கண்டிருக்கிற, தைலங்களைத் தேய்க்கலாம்; [illegible] ஒத்திடமிடலாம்; பொட்டலிகைகள் வைத்துகட்டலாம்; [illegible]—

[illegible]தைலம்.—(பூச்சு.)

[illegible]தைலம்.—(ஊமத்தை.)

[illegible]—(பொட்டலிகை.)

[illegible]—(பொட்டலிகை.)

[illegible] இலை.—(பொட்டலிகை.)

[illegible]திப்பூ.—(பொட்டலிகை.)

[illegible]—இதை அரைத்து பத்துபோடலாம்.

[illegible]போளம், காசுக்கட்டி, அபினி, கஸ்தூரிமஞ்சள், பச் [illegible] சாம்பிராணி. இவைகளை சிதானமாய் எடுத்து, எலுமிச் [illegible] விட்டு அரைத்து, பத்துபோட்டு, அலவ்காட்டி உலர்த்தி [illegible] 2-3-தடவை செய்யலாம்.

நெம்பர் 9.

சுவாசப்பைக்குள் இருக்கிற ஏற்பாட்டைக் காண்பிக்கிற படம்.

ANATOMY OF THE LUNGS.



1, 1, 1. வலது புப்புஸம். The Right Lung.
2, 2. இடது புப்புஸம். The Left Lung.
3. குரல்வளை. Larynx.
4. சுவாசக்குழல். Trachia.
5. வலது கிளைகள். Right Bronchi.
6. இடது கிளைகள். Left Bronchi.

காலரோகம்.

కాసరోగము.

இதுவே.—கபரோகம்-కఫరోగము. இருமல்-மார்ச்சளி. அன்னுமாந்தம்—குழந்தைகளுக்குக் காண்பது.

BRONCHITIS.

ரோகலக்ஷணம் :—சுவாசக்குழலின் கிளைகளுக்குள் ஒட்டிக் கொண்டிருக்கிற சிலேஷ்மம் கல்வுக்குக் காணுகிற தாபிதபிரோகம். இந்த வியாதியில் இரண்டு சாதிகளுண்டு; ஒன்று சுரத்தோடு உக்கிரமாய் காணும்; மற்றொன்று சுரமில்லாமல் காலட்டவிருக்கும். இந்த வியாதி குழந்தைகளுக்குக் கண்டால், விலாவைத் தூக்கி மூச்சு விடும்; ஆகையால், அன்னுமாந்தம் என்று சொல்லுவர். பெரிய குழல்களுக்குக் கண்டால், அதி லுண்டாகிற சிலேஷ்மம், துலக்மாய் வெளிப்பட்டுவிடும் சிறிய குழல்களுக்குக் கண்டால், அந்த சிலேஷ்

மம் வெளிப்படாமல், காற்று உள்ளுக்கு இறங்காமல், கஷ்டசுவாசம் கண்டு, ரத்தசுத்தி குறைந்து, அசாத்தியமாய் முடிவதும் உண்டு. வயது சென்றவர்களுக்கும், சிறுவர்களுக்கும் சிறுகுழல்கள் முக்கியமாய் வியாதி கொள்வது வழக்கம். ஆகையால், வைத்தியர்கள் பயமுற்று சிகிச்சை செய்யவேண்டியது. வயது சென்றவர்களுக்கு, சுரமில்லாத சாதிகண்டு, நெடுநாள் உபத்திரவப்படுத்தும்; சிலரில் கட்டையோடே முடியும் காலரோகத்தில் கபம் விழாமல், வரட்டிருமலால் இருப்பதும் உண்டு. சிலருக்கு, கபம் விஸ்தாரமாய் வெளிப்படும்; அதைக்குறைக்க பிரயத்தனம் செய்யலாகாது. நாள்பட்டிருக்கிற காலரோகத்தில், வேறு வியாதிகள் கண்டு, மரணம் சம்பவிக்கும்.

ரோகலக்ஷணங்கள் :—இருமல், சுவரம், கோழை விழுதல், மூச்சடைப்பு, நெஞ்சில் குறுகுறு வென்கிற சப்தம், தீவ்ரநாடி, ஆயாசம், ஆகிய இவைகளே இதற்கு முக்கியகுறிகள். ஆரம்பத்தில் கோழை, நீர்போல் கொஞ்சமாய் விழும்; பிறகு அதிகமாய் சீழ்போலிருக்கும். பெரிய குழல்களுக்குக் கண்டால் ரோகிக்கு அதிக கஷ்டம் இராது; சிறிய குழல்களுக்குக் காண்பதே கெட்டது. வியாதி சிறிய குழல்களைப்பற்றி யிருந்தால், கபம் அடைந்து கஷ்டசுவாசம் அதிகமாய் இருக்கும்; ரத்த சுத்தியில்லாமல், கெட்ட ரக்தம் உடம்பில் பரவும்; அரட்டல் புரட்டல் இருக்கும்; படுக்க இடம் கொடாது; முகம் வீங்கியிருக்கும். நாள்பட்ட வியாதியில் பாதங்களிலும் கால்களிலும் வீக்கம்காணும். அசாத்தியக் குறிகள் எவையெனில், பித்தல் பிதற்றல், அக்கியானம் இவை முதலியவைகள் கண்டு பிராணன் நீங்கிவிடும். வெகு சிறுசாய் இருக்கிற சுவாசக்குழலின் சவ்வுதடித்து, அதின்மேல் பிசின் போலொத்த கபம் ஒட்டிக்கொண்டு இருப்பதினால் (சுவாஸம் உள்ளுக்கு வாங்கும்போது, காற்றுபோக வழியில்லாமல், அடைப்படுவதினால்) இச்சவியத்து பிறக்கிறது. க்ஷயரோகம் வேறு, காஸரோகம்வேறு, சுவாசரோகம்வேறு. ஆகையால் பேதங்களைக் கண்டறிந்து சொல்வது, சிகிச்சகனுடைய கடமை.

சிகிச்சை க்ரமம்.—இருதய நடையை குறைக்கிற கபஹாரி மருந்தை ஆரம்பத்தில் கொடுத்துக்கொண்டுவர வேண்டியது. நாள்பட்ட கபரோகிகளுக்கு, உஷ்ணகபஹாரி மருந்துகள் கொடுக்கவும், அதிக கோழைவரும்படி செய்வது நல்லது. அதிககோழை விழுவதை நிறுத்தலாகாது, நிறுத்தினால், கபம் உள்ளடங்கி, கஷ்டசுவாசம் முதலிய கெட்டகுறிகள் பிறக்கும். துர்ப்பலத்தை, பலகாரிமருந்து களினால் நிவர்த்தித்து, போக்கவேண்டியது. காலரோகத்துக்கு மருந்துகள் 3-4, மணிக்கொருதரம் கொடுத்துக்கொண்டு வரவேண்டிய விதி. இடையில் கண்டிருக்கிற ஔஷதங்களை, சுவரத்தோடு கூடிய காலரோகத்துக்குக் கொடுக்கலாம் :—

குப்பைமேனிரசம்-எருக்கன்வேர்பட்டைத்தாள்.
உத்தாமணிரசம்-மருக்காளங்காய்,
ஆடாதொடை இலை கஷாயம்.
தும்பையிலைரசம்-பொட்டிலுப்பு,

சுரமில்லாமல் தூர்ப்பலத்தோடு, நாள்பட்டிருக்கிற காஸரோகத்துக்கு, இதனடியில் கண்டிருக்கிற மருந்துகள் கொடுக்கலாம்:—

வாலெக்திரபோளத்தூள்—10-15 கூருந்துயிளை பாலில் (ஊறவைத்து கொடுக்கலாம்.

இக்குவா பிலெஷியம்—(பெருங்காயம்.)
பிப்பல்லியாதிலேஹியம்—(திப்பிலி.)
முசுமுசுக்கை இலைச்சாரம்—மைகாதி குக்கிலம்.
விஷமுஷ்டில்.—பெம்பிரட்டி.
ஆதொண்டைகிரதம்.—ரசாயனம்.
கண்டங்கத்திரி கஷாயம்.—வால்மிளகு சூரணம்.
லவணபாஸ்கரசூரணம், கிரதம்.—தவசுக்ஷாரம்.
சடாமாஞ்சி கஷாயம்.—அபிரகபஸ்மம்.
ஆடாதொடைத்தூள்-வெள்ளுள்ளி—கரிசலைக்காயம்.
வெள்ளாட்டுப்பால்.—பச்சை புகம்பால்.
வலம்புரிக்காய்.—இலாதசம மஞ்சள்.
விஷ்ணுக்கிராந்தி.—வட்டத்திருப்பி.
முத்தின் குருவ்.—பிரவாளபஸ்மம். (பவளம்.)

கபரோகங்களுக்கு, மார்புமேல் உபயோகிக்கத் தகுதியானவைகள் எவையெனில்:—

நீர்க்குண்டுதைலம். (கொச்சியிலே.) கர்ப்பூரத்தைலம்.
கடுகுபத்து-வெற்றிலே.—வெந்நீர் ஒற்றிடம்.

குழந்தைகளுக்குக் காணுகிற காஸரோகமாகிய அண்டமாந்தத்துக்குக் கொடுக்கத்தகுதியான மருந்துகள் இதனடியில்காணலாம்:—

வெற்றிலை சுரசம்-துளசிசுரசம். நாய்த்துளசிசுரசம். கர்ப்பூரவள்ளிசுரசம். திருநீற்றுப்பத்திரிசுரசம். ஓம்மைகள்ரசம். ($\frac{1}{2}$-உத்தரணி)	இலையை வதக்கிப்பிழிந்த சுரசத்தில்-1. உத்திரணி அளவு, தேன் சேர்த்துக் கொடுக்கலாம்.

இவைகளில் ஒன்றில் கோரோஜனை மாத்திரையாவது, அரத்தைப்பொடியாவது. அதிமதுரத்தூளாவது சேர்த்துக்கொடுக்கலாம்.

வறட்டிருமலாய் இருக்கிற கபரோகத்துக்குக்கொடுக்கத் தகுதியானவைகளை, இதனடியில் காணலாம்.—

அதிமதுரவேர்கஷாயம்—அரத்தைவேர் கஷாயம்.
வெண்டைக்காய்கஷாயம்—செரிஞ்சில் கஷாயம்.
ஆகாசதாமரைசுரசம்—(தேனில்கலந்து கொடுக்கலாம்.)

[illegible]தாமைபருப்புசூர்ணம்—கசகசா லேகியம்.
[illegible]ள்ளெண்ணெய்—கூறல் எண்ணெய்.
சப்பாத்துப்பூ கர்ப்பந்து—இக்ஷுராதி கிரதம்.
கருவேலன் பிசினி.
வெந்நீர் ஆவி, அல்லது பாலின் ஆவி—ஆக்கிராணம்.
மிளகுபோட்டு காய்ச்சினபால்—துளசிவிளை கஷாயம்.

[illegible] ஜாதிக்காய் $\frac{1}{2}$-பங்கு; அதிமதுரம், வால்மிளகு, அரத்தை லவங்கம், வகை 1-க்கு 1-பங்கு. இவைகளை சேர்த்து அதில் $\frac{1}{2}$-1-விராகனிடைவீதம், தினம் 3, 4 தடவை தேனில் கலந்துகொடுத்துக் கொண்டுவந்தால், இருமல் தணியும்.

காமாலை ரோகம்.

[illegible]

இதுவே.—மஞ்சகாமாலை. பித்தப்பாண்டு. [illegible]
பித்தகாமாலை. [illegible], கும்பகாமாலை [illegible]
[illegible]காமாலை. (வீக்கத்தோடிருப்பது) [illegible]

JAUNDICE.

[illegible] பிர்த்கண்டத்தி லுண்டாகிற பித்தநீர் ரக்தத்தில் சேர்ந்து இந்தவியாதி பிறக்கிறது. காமாலை ரோகம் பிறப்பதற்குக் காரணம் இரண்டு; (1) சுரந்தபித்தநீர் குடலில்வந்து விழுவது தடைபட்டு, மறுபடியும் ரக்தத்தில் தானேபோய் கலந்து விடுவது ஒன்று.—(2) பிர்த் கண்டத்தின் தொழில் விகல்பமடைந்து, பித்த நீர் சுரவாமல், ரக்தத்திலேதானே நின்றுவிடுவது ஒன்று.

[illegible]லக்ஷணங்கள்.—காமாலை ரோகத்தில் காணுகிற குறிகள் எவையெனில்,— கண்ணு, மூத்திரம், நகம், சர்மம், ஆகிய இவைகள் மஞ்சள்நிறமாய் இருக்கும்; மலம் வெளுத்து இருக்கும்; ஆயாசம், [illegible], தலைத்திருப்பு, வெருப்புகுணம், வாய்கசப்பு, தாகம் ஆகிய இவைகளும் அனுசரித்திருக்கும்.

சிகிச்சைகிரமம்.—பித்தநீர் சுரக்காமல் காமாலைரோகம் பிறந்ததென்று தெரிந்தால். அதற்கு ரசம், சயிந்திரலவணம், சரிலோரஸ், [illegible], சம்பிராணிபதங்கம், முதலியவைகள் கொடுக்க உதவும். பித்தநீர் தடைபட்டு காமாலை ரோகம் கண்டதென்று அறிந்தால், அத்தடையை நீக்க உபாயமும், தடை நீங்குகிறவரையில், பித்தநீர் அடக்காமலிருக்கும்படியான முயர்ச்சியும் தேடவேண்டியது. பித்த

க்கல் அடைத்துக்கொண்டு கண்டால், அதை வெளிப்படுத்த சிகிச்சை செய்யவேண்டியது.

இதனடியில்கண்டமூலிகைகளில் ஒன்றை கசக்கி, ரசம்பிழிந்து துளி கண்க்காய் கொடுத்து, பத்தியம் வைப்பது நாட்டு வழக்கம். இதற்கு சப்பை என்று கன்னடத்தில் சொல்லுவர்.—

இம்பூரெல்லிசுரசம்.—1—உச்சரணி (பாலில் அனுபானம்.)

கரசிலாங்காணிசுரசம்.

கருவூமந்தன்சுரசம்.—15-30-துளி (தைரில் அனுபானம்.)

இதனடியில் கண்ட மருந்துகள், காமாலைரோகத்துக்குக் கொடுக்கலாம்.—

பிருங்கராஜகுடித்தைலம்.— } கரசிலாங்காணியைப் பார்வையிடவும்.
கரிசாலைச்சூர்ணம்.— }

அக்கினிமுகசூர்ணம்.—(சித்திரமூலம்.)

சீயக்காய்.—மூஷாம்பரம்.

க்ஷாரம். 10-15-உளுந்துவீறை, ஜலத்தில் கலந்து தினம், 4-6-தடவை கொடுக்கலாம்.

வயிற்று வலதுபக்கம் மேல்புறம், வெந்நீர் ஒற்றிடம் கொடுத்து, சூடான களியைவைத்து கட்டிக்கொண்டு வந்தால், ரோகம் சமனமடையும்.

காயம்.

గాయము.

இதுவே.—க்ஷதம்ராகம்.—క్షతరోగము.

WOUND.

ரோகலக்ஷணம்.—கருவிகளுக்குத் தக்கபடி, காயங்கள் பலரூபங்களாய் இருக்கும்.

சிகிச்சைக்கிரமம்.—முதல் ரக்தத்தை நிறுத்தவேண்டியது; இரண்டாவது, தாபனம் உண்டாகாமல் செய்யவேண்டியது. தென்னம்பஞ்சு, பனம்பஞ்சு, இவைகளுக்கு ரக்தத்தை நிறுத்துகிற குணம் உண்டு.

தண்ணீர்.—துணியை தண்ணீரில் நனைத்து, காயத்தின்மேல் போட்டு, அதுகாயாமல், ஈரமாகவே வைத்திருந்தால், ரக்தம்வடிவது நிற்கும் சீழும் கொள்ளமாட்டாது. காயம் சீக்கிரத்தில் உலர்ந்துவிடும்.

கிரஹதோஷம்.

గ్రహదోషము.

இதுவே—பாலக்கிரஹதோஷம் బాలగ్రహదోషము.

பிள்ளைகளுக்குக் காணுகிற ஒருவித தொத்துரோகம். ஜ்வரகாண்டத்தில், இதைக்குறித்து தெளிவாய் விவரித்திருக்கும்.

கிரஹணி.

గ్రహణి.

இதுவே.—பேதி ధేది. அஜீர்ணபேதி. అజీర్ణభేది.

உஷ்ணபேதி. ఉష్ణభేది. கழிச்சல். மலக்கழிச்சல். கிராணி.

DIARRHŒA.

ரோகலக்ஷணம்.—அடிக்கடி மலம் இறங்குதலுக்கு, கிரஹணி என்று பேர். அந்த மலம், குழம்பாயாவது, நீராயாவது, நுரையாவது, மாவுகரைத்ததுபோல் வெள்ளையாயாவது, இருக்கும்; வயிறு இரைந்து, உப்பி, பேதியாகும்; நோவும் இருக்கும்; புளியேப்பமும் உண்டு. இதில் குட்லில் தாபித குணம் இராது.—

சிகிச்சைகிரமம்.—மந்த பதார்த்தங்களால் பேதிகண்டால், கடுக்காய்ப்பிஞ்சித்தூள் அல்லது கடுக்காய்க் கஷாயம், பேதியாகிற பிரமாணத்தில் கொடுத்து, துர்மலாதிகளை வெளிப்படுத்தவேண்டியது. பிறகு துவர்ப்பு மருந்துகள்கொடுத்து, பேதியை நிறுத்தவேண்டியது. சீக்கிரம் ஜீர்ணமாகிற பதார்த்தங்களாகிய, கஞ்சியன்னங்கள், சாப்பிடும்படி செய்யவேண்டியது. இதனடியில் கண்டிருக்கிற ஔஷதங்களில் ஒன்று 2-3-மணிக்கொருதரம் கொடுத்துக்கொண்டுவந்தால், பேதிநிற்கும்:—

ஜாதசித்தலேகியம்.—(கஞ்சா).

கவாடகுளிகை.—கஷாயம், சூர்ணம், (அபினி.)

தாடிம்பவில்வாதிகஷாயம்.—வகம்புக்கஷாயம்.

கறிவேப்பிலைகஷாயம்.—மாசிக்காய்த்தூள்.

வெள்ளைகொய்யாவேரின் பட்டைகஷாயம்.

அபினி, ½ உளுந்துவீறை; சுக்குத்தூள் 10; உளுந்துவீறை வெல்லம் தேவையானது. இவைகளைச் சேர்த்து உண்டைசெய்து, தினம், 3, 4-தடவை கொடுத்துக்கொண்டு வந்தால் கழிச்சல் நிற்கும்

மாம்பருப்பு ; மாதுளம்பழத்தோல் ; சுண்டக்காய்வத்தல் ; கறிவேப்பிலை, ஓமம் ; நெல்லிமுள்ளி ; வறுத்தவெந்தியம். இவைகளின் தூள்சமனாய் சீறுத்தெடுத்து, கலந்து, அதில் 1-2-3-திரிகடிப்பிரமாணம், வெண்ணெயில் கலந்து தினம், 3-4, 6, தடவை கொடுத்துக் கொண்டுவந்தால், உஷ்ணபேதி நிற்கும்.

வெள்ளைப்பூண்டு.—ஒன்றை எடுத்து, அரைத்த மஞ்சளால், கவசமிட்டு, அடுப்பிலிட்டு, பக்குவமாய் சுட்டு, திரிகளை எடுத்து, உள்ளுக்குக் கொடுத்துக்கொண்டுவந்தால், இரைந்து பேதியாகுவது நிற்கும்.

கிரந்தி.

గ్రంథి.

TUMOUR.

ரோகலக்ஷணம்.—கிரந்தியில் அனேகசாதிகளுண்டு. அவைகளின் விவரத்தை, ஜீவரக்ஷாமிர்தத்திலும், இங்கிலீஷ் வைத்திய சங்கிரகத்திலும், காணலாம். இவைகளுக்கு இதனடியில் கண்டவைகளை மேலுக்குப் பூசலாம்:—

பாதரசக்களிம்புகள்.—அமுக்கிராக்கிழங்கு.

உத்தாமணிரசம்.—தும்பை இலைரசம்.

குருலை ரோகம்.

క్రిశరోగము.

இதுவே.—அதிசுஷ்க்கரோகம். అతిశుష్కరోగము.

தேகஉலரல்.—தேகம்வற்றல்.—க்ஷயம்.

EMACIATION.

ரோகலக்ஷணம்.—இதில், மாமிஸ தாதுவும், மேதோ தாதுவும் குறைந்து விடுகின்றன. ஆகையால் அவைகளை விருத்திப் படுத்துகிற ஔஷதங்கள்கொடுத்து சிகிச்சை செய்யவேண்டியது. இதனடியில் கண்டிருக்கிறவைகள், குருலைரோகத்துக்குக் கொடுக்கத் தகுதியானவைகள் :—

மீன் எண்ணெய்.—தேங்காய்ப்பால்.

கூஷ்மாண்டக்கிரதம்.—(கலியாணப்பூசினி.)

கோதுமைகஞ்சி.—பால்.

துருவாதிகிருதம்.—(அறுகம்புல்.)

குருத்திரசிவாதரோகம்.

క్రుత్రసివాతరోగము.

SCIATICA.

ரோகலக்ஷணம்.—தொடைக்குப்பின் உட்புறமிருக்கிற பெரிய வெளுத்த "நர்வ்" என்கிற நரம்புக்குக்காணுகிற வியாதிக்கு, குருத்திரசிவாதரோகமென்று பேர். இதில் வேதனை புட்டத்திலிருந்து பின்புறமாக மார்க்கமாய் கீழுக்கிறங்கி, முழங்கால் மடிப்புவரையில், இருக்கும். சிலரில் இந்தநோவுகால் கெண்டைச்சதை மார்க்கமாய் கீழுக்கிறங்கி, பாதம்வரையில் இருக்கும். பிரஸவித்த அனேகப் பெண்களுக்கு இந்தவியாதி காணுவது வழக்கம், ஒரேகாலுக்கு முக்கியமாய் காணுகிறது. இது ஸ்பர்ஸ மாகையால், குருலைரோகப் பிரகரணத்தில் செப்பியிருக்கிற சிகிச்சையே இதற்குச் செய்யவுதவும்.

குருத்திரம விஷம்.

క్రుత్రమవిషము

இதுவே.—இடுமருந்து.

ஸ்திரீகள் புருஷர்களைத் தங்கள்வசம் செய்துகொள்வதற்காவது அல்லது ஒருவருக்கொருவர் துவேஷசிந்தையால் கெடுதிசெய்வதற்காவது மருந்திடுவதென்று சொல்வதுண்டு. இச்சொல்லின் உண்மை செவ்வையாய்த் தெரியவில்லை.

கிருமிரோகம்.

క్రిమిరోగము.

இதுவே.—மலக்கிருமிரோகம்.

WORMS.

ரோகலக்ஷணம்.—சிறுவர்களுக்கே வயிற்றில் கிருமிகள் முக்கியமாயிருக்கும். கிருமிகள் அனேகசாதிகளுண்டு; இங்கிலீஷ்வைத்திய சங்கிரகத்தில் அறியலாம்.

ரோகலக்ஷணம்.—வயிற்றில் கிருமிகள் சேர்ந்திருந்தால், வயிற்று வலிகாணும்; மூக்கை அடிக்கடி சொறிந்து கொள்ளுவார்கள். ஆஸனத்தில் நமைச்சல் இருக்கும்.

இதனடியில் கண்டிருக்கிற மருந்துகளில் ஒன்று கிரமப்படிகொடுத்து பிறகு பேதியருந்துகொடுத்தால் கிருமிகள் வெளிப்படும்.

புரசன்விரைகல்கம்.
மாதுளன்வேர்ப்பட்டைக்கஷாயம்.
பூனைக்காய்ஞ்சொறிக் காய்ச்சுணே.
ஆடுதீண்டாப்பாலையின் கஷாயம்.
மாசிபத்திரியிலேச் சூரணம்.
மாங்கொட்டைப் பருப்புகல்கம்.
பப்பளிப்பால்.

குண்டாலரோகம்.

గుండాలరోగము.

இதுவே.—செவ்வாப்புக்கட்டி.

குழந்தைகளுக்கு உடம்பெங்கும் காணுகிற சிவந்தகட்டிகள் இதற்கு கஸ்தூரிதைலம் கொடுக்கலாம்.

குதப்பிரம்ஸ ரோகம்.

గుదభ్రంశరోగము.

இதுவே.—அடிதள்ளிப் போகுதல்—அடியிறங்குதல்
ஆஸனம் வெளிப்படுதல்—மூலநாடு.
குதநெகிழிரோகம்.

PROLAPSUS ANI.

ரோகலக்ஷணம்.—குதமானது துவாரம் விட்டு வெளிவந்துவிடுவதற்கு குதப்பிரம்ஸ மென்றுபேர்.

சிகிச்சை கிரமம்.—வெளியில் வந்திருக்கிற குதத்தைக் கழுவி சுத்திசெய்து, உள்ளுக்குத் தள்ளிவிட வேண்டியது. மறுபடியும் வெளிக்குவராமல் கட்டிவைக்கவேண்டியது.

குய்யரோகம்.

గుహ్యరోగము.

இதுவே.—மேகவியாதி.

VENEREAL DISEASE.

ரோகலக்ஷணம்.—ரோகஸ்த்திரீயைப் புணர்வதால் காணுகிற ரோகங்கள் மூன்று, அவைகள் எவையெனில்—பிரமேஹம்—உபதம்சரோகம்—வம்க்ஷணவித்திரதி, ஆம். இவைகளின் பேர்வழிக்குப் பார்வையிட்டால், விவரமறியலாம்.

குல்மரோகம்.

గుల్మరోగము.

இதுவே—குன்மக்கட்டி.

ரோகலக்ஷணம்:—குல்மமென்றால் வயிற்றுக்குள் காணுகிற கட்டிக்குப்பேர். பிலீகமாவது, யகிர்த்து ஆவது, கருப்பையாவது பெருக்கும்; ஆகையால், பிலீககுல்மம், யகர்த்குல்மம், கர்ப்பாசயகுல்மம் என்று சொல்லவேண்டும். தமிழ் நூல்களில், அஜீர்ண ரோகக் குறிகளையும் குல்மமென்று கண்டிருக்கின்றது. அவை எவையெனில்.—

எரிகுன்மம்.—நெர்க்குழியில்எரிச்சல், குலைஎரிவு. (Heart Burn)

சத்திகுல்மம்.—அஜீர்ணத்தில் காணுகிற வாந்தி. (Pyrosis or Water-brash.)

வலிகுல்மம்.—அஜீர்ணத்தில் காணுகிற வேதனை. (Gastrodynia or Gastralgia.)

ரத்தகுலமம்.—சூதகம் வெளிப்படாமல், கர்ப்பாஸம் பெருத்து அடிவயிற்றில் கட்டியாய் அகப்படுதல்.

வைத்திய நூல்களிலிருக்கிற இவ்வித பேர்களைக் ஞாபகம் வைத்துக்கொண்டு சொல்லுகிற பண்டிதர்களைக் கண்டேனேயொழிய அந்த கிரந்தகர்த்தாவின் தாத்பரியம் இன்னதென்று விவரித்து சொல்லுவோரைக் கண்டதில்லை; மேலும் நூல்களில் செவ்வையாய் விவரித்துங் காட்டவில்லை; ஆகையால் குல்மமென்பது கட்டி என்றே மனதில்வைத்துகொண்டு சிகிச்சைசெய்வதே கிரமம்.

குஷ்டரோகம்.

కుష్ఠరోగము.

இதுவே பெருவியாதி-குறைநோய்.

LEPROSY.

ரோகலக்ஷணம்.—இது உடம்பிலெடுத்தவியாதி; கர்மவியாதி என்று நமது ஜனங்கள் சொல்வதுண்டு; பாரம்பரவியாதி என்று சொல்லுவதுக்குத் தடையொன்றுமில்லை. இதில் 2-சாதிகள் உண்டு. தோல் தடித்துக்காண்பது ஒன்று; தடிப்பில்லாமல் திமிர்கண்டு காண்பது ஒன்று.

சிகிச்சைகிரமம்.—ஔஷதத்தினால் குஷ்டரோகம், சவுக்கியப்பட்டதென்று நாம் கேள்விப்பட்ட போதிலும், இது அசாத்தியரோகமென்றே சொல்லவேண்டியது. இதனடியில் கண்ட மருந்துகள் இந்த வியாதிக்கு உபயோகப்படுத்தத் தகுதியானவைகள் :—

வல்லாரையிலைச்சூர்ணம்-நீரடிமுத்துதைலம்.

மர எண்ணெய்.—(சமன் சுண்ணாம்பு சேர்த்து அதில் ½-டத்திரணிவீதம் கொடுக்கவும்.) (1-க்கு 3-பங்கு சுண்ணாம்பு நீர் சேர்த்து, தைலமாக்கி மேலுக்குப்பூசலாம்.)

மீன் எண்ணெய்-கந்தகபஸ்பம்.
அயச்சிந்தூரம்-வீரம்.
எருக்கன்வேர்பட்டைத்தூள்.
சிவநார்வேம்புச்சூர்ணம்-தைலம்.
பல்லாதகிலேகியம். (சேராங்கொட்டை.)

ஜகனுவர்த்தவாத ரோகம்.

జఘనావర్తవాతరోగము.

இதுவே—இடுப்புவலி.

LUMBAGO.

ரோகலக்ஷணம்.—இடுப்பிலிருக்கிறச் சதைகளின் சவ்வுக்குக் காணுகிற தாபிதரோகத்துக்கு, ஜகனுவர்த்தரோகமென்று பேர். இதற்கு துத்தூரதைலமிட்டு தேய்த்து, ஒற்றிடமிட்டால், வியாதி வசப்படும்.

ஜதுமணி ரோகம்.

జతుమణిరోగము.

இதுவே—மச்சை.

சந்நியாசி ரோகம்.

సన్యాసిరోగము.

CATALEPSY.

ரோகலக்ஷணம்.—முக்கியமாய் ஸ்திரீகளுக்குக் காணுகிற ஒருவித ஆச்சரிய ரோகம். பார்ப்பதற்குப் பயங்கரமாய் இருந்தபோதிலும், அபாய மொன்றுமிராது; ஆனால் அடிக்கடி இந்த வியாதி கண்டால், புத்தியைக்கெடுத்துவிடும். இதில் புத்தியும், சரீர ஆட்டமும் சத்தமாயிராது; வியாதிகண்ட போது ரோகி எந்த நிலையிலிருக்கிறாளோ அந்த நிலையிலேயிருந்து, சரீரம் பிடித்திருக்கும். இது சிலநிமிஷங்களுக்காயாவது, மணிகளுக்காயாவது, அல்லது 1-2 நாள்களுக்காவது இருக்கும். தெளிவு பிறந்தபிறகு, நித்திரையிலிருந்தெழுந்திருப்பவள்போல் எழுந்திருப்பாள். நேரிட்ட சங்கதிகள் ஒன்றும் தெரியாது. சிலதேசங்களில் இவ்விதரோகம் கண்டபெண்களை, பிராணன் போய்விட்டதென்று எண்ணி, புதைத்துவிட்டது முண்டு.

சிகிச்சைகிரமம்.—குதகசந்நிக்குச் செய்கிற சிகிச்சையே, இதற்கும் செய்யவுதவும்.

ஜம்பூகசிரஷவாதரோகம்.

జంబూకశిరషవాతరోగము.

இதுவே—கரிந்தலைவாதம்.

ARTHRITIS—DROPSY OF THE KNEE JOINT.

ரோகலக்ஷணம்.—முழங்காலுக்குள்ளிருக்கிற சவ்வுக்குவியாதிகண்டு, அதில் நீர் சேர்ந்து வீக்கம் காணுகின்றது. அந்த வீக்கம் நசித்தலைப்போல் காணப்படும்; அழுத்திப்பார்த்தால் மிருதுவாயிருக்கும்.

சிகிச்சைகிரமம்.—உள்ளில் சேர்ந்திருக்கிற நீர் குறையும்படி செய்யவேண்டியது. அதற்கு அடியிலிருக்கிற மருந்துகளில் ஒன்று மேலுக்கு உபயோகிக்கலாம்.

மைசத்தைலம்—அமுக்கிராக்கிழங்குபத்து.

சர்வபிகாரோகம்.

సర్వపికారోగము.

BALANITIS.

ரோகலக்ஷணம்.—ஆண்குறியின் தோலாவது, அல்லது லிங்கவலமாகிய தோலின் உட்புறத்திலாவது, கடுகைப்போல் அநேககொப்புளங்கள் பிறந்து, சீழ்வடியச்செய்கிற ரோகம். இது மேகரோகமல்ல.

சிகிச்சைக்கிரமம்.—இதற்குத் தண்ணீர்விட்டுக் கழுவி, சுத்திசெய்து, அடியில்கண்டிருக்கிற மருந்துகளில் ஒன்றை, உபயோகிக்கலாம்.—

மேன்னி பட்டைக் கஷாயம்.
படிக்கார ஜலம்.
கடுக்காய் கஷாயம்.
} லேபதம்.

மெழுகு களிம்பு தடவிக்கொண்டு வரலாம்.

சர்த்திரோகம்.

చర్ది రోగము.

இதுவே—சர்த்திருல்மரோகம்.—ఛర్దు లరోగము.
வாந்திரோகம்.—வமனரோகம்.
—திருஷ்டான்னவாந்தி.—(திருஷ்டிதோஷம் கண்டொறுவாந்தி.)

கிருமிவாந்திரோகம்.

VOMITING.

ரோகலக்ஷணம்.—தீனிப்பையின் தொழில் அக்கிரமமடைந்து இறங்கிப் போகவேண்டியவைகள், போகாமல், மேல்நோக்கி வாயால்வந்து விடுவதற்கு வாந்தியாம். இவ்விதம் காணுவதற்குத் காரணங்கள் அநேகமுண்டு. காரணமில்லாமல், தனிரோகமாய்க் கண்டு உபத்திரவப்படுகிறவர்களையும் காணலாம். அப்போது அன்றுசயவிவர்த்தி என்றே சொல்லவேண்டியது; அது தீர்க்கத்தில்விழுந்துவிடும்.

சிகிச்சைக்கிரமம்.—சர்த்திரோகத்தை யுண்டாக்கின காரணத்தையறிந்து சிகிச்சைசெய்யவேண்டியது; அதுதொலைந்தால், வாந்தியும் தானாய் நின்றுவிடும். இதனடியில் கண்டிருக்கிற ஔஷதங்களில்

எதையாவது ஒன்று தெரிந்தெடுத்து, கொடுக்கலாம். நான் பட்டவியாதிகளுக்கு, நான்படகொடுக்க வேண்டியது.—

இலாம்புக்கஷாயம்.—(கர்ப்பிணிகளுக்கு நல்லது.)
லவங்கப்பட்டைகஷாயம்.—புளிப்புளிபானகம்.
சக்குரார்புல்தைலம்.—(சர்க்கரையில் கொடுக்கலாம்.)
லிமன்டிராப்ஸ்.—(Lemon drops.)
கருவேப்பிலைகஷாயம்.—அபினி. வெல்லம்.
மாதுலங்காதிகிருதம்.—(கொடிசாரத்தன்.)
ஆமலகலேகியம்.—(நெல்லிக்காய்—நெய்.)
புளியம்பூ.—(துவையல்.)
புளிபாரைதுவையல்—அகில்கட்டைபுவி.
வில்வாதிலேகியம்.—இளநீர்—இஞ்சிலேகியம்.
எரிஎண்ணெய்.—(இ[illegible]கு.)

கருவேப்பிலை [illegible]ன்பட்டையை, முலைப்பால் விட்டிடித்துப் பிழிந்தரசத்தில், திராக்ஷப்பொடி—திப்பிலிப் பொடி சேர்த்து, குழந்தைகளுக்குக் கொடுத்தால் வாந்திதீர்க்கும்.

சர்மரோகங்கள்.

చర్మరోగములు

இதுவே—தோல்வியாதிகள். [illegible]க்குரோகங்கள்.

DISEASES OF THE SKIN.

ரோகலக்ஷணம்.—சர்மரோகங்கள் அநேகமுண்டு. சில பிரதான சர்மரோகங்களை மாத்திரம் இதனடியில் காண்பிக்கப்படும்.—

சர்மசோபை. தோல்வீக்கம். Hypertrophy of the Skin.
மசரோகம். மரு, பாலுண்ணி. Warts.
தர்த்துருரோகம். (இந்தப்பிரகரணத்தைப்பார்வையிடவும்.)
ராஜிகாரோகம். வேர்க்குரு.
புண்டரீககுஷ்டம். மண்டலகுஷ்டம், படர்த்தாமரை, எச்சிற்[illegible]
பாமாரோகம்.—கரப்பான். Itch. [தழும்பு. Ringworm.
சர்ஜுரோகம். நமைச்சல்.
அருஷ்காரரோகம். தலைமேல் வேர்க்குருப்போல் காணுவது.
சர்மதல்டரோகம். சேராங்கொட்டை பட்டு காணுகிற வீக்கம்

கருக்குஷ்டம்.
உத்கோடரோகம்.—தேமல், படை, புடை.
சுவேதகுஷ்டம். வெள்ளை குஷ்டம்.
பிரசுப்திரோகம், [illegible]. திமிர்வாதம், மேகப்படை—

இதனடியில் கண்டிருக்கிறவைகள் சர்மரோகங்களுக்கு மேலுக்குபயோகிக்கலாம்.—

நாகமல்லிவேர்-மஞ்சள்-நலம்-புன்னைநெய்.
தேங்காய் எண்ணெய்-சந்தனம்-சிமைபகந்தி
சுருளுப்பட்டை-வேப்பிலை-சீரடிமுந்து.
நந்தகம்-கஸ்தூரிமஞ்சள்-சால்முகிரா.
[illegible]—கள்ளிப்பால்-பொன்னாவாரை
[illegible]-அகநகட்டை-வாழை-சேர்ந்தாளம்-வெட்டிவேர்

இதனடியிற் கண்டிருக்கிறவைகள், உள்ளுக்கு உபயோகிக்கத் தகுதியானவைகள்.—

மீன் எண்ணெய்-வல்லாரை-கந்தகம்..
நன்னாரிவேர்-மதுஸ்னிகம்-(பரங்கிப்பட்டை.)
தாருவாதிகிருதம்-பல்லாதகிலேகியம்,(சேராங்கொட்டை)

சர்ப்பதஷ்டம்.

సర్పదష్టము.

இஜ்வே—பாம்புக்கடி.—அரவம்தீண்டல்.

சர்ப்பக்கடி.

SNAKE-BITE.

ரோகலக்ஷணம்:—பாம்புவிஷம், நர்வ்ஸ் என்னும் நரம்புகளுக்கு மூலமாகிய, மூளையையும் ரக்தத்தையும் கெடுத்துவிடுகின்றது. உறக்கம், இசிவு காண்பதற்குக் காரணம் மூளையின் விகல்பம். புப்புசத்தில் ரக்தம் அதிகம் சேர்ந்து கஷ்டசுவாசம் பிறக்கிறது. பாம்பு கடித்து செத்தபிறகு அறுத்துப்பார்த்தால், ரக்தம் கறுத்து நீராயிருக்கும். பாம்புக்கடியில் காணுகிற லக்ஷணங்கள், விஷத்தின் குணம், அதின் உக்கிரம், தேகப்பிரகிருதி, ஆகிய இவைகளுக்குத் தக்கபடி வித்தியாசப்படும். சில பாம்பின்விஷம் சிறியஜந்துக்களை மாத்திரம்

கொல்லும். சில பாம்பின் விஷம் மெத்தகொடியது. ஆனால் கடித்துக் கடித்து விஷம் செலவழிந்துபோகும். சில பாம்பின் விஷம், சாந்தமானது. சில பாம்பின் விஷம், நர்வ்ஸ்களின் மேல் வியாபித்து, வெகுசீக்கிரத்தில் கொல்லும். வேறுசில விஷங்கள், சுவாஸப்பையைப்புண்ணாக்கும். சில பாம்பின்விஷம் நரம்புகளைக்கெடுக்க சக்தியில்லை; கடித்தவிடத்தை மாத்திரம் [illegible] செய்து, [illegible] புண்ணாக்கிவிடும். ஒரு நல்லபாம்பு, மற்றொரு நல்லபாம்பைக் கடித்தால், விஷம் ஏறாது. நல்லபாம்பு விஷத்தைச் சாப்பிட்டால், தூர்க்குணங்கள் ஒன்றும் பிறக்காது. கோழிக்கண்களில் விட்டாலும் ஒன்றும் செய்யாது. நல்லபாம்பு கடித்து விஷம் ஏறினால், ஆயாசம், மூர்ச்சை, இசிவு, உறக்கம், கஷ்டசுவாசம், ஆகிய இவ்வித லக்ஷணங்கள் காணும். வி[illegible]ம் இராது.

சிகிச்சைகிரம[illegible]—கடித்தவுடன், விஷம் மேலுக்கேறாமல், இறுக்கக்கட்டி[illegible] காயத்தி[illegible] வாய்வைத்து உறிஞ்சி விஷ[illegible] எடுத்துவிட வேண்டியது. விஷ[illegible] ரக்தத்தில் கலந்துவிட்ட பிறகு [illegible] லக்ஷணங்களை [illegible] கொடுக்கவேண்டிய[illegible] [illegible]யில்கண்ட மருந்து [illegible]உபயோகித்து[illegible] குணம் பிறந்திருக்கிறது.

சாராயம்.—(அதிகமாய்க் கொடுப்பது.)

[illegible]லவணக்ஷாரஜலம்.—(Liquor ammonia.)

[illegible]ம்பையிலைரசம்.—இதை உச்சியைக்கீறி அதில்விட்டு தேய்ப்பது உள்ளுக்கும் கொடுப்பது.

ஆடுதீண்டாப்பாளைவேர்.—இதை உ[illegible]ரைத்துக்கொடுப்பது.

எருக்கன்பால்.—இதில் 7-10, துளிகளை [illegible]ரிலாவது, தண்ணீரிலாவது கொடுத்தா[illegible] விஷம் நீங்குமாம். கடி[illegible]விடத்தில் மேல்படி பாலைத்தடவுதல்.

எருக்கன்வேர்ப்பட்டை.—இதை உரைத்து கந்[illegible]த்தாவது, அல்லது இதின் தூளையாவது, கொடுத்தால் வாந்தியாகும்.

எருக்கிலை.—இதை வதக்கி ரசமெடுத்து நசியமிடுவதாம்.

துளசிஇலைரசம்.—இதை கண்ணுக்கு அஞ்சனமிடுவதாம்.

பத்திராக்ஷிகிழங்கு.—இதில் அரை மோரிலாவது, நீரிலாவது கலந்து கொடுப்பதாம் - வாந்தியாகுமாம். பிரக்ஞை வந்தபிறகு, மோர் கொடுப்பதாம்.

கசப்புகோவைக்கிழங்கு.—இதின் [illegible]யில், ½-காசிடை தண்ணீரில் கலந்து கொடுத்தால், வாந்தியாகுமாம்.

அந்தாசெடி.—இதின் முத்தினவேரை, ஞாயிற்றுக்கிழமையில் சேகரித்து வைத்துக்கொள்ளவும். இதைப்பாம்பின் தலைமேல்வைத்தால், வேர்ஸ்பரிசனைபட்டவுடன் படமெடுக்காதென்றும், அப்போது பாம்பை பிடித்துக்கொள்ளலாமென்றும் சொல்லுகிறார்கள்.

ஜல அண்டரோகம்.

జలాండరోగము.

இதுவே—நீர் அண்டம்.

HYDROCELE.

ரோகலக்ஷணம் :—இந்தவியாதி சிலவங்கங்களில் மாத்திரம் வியாபிக்கின்றது. விரையைச் சூழ்ந்துகொண்டிருக்கிற சவ்வுப்பையில் நீர் சேருகிறவியாதி. ஜல அண்டம்வேறு—குடல் அண்டம் வேறு—விரைவீக்கம் வேறு. ஆகையால் பலானவியாதியென்று அறிந்து சிகிச்சைசெய்யவேண்டியது.

சிகிச்சைக்கிரமம்.—ட்ரோகார் (Trocar) என்னும் ஊசியால் அண்டத்தைக் குத்தி நீரை வெளிப்படுத்திவிடவேண்டியது. இவ்விதம் ஒருவனுக்கு இரண்டுமுறை செய்து, சவுக்கியம் பிறக்காமல், பிறகு மைன தைலத்தை உபயோகப்படுத்தி சுகுணம்கண்டதுண்டு.

மைனத்தைலம்.—இதை உபயோகிக்கிற விதம். முதல்ரோமங்களை நீக்கிவிட்டு வெந்நீர்விட்டு, சுத்திசெய்யவும். பிறகு இந்தத் தைலத்தை அண்டகோசம், சுற்றிலும் இறகால் செவ்வையாய்த்தடவி ஈரத்துணிசுற்றி, அது உலராமல் ஜலம்விட்டுக்கொண்டு வரவேண்டியது, தினம் காலை மாலைகளில் வெந்நீர்விட்டு, அழுக்கு நீங்கும்படி கழுவி துடைத்து, தைலமிட்டு, ஈரத்துணி சுற்றிவைக்கவேண்டியது. உள்ளிருக்கிற நீர், வியர்வைபோல் வெளிப்பட்டுவிடும். இதைப்பிடிவாதமாய் சிலநாள் உபயோகித்து பார்க்கவேண்டியது. சீக்கிரம் குணம் பிறக்கவில்லையென்று விட்டுவிடலாகாது.

ஜலக்கூர்மரோகம்.

జలకూర్మరోగము

இதுவே—கெண்டைக்கட்டி. நீராமை.

ஊர் ஆமை. வல்லிக்கட்டி.

OVARIAN TUMOURS.

ரோகலக்ஷணம்.—ஸ்திரீகளுக்கு நாதாசயத்தில் காணுகிறகட்டி. இது நாளுக்குநாள் விருத்தியாகும். வயிறும் நாளுக்கு நாள் பெருக்கும். ஔஷதத்துக்கு வசப்படாது. அறுத்தெடுத்துவிடவேண்டியது. ஆகையால், இங்கிலீஷ்வைத்திய முனைர்ந்தவர்களிடத்தில் சென்றால் அதை அறுத்தெடுத்து விடுவார்கள். அறுக்கிற முறையை இவ்விடம் விவரித்தபோதிலும் நமது ஜனங்கள் தெரிந்துகொள்வது கஷ்டம், ஆகையால் விவரிக்கவில்லை.

ஜலதுவேசரோகம்.

జలద్వేషరోగము.

இதுவே—பேய்நாய்க்கடி சந்நிரோகம்.

ஜலபயரோகம். జలభయరోగము.

HYDROPHOBIA.

இது பயங்கரமான வியாதி. அசாத்தியமாய முடிவதே வழக்கம். நாய்களுக்கு தற்செயலாய் வெறிகாணுகிறதென்று எண்ணம். வெறிநாயின் வாய்நீர், கடித்தகாயத்தி லிறங்கி, ரத்தத்தில் சென்று நர்வஸ் என்னும் நரம்புகளுக்கு வியாபிக்கும்; முக்கியமாய் முள்ளந்தண்டுக் கொடியின் சிகரத்தைக் கெடுத்துவிடுகின்றது. கடித்த பிறகு சந்நிகாண்கிற காலம் வித்தியாசப்படும். 30-நாள் முதல், 18-20, மாதத்துக்குள் குறிகள் காணும். 8-நாளைக்குள் வியாதிகண்டதும் தெரியவருகின்றது. சிலரில் 4 - 5 – 7 - வருஷங்களுக்குமேல் கண்டதாயும் கிரந்தங்களில் காணலாம். விஷநீரின் கெட்ட குணத்தின்மேலும், பிரமாணத்தின்மேலும், வயதின்மேலும், பிரகிருதியின்மேலும், இசிவுகாண்கிறகாலம் முன்பின் ஆகின்றது. சிறுவயதுள்ளவர்களுக்கு, சீக்கிரத்தில் குறிகள் காணும்.

ரோகலக்ஷணங்கள்.—கழுத்து, மார்பு இடங்களிலிருக்கிற தசைகளுக்கு இசிவுகாணும். தண்ணீர் கண்டால் பயமுண்டாகும்.

ஆகையால் ஜல ரூபமாய் எதையும் கொடுக்கலாகாது, இசிவு காணும். அரட்டல் புரட்டல், மேக்கம், விகாரம், தளர்ச்சி, இவை முதலிய வைகள் கண்டு, முடிவில் மரணமுண்டாகும்.

சிகிச்சைக்கிரமம்.—இது அசாத்திய வியாதி. இதற்குத் தகுந்த மருந்து இன்னம், புவிதனில் மனுஷர்கள் கண்டுகொள்ளவில்லை. கடித்தகாயத்திலிருக்கிற விஷம் ரத்தத்தில் கலந்துகொள்வ தற்குமுன், அதை, முறித்துவிடவேண்டியதே முக்கிய சிகிச்சை. இப்படியிருக்க இதற்கு•கமது காட்டில் செய்கிற சிகிச்சை அனந்தம்.

ஜல தோஷம்.

జలదోషము.

இதுவே—ஜலப்பு [illegible]ம், சளி.

COLD—CATARRH.

இது சாதாரண வியாதி. நாசிக்குள்ளிருக்கிற சிலேஷ்ம சவ்வுக் குக்காணுகிற தாபிதரோகம். இந்த தாபிதம் அல்பமாயாவது, உக்கிர மாயாவது இருக்கும்; அல்ப காரணங்களால், சிலருக்கு அடிக்கடி கண்டு போராடும். சிலருக்குத் தீராத வியாதியாய் இருந்து விடு வதுமுண்டு. பிரகிருதி பெலனாய் இருந்தால், வியாதி அணுகாது. மூக்கிலிருக்கிற வியாதி, சுவாசக்குழலுக்கிறக்குவதுமுண்டு. இந்த ரோகத்துக்குச் சீதமே காரணம். காற்று விசலப்பதினாலும், சரீரம் ஆயாசமடைந்து இருக்கும்போது, ஈரம்படுவதினாலும் சீதபதார்த்தங் கள் உண்ணுவதினாலும், கழுத்துமேல் குளுக்காற்று படுவதினாலும், குளுங்காற்று வாடையில் இருப்பதினாலும், ஈரத்தில் திரிவதினாலும் ஜலதோஷம் காணும்.

ரோக[illegible]க்ஷணங்கள்.—ஆயாசம், கை, கால், முதுகு இவ்விடங் களில் நோவு, நெற்றியில் பிசிவு இவ்வித குறிகள் கண்டு, உடனே மூக்கிலும், கண்ணிலும் ஜலம்வடியும்; குரல்கம்மியிருக்கும்; நெற்றி யில் வேதனையுண்டு, சுரமிருக்கும்; தாகம் எடுக்கும்; பசியிராது; நாடி தீவிரமாய் நடக்கும். இவ்விதகுறிகள் இரண்டொளிருந்து பிறகு சமனமடையும்; அல்லது தொண்டைநோய், இருமல், முதலிய வியாதிகள் கண்டு வருத்தப்படுத்தும்.

சிகிச்சைகிரமம்.—நாசிக்குள்ளிருக்கிற சிலேஷ்ம சவ்வின் தாபி தம் குறையும்படி முயற்சிசெய்யவேண்டியது.

அடியில் கண்டிருக்கிற மருந்துகளின் ஆவியை, அல்லது வாச னையை ஆக்கிராணித்தால், ஜலதோஷம் நீங்கும்.

தும்மட்டிப்பால் புகை - சதகுப்பை.

கர்ப்பூரபுகை – மஞ்சள்புகை.

பிசுகுத்தான் - இதை துணியில் முடிந்து முகரலாம்; அல்லது [illegible]யில் கோர்த்து சுட்டு புகையை ஆக்கிராணிக்கலாம்.

இரணடியில் கண்டிருக்கிறவைகளை நெற்றிமேல் பத்துபோட் டால், ஜலுப்பு நீங்கும்.

சாம்பிராணிதைலம். அகில்கட்டை தைலம், ஸ்நானம்.

சாம்பிராணி, சுக்கு, கஸ்தூரிமஞ்சள், அரிசி; இவைகளை அரை த்து பத்துபோடலாம்.—சந்தனப்பத்து.

அடியில் கண்டவைகளை உள்ளுக்கு உபயோகிக்கலாம்.

கோரோசன குளிகை. இதை துளசிரசத்தில் கொடுக்கலாம்.

ஜலோதரம்.

జలోదరము.

இதுவே—ஜலஸ்தம்போதரம், జలస్తంభోదరము.

மகோதரம். మహోదరము.

வயிற்றிலிருக்கிற சவ்வுக்கள் நீர் அதிகமாய் சேர்ந்துகொள்ளு கிற ரோகம். குடல் சவ்வுதாபிதம், பகிர்த்கண்ட வியாதிகள், மூத் திர குண்டிக்காய் வியாதிகள், இருதய ரோகம், பிலீகரோகம், இவை முதலிய ரோகங்கள் மேல், மகோதரம் பிறக்கின்றது.

ரோகலக்ஷணம்.—வயிறு பெருத்து மினிமினிப்பாய்க் காணும்; காலங்களும் பெருத்திருக்கும்; விரல்களால் தட்டினால், தத்தளிப்பு காணும்; சரீரம், மேல்பாகம் இளைத்திருக்கும்; முகம் வாடி, கிலி கொண்ட விதமாய் தோற்றும்; கால்களிலும், கைகளிலும், சோபை யிருக்கும் விரலால் அழுத்தினால் பள்ளம் விழும்; மூத்திரம் குறை ந்து இறங்கும்; பகிர்த்கண்ட வியாதியால் கண்டால், மூத்திரத்தில் பித்த நீர் கலந்திருக்கும்; மூத்திரகுண்டிக்காய் வியாதியால் கண் டால், அதில் "அல்பூமன்" என்கிற பதார்த்தம் அதிகமாய் இருக் கும்.

சிகிச்சைக்கிரமம்.—மகோதரத்தைப் பிறப்பித்த காரணத்தை நீக்க இடமிருந்தால், முதல் அது நீங்க சிகிச்சைசெய்யவேண்டியது.

மலபேதி, மூத்திரபேதி மருந்துகள் கொடுத்து, நீரைப்போக்கவேண்டியது. ரசமருந்துகளும் ஜாக்கிரதையாய் உபயோகிக்கலாம். சோபைப் பிரகரணத்தில் கண்டிருக்கிற மருந்துகள், இந்த வியாதிக்கு உபயோகிக்க உதவும்.

சவலைரோகம்.

இதைக்குறித்து ஜீவரக்ஷாமிர்தத்தில் செப்பியிருப்ப தென்னவெனில்—"மலட்டு ஸ்திரீகள் கர்ப்பமாக வேண்டுமென்று ஆசைகொண்டு, மாதாந்திர முழுக்கு முழுகிய உடன் மற்றொரு குழந்தை முகத்தில் விழித்து அன்றிரவில் புருஷனைச்சேர்ந்து கர்ப்பமானால், முன்பு இவள் பார்வைக்குள் அகப்பட்டக் குழந்தைக்குப் பலவித ரோகங்கள் காணும். உடம்பு இளைத்து துர்ப்பலமாகிவிடும். அக்கர்ப்பம் விருத்தியடைய முன்பு தோஷம்தாக்கிய குழந்தைக்கு வியாதியும் அதிகரிக்கும். கர்ப்பஸ்திரீ பிரசவித்தவுடன், அந்தக் குழந்தை பிழைத்தாலும் பிழைக்கும்; அல்லது இறந்தாலும் இறக்கும். இந்தத்தாத்பரியத்தை, இங்கிலீஷ்வைத்திய முறையாய் ஒப்பத்தகுந்ததல்ல; ஆகையால் இதைக் கணரோகமென்று எண்ணி சிகிச்சை செய்தால் வசப்படும்.

சாங்கிராமிரோகங்கள்.

సాంక్రామికరోగములు.

இதுவே ஒட்டுவியாதிகள். ஒட்டுவாரொட்டி. தொடுவதினால் அனுசரிப்பது.

தொத்துவியாதிகள். காற்று மூலமாய் அனுசரிப்பது.

INFECTIOUS AND CONTAGIOUS DISEASES.

இதனடியில் கண்ட ரோகங்கள், சாங்கிராமிக ரோகங்களென்று அறியவும்.

அம்மைகள்,
விஷூசி. வாந்திபேதி. } தொத்து வியாதிகள்.

கிரந்தி.
பிரமேகம்.
மேகவிரணம். } ஒட்டுவியாதிகள்.

158

ஜிஹ்வாரோகங்கள்.

జిహ్వారోగము.

இதுவே—கர்ப்பச்சூடு—ஆசியபாகம்.

DISEASES OF THE TONGUE.

ரோகலக்ஷணம்.—நாக்குக்குக்காணுகிற ரோகங்கள் அனேகம். **அவைகளில் சில** முக்கியமானவைகளைமாத்திரம், இதனடியில் காண்பிக்கப்படும். சுவரங்களில் நாக்குவறண்டு, மாவுபடிந்திருக்கும். சந்நிபாத சுவரங்களில், நாக்குவரண்டு, முள்ளுகள்போல் இருக்கும். ஆமாசயவியாதிபால் சிவந்திருக்கும்.

ஜிஹ்வாதாபிதரோகம். நாக்குதாபிதம். Inflammation of the Tongue.

ஜிஹ்வாலஜகரோகம். జిహ్వాలజకరోగము. நாக்குப்புண்கள்.

நாக்குவிரணம். Ulcers of the Tongue.

ஜிஹ்வாகண்டரோகம். நாக்குவெடிப்பு, அக்ஷரம், Cracked Tongue.

ஜிஹ்வாஸ்தம்பவாதம். நாக்கு அசைவு அற்றுப்போகுதல். Palsy of the Tongue.

இதனடியில்கண்ட துவர்ப்பு கஷாயங்களை, அடிக்கடி வாயிலிட்டு கொப்புளித்துக்கொண்டு வந்தால், விரணங்கள் ஆறும்.—

காசுக்கட்டி கஷாயம்.—ஒதியன்பட்டைகஷாயம்.

மாதுளம்பழத்தோல் கஷாயம்.—மொகடம்பட்டைக் கஷாயம்.

கருவேல்ன்பட்டை கஷாயம்.—நறுவிளிப்பட்டை கஷாயம்.

மாசக்காய் கஷாயம்.—தேங்காய்ப்பால்.

படிக்காரஜலம்.—(2-விராகனிடை படிக்காரம்—நீர், 1-புட்டி) வெள்ளாட்டுப்பால்.

ஆலம்பால்.-இதைக்காலையில் கொஞ்சம் கொடுத்து, பால்சாதம் பத்தியம்வைக்கவும். 3-நாள்கொள்ளவும். ஆலம்பாலை நாக்குமேலும், தடவலாம்.

வெங்காரமது.—இதை அடிக்கடி நாக்குமேல் தடவிக்கொண்டு வரலாம்.

நாக்கு அசைவைத்துப் போகுதலுக்கு, இதனடியில் கண்டிருக்கிறவைகளை வாயிலிட்டு மெல்லலாம்.

அக்காரகாரம்.—சாமந்திப்பூண்டுவேர்.

சிரோரோகங்கள்.

శిరోరోగములు.

DISEASES OF THE HEAD.

தலைக்குக் காணுகிற வியாதிகள் எவையெனில்:—

சிரஸ்ஸூலை.—இதுவே சிரஸ்த்தாபம், தலைநோவு, தலைவலி, கபால சூலை, மண்டையிடி. Headache.

சிரக்கம்பம்.—தலைநடுக்குவாதம், அங்கசலன வாதரோகத்துக் கடியில் செப்பியிருக்கிற சிகிச்சையே இதற்கு உதவும்.

சூரியாவர்த்தவாதம்.—இத்தப்பிரகரணத்தைப்பார்க்கவும்.

உன்மாதம்.—இந்தப்பிரகரணத்தைப்பார்க்கவும்.

ரக்த்த சிரஸ்த்தாபம்.—Apoplexy.

தலைதிருப்பு-பித்தமயக்கம்.—Vertigo. Giddiness. இந்தப்பிரகரணத்தைப் பார்க்கவும்.

ரோகலக்ஷணம்.—அநேகவியாதிகளில், தலைநோய் ஓர்குறி; தனியாய்க்காண்பதும் உண்டு. இதில் அநேக ஜாதிகளுண்டு. 1-வது, தலையின் சதைகளைப்பற்றிய தலைநோய். 2-வது, எலும்புமேல் மூடிக்கொண்டிருக்கிற ஜவ்வைப்பற்றிய தலைநோய். 3-வது, ஸ்பரிசநரம்புகளைப்பற்றிய தலைநோய், 4-வது, ரக்த்தம் மூளையில் அதிகமாய்ச்சேர்ந்துக் காணுகிற தலைநோய். 5-வது, அக்கினிமாந்தியத்தால் காணுகிற தலைநோய். 6-வது, மூளை வியாதியால் காணுகிற தலைநோய், ஆகிய இவைகளாம்.—இவைகளின் விவரம், எனது வைத்தியசங்கிரகத்தில் அறியலாம்.

சிகிச்சைகிரமம்.—தலைவலியை விளைவித்த காரணமறிந்து அதை நீக்கவேண்டியது.

நவக்ஷாரமும்.—சுண்ணாம்பும் சேர்த்து உள்ளங்கையிலிட்டு கிமிட்டினால், காரம்பிறக்கும்; அதை ஆக்கிராணிக்கச் செய்யலாம்.

நவக்ஷாரம்.—நரம்பைப்பற்றிய தலைவலிக்கு, இதை உள்ளுக்குக் கொடுத்தால், தலைவலி நீங்கும்.

வெந்நீர் ஒற்றிடம்.—சந்தனப்பூச்சு.

அகருகட்டை சந்தனப்பூச்சு.—ஊமத்தன் இலைரசப்பூச்சு.

எலுமிச்சம் பழரசம்.—இதை மேலுக்குப்பூசி நசியமிடலாம்.

அதிமதுரம்.—இதின் சுரசத்தை நசியமிடலாம்.

தும்பையிலைரசம்.—இதை நசியமிடலாம்.

மாதுளம்பூரசம்.—இதை நசியமிடலாம்.

மருதம்பட்டைத்தூள்.—நசியமிடலாம்.

குங்குமப்பூத்தூள்.—நசியமிடலாம்.

நாரிகேளாஞ்சனம்.—இதை அஞ்சனமிட்டால் ஜலுப்பு தலைவலி நீங்கும்.

எருக்கன்பால்—இதை விபூதியிற் கலந்து உலர்த்தி வைத்துக்கொண்டு, நசியமிட்டால், தும்பல் அதிகமாய் பிறக்கும். தண்ணீர் ஆக்கிராணித்தால், நிற்கும்.

இதனடியில் கண்டிருக்கிற தைலங்களிலொன்றைத் தலைக்குத் தேய்த்து ஸ்நானஞ் செய்துக்கொண்டுவந்தால், பழைய தலைவலிகள் நீங்கும்.

பிருங்காமலகத்தைதலம்.—(கரிசிலாங்காணி.)

வேப்பம்பட்டைத்தைதலம்.

அமிர்தாமலகத்தைதலம்.—(சீந்தில்.)

தூருவாதிதைதலம்.—(அறுகம்புல்.)

ஜம்பீரத்தைதலம்.—(எலுமிச்சம்பழம்.)

குமரித்தைதலம்.—(கற்றாழை.)

இஞ்சித்தைதலம்.—நாகராதித்தைலம். (சுக்கு.)

அரக்குத்தைதலம்.—வில்வாதித்தைதலம்.

சிலிபதரோகம்.

సిలిపదరోగము.

இதுவே—யானைக்கால் பாதவன்மீகம்.

ELEPHANTIASIS.

ரோகலக்ஷணம்.—இதில் தோலும், சவ்வும், எலும்பும், பெருத்து நீர் கோர்த்துக்கொண்டிருக்கும். பீஜப்பையை அனுசரிப்பதுமுண்டு. இது அசாத்திய வியாதி, ஆனால் வைனத்தைலத்தை ஆரம்பத்தில் உபயோகப்படுத்திப் பார்க்கலாம்.

சில்வரோகம்.

సిల్వరోగము

இதுவே—உகிர்ச்சுற்று. நகச்சுற்று. விரற்சுற்—உரகபோகம். அக்ஷதரோகம்.

WHITLOW.

ரோகலக்ஷணம்.—நகக்கண், அல்லது நகத்துக்கடியில் காணுகிற தாபிதம். இதில் வேதனை அதிகமாய் இருக்கும். பழுத்து சீழ்கொண்டால், வெள்ளையாய் நகக்காலில் காணப்படும்.

சிகித்சை.—பழுக்கச் செய்து, ஊசியால் குத்தி சீழை வெளிப்படுத்திவிட வேண்டியது.

சாம்பலுக்குள் அந்த விரலைப்புதைத்து, துணியால் சுற்றிக்கட்டி, அடிக்கடி வெந்நீரில் நனைத்துக்கொண்டு இருந்தால், சுகுணம் பிறக்கும்.

துத்தியிலை. அம்மாம்பச்சரிசியிலை இவ்வித இலைகளை அரைத்தாவது, அரிசி மாவகளியாவது, வைத்து கட்டிக்கொண்டுவரலாம்.

எலுமிச்சம் பழத்தைத் துளைத்து. அதில் அந்த விரலைப்புதைத்து, அங்குஸ்த்தான மாதிரியாய் வைத்து வைத்தால், தாபிதத்தை நீக்கிவிடும்.

சுகசந்நிபாதம்.

సుకసన్నిపాతము.

APOPLEXY.

என்னையிட்டு தலைமுழுகி உடனே, ஸ்திரீயோடு புணர்ந்தால் ஒவ்வொருவருக்கு, சுரம் காணும். அது சந்நிபாத சுரக்குறிகளோடு அனுசரித்திருக்கும், இந்த சுரத்தில் முக்கியமாய் மூளையின் தொழில் விகல்பமடைந்திருக்கும். ஆகையால் பிறந்திருக்கிற லக்ஷணங்களை, சிகிச்சகன் அறிந்து, அதற்குத் தகுந்தபடி ஔஷதப்பிரயோகம் செய்யவேண்டியது.

ஸ்வரபேதரோகம்.

స్వరభేదరోగము.

இதுவே—ஸ்வரக்கின ரோகம். ஸ்வரஸாதரோகம். குரல்கம்மல். தொண்டைக்கம்மல். த்வனி விச்சின்னவாதம்,

HOARSENESS—LOSS OF VOICE.

ரோகலக்ஷணம்.—[illegible]ளையிலிருக்கிற த்வனி தந்திகள் விகல்பமடைந்து, கு[illegible]கம்மல் காணுகிறது. க்ஷயரோகத்தில் குரல் கம்மல் காணு[illegible] வழக்கம்.

காசு[illegible]ட்டி.—இதை வாயிலடக்கி வைத்துக்கொண்டிருந்தால், குரல்கம்மல் நீங்கும்.

முருங்கைவேர் கஷாயம்.—இதைக் கொப்புளிக்கலாம்.

அக்கரகாரம்.—இதை மெல்லலாம்.

சீமை மிளகாய் கஷாயம்.—இதைக் கொப்புளிக்கலாம்.

மிளகு.—இதை வாயிலிட்டு அடக்கி ரசத்தைவிழுங்கலாம்.

ஜ்ரும்பா ரோகம்.

జృంభారోగము.

இதுவே—கொட்டாவி.

YAWNING.

ரோகலக்ஷணம்.—கொட்டாவி, தேஹ ஆயாசத்தைத்தெரிவிக்கிறது. வாயைத்திறந்து, காற்றை விசேஷமாய் உள்ளுக்கு இழுத்து, பிறகு புப்புசத்திலிருந்து வெளிப்படுத்துவதே, கொட்டாவியாம்.

ஜ்வரரோகம்.

జ్వరరోగము.

இதுவே—காய்ச்சல்.

FEVER.

ரோகலக்ஷணம்:—வெளியிலிருக்கிற ஏதோ ஒரு விதவிஷம், உட்சென்று ரக்தத்தோடு கலந்து, தேக உஷ்ணத்தை அதிகப்படுத்திவிடுகின்றது. இதுவே சுரம். இந்த விஷத்தின் தன்மை இதுவரையிலும் நமது அல்ப்பபுத்திக்கு எட்டவில்லை. சுரத்தில் அத்தியுஷ்ணம் எப்படிபிறப்பதென்றால், தேக உஷ்ணத்தைக் கிரமத்தில் வைத்திருக்கிற சக்தி மூளையில், அல்லது முள்ளந்தண்டுக் கொடியின் சிரத்தில் இருக்கிறதென்று உத்தேசம். அந்த ஸ்தானத்தை இந்த விஷம் கெடுத்து விடுகிறதென்று சொல்லலாம். அத்தியுஷ்ணத்தோடு கூட, சகல தாதுக்களும், சகல தொழில்களும், ஏறக்குறைய அக்கிரமமடைந்துவிடுகின்றன. இந்தவிஷம் உடம்பிலிருந்து வெளிப்படும் பொது வியர்வைகாணும், அல்லது மேலெங்கும் பலரூபமான தடிப்புகள் காணும். இந்த விஷம் விருக்ஷாதிகளிலிருந்து பிறக்கிறதென்று சிலர் சொல்லுகிறார்கள்; ஆனால் மனிதனிடத்திலிருந்து, சுவாசம், மலங்கள், இவைகளின் மார்க்கமாய் வெளிப்படுகிறதென்று சொல்லுவதற்கு சந்தேகமில்லை. இந்த விஷத்தால் தேக உஷ்ணம் விகல்பமடைவதுமன்றி, ரக்தமும், இதரதாதுக்களும் அதிசீக்கிரத்தில் கெட்டுவிடுகின்றன. இவ்விதக் கெடுதியால் உண்டாகிற பதார்த்தங்கள் ரக்தத்தில் சேர்ந்திருக்கும்; அவைகள் தேகத்திலிருந்து கழிகிற பலவித மலங்களால் நீங்கிவிடாமலிருந்தால், நூதன வியாதிகளைப்பிறப்பிக்கும். சுவரத்தில் நர்வஸ் சிஸ்டம், என்னும் மச்சதாதுவே அதிசீக்கிரம் விகல்பமடைந்து விடுகிறது; அதனால் தான் ஆயாசம், குளிர், தலைவலி முதலிய லக்ஷணங்கள் முதல் காணுகின்றன.

விரணம், காயம், வியாதிகள், இவைகளால் சுரம் கண்டால் அதற்கு உபத்திரவ சுரம், நிமித்த சுரம், பாரதந்திர சுரம், என்று

பேர் (Symptomatic Fever.) சுரத்தைப் பிறப்பித்த காரணம் நீங்கிவிட்டால், சுரமும் தற்செயலாய் நீங்கிவிடும். இவ்வித காரணங்களில்லாமல், விஷக்காற்றால் காணுகிற சுரத்துக்கு, சுவாதந்திர சுரம் (Idiopathic Fever) என்றுபேர். சுவாதந்திர சுவரத்தில், **அல்பகுவரம், சந்நிபாதசுவரம், அதிசாரசந்நிபாதசுவரம், சீதசுவரம், சமனப்பிரகோபகசுவரம்,** என 5—ஜாதிகளுண்டு. இவைகளின் விவரத்தை இவ்விடம் விவரிக்கப்புகின், விஷயம் விரியும்; ஆகையால் காணியற்றிய சுவரவிவரணத்தைப் பார்வையிடவும்.

அல்பகாலசுவரம்.—(Simple Fever.) அன்னபான தோஷங்களாலும், சரீரகஷ்டத்தினாலும் இந்த சுவரம் பிறக்கின்றது. இது 1-2-5-10—நாள் வரையிலிருப்பதுமுண்டு. அல்பகால சுரம் என்பது ஒரேஜாதி; தேகப்பிரகுருதிமேல் லக்ஷணங்கள் வித்தியாசப்பட்டு காணும். அதெப்படியெனில், வாதப்பிரகுருதி யுடையவனுக்கு கண்டால், உடம்புவேதனை, தலைவலி காலவலி அதிகமாய் இருக்கும், இதனையே வாதச்சுவரமென்பர். பித்தப்பிரகுருதியுடையவனுக்குக்கண்டால், வாந்தி, தாபம், பிதற்றல் அதிகமாய் இருக்கும்; இதனையே, பித்தசுவரமென்பர். சிலேஷ்மம் பிரகுருதியுடையவனுக்குக்கண்டால், இருமல் அனுசரித்திருக்கும்; இதனையே சிலேஷ்மசுவரமென்பர் இந்த ஜாதி சுவரத்தில், உஷ்ணம் விடாமல் இருக்கும் அதிகமாய் இருந்தால், தாபச்சுவரம், தீக்ஷணச்சுவரம் என்பர். ஆனால் காலையில் தணிந்தும், மாலையில் அதிகப்பட்டுமிருக்கும்.

சிகிச்சைகிரமம்.—ஆரம்பத்தில், வமனவிரேசனங்களால் தர்மவாதிகளை நீக்கவேண்டியது ; சரீர உஷ்ணத்தை சுவேத, சீதளகாரிகளால் தணிக்கவேண்டியது. தலைவலிக்கு—சாம்பிராணி, கஸ்தூரிமஞ்சள், சுக்கு, ஏலம், அபினி, அரிசி ; இவைகளைப் பால் விட்டரைத்து, நெற்றிமேல் பூசி அனல் காட்டலாம்—வெந்நீர் ஒத்திடமிடலாம்—மான்கொம்பை இழைத்து பூசலாம்—நாரிகேளாஞ்சனம் கண்ணிலிடலாம். சூட்டைத்தணிக்க—சுருக்குக்கஷாயம், ஈர்க்குக் கஷாயம், துவாதசமூலிகை கஷாயம் (143 - பக்கம்) இவைகளில் ஒன்றை யோகமுறையாய்ச்செய்து, 2 - 3 - மணி நேரத்துக்கொருதரம் கொடுத்துக்கொண்டு வரலாம். வெந்நீரை அடிக்கடி அதிகமாய் கொடுத்துக்கொண்டுவந்தால் வியர்வை பிறக்கும். மயிலிறகு, மிளகு, சிலவேம்பு, சீரகம். இவைகளைச் சட்டியிலிட்டு எரித்து, சாம்பலாக்கி; நீர்விட்டு, சட்டியை இறக்கி அதில் நன்னாரி வேர், கர்ச்சூரம், திராக்ஷை, சீரகம், கொத்துமல்லிவிதை, போட்டு ஊறவைத்து, ½—ஆழாக்கு வீதம் 2—3—மணிக்கொருதரம் கொடுத்துக் கொண்டுவரலாம். பேய்ப்புடல், கஷாயங்களோடு சேர்த்தால், வாந்தியும் பேதியும் ஆகும். கண்டங்கத்திரி கஷாயம், இருமல் சுரத்துக்கு உதவும்.— அகத்தியிலை ரசத்தை உடம்புமேல் தடவலாம். காடியும், வெந்நீரும் கலந்து உடம்புமேல் தடவலாம். கர்ப்பூரவேது வியர்வையைப் பிறப்பிக்கும். 5 - உளுந்தெடை பொட்டிலுப்பை, கஞ்சித்தண்ணீரில் கரைத்து, இனிப்பேதி 2 - 3 - மணிநேரத்துக்கொருதடவை கொடுத்துக்கொண்டுவந்தால் வியர்வை பிறக்கும்,

நஞ்சறுப்பான் இலையின் தூள், 3 - உளுந்தெடை; பொட்டிலுப்பு 10-உளுந்தெடை, தேனில் கலந்து, சாமத்துக்கொருதடவை கொடுத்துக்கொண்டுவந்தால், வியர்வை பிறக்கும். **நாவறம், நாவறட்சி, அழலை, வாந்தி, அரோசகம், குமட்டல்,** இவைகளுக்கு—இளநீர், மாதுளம்பழம், சாதிசம்பீரக்குழம்பு (எலுமிச்சம்பழம்) : நிர்விரணி குழம்பு, (புளி) புளிபானகம், ஆலுபகோரா, திராக்ஷைப்பழம், இச்சலிப்பழம், ஓம்மைகரு (மஞ்சகனை), கடலைப்புளிப்பு கஞ்சித்தண்ணீர், பார்லிஅரிசிகஞ்சி, சேவுருகஷாயம், ஆகிய இவைகளில் ஒன்றை உபயோகிக்கலாம். வெந்நீரில், கர்ச்சூரம், திராக்ஷைபழம், எலுமிச்சம்பழத்துண்டு, ஆகிய இவைகளைப்போட்டு, ஊறவைத்து, பிசைந்து வடிகட்டி, ரோகிக்கு இச்சையாய் கொடுத்துக்கொண்டுவந்தால் வெகு நன்மை செய்யும்—பத்தியத்துக்கு—அரிசிநொய் கஞ்சி, அரிசியும் பச்சைப்பயறும் சேர்த்தகஞ்சி, கோதுமைநொய் கஞ்சி, இவைகளில் ஒன்று கொடுக்கலாம். சுரத்தில் ரோகிக்கிஷ்டமான அன்னம் கொடாமலும், காற்றுள்ளவிடத்தில் வைக்காமலும், நீர் அதிகமாய் கொடாமலும் செய்தால்ரோகிக்கு கஷ்டம் அதிகமாகும். தண்ணீர் இல்லாத செடிகள் எவ்விதம் வாடிப்போகுமோ அவ்விதம் ரோகியும் வாடிவிடுவான்.

சந்நிபாதசுவரம்.—(இதுவே விஷச்சுரம், தோஷச்சுவரம்.) (Typhus Fever.) இதுஒருவித விஷக்காற்றால் பிறக்கிறது. தொற்றுகுணமுமுண்டு. கொசுக்கடிபோல் தழும்புகள் உடம்புமேல் காணும். நர்வ்ஸ் என்னும் மஜ்ஜாதாதுவின்பெலன் அதிகமாய் குறைந்துவிடும்; ஆகையால் அதிக அசக்தியும், பலஹீனமும், சோம்பலும், விகாரமும் காணுகின்றன. 14 - 21, நாள். இருந்து போராடும்.

சிகிச்சைகிரமம்.—இந்த ஜாதி சுரத்துக்குச் சாதாரண சிகிச்சை செய்ய உதவாது; மருந்துகளும் அதிகமாய் கொடுக்கக்கூடாது; சுவரம் போகிற வழியாய் விட்டுவிடவேண்டியது; காலம் வந்தால், தானேயாய்ப் போய்விடும்: ஆனால் சரீரத்திலிருக்கிற விஷம் நீங்கும் வரையில், ரோகியைப் பிராணனோடு வைத்திருப்பது நமது முக்கிய பிரயத்தினம். நல்ல ஊட்டம் கொடுக்கவேண்டியது. பால், கஞ்சிவகைகள், சாராயம், மாம்ஸரசம், முதலியவைகள் கொடுத்து பெலன் குறையாமல் செய்யவேண்டியது. குவைனுவேப்பம்பட்டை கஷாயம், கர்ப்பூரசூர்ணம், அபினி, கஸ்தூரி, கோஷ்டகஷாயம், காடிஷர்பத்து, இவை முதலியவைகள் கொடுக்க உதவும்.

அதிசாரசந்நிபாதசுவரம்.-(Enteric Fever.Typhoid-Fever.) இதில் ஏறக்குறைய சந்நிபாத சுரக்குறிகளே யுண்டு. ஆனால் சிறுகுடலில் விரணம்கண்டு பேதியுண்டாகுவது விசேஷம். ஒவ்வொருவருக்கு ரத்தபேதிகாண்பதுமுண்டு. இந்தச்சுவரமும் ஒருவித விஷக்காற்றால் பிறக்கிறது. 30—நாள் வரையில் போராடும்.

சிகிச்சைகிரமம்.—சந்நிபாதசுவரச் சிகிச்சை கிரமமாகவே இதற்கும் செய்யவேண்டியது. பேதியாகிற குணம் இருப்பதால், பேதி

க்குக்கொடுக்கலாகாது. பேதி கண்டால், துவர்ப்பு மருந்துகள், அபினி, இவைகள் கொடுக்கவேண்டியது. (கிரஹணியைப்பார்க்கவு ம்.) வயிற்றுமேல் ஈரத்துணி போட்டுவைப்பதில், சுகுணம் பிறக்கும்.

சீதச்சுவரம்.—முறைக்காச்சல், குளிர்க்காச்சல், கம்பசுவரம், ஆஹிகசுவரம். (Ague) இது, "மலேரியா" என்னும் விஷக்காற்றால் பிறக்கிறது. இந்தசாதி சுரத்தில் முதல் குளிர்காணும், பிறகு சூடு பிறக்கும், பிறகு வியர்வைவிடும். வியர்வை நின்றபிறகு சுவரம் இல்லாமல் இருக்கும். அந்தவிஷம் எவ்விடத்தில் ஒளிந்து இருக்கிறதோ தெரியவில்லை. இவ்விதமாய் தினம் கண்டால், **ஏகாஹிகசுவரம்,** என்றுபேர். ஒன்று விட்டொருநாள் கண்டால், **திரிதாஹிகசுவரம்** என்றும்—2-நாள்விட்டு, 3-நாள் கண்டால், **சாதுர்த்திகசுவரம்** என்றும், சொல்லுவர்.

சிகிச்சைகிரமம்.—இந்தஜாதி சுரத்துக்குச் செய்கிறசிகிச்சையே வேறு. குளிர் இருக்கும்போது, உஷ்ணகாரிகள்கொடுத்து உஷ்ணம் சீக்கிரம் பிறக்கும்படி செய்யவேண்டியது: அதற்கு வெந்நீர், சுக்குக்கஷாயம், சாராயம், எதாகிலும் உள்ளுக்குக்கொடுத்து வெந்நீர், புட்டிகளை கால்கைகளுக்கு வைக்கலாம். உஷ்ணம் பிறந்து உடம்புகாயும்போது, சுவேதகாரி, சீதளகாரி, மருந்துகள் கொடுத்து, வியர்வை சீக்கிரம் பிறக்கும்படி செய்யவேண்டியது. மருந்துகள் அல்பகால சுவரப் பிரகரணத்தில், காணலாம். ஆரநாளத்தைலம் (காடி) மேலுக்கு உபயோகிக்கலாம். வியர்வை பிறந்த பிறகு, அதுதாராளமாய்க் காணும்படி முயர்ச்சி செய்யவேண்டியது. சுவரம் விட்டிருக்கும் போது, சுவரஹாரி மருந்துகள் கொடுக்க வேண்டியது. அதற்கு, குவைனு, அதிவிடையம், வேப்பம்பட்டைக் கஷாயம், களிச்சப்பருப்பு, பாஷாணம், சீந்தில் கஷாயம, இவைகளில் ஒன்று, 2-3-மணிக்கொருதரம் கொடுத்துக்கொண்டு வரவேண்டியது.

சமனப்பிர கோபச்சுவரம்.—(Remittent Fever) இதில் அடிக்கடி வியர்வைகண்டு சுவரம் குறைவதும், அதிகமாகுவதுமாய் இருக்கும். சீதசுவரம்போல், உஷ்ணம் சுத்தமாய் விட்டிருப்பதில்லை. சீத சுவரத்தைப் பிறப்பிக்கிற விஷக்காற்றே இதையும் பிறப்பிக்கின்றது.

சிகிச்சை.—சீதசுவரச் சிகிச்சையே இதற்கும் செய்ய வேண்டியது. சுவரம் தணிந்திருக்கும்போது, குவைனுமுதலிய சுவரஹாரி மருந்துகள் கொடுக்க வேண்டியது.

நெம்பர். 10.

புப்புஸ கண்ணறைகளை காண்பிக்கிற படம்.

AIR CELLS.



1. சுவாஸக்குழலின் கிளை. Bronchial Tube.
2, 2, 2. கண்ணறைகள். Air Cells.
3. புப்புஸநாடி. Pulmonary Artery.
4. புப்புஸநாளம். Pulmonary Vein.

சுவாசரோகம்.

శ్వాసరోగము.

இதுவே—க்ஷுத்திரசுவாசம். క్షుద్రశ్వాసము.
தமகசுவாசம். తమకశ్వాసము.
மந்தாரசுவாசம். మందారశ్వాసము.
மந்தாரகாசம். మందారకాసము.
இரைப்பு மூச்சுமுட்டல்.
சுவாசகாசம். శ్వాసకాసము.
கஷ்டசுவாசம். కష్టశ్వాసము.

ASTHMA.

இந்த வியாதி நர்வ்ஸ் என்னும் மஜ்ஜதாது நரம்புகளைப் பற்றி வருகிறது. சிறிய சுவாசக்குழல்கள் சுருங்கி விடுகின்றன.

ரோகலக்ஷணம்.—மூச்சுவிடுவது கஷ்டமாய் இருக்கும். படுக்க இடங்கொடாது. இவ்விதம் கொஞ்சநேரமிருந்து, தணிந்து, இருமல்கண்டு, கபம் வெளிப்பட்டு, சுவாசம் சுவாபீக ஸ்திதியில் வந்துவிடும்.

சிகிச்சைகிரமம்.—வியாதி கண்டிருக்கும்போது, அதைத் தணிக்க பிரயத்தினம் செய்ய வேண்டியது. கஷ்ட சுவாசம் நீங்கின

பிறகு, மறுபடியும் அது வராமலாவது, அல்லது தாமதித்து வரும்படியாவது செய்ய வேண்டியது. வியாதி கண்டிருக்கும்போது உபயோகிக்கத் தகுதியான ஔஷதங்கள் இதனடியில் காணலாம்.

வார்திக்காவது—பதிக்காவது தொடுக்கலாம்.

புகையிலைச்சுருட்டு—இதை உபயோகிக்கும்படி செய்யலாம்.

ஊமத்தன் இலை—இதைச் சுருட்டுசெய்து பிடிக்கச்செய்யலாம்.

பொட்டிலுப்பு—இதை ஜலத்தில் கரைத்து, அதில் ஒருகடிதத்தை நனைத்து, உலர்த்தி, சுருட்டி, கொளுத்தி, புகையைப் பிடிக்கச் செய்யலாம்.

ஆடாதோடை இலைகஷாயம்.—உத்தாமணி.

பாவன ஓமம்.—பாவனசிர[illegible]

காப்பிக்கொட்டைக் கஷாயம்.

சடாமஞ்சிகஷாயம். மாஜூபம். (கஞ்சா.)

பிப்பலியாதிலேகியம். (திப்பிலி). வசம்பு கஷாயம்.

காப்பூராதிசூரணம்.

வியாதி வராமலிருக்கச்செய்ய, உள்ளுக்குக் கொடுக்கத் தகுதியான ஔஷதங்கள் இதனடியில் காணலாம்:—

கந்தகம். அபினி. இங்குவாதிசூரணம். (பெருங்காயம்.)

தாம்பிரபஸ்மம். ஆதனைக்கிருதம்.

வெள்ளாட்டுப்பால்.

அயக்ஷாரம். பாலேந்திரபோளம்.

கண்டங்கத்திரி ரசாயனம். பூர்ணாதிலேகியம். (கஞ்சா.)

சுளுக்கு.

బెణుకు.

SPRAIN.

ரோகலக்ஷணம்:—மூட்டு பிசகி, அவ்விடத்திலுள்ள சவ்வுகளுக்குத் தாபிதம் காணுதலுக்கு, சுளுக்கு என்று பேர்.

சிகிச்சைக்கிரமம்:—மூட்டை அசையாமல் வைத்து ஈரத்துணி சுற்றி, அது காயாமல் தண்ணீர் விட்டுக்கொண்டுவந்தால் தாபிதம் நீங்கிவிடும். உருவலாகாது. சாமந்திப்பூவை வதக்கி ஒற்றிடலாம். அழவணை இலையை அரைத்து போல்டீஸ் கட்டலாம்.

குதகசந்நி.

సూతకవాయు.

இதுவே—குதகவலிக் குசிகாவாயு [illegible].

HYSTERIA.

ரோகலக்ஷணம்:—இது நர்வ்ஸ் என்னும் நரம்புகளைப்பற்றிய வியாதி. விட்டுவிட்டு காணும். இடதுபக்கம் அடிவயிற்றில் ஒருவித கஷ்டம் பிறந்து இளையும். அல்லது உண்டைபோல் மேலுக்கெழும்பித் தொண்டையில் அடைத்துக்கொள்ளும்; அதை நீக்க கையை முட்டிக்கி மார்புமேல் அடித்துக்கொள்ளுவள்; சுவாசம் விடுதல் கஷ்டமாய் இருக்கும்; தேகம், கை, கால் இவைகள் உதறும்; தலைமயிரையும்; ஆடை ஆபரணங்களையும், கைகளால் இழுத்து பிச்சுக்கொள்ளுவள்; உதறல் நிற்கும்போது கண்ணீர் வடியும்; அழுதல், நகைப்பு, விக்கல், இவைகளும் காண்பதுமுண்டு. ஆயாசமும், அக்கியானமும், பிறப்பதுமுண்டு; கொஞ்ச நேரமிருந்து, தெளிவு பிறந்துவிடும்; மூத்திரம் அதிகமாய் இறங்கும். இந்த வியாதி நானாவித ரோகம்போல் காண்பதுண்டு. சந்துகளுக்குக் காணுகிற தாபிதம்போல் சூலை காணும்; அஜீரணம்போல் நாக்குழியில் வேதனை எடுக்கும்; முன் வந்தண்டுக்கொடியின் வியாதியைப்போல், முதுகில் நோவெடுக்கும்; உள் அவயவங்கள் கெட்டு பிறப்பதுபோல், இடதுபக்கம், நோவும், வயிற்றில் வலியும் கண்டு உபத்திரவப்படுத்தும்; வாதரோகம்போல் கைகால்களுக்கு பிடிப்புகண்டு, அசைக்கக்கூடாமல் செய்யும், சர்மரோம்புகள், தொடக்கூடாத அவ்வளவு புண்போலிருக்கும்; சிலருக்கு திமிர் காண்பதுமுண்டு; சிலருக்கு பசி அதிகமாயும், சிலருக்குக் குறைந்துமிருக்கும். மூத்திர அடைப்பு, பக்கச்சூலை, க்ஷயம், இருமல், அன்னவாதி சுருங்கிவிடுதல், குரல்கம்மல், பாரிசவாயு, மூட்டுவீக்கம், கஷ்டசுவாசம், தும்மல், கொட்டாவி, விக்கல், தேம்புதல், இவைமுதலிய குறிகள் காண்பதுமுண்டு; இந்த வியாதி குதமாயமுதல், அதுநின்றுபோகிறபரியந்தம், ஸ்திரீகளை அனுசரிப்பது வழக்கம். பயப்பிரகிருதியுள்ளவர்களுக்கு இது அனுசரிக்கும். குதகசந்நி என்பது தப்பிதப் பெயர். எனெனில் கருப்பையின் தொழில் விகல்பத்தால் இது காண்பதில்லை; புருஷர்களுக்கு காண்பதுமுண்டு. கலியாணமானவர்களுக்கும், பிரசவித்தவர்களுக்கும்; அதிகமாய்க்காணும். வேசியர்களில் இந்த வியாதி மெத்த காணுகிறதில்லை; ஆகையால் புணர்ச்சி அதிகத்தால் இந்த வியாதி காணுகிறதென்று சொல்ல இடமில்லை.

இந்த வியாதி ஒவ்வொருவருக்கு வெகு விசித்திரமாய்க் காணும்; படுத்தபடுக்கைவிட்டு எழுந்திருப்பதே இல்லை; புறளுகிறதுமில்லை; கைலாகுகொடுத்து எழுப்பப்பிரயத்தனப்பட்டால், ஐயையோ கோவென்று முறையிட்டுக்கொள்ளுவான்; மலஜலபாதைகளுக்கு எழுந்துபோக எவ்வளவும் மனமிராது. இவ்வித ரோகத்தைப்பார்

த்த வைத்தியன், புத்திமயங்கி ஒன்றும் தோணுமல் பிசாசுபிடித்ததென்று சொல்லி, பூசவிகையில் ஒப்பித்து வீணில் ரோகஸ்திரீ வருத்தப்படும்படி செய்விக்கிருன். இதில் சாவில்லை.

சிகிச்சைக் கிரமம்.—இசிவு கண்டிருக்கும்போது, ஸ்திரீக்கு அடிபடாமலிருக்கும்படி செய்யவேண்டியது. நஸியமிடலாம். பிரக்ஞையில்லாம லிருக்கிறபோது, காதில் இரண்டொருதுளி தண்ணீர் விட்டால், தெளிவு பிறக்கும். முகத்தில் தண்ணீர் அறையலாம். விழுங்க சக்தியிருந்தால், இங்குவாதிசூர்ணம் கொடுக்கலாம். இயானம் வரும்படி செய்ய மற்றொரு மார்க்கமுண்டு. அதெப்படியெனில்:—வாயைமூடி, விரல்களால் மூக்கைப்பிடித்துக்கொண்டு, சுவாசம் விடாமல் செய்தால் மூச்சுத்திணரும். அப்போது கையை சட்டென்று எடுத்துவிட்டால், சுவாசம் வெளிக்குவந்து, மறுபடியும் உள்ளுக்கு போகும்போது தெளிவு பிறக்கும். இவ்வித சிகிச்சை பயங்கரத்தை புண்பெண்ணும். இதனடியில் கண்டிருக்கிற மருந்துகள் இந்த ரோகத்துக்குக் கொடுக்கத் தகுதியானவைகள். கொடுத்தும் பலனில்லாவிட்டால், சும்மாய் விட்டுவிட்டு மனதையும், சரீரத்தையும், சுவஸ்த்திதியில் வைப்பதே உத்தமம்.

கோடாசலகுளிகை. (நேர்வாளம்). பேதியாக.

இங்குவாதிலேகியம், அல்லது சூர்ணம். (பெருங்காயம்). வாயுவை கண்டிக்கும்.

அயம். (ரக்தக்ஷீணமிருந்தால்)

துத்தூர தைலம்பூச்சு, அல்லது போல்டீஸ். (ஊமத்தன்). வேதனையுள்ளவிடங்களுக்கு.

சடாமாஞ்சி. அருதா இலை ரசம்.

வமன மருந்துகள்.

வெந்நீர் புட்டிகள். பக்கங்களுக்கும் கால்களுக்கும் வைக்கலாம்.

வேப்பம்பட்டை கஷாயம்.

வெள்ளறுகு - சாமந்திப்பூ.

புரசன்விரை. (கிருமிமேல்கண்டால்.)

மூஷாம்பரம்.—கர்ப்பூரம் - கஸ்தூரி.

கலிங்காதி குழம்பு. (ஆற்றுத்தும்மட்டிக்காய்.)

164

சூதகச்சூலை.

సూతకాసూల.

இதர்லேக்ஷசூசிகாசூலை. సూతికాసూల. நாரச்சூலை. சூசிகவாயு. ரக்தகவாதபித்தகுன்மம். முட்டு குட்டு. ముట్టుశూల.

DISMENORRHŒA.

ரோகலக்ஷணம்.—ஆரோக்கிய ஸ்திதியிலிருக்கிற ஸ்திரீகள், தலைமுழுக்கு காணும்போது உபத்திரவம் அடையமாட்டார்கள். சூதகசூலையால் கஷ்டப்படுகிறவர்கள் துகைமிகும். சிலர் புத்தியறிகிற காலம் முதல், வீடுதூரம் நிற்கிறவரையில் வருத்தமடைந்துகொண்டே இருப்பார்கள். சிலர், அப்போதைக்கப்போது வருத்தமடைவார்கள். விவாகம் சிலருக்கு சவுக்கியத்தையும், சிலருக்கு அதிவேதனையையும் உண்டாக்கின்றது. இந்த வேதனை எவ்விடத்திலிருந்து உண்டாகிறதோ, அதை அறிந்துச்சொல்வது கஷ்டம். சூதகசூலையில் 3-சாதிகளுண்டு—1-வது நர்வ்ஸ் என்னும் நரம்புகளைப் பற்றியசூலை 2-வது கர்ப்பாலயத்தில் ரக்தம் அதிகமாகி, பிறக்கிற சூலை; 3-வது சூதகம் வருகிறவழி மூடிக்கொண்டு காண்கிற சூலை.

சிகிச்சை.—1-வது சாதியை வசப்படுத்துவது கஷ்டம்; அபினியோதிலும், வெந்நீரில் உக்காரவைப்பதிலும், வேதனைசாந்திகரிகளை யோனிக்குள் வைப்பதிலும், கஞ்சாவை உள்ளுக்குக் கொடுப்பதிலும், வேதனை நிற்கும். மீன் எண்ணெய், வேப்பம்பட்டை கஷாயம், இவ்விதமருந்துகளில் ஒன்றைக் கொடுத்து உடம்பைத் தேற்றவேண்டியது. கர்ப்பூரம், வேதனையை நிறுத்தும்; வெள்ளைச்சாரடை பேதியாக்கி, வேதனையைத் தணிக்கும்—சிலநாள், அந்த ஸ்திரீயை புருஷனிடத்திலிருந்து வேறுபடுத்தி வைப்பதில் நன்மையுண்டாகும்.

2-வது சாதியை வசப்படுத்துவதும் அதிலும் கஷ்டம். மேல் கண்ட மருந்துகளே இதற்கும் உபயோகப்படுத்தலாம்.

3-வது சாதியை ஸஸ்த்திர சிகிச்சையால் வசப்படுத்தவேண்டி, ஔஷதத்தால் சவுக்கியப்படுத்தவேணன்பது மூடத்தனம். அதற்கு, இங்கிலீஷ்வைத்தியமுறை கற்றவரிடத்தில் சிகிச்சை செய்துகொள்ளவேண்டியது.

சூதகபந்தம்.

సూతకబంధము.

இதுவே—சூதகக்கட்டு—ரக்த்த குல்[illegible]—மசக்கை.

AMENORRHŒA.

ரோகலக்ஷணம்.—இதில் 3-சாதிகளுண்டு. 1-வது ஜனன இந்திரியங்கள் பிறக்கும்போதே வித்தியாசமடைந்திருந்தால், தலைமுழுக்கு காண்பதேயில்லை. 2 வது தலைமுழுக்குக் கண்டும், வெளிக்குவர வழியில்லாம லிருந்தால், உள்ளவேயின்றிருக்கும். 3-வது, தலைமுழுக்கு காலக்கிரமமாய்க் கண்டுகொண்டிருந்து, பிறகு சீத்தமாய் நின்றுவிடும். இதற்குக்காரணங்கள், வியாகுலம், வியாதிகள், சீதளம் இவை முதலியவைகளாம். சிலரில் காரணம் கண்டறிந்து கூடாமையாய் இருக்கும்.

சிகிச்சை.—சூதகபந்தத்தை விளைவித்தகாரணம் அறிந்து அதை நீக்க முயற்சி செய்யவேண்டியது. மூன்றுவது சாதிக்குக் கொடுக்கத் தகுதியான ஔஷதங்கள் இதனடியில் காணலாம்.

வாலேந்திரபோளம்—மூஷாம்பரம்.
நவக்ஷாரம்—அன்னபேதி—எள்ளு.
இங்குவாதிலேகியம்—(பெருங்காயம்.)
அருதா—வெங்காரம்—புழுத்த அரிசி.
கலிங்காதிகுழம்பு—(ஆற்றுத்தும்மட்டி.)

சூதகப்பாண்டு.

సూతకపాండురోగము.

CHLOROSIS.

ரோகலக்ஷணம்.—புத்தியறிகிற சிறுவயதுப்பெண்களுக்குக் காணுகிறவியாதி. நர்வஸ்களின் விகல்பத்தினால் இத்தவியாதி பிறக்கிறதென்றும், அந்தக்காரணத்தினால், ஜீர்ண உறுப்புகளும், ரக்த்த உறுப்புகளும், கர்ப்பாசயத்தின் தொழிலும், கெட்டுவிடுகிறதென்றும் சிலருடைய எண்ணம். அவ்விதமல்ல, தலைமுழுக்கு அக்கிரமத்தால் இவ்விதரோகம் காண்கிறதென்று வேறுசிலர் சொல்லுகிறார்கள். இத்தவியாதியில் ரத்தத்திலிருக்கிற சிவந்த அணுக்கள், வெளுத்திருக்கும்; மேலும் அவைகள் சிறுத்து, எண்ணிக்குறையும்; முகம் வெளுத்து ஒருவிதமாய் இருக்கும்.

சிகிச்சைக்கிரமம்.—இதற்கு நல்ல ஊட்டமும், அயம்சேர்ந்த மருந்துகளும்கொடுத்து, சிவந்த ரக்த்த அணுக்களை விருத்திபடுத்த வேண்டியது.

சூரியாவர்த்தவாத ரோகம்.

సూర్యావర్త వాతరోగము.

இதுவே—ஒற்றைத்தலைவலி. அர்த்தபேத ரோகம். అర్ధ శిరోరోగము.

சந்திராவர்த்தவாத ரோகம். చంద్రావర్త వాతరోగము.

HEMICRANIA—SUN PAIN.

இது ஸ்ப்பரிச நரம்பைப்பற்றிய வியாதி. சூலை ரோகத்தில் ஒரு பேதம். இதில் ஒருபக்க புருவத்துக்கும், நெற்றிக்கும் போகிற நர்வஸ்கள் வியாதி கொண்டுவிடுகின்றன. அவைகள் பரவுகிற விடங்களில் வேதனையிருக்கும். குமட்டலுமுண்டு. பலக்குறைவே இதற்குக் காரணம். தினமும் குறித்தவேளையில் கண்டு உபத்திரவப்படுத்தும்; சூரியன் மேலுக்கேறி உச்சியில் வருமளவும், வேதனை அதிகரித்து, அஸ்த்தமானம் ஆக ஆக தணியும்; ஆகையால் சூரியாவர்த்த வாதம் என்று பெயர் இட்டனர்.

சிகிச்சை.—சூலைரோகச் சிகிச்சையே இதற்குச் செய்யவேண்டியது. கைகளைத் தலைக்குமேலெடுத்து கொஞ்சநேரம் வைத்திருப்பதினால், காலையிலெழுந்திருக்கும்போது காணுகிற தலைவலி நீங்கும். துணியை மடித்து கன்னப்பொறியின்மேல் வைத்து கொஞ்சம் இழுத்துக்கட்டிவைத்தால் தலைவலி நீங்கும். நவக்ஷாரம், அன்னபேதி இவைகள் உள்ளுக்குக் கொடுக்கலாம்.

சூலைரோகம்.

శూలరోగము.

இதுவே—குத்தல்—குடைச்சல்—வேதனை—[illegible], நோய்—வலி—சூலைக்கட்டு—வாதநோய்.

PAIN—NEURALGIA.

ரோகலக்ஷணம்.—சரீரத்திலிருக்கிற நர்வஸ் என்னும் ஸ்ப்பரிச நரம்புகளுக்குக் காணுகிற வியாதி. இதுவிட்டுவிட்டு காணும். இர

வில் அதிகமாகிற குணமுண்டு. தலை, உடம்பு, கால்கள், கைகள், உள்ளிருக்கிற அவயவங்கள் ஆகிய இவ்விடங்களிருக்கிற நரம்புகளுக்குக் காணும். நரம்புஸ்த்தானத்தில் காண்பது வழக்கமாய் இருந்தபோதிலும், வேறு விடத்தில் காண்பதும் உண்டு. அதெப்படியெனில்:— சொத்தைப்பல்லுக்கு, புருவத்தில் நோவெடுக்கும்; யகிர்த் வியாதியில் தோளில் வேதனையுண்டு; இருத்ரோகத்தில் இடதுகையில் நோவெடுக்கும்; விரைவியாதியிலும், கர்ப்பாஸய வியாதியிலும், இடுப்பில் நோவெடுக்கும்; அன்னாசயவியாதியில் முதுகில் நோவெடுக்கும்; முழங்கையின்மேலிருக்கிற நரம்புமேல் அடிபட்டால், சுண்டுவிரலில் நோவெடுக்கும். இவ்விதமாய் இன்னம் அனேகமுண்டு. சூலரோகம் திடீலென்றுகண்டு, திடீலென்று போய்விடும். மத்தியத்தில் நோவிராது தாபிதக்குறிகளுமிராது. நோவுகாண்கிறஸ்த்தானப் பெயரே இட்டு சூலரோகம் பலவிதமென்கிறார்கள் அவையாவன.—

ஆமசூலை. (பரிணாமசூலை) இரைப்பையில்வேதனை. (Grastralgia.) சர்க்கராசூலை. மூத்திரத்தில் கல்லுவிழும்போது உண்டாகிற வேதனை.

குக்ஷசூலை. வயிற்றுநோவு.

மேகசூலை. கைகால்களில் குடைச்சல்.

நிதம்பச்சூலை. அல்குலில் வேதனை.

பக்கச்சூலை. பக்கத்தில் வேதனை.

கர்ப்பச்சூலை. கருப்பையில் வேதனை.

முகசந்தி. Facial Neuralgia.

சூரியாவர்த்தவாதம். Hemicrania.

கிருத்திரசிவாத ரோகம். Sciatica.

யகிர்த்சூலை. Hepatalgia.

ஆந்திரசூலை. Colic.

துனி. பிரதிதுனி. இவை முதலியவைகளாம்.

இங்கிலீஷ்வைத்திய சங்கிரகத்தில் விரிவாக காணலாம்.

சிகிச்சைக்கிரமம்.—வியாதியை விளைவித்த காரணத்தை நீக்கவேண்டியது; சரீரஸ்த்திதியையும் கிரமப்படுத்தவேண்டியது. சரீரஸ்த்திதி இந்த வியாதியில் எப்போதும் விகல்ப்பமடைந்திருக்கும். இதனடியில் கண்டிருக்கிற மருந்துகளை, மேலுக்கு உபயோகிக்கலாம்.

[illegible]தைலம். (எட்டிக்கொட்டை.)

அர்க்ககூர்[illegible]த்தைலம். (எருக்கன்.)

போஸ்தக்காய் கஷாயம். ஒற்றிடமிடுதல்.

தூத்தூரதைலம். (ஊமத்தன்.) தடவுதல்.

கர்ப்பூரத்தைலம். மண்தைலம். தடவுதல்.

மான்கொம்பு. தேய்த்து சந்தன மெடுத்து பத்துபோடுதல்.

மாசிப்பத்திரியிலை. வதக்கி ஒற்றிடமிடுதல்.

வெந்நீர். ஒற்றிடமிடுதல்.

கஞ்சா இலை. வதக்கி ஒற்றிடமிடுதல்.

ஊமத்தன் இலை. வதக்கிகட்டுதல்.

கடுகு. (முருங்கைவேர் ரசம் விட்டரைத்து பத்துபோடுதல்.)

தும்மையிலைரசம். பூசுதல்.

உத்தாமணிரசம். பூசுதல்.

எருக்கம்பால். பூசுதல்.

மைனத்தைலம். (மெழுகு) தடவுதல்.

மைலாலக்கடி. தேய்த்து சந்தன மெடுத்து பத்துபோடுதல்.

கருஞ்செம்பை இலை. வதக்கி ஒற்றிடமிடுதல்.

ஆத்தியிலை. வதக்கி ஒற்றிடமிடுதல்.

சுக்கு. பெருங்காயம். உறைத்து பத்துபோடுதல்.

அபினி. உறைத்து பத்துபோடுதல்.

எலுமிச்சம்பழம்.—ஒரு பத்தையை மெல்லிய துணியில் முடிந்து, எண்ணெய்தடவி, அனலில்காட்டி ஒற்றிடமிடுதல்.

சந்தபோளம்.—காசுக்கட்டி, அபினி, சுக்கு, அரிசி, இவைகளைச்சேர்த்து எலுமிச்சம்பழரசம்விட்டு அரைத்து, பத்துபோடுதல்.

மருக்கொழுந்து. வதக்கி ஒற்றிடமிடுதல்.

சாமந்திப்பூ. வதக்கி ஒற்றிடமிடுதல்.

உள்ளுக்குக் கொடுக்கத்தகுதியானவைகள் இதனடியில்காணலாம்:—

இந்திராகாரிலேகியம். (கஞ்சா.)

அபினி.—அயம்.—மீன் எண்ணெய்.

விரேசனமருந்துகள்.—வேப்பம்பட்டை கஷாயம். சாரணை கஷாயம்—பஞ்சலவண சூரணம்.

சுவப்பனஸ்க்கலிதம்.

స్వప్నస్ఖలితము.

இதுவே—சுக்கிலநஷ்டம்—சுக்கிலக்ஷீணம்.

இந்திரியநஷ்டம்—தாதுநஷ்டம்.

வீரியநஷ்டம்—விந்துநஷ்டம்.

SPERMATORRHŒA.

ரோகலக்ஷணம்.—சதா சம்போகசிந்தையுள்ளவர்களுக்கு நித்திரையில் சுவப்பனங்கண்டு, இந்திரியம் தற்செயலாய் அடிக்கடி ஸ்க்கலிதமாகிக் கொண்டுவரும். இந்தவிபத்து யவ்வனத்தில் முக்யமாய்காணுகின்றது. இந்திரியம் அதிகமாய்ச் சுரந்து, இவ்விதம் காண்கிறதென்று சொல்லவும் இடமுண்டு. இதற்கு மனமேகாரணம். மூஷ்டிமைதுனம் (க்ரசுரதம்) செய்து கொள்ளுகிறவர்களுக்கு, இந்திரிய அவயவங்களெல்லாம் பெலன் குறைந்து, இந்த விபத்து நேரிடும். இந்திரியம் சுரக்காமல் செய்வதுகஷ்டம். சுரதநீர் ஸ்திரீகளுக்கும் பெருகும். பெருகும்போதுண்டாகிற விரக தாபத்தினால், ஒருத்தருக்கொருத்தர் மைதுனம் செய்துக் கொள்ளுவதும் உண்டு. இந்திரியநஷ்டம் காணுகிறவர்களுக்கு, வியசனம்மேலிட்டு, சரீரம் சௌக்கியஸ்திதியிலிராது ; வியாதியிருக்குதென்று சிலர் நினைத்து மருந்துங் கையுமாய் இருப்பார்கள். சுவப்பனம் அடிக்கடி காணும். அவர்களின்மனதை சந்தோஷப்படுத்தி, அந்தக்ஞாபகம் இராமல் செய்வதேமுக்கிய சிகிச்சை. இந்திரியநஷ்டம் காண்கிறவர்களுக்கு, வேலைசெய்ய மனமிராது ; அஜீர்ண உபத்திரவம் நேரிடும் ; கேழ்வியும் பார்வையும் மந்தப்படும் ; க்ஞாபகக் குறையும் ; மனதை ஒரு விஷயத்தின்மேல் வைக்க அசக்தியாகும் ; இருதயத்துடிப்பு, மயக்கம், தலைவலி, சூலைரோகம், இவைமுதலியவைகள் காண்பதுமுண்டு. இவ்விதக்குறிகள் கண்டு, காக்கைவலி, க்ஷயம், உன்மாதம், ஆகிய இவ்விதவியாதிகளாய் முடியும், கடைசியில் துவஜபங்கம் காண்பதுமுண்டு. இந்திரியம் தங்கியிருக்கிற இந்திரிய கமலங்களுக்கு வியாதிகண்டு, அவைகளுக்கருகிலிருக்கிற உருப்புகளுக்கும் வியாதிகண்டால், இந்திரியம் அடிக்கடி தற்செயலாய் ஸ்க்கலிதமாகுவதுமுண்டு. சிகிச்சைகள் அதையும் தெரிந்துக்கொள்ள வேண்டியது. இதில் விந்து, மூத்திரத்தோடு கலந்தாவது, முக்கும்போதாவது விழும்.

சிகிச்சைக்கிரமம்.—இதை அல்பரோகமென்று எண்ணலாகாது. சிகிச்சைகன், தன்னிடத்தில் நம்பிக்கையிருக்கும்படி செய்துக்கொள்ள வேண்டியது. சொற்படி நடந்தால் வியாதிநீங்குமென்று மனதைத் தேற்றவேண்டியது. தனக்கிருக்கும் வியாதியைக்குறித்து வாசிக்க விடலாகாது. நல்நடத்தை யுள்ளவர்களோடு கூடி சினேகம் செய்யும்படி புத்திசொல்லவேண்டியது. வியாகுல மடைந்திரு-

க்கிருக்கிற மனதை உர்சாகப்படுத்துவதே பிரதான சிகிச்சை. குருத்துவபோசனம் செய்யவிடலாகாது. புகையிலை அப்பியாசத்தை நீக்கும்படி செய்யவேண்டியது. சாராயம் உதவாது. ஸ்திரீ விஷயத்தில்மனதை அதிகமாய்ச் செலுத்தாமல்செய்யவேண்டியது ; இரவில் ஈர நீர்ச்சீலை கட்டிக்கொண்டிருப்பதில் சுகுணம் பிறக்கும் ; சிசனத்துக்கு காந்தலுண்டாக மாட்டாது. இதனடியில் கண்டிருக்கிற ஔஷதங்கள் இந்த விபத்துக்கு உபயோகிக்கலாம்:—

அயம்—கர்ப்பூரம்—முத்தின்குருஸ்.
எட்டிக்கொட்டை—அபினி—அப்பிரகசிந்தூரம்.
வேப்பம்பட்டை கஷாயம்—தண்ணீரில் உட்காருதல்.

மூத்திர தோஷங்களாலும், ஆசனத்தில் காணுகிற வியாதிகளாலும், மூத்திரப்பை அடியிலிருக்கும் இந்திரிய கமலங்களுக்கு எரிச்சல் உண்டாகி இந்த விபத்து கண்டால், அந்தத் தோஷங்களுக்குத் தகுந்த ஔஷதம் கொடுத்து நீக்கினால், இந்தவிபத்தும் நீங்கிவிடும்.

சோபை...

శోఫము.

இதுவே—ஊதல்—அதைப்பு—வீப்பு—வீக்கம்.

சோகை—சோவை—விஷப்பாண்டு.

நீராம்பல்—நீரேற்றம்—நீராமபம்.

தேகத்தடிப்பு—நீர்க்கோவை.

நீர்ப்பாண்டு—தேகவீக்கம்.

DROPSY.

ரோகலக்ஷணம்.—உடம்பிலிருக்கிற செல்லுலர் மெம்பிரேன் என்கிற சவ்வில் நீர் சேர்ந்துக்கொள்ளுகிற ரோகம். உடம்பெங்கும் வீங்கியிருந்தால், விஷப்பாண்டு என்றும்—முகத்தில் மாத்திரமிருந்தால், சோகை என்றும்—வயிற்றிலிருந்தால், ஜலோதரமென்றும்—அண்டத்திலிருந்தால், நீர் அண்டம் என்றும்—பெயர் பெறும். காலிலாவது, கையிலாவது ஓரிடத்தில் கண்டால் வீக்கம்என்றும் பேர். விஷஜந்து உடம்பு மேலேறிகண்டால், விஷசோபை என்றும்—சர்வாங்கத்தில் ஒரேகாலத்தில் வியாபித்தால், நிஜசோபை என்றும்—ஒரு அவயவத்தில் பிறந்து, பிறகுமற்ற அவயவங்களுக்குப் பரவினால், ஆகந்துக சோபை என்றும்—காயங்கள், ரச, கந்தி, பாஷாணங்கள், சேராங்கொட்டை, பூனைக்காஞ்சொறி, முள்ளு தைக்குதல், இவை முதலியவைகளால் பிறந்தால், அபிகாத சோபை என்றும், தமிழ் சாஸ்திரங்கள் கூறும்.

சிகிச்சைகிரமம்.—உடம்பில் சேர்ந்திருக்கிற நீரை, பேதிமருந்துகளாலும், மூத்திரகாரி மருந்துகளாலும் வெளிப்படுத்தவேண்டியது, வியர்வையைப் பிறப்பிக்கிற மருந்துகளும் கொடுக்க உதவும், நீர் அதிகமாய் சேர்ந்து சர்மம் பிகுந்திருந்தால், ஊசியால் குத்தினால் நீர் வெளிப்பட்டு விடும்.

இதனடியில் கண்ட மருந்துகள் சோபை ரோகத்துக்குக் கொடுக்கத்தகுயானவைகள்.

நவசாரம். வெடியுப்பு. திராவக உப்பு. வெங்காரம். நாயுருவி சுட்டச் சாம்பல்.	இவைகளில் ஒன்றை நீர் முள்ளிகஷாயத்திலாவது, முள்ளங்கிரசத்திலாவது, இளநீரிலாவது, மணத்தக்காளி இலைகஷாயத்திலாவது கரசிலாங்காணி கஷாயத்திலாவது கொடுக்கலாம்.

ஜோதிரசமாத்திரை (சேர்வாளம்.)

மணத்தக்காளி இலைரசம், பேதியாகும்.

நாயுருவி இலைகஷாயம்.

பேபிர்க்கு இலைகஷாயம்.

கோழி அவரை இலைரசம். இதைக்கொடுத்து உப்பில்லாத பத்தியம் 3-நாள்வைத்தால், அல்பசோபை நீங்கும்.

அயச்சிந்தூரம்—மண்டூரம்—சுர இலைகஷாயம்.

ஆருவாதிதைலம். (அறுகம்புல்.)

மக்கி—கொம்புப்புடல்.

தந்தோற்பவம்.

దంతోద్భవము.

இதுவே—பல்முளைதல்.

DENTITION.

[illegible] பல்முளையும்போது, கர்வ்ஸ்கள் விகல்பமண்டைந்து, சுவரம், பேதி, இசிவு முதலிய ரோகங்கள் பிறக்கும், அதற்குத் தடித்திருக்கிற ஈறை கீறிவிடவேண்டியது.

தரைச அண்டம்.

இதுவே—ஏறப்புடுக்கு.

ELEPHANTIASIS OF THE SCROTUM.

ரோகலக்ஷணம்.—தென்னை முதலிய வெளிதேசங்களிலேமாத்திரம் இந்த ரோகத்தைக் காணலாம், இதில் பீடிக்கப்பட்ட அண்டத்தின் தோல்மாத்திரம் தடித்து, அதின் நரம்புகள் மிகவும் பருத்திருக்கும். ஒரு ரோகியின் புட்டையைப்பிடித்து நிறுத்துப் பார்த்தபோது, 70-பவுண் [illegible] இருந்தது. ஆரம்பத்தில் மைனத்தைலம் உபயோகிக்க [illegible] அதற்கும் வசப்படாமல் பெருத்துவிட்டால், அறுத்தெடுத்துவிடவேண்டியது.

தந்தரோகங்கள்.

దంతరోగములు.

இதுவே பல்வியாதிகள்.

AFFECTIONS OF THE TEETH.

இவை பலவாயிருந்தாலும்; அவைகள் எவையெனில்,—

தந்தசூலரோகம். (பல்வலி.) பல்லுக்குப்போகிற நரம்புகளுக்குண்டாகிற வியாதி. (Tooth-ache.)

[illegible]. (பல்லரணை.) பல்லின்வேர் இருக்கிற பள்ளத்தில் [illegible]. (Gum-boil.)

சொத்தைப்பல். (புழுப்பல்.) இதில் பல்லின் மேற்புறமிருக்கிற [illegible] போய், நடுவிலிருக்கிற பள்ளம் காணப்படும். இது உட[illegible] வியாதி. வேதனை அதிகம். (Caries of Tooth) [illegible] பல் ஆட்டம்.

இதனடியில் கண்ட ஔஷதங்கள், பல்வியாதிக்கு உபயோகிக்கத்தகுயானவைகள்,—

அக்கரகாரம்.

செவ்வந்திப்பூவேர். அலரிவேம்புவேர்.

முருங்கைவேர்-சுக்கு-ஆலம்பால் (பல் ஆட்டத்துக்கு.)

[illegible]யாவட்டவேர்—கிராம்புத்தைலம்.

லவங்கப்பட்டைத்தைலம். (சொத்தைப்பல்லுக்கு.)

[illegible]. (சொத்தைப்பல்லில் வைத்து அடைக்கலாம்.

காட்டாமணக்குப்பால். புகையிலைச் சுட்டசாம்பல்.

கற்கண்டுபொடி. (பல்லரிணைக்கு.)

அபினி, கர்ப்பூரம், 5-உருந்து விறை எணக்காய் எடுத்து, சேர்த்து குளிகைசெய்து, வேதனையுள்ளபல்மேல் வைத்தால் பல்வலி நீக்கும், உமிழ் நீரை துப்பி விடவேண்டியது.

சுக்கு, அபினி, தேய்த்து கரப்பெடுத்து, கன்னத்தின்மேல் பத்து போடலாம்.

கொட்டைப்பாக்குக்கரித்தூள்; காசுக்கட்டித்தூள்; கடுக்காய்த்தூள்; படிக்காரம், சிதானமாய் சேர்த்து, பற்துலக்கிக்கொண்டு வரலாம், அழுவிரணம் நீக்கும்.

உப்பு, மிளகு, நெய், சேர்த்துவைத்தால் பல்வலி நீக்கும்.

உப்பும், புளியும் கலந்து, தேய்த்தால், அறவிக்கம் நீக்கும்.

தத்ருரோகம்.

[illegible]

இதுவே.—சீதபித்தரோகம். [illegible]

பித்தக்கழும்பு. தடிப்பு. கொசுக்கடி. கன்று.

சுனைக்கழும்பு.

URTIGARIA—NETTLE RASH.

ரோகலக்ஷணம்.—இது சப்பரோகம். சர்மத்திலிருக்கிற இழைகள்சுருங்கி, நீர் சேர்ந்து தழும்புகள் பிறக்கின்றன. சரீரத்தின்மேல் ஒரிடத்திலாவது, பலவிடங்களிலாவது பிறக்கும். திடமென்று பிறந்து, திடமென்று மறைந்துவிடும். அல்லது அடிக்கடி கண்டு உபத்திரவப்படுத்தும். சிலரில் விடாமலிருப்பதுமுண்டு. தழும்புகள் சிவந்தாவது, வெளுத்தாவது இருக்கும்; அவைகளில், தனைச்சல், குத்தல் எரிச்சல், இருக்கும்; இவ்விதத்தழும்புகள் எழும்புதற்குக் காரணம் யாதெனில்—ஜீரணத்தொழில் கெடுதல்,—வெள்ளரிக்காய், காளான், துவலித, சரீரத்துக்கேற்காத சில பதார்த்தங்கள் புசித்தல்—சில ஔஷதங்கள் உண்ணுதல்—சிலவியாதிகள் காணுதல்—கீரை, முட்டை, தேள் கடிக்குதல்—காஞ்சொறி, கம்பளிப்பூச்சி முதலிய வைப்போலொற்ற சில வஸ்துக்களைத் தொடுதல், ஆகிய இவ்விதக் காரணங்களால் தழும்புகள் பிறந்து, அடங்காத தினவும், எரிச்சலும், குத்தலும் எடுக்கும்; சிலரில் சொறிந்தவிடம் தடித்துவிடும்.

சிகிச்சை.—வமனம், விரேசனம், பத்தியபோஜனம், இவைகளால் நீக்கும். நீங்காவிடில், தேஹ ஆரோக்கியம் பிறக்கும்படி ஔ

ஷதம் கொடுக்கவேண்டியது. ஸ்நானம் செய்வதிலும், எண்ணெய் இலைகள் தடவுதலிலும், தனைச்சல் அடங்கும். இதனடியில் கண்டவைகள் மேலுக்கு உபயோகிக்க உதவும்.

சந்தனம்.—வெண்ணெயோடு கலந்து பூசலாம்.

சாடி.—1-பங்கு; நீர் 4-பங்கு, கலந்து தடவலாம்.

உத்தாமணியிலைரசம்.

தனுர்வாதம்.

[illegible]

இதுவே.—தனுஸ்தம்பவாதம். [illegible]

விரணசந்தி.— [illegible]

TETANUS.

ரோகலக்ஷணம்.—மனதுக்கைக்கியமான சில பிரதான சதைகளுக்குக் காணுகிற இசிவு, அல்லது பிடிவு. இந்தரோகத்தில் சரீரம் வில்லைப்போல் வளைவதால், தனுர்வாதம் என்று பெயர் பெற்றது. சிரசு பின்புறமாய் வளைந்து, மார்பு உயர்ந்து இருப்பதற்கு, பாஹியாயாமவாதம் (பின்னிசிவு) (Opis thotonos) என்றுபேர்.—சிரசு முன்புறமாய் வளைந்திருப்பதற்கு, முன்னிசிவு (Empros thotonos) என்றுபேர்.—தேகம் பக்கவாட்டமாய் வளைந்திருப்பதற்கு, பக்க இசிவு, (Pleuros thotonos) என்றுபேர். கீழ்த்தாடை எலும்பின் சதைகளுக்கு இசிவுகண்டு வாய்கிட்டிக்கொண்டால், அனுஸ்தம்பவாதம் (Lock-jaw, Trismus) என்றுபேர். இந்தரோகம் சிசுக்களுக்குக் கண்டால், மாந்தவலி (Trismus noscentium) என்று சொல்லுவர்.

ரோகலக்ஷணங்கள்.—முதல் கீழ்த்தாடை, தொண்டை இவைகளின் சவ்வுகளுக்கு இசிவுகாணும்; நாக்கைவெளிப்படுத்தவும், எதையாவது விழுங்கவும் கஷ்டமாய் இருக்கும். வயிற்றுச்சதைகள் பிடிவாய் இறுகிக்கொண்டிருக்கும்; அதிக வியர்வைகாணும்; இசிவு விட்டுவிட்டுகாணும்.

சிகிச்சைக்கிரமம்.—இது கஷ்டசாத்தியரோகம். ரோகத்துக்கண்டிருக்கிற காரணத்தைத் தணிக்கவேண்டியது. போஷணை பதார்த்தங்கள், கொடுக்கவேண்டியது. இதனடியில் கண்டவைகள், இந்த வியாதிக்கு உபயோகிக்கத் தகுதியானவைகள்.

மாதுளை (அதுரா.)

சித்திரமூலம். (வேரின்தோல்) முதுகு முள்ளந்தண்டின்மேல் பூசி தேய்க்கலாம்.

தலைதிருப்பு.

[illegible]

இதுவே.—பித்தமயக்கம்.

VERTIGO ; GIDDINESS.

ரோகலக்ஷணம்.—மூளையில் வியாபிக்கிற ரத்தத்திலே விகற்ப மடைந்து இந்த வியாதி உண்டாகின்றது. வயதுசென்றவர்களுக்கு அடிக்கடி காணப்படுகின்றது. கஷ்டவியாதிக்குள் மெலிந்திருக்கிறவர்களுக்கு உதயகாலம் எழுந்திருக்கும்போது தலைதிருப்புகாணும். அப்பியாசமில்லாதவர்கள், புகையிலை, அபினி, அப்பியாசிப்பதினால், ரத்தத்திலே விஷம் சேர்ந்து, தலைதிருப்புகாணும். அஜீரணமாயிருந்தாலும், அல்லது குடலிலாவது இரிபேதம் கண்டிருப்பதினாலும்—[illegible] தொழில் வித்தியாசப் பட்டிருப்பதினாலும்— மூத்திர [illegible]காய், இருதயம், இவைகளின் வியாதியாலும் — அதிக [illegible]தினாலும்— [illegible] குழந்தைகளுக்கு [illegible] பால்கொடுத்ததினாலும்— பெரும்பாடு வியாதியாலும், தலைதிருப்பு காணப்படுவதுண்டு. இந்த வியாதியில் மயக்கம்போல் தலைதிருப்பி, கீழ்விழும்படியாய் இருக்கும்; அருகிலிருக்கிற வஸ்துக்களைப் பிடித்துக்கொண்டால், இரண்டொரு நிமிஷமிருந்து போய்விடும். இந்த மயக்கம் சிலருக்கு அதிகமாயும் சிலருக்கு அல்பமாயுங்காணும். அடிக்கடி பித்தமயக்கம் கண்டது கெட்டது; அதனால் புத்தியின் பெலன் க்ஷீணமடையும்; மந்தமாதுவும் கெட்டுவிடும்.

சிகிச்சைக்கிரமம்.—இந்த வியாதியை, சிலநாள், நீக்குவது கஷ்டம். அதிக ரத்தம் மூளையில் வியாபிக்கிற குறிகள் இருந்தால், அதைக்குறைக்க முயற்சி செய்யவேண்டியது. அதற்கு விரேசனம், இச்சாபத்தியம் உதவும். பாண்டுரோகக்குறிகள் அகப்பட்டால், அயம், மாம்ஸரசம், சாராயம், முதலியவைகள் கொடுக்கலாம். வயது சென்றவர்களுக்குக் காணுகிற பித்தமயக்கத்துக்கு, வீரம், வேப்பம்பட்டை கஷாயம், முதலியவைகள் கொடுக்கலாம்.

தாகரோகம்.

[illegible]

இதுவே.—எரிச்சல்—சரீர எரிச்சல்.

கைகால் எரிவு—தாஹவாதரோகம்.

BURNING OF THE BODY, OF PALMS AND OF SOLES.

ரோகலக்ஷணம்.—[illegible] என்றும் [illegible] த்து இந்த ரோகம் பிறக்கின்றது. இதில் [illegible], பாதங்கள் எரிந்தால், பாததாஹரோகம் என்றும்—கைகள் எரிந்தால் பாணிதாஹரோகம், அந்தர்தாஹ ரோகம் என்றும்—உடம்பெங்குமெரிந்தால், சர்வாங்கதாஹரோகம் என்றும் பேர். இதற்கு உபயோகிக்கத் தகுதியான ஔஷதங்கள் இதனடியில் காணலாம்.

அமுக்கராஇலை. (அரைத்து பாதங்களுக்குக் கட்டலாம்.)

கீழாநெல்லித்தைலம். (ஸ்நானம்.)

சந்தனாதித்தைலம். (ஸ்நானம்.)

[illegible]தைலம். (ஸ்நானம்.) கிருதம். (உள்ளுக்கு.)

சதாவேரிகிருதம். ([illegible])

திராக்ஷை ஷர்பத்து—மாதளம்பழம்.

[illegible] சூர்ணம்—வேப்பம்பட்டைகஷாயம்.

கணிச்சப்பருப்பு.

குங்கிலியதைலம்.—இந்திர[illegible]தைலம்.

தாபிதம்.

[illegible]

இதுவே.—தாபனம்—தாபம்—வீக்கம்.

INFLAMMATION.

ரோகலக்ஷணம்.—சரீரத்தில் வெவ்வேறு இடத்திலாவது வேதனை, உஷ்ணம், சிவப்பு, வீக்கம், இருந்தால் அதற்குத் தாபிதம் என்றுபேர். இதில் ஜுரமும் அனுசரித்திருக்கும். உள்ளேயிருக்கிற உறுப்புகளுக்குக் கண்டால், வேதனையும், ஜுரமுமாத்திரமிருக்கும்.

சிகிச்சைக்கிரமம்.—இதில் ரத்தக்கொதிப்பை அடக்கவேண்டி [illegible] விரேசன பிரகரணத்தில் செய்யியிருக்கிற சிகிச்சை; [illegible] வேண்டியது.

அமுக்கரா[illegible].—(அரைத்துக்கட்டலாம்.)

[illegible].—இதை நீரில் அரைத்து மெழுகாகப் போட[illegible].

த்ருஷ்ணாரோகம்.

త్రుష్ణారోగము.

இதுவே—நாவரட்சி, தாகம்.

THIRST.

ரோகலக்ஷணம்.—வாயும், தொண்டையும் உலர்ந்துவிடும். சுரம், மதுமூத்திரம், வாந்திபேதி, முதலியரோகங்களின் நின்மேல் அதிக இஷ்டமிருக்கும். வெயிற்காலத்தில் அதிகதாகமெடுக்கும்.

சிகிச்சைக்கிரமம்.—வாயில் நீர்சுரக்கும்படி, புளிப்பினங்களை நாக்கின்மேல் தடவிக்கொண்டுவரலாம். உஷ்ணகாரிகளையும், வாயிலிட்டு அடக்கலாம். சிதனகாரிகளை உள்ளுக்குக்கொடுக்கலாம். இதனடியில் கண்டவைகள் அழலையும், தாகத்தையும் நீக்கும்.

சித்திரிணிபானகம்.—(புளி)—இளநீர்—மாதுளம்பழம்—கரும்பு—மோர், (இரும்பைக்காய்ச்சிப்போட்டு முறித்துவிட்டது.)

தண்ணீர்.—இரும்பைக்காய்ச்சிப் போட்டு முறித்துவிட்டது.

அக்ராகாரம்.—கர்ப்பூரம், அதிமதுரம், இவைகளின் சக்தனமே—த்து கலந்து நாக்குமேல் தடவிக்கொண்டிருக்கலாம்.

நார்த்தன்பழம்.—எலுமிச்சம்பழம் பானகம். அருகாதிகிருதம். (அருகம்புல்.) நாளிகேரகிருதம். (தேங்காய்) வால்மிளகு. (வாயிலிட்டு அடக்கலாம்.)—

தும்மல்.

తుమ్ము.

SNEEZING.

ரோகலக்ஷணம்.—சிலருக்கு அதிக தும்மல்காணும்; அப்போது கண்களை மிமிட்டினால் நின்றுவிடும்.

துர்க்கந்தசுவேதம்.

దుర్గంధస్వేదము.

இதுவே—கற்றாழைநாத்தம். சுவேதபித்தம். ஸ்வேதகபித்தம்.

வியர்வையில் ஒருவித புளிப்பு உண்டாகி இதுவியாதி காணுகின்றது. இதற்கு அரக்குத்தைலம், ஸ்நானஞ்செய்து வைக்கலாம்;

மஞ்சளும், ஆவாரம்பூவும் சேர்த்து அரைத்து மேலெக்கும் தேய்த்து உடம்பு குளிக்கும்படி செய்யலாம்.

துர்ப்பலம்.

దౌర్బల్యము.

இதுவே—பலஹீனம்.

DEBILITY.

வியாதிகள் மூலமாய்ப் பிறக்கிற துர்ப்பலத்துக்கு, நல்ல ஊட்டம் கொடுக்கவேண்டியது; பத்தியம் வைக்கலாகாது; அநுகூலித்த ரோகிக்கு, இஷ்டமான பதார்த்தங்கள், உண்ணும்படி செய்யவேண்டியது; பலம் வரும்படியான மருந்துகள் கொடுக்கவேண்டியது. இதனடியில் கண்டவைகள் துர்ப்பல ரோகிகளுக்குக் கொடுக்கலாம் :—

நெய், பால், பாலேடு, வெண்ணெய், தயிர், மோர், முட்டை.

கோழிக்குஞ்சு ரசம். (காம்மசாலை சேர்த்தது)

ஆட்டுக்கால், ஆட்டெலும்புரசம். ஆட்டுத்தலைரசம், ஆட்டுமூளை,

ஒயின் சாராயம். பூர்ணாதி லேகியம். கோதுமைநொய் கஞ்சி, (திராக்ஷை, வாதுமைசேர்த்து செய்தது.)

பச்சைப்பயர் கஞ்சி. நெல்பொரிகஞ்சி. கொள்ளுக்கஞ்சி. கசகசா சேர்த்தகஞ்சி. சாலாமிசிரிகஞ்சி.

துர்ப்பல ரோகிகளுக்குக் கொடுக்கத் தகுதியான ஔஷதங்கள் இதனடியில் காணலாம் :—

நன்னாரிவேர்.—வேப்பம்பட்டை.

ஆரஞ்சுத்தோல்—மாவள்ளி.

சீந்தில்—மிளகரணை—சாமந்திப்பூ.

நிலவேம்பு—அகத்திப்பட்டை.

[illegible]க்குக்கொழுந்து—வெள்ளறுகு.

[illegible]விஷம்—திப்பிலி—இராவகம்.

பின்னெண்ணெய்—களிச்சப்பருப்பு.

அதிவிடையம்—அயச்செந்தூரம்.

அஸ்வகந்திசூர்ணம்—கதளிபலகிருதம்.

துவஜபங்கம்.

ధ్వజభంగము.

இதுவே—கபும்லகம்.

பேடு—காமத்துவஜ பங்கம்.

IMPOTENCY.

ரோகலக்ஷணம்.—ஸ்திரீ போகத்துக்கு உதவாமல் போகுதல். இந்த விபத்து அனேககாரணங்களால் பிறக்கின்றது. ஜனனேந்திரியங்கள் செவ்வையாய் ஏற்படாமல் பிறப்பதுண்டு. பிறவியிலிருந்தே அவைகள் துர்ப்பலமாய் இருப்பதினுலும்—அனேகவியாதிகள் கண்ட பிறகும்—தலை, முதுகு, இவைகளின்மேல் அடிபடுவதினுலும்—மதுமூத்திரம், மூத்திர குண்டிக்காய் வியாதி, ஒருவித அஜீர்ணம், இவைகளாலும், துவஜபங்கம் நேரிடும். சிலருக்கு மனோவிகல்பத்தினுல் இந்த விபத்து நேரிடுகின்றது; அதற்கு திருஷ்டாந்தம்:—முதல்முதல் ஸ்திரீயோடு கூடும்போது, ஒவ்வொருவருக்கு வெட்கத்தினுலும், ஒவ்வொருவருக்கு மூத்திரக்குழியைப் பார்த்து அசங்கியம் பிறப்பதினுலும், சிசினம் மலருகிறதில்லை. அதின்மேல் அவர்கள் தங்களுக்கு வீரியசக்தி யில்லையென்று வீண் எண்ணம் கொள்ளுகிறார்கள். சிலர் மேகவியாதி யிருக்குமென்று பயப்படுகிறார்கள். ஆகையால் இவ்வித காரணங்களால் பிறந்தால், மனதை உச்சாகப்படுத்தி, யுக்தியாய் சிகிச்சை செய்யவேண்டியது. சிறுவயதில் ஸ்திரீபோகம் அதிகமாய் விரும்பி, தேகத்தைக் கெடுத்துக்கொண்டவர்களுக்கும், முஷ்டிமைதுனம் செய்துக் கொள்ளுகிறவர்களுக்கும், இந்த விபத்து நேரிடுவதுண்டு. சிலருக்கு ஜனனேந்திரியங்கள் அத்தியுஷ்ணமடைந்திருக்கும்போது, ஸ்த்ரீயோடகம் வந்த உடனேயாவது, துணி சிசினத்தின்மேல் பட்ட உடனேயாவது, அது கொஞ்சம் மலரும், தக்ஷணமே இந்திரியம் தண்ணீராய் வடிந்துவிடும்; உடனே சிசினம் சுருங்கி மைதுனம் செய்வதற்கு அயோக்கியனுகிவிடுகிறான். சிலரில், பிரகிருதி வித்தியாசத்தினுல், சிசினம் யோனியில் பிரவேசித்த தக்ஷணமே, இந்திரியம் ஸ்கலிதமாகிவிடும். இவ்விதமிருக்கிற பிரகிருதியை மாற்றுவது கஷ்டம். மூத்திரத்தாரையிலாவது மூத்திரப்பையிலாவது, மூத்திரத்திலாவது, குதத்திலாவது கல்லிருந்தால், இந்திரியம் சீக்கிரம் விழுந்துவிடும்; மூத்திரத்தோடு கலந்து விழுவதுமுண்டு.

சிகிச்சைக்கிரமம்.—இந்த விபத்தைப் பிறப்பித்த காரணமறிந்து சிகிச்சை செய்யவேண்டியது. அனேகருக்கு மனமே காரணமாய் இருப்பதால், அதை உச்சாகப்படுத்துவதே முக்கிய சிகிச்சை. இதற்கு வீரியவிருத்திவேதியம், பலகாரி மருந்துகள் கொடுத்து ஸ்திரப்படுத்த வேண்டியது.

நரம்புச் சிலந்தி.

నారపుండు.

GUINEA WORM.

ரோகலக்ஷணம்.—சர்மத்துக் கடியிலிருக்கிற வலைசவ்வில் பிறக்கிற ஒருவித கிருமி, அது நரம்புபோல்வெளுத்து, உருண்டு, சிலவேளை நீளும். குடிக்கிறநீரில் இந்தக்கிருமியின் முட்டை யிருந்தால், அது உடம்பில் சென்று, கிருமி ரூபமெடுத்து, இந்தவியாதி பிறக்கிறதென்கிறார்கள்.

சிகிச்சை.—குளிர்ச்சியான ஜலம், போல்டீஸ் முதலியவைகள் உபயோகித்தால், கிருமி மெதுவாய் வெளிக்குவரும். உள்ளுக்குப் போகாமல் கட்டிவைக்க வேண்டியது. கொம்புவைத்து உருஞ்சியெடுப்பது சமுத்திரதேசத்தில் வழக்கமுண்டு. புளியிலையை வதக்கிக் கட்டுவதும், கள்ளிப்பட்டையை இடித்துக்கட்டுவதும் நாட்டுவழக்கம். இச்சிகிச்சை இதுவரையில் தள்ளிக்கொள்ளவில்லை.

யோகங்கியம்.—உள்ளுக்குக் கொடுத்துக்கொண்டு வந்தால், புழுவைக்கொன்று விடுகிறதென்று ஒருவர் சொல்லுகிறார்.

நாடிவித்திரதி.

నాడీవిద్రధి.

ANURISM.

நாடிவித்திரதி என்பது, நாடிப்புரைகள் விரித்து காணுகிற ஒருவிதக்கட்டி; அக்கட்டி நாடிநடைபோல் துடித்து அடித்துக் கொண்டிருக்கும். இது முக்கியமாய் பெருநாடியிலும், முழங்காலிலும் காணும். இவ்வித்தக்கட்டிகளை அறுக்கலாகாது. இங்கிலீஷ் வைத்திய சாஸ்திரத்தைப் பார்வையிடவும்.

நெம்பர். 11.

இந்தப்படம், கண்ணுக்குள்ளிருக்கிற புரைகளையும் தீர்களையும் காண்பிக்கின்றது.

SECTION OF THE EYE.



1. வெள்ளைச்சவ்வு. The sclerotic coat.
2. கத்திவ்மண்டலம். The cornea.
3. கோராயிட்என்னும் சவ்வு. The choroid.
6. இவ்ணமண்டலம். The iris.
7. கண்தாரை. The pupil.
8. ரூப உற்பத்திசவ்வு. The retina.

நேத்திரரோகங்கள்.

నేత్రరోగములు.

இதுவே.—அக்ஷிரோகம். అక్షిరోగము. கண்வியாதிகள்.

DISEASES OF THE EYE.

வர்த்தமரோகம்—கண்ணிமைக்குக் காணுகிற ரோகங்கள்.

கண்கட்டி.—(Sty) இதற்கு கருங்கல்லுமேல், குறிவேப்பிலை வைத்து சக்கால் இழைத்து, சந்தனமேடுத்துப் பூசவிட்டு விட்டு வழுக்கம்.

புழுக்கடி.—(இழிக்கண்-மயிர் உதிர்தல் புழுவெட்டு) (Ophthalmia Tars) இதற்குச் சேங்கொட்டைக்காய், துரிசு, சீனக்காரம்

இலைகளைச் சமனாய்ச்சேர்த்து, பொடித்து பசுவின் வெண்ணெயில் கலந்து, களிம்புசெய்து, இமைமேல் தடவிக்கொண்டுவந்தால்; இழிக்கண்மாறி உதிர்ந்தமயிர் முளையும்.

இளிச்சக்கண்.—(Ectropion.)
நேத்திரவாயு.—(Ptosis.)
கண்ணீர்வரகதி.
கண்ணீர்ப்பெருக்கம்.—(Epiphora.)

கண்சவ்வுக்குக் காணுகிற ரோகங்கள்.

OPHTHALMIA.

கண்ணோவு :—விழிமேல் மூடியிருக்கிற சவ்வுக்குக் காணுகிற தாபிதம். இதில் அனேக ஜாதிகளுண்டு. எனது பெரிய கிரந்தத்தை பார்வையிட்டால், தெரிந்துகொள்ளலாம்.

சிகிச்சைக்கிரமம்.—கண்ணைக் கழுவி சுத்திசெய்து, இருண்டவிடத்தில் ரோகியை வைக்கவேண்டியது. அடியில் கண்டிருக்கிற யோகங்களில் ஒன்றை உபயோகப்படுத்திக்கொண்டு வந்தால்ரோகம் சொஸ்தப்படும்.

கடுக்காயைப் பாலில் உரைத்து, அதில் கொஞ்சம் அபினியைச் சேர்த்து, கலந்து அந்தக்கந்தத்தை புறவளையமிட்டு (கண்ணைச்சுற்றி பத்துபோடுகிறது) அனல்காட்டவும். வேதனைத்தணியும், சிகப்பு மாறும்.

எலுமிச்சம்பழத்தை அறுத்து, ஒரு பாதியை எடுத்து விரையை நீக்கி, அதின்மேல் சீனக்காரப்பொடி, இரும்புதுப்பு, அல்லது அரப்பொடி, இவைகளைத்தூவி, ஒரு மெல்லிய துணியில் பொட்டணமாய்க்கட்டி, அனலில்காட்டிக்காட்டி, கண்ணைச்சுற்றி ஒற்றிடவும், இவ்விதம் தினத்துக்கு 3-4 முறை இவ்விதம் செய்யலாம். கண்ணுக்குள் ரசம் விழுகாது. இவ்விதம் செய்துகொண்டுவந்தால் சீக்கிரம் சிகப்பு மாறிவிடும்.

மண்வெட்டியைக்காய்ச்சி, அதின்மேல் படிக்காரம் வைத்தால் பொரிந்துபோகும். அதில் எலுமிச்சம்பழ ரசமாவது, புளியிலைரசமாவது விட்டு, மற்றொரு இரும்புக்கருவியால் தேய்த்து, மைபோல் செய்து, கண்ணில் விழாமல், புறவளையமிடவும், இவ்விதம் 4 - 5 நாள் செய்தால், வியாதி சொஸ்தப்படும்.

1-பலம் பன்னீர் அல்லது தண்ணீரில், 4 - உளுந்தெடை படிக்காரம் கலந்து, அதில் மெல்லிய துணியைநனைத்து கண்ணுமேல் போட்டு, துணிகாயாமல் நனைத்துக்கொண்டு வரவும்; கண்ணோய் நீங்கும்.

மாதுளங்கொழுந்து, நெல்லிக்கொழுந்து, புளியிலை, ஆவாரைக்கொழுந்து அல்லது பூ, போஸ்த்தக்காய், துத்தியிலை. இவைகளில்

ஒன்றை பாலிவிட்டுக்காய்ச்சி, அந்தப்பாலால் கண்ணை அடிக்கடி கழுவிக்கொண்டுவரலாம்.

பொன்னாங்காணியிலை.—இதை ஆய்ந்து வெண்ணெயில் வதக்கி சிதைத்து, ராத்திரியில் கண்மேல்வைத்துக் கட்டிக்கொண்டு படுத்துக்கொண்டால் கண்ணெரிவு நீங்கும்.

ஐம்பீரநவநீத அஞ்சனம்:-ஷதுநாரிகேளாஞ்சனம், இவைகளில் ஒன்றை கண்ணில் மையிட்டுக்கொண்டுவரலாம்.

பச்சைகர்ப்பூரம்.—இதைத் தேனில் கலந்து கண்ணிலிட்டுக்கொண்டு வந்தால், சிகப்புநீங்கும்.

முருங்கிலைக்கொழுந்து.—இதைக் கண்ணில் ஒற்றிடமிட்டுக்கொண்டு வருவது, விசேஷம்.

கற்றாழைச்சோறு.—இதை அலம்பிவிட்டு, இதில் படிக்காரப்பொடி தூவி, சன்ன துணியில் முடிந்து, கண்ணுக்கு ஒற்றிடமிட்டுக்கொண்டுவந்தால், சவுக்கியம் உண்டாகும்.

பால், நெய், நல்லெண்ணெய், இவைகளைச் சமனாய்ச் சேர்த்து, காய்ச்சி அதில், பொடித்த சீலையில் முடிந்த எள்ளைத் தோய்த்து நெற்றி, புருவம், கன்னம் இவ்விடங்களில் ஒற்றிடமிட்டால், வீக்கம் வாடிவிடும்.

அமரம் :—(Granular Conjunctiva.) இதற்கு திரிபலாஞ்சனத்தை, தேனில் உரைத்து கண்ணிலிட்டுக்கொண்டுவந்தால், தீரும். துரிசு.—இதைத் தேய்க்கலாம்.

கண்ணெரிச்சல்.—இதற்கு பிருங்கராசதையிலம், குமாரித் தையிலம், சகதேவித்தையிலம் ; இவைகளில் ஒன்றை ஸ்நானஞ் செய்துவைக்கலாம். பொன்னாங்காணிவேர், அதிமதுரம் ; இவைகளை முலைப்பால் விட்டு சிதைத்து, சன்ன துணியில் முடிந்து, முலைப்பாலில் ஊறவைத்து, தினம் 4-5, தடவை கண்ணில் பிழியலாம். சந்தனம், ஏலம், நெல்லி, முன்னி, மிளகு, பொன்னாங்காணி கழுவின கற்றாழைச்சோறு ; இவைகளைச் சமனாய்க்கூட்டி, வெண்ணெயிலரைத்து, உச்சிமேல் தளமிட்டு, உள்ளங்காலில் நீபறக்கத் தேய்த்து, மாலையில் ஸ்நானஞ் செய்துக்கொண்டு வரும்படி செய்யலாம்; உஷ்ணத்தால்பிறக்கிற கண்வியாதிகள், குணமாகும். மிளகு சீரகம் ; சிதானமாய் எடுத்து அரைத்து ஆழாக்கு பாலில் கலந்து கொதிக்கவைத்து தலைமேல் தேய்த்து, 20 - நிமிஷம் வரையிருந்து, ஸ்நானம் செய்துவைக்கலாம். இவ்விதம் செய்துக்கொண்டுவந்தால், கண்ணெரிச்சல் முதலிய வியாதிகள் நீங்கும்.

கர்ப்பூராஞ்சனம்.—இதைக்கண்ரெப்பைகள் மேல் தடவலாம்.

சுக்கிரப்படுவன்.

இதற்கு ஆவாரன் அரிசியை, கோழிமுட்டை வெள்ளைக்கருவிட்டு அரைத்து, கண்ணுக்குப் புறவளையமிட்டுவர குணமாகும். தேற்றான்விதை, களிப்பாக்கு ; சமனாய்ச்சேர்த்து, கோவைச்சாறு விட்டு அரைத்து, கொதிக்கவைத்து, கண்ணுக்குப் புறவளையமிட்டுவர நீங்கும். பொன்னாங்காணி, சிறுகீரை, மயிர்மாணிக்கம் ; இவைகளின் சமம் சமனாய்ச்சேர்த்து, தலையில் உலர உலரதேய்த்துக்கொண்டிருந்து மாலையில் ஸ்நானம் செய்துக்கொண்டுவரும்படி செய்தால் நீங்கும். கடுக்காய், காசுக்கட்டி உரைத்து கந்தமெடுத்து புறவளையமிடலாம்.

"கார்னியா" ஜவ்வின் ரோகங்கள்.

(DISEASES OF THE CORNEA.)

கண்பூ.—(Opacity of the cornea.)

குத்தம்.—(Staphyloma.)

லென்ஸ்.—(லிங்கம். லெஷ்ணமணி.) இதற்குக்காணுகிறரோகம்

லிங்கநாசம்.—(Cataract.)

விழிகண்குருடு.—(திமிரம்) [illegible] (Amaurosis.)

நக்தாந்தரோகம்,—இராக்குருடு. மாலைக்கண். (Night-blindness.)

பகந்திரவிரணம்.

భగంద్రవణము.

இதுவே,—பவுத்திரம்.

URINARY FISTULA.

ரோகலக்ஷணம்.—பெரினியம் என்னும் பக்கத்தில், புரைவிரணங்கண்டு, நீர் தாரையோடு சம்பந்தப்பட்டு இருப்பதற்கு, பகந்திரவிரணம், என்றுபேர். மூத்திரம் விடுக்கும்போது, அதின் வழியாய் மூத்திரம் துளித்துளியாய் வரும்.

சிகிச்சைக்கிரமம்.—முதல் மூத்திரதாரையை, புஜீ என்னும் வெங்குதிரியைவிட்டு, தாராளப்படுத்திக்கொண்டு, பிறகு காடிக்காரலத்தை புரையில் அடித்துக்கொண்டுவந்தால், விரணம் ஆறிவிடும்.

பலிதரோகம்.

పలితరోగము

இதுவே.—நரை ; வெள்ளைமயிர்.

GRAY HAIR.

சிகிச்சை.—இதற்கு பிருங்காமலகத்தைலம் ஸ்நானஞ்செய்து வைக்கலாம்.

கரிசலாங்கண்ணிரசம் ; திரிபலைகஷாயம் ; அல்லிக்கிழங்குகஷாயம் ; வகை 1-க்கு 1 - ஆழாக்கு ; நல்லெண்ணெய், 3 - ஆழாக்கு ; கிட்டப்பொடி, ½-ஆழாக்கு ; சேர்த்து, 7 - நாள் ஊறவைத்து, காய்ச்சி, வடித்து, ஸ்நானம் செய்துகொண்டுவரும்படி செய்யலாம். (ஆத்திரேயரிஷிமுறை.)

பாமாரோகம்.

పామారోగము.

இதுவே.—சிரங்கு-பேய்ச்சொறி.

SCABIES—ITCH.

கர்ஜூரோகத்தைப் பார்வையிடவும். இது சர்மரோகம். இதற்கு இதனடியில் கண்டிருக்கிறவைகளில், ஒன்றைப்பூசி, ஊறவைத்து ஸ்நானஞ்செய்து வைக்கலாம்.

கந்தகக்களிம்பு—சந்தனம்—தார்களிம்பு.
புங்கன்விதைநெய்—குப்பைமேனிரசம்.
தேவதாருசந்தனம்—கிரேட்டிமுத்து.
பூவரசு—வேப்பிலை.

சுண்ணாம்பு, சாம்பல், எண்ணெய். இவைகளை விதானமாய்க் கூட்டி, குழப்பி, பூசவது வீட்டுவழக்கம்.

பாரிவார்த்திகம்.

పారివార్తికము.

இதுவே.—நிருத்தமணி, నిరుద్ధమణి.

PHYMOSIS.

சிசினத்தின் தோலின் முகமானது சுருங்கி, லிங்கத்துக்குமேல் போகாமல், உபத்திரவப்படுத்துகிற ஸ்திதிக்கு, பாரிவார்த்திகம் என்றுபேர்.

அவபாதிகம்—అవపాటికము. (Paraphymosis) கோசத்தின் தோலானது மேலுக்கேறி சுருங்கி வீங்கி, இறக்கிறதகாமல் இருக்கிறஸ்திதிக்கு, அவபாதிகம் என்று பேர்.

இவைகளுக்குச் சிகிச்சை, இங்கிலீஷ் வைத்திய சங்கிரகத்தில் அறிந்துகொள்ளலாம்.

பாண்டுரோகம்.

పాండురోగము.

ANÆMIA.

ரத்தத்திலிருக்கிற சிவந்த அணுக்கள் குறைந்துவெளுத்து விடுவதற்கு, பாண்டு ரோகம் என்றுபேர்.

ரோகலக்ஷணம்.—இந்த ரோகத்தில் சர்வாங்கமும் வெளுத்திருக்கும்; சிலா மண், செங்கல்தூள், சாம்பல், கரி, இவ்வித பதார்த்தங்கள்மேல் விருப்பங்கொண்டு உண்ணுவார்கள் ; அதற்கு "மிர்த்திகாபக்ஷபாண்டு" என்றுபேர்.

சிகிச்சைக்கிரமம்.—ரத்த அணுக்களைச் சிவப்பித்து அதிகப்படுத்துகிற பதார்த்தங்கள் கொடுக்கவேண்டியது ; அதற்கு அயமே சிறந்தது. நல்லபோஜன ஊட்டம் கொடுத்து காற்றுள்ளவிடத்தில் ரோகியை வைக்கவேண்டியது. இதனடியில் கண்டிருக்கிறமருந்துகளில் ஒன்று விதிப்படி, பாண்டுரோகத்துக்குக் கொடுத்துக்கொண்டுவந்தால் சவுக்கியமும் உண்டாகும் :—

அன்னபேதி-மண்டூரவடகம், அயசெந்தூரம், காந்தசெந்தூரம்—தசிசாஸ்லேகியம்.

பாதபேதரோகம்.

పాదస్ఫోటరోగము.

இதுவே—கால்வெடிப்பு—பாதவெடிப்பு.
விபாதிகா குஷ்டரோகம்.

இந்த உபத்திரவம், பிரக்ருதி வித்தியாசத்தினால் பிறக்கிறது. குதிக்கால்கள் வெடித்து, நடக்கக்கூடாமையாய்போகுவது வழக்கம். பாதங்கள்வெடித்து உபத்திரவம் தருவதுமுண்டு.

சிகிச்சைக்கிரமம்.—வெடித்திருக்கிற காயத்தில் மணல் இல்லாமல் கழுவி சுத்திசெய்து, உதடுகள் சேர்ந்திருக்கும்படி செய்யவேண்டியது. அதற்கு, இதனடியில் கண்டிருக்கிற பால்வகைகளில் ஒன்று பூசினால், வெடிப்புசேர்ந்து விரணம் ஆறிவிடும்.

ஆலம்பால்—அரசன்பால், ஒளுன்கொடியின் பால், ஆட்டு முதுகெலும்புக் குள்ளிருக்கிற நரம்பு.

பித்தாதிகரோகம்.

ఉన్మాదరోగము.

இதுவே.—பித்தமயக்கம்—பித்தகோபம்.

பித்தரோகம், பைத்தியரோகம், பித்தவாயு,

தலைதிருப்பு, தலைசுற்றல்.

GIDDINESS—VERTIGO.

ரோகலக்ஷணம்.—இதில் திடீரென்று தேகம் சுழல்வதுபோலவாவது, விழுவதுபோலாவது இருக்கும். தன்னைச்சூழ்ந்திருக்கிற பொருள்கள் அசைவதுபோல் தோற்றும். இரண்டொருவினாடி வரையில் எதையாவது பிடித்துக்கொண்டு, விழாமல் தப்பித்துக் கொள்ளுவான் பிறகு உடனே உட்காரமனம் பிறக்கும். இதில் அனேகாதிகளுண்டு சிலருக்கு, கண்களை மூடிக்கொண்டால் மயக்கம் போய்விடும், மயக்கம் போனபிறகு தலைவலிகாண்பது வழக்கம். இந்தவியாதி சிகிச்சைக் குட்படுவது பிரயாசை. தாப்பவம், இருதயரோகம், மூளைவியாதி, ரக்தாதிகம், ரக்தக்ஷீணம், ஆகிய இவ்விதஇன்னம் அனேக காரணங்களால் இந்தரோகம்பிறக்கிறது.

சிகிச்சைக்கிரமம்.—பலம்குறைக்கிற ஔஷதங்கள் கொடுக்கலாகாது; தார்ட்டியகாரி ஔஷதங்கள் கொடுத்தால் நல்லது. இதனடியில் கண்டிருக்கிற ஔஷதங்களில் ஒன்றுகொடுக்க உதவும்:

நவக்ஷாரம்—அயமருந்துகள்.

மீன்எண்ணெய்—மாம்சபோஜனம்.

திராக்ஷாசம்—பாலேடு.

சவ்விரம். இதை வயதுசென்றவர்களுக்குக் காணுகிற பித்தமயக்கத்துக்கு, பார்க்குபவுடர் கஷாயத்தோடு சேர்த்துக் கொடுக்கலாம்.

இதனடியில் கண்டிருக்கிற தைலங்கள், பித்தமயக்கத்துக்கு அப்பியங்கஸ்நானம் செய்துவைக்க உதவும்:

கீழாநெல்லித்தைலம்—ராந்தனுதித்தைலம்.

முக்கூட்டுநெய்—தாருவாதிதைலம்.

ஜீர்ணஉறுப்புகள் விகல்பமடைந்து காணுகிற பித்தாதிக ரோகத்துக்கு, இதனடியில் கண்டவைகளை உபயோகித்தால், சௌக்கியம் பிறக்கும்.

சீரகாதிலேகியம்—ஆமலகிருதம்.

நாளிகேரகிருதம்—அந்திக்களறு.

சர்க்கராதிகிருதம்—இக்ஷூரசாதிகிருதம்.

அரிதகிகிருதம்—சம்பீராதிகிருதம்—இளநீர்.

சீயக்காய்க்கொழுந்து—நெல்லிவற்றல்—நெல்லிவிளா—விளாம்பழம்—புளியாரை—புளி—புளியம்பூ—இவைகளின் துவையல், $\frac{1}{4}$—ஆழாக்குபாலில், வெந்நீரில் ஊறவைத்த நெல்லிவிளா 1-துலாம்; சீரகம் $\frac{1}{4}$—துலாம்; அரைத்து கலந்து, தலைமேல்தேய்த்து கொஞ்சம் நேரம் ஊறவைத்து, ஸ்நானம்செய்யச் சொல்லலாம். பித்தமயக்கம் தீரும்.

பன்னீரில் தோல்நீக்கிய எள்ளை அரைத்து கலந்து, தலையிலிட்டு ஊறினபிறகு ஸ்நானம்செய்யச் சொல்லலாம். பித்தமயக்கம் தீரும்.

சீரகம், சுக்கு. இவைகளின்தூள் சமனுய்ச்சேர்த்து, அதில் திரிகடிபிரமாணம் சருக்கரைகலந்து கொடுத்தால், அஜீர்ணபித்தாதிகம் நீக்குமே.

பிரசவவலி.

PUERPERAL CONVULSIONS.

ரோகலக்ஷணம்.—கர்ப்பிணிகளுக்கும், பிரசவவேதனையிலிருக்கிற ஸ்திரீகளுக்கும், காணுகிறவலி. வலிகண்டிருக்கும்போது பிரக்ஞை இராது. வலி நின்றபிறகு மயக்கம் இருக்கும். இந்த உபத்திரவம் மூத்திரகுண்டிக்காய் வியாதியால், ரக்தம் கெட்டுக்காணுகிறது. மூத்திரத்தில் அல்புமென் (Albumen.) என்கிறவஸ்து அதிகமாய் இருக்கும். வலி ஒருதடவையோடு நிற்காது; அடிக்கடி கண்டுகொண்டே இருக்கும்.

சிகிச்சை.—குளோரொபாரம் (Chloroform) ஆக்கிராணம்கொடுக்கலாம்; குளோராலேகியம் உபயோகிக்கலாம்; பெருங்காயம் சேர்த்த ஆனைவஸ்திதி செய்யலாம்; ப்ரோமைட்ஆவ் பொட்டாஸியம் (Bromide of Potassium) என்கிற உப்பு அதிகமாய் கொடுக்கலாம். பிரசவவேதனையிலிருக்கிற ஸ்திரீகளுக்கு வலிகண்டால் சீக்கிரம் பிரசவம் ஆகும்படி பிரயத்தனம் செய்யவேண்டியது. இது இன்னும் வைத்திய சந்திரகத்தில் அதிகமாய் அறியலாம்.

பிரசுப்திரோகம்.

ప్రసుప్తిరోగము.

இதுவே.—மேகப்புடை—திமிர்வாதம்—திமிர்ப்புடை.

NUMBNESS.

ரோகலக்ஷணங்கள்.—இதில் சர்மநரம்புகளின் உணர்ச்சி கெட்டு இருக்கும்.

சிகிச்சை.—இது குணமாகுவது கஷ்டசாத்தியம். விஷமுட்டித் தைலம் மேலுக்குப் பூசலாம். பாஷாணம், லவணம், இவைகளில் ஒன்று உள்ளுக்குக் கொடுக்கலாம்.

நெம்பர் 12.

மூத்திரப்பை, சிசினம், மூத்திரத்துவாரம், இவைகளைக் காண்பிக்கிற படம்.

THE BLADDER, PENIS, AND URETHRA.



1. 2. மூத்திரப்பை, The Bladder ; 3. மூத்திரகுண்டிக்காயி லிருந்துவருகிற குழல்வந்து சேருகிறவிடம், opening of the right ureter ; 5. 6. 12. 19. மூத்திரதாரை, The urethra ; 9. இந்திரிய கமலங்கள், The vesicula seminalis ; 17. லிங்கமலர், The glans penis.

பிரமேகம்.

ప్రమేహము.

இதுவே.—வெள்ளை—பிரமேயம்—பிரமியம்.
மேககாங்கை—வெட்டை—நீர்ப்பிரமேகம்
மேகக்குடி.

GONORRHŒA.

ரோகலக்ஷணம்.—ரோகஸ்திரீயைப் புணர்ந்து, மூத்திரதுவா ரத்தில் விரணமாகி, அதிலிருந்து வெளுத்த சீழ்வடிகிறரோகத்திற்கு தப்பிரமேகம் என்றுபேர். சாளம்வீக்கி மூத்திரம்தங்கும்போது ரத்,

எரிச்சல்முதலிய உபத்திரவம் கொடுக்கிறரோகத்துக்கு "மூத்திரதாரை வீக்க ரோகம்" (Inflammation of the urethra) என்றுபேர். ரத் தம்போல் சீழ்வடிந்தால், ரத்தமேகம் என்றுபேர்.

சிகிச்சைக்கிரமம்.—மூத்திரதுவாரத்தி லிருக்கிற வெப்பகுணத்தை நீக்கவேண்டியது—நீர்த்துவாரத்தில் சென்று அதிலிருக்கிற விரணத்தை ஆற்றும்படியான குணமிருக்கிற மருந்துகள் கொடுக்க வேண்டியது. துவர்ப்புகுணமுடைய நீர்களை நீர்த்தாரையி லடித்து, விரணத்தை ஆற்றவேண்டியது. இதர உபத்திரவங்கள் பிறந்தால், அவைகள்நீக்க சிகிச்சைசெய்ய வேண்டியது. இதனடியில் கண்டிருக்கிற ஔஷதங்களில் ஒன்று இந்த வியாதிக்குக் கொடுக்க உதவும்; ஒருவனுக்குக் குணப்படுத்திய மருந்து, மற்றொருவனுக்குக் குணப் படுத்துமென்று உறுதியாய்சொல்ல இடமில்லை.

பதனன்ஸெனப்—சந்தனத்தைலம்.
பி [illegible] குத்தூன்—வால்மிளகுத்தூள்.
[illegible] ன்ஸோமிளகுத்தூள்—மன்னத்தைலம்.
குக்கிலவஷிதம்—பனஞ்சாறு.
வெடியுப்பு—கல்மதம் வெள்ளறுகு.
கர்ப்பூரசிலாசித்து—சிலாசசம்.
அப்பிரகஸிந்தூரம்—மஸ்த்தகி சூர்ணம்.
குங்கிலியத்தைலம்—தாருவாதிகிருதம்.
ஒரிலைத்தாமரை—புத்திரஜீவி விரை.
அம்மாம்பச்சரிசி—மதுர்மேகரசாயனம்.
வாகேசுத்திரபோளம்.

வால்மிளகு, 1 ; கல்கார், 1 ; சீரகம், 3 ; கொத்துமல்லி, 3 ; சுத்தண்ணெய், 8, இவைகளின் தூள்களை நெடி பங்குக் கணக்காய் சேர்த்து, அதில் 1-2, விராகனெடை இளநீரில் கலந்து, தினம் 2-3-4—தடவை கொடுத்துக் கொண்டுவந்தால் பிரமேகம் வசப்படும்.

கன்றுரி, 1 ; வால்மிளகு, 4; பறங்கிச்சக்கை, 2 ; கொத்துமல்லி 2. இவைகளின் தூள்களை நெடி பங்கு கணக்காய் சேர்த்து, அதில், 1—2 ; விராகனெடை தேனில்கலந்து, தினம் 3—4 தடவை கொடுத் துக்கொண்டு வந்தால் பிரமேகம் வசப்படும்.

வெந்நீயம், இதை அரைத்து 1-விராகனெடை தூக்கம், வெண் ணெயில் கலந்து தினம் 3-4, தடவை கொடுக்கலாம்.

சீழாநெல்லி.—இதை அரைத்து, ½ பலம் தூக்கம், வெண்ணெ யில் கலந்து கொடுக்கலாம்.

மூத்திரச்சருக்கு நீங்க, இதனடியில் கண்டிருக்கிற மருந்துகளில் ஒன்றை கஷாயமிட்டுக் கொடுக்கலாம் :—

நிலைப்பனைக்கிழங்கு—ஆளிவிரை.
கார்த்திகைக்கிழங்கு—சப்பாத்திப்பூ.
தண்ணீர்விட்டாங்கிழங்கு—ஆளிவிரை.
யானைநெருஞ்சி—செருப்படை.
பேதாறு—தந்திவேர். இளநீர்.

பிலீகசோபாரோகம்.

ప్లీహస్ఫోటరోగము.

இதுவே.—காசுக்கட்டி—சுரக்கட்டி.

பிலிகோதரம். ప్లీహోదరము.

ENLARGEMENT OF THE SPLEEN.

ரோகலக்ஷணம்.—சுரம் கண்டவர்களுக்கு, பிலீகம் பெருத்துப் போகுவது வழக்கம். வயிற்று இடதுபக்கம் விலா எலும்புகளுக்குக் கீழ்ப்புறம் தொட்டுப்பார்த்தால், கட்டியாய்க் காணப்படும். நோவிராது.

சிகிச்சை.—சுரத்தின்மேல் கண்டால், பேதிமருந்துகள், குவைனு, பார்க்கு, இவைகள் கொடுக்கவேண்டியது. ரசமருந்துகள் கொடுக்கலாகாது. இதரகாரணங்களால் கண்டால், குருத்துவபோஜனம் கொடுக்கவேண்டியது. சந்தோஷ காலக்ஷேபத்தில் வைக்கவேண்டியது. உஷ்ணபூமியில் வாசம் செய்யுமீபடி முயற்சிதேடவேண்டியது. இதனடியில் கண்டிருக்கிற ஔஷதங்கள், இந்தரோகத்துக்குக் கொடுகத் தகுதியானவைகள் :—

அயச்செந்தூரம்—அன்னபேதி.
புரொமைட் ஆவ்பொட்டாஸியம்—(Bromide of Potassium.)
நவக்ஷாரம்—கறுப்புப்பு—காசிலாக்காணி.
பஞ்சலவணச் சுண்ணம்—வட்டத்திருப்பி.
காசலவணம்—கலிங்காதிலேகியம்.
பெருகங்கிழங்கு.—யவக்ஷாரக்குழம்பு.

பீஜவாயு.

బీజవాయు.

இதுவே.—பீஜவாதம்—அண்டவாதம்.

அண்டவாயுத்தைப் பார்வையிடவும்.

பீநசரோகம்.

పీనసరోగము.

இதுவே.—நாசிகாரோகம்.

DISEASES OF THE NOSE.

ரோகலக்ஷணம்.—மூக்கில் காணுகிற ரோகங்கள் பலவிதம்; அவைகளாவன :—

ரக்தபீனசம்—மூக்கிலிருந்து ரக்தம் ஒழுகுதல். Bleeding from the nose.
ஜலதோஷம்.—இந்தப் பிரகரணத்தைப் பார்வையிடவும்.
அதிதும்மல்.—(புரிசட்சவ பீனசம்.) Sneezing.
நாஸார்சரோகம்.—Polypus of the nose.
நாசிகாஸ்ராவரோகம்.—மூக்கிலிருந்து தண்ணீர் அதிகமாய் வடிதல்.

கிராணபீநசம்.—மூக்குக்குள் விரணமாகிவிடுதல்.
பூதிநாசிகாரோகம்.—துர்க்கந்தவாசனை உண்டாகுதல்.

சிகிச்சை.—சக்கோசனகாரி மருந்துகள் நசியமிடலாம். தைலங்களைக்கொண்டு நசியமும், ஸ்நானமும் செய்துவைக்கலாம். இதனடியில் கண்டிருக்கிறவைகள் பீனசரோகங்களுக்கு எடுத்தவைகள்.

பீனசங்கிருதம்.—தாளிபத்திரத்தூள்.
பாலைத்திப்பிலித்தூள்—தாருவாதிதைலம்.
நாய்ப்பிராணிப்பூ—சீரகம்—இஞ்சித்தைலம்.
சேராங்கு—திப்பிலி—பச்சைகர்ப்பூரம்—மஞ்சள்.
வேப்பம்பட்டைத்தைலம்.
நாசிரோகநாசத்தைலம்.—பீநசதைலம்.

புச்சாவர்த்தவாதரோகம்.

పుచ్ఛావర్తవాతరోగము.

இதுவே,—அங்குஷ்டவாதரோகம்.

GOUT.

ரோகலக்ஷணம்.—கை, கால் பெருவிரல்களின் மூட்டுகளில் காணுகிற ஒருவித வாதரோகம். ரக்தங்கெட்டு இந்த வியாதி பிறக்கின்றது. இதில் சுரமிருக்கும்; ஜீர்ண உறுப்புகள் தொழில் கெட்டிருக்கும். இங்கிலீஷ்வைத்திய சங்கிரகத்தில் விவரமாய்க்காணலாம்.

பூதோன்மாதரோகம்.

భూతోన్మాదరోగము

இதுவே—பிசாசு—பித்தோன்மாதம்.

DEVIL MADNESS—HISTERICS.

ரோகலக்ஷணம்.—இது பிரசவசக்தி ரோகத்தில் ஒருபேதம். அன்னியபாஷை தெரியாதவர்கள் அதைப்பேசுவதும், தெரியாதகாரியங்களைத் தெரிந்தது போல் சொல்லுவதும் ஒரு அபூர்வகுணம். இதனால் பிசாசு உண்டென்று நமது ஜனங்கள் நம்புகிறார்கள். குதசக்தி பிரகரணத்தில் பார்வையிடவும்.

மசரோகம்.

మసరోగము.

இதுவே—மரு—பாலுண்ணி.

WART.

ரோகலக்ஷணம்.—சர்மத்திலிருக்கிற பாபில்லி (Papillæ) என்பவைகள் பெருத்து ஒன்றோடொன்று சேர்ந்து கட்டிக்கொண்டு மருக்கள் பிறக்கின்றன.

சிகிச்சை.—காரம்வைத்து இவைகளைக்கரைத்து விடவேண்டியது. குதிரைவால் மயிரால், இதின் வேரை இறுக்கக் கட்டிவைத்தால், ரக்த ஓட்டம் நின்று, மருவிழுந்து விடும்.

மதுமூத்திரரோகம்.

మధుమూత్రరోగము.

இதுவே—மதுமேஹரோகம்—நீரிழிவு—சோமரோகம்—பஹுமூத்திரரோகம் — மூத்திர அதிசாரரோகம்—அதிமூத்திரரோகம்.

DIABETES—SWEET URINE—GLUCOHÆMIA.

ரோகலக்ஷணம்.—இது ஒருவித தொந்தரோகம். அதிக மூத்திரம் இறங்கும்; அதில் திராக்ஷசர்க்கரையைப்போல் ஒருஜாதி சர்க்கரை இருக்கும். இந்தச்சர்க்கரை, புசிக்கிற பதார்த்தங்களிலிருக்கிற சருக்கரை, மாவு இவைகள் பசிர்த்துக்குபோய் அவ்விடத்தில், ஒரு

179

ஜாதியான சர்க்கரை யுண்டாகுமென்று எண்ணம். சவுஜதேகத்தில் இவ்விதமாய் உண்டாகிற சர்க்கரையானது, ரக்தமார்க்கமாய் சுவாசாசயத்தில் சென்று தகனமாய் ஆய்விடுகின்றது. வியாதியால் இந்தச்சர்க்கரை அதிகமானால், சுவாசாசயத்துக்கு, எல்லாவற்றையும், தகிக்க, வல்லமையிராது; ஆகையால் தகிக்கப்பட்டது போக, மற்றது மூத்திரமார்க்கமாய் வெளிப்பட்டு விடுகின்றது. ஆகையால் பசிர்த்துக்கும் புப்புசத்துக்கும் இருக்கிற பரஸ்பர சம்மந்தம் கெட்டு இந்தரோகமாகிறது. ஜூரம், அஜீரணம், பக்குவாசம், இவைகளின் வியாதியாலும், மதுமூத்திரரோகம் பிறக்கும்,

சிகிச்சை.—மாவு, சர்க்கரையுள்ள பதார்த்தங்களைத் தள்ளிவிட்டு சர்வபோஜனம் செய்யும்படி ரோகியை திட்டப்படுத்தவேண்டியது. பழவினங்கள், அரிசி, மாவுபண்டங்கள் அரோருட், சேகோ, மிட்டாய்கள், உருளைக்கிழங்கு, தவதானியங்கள், முதலியவைகள் உண்ணலாகாது. கோதுமைத் தவிட்டுரொட்டி நல்லது; வடி கடுத்தபால் உதவும். மருந்துகளில் அபினியே சிரேஷ்டமானது; அதைத் தினம் 8-15, உளுந்துவிதை அளவு, பாகித்துக் கொடுக்கலாம். வெந்நீர்ஸ்நானம் செய்துவைக்கலாம்; தாகமடங்க சோடா உப்புஜலம் கொடுக்கலாம். கர்ப்பூரசிலாசித்தும் நல்லது. மீன் எண்ணெய்கொடுக்கலாம். இப்படியிருக்க, தற்கால இங்கிலீஷ்வைத்தியர் ஒருவர் இந்தவியாதிக்கு சர்க்கரை, மாவுபண்டங்கள், இவைகளை அவசியமாய் கொடுக்க வேண்டியது, கொடுக்காவிடில், மதுமூத்திரரோகிகளுக்கு அசவுக்கியம் நேரிடும் என்கிறார்.

சிலருக்கு மூத்திரத்திலிருக்கிற நீர்மாத்திரம். அதிகமாய்ச் சுரந்து இறங்கும்; அதில் சர்க்கரையிராது; அதிகதாகமிருக்கும். மதுமூத்திரரோகத்துக்கும், இதற்கும் சம்மந்தமில்லை. குடிக்கிறநீரைப் பார்க்கிலும், இறங்குகிற நீர் அதிகம். இதைத்தான் அதிமூத்திரம்—பஹுமூத்திரம்—மூத்திர அதிசாரம்—நீரிழிவு என்று சொல்லவேண்டியது.

சிகிச்சை.—நீர் மிதமாய்க் குடிக்கச்செய்யவேண்டியது. அடியிற்கண்ட மருந்துகளில் ஒன்று கொடுக்கலாம்:—

கர்ப்பூரசிலாசித்து—(Ammonia Iron-alum.)

அபினி.—இதைராத்திரியில் கொடுத்துக்கொண்டு வரலாம்.

சீந்தில் சர்க்கரை—அப்பிரகசிந்தூரம்.

ஆகாசகருடன்கிழங்குச் சூர்ணம்.

அத்திப்பால்—தேத்தாங்கொட்டை லேகியம்.

ஆவாரன் பூகிருதம்—அபினிலேகியம்.

ஆவாரன்பட்டை, பாதிரிப்பட்டை, கடலழிஞ்சிப்பட்டை, சீந்திற்கிழங்கு, போஸ்த்தக்காய், கட்டுக்கொடி, கடுக்காய்ப்பிஞ்சு, வகைக்கு பலம்—½; சாதிக்காய், பேரீச்சன், குரோசாணியோமம், வகை

1-க்கு விராகனிடை, $\frac{1}{4}$; தண்ணீர்படி, $\frac{3}{4}$. இவைகளை 4-ல் ஒருபங்காய் சுண்டவைத்து, $\frac{1}{4}$-ஆழாக்கு வீதம், தினம் 3-வேளை கொடுத்துக்கொண்டு வந்தால், சௌக்கியம் பிறக்கும்.

மலபந்தரோகம்.

మలబంధరోగము.

இதுவே—மலவாதரோகம், మలావరోధరోగము.

மல ஆவிருதவாதம்—விளம்பிகாரோகம்.

CONSTIPATION.

ரோகலக்ஷணம்.—தேகப் பிரகிருதிக்குத் தக்கபடி மலம் இறங்குவது வழக்கம். சிலருக்கு, தினம் ஒரு தடவையாகவும், சிலருக்கு இரண்டு தடவையாகவும் இறங்கும்; சிலருக்கு சாப்பிட்ட பிறகு இறங்கும்; சிலருக்கு இரண்டு மூன்று தினத்துக்கொருதரம் இறங்குவதுமுண்டு. மலபந்தத்துக்குக் காரணம் அனேகம்; முக்கியமானது எதுவெனில், பெருங்குடல் மந்தப்பட்டு, பிசைகிறசக்தி குறைந்து அதில் மலம்சேர்ந்துகொள்ளும், மலபந்தத்தின்மேல் அனேகரோகங்கள் பிறக்கும்.

சிகிச்சை.—மலபந்தப் பிரகிருதி யுடையவர்கள் அடிக்கடி உஷ்ணவிரேசனமருந்துகள் சாப்பிடலாகாது. அடியில் கண்டிருக்கிற மருந்துகளில் ஒன்று படுத்துக்கொள்ளும்போது சாப்பிட்டால், காலையில் மலம் தாராளமாய் இறங்கும்.

திருபலைசூர்ணம்.—அரிதகிலேகியம்.
அரிதகிகிருதம்.—பாவன அரிதகி.
வில்வப்பழம்.—சரக்கொன்றைப் புளித்துவையல்.
குல்கந்து, நிலாவிரைத்துவையல்.
மூஷாம்பரம்.

இதனடியில் கண்டிருக்கிறவைகள் கொடுத்தால் பேதியாகும்.

சிவதைவேர்ச்சூரணம். (அவிபத்திலேகியம்.)
நேர்வாளம்—சிற்றாமணக்கெண்ணெய்.
காக்கட்டான்விரைத்தூள்—மக்கி.
நிலாவிரையுப்பாதி கஷாயம்.
கலிங்காதிகுடித்தைலம்—கறுவுப்பு.
ரேவல்சின்னி—மேறு.
சாரணைவேர்.
விரேசனபிளகு.

180

மசூரகரம்.

మసూరజ్వరము.

இதுவே—மசூரிகாரோகம்—அம்மைச்சுரம்.

ERUPTIVE FEVERS.

இதில் பலசாதிகளுண்டு; அவைகளாவன—ரக்தமசூரிகை—பெரியம்மை—சின்னம்மை—பனை ஏரி—நட்டம்மை—பயரம்மை—[illegible] இவைகளாம். இவைகளின் விவரமும், சிகிச்சையும் இக்கிலீஷ்வைத்திய சங்கிரகத்தில் காணலாம்.

மாந்தரோகம்.

మాంద్యరోగము.

ரோகலக்ஷணம்.—சிசுக்களுக்குக் காணுகிற அஜீர்ணம். இதில் பலவிதமாய் பேதியாகும்; சுரமும் அனுசரித்திருக்கும். இதற்கு நம வைத்திய கிரந்தங்களில் பலவியர்களிட்டிருக்கின்றன. அவைகள் எவையெனில், செரியாமாந்தம்—பீர்மாந்தம்—சுரமாந்தம்—விஷமாந்தம்—குழிமாந்தம்—கணமாந்தம்—சொருகுமாந்தம்—ஊதுமாந்தம்—நீர்மாந்தம்—சிக்கிமாந்தம்—வலிமாந்தம், என, இன்னம் அனேகவித பெயர்களுண்டு. மாந்தத்திறகு இசிவு காண்பதுமுண்டு.

சிகிச்சை.—அஜீர்ணம் நீங்கும்படி ஔஷதங்களிட்டு கொடுக்க வேண்டியது. இதனடியில் கண்டவைகள்—இந்த வியாதிக்குக் கொடுக்க உதவும்:—

கந்தசாரக்கோரை—நுறையீரல்க்கு.
கரிசிலாங்காணி—துளசி—அருதா.
மாந்ததைலம்—வாதநாசத்தைலம்.
காடிசாரம்—கோரோசனைக்குளிகை.
கடுகுரோகிணி—இபாக்கினிசூர்ணம்.

முகசந்நி.

ముఖసన్ని.

FACIAL NEURALGIA.

[illegible]ரோகப் பிரகரணத்தைப் பார்க்கவிடவும். இதற்கு அயம்—[illegible]ம்—பாஷாணம், இவைகள் கொடுக்க உதவும்.

முகதூஷிகாரோகம்.

ముఖదూషికారోగము.

இதுவே—முகப்பரு.

ACNE.

சர்மத்திலிருக்கிற ஸிபேஷியஸ் பாலிகில்ஸ் (Sebaceous folli-
cles.) என்பது வீக்கங்கொண்டு உடைவதற்குப்பேர். யவ்வனவயசு வந்
தவர்களுக்கு, முகத்தில்காணுகிறபரு. நெற்றி, கன்னம், மூக்கு,
இவ்விடங்களில் காணும். நான்பட இருந்து போராகும். அஜீர்ணம்
கண்டிக்கும்படி மருந்துகொடுக்க வேண்டியது, புனுகு—அகத்தி
ரசம்—சப்ஜாரசம், இவைகளை மேலுக்குத் தடவலாம்.

முகரோகம்.

ముఖరోగము.

இதுவே—வாயில்காணுகிற ரோகங்கள்.

DISEASES OF THE MOUTH.

வாயில்காணுகிற ரோகங்கள் பலவிதம்; அவைகள் எவையெனில்:

ஆஸியபாகம்.—(வாய்விரணம்) இதற்குப் பொன்னுக்காணி இ[...]
தம் உபயோகிக்கலாம்.

வாய்நாற்றம்.—இதற்கு வசம்பு, கருவேலன்பட்டை, உப்[...]
கிக்கலாம்.

தொண்டைவிரணம், நாவிரணம், காக்குவெடிப்பு (அக்ஷரம்.)

வாயில்காணுகிற இவைமுதலிய ரோகங்களுக்கு. இதனடியி[...]
கண்டிருக்கிற துவர்ப்பு ஔஷதங்கள் உபயோகிக்க உதவும்:—

படிக்காரநீர்—வசம்புகஷாயம்.

ஆவாரன்பட்டைகஷாயம்—வெங்காரமது.

வாலேந்திரபோளம்—மொகடம்பட்டைகஷாயம்.

தேங்காய்ப்பால்—நாவினிப்பட்டைகஷாயம்.

கருவேலன் பட்டைகஷாயம்.

ஒதியன்பட்டைகஷாயம்—மாதுளம்பழத்தோல்கஷா[...]

அத்திப்பட்டைகஷாயம்.

மூகரோகம்.

మూకరోగము.

இதுவே—ஊமை—மூகை.

DUMB.

நெம்பர். 13.

இத்தப்படம் புருஷர்களின் இடைக்குழியிலிருக்கிற
உறுப்புகளைக் காண்பிக்கின்றது.

A SIDE VIEW OF THE VISCERA OF THE MALE PELVIS.



2. திரிகஸ்தான எலும்பு. The Sacrum.
3-4. மூத்திரப்பை. The Bladder.
6. மூத்திரகுண்டிக்காயின் குழல். The Ureter.
13-14. மூத்திரநாளம். The Urethra.
19. இந்திரியகமலம். The Vesicula Seminalis.
16-18 21. குதம். The Rectum.
20. இந்திரியகமலக்குழல். The Vas Deferens.

மூத்திரதாஹரோகம்.

మూత్రదాహరోగము.

இதுவே—மூத்திரக்கரிப்பு—மூத்திர எரிச்சல்—நீர்ச்சுருக்கு—நீர்க்கடுப்பு.

STRANGUARY.

ரோகலக்ஷணம்.—மூத்திரத்தில் உப்புகள் அதிகமாகி, ஜலம் குறைவதினாலும், மூத்திரானம் புண்போல விருப்பதினாலும் இந்த ரோகம்பிறக்கும். இதில் மூத்திரம் அடிக்கடி பிறக்கும். சகிக்கக் கூடாத வேதனை, எரிச்சல் இருக்கும்; வெகு கஷ்டம் உண்டாகும். மூத்திரப்பையில் மூத்திரம் நிறைந்திருப்பதுபோல் தோன்றும்.

சிகிச்சை.—இந்த வியாதிக்கு, குழகுழப்பான ஜலம் அதிகமாய் கொடுக்க வேண்டியது. வயிற்றுமேல் வெந்நீர் ஒற்றிடவேண்டியது; அபினிமருந்து ஆசனத்திலிட்டால், செளக்கியமுண்டு. இதனடியில் கண்டிருக்கிறவைகளில் ஒன்று, இந்த வியாதிக்குக் கொடுக்கத் தகுதியானவைகள்;—

கஞ்சித்தண்ணீரில்.—பொட்டியுப்பு சேர்த்துக் கொடுக்கலாம்.
ஆளிவிரை கஷாயம்.—ஆளிவிரை கஷாயம்.
சப்ஜாவிதை கஷாயம்.—நெருஞ்சில் கஷாயம்.
வேலம்பிசின்.—[illegible]
சப்பாத்திப்பூகஷாயம்.—சிறுகீரைவேர் கஷாயம்.
சிறுபீளை—சிற்றுமட்டிக்ஷாயம்.
அபிர் தசஞ்சிவிசூர்ணம்.—இளநீர்.
நாரிகேளகிருதம்.—பனைத்தக்காளி வற்றல் நீர்.
வாழைக்கிழங்குநீர்.—ஆகாசதாமரை.
வெண்டைக்காய்கஷாயம்.—யானை நெருஞ்சில் விதை.
நன்னாரிவேர்கஷாயம்.—என்ரு இலை கஷாயம்.
நீர்ப்பிரமி;—பேதாளு கஷாயம், வில்வபனைக்கிழங்கு.
கர்ப்பூரம்.—குரோசாணியோமம்.
நீர்பேதிகஷாயம்.—அதிமதுர கஷாயம்.
ஆருவாதிகிருதம்;—கல்நார்; பாவன பஞ்சாங்குலத்தைலம்.
சதாவேரிகிருதம்;—பசலைக்கீரை; வெள்ளரிவிரை.
முள்ளாங்கி;—கல்மதம்; வெர்நியம்.
தாமரைப்பூ ஷர்பத்து.

மூத்திர கிரிச்சிர ரோகம்.

మూత్రకృచ్ఛ్రరోగము.

இவைகளே.—நீர்க்கட்டு; நீர் அடைப்பு.

மூத்திர சங்கலாத வஸ்திரோகம்.

RETENTION OF URINE.

ரோகலக்ஷணம்.—மூத்திரப்பையிலிருக்கிற நீர் வெளிப்படாமல், அடைப்பட்டிருக்கிற ரோகத்துக்கு, மூத்திர கிரிச்சிரமென்று பேர். மூத்திரமானது அத்தமாய் சுரக்காமல், கிலரில் போகுவதுமுன்டு. நீர் அடைப்பு இரண்டுவிதமாய்க் காணும்; ஒன்று நீர்த்தாரை சவ்வு சுருங்கிவிடுவதினாலும், மற்றொன்று நீர்த்தாரையில் துர்மாமிசம் வளர்ந்து, நீர்வருகிற வழியை அடைத்துக்கொள்வதினாலும், பிறக்கும்.

சிகிச்சை.—நீர்த்தாரை அடைப்பு நீக்கும்படி வெந்நீர் ஒற்றிடம் கொடுக்கவேண்டியது. அதற்கும் நீங்காவிடில், சலாக்கு, நீர்த்தாரையில்விட்டு, மூத்திரத்தை வெளிப்படுத்தவேண்டியது. வைத்திய சாஸ்திரத்தில் விவரமாய் தெரிந்துகொள்ளலாம்.

மூர்ச்சா ரோகம்.

మూర్ఛారోగము.

இதுவே.—மூர்ச்சை—கனா—மோஹம்.

FAINTING.

[illegible] மூர்ச்சையானது அனேக ரோகங்கள்மேல் காணுகிறது. மூர்ச்சை [illegible] ரோகியை நல்ல காற்றுள்ள விடத்தில், மல்லாக்காய் படுக்க[illegible] வேண்டியது; ஆடையாபரணங்களைத் தளர்த்திவிடவேண்டியது; மூர்ச்சை நேரப்படவிருந்தால், நவக்ஷாரபுகையை ஆக்கிராணிக்[illegible] செய்யலாம்; சாராயத்தில் தண்ணீர்விட்டு கலந்து கொடுக்கலாம். [illegible] தண்ணில் கலிக்கமிடுவது நாட்டுவழக்கம், அதுகெட்டது. நல்ல [illegible] டம்கொடுத்து தேகபலம் வரும்படி செய்யவேண்டியது.

மேஹ ரோகங்கள்.

మేహరోగములు.

மூத்திரத்திலும், மூத்திரக்குண்டிக்காயிலும், மூத்திரப்பையிலும், மூத்திரதாரையில் காணுகிற வியாதிகளுக்கு, மேஹரோகம் என்று ஒரு பொதுப்பெயர்; மேலும் சர்மத்தில் காணுகிற சிலரோகங்களுக்கும், மேகப்புடை என்று சொல்லுகிறார்கள். இந்த வகுப்பிலடங்கிய வியாதிகள் எவையெனில்,—

மூத்திரரோகங்கள்.—இதற்கு சாம்பிராணிபதங்கம் கொடுக்கலாம்.

மூத்திரக்ஷயரோகம்.—இதுவே மூத்திரக்குறைவு. Scanty Urine.

மூத்திராகாதரோகம்.—మూత్రాఘాతము. அமூத்திரம். Suppression of Urine.

அதிமூத்திரரோகம்.

மதுமூத்திரரோகம்.—இதுவே மதுமேஹம். நீரிழிவு. Diabetes Mellitus.—(இதைப் பார்வையிடவும்.)

மூத்திரசுக்கிலவஸ்திரோகம்.—இதுவே மூத்திரகிரிச்சிரம்.

மூத்திராஸ்மரிரோகம்.—மூத்திரகிரிச்சிரம்.

மூத்திரபித்துவாதவஸ்திரோகம்.—இதுவே சொட்டுமூத்திரம். Stricture of the Urethra, or Enlargement of the Prostrate Gland.

மூத்திராசயவாதரோகம்.—இதுவே மூத்திரப்பை தாபிதம். Inflammation of the Bladder.

ரக்தமேஹரோகம்.—மூத்திரத்தில் கல்தாவு, கலக்காமலாவது ரக்தம் வெளிப்படுவதற்குப்பேர். இதில் அநேகவிடங்களிலிருந்து ரக்தம் வெளிப்படுகிறது. சிகிச்சை இதற்கு தேன் காய்ப்பால்—மாசக்காய்—கொடுக்கலாம்.

மூத்திரகோசதாகரோகம்.—மூத்திரப்பையில் எரிச்சல். Irritability of the Bladder.

அஷ்டிலாவஸ்தம்.—Spasm of the Bladder.

பிரமேகம்.—(இதைப் பார்வையிடவும்.)

மேககாங்கை.—மேகச்சூடு, மேகச்சூலை, அனலிவெட்டை.

மேகப்புடை.—(உதம்சரோகத்தைப் பார்வையிடவும்.)

மேஹவித்திரதி.

మేహావిద్రధి.

இதுவே—மேகக்கட்டி—ஆமைமேயாட்டுக்கட்டி.

ராஜவிரணம்—ராஜபிளவை—பக்கப்பிளவை.

CARBUNCLE.

ரோகலக்ஷணம்.—இது ஒருவித பெரிய ஜாதி வித்திரதி; சர்மத்துக்குக் கீழிருக்கிற வலைபோலொற்ற சவ்வுக்குக்காணுகிற தாபித ரோகம்; பாவுகிறகுணமுண்டு; அதிக வேதனை இருக்கும். இந்த வியாதி மது மூத்திரரோகிகளுக்குக் காண்பது வழக்கம். துர்ப்பலமே இதற்குக் காரணம்.

183

சிகிச்சை.—இதில் சீழ் வெளிக்குவராமல் உள்ளடங்கியிருக்கும்; ஆகையால் சத்திரயல்கிறி அதை வெளிப்படுத்துவதே முக்கிய சிகிச்சை; பிறகு போல்டீஸ் கட்டிக்கொண்டுவரவேண்டியது. இங்கிலீஷ் வைத்திய சங்கிரகத்தைப் பார்வையிட்டால், ஸஸ்திரம் செய்கிற விதமறியலாம்.

மேதோரோகம்.

இதுவே.—மேதாவிருத்தி—ஸ்தூலரோகம்.

GENERAL FATNESS.

சரீரத்திலிருக்கிற கொழுப்பு அதிகரித்து இந்த வியாதி காணுகிறது. ஒருவித பிரகுருதியுள்ளவர்களுக்கே காணும்.

யகுருதுதரம்.

యకృదుదరము.

இதுவே.—யகுர்தரோகம்—பக்கச்சூலை.

DISEASES OF THE LIVER.

வலது பக்கம் மேல் வயிற்றிலிருக்கிற கல்லீரலுக்கு "யகுர்த்" என்றுபேர். இதற்குக் காணுகிற வியாதிகள் அநேகம். இதின் தொழில் என்னவெனில் கெட்டு கருத்திருக்கிற ரக்தம் மேலுக்கேறி, யகுர்த்வழியாய் போகும்போது அந்த ரக்தத்திலிருக்கிற தோஷத்தை யகுர்த் பிரகித்துக்கொள்ளுகிறது. இதுதான் பித்தநீர். இந்தநீர் ஜீர்ணமான அன்னபானாதிகளோடு சேர்ந்து, ரசம் வேறு, மலம் வேறு படுத்துகிறது; மலத்துக்கு நிறமும் கொடுக்கிறது. பித்தநீர் யகுர்த்தின் தொழிலில்லாவிட்டால், மலம் வெளுத்திருக்கும். தானே சின்னவிட்டுதில் கல்லடைத்து, பித்தநீர் ரக்தத்தில் தானே கலந்துவிட்டால், அப்போது உடம்பெல்லாம் மஞ்சள் நிறம் ஆகிவிடும், அதற்கு காமாலை ரோகம் என்றுபேர். இங்கிலீஷ் வைத்திய சங்கிரகத்தைப் பார்வையிடவும்.

யூகரோகம்.

యూకరోగము.

இதுவே—பேன்.

LICE.

வியர்வையும் அழுக்கும் இருந்தால், பேன் உற்பத்தியாகுமென்று [illegible]—காட்டு சீரகத்தை பழரசம் விட்டு, அரைத்துப்பூசினால் பேன் சாகும். ரசக்களிம்பு பூசலாம். ரசத்தோடு மஞ்சள் சேர்த்து, வெற்றிலை ரசம்விட்டு அரைத்து, கயிற்றுக்குப்பூசி தலையில் வைத்துக்கொண்டால் பேன் சாகும்.

யோனிரோகம்.

యోనిరోగము.

DISEASES OF THE VAGINA.

யோனியில் காணுகிற ரோகங்கள் அனந்தம்; பிரமேகம், அஸ்த்திரிராவம், உபதம்சரோகம், நமைச்சல் முதலியவைகளாம். சிகிச்சை.—இவைகளுக்கு துவர்ப்பு கஷாயங்களை, யோனியில் வஸ்த்தி செய்தால், சௌக்கியமுண்டாகும்.

ரக்த்தகாசரோகம்.

రక్తకాసరోగము.

SPITTING OF BLOOD.

புப்புஸத்திலிருந்தாவது, சுவாசக்குழலிலிருந்தாவது, ரக்த்தம் வருகிறதற்கு, ரக்த்தகாசமென்றுபேர் க்ஷயரோகத்தில் இது முதல் குறி. சிகிச்சைக்கிரமம்.—துவர்ப்பு மருந்துகள் கொடுத்தால் ரக்த்தம் நிற்கும். அதற்குப் படிக்காரம், கர்ப்பூரசிலாஜித்து, நவச்சாரம், இவை முதலியவைகள் கொடுக்க உதவும்.

ரக்த்தகுன்மரோகம்.

రక్తగుల్మరోగము.

UTERINE TUMOUR.

கர்ப்பாசயத்துக்குக் காணுகிறவியாதி. அதுபெருத்து அடிவயிற்றில் கல்லுபோல் காணப்படும்.

ரக்த்த சிரஸ்தாபரோகம்.

రక్తశిరస్తాపరోగము.

இதுவே.—உஷ்ணசந்நி; அசதிசந்நி.
உபஜிதரோகம்;

APOPLEXY.

மூளையில் அதிக ரக்த்தம் சேர்ந்து இந்தரோகம் பிறக்கிறது. இதில் காணுகிற குறிகளும், சிகிச்சையும், இங்கிலீஷ் வைத்திய சங்கிரகத்தில் அறிந்துக்கொள்ளலாம்.

ரக்த்தசோபை.

రక్తశోఫ.

CONGESTION.

சரீரத்தில் ரக்த்தம் கட்டிக்கொண்டு காணுகிற வீக்கத்துக்கு, ரக்த்தசோபை என்றுபேர். சிகிச்சை.—இதற்கு ரக்த்த போளத்தை பழரசம் விட்டரைத்து, பத்துபோடலாம்.

ரக்த்தபித்தரோகங்கள்.

రక్తపిత్తరోగము.

இதுவே.—ரக்த்தப்பெருக்கு—ரக்த்த ஒழுக்கு.
ரக்த்தம் வடிதல்.

BLEEDING-HÆMORRHAGE.

சரீரத்தில் பலவிடங்களில் காணுகிற ரக்த்த ஒழுக்குக்கு, ரக்த்த பித்தரோகமென்று ஒரு பொதுப்பெயர். சரீரத்தில் ரக்த்தம் அதிகமானால், ரக்த்தநாளங்களின் சுவ்வு பெலவீனமடைந்து இருந்தால், ரக்த்தம் வெளிக்குவந்துவிடும். ஸ்த்தானத்துக்குத் தக்கபடி இந்தரோகம்பேர்.

ஆமாசயத்திலிருந்து ரக்த்தம்வந்தால், ரக்த்தவமனம் என்றுபேர். (Vomiting of Blood.)

புப்புசத்திலிருந்து ரக்த்தம்வந்தால், ரக்த்தகாசம் என்றுபேர். (Spitting of Blood.)

மூத்திரத்தோடு ரக்த்தம் கலந்திருந்தால், ரக்த்த மூத்திரம் என்றுபேர். (Bloody Urine.)

மூலத்திலிருந்துவந்தால், ரக்த்தமூலம் என்றுபேர். (Bleeding Piles.)

சிறுகுடலிலிருந்து கண்டால், ரக்த்த விரேசனம் என்று பேர். (Melena).

மூக்கிலிருந்துகண்டால், ரக்த்தபீனசம் என்று பேர். (Bleeding from the Nose).

இப்படியிருக்க, ரக்த்தாசயத்திலிருந்தாவது, பீலிகாசயத்திலிருந்தாவது, யகிர்த்தாசயத்திலிருந்தாவது, ரக்த்தம்பிறக்குமென்று, தமதுவைத்திய கிரந்தங்களில் கண்டிருக்கிறது; அந்த அபிப்பிராயம் நூலாசிரியர்களுக்கே தெரியும். கண்ணு, காது, மூக்கு, வாய், மயிர்க்கால், மூத்திரத்துவாரம், மலத்துவாரம் என்னும் இந்த 7-வாசல்வழியாக ரக்த்தம்வெளிப்படுமென்று கண்டிருப்பதில், கண்ணு, காது, மயிர்க்கால், இம்மூன்று வழியாய் வருவது சாதாரணமன்று.

வாயிலிருந்து வருவதற்கு, ரக்த்தாசியம் என்று பேர்.

கருப்பையிலிருந்து ரக்த்தம்வந்தால், பெரும்பாடு, ரக்த்தசிராவம், என்று பேர். (அஸ்த்தி சிராவத்தைப்பார்வையிடவும்.)

சிகிச்சை.—குளிர்ச்சி, துவர்ப்பு குணங்களுடைய மருந்துகள் உபயோகிக்கவேண்டியது. அடியில் கண்டிருக்கிறவைகள் இந்த ரோகங்களுக்கு உபயோகிக்கலாம்.

தென்னம்பூ-படிக்காரம்-மாசிக்காய்.
நாவல்பட்டை-மூங்கில்அரிசி-பொட்டிலுப்பு.
தூருவாதிகிருதம்-வாசாதிகிருதம்-தண்ணீர்.
துரிசு-அத்திப்பட்டை-மாம்பருப்பு.

ரக்த்தமத ரோகம்.

రక్తమదరోగము.

PLETHORA.

ரக்த்த அணுக்களும், ரக்த்தமும், அதிகமாகி இருக்கிற ஸ்திதிக்கு பெயர்.

ராஜிகாரோகம்.

రాజికారోగము.

இதுவே—வேர்க்குரு.

PRICKLY HEAT.

சிகிச்சை.—சந்தனம்—இளநீர், இவைகளை மேலுக்குபயோகிக்கலாம்.

ரோமக்ஷயரோகம்.

రోమక్షయరోగము.

BALDNESS.

இந்திரலுப்தத்தைப் பார்வையிடவும்.

லாஞ்சனரோகம்.

లాంఛనరోగము.

MOLE.

இதுவே—மச்சங்கள்—வியங்கம். వ్యంగం.

லிங்க கவச சித்திரரோகம்.

లింగకవచచిద్రరోగము.

சிசினத்தின் தோல் கிழிந்து புண்ணாகி விடுகிறரோகம். இது சீர ஸ்திதிகெட்டுப்போகிறது. சிகிச்சைக்குச் சீக்கிரம் வசப்படாது.

வம்க்ஷண ஸ்த்தான வித்திரதி.

వంక్షణస్థానవిద్రధి.

இதுவே—அரையாப்புக்கட்டி.

[illegible]

BUBO.

ரோகலக்ஷணம்;—ரோக ஸ்திரீயைப் புணர்ந்து அதின்காரணமாய் அரையில் காணுகிறகட்டி. விரணம், காயம், முதலியவைகளாலும் காணப்படுமென்றே; இதற்கு நெறிக்கட்டியென்று பேர். தொடைக்குக் மேலிருக்கிற கிரந்திகள் வீங்கிப்பெருத்துகொண்டு பழுத்து உடைவதே. உபதம்சரோகத்தின்மேல் காணுகிறகட்டி. தொடைச்சந்துகளிலும் நெறிகட்டி காணும்; இது பழுத்துடைவது அபூர்வம்.

சிகிச்சை.—ஆரம்பத்தில், கட்டி கரையும்படி முயற்சி செய்யவேண்டியது; பழுத்துவிட்டால், கத்தியால் கீறி சீழை வெளிப்படுத்தி களிம்புகள்போட்டு, ஆற்றவேண்டியது.

சுண்ணாம்பு தடவி, உலர்ந்த பிறகு செங்கொட்டையை விளக்கில் காட்டி, தைலமெடுத்து, அதின்மேல் பூசவும். உலர்ந்தபிறகு, அது பிரித்துக்கொள்ளும்.

ரசக்கிம்பை கட்டியின்மேல்தடவி ஒட்டுயில்லையாவது, சப்பி ல்லையாவதுவைத்து கச்சையால் இழுத்துக் கட்டிவைக்கவும்; கரை ந்துவிடும்.

சவுக்காரம், குன்றிமணி பருப்பு, தாளித்துவைத்த நாகண்ணாம்பு மைசாக்ஷி குங்கிலியம், வகை 1-க்கு ¼-சேர்; சேராங்கொட்டை, 3-க லந்து எருக்கம்பால்விட்டு, 2-நாள் அரைத்து, உருண்டைகள் செய் துவைத்துக்கொண்டு, தேவையானபோது தண்ணீரில் தேய்த்து கட் டிமேல்தடவி அனல்காட்டவும், பிதிர்ந்துகொள்ளும்.

சித்திரமூலவேரை எலுமிச்சம்பழரசம் விட்டு உரைத்து, கந்த மெடுத்து பூசிறுவும்சரி, அல்லது பச்சை சித்திரமூலவேர்ப்பட்டை யைச் சாதத்துடன் அரைத்து துணிமேல்தடவி, கட்டிமேல்வைத்துக் கட்டி ½-மணிநேரம் வைத்திருந்து பிறகு எடுத்துவிட்டாலும், சரி புண்ணாகிவிடும். பிறகு வாழையிலை வைத்துக் கட்டிக்கொண்டு வந் தால் விரணம் ஆறி கட்டிகரையும்.

ஆரம்பத்தில் மேகாரி எண்ணெய்கொடுத்து பத்தியம் வைத்தால் கட்டிகரையும்.

சீழ்க்கொண்ட குறிகள் கண்டால், வித்திரதிக்குச் செய்கிற சிகி ச்சை செய்யவேண்டியது.

வாதரோகங்கள்.

వాతరోగములు.

இதுவே.—வாயுரோகங்கள்—வாதக்குடைச்சல்.

மஹாவாதரோகங்கள்.

NERVOUS DISEASES—PALSY AND NEURALGIA.

ரோகலக்ஷணம்:—ஸ்பரிச நரம்புகளுக்குக் காணுகிற வியாதி களுக்கு, வாதரோகமென்று ஒரு பொதுப்பெயர், வியாதியுண்டான விடத்துக்குத் தக்கபடி, பெயரிட்டிருக்கிறது; அவைகள் இதனடி யில் காணலாம்.

அர்த்திவாதம்.—(முகவாதம்) అర్దితవాతము-అర్ధముఖవాతము. (Palsy of the Face) மூளையிலிருந்து முகத்துக்கு வருகிற நரம்பு என் கிற ஓர் நரம்புக்குக் காணுகிற வியாதி.

ரோகலக்ஷணங்கள்.—கண்ணிமையமூட பிரயாசையாயிருக் கும்; கன்னம்தளர்ந்து தொங்கும்; வாயின்மூலை இழுக்கிறதாயிரு க்கும்.

சிகிச்சை.—ரசமருந்துகள், விரேசனகாரிகள், கொடுத்து ரோ கத்தை வசப்படுத்தவேண்டியது. வாதரோகபேதங்களாவன.—

கடிக்ரஹவர்த்தவாதம்.—(இடுப்புவலி.) (Lumbago).
க்ருத்திரசிவாதம். గృధ్రసివాతము. (Sciatica).
கோட்டியவாதம் ஊருஸ்தம்பவாதம். ఊరుస్తంభవాతము.
ஆலியவாதம்.
பங்குவாதம். (முடம்.)
நாபிகாருவாதரோகம் (குடைவாதம்) தொப்புளிடத்தில்நோவு
தண்டகவாதம். దండకవాతము. General Palsy.
புருவாக்ஷேபகவாதம். ప్రవాక్షేపకవాతము. (புருவத்துடிப்பு.)
அவபாகவாதம். అవబాహుకవాతము. (தொற்றிநோவு.)
அர்த்தாங்கவாதம். (பக்ஷவாதம்.) Hemiplegia.
மந்யாஸ்தம்பவாதம்.
அஷ்டீலவாதரோகம். అష్ఠీలవాతరోగము.
ஆமிருதவாதம். అమృతవాతరోగము.
உதாவர்த்தவாதரோகம். கால்கள் விழுந்துபோகுதல். Paraplegia, Atrophy of Legs, Retention of Discharges.
அஷ்டிலாவாதம். అష్ఠీలావాతరోగము, Spasm of the Bladder.
அனுஸ்தம்பவாதரோகம். అనుస్తంభవాతరోగము. தாடை கெட்டி—வாய்கிட்டிக்கொள்ளல். Lock Jaw.
கம்பசலனவாதரோகம்.—Shaking Palsy.
அபதந்திரவாதம்.—Convulsions.
அபஸ்மாரரோகம். Epilepsy.
அஸ்திஆவிருதவாதம். Node.
ஆந்திரபிருத்வாதரோகம். ఆంత్రవృద్ధివాతరోగము. Flatulency.
ஆந்திரவிருத்திரோகம். (அண்டவாதம்.) Hernia.
ஆமவாதரோகம். Rheumatism.
இருதவாதம். (மார் அடைப்பு.) Breast Pain.
சூரியாவர்த்தவாதம். Sun Pain.
தனுர்வாதம். (விரணசன்னி.) Tetanus.
புச்சாவர்த்தவாதம். Gout.

சிகிச்சை.—வாதரோகங்களுக்கு, மேலுக்குப் பூச்சுதைலங்களி ட்டு, பத்துகள்போட்டு, ஒற்றிடமிட்டு, உள்ளுக்கு பாலிருத்திகளும் வேதனையைத் தணிக்கும்படியான ஔஷதங்களும், தேகப்பிரகிருதி யை மாற்றும்படியான ஔஷதங்களும் கொடுத்து, சிகிச்சைசெய்ய வேண்டியது.

மேலுக்குப்பூச தகுதியான தைலங்களும் பற்றுகளும்.

நாபித்தைலம்—அபினித்தைலம்—[illegible]தைலம்.

வாதசஞ்சீவித்தைலம்—மண்ணெண்ணைதைலம்.

விஷமுட்டித்தைலம்—வாதநாராயணத்தைலம். கர்ப்பூரத்தைலம். அர்க்கக்ஷீரத்தைலம். ஊமத்தைத்தைலம். விஷ்ணுகிராந்திவேர்த்தைலம்.

ஆகாசவிஷத்தைலம்—குறுந்தொட்டித்தைலம்.

தூதுவளைத்தைலம்—[illegible]சஞ்சீவம்புதைலம்.

புங்கன்நெய்—புன்னை எண்ணெய்.

சித்திரமூலவேர்த்தைலம்—மயிர்மாணிக்கம்.

சேராங்கொட்டை. வெள்ளருக்கு—பூனைத்திப்பிலி.

நேரட்டிமுத்து—சேர்வாளம்—வெட்டிவேர்.

அக்கரகாரம்—மஞ்சள்—மிளகு — அத்திப்பால் தடவி மண்ணுவுதல்—வசம்பு. முருங்கைவேர்—தில்லைப்பால்.

உள்ளுக்குக்கொடுக்கத் தகுதியான மருந்துகள்.

கர்ப்பூரம்—கஞ்சா—அபினி—நன்னாரி.

ரசம்—சவ்வீரம்—கந்தகம்—பாஷாணம்.

அயச்செந்தூரம்—எட்டிக்கொட்டை.

விஷமூங்கில்—அப்பளக்காரம்.

நாகராதிலேகியம்—வேப்பங்கள்ளு.

கருப்புப்பு—மயிர்மாணிக்கம்—பல்லாதகிலேகியம்.

முடக்கறுத்தான்—முக்குரட்டைவேர்.

வல்லாரைத்தைலம்.

ஸ்நானஞ் செய்யத் தகுதியான தைலங்கள்.

நீர்குண்டிதைலம்.

அர்த்தாங்கவாதரோகம்.

అర్ధాంగవాతరోగము.

இதுவே—ஏகாங்கவாதம். ఏకాంగవాతము.

பாரிசவாதம்—பக்ஷகாதவாதம் పక్షాఘాతవాతము.

பக்ஷவாதம்-పక్షవాతము. பக்கவாதம்.

HEMIPLEGIA.

ரோகலக்ஷணம்.—மூளைக்கு வியாதி கண்டு இந்தரோகம் பிறக்கிறது. வலது பக்கத்து மூளைக்கு வியாதிகண்டால், இடதுகாலும் கையும் விழுந்து விடும். இடதுபக்கத்து மூளைக்கு வியாதிகண்டால், வலதுகாலும் கையும் சக்தியில்லாமல் போகும். முள்ளந்தண்டுக்கொடியில் ஒருபக்கம் வியாதிகண்டு இந்தப்பிணி காண்பதுமுண்டு. அப்போது முகம் விகாரமடையாமல், வியாதிகண்டபக்கத்துக் காலும் கையும் அசைவற்றுப்போகும். ஆகையால் இந்த வியாதியில், மூளையைச்சார்ந்தது ஒன்று, முள்ளந்தண்டுக்கொடியைச் சார்ந்தது ஒன்று ஆகிய இரண்டு [illegible]உண்டு.

சிகிச்சைக்கிரமம்.—ரோகியை சுகஸ்திதியில் வைக்கவேண்டியது. பேதிக்குக் கொடுக்கவேண்டியது. எட்டிக்கொட்டை யோகங்களில் ஒன்றை உபயோகிக்கவேண்டியது.

விஸர்ப்பிரோகம்.

విసర్పిరోగము.

இதுவே.—அக்கி—அக்கினிசரப்பான்.

ERYSIPELAS.

ரோகலக்ஷணம்.—இது சர்மரோகம். ரோகம் கண்டவிடம் சிவந்து வீங்கி இருக்கும்; எரிச்சலெடுக்கும்; பரவும்; சுவரம் அநுசரித்திருக்கும்.

சிகிச்சைக்கிரமம்.—எரிச்சல் தணியும்படி ஜிலேபனமிட வேண்டியது; சரீரபெலன் குறையாமலிருக்க நல்ல ஊட்டங்கொடுக்கவேண்டியது. சீழ்க்கொண்டுவிட்டால், கத்தியால்கீறி அதை வெளிப்படுத்தி விடவேண்டியது.

போஸ்துக்காய்கஷாயம்.—வேப்பிலை க்ஷாயம். இவைகளிலொன்றால் ஒத்திடமிடலாம்.

அரிசிமாவு.—கோதுமைமாவு.—இவைகளில் ஒன்றை, சிவந்திருக்கிற இடத்தின்மேல் தூவிக்கொண்டுவந்தால், எரிச்சல் தணியும்.

பன்றிநெய்.—ஒத்திடமிட்ட பிறகு இதைத் தடவிக்கொண்டுவந்தால், சுகுணம் பிறக்கும்.

அன்னபேதி.—1-விராகனிடை அன்னபேதியை, 1-[illegible]ட்டு கரைத்து, அந்த நீரை அக்கிமேல் தடவிக்கொண்டுவரலாம்.

அதிமதுரம்.—சந்தனம். இவைகளில் ஒன்றை, முசுமுசுக்கை இலை ரசம் விட்டு உரைத்து, கந்தமெடுத்து அக்கிமேல் தடவிக்கொண்டு வரலாம்.

ஊமத்தன் இலை.—இதை அரைத்து, 1-க்கு 2-பங்கு எருமை வெண்ணெய் சேர்த்து கலந்து, அக்கினிமேல் சுடவைத்துக்கொண்டு வரலாம்.

செம்மண்ணு.—இதில் நீர்விட்டுக்குழப்பி, அக்கினிமேல் தடவி, சிம்ஹளுபவெழுதுவது நாட்டுவழக்கம்.

வித்ரதி.

విద్రధి.

இதுவே—விப்புருதி—கட்டு[illegible]கட்டி.

வீக்கம்—பரு—சிலந்தி.

ABSCESS—BOIL.

ரோகலக்ஷணம்.—நோவு, வீக்கம், எரிச்சல், சிவப்பு, இக்குறிகள் கண்டு, பிறகு சீழ் உண்டாகி பெரிக்கட்டியாய் ஆகிறதற்கு, வித்ரதி என்றுபேர். சர்மம்தளமாய் இருக்கிற இடத்தில் வித்ரதிகண்டால், சீழ்வெளிக்கு வராமல் பரவி, பத்த உபத்திரவம் செய்யும். சிறியவித்ரதிகளுக்கு பரு என்றுபேர்.

சிகிச்சாக்கிரமம்.—ஆரம்பத்தில், கட்டிகரையும்படி, முயற்சி செய்யவேண்டியது; அத்தருணம் மிஞ்சி பழுக்க எத்தனித்தால், பொட்டலிகைகள்கட்டி, சீக்கிரம் பழுக்கும்படி செய்யவேண்டியது; பழுத்தபிறகு, கீறி சீழை வெளிப்படுத்தி விடவேண்டியது. கட்டியில் தத்தளிப்பு கண்டால், சீழ்க்கொண்டதென்று தெரிந்துகொள்ள வேண்டியது. காடிக்காரம்வைத்து தேய்த்துவிட்டால், முகம்தூவத்து, சீழ் வெளிக்குவந்துவிடும். முள்ளுக்கீரைசாம்பல் தபசிசக்கை, இவைகளுக்கும் விரணமாக்கிற குணமுண்டு.

கட்டிகள் கரையும்படி, மேலுக்குபயோகப்படுத்தத் தகுதியானவைகள்.

நவஸாரகிலேதம் (2-விரா; ஜலம் 1-புட்டி.)

வெங்காயம்—வெள்ளுள்ளி—அழுக்கிராக்கிழங்கு.

முருங்கைவேர்ப்பட்டை—இலைக்கள்ளியிலை.

தேன் தடவி, சுரக்கண்ணாம்பு பூசுதல்.

விஷாரியிலை—பத்திராக்ஷியிலை—புனையிலை.

காரட்டுக்கிழங்கு—எருக்கன்பால்—பெருங்காயம்.

செம்பையிலை—ரசக்களிப்பு—சாமந்திப்பூ—தேர்கொடுக்கு இலை—நொச்சியிலை—கஞ்சா இலை—மஞ்சள்—விழுதியிலை—அரிசிமாவும் தேனும் கலந்து.

போல்டிஸ்செய்து உபயோகிக்கத்தகுதியானவைகள்.

வெண்டைக்காய்—அத்தியிலை—ஆளிவிரை—வெந்தியம். எள்ளு—ஆமணக்கு இலை—ஆமணக்குமுத்து—ஊமத்தனிலை—முள்ளுக்கீரை — புளித்தசாதம் — புளிச்சக்கீரை—சேப்பங்கிழங்கு—கற்றாழை—அரிசிமாவு—கோதுமைமாவு — கேவுருமாவு—வாழைப்பழம். பருப்புக்கீரை—பசரைக்கீரை.

விளக்கெண்ணெயில் முலைப்பால்விட்டு குழப்பி, அதில் பருத்திப்பஞ்சு தோய்த்து, கட்டிகள் மேல் போட்டுக்கொண்டுவந்தால், சீக்கிரம் பழுக்கும்.

கர்ப்பூரத்தோடு சாம்பிராணிசேர்த்து, அரைத்து களிம்பு செய்து துணிமேல்தடவி, கட்டிகள்மேல் போட்டுக்கொண்டுவரலாம்.

விரணம்.

వ్రణము.

இதுவே—புண்.

ULCER.

விரணபேதங்களை இங்கிலீஷ் வைத்திய சங்கிரகத்தில் அறியலாம்.

விரணங்கள்மேல்போட தகுதியான களிம்புகள், எண்ணெய்கள் இதனடியில் காணலாம்.—

சிலத்தைலம்—நல்லெண்ணெய்—குக்கில்நவநீதம்.

சிலாரசம்—தேங்காயெண்ணெய்—நீலம்.

புங்கன் நெய்—மெழுகு களிம்பு.

ரசசிந்தூரக்களிம்பு—ரோசனக்களிம்பு.

விரணங்களுக்கு போல்டிஸ் செய்துபோட தகுதியானவைகள் இதனடியில் காணலாம்.—

[illegible]ப்பிலை—பூசினிக்காய்—காரட்டுக்கிழங்கு—கோதுமைமாவு—அரிசிமாவு.

விரணங்களைக்கழுவ தகுதியான நீர்கள்.—ஒதியன்பட்டைக்கஷாயம்.—கருவேல்ப்பட்டைக் கஷாயம்—மருக்கொழுந்துக்கஷாயம்—படிக்காரஜலம்.

துரிசு—காடிக்காரம்—முள்ளுக்கீரை சாம்பல். இவை முதலியவைகள், துர்மாமிசத்தை நீக்கும்.

விஷரோகம்.

విషరోగము.

இதில் க்ருத்திரமவிஷம், కృత్రిమవిషము, (இமெருந்து) என்றும்—அக்ருத்திரமவிஷம், అకృత్రిమవిషము, என்றும், இரண்டுஜாதிகளுண்டு. க்ருத்திரமவிஷத்தைப் பற்றி முன்னமே சொண்டிருக்கிறது. இனி அக்ருத்திமவிஷத்தில் 3-ஜாதிகளுண்டு.

1-வது—ஸ்தாவரவிஷம், స్థావరవిషము, விருக்ஷம், செடி, கொடி, பூண்டுகளின் விஷம்.

2-வது—தாதுவிஷம். ధాతువిషము. பாஷாணம், வீரம், தாம்பிரம், முதலிய பதார்த்தங்களின்விஷம்.

3-வது—சங்கமவிஷம். సంగమవిషము. பாம்பு, தேள், புழு, சிலந்தி, நாய், இவைமுதலிய ஜீவஜந்துக்களின் விஷம்.

விருச்சிகதம்சம்.

వృశ్చికదంశం.

இதுவே—தேள்கொட்டல்.

SCORPION STING.

தேள் கொட்டலுக்குச் சிகிச்சை தெரியாதவர்கள் யாருமில்லை. மந்திரத்தினுல் விஷம் இறங்கிவிடுகிறதென்று எண்ணமுமுண்டு. தேள் கொட்டின உடனே, விஷம் மேலேறாமல், கொட்டுவதற்குமேல் கயிற்றால் கட்டிவிட்டு, அடியில்கண்ட சிலமருந்துகளில் ஒன்று உபயோகிக்கலாம்.

நாயுருவிப் பூண்டின் கொழுந்தைக் கசக்கித் தேய்க்கலாம்.

சுண்ணாம்பு, ஒட்டடை. இவைகளைச்சேர்த்து அரைத்துப் பூசலாம்.

புளியங்கொட்டையை (தோல்நீக்கி, பருப்பு தெரிகிறவரையில்) தேய்த்து, கொட்டினவாயில் வைத்தால், ஒட்டிக்கொள்ளும்; விஷம் அதில் இறங்கினபிறகு விரையின் நிறம் மாறி விழுந்துவிடுமாம்.

சுண்ணாம்பு, உப்பு, சமனுய்ச்சேர்த்து, அரைத்துப் பூசி அனல் காட்டலாம்.

வெங்காயத்தைக் கொட்டின விடத்தில்வைத்து ¼-மணிநேரம் தேய்க்கலாம்.

பெருங்காயம் பூசலாம்.

காடிக்காரம் வைத்துத் தேய்க்கலாம்.

விஷபேதிரோகம்.

இதுவே—வாந்திபேதி—விஷபேதி.

CHOLERA.

ரோகலக்ஷணம்.—விஷபேதிரோகமானது, ஒருவித விஷத்தால் காணுகிறதென்று சொல்வதற்கு சந்தேகமில்லை. அந்த விஷம் சரீரத்துக்குள் சென்று வியாபிக்கிற விதத்தைப்பற்றி, பலர் பலவிதமாய் சொல்லுகிறார்கள். ஒருவர், இந்த விஷம் ரக்தத்தில் சேருகிறதில்லை, ஆனால் அது தன் குணாகுணத்தைச் சிறு குடலின் உட்சவ்வுமேல் முதல் காட்டுகிறது. பிறகு மற்றக்குறிகள் பிறக்கிறதென்று சொல்லுகிறார். மற்றொருவர், இந்த விஷம் ரக்தத்தில் கலந்து, "பல்மொனெரி ஆர்ட்ரி" என்னும், இருதயத்திலிருந்துப்புப்புசத்துக்குப்போகிற ரக்த நரம்பைச் சுருக்கச்செய்து, ரக்தம் வலதுபக்கமிருந்து, இடதுபக்கம்போகாமல் செய்துவிடுவதினுலாவது, அல்லது, விஷமானது மூளையின்மேல் நேராய் வியாபனை செய்வதினுலாவது, [illegible]சிவு, க்ஷீணம், கஷ்டசுவாசம், நாடி விழுந்துப்போகுதல், ஆகிய இவை முதலிய குறிகள் காணுகிறதென்று சொல்லுகிறார். உடம்பில் இருக்கிற விஷம் வெளிப்பட்டு, பேதிகாணுகிறதென்று இவருடைய எண்ணம். இந்த வியாதி எவ்விதமாய்ப் பரவுமெனில், வமன விரேசனைகளில் இந்த வியாதியின் விஷம் இருக்கிறதென்றும், அந்த மலங்கள் சாக்கடை வழியாய்ச்சென்று, குடிக்கிற நீரோடு சேர்ந்து கெடுத்து, அதைபானம் செய்கிறவர்களுக்கு வாந்திபேதி காணுகிறதென்று எண்ணம். பரீக்ஷைகளால் அறிந்துத் தெரிந்துக்கொண்ட இந்தத் தாத்பரியத்தை, நாம் உறுதியாய் நம்பலாம்.

இந்தக்கொடிய வியாதிகண்டு பரவுகிறநாள்களில், அவாளவாள் முன் சாக்கிறதை எடுத்துக்கொள்ளவேண்டியது; அது என்னவெனில்—அன்னபானுதிகளைச் சரியாய் பக்ஷிக்கவேண்டியது.—குடிக்கிற நீரைக் காய்ச்சி வடிக்கட்டி கொள்ளவேண்டியது.—வேலை அதிகமாய்ச் செய்யலாகாது—சுகஸ்திதியை எப்போதும் அனுசரிக்கவேண்டியது—பசியாய் வெகுநேரம் இருக்கலாகாது—பேதிக்கு எடுத்துக்கொள்ளலாகாது—இந்த வியாதி வியாபிக்கிற ஊர்களிலாவது, பேட்டைகளிலாவது, போகலாகாது—தானிருக்கிற இடத்தில், வியாபித்தால், அந்தவிடம் விட்டு வேறேரிடத்தில் போய் கொஞ்சம் நாள் இருப்பது நல்லது.

லக்ஷணங்கள்.—சகலரையும் பயமுறுத்தி திகிலடையும்படிச் செய்கிற இந்தக் கொடிய வியாதியில் காணுகிற முக்கிய குறிகள் என்னவெனில் கஞ்சித்தண்ணீர்போல் பேதி, வாந்தி—கால் கைகளில் இசிவு—அதிக தாப்பலம்—அதிக தாகம்—அரட்டல்—புரளல்—நாடியில்லாமல் போகுதல்—சரீரம் வியர்த்து சில்லிட்டு விடுதல்—மூத்திரம் சுரக்காமலிருக்குதல்—குணமை நீங்கினபிறகு, சுரம் காணுதல், இத்தியாதிகளாம்.

சிகிச்சை.—இத்தனை நாளாய் எத்தனை பேரோ, முயர்ச்சிசெய்து தேடியும், இதுவரையில் இந்த வியாதிக்கு ஏற்ற மருந்து ஒன்றும் அகப்படவில்லை. இவ்விதம் செய்யவேண்டியதென்று ஒருமார்க்கமும் தெரியவில்லை; இதற்குக் கொடுத்துப் பரீக்ஷிக்காத மருந்தும் இல்லை. ஆரம்பத்தில் காணுகிற பேதியை, உடனே நிறுத்தவேண்டியது; அதற்கு அனேக மருந்துகளுண்டு. மருந்துகொடுத்தும், வாந்தியும் பேதியும் நிற்காவிட்டால், சிகிச்சகனுக்குக் *கலவரம் சேர்ந்து, என்னசெய்வதென்று ஆலோசனைசெய்கிறான். தாகமடங்க அதிகமாய்க் குளிர்ந்த ஜலம் கொடுக்கவேண்டியது; அந்த ஜலம் பரிசுத்தமாய் இருக்கவேண்டியது; கஞ்சியினங்கள் கொடுக்கவேண்டியது. கைகால் இசிவுக்கு, கர்ப்பூரமும் கொள்ளும் சேர்த்து பூசி தேய்க்கவேண்டியது; வயிற்றுக்குக் கடுகு அரைத்து பத்துபோடவேண்டியது. வாந்தி பேதி வியாபிக்கிறகாலங்களில், 1-ருபாய் எடை உப்பு அதிகமாய்ச் சாப்பிட்டுக்கொண்டுவந்தால், இந்த வியாதி வராமல் தடுக்கும். இதனடியில் கண்டமருந்துகள், விஷபேதிக்குக் கொடுக்கத் தகுதியானவைகள்:—

ஜகாதசிந்த லேகியம் (கஞ்சாவைப்பார்.)
கர்ப்பூரம்—கவாட் லேகியம்—(அபினி.)
ஓமம்—குளோரோடைன்.

வெந்நீர்விரணம்.

SCALDS.

அக்கினிவிரண சிகிச்சையே இதற்கும் செய்யவும்.

ஸ்தனருக்வாதம்.

స్తనరుగ్వాతము.

இதுவே—ஸ்தனசூலை—முலைநோவு.

PAIN IN THE MAMMÆ.

இதற்கு வேதனை தணியும், அபினி, கஞ்சா, முதலிய வேதனாசாந்தகாரி ஔஷதங்கள் உள்ளுக்கும் வெளிக்கு முபயோகிக்கவேண்டியது.

ஸ்தனவித்ரதி.

స్తనవిద్రధి.

இதுவே—மார்ச்சிலந்தி.

ABSCESS OF THE MAMMÆ.

வித்ரதிக்குச் செப்பிய சிகிச்சையே இதற்குஞ் செய்யவேண்டியது.

க்ஷயரோகம்.

క్షయరోగము.

இதுவே.—ராஜரோகம்—ராஜயக்ஷ்மாரோகம்.
க்ஷயகாசரோகம்—யக்ஷ்மாரோகம்
ஈளைரோகம்—…தரோகம்—ரோகராஜம்.

CONSUMPTION—PHTHISIS.

சுவாஸப்பைக்குக் காணுகிற இது ஒருஜாதி மிருதியுரோகம். ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத வேறு ரோகங்களை க்ஷயரோகமென்கிறார்கள். கிருமிரோகம்வேறு, க்ஷயரோகம்வேறு. துசாழ வியாதி; ரத்தம்கெட்டு காணுகிறது. டியுபர்கில்ஸ் (Tubercles) என்னும் கிரந்திகள், சுவாஸப்பையிலுண்டாகி, நாளுக்குநாள் பெருக்கும். ஆரம்பத்தில் அவைகள் கல்லுபோல் கட்டியாயிருக்கும்; சிலநாள்பிறகு, கிரந்தி சுற்றிலும் விரணமாகிவிடும்; அப்போது கிரந்திகள் மெதுவாகி, உடைந்து, கபத்தோடு வெளிக்கு வந்துவிடும். அவைகளிருந்தவிடம், குழி விழுந்துவிடும். இவ்விதமாக வனேககுழிகள் ஜனித்து, புப்புஸங்கெட்டு, சரீரசம்ரக்ஷணைக்குதவாமற்போகிறது.

லக்ஷணங்கள்.—க்ஷயரோக முக்கிய லக்ஷணங்களென்னவெனில்,—இருமல், ரத்தம் விழுதல், தார்ப்பலம், கபம்விழுதல், கொழுப்புள்ள மாம்ஸ பதார்த்தங்கள்மேல் வெறுப்பு, அஜீர்ணம், தீவிர[illegible], சுரம், கஷ்டசுவாஸம், சரீர இளைப்பு, வியர்வை, பேதி, குரல்கம்மல், மேல் மார்பில் நோவு, முதுகில் நோவு, உடம்புவேதனை, குதந்திரவிரணம், இவைமுதலியவைகளாம்.

சிகிச்சை.—இந்தவியாதியைச் சவுக்கியப்படுத்த, நம்மிடத்தில் தகுந்த மருந்தில்லை, க்ஷயரோக மருந்தென்பதெல்லாம் இருமலைக் குணப்படுத்துகிறவைகளாம். கிரந்திகள் அபிவிருத்தியாகாமற் செய்வதே, நமது முக்கிய சிகிச்சை. கிரந்திகளுண்டான பிறகு, நல்ல

ஊட்டம் கொடுத்து, சரீரத்தைக் காப்பாற்றவேண்டியது;
வைக்கலாகாது; மாமிச பதார்த்தம் அவசியமுண்ணும்படி
வேண்டியது; தினம் ஸ்நானம் செய்யும்படி திட்டப்படுத்த
யது; பால், பாலேடு, முட்டை, இவைகள் சரீரத்துக்குப் பெ
கொடுக்கும். ஸ்தனத்தை மாற்றுவது பிரதான சிகிச்சை.
யில் கண்டவைகள், க்ஷயரோகத்துக்குக் கொடுக்கத் தகுதிய
ன:—

தேங்காய்ப்பால்—தேங்காய் எண்ணெய்—மீன்நெய்—
த்துகள். அபினி, கஞ்சா, இவைகள் நித்திரையையுண்டாக்கு
மலைத்தணிக்கும். ரக்தம் விழ, படிக்காரம் கர்ப்பூரசிலாஜி
டுக்கலாம். பேதியை நிறுத்த, அபினி, மாசிக்காய், காசுக்கட்
மரப்பட்டை கஷாயம் கொடுக்கலாம். மார்புமேல் க
போடலாம். அடியிற் கண்டிருக்கிற மருந்துகள் கொடுக்க
யிருந்தபோதிலும், அவைகளை நிறுத்திவைக்க வேண்டியது;
வியாதியை அதிகப்படுத்தும்:—

ரசம்—பிரவாளம்—முத்து—அப்பிரகம்—பாஷாணம்—
லாந்தகம்—காருடா—மகாராஜமிருகாங்கம்.

க்ஷீரரோகம்.

பிரஸவித்த பெண்களுக்கு, பால் கட்டிக்கொண்டு உப
கண்டால், அதற்கு மல்லிகைப் பூவையாவது, வெற்றிலையையா
வது கட்டினால், பால்வற்றிவிடும். பேதிக்குக் கொடுக்கலாம்
விரை போலுடன் வைத்துக்கட்டலாம்.

சிலருக்கு பால் சுரக்காமலிருக்கும். அதற்கு நல்ல ஊட்ட
கொடுக்க வேண்டியது; ஆமணக்கு இலையை வதக்கி கட்டினால்
சுரக்கும். தண்ணீர்விட்டான் கிழங்குக்கும், பால்சுரப்புவிக்கும்
குணமுண்டு.

Printed by Thompson & Co., at the "Minerva" Steam Press, M